LONDON TAMIL SANGAM

SOUVENIR

1972-73

ஆண்டு மலர்க் குழு

திரு. V. சங்கரலிங்கம்

திரு. S. K. சுப்பிரமணியன்

திரு. S. செல்வநாயகம்

திரு. A. இராமநாதன்

திருமதி. T. முத்துக்குமாரசாமி

நண்பர்கள் அச்சகம், சென்னை-600018

830

தமிழன்னைக்கு அன்புக் காணிக்கை

உலகின் பல பகுதிகளிலிருந்தும் இங்கிலாந்திற்கு வருகை தரும் தமிழர்களின் இணைப்பாக இயங்கி வரும் இலண்டன் தமிழ்ச்சங்கத்தின் வெளியீடாக முதன் முறையாக இவ்வாண்டு மலர் வெளிவருகிறது. தமிழ் கூறும் நல்லுலகத்து ஆய்வாளர்கள் பலரின் எழுத்தோவியங்கள் இம்மலரில் இடம் பெறுகின்றன. எங்களது முயற்சியைப் பாராட்டி வாழ்த்துக்கள் அனுப்பிய பெரியோர்களுக்கும், கட்டுரை, கவிதை முதலியன அனுப்பிய எழுத்தாளர்களுக்கும் விளம்பரங்கள் அனுப்பிய நிறுவனங்களுக்கும் இலண்டன் தமிழ்ச் சங்கம் அன்போடும் பணிவோடும் நன்றி தெரிவிக்கின்றது.

இம்மலர் வெளி வருவதற்கு மூலகாரணமாக இருந்தவர் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் புரவலர் டாக்டர் பொன். கோதண்டராமன் (பொற்கோ) அவர்கள். எங்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்து வழி காட்டிய டாக்டர் பொன். கோதண்டராமன் அவர்களுக்கும் தமிழகத்தில் இம்மலரை அச்சிடுவதில் உறுதுணையாக இருந்த திரு. அ. மெய்யப்பன் திருமதி மெய்யப்பன் திரு. ஆர். பெரியாழ்வார், திரு. சாமி. அறவணன், திரு. மு. கந்தசாமி, ஆகியோருக்கும் இலண்டன் தமிழ்ச் சங்கம் பெரிதும் நன்றி செலுத்திக் கொள்கிறது. இலண்டனில் மலர் வெளியீட்டிற்கு உறுதுணையாக இருந்த செயற்குழு உறுப்பினர் திரு. V. மெய்யப்பன் அவர்களுக்கும் உறுப்பினர் திரு. A. ஆதிநாராயணன் அவர்களுக்கும் இலண்டன் தமிழ்ச் சங்கம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

இம்மலர் சிறப்பாக மணம் வீச பெரிதும் ஒத்துழைத்த எல்லா அன்பு நெஞ்சங்கட்கும் இலண்டன் தமிழ்ச் சங்கம் அன்பு கலந்த மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றது.

தமிழர்களின் உள்ளங்களை மகிழ்விக்கும் இம்மலர், தமிழன்னையின் பாத கமலங்களுக்குக் காணிக்கையாகச் செலுத்தப்படுகின்றது.

வணக்கம்,

இலண்டன் தமிழ்ச் சங்கம்

இலண்டன் தமிழ்ச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் 1972–73

தலைவர் : திரு. V. சங்கரலிங்கம்

துணைத் தலைவர் : திரு. K. ஆனந்தன்

செயலாளர் : திரு. S. K. சுப்பிரமணியன்

துணைச் செயலாளர் : திரு. N. சச்சிதானந்தன்

பொருளாளர் : திரு. S. செல்வநாயகம்

செயற்குழு :

டாக்டர் T. தம்பையா பிள்ளை

திருமதி N. தியாகராஜன்

திரு. S. வள்ளிகாந்தன்

திருமதி P. மெய்யப்பன்

திரு. S. யோகநாதன்

திரு. V. மெய்யப்பன்

திரு. A. இராமநாதன்

திருமதி T. முத்துக்குமாரசாமி

திரு. S. சிவலிங்கம்

திரு. S. பாலசுந்தரம்

திரு. S. கிருஷ்ணமூர்த்தி

இலண்டன் தமிழ்ச் சங்கம் அங்கத்தினர் பட்டியல்

(1–10–1973 வரை பதிவு செய்த/புதுப்பித்தவர்கள்)

அங்கத்தினர் எண்		பெயர்
(1)	திரு. & திருமதி	V. சங்கரலிங்கம்
(2)	திரு.	K. ஆனந்தன்
(3)	திரு.	S. K. சுப்ரமணியன்
(4)	திரு.	N, சச்சிதானந்தன்
(5)	திரு.	P. S. செல்வநாயகம்
(6)	திரு & திருமதி	A. ராமநாதன்
(7)	திரு & திருமதி	L. மெய்யப்பன்
(8)	திரு.	V. மெய்யப்பன்
(9)	திரு & திருமதி	N. தியாகராஜன்
(10)	திரு & திருமதி	V. முத்துக்குமாரசாமி
(11)	டாக்டர் & திருமதி	T. தம்பையாபிள்ளை
(12)	திரு.	S. சிவலிங்கம்
(13)	திரு & திருமதி	S. S. வள்ளி காந்தன்
(14)	திரு.	S, யோகநாதன்
(15)	திரு.	S. கிருஷ்ணமூர்த்தி
(16)	திரு.	S. பாலசுந்தரம்
(17)	திரு.	S. காங்கேசன்
(27)	திரு.	N. சிவசோதி
(28)	திரு.	S. குகதாசன்
(30)	திரு.	N. M. மரியாம்பிள்ளை
(31)	திரு.	A. சுந்தரம்
(34)	திரு.	K. C. ரஞ்சன்
(37)	திரு.	C. வேதநாராயணன்
(41)	திரு & திருமதி	K. நடராஜா
(42)	திரு.	K. R. பாஸ்கர்
(44)	திரு & திருமதி	M. லக்ஷ்மண்
(45)	திரு.	V. செந்திவேல்
(49)	டாக்டர்	T. V. சத்தியமூர்த்தி
(50)	திரு.	P. G. ராமலிங்கம்
(51)	திரு & திருமதி	ஹனிபா
(52)	திரு & திருமதி	K. நம்பி ஆரூரான்
(53)	திரு.	V. லெட்சுமணன்
(54)	திரு & Dr. திருமதி	P. மகாலிங்கம்
(55)	திரு.	D. இப்ராஹிம்
(60)	திரு & திருமதி	S. யோகநாதன்
(62)	திரு & திருமதி	S. சிவஞானம்
(63)	திரு & திருமதி	S. சேகரன்
(64)	திரு & திருமதி	A. S. இராமலிங்கம்
(65)	திரு & திருமதி	ரமேஷ்
(66)	திரு.	A. குப்புசாமி
(69)	திரு.	B. யெர்திங்
(70)	செல்வி	சுகந்தி பிரான்சிஸ்
(72)	திரு & திருமதி	P. P. A. வெங்கடேஸ்வரன்
(74)	திரு & திருமதி	K. ரெங்கநாதன்
(76)	செல்வி	P. சின்னதுரை
(80)	திரு & திருமதி	அந்தோணிராஜ்
(81)	திரு.	M. கிருஷ்ணன்
(85)	டாக்டர் & திருமதி	சந்திரசேகரன்
(89)	திரு.	K. ராதாகிருஷ்ணன்
(90)	திரு.	M. ராமசாமி
(91)	திரு.	A. அப்பாவு
(94)	திரு.	C. ராதாகிருஷ்ணன்
(95)	திரு & திருமதி	S. A. L. ஷா
(96)	திரு.	S. திருஞானசம்பந்தன்
(97)	திரு.	N. S. கிருஷ்ணன்

(98)	திரு.	S. நாராயணசாமி
(99)	திரு & திருமதி	V. ராமசாமி
(100)	திரு.	V. சுப்பையா
(101)	திரு.	V. பரமசிவம்
(102)	திரு.	N. போதிராஜ்
(103)	திரு.	P. ராஜு
(104)	திரு.	S. சர்க்கரை
(105)	திரு.	P. N. கோபால்
(106)	திரு.	V. அண்ணாமலை
(107)	திரு	K. ராமசாமி
(108)	திரு & திருமதி	முரு. குழ. வீரசிங்கம்
(109)	திரு.	S. மாரிமுத்து
(110)	திரு.	S. கோவிந்தராஜு
(111)	திரு.	G. ஏழுமலை
(112)	திரு & திருமதி	S. கிருஷ்ணசாமி
(113)	திரு & திருமதி	N. சந்திரசேகரன்
(114)	திரு & திருமதி	S. கடுங்காலன்
(115)	திரு.	K. பேர்லா
(116)	திரு.	A. கருப்பையா
(117)	திரு.	K. M. கிருஷ்ணமூர்த்தி
(118)	திரு & திருமதி	G. S. T. ராஜன்
(119)	திரு & திருமதி	கோடீஸ்வரன்
(120)	திரு & திருமதி	V. S. K. ராயலு
(121)	திரு & திருமதி	பஞ்பாபகேசன்
(122)	திரு & திருமதி	K. சிவகுருநாத பிள்ளை
(123)	திரு & திருமதி	V. சதானந்தன்
(124)	திரு.	K. கங்காதரன்
(125)	திரு & திருமதி	S. F. X. அகஸ்டின்
(126)	திரு & திருமதி	N. S. குமரப்பன்
(127)	செல்வி	சரோஜா குமாரன்
(128)	திரு.	ஜமால் மொகைதீன்
(129)	திரு & திருமதி	M. அழகப்பன்
(130)	திரு.	M. சுப்பாராஜ
(131)	திரு.	N. மெய்நெறிகண்ட தேவன்
(132)	திரு.	ஜோசப்
(133)	திரு.	D. S. சந்திரன்
(134)	திரு.	S. சோலமன்
(135)	திரு.	M. ராமசாமி
(136)	திரு.	D. பவுல்ராஜ
(137)	திரு.	A. நவமணி
(138)	திரு.	P. ராஜகோபாலன்
(139)	திரு.	J. சந்தோஷம்
(140)	திரு.	M. சண்முகம்
(141)	திரு.	S. கோபாலகிருஷ்ண நாயுடு
(142)	திரு.	P. ராமசாமி
(143)	திரு.	S சுந்தரராஜு
(144)	திரு & திருமதி	K. N. ஸ்ரீனிவாசகன்
(145)	திரு & திருமதி	N. குழந்தை வேலு
(146)	திரு.	R. கிருஷ்ணசாமி
(147)	திரு & திருமதி	A. D. பிரான்சிஸ்
(148)	திரு.	V. விக்னேஸ்வர குமரன்
(149)	திரு.	K அமிர்தலிங்கம்
(150)	திரு.	T. செல்வகுமார்
(151)	செல்வி	எலிசபத் வேதமுத்து
(152)	திரு.	R. பரராஜ சேகரன்
(153)	திரு.	சின்னதுரை முத்துராமன்
(154)	திரு.	M. T. விஜயேந்திரன்
(155)	திரு.	A. ஆதிநாராயணன்



மலர் மணம்

"GIRIJA"
30, EDWARD ELLIOTS ROAD
MYLAPORE, MADRAS-4

September 11, 1973

Dear Sir,

Dr. S. Radhakrishnan is glad to know that London Tamil Sangham will bring out its first annual number. He sends his best wishes to the members of the Sangham on the occasion.

Yours faithfully,

C. Ramasubban
P. S. to Dr. S. Radhakrishnan

RAJ BHAVAN
Madras-22

17th August 1978

MESSAGE

I am glad to know that the London Tamil Sangam proposes to publish a souvenir to mark its anniversary. I wish it success.

K. K. Shah

Governor of Tamil Nadu

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தமிழ் நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9

24—8—1973

இலண்டன் மாநகரில் வாழும் தமிழர்களின் இன உணர்வை - தமிழ்ப் பற்றைப் பேணிக் காத்து வளர்த்துவரும் பெரும் பணியைச் செய்துவரும் இலண்டன் தமிழ்ச் சங்கம் முதன் முறையாக ஆண்டு மலர் வெளிக் கொணர இருக்கும் செய்தியறிந்து பெரிதும் மகிழ்ச்சி-யடைகிறேன். சங்கத்தின் பணி தொடர்ந்து நல்ல முறையில் நடை-பெறவும், ஆண்டு மலர் தமிழ்மணம் கமழும் தனி மலராக அமையவும் மனமார வாழ்த்துகிறேன்.

மு. கருணாநிதி

Ministry of Posts and Telecommunications
Overseas Telecommunications Service Building
Duke Street
Colombo I
Republic of Sri Lanka (Ceylon)

6–9–73

லண்டன் தமிழ்ச் சங்கம், அதன் வரலாற்றில் முதன் முறையாக ஆண்டு மலரொன்றை வெளியிடத் தீர்மானித்ததை கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இம் முயற்சி லண்டன் தமிழர்களின் தாய்மொழிப் பற்றினையும், மொழி ஆர்வத்தினையும் நன்கு புலப் படுத்துகிறது. இது மெச்சத்தக்கதொன்றாகும். பல்லாயிரம் மைல்களுக்கப்பால் முற்றும் முழுதுமாக அந்நியச் சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டு தாய்மொழியில் மலரொன்றை வெளியிட முனைந்தமை தெய்வத் தமிழ்மொழி மீதுள்ள பற்றினை பளிச்சிட்டுக் காட்டுகிறது.

வரலாற்றுக்கு முற்பட்டதும் அகத்தியக் குறுமுனியால் நல்கப் பட்டதுமான தெய்வ மொழியாம் எமது இன்பத் தமிழ், வளமுள்ள மொழியாக இன்று திகழ்ந்தாலும், இன்றைய உலகில் விஞ்ஞான, வர்த்தக, சட்டதுறைகளில் ஏற்படும் வளர்ச்சிகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய முறையில் நமது மொழியை வளம்படுத்துதல் தமிழ் அறிஞர்களினது இன்றைய தலையாய கடமையாகும். இம் முயற்சியை செம்மைப்படுத்த ஈழத்திலும், தமிழகத்திலுமட்டு மல்லாது உலகின் பல பகுதிகளிலுமுள்ள தமிழர்கள் ஒன்றிணைந்து செயலாற்றுதல் வேண்டும்.

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற கவிச்சக்கரவர்த்தி பாரதியின் கனவு நனவாகட்டும். தமிழ் மொழியின் குரல் உலகின் எட்டுத்திக்கிலும் ஒலிக்கட்டும். லண்டன் வாழ் தமிழர்களின் மொழிப்பற்றை ஏனைய நகரங்களில் வாழும் தமிழ் மக்கள் பின்பற்றட்டும். பின்பற்றுவார் களென நம்புகிறேன்.

வாழ்க லண்டன் தமிழ்ச் சங்கம்
மேலோங்கட்டும் அவர்களின் ஆர்வம்

செ. குமாரசூரியர்

கு. காமராஜ்

8, திருமலைபிள்ளை ரோடு
தி. நகர், சென்னை-17.
20—8—73

அன்புள்ள நண்பர் அவர்களுக்கு,

வணக்கம். தங்களுடைய கடிதம் கிடைத்தது. லண்டன் வாழ் தமிழர்கள் ஒரு சங்கத்தின் கீழ் இணைந்து செயலாற்றுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி. இதன் மூலம் லண்டன் வாழ் தமிழ்ச் சமுதாயத்துக்குத் தாங்கள் செய்யும் தொண்டு பாராட்டுக்குரியது தங்கள் முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

தங்களன்புள்ள,

கு. காமராஜ்

இரா. நெடுஞ்செழியன்
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-9
28—8—1973

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!"

என்று, தமிழ்மொழி வளர்ச்சியில் நாட்டம் கொண்ட அனைவருக்கும், அன்புக் கட்டளை இட்டார் பெருங்கவி பாரதியார். பிறமொழிகளில் உள்ள இலக்கியங் களைப் படித்து உணர்ந்த அவர்,

"கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை"

என்று பெருமையோடு கூறினாலும், நமது பழைய இலக்கியங்களையும், இன்ன பிற நூல்களையும் மட்டும் வைத்துக் கொண்டு 'மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்' பேசுவதில் எவ்விதப் பயனுமில்லை என்று அறிந்துதான் உலகப் பெரு மொழிகளிலுள்ள ஒப்பற்ற இலக்கிய - இன்ன பிற சாத்திர – கலைச் செல்வங்கள் தமிழிலும் எழுதப் பெற வேண்டுமென்று விரும்பினார்.

பிறமொழிக் கலைச் செல்வங்களைத் தமிழில் எழுதுவதென்பது மிகப் பெரிய பணியாகும். அரசினரால் மட்டுமோ – அல்லது ஓரிரு தமிழ் அறிஞர் களால் மட்டுமோ முடியக்கூடிய பணியல்ல இது. மொழிப் பற்றும், திறனும் கொண்ட ஒவ்வொரு தமிழ் மகனும் தனது பங்கினைச் செலுத்திட வேண்டிய கடினமான பணியாகும்.

பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால், உலக நாகரிகங்கள் பலவும் கூடுகின்ற இலண்டன் மாநகரில் உள்ள தமிழ் மக்களுக்கு அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகள் ஆயிரம் இருக்கும். கால ஓட்டத்தில் அவர்களது கவனங்கள் சிதறவும் கூடும். இருப்பினும், அவர்கள் தமிழ்ச்சங்கம் ஒன்று அமைத்து, இலண்டன் மாநகரில் தமிழ்க்குரல் எழுப்பி வருவதறிந்து எல்லையிலா மகிழ்ச்சியடைகிறேன். அவர்களது மொழிப் பற்று தமிழ் மக்கள் அனைவரது பாராட்டுக்கும் உரியதாகும்.

இந்த மொழிப் பற்றினை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் ஆக்கப் பூர்வமான பணிகள் செய்திட வேண்டும் என்று பெரிதும் விழைகிறேன். அவரவர், தமக்குத் தெரிந்த பிற மொழிகளில் சிறந்த தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்துவதோடு, அந்த மொழிகளில் உள்ள உயர்வான இலக்கியங் களையும், பிற நூல்களையும் தம்மால் முடிந்த அளவுக்குத் தமிழில் எழுதிட வேண்டும்.

இதற்கான வசதியும், வாய்ப்பும் இலண்டன் வாழ் தமிழ்ப் பெரு மக்களுக்கு நிறைய உண்டு என்று நம்புகிறேன். அவர்களது கலைப் படைப்புகளை ஏற்றுக் கொள்வதற்குத் தமிழகம் ஆவலோடு காத்திருக்கிறது என்பதை அவர் களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

இலண்டன் தமிழ்ச்சங்கம் முதன் முறையாக வெளியிடும் 'ஆண்டு மலர்' இந்தப் பணிக்கு ஒரு முன்னோடியாக அமையும் என்று நம்புகிறேன்.

எனது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

இரா. நெடுஞ்செழியன்

வாழ்த்துச் செய்தி

S. J. V. CHELVANAYAKAM

16, ALFRED HOUSE GARDENS
COLOMBO-3
5—9—73

தமிழர்கள் உலகின் எந்த மூலை முடுக்குகளில் சென்று குடியேறினாலும் தங்கள் தனித்துவத்தை விட்டுக் கொடுக்காதவர்கள். தங்களின் மொழி, இனம், மதம், பாரம்பரியம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பவர்கள். இவற்றை எந்த நிலையிலும் தமிழர்கள் மறக்க மாட்டார்கள்; இழக்கவும் மாட்டார்கள். இதுவே தமிழினத்திற்குத் தனிச் சிறப்பாகும்.

தமிழர்களின் இந்தத் தனிப் பெரும் சிறப்பின் அடிப்படையில் இங்கிலாந்தில் குடியேறி யிருக்கின்ற தமிழர்களும் அங்கு, "இலண்டன் தமிழ்ச் சங்கம்" என்றோர் சங்கத்தை நிறுவி, தமிழ் மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாத்து வளர்த்து வருவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி யடைகின்றேன்.

பதினையாயிரத்துக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் இலண்டனில் குடியேறி யிருக்கின்றனர். இவர்கள் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் சீரிய பணிகளுக்கு பூரண ஒத்துழைப்புக் கொடுப்பார்கள் என்று நம்புகின்றேன்.

இலண்டன் தமிழ்ச் சங்கத்தாரின் தமிழ்ப்பணி சிறக்க இலங்கை வாழ் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் சார்பில் எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சா. ஜே. வ. செல்வநாயகம்

Mr. S. P. Seenivasagam. M. P.
Malaysia
President : Muncipality of Iphoh

Pejabat Yang Di-Pertua.
MAJLIS PERBANDARAN,
IPOH, PERAK
MALAYSIA.
22—9—1973

I am glad to hear that the LONDON TAMIL SANGAM is publishing a souvenir book.

I would like to Congratulate the office bearers of the sangam for their efforts to preserve and promote our ancient culture and language.

I extend my best wishes for the success of this and future activities.

S. P. Seenivasagam

M. Bhaktavatsalam

15, Warren Road
Mylapore,
Madras-4
17-8-73

அன்புள்ள திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு, தங்களின் 9-ந் தேதிய கடிதம் கிடைத்தது. நன்றி. தாங்களும் மற்ற தமிழர்களும் சேர்ந்து இலண்டன் நகரத்திலேயே தமிழ்ச் சங்கம் அமைத்து நம் கன்னித் தமிழை வளர்த்து வருவது பற்றி மிக்க மகிழ்ச்சி. தாங்கள் வெளியிடும் ஓர் ஆண்டு மலர் வசீகரமாகவும், அறிவூட்டக் கூடியதாகவும் இருக்கும் என்று நம்புகிறேன். லண்டனில் உள்ள தமிழ் அன்பர்களுக்கு என் நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எம். பக்தவத்சலம்

தி. சு. அவினாசிலிங்கம்
இயக்குநர்

Sri Ramakrishna vidyalaya p. o.
Coimbatore District S. India
10-9-1973

வாழ்த்துச் செய்தி

இலண்டன் தமிழ்ச் சங்கம் முதன் முறையாக ஒரு ஆண்டு மலர் வெளியிடுவது தெரிய மிக மிக மகிழ்ச்சி. நம் இந்திய மக்களுக்கு குறிப்பாக தென்னாட்டில் தமிழ் மக்களுக்கு ஒரு தனிப் பண்பு, உயர்ந்த லட்சியம் உண்டு. அது தொன்றுதொட்டு வரும் நம் ஆன்மீக வாழ்க்கையையும், தூய்மையையும், பக்தியையும், எளிய வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண்டது.

தமிழன் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கப்பலேறி பல தூர வெளிநாடுகளுக்குச் சென்று, அங்குள்ள மக்களிடம் ஆழ்ந்த அன்பு கொண்டு, தொண்டாற்றி, தன் நாகரிகத்தையும் பரப்பி வந்தான். இலண்டனிலுள்ள தமிழ் நண்பர்களும், தாங்கள் வசிக்கும் நாட்டிலுள்ள மக்களிடம் அன்பு கொண்டு, உயர்ந்த லட்சியங்களைப் பின்பற்றி, மகத்தான சேவை செய்து புகழ் பெறுவார்களாக!

இலண்டன் தமிழ் அன்பர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களையும், பேரன்பையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தி. சு. அவினாசிலிங்கம்

எம். ஓ. எச். பாரூக்
முதலமைச்சர்

புதுச்சேரி,
4-10-73

வாழ்த்துச் செய்தி

லண்டன் தமிழ்ச் சங்கம் ஆண்டு மலர் ஒன்றினை வெளியிட இருப்பது குறித்து நான் பெருமகிழ்வடைகிறேன்.

பண்டைக் காலந்தொட்டே சங்கம் கண்டுச் செழித்தது நம் தமிழ் மொழி, பண்டைத் தமிழர்கள் எட்டுத் திக்குகளிலும் சென்று தமிழ் பரப்பினர். தமிழ் மொழியும், தமிழர் பண்பாடும் அன்று கடல் கடந்தும் சென்று சிறப்புற்றதெனில் அது மிகை யாகாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இம்மொழி இன்று லண்டனில் சங்கம் பெற்றுத் தமிழ் மணம் பரப்பி வருவது நமக்கெல்லாம் பெருமையளிக்கின்ற ஒரு செய்தியாகும்.

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று பாடினானே பாரதி, அவனுடைய கனவை நனவாக்கும் வகையில் இயங்கி வருகின்ற லண்டன் தமிழ்ச் சங்கம் ஆண்டாண்டுதோறும் சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்து வெற்றி நடைபோட வேண்டுமென்று நான் விழைகிறேன்.

ஆண்டு மலருக்கு என் நல் வாழ்த்துக்கள்.

எம். ஓ. எச். பாரூக்

ம. பொ. சிவஞானம்,
துணைத் தலைவர்,
தமிழ்நாடு சட்டமன்றம்.

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.
4-10-1973

அன்புடையீர்,

வணக்கம், 'இலண்டன் தமிழ்ச் சங்க'த்தின் சார்பில் முதன் முறையாக ஆண்டு மலர் வெளியிடும் முயற்சி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழ் நாட்டிலிருந்து கொண்டு என் போன்றோர் தமிழுக்குத் தொண்டு செய்வது பெரிதன்று, வசதி யற்ற சூழ்நிலையில் இலண்டனிலிருந்து கொண்டு தமிழ்ப் பணி செய்யும தமிழ்ச் சங்கத்தாரைப் பாராட்டுகின்றேன்.

முன்னொரு சமயம் இலண்டனில் "இந்தியா விடுதி"யில் தேச பக்தர்கள் முகாம் செய்து, இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டனர். அவர்கள் தொண்டு வரலாற்றில் பொன்னேடுகளில் பொறிக்கப்பட்டு விட்டது. அதே இலண்டனிலிருந்து கொண்டு தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வரும் ஒவ்வொரு தமிழரும் தமிழகத் தாரால் வணங்கத்தக்கவராவார்: நானும் வணங்குகின்றேன்.

'இலண்டன் தமிழ்ச் சங்க'த்திற்கு மனமுவந்து வாழ்த்துக் கூறுகின்றேன். சங்கம் வெளியிடும் மலரிலே தமிழ் மணக்கும் என்று நம்புகின்றேன். மலருக்கும் என் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,
ம. பொ. சிவஞானம்

தில்லை வில்லாளன்,
எம். ஏ., பி. எல்., எம். பி.

16-A, கபாலீசுவரர் நகர்,
சென்னை-4
19-8-1973

கடல் கடந்த தமிழரே!
வாழ்க நீவிர்!!

இலண்டன்மாநகரில் வதியும் தமிழர்களின் அன்பினைச் சுவைத்திடும் வாய்ப்பு எனக்கு சென்ற ஆண்டு கிடைத்தது.

தூரம் அதிகம் ஆக ஆக, அன்பின் ஆழம் எவ்வளவு அதிகமாகிறது!

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தோழரின் அன்பு மழையில் நனைந்து மனங்குளிர்ந்து மகிழ்ந்தேன்.

தமிழ்ச் சங்கத்தில் பல குடும்பத்தினர் கூடி வரவேற்றது என் நெஞ்சில் என்றும் பசுமையாக இருந்து வருகிறது.

அச் சங்கத்தின் சார்பில் ஆண்டு மலர் வெளியிடுவது கண்டு மகிழ்கிறேன்.

'கடல்கடந்து சென்றும்
கவின் தமிழ் நாட்டின்
சிறப்பினை உலகுக்கு
எடுத்துக் கூறிடும்
அருமைத் தோழர்கள்
அனைவரும் வாழ்க நன்றே'

என்று கூறி வாழ்த்தி மகிழ்வித்து, மகிழ்ந்து நிற்கிறேன்.

தில்லை வில்லாளன்

KAMBAN ADIPPODI
(**Saw, Ganesan**) M.L.C.

Karaikudi-1
(Tamilnadu-India)

பல்லாயிரம் மைல்கட்கு அப்பால் உள்ளது இலண்டன் மாநகரம். அங்கு தமிழ் மணம் பரப்பும் தண்மலர்க்கா ஒன்றும் உள்ளது. அதுதான் இலண்டன் தமிழ்ச் சங்கம், அந்த அருமையான நிறுவனந்தான் சொற்பொழிவு, இசையரங்கு, நாடகம், படக் காட்சி போன்ற துறைகளில் ஈடுபட்டுத் தமிழ்ச் சமுதாயத்தைக் கொய்து-பிடித்து, ஒரு பூந்துணர் போல, இணைந்து நிற்கச் செய்கிறது.

ஆர்வமும், ஆற்றலும், தொண்டுளமும் கொண்ட அன்பர் பலரை யுடைமையால் ஒன்று மாற்றி ஒன்று நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. இப்பொழுது இலண்டன் தமிழ்ச் சங்கம் என்னும் பூங்காவில் புதியதொரு மலர் அரும்பி மலரவுள்ளது. அழகும், மணமும், நிரம்பி, அரும்பயன் விளைக்க வல்ல அம் மலரைக் கண்டு நுகர்ந்து மகிழ்வோமாக!

இத்தகு நற்பணிகள் பலவற்றைப் புரிந்து நிற்கும் இலண்டன் தமிழ்ச் சங்கம் எல்லா வளங்களுடனும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து வளர முழுமுதல் இறைவன் திருவருள் புரிக! என அன்பர் பலருடன் கூடி மனங் குளிர, வாய் மணக்க வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்பன்,
கம்பன் அடிப்பொடி
(சா. கணேசன்)

கோவை செழியன் M.L.A.

10, S. S. Iyangar Road,
Madras-18

லண்டன் தமிழ்சங்க ஆண்டு மலருக்கு வாழ்த்து எழுதுமாறு அதன் தலைவர் கேட்டுக்கொண்டபோது நிறைய எழுதவேண்டும் என்று மனதில் பல எண்ணங்கள் அலைமோதுகின்றன. பலதை எழுத முடியாத ஒரு அரசியல் தளையால் கட்டுப்பட்டுள்ளேன். இது வெறும் போலி – நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் செயல் என்பதும் எனக்குத் தெரியும். ஒரு காலம் வரும் எதிர்கால சமுதாயம் இந்த மாயைகளை உடைத்து எறிந்துவிட்டு, தம் எண்ணங்களை ஈடேற்றுவர் என்ற நம்பிக்கை எனக்குண்டு நான் அதைக் காணும் வரையாவது வாழவேண்டும்.

பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு சீமையில் அமைந்த "தமிழ் சங்கம்" உண்மையிலேயே வலிவும் - பொலிவும் பெற்றுள்ளது. இங்குள்ள தமிழர்களைவிட – உணர்வுகளும் – உத்வேகமும் கொண்டுள்ளனர். "லண்டன் தமிழ் சங்கத்தோடு" எனக்கு ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. அது எனக்குக் கிடைத்த 'பேறு" அங்குள்ள இளைஞர்களின் உணர்வுகளும் – துடிப்பும் எதிர் காலத்தைப் பற்றிய ஒரு நம்பிக்கை – உறுதியும் கொண்ட முகங்கள் இன்னமும் என் மனக்கண்முன் அப்படியே தெரிகின்றது. அந்த நம்பிக்கை ஒளி மங்காது. ஆனால் இங்கே...?

சுயநலத்திற்காக நாட்டையும் மொழியையும் காட்டிக்கொடுக்கும் துரோகிகளுக்குப் பெயர் தலைவர்கள். தமிழையும் – தமிழ் நாட்டையும் அடமானம் வைக்கின்றவர்களுக்குப் பெயர் தேசபக்தர்கள். பத்திரிக்கைகளும் – மற்ற விளம்பர சாதனங்களும் அவர்களிடத்தில். தமிழை கேவலப்படுத்துகின்ற வர்கள் புது உத்வேகத்தில் தமிழகத்தில் உலவுகின்றனர்கள். தமிழில் பாடுவது சங்கீதம் அல்ல என்று இப்போதும் எழுதிவிட்டு தமிழக வீதிகளில் கம்பீரமாகப் பவனி வருகின்றனர். இன்றைய தமிழர்களுக்குமான உணர்வு இற்றுவிட்டது. எப்படியோ வாழ்ந்தால் போதும் என்ற மனம்வந்துவிட்டது.

தமிழ்த்தாயின் கால்களிலும் கைகளிலும் புதிது புதிதாக விலங்குகளை மாட்டிக்கொண்டு இருக்கின்றனர். அவைகள் புதிய அணிகலன்கள் என்று விளக்கம் சொல்லிக் கொண்டு இருக்கின்றனர். தமிழ்த்தாய் சிந்துகின்ற கண்ணீரைப் பார்த்துவிட்டு - என் அன்னை ஆனந்தக் கண்ணீர் உகுக்குகின்றாள் என்கின்றான்.

இதை எழுதுகின்ற இந்நேரத்தில் "இஸ்ரேல், எகிப்த்தில் நுழைந்து பல நகரங்களைப் பிடித்துவிட்டது" என்ற செய்தி வருகின்றது. அதன் செயல் சரியா தவறா என்று ஆராய நான் வரவில்லை. ஆனால் ஆண்டாண்டுகாலமாக நாடு இல்லாமல் – நாதியற்று வாழ்ந்த ஒரு சமுதாயம் இன்று தனி நாடு கண்டு உலகத் துக்கு ஒரு சவாலாக உள்ளது. அதை நினைக்கும்போது என் நெஞ்சு விம்மு கின்றது. இங்குள்ள இளைஞர்களுக்கு எதைப் பற்றியும் கவலை இல்லை. உடுப்பது - களிப்பது - ஊர் சுற்றுவது இதுதான் அவர்கள் லட்சியம்.

அவர்கள் உள்ளங்களில் புரட்சிக் கனல் ஏற்ற இன்று பாவேந்தர் இல்லை. அண்ணா மறைந்துவிட்டார்—தமிழ்த் தென்றல்—மறைமலை போன்றவர்கள், மீண்டும் தோன்றவில்லை.

வெளிநாட்டுத் தமிழர்கள் தான் இதற்கு வழி வகுக்கவேண்டும். அவர்கள் உள்ளக் கனல் உறங்கவில்லை. உலகத் தமிழர்களை ஒன்று சேருங்கள் நாம் என்றும் "நாமாகவே" இருப்போம்.

வணக்கம்.

அன்பன்,
கோவை செழியன்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்,
எம். எல். சி.,
குன்றக்குடி.

இராமநாதபுரம் மாவட்டம்,
தமிழ்நாடு
15—9—73

வாழ்த்துரை

தமிழ், நிலத்தால் தமிழகத்தில் வழங்கும் மொழி. ஆனால் தமிழ் என்ற மொழியின் பெயர், நிலத்தின் தொடர்பால் வந்ததல்ல. தமிழ்—பண்பின் வழிப் பிறந்த சொல்! "தமிழ் தழீஇய சாயலவள்" என்று கல்லாடம் கூறும். தமிழ் என்பது சிவம், இனிமை என்பது பேரிசைச் சூத்திரம். தமிழ், இன்பத்தின் மறு பெயர். அது செவிக்கு இன்பந் தருவது; சிந்தைக்கு இனிமை தருவது. வாழ்க்கை முழுதும் இன்பமயமாக்குவது. மனித குலம் அனைத்திற்கும் இன்பம் தரவல்ல ஏற்றமுடைய மொழி தமிழேயாம். தமிழ், எல்லைகளைக் கடந்த எளிய மொழி; கடல்களைக் கடந்த கன்னல் மொழி; காலத்தைக் கடந்த கன்னிமொழி. மனித உலகத்தின் ஒருமைப்பாடு தமிழின்மூச்சு போர்ப்பகை ஒடுக்கிச் சால்புநெறி வளர்ப்பது சங்கத்தமிழின் சீலம்; மனித உலகத்தை நன்னெறியில் நின்றொழுகச் செய்வது தமிழ் இலக்கணத்தின் ஈட்டம். மனிதனின் உடன் பிறந்து அலைக்கும் அகப்பகை கடிந்து, இருளகற்றி இன்பம் பெருக்குவது திருமுறைத் தமிழின் பயன். மனிதகுலத்தின் உரிமை காத்து நீள் நிலத்தில் நீதிகாப்பது காப்பியத் தமிழின் நோக்கம். தமிழ், எல்லைகளைக் கடந்த மொழி; இனங்களைக் கடந்த மொழி. சமய வேற்றுமைகளைக் கடந்த மொழி; உலகப் பொதுமொழி. பொதுமையின் வித்து, பொதிகைத் தமிழிலேயாம். இந்த இன்பத் தமிழை—தமிழின் தண்ணளி மிக்க நாகரிகத்தை அயலவரும் அறிய முரசறையும் இலண்டன் தமிழ்ச்சங்கம் வளர்க! வாழ்க!

அயற்சூழலில் அன்னை மொழி பேணும் இலண்டன் தமிழ்ச்சங்கத் தினருக்கு நமது ஒத்துழைப்பு அவர்களின் விருப்பவைப்பாகும்.

இன்ப அன்பு

அடிகளார்

DR. RAJAH
SIR MUTHIAH CHETTIAR
OF CHETTINAD

CHETTINAD HOUSE
RAJAH ANNAMALAIPURAM,
MADRAS–28
31—8—1973

அன்புள்ள ஐயா,

தங்கள் 9—8—73உ கடிதம் கிடைத்தது. நன்றி.

தாங்கள் முதன்முறையாக ஆண்டுமலர் ஒன்று வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். தங்கள் சங்கம் பல ஆண்டு களாக ஆற்றிவரும் பணிகள் பாராட்டுதற்குரியன.

பல நாடுகளிலிருந்து இலண்டன் மாநகருக்கு வந்து தங்கி யிருக்கும் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பழகி உவகை அடைவதற்கும், அவ்வப்போது அங்கு வரும் தமிழ் அறிஞர்கள் அங்கு வாழும் தமிழ் மக்களை ஒரு சேரக் கண்டு கலந்து பேசி இன்புறுவதற்கும் நல்ல முறையில் உதவும் நிறுவனமாகத் தங்கள் சங்கம் அமைந்திருப்பதை நான் நேரில் கண்டு அகமகிழ்ந்தேன்.

அங்குள்ள தமிழ் மக்களுக்கு அந்த நாட்டுப் பொதுமக்க ளுடனும் ஆட்சியாளர்களுடனும், அறிஞர்களுடனும் நல்லுறவை ஏற்படுத்தும் பயன் நிறைந்த நிறுவனமாகத் தங்கள் சங்கம் மேன் மேலும் வளர்ச்சி பெறப் பிரார்த்திக்கின்றேன்.

தங்கள் அன்புள்ள,

மு. அ. முத்தையா செட்டியார்

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரன்
மதுரைப் பல்கலைக்கழக
முன்னாள் துணைவேந்தர்

சமயநல்லூர்,
மதுரை மாவட்டம்
25—9—73

வாழ்த்து

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று தமிழன் பண்பாட்டின் உயிர்நிலையைப் பாடினான், ஒரு பழந்தமிழன். எனவே "தமிழன்" என்றால் "உலகத்தமிழன்", "உலகத்தையே தன் குடும்பமாகக் கொண்டு வாழ்பவன்" என்று பொருளாம். இதற்கேற்பத் தமிழர் உலக முழுவதும் பரந்து வாழ்கின்றனர். மேனாட்டிலும் சென்று வாழ்வது இந்த நூற்றாண்டைய தமிழன் சிறப்பு. லண்டன் தமிழ்ச்சங்கம் இத்தகைய உலகத் தமிழனின் பண்பாட்டு விளக்கம் ஆகும். அச்சங்கம் முதன் முதலாக இப்போது ஆண்டுமலர் ஒன்று வெளியிடுகிறது கேட்டுத் தமிழன் ஒவ்வொருவனும் அகம் மகிழ்வான். தாய்நாட்டுத் தமிழனுக்கும் புது விளக்கமும் புத்துயிரும் தரும் சஞ்சீவிக் கற்பக மலராக இது ஒளிரும்.

வாழ்க உலகெலாம்!
வாழ்க தமிழ்!
வாழ்க லண்டன் தமிழ்ச்சங்கம்!

அன்பன்,
தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

சென்னைப் பல்கலைக் கழகம்

நெ. து. சுந்தரவடிவேலு
துணை வேந்தர்

பல்கலைக்கழக கட்டடம்
திருவல்லிக்கேணி,
சென்னை-5.
26-9-1973

அன்புடையீர்,

இலண்டன் தமிழ்ச் சங்க ஆண்டு மலர் வெளிவர இருப்பதை அறிய மிக்க மகிழ்ச்சி. இலண்டன் தமிழ்ச் சங்கம் தன்னுடைய நற்பணியினை பல்துறைகளிலும் திறம்பட ஆற்றி வருவதை பல சமயங்களிலும் கேட்டு பெரிதும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். இச் சங்கம் தமிழர்களின் கலாசாரம் பண்பாடு போன்றவற்றை பல நிலைகளில் பிரதிபலிப்பதை கண்கூடாகக் கண்டு வருகிறேன். இச் சங்கம் மேன்மேலும் பல எழுச்சிமிக்க செயல்களை செய்து தமிழ் நாட்டிற்கும், தமிழக மக்களுக்கும் பெருமைத் தேடித்தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தெற்கே பிஜி தீவு முதல் வடக்கே கனடா வரை பரவியுள்ள தமிழர்களை ஒற்றுமைப்படுத்தும் நற்பணியில் இலண்டன் தமிழ்ச் சங்கம் வெற்றி பெறுவதாக.

இலண்டன் தமிழ்ச் சங்கம் மேலும் சிறப்புற்று விளங்கவும் ஆண்டு மலர் பல சிறப்பு அம்சங்களைத் தாங்கி என்றென்றும் மணம் வீசவும் வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,
நெ. து. சுந்தரவடிவேலு

Madurai University

மு. வரதராசன்
துணைவேந்தர்

University Buildings
Palkalai Nagar,
Madurai-21

19-9-1973

அன்புடையீர்,

லண்டன் தமிழ்ச் சங்கம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து தொண்டாற்றி வருதலைப் பாராட்டுகிறேன். ஆங்கில மொழிக்குப் பெருந் தொண்டாற்றியப் பெரும் புலவர்கள் வாழ்ந்த லண்டன் மாநகரில் தமிழ்ப் புலவர்களையும் தமிழ் இலக்கியத்தையும் போற்றும் தமிழ்ச் சங்கம் அமைந்து தொண்டாற்றி வருவது மகிழ்வதற்குரிய தாகும். லண்டனில் வாழும் தமிழ் மக்கள் தமிழ்ச் சங்கத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தக்க ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

மு. வரதராசன்

North-Eastern Hill University

சந்திரன் டி. எஸ். தேவநேசன்
M. A.,Ph. D
துணைவேந்தர்

வடகிழக்கு மலைப்பகுதி பல்கலைக் கழகம்
Headquarters:
Shillong-2 Meghalaya

2-9-73

வாழ்த்துரை

இலண்டன் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பதனை அறிய நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் 1936-39-ல் கேம்பிரிட்ஜில் மாணவனாக இருந்தபோது இலண்டனைப் பற்றி நன்றாக அறிந்தேன். பல்வேறு பண்பாடுகள் நிறைந்த பல நாட்டினர் கூடுகின்ற இத்தலைநகரில் தமிழ் இடம் பெற்றுள்ளது மிகவும் பொருத்தமாகும்.

சில ஆண்டுகளுக்கு முன் நான் பாரிஸ் மாநகரத்திற்குச் சென்றிருந்தேன். முன்பு பிரான்ஸ் நாட்டிற்கு உரியனவாய் இருந்த புதுச்சேரி முதலிய நகரங்களில் வசித்த சில தமிழ் மாணவர்களை நான் அங்குக் கண்டேன். நான் அவர்களுடன் பிரெஞ்சு மொழியில் பேச இயலாவிடினும் எங்களையெல்லாம் ஒன்று சேர்த்து மகிழும்படி செய்தது தமிழ் மொழியாகும். நாங்கள் அனைவரும் தமிழில் பேசி மகிழ்ந்தோம்.

உலகநாடு அரங்கில் தமிழ் இடம் பெறுவதைக் கண்டு யான் மகிழ்ச்சி அடைகின்றேன். மக்களைப் பிரிக்கும் மதவெறியும் கருத்து வேற்றுமைகளும் நிறைந்த இந்த உலகத்தில் இத் தமிழ் மொழி எல்லோரையும் ஒன்றுபடுத்திப் பண்பாட்டு ஒற்றுமையை நிலை நாட்டும் எனக் கருதுகின்றேன். இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் தொண்டுகள் வெற்றி பெறுவதாக என வாழ்த்துகின்றேன்.

சந்திரன். D. S. தேவநேசன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அடையாறு, சென்னை-20

இலண்டன் தமிழ்ச் சங்கம் ஆண்டு மலர் வெளியிடுவதென முடிவெடுத்து இப்பொழுது முதல் மலரை வெளிக் கொண்டு வருவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். என்றும் இளையளாயுள்ள தமிழ்க் கன்னிக்கு ஒரு நல்ல வாடா மாலையை உலகப் பெருமை வாய்ந்த இலண்டன் நகரிலுள்ள தமிழ்ச் சங்கம் அணிவிப்பது அழகும் பெருமையும் ஆம். என்றும் மணங் கமழுமாறு அம் மாலை அமைய வாழ்த்துகின்றேன். சங்கத்தார் தமிழார்வத்தைப் போற்றுகின்றேன். பாராட்டுகின்றேன்.

கா. மீனுட்சி சுந்தரம்

துணை இயக்குநர்

வாழ்த்து

இலண்டன் தமிழ்ச் சங்கம் முதன் முறையாக ஆண்டு மலர் வெளியிடுவதை அறியப் பெரிதும் மகிழ்கிறேன். தமிழ் தோன்றி, வளர்ந்து வரும், 'தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வாழ்ந்து வரும் இலண்டன் தமிழர்கள், ஆர்வத்தோடு ஆற்றிவரும் தமிழ்ப்பணியினை நான் பெரிதும் பாராட்டுகிறேன். நமது மொழியில் ஆழ்ந்திட, ஆழ்ந்திடத்தான் அதன் அழகும், ஆழமும் நன்கு புலனுகின்றது. எங்கள் மொழி இன்று புதிய வலிவும், வனப்பும் கொண்டு திகழ்வதை எங்கள் நாட்டில் காணலாம். புத்தம் புது மொழிகளெல்லாம், ஆட்சி மொழியாகவும், அறிவு மொழியாகவும் மாறிவருகின்ற இன்றையச் சூழலிலே பண்டைய மொழியான தமிழ் மொழி இக்காலத் தேவைகளுக்கு ஏற்புடைய மொழியாக விளங்குவதே அம் மொழியின் வளத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. அலுவலக மொழியாகமட்டுமல்லாமல் பல்கலைக் கழகப் போதனு மொழியாக நமது மொழி நன்கு வளர்ந்திருக்கிறது.

எங்கள் நாட்டில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரை தனித் தமிழ் மொழியிலேயே கல்வி ஊட்டுகிறோம். விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம், சட்டம், தொழில் நுணுக்கம் ஆகியஎல்லாத் துறைகளிலும் தமிழ் மொழியே போதனு மொழியாக இருக்கின்றது. உயர் நிர்வாகச் சேவைக்குப் போட்டியிடுவோர் தமிழ் மொழியிலேயே பரீட்சைகள் எழுதுகின்றார்கள். நிர்வாகத் துறையிலும் தமிழ் கணிசமான அளவு பயன்படுத்தப்படுகிறது. உலகத்துக்கே தமிழினை உணர்த்தும் வகையில் அஞ்சல் முத்திரைகளில் நாங்கள் தமிழ் பொறித்திருக்கிறோம். எங்கள் நாட்டுச் சட்டங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் எழுதப் பட்டிருக்கவேண்டும் என்று எங்களது புதிய அரசியலமைப்புத் திட்டம் விதித்திருக்கின்றது. எங்கள் நீதி மன்றங்களில் தமிழ் மொழியில் வழக்குரைக்கப்படுகின்றது. தமிழில் தீர்ப்பு வழங்கப்படுகிறது. எங்கள் மொழி வளர்ச்சியில் புதிய வலிவும் உத்வேகமும் காணக்கூடியதாய் இருக்கின்றது.

இவ்வேளையில், புதிய மாற்றங்கள் மின்வேகத்தில் தோன்றக்கூடிய சூழ்நிலையில் வாழுகின்ற இலண்டன் தமிழன்பர்கள் நமது அழகிய மொழியின் மணம் பரப்ப மலர் வெளியிடும் முயற்சியை மீண்டுமொரு முறை பாராட்டி, தமிழுலகம் அதனை நுகர்ந்து நலம் பெற வேண்டுமென விழைந்து, நும்பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

இர. பாஸ்கரலிங்கம்
பெருதுணைச் செயலாளர்
கல்வி அமைச்சு
கொழும்பு

டாக்டர் மெ. சுந்தரம்
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
நெறியாளர்

உயர் தமிழியல் ஆராய்ச்சி நிலையம்
மாநிலக் கல்லூரி,
சென்னை-5
15—10—1973

வாழ்த்துரை

அன்பு சான்றீர்,

ஆழிசூழ் உலகமெல்லாம் அருந்தமிழ் பரவ வேண்டும் என்னும் சீரிய நோக்கம் சிந்தையிற் கொண்டு, தோற்றம் செய்யப் பெற்று, இன்று ஆற்றலுடன் பணிபுரியும் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் முதன் முறையாக ஆண்டு மலர் வெளியிடப் பெறும் செய்தியறிந்து பேருவகை பூத்தேன்.

உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் இலக்கியத் தொன்மையினையும், இலக்கண வரையறையினையும் நன்குணர்ந்த நற்றமிழ் உள்ளங்கள் இம் மலர்ப் பணியில் ஈடுபட்டிருப்பது, மலர் மணம் கமழ்ந்து மணம் பரப்பும் என்பதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

தன்னை 'ஒரு தமிழ் மாணுக்கன்' எனத் தன் கல்லறையில் பொறிக்குமாறு கூறிய தக்கார் பிறந்த மண் இலண்டன் மண். மொழியுலகில் முதன் முதலாக ஒப்பிலக்கண ஒளிவிளக்கேற்றி, அது நந்தா விளக்காக நாளும் ஒளி விடுமாறு செய்த மொழிக் கோமகன் உலவிய புலம் இலண்டன் நகரம். அத்தகைய தமிழ்வேர் கால் கொண்டுள்ள இலண்டன் பதியில் தமிழ் ஆலமரம் தழைக்கச் செய்யும் பெரும் பணியில் டாக்டர் பொற்கோ போன்ற நற்றமிழ் அன்பர்கள் ஈடுபட்டிருப்பது பெருமகிழ்வளிக்கிறது. தேம்சு நதி தீரம் பொன்னியின் தொன்மையினையும், வையையின் வரலாற்றுச் சிறப்பினையும் உணரத் தலைப்பட்டுள்ளது நற்றமிழ் வரலாற்றில் நல்லறிகுறியாகும்.

தமிழ் ஆராய்ச்சியினைத் தலைமை ஆய்வாகக் கொண்டு பணியாற்றும் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையினர் ஈடுபட்டால் இப்பணி மேன்மேலும் வெற்றிபெறும் என்பது ஒருதலை.

இன்று இலண்டனில் எழும் இத் தமிழ் ஒலி மலரின் மண ஒலி மாநிலமெல்லாம் கேட்டு மகிழ்வூட்டுவதாக. ஆண்டு மலர், ஆண்ட பாண்டியரை நினைவூட்டும் அருந்தமிழ்ச் சங்க மலராய், வரலாற்றுப் புகழ் மேவிய தமிழ்ச் சங்க மலராய் மணம் கமழ்ந்து தழைக்க உளமார வாழ்த்துகின்றேன்.

அன்பன்,

மெ. சுந்தரம்

நல் ஆசியுரை

பேராசிரியர் **கா. குலரத்தினம்**, Ph.D. (Lon) D.Sc. (PARIS)

பூகோள ஆராய்ச்சி சம்பந்தமாக நடந்துள்ள மகாநாடுகளுக்குச் சென்றபோது, உலகின் பல மாநகரங்களையும் யான் தரிசித்துள்ளேன். அங்கங்கே தமிழ் மக்களைக் கண்டு அளவளாவியிருக்கிறேன். உங்கள் இலண்டன் மாநகரத்திலுள்ள தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்து நூல் நிலையம் தமிழுக்குச் சிறந்த சேவை செய்துள்ளது. அங்கு ஆங்கிலேயப் பெருமக்கள் சிலர் 19ம் நூற்றுண்டு தொடக்கம் தமிழ்மொழி ஆராய்ச்சி செய்து, தமிழை உலகெங்கும் பரவச் செய்து உதவியுள்ளனர்.

உங்கள் இலண்டன் தமிழ்ச் சங்கம் ஐம்பது ஆண்டுகளாக நிலவி வந்துள்ளது என்றும், சென்ற பதினைந்து ஆண்டுகளாகப் பதிவு செய்யப்பட்ட சபையாக இயங்கி வருகின்றது என்றும் அறிந்துள்ளேன். உங்கள் தமிழ்ச் சங்கம் ஒரு தமிழ் மலரை வெளியிட முன்வந்துள்ளது என்பதையறிந்து, மட்டற்ற மகிழ்ச்சி கொண்டுள்ளேன். உங்கள் இலண்டன் தமிழ்ச் சங்கம் தமிழ் மக்களின் பண்பாட்டைக் காத்தும், வளர்த்தும் வருதல் இனிதான செய்தியாகும். பல்லாண்டுகள் உங்கள் தமிழ்ச் சங்கம் வளர்ந்து, தமிழை வளர்க்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வழுத்தி, எனது மனமார்ந்த ஆசியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கா. குலரத்தினம்

61, அப்துல்கபூர் மாவத்தை,
கொள்ளுப்பிட்டி,
கொழும்பு-3 இலங்கை

G. R. DAMODARAN ஆகஸ்டு 16, 1973

BSC Engg: C. Engg, FIEE (Lond);
FI Nuc E (Lond), FEI (India)
PSG COLLEGE OF TECHNOLOGY
COIMBATORE 4 SOUTH INDIA

அன்புள்ள திரு. சுப்பிரமணியன்,

கடல் கடந்து வாழும் தமிழ்ப் பெருமக்கள் முயற்சியால் இலண்டனில் தமிழ்ச் சங்கம் ஏற்பட்டுச் சமுதாயத்திற்குத் தொண்டு புரிந்தும் தமிழ் இலக்கியச் சிறப்புகளை எடுத்துரைத்தும் வருவதனை நேரே கண்டு மகிழ்ந்துள்ளேன். இலண்டன் தமிழ்ச் சங்கம் முதன் முறையாக ஓர் ''ஆண்டு மலர்'' வெளியிட முனைந்துள்ளது கேட்டுப் பெரிதும் மகிழ்கின்றேன். மலர் சிறப்பும் பயனும் உள்ள வகையில் அமையவும் தமிழ்ச் சங்கத்தின் பணிகள் மேலும் மேலும் சிறக்கவும் எம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வாழ்க பொதுநலப் பணிகள்; வளர்க உங்கள் அனைவரின் முயற்சியும் என வாழ்த்துகின்றேன்,

அன்புள்ள,
ஜி. ஆர். தாமோதரன்

Karumuttu Thiagarajan Madurai
3—10—73

வாழ்த்துரை

பல ஆண்டுகளாகத் தமிழ்ப் பணி ஆற்றி வரும் இலண்டன் தமிழ்ச் சங்கம் இலக்கிய நறுமணம் கமழும் ஆண்டு மலர் வெளியிடுதல் அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தேன் மதுரத் தமிழோசை உலகெலாம் பரவி ஒலிக்க வேண்டும் என்று அமரர் பாரதியார் கனவு கண்டார். அதை உலகின் பல பகுதிகளில் அமைந்துள்ள தமிழ்ச் சங்கங்கள் இன்று நனவாக்கி வருகின்றன. சான்றாக, பம்பாய், கல்கத்தா, தில்லி முதலிய இந்தியப் பெருநகர்களில் மட்டுமின்றி, இலண்டன், பாரிசு, மாசுகோ, நியூயார்க், சிகாகோ போன்ற உலகத் தலைநகர்களிலும் இன்று நற்றமிழ் மணம் வீசுகின்றது. மேலும், உலகப் பெரும் பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழிக்குத் தனித்துறை அமைத்து, அதன் இனிமையை அயல்நாட்டு அறிஞர்களும் மாணவரும் சுவைத்து மகிழ்கின்றனர். இவ்வரிய சூழ்நிலைக்குத் தமிழ்ச் சங்கங்களும், அவற்றின் வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் அறிஞர்களுமே காரணமாவர்.

வெளி நாடுகளில் அமைந்து தமிழ்த் தொண்டு ஆற்றிவரும் சங்கங்களில் இலண்டன் தமிழ்ச் சங்கம் முன்னோடியாக விளங்கி வருதல் அனைவரும் அறிந்த உண்மையாகும். இந் நற் சங்கம் மேன் மேலும் வளர்ந்து தாய்மொழியை ஆங்கிலேய நாட்டில் பரப்பிச் சிறந்தோங்கித் திகழவும், இதன் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்கும் அறிஞர்கள் நலஞ்சான்று புகழ்பெருக்கி நீடூழி வாழவும் இறையருள் துணை நிற்பதாக.

கருமுத்து தியாகராசன்

830

நா. மகாலிங்கம்,
பி. எஸ்ஸி., எம். ஐ. இ.

இராமலிங்கர் பணிமன்றம்
6, போயசு தோட்டம்,
சக்தி சர்க்கரை-சென்னை அலுவலகம்
சென்னை-86.
8-10-1973.

வாழ்த்துரை

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்
வகை செய்தல் வேண்டும்'

என்பது நம் தேசியக் கவி பாரதியாரின் வேண்டுகோள் ஆகும். தமிழ் உணர்ச்சியும், எழுச்சியும் நல்ல வளர்ச்சி பெற்று எங்கும் எதிலும் தமிழ் என்ற போக்கு இப்போது தமிழ் நாட்டில் நன்கு தழைத்து வருகிறது.

தமிழ்த் துறையைச் சேர்ந்த சில அறிஞர்கள் தமிழின் தொன்மையைப் பற்றி இலக்கிய மேற்கோள்களைத் துணையாகக் கொண்டு ஆராய்ந்து வருகிறார்கள். சங்க இலக்கியம் போன்ற சிறந்த வளர்ந்த இலக்கியங்களை முதலிரண்டு நூற்றாண்டுகளில் பெற்றிருக்கும், தமிழ் மொழியின் பழமை இன்னும் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கவேண்டும் என்பதில் எவருக்கும் ஐயமில்லை. என்னுடைய நண்பர் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் புகழியூர்க் கல்வெட்டுக்களை ஆராய்ந்து கண்டு, அக் கல்வெட்டு கி.பி. இரண்டாம் நூற்றாண்டையது என்றும் கூறியிருக்கிறார். எனவே அகழ்வாராய்ச்சியிலும் கல்வெட்டுத் துறையிலும் இன்னும் ஆழ்ந்த ஆராய்ச்சிகளைச் செய்வோமானால் பல நல்ல முடிவுகளைக் காண்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன.

லண்டன் நகரில் தமிழ்முரசு ஒலிக்கின்ற செய்தி 'இன்பத் தேனாக காதில் வந்து பாய்கின்றது'. புதிய ஆராய்ச்சிகளைச் செய்யவும், பல நுட்பங்களைக் காணவும் தமிழ் அன்பர்கள் ஆர்வத்துடன் ஈடுபடவேண்டும்.

தங்கள் சங்கம் அதற்குத் துணைபுரிவதோடு, ஆங்கிலேய நாட்டார் தமது மொழியையும் பண்பாட்டையும் போற்றி வருகின்ற அதனைத் தமிழுக்கும் தமிழருக்கும் அறிமுகப்படுத்தும் நற்பணியையும் ஆற்றும் என்று நம்புகிறேன்.

லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டுமலர் சிறப்பாக ஒளிரவும், சங்கம் செழிப்பாக வளரவும் அன்போடு வாழ்த்துகிறேன். கடல் கடந்து சென்று தமிழுக்குத் தொண்டு செய்யும் உங்கள் ஒப்பற்ற பணி மேலும் சிறப்படையுமாக!

அன்புள்ள,
நா. மகாலிங்கம்

Dr. Alagappa Chettiar Educational Trust

Mrs. Umayal Ramanathan
Secretary

Karaikudi-623003
(Ramanthapuram Dt.)

லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டு மலருக்கு

வாழ்த்துச் செய்தி

கடல் கடந்த பகுதியிலும் கன்னித் தமிழின் எல்லையிலா மேன்மையினைப் பரப்பி வரும் இலண்டன் தமிழ்ச் சங்கத்தினர் பாராட்டிற்குரியவர்கள்.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"—

என்று அறிவுக் கனவு கண்டவர் அமரகவி பாரதியார். அக் கனவினை நனவாக்கி வரும் இலண்டன் தமிழ்ச் சங்கத்தார் பாரதியாரின் பாராட்டிற்கும் உரியவர்கள் ஆவர்.

"ஆண்டு மலர்"—முதன் முறையாக தொடங்கித் தொடர்ந்து ஆண்டுதோறும் கடல் கடந்த தமிழ் மக்களின் அறிவுலகத் தொடர்புகளைத் தமிழ் மக்களும் உணர்ந்து பயன்பெறச் செய்வதாகுக என்று எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுகின்றேன்.

வணக்கம்

Adayar House
Madras-25
29—8—73

அன்புள்ள திரு. சுப்பிரமணியத்திற்கு,

தங்கள் 9—8—73உ கடிதம் வரப் பெற்றேன்.

லண்டன் தமிழ்ச்சங்கம் ஆண்டு மலர் ஒன்று வெளியிட இருப்பது அறிந்து பெரிதும் மகிழ்கிறேன். தேம்ஸ் நதிக் கரையில் பழமையும் பெருமையும் கொண்டு விளங்கும் லண்டன் மாநகரில் தமிழர்கள் தமிழ்ச் சங்கம் வைத்து அதனைத் திறம்பட நடத்தி வருவது பாராட்டுதலுக்குரிய செயலாகும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த மனப்பான்மையின் அடியில் கடல் கடந்து ஆங்கில நாட்டில் வாழும் பண்பாடு மிக்க தமிழர்கள் கிழக்கத்திய நாடுகளின் குறிப்பாகத் தமிழ்நாட்டின் பழைய பாரம்பரியத்தினையும், இலக்கியச் சிறப்பினையும், இசைப் பெருமையினையும், கலை மாட்சியினையும் மறவாது போற்றி வருவது மகிழத் தக்க நிலையாகும். தமிழ் இலக்கியமும் தமிழ் இசையும் தமிழ்க் கலாச்சாரமும் எங்கும் பரிமளித்து இன்பம் பொங்கிட லண்டன் வாழ் தமிழர்கள் ஒரு தமிழ்ச் சங்கம் கண்டு முத்தமிழ்க் கலைகளுக்கும் வித்தகத் தொண்டாற்றி வருவது குறிப்பிடத்தக்க சீரிய முயற்சியாகும். இந்த வகையில் லண்டன் தமிழ்ச் சங்கத்தின் தளராத நற்பணிகள் மெச்சத் தக்கதாகும். அக்டோபர்—டிசம்பர் மாதங்களில் ஆண்டு விழா நடைபெற யிருப்பதும் அதனையொட்டி அழகிய முறையில் தமிழ் நாகரிகம் பண்பாடு இவற்றினைப் பிரதிபலிக்கும் வகையில் ஆண்டு மலர் ஒன்று வெளிவர இருப்பதும் பொருத்தமுடையதாகும். லண்டன் தமிழ்ச் சங்கத்தினரின் இந் நல்ல முயற்சிக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

தங்கள் அன்புள்ள,

மு. அ. சிதம்பரம்

Amalgamations Private Limited

அன்புடையீர்,

தாங்கள் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் முதன் முறையாக ஓர் ஆண்டு மலர் வெளியிடத் தீர்மானித்துள்ளது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கடல் கடந்த இலண்டன் நகரில் தமிழ்ச் சங்கம் அமைத்துத் தாய்மொழியின் சிறப்பினைப் பேணிக் காப்பதோடு சீரிய தமிழ்ப் பண்பு மலரும் வண்ணம் மேலை நாட்டவரோடு இணைந்து வாழ்ந்து செயல்பட்டுப் பெருமை தேடித் தருவது போற்றுதற்குரியதாகும்.

தமிழ் வளர்த்து, நல்லெண்ணமும் நட்பும் பெருகச் செய்து தாய்த்திரு நாடாகிய இந்திய நாட்டின் பெருமை ஓங்கிடச் செய்யும் உங்களது நன்முயற்சி வெல்க, மேலும் சிறப்புறுக என உளமார வாழ்த்துகிறேன்.

Madras-2
12—11—73

அன்புள்ள,

அ. சிவசைலம்

குறள் நெறி ஓங்குக

திருக்குறள் கழகம்

855, வடக்கு இராசவீதி
தலைவர்: பு. அ. சுப்பிரமணியன்

புதுக்கோட்டை
24—8—73

இலண்டன் தமிழ்ச்சங்க ஆண்டு மலருக்கு

அன்பு வளர, அறம் செழிக்க, அருள் மிளிர, மக்கள் நல்லதன் நலனும், தீயதன் தீமையும் உணர்ந்து, நன் மக்களாக வாழ, சிந்தனையைத் தூண்ட இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் உருவாகும் "ஆண்டு மலர்" நிலைத்த இலக்கியமாக மலரட்டும்

தூய்மை உணர்த்தும் தமிழ் வையகமெல்லாம் மணம்வீச சிறப்பாகத் தொண்டாற்றிவரும் இலண்டன் வாழ் தமிழ் அன்பர்களின் செயல்திறன் பெருக இறைவன் அருள் புரிவாராக.

பு. அ. சுப்பிரமணியன்

வாழ்த்துரை

உலகத் தலைநகர்களில் ஒன்றாகிய இலண்டன் மாநகரில் ஒரு தமிழ்ச்சங்கம் நிறுவப்பெற்றிருக்கும் செய்தியும், ஒரு தமிழ் ஆண்டு மலர் வெளிவரும் செய்தியும் உலகமுழுவதுமுள்ள தமிழ் மக்களால் மகிழ்ச்சியடையக் கூடியது மட்டுமல்ல, பெருமையடைவதற்கும் உரிய செய்தியாகும்.

இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வெளியிடவிருக்கும் ஆண்டுமலர் அண்மையில் வெளிவரவிருக்கிறது என்ற செய்தி என்னை மகிழச் செய்கிறது. மலர் நல்லறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து சிறப்படைய வேண்டுமென முழுமனதுடன் வாழ்த்துகிறேன்.

தங்களன்பிற்குரிய,
கி. ஆ. பெ விசுவநாதம்

திருச்சிராப்பள்ளி-8
23—8—1973

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

பேரன்புடையீர்,

வணக்கம். இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் முதன் முறையாக ஆண்டுமலர் வெளிவரவிருப்பதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். திரைகடலோடித் திரவியந் தேடச்சென்ற தமிழர்கள் தம் தாய்மொழி மீது கொண்ட மாறாத பற்றினால் சென்றவிடத்தெல்லாம் தமிழன்னைக்குச் சங்கம் வைத்து வளர்த்து வருவது போற்றுதற்குரிய அருஞ் செயலாகும்.

சொல்லுக்குறுதியான நாலையும் இரண்டையும் தித்திக்கும் தெள்ளமுதாம் திருவாசகத்துடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, ஆங்கிலமறிந்த அனைவரும் தமிழ் இலக்கியத்தின் பெருமையை உணரச் செய்தவரும், தம்முடைய கல்லறையில் தாமொரு தமிழ் மாணவரெனப் பொறிக்கச் செய்தவருமான டாக்டர் ஜி. யு. போப் துரைமகனார் வாழ்ந்து மறைந்த இலண்டன் மாநகரில் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழ்ச் சங்கம் அப்பெருமகனார் கண்ட கனவையெல்லாம் நனவாக்கி நாளும் தமிழ் வளர்க்கும் நல்ல தமிழ்ச் சங்கமாகத் திகழ்வதாக. அதன் முதல் ஆண்டு மலர் வாடாத பைந்தமிழ் மலராக ஆண்டு முழுவதும் தமிழ்மணம் பரப்பும் மலராகத் திகழ்வதாக.

அன்பன்,

சென்னை-1 **வ. சுப்பையா**

23—9—1973 கழக ஆட்சியாளர்

V. G. Panneerdas & Co. (p) Ltd.

தங்களின் "லண்டன் தமிழ்ச்சங்க ஆண்டு மலர்" வெளியீட்டுவிழாவிற்கான கட்டுரையுடன் எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தியாவின் தமிழகத்தில் வீர நடைபோடுகின்ற தமிழ்த்தாய் இந்தியாமட்டுமின்றி அகில உலக நாடுகள் எங்கும் விரிந்து படர்ந்து முத்தமிழ் என்னும் முத்துக்குவியலிலிருந்து தித்திக்கும் தெள்ளுத் தமிழ் அள்ளித் தெளித்துவிட்டதுபோல் ஆங்காங்கே ஒளிவிட்டுக் கொண்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

உலகநாடுகள் யாவற்றிலும் தமிழனென்ற முத்துக்கள் சிதறி இருக்கிறார்கள். அவர்கள் நமது இனிய தமிழை எடுத்தாள்வதுடன் "இலண்டன் முரசு" போன்ற இலக்கிய ஏடுகளின் மூலம் யாவரும் அறியச் செய்வது தமிழர் ஒவ்வொருவருடைய பாராட்டையும், வாழ்த்தையும் பெறத்தக்கதாகும்.

லண்டன் மாநகரில் பவனி வருகின்ற தமிழ்த்தாய் அங்குள்ள மக்கள் அனைவரையும் கவர்ந்து, அவர்களின் பாராட்டைப் பெற்று, தமிழகத்தின் பெருமையையும், தமிழின் எழில்மிக்க சிறப்பையும் எடுத்துக்காட்டிச் செழித்தோங்கி வளர்ந்து உயர்ந்திட எங்கள் உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

வாழ்க தமிழகம்! வளர்க லண்டன் தமிழ்ச் சங்கம்!!

அன்புள்ள,

சென்னை-15 V. G. சந்தோஷம்

18—10—73 (வி. ஜி. பன்னீர்தாஸ் சகோதரர்கள்.)

சோம. லெ.

22-A, St. Lazarus Church Road,
Madras-600028
17—8—1973

இலண்டன் தமிழ்ச்சங்கம் அரிய பணிகள் செய்து வருவதை, அங்கு வந்திருந்தபோது நேரிலும், தொடர்ந்து நண்பர்கள் மூலமும் அறிவேன். அங்கு வாழும் தமிழர்கள் நலனுக்காக மட்டும் இன்றி, நமது மொழி வளர்ச்சிக்கும், கலை உறவுகளைப் பரிமாறிக் கொள்ளவும் இத்தகைய சங்கம் இன்றியமையாதது.

சங்கம் இனிது இயங்கவும், ஆண்டு மலர் பயனுள்ள கட்டுரைகள், செய்திகள் ஆகியவற்றுடன் செம்மையாகவும் சிறப்பாகவும் வெளிவரவும் என் வாழ்த்து.

'சோமலெ'

PARIS TAMIL SANGAM

ASSOCIATION CULTURELLE TAMOULE

Paris 17—9—73

வாழ்த்துச் செய்தி

வண்டமிழே! செந்தேனே! உன்புகழை
லண்டனிலும் தமிழ்ச்சங்கம் அமைத்தவர்கள்
எண்டிசையும் பரப்புகின்றார் அன்னவர்தாம்
பண்ணிசையின் சுவைபோல வாழ்க! வாழ்க!

தென்தமிழே! நறுங்கனியே! தீஞ்சுவையே
உன்பெயரால் லண்டனிலே சங்கமம்மா!
என்றென்றும் சுவைகூடும் அமுதைப்போல
லண்டன் நகர் தமிழ்ச்சங்கம் பெறுக புகழே!

வண்ணமலர் மெல்லிதழே தாளாக
கன்னலதன் சாறேதான் மையாக
பொன்னெழுத்தில் வரவிருக்கும் ஆண்டுமலர்
தண்டமிழே உன்போல வெல்க வெல்க!

இவண்

பாரிஸ் ஜமால்

துணைத் தலைவர், பாரிசு தமிழ்ச் சங்கம்.

ங. ங.

கலைமகள்
தபால் பெட்டி 604
மயிலாப்பூர்
சென்னை-4

17—8—1973

வாழ்த்து

இங்கிலாந் தினுக்குத் தலைநக ராய
இலண்டனில் தண்டமிழ் அன்பர்
பொங்கிய ஊக்கத் தால்தமிழ்ச் சங்கம்
நிறுவியே போற்றினர்; தமிழின்
துங்கமார் சுவையைத் துய்க்கவும் பிறர்க்குச்
சொல்லவும் வல்லதாய் ஈது
மங்குறு தோங்கி வளர்கஎன் றேத்தி
வாழ்த்தினேன்; வாழிய வாழி!

கி. வா. ஜகந்நாதன்

கதிர்காமக் கந்தனை நெஞ்சிருத்தி இறைஞ்சுகின்றேன்

சரித்திர காலத்துக்கு முற்பட்டே தமிழ் மக்களிடம் இரண்டு பண்புகள் இருந்து வருகின்றன. ஒன்று, அவர்கள் எங்கு சென்றாலும் அங்கு தமது மொழியை, பண்பாட்டை, கலையை, கலாசாரத்தை, சமயத்தை நிலை நாட்டுவது; மற்றொன்று, அங்கு வாழும் மக்களுடன் ஒன்று கலந்து உறவாடி தங்கள் பாரம்பரியத்தின் பெருமையை அவர்கள் உணரும்படி செய்வது.

இந்தப் பண்புகளின் பிரதிபலிப்பாகத்தான் பர்மாவிலும், மலேசியாவிலும், சீயத்திலும், கம்போடியாவிலும், பிலிப்பைன்ஸிலும், இந்தோனேஷியாவிலும், இலங்கையிலும், இமயத்திலும் தமிழ் மொழியின் முத்திரையையும், சைவ சமயத்தின் இலச்சினைகளையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

தமிழகம் தலைநிமிர்ந்து அரசோச்சிய காலத்தில் ராஜராஜ சோழனும், இராஜேந்திர சோழனும் இந்து சமுத்திரத்தையும், பசுபிக் சமுத்திரத்தையும் கட்டி யாண்டதோடல்லாமல், ஆங்கு செறிந்து கிடந்த தீவுகள் அனைத்தையும், ஆஸ்திரேலியா தாஸ்மோனியா ஈறாக அரவணைத்து தமிழகத்தின் கலாச்சாரத்தைப் பரப்பினர். ரிஷபக் கொடியை உயர்த்தினர்.

இன்றும் கடல் கடந்து செல்லும் தமிழ் மக்கள் தாம் சென்றுறையும் நாடுகளில் எல்லாம் தமது தாய் மொழியான தமிழை மறப்பதில்லை. தமிழைத் தாரக மந்திரமாகக் கொண்டு தமிழ் அமைப்புகளை நிறுவுகின்றனர்.

அவ்வண்ணம் நிறுவப்பட்ட ஒரு அமைப்புத்தான் 'இலண்டன் மா நகரில்' இன்று இயங்கி வரும் இலண்டன் தமிழ்ச் சங்கமாகும்.

இந்தச் சங்கத்தை இயக்கி வருபவர்களை 1968ஆம் ஆண்டில் நான் நேரில் கண்டு அளவளாவினேன், அவர்களிடம் காணப்பட்ட தமிழ் ஆர்வமும், தமிழ் உணர்ச்சியும், தமிழன் பாற்கொண்ட அன்பும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. வெளிநாட்டிலிருந்து ஒரு தமிழன்

இங்கிலாந்துக்கு வந்துவிட்டான் என்றதும் அவனை இன்முகம் காட்டி வரவேற்று, தம்மாலான உதவிகள் எல்லாம் புரிந்து, மகிழ்ச்சியோடு ஆதரிக்கவேண்டும் என்பதில் அவர்கள் காட்டும் ஆர்வம் பாராட்டுக்குரியதேயாகும்.

தமிழ் அறிஞர்கள் சென்றுவிட்டால் அவர்களை அன்புடன் உபசரித்து, சொற்பொழி வாற்றும்படி செய்து கௌரவித்து அனுப்புவார்கள்.

இலண்டன் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இலண்டன் மா நகரிலே சங்கத்திற் கெனச் சொந்தமாக ஒரு கட்டடத்தை அமைக்கவேண்டும் என்று நெடுநாளாக கனவு கண்டு வருகிறார்கள். அந்த நிறுவனம் இலண்டனுக்கு வரும் மாணவர்களுக்கும், தொழில் நாடி வரும் இளைஞர்களுக்கும் குறைந்த செலவில் இருப்பிட வசதிகளையும், உணவு வசதிகளையும் செய்து கொடுக்கும் ஸ்தாபனமாக இயங்க வேண்டும் என்றும் அவர்கள் தணியாத தாகம் கொண்டுள்ளார்கள்.

அந்த நிறுவனத்தில் தமிழ் மணம் கமிழவும், தமிழ்க் கலைகள் செழிக்கவும் தமிழ்க் கலாச்சாரம் பேணப்படவும் வேண்டும் என்று அவர்கள் விழைகின்றார்கள். அத்தோடு இலண்டனில் வதியும் தமிழர்கள், ஒன்று கூடி உறவாடும் வசதி கொண்ட மண்டபம் ஒன்றும் உருவாக வேண்டும் என்பதும், அதில் தமிழ் மக்களின் இசை, நடனம், நாடகம் முதலான லலித கலைகள் அரங்கேறுவதன் மூலம் அவற்றை அங்கு வாழும் தமிழர்கள் மட்டுமின்றி, ஏனைய சாகித்தியத்தார்களும் கண்டுகளிக்க வாய்ப்பளிக்கவேண்டும் என்பதும் அவர்கள் பேரவாவாகும்.

இவையெல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கு உலகத்தின் பல நாடுகளிலும், பல பாகங்களிலும் குபேர நிலையில் வாழுகின்ற தமிழர்கள் தங்களால் முடிந்தவரை பொருளுதவிகள் செய்யவேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இத்தகைய உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டு இயங்கும் இலண்டன் தமிழ்ச் சங்கம் அதன் கனவுகளை நனவாக்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்ற நம்பிக்கை எனக்குண்டு. தமிழகத்திலும், மலேசியாவிலும், ஈழத்திலும் இன்னோரன்ன நாடுகளிலும் இருக்கும் தமிழ் மக்கள், பெரு மனதுபண்ணி. சிறுதொகை எனினும் அள்ளித் தெளிக்க முன்வந்தால் இந்த இலட்சியங்கள் நிறைவேறிவிடும் அல்லவா?

இப்போது ஒரு ஆண்டு மலரை வெளியிடுவதன் மூலம் தமிழ்ச் சங்கம் இலண்டனில் ஆற்றிவரும் சேவையின் சிறப்பையும், தேவையின் விவரங்களையும் உலகத் தமிழ் மக்கள் ஓரளவு உணர வாய்ப்புக் கிடைக்கின்றது.


இந்த ஆண்டு மலர் மூலம் இலண்டன் தமிழ்ச் சங்கம் புதியதொரு உத்வேகத்தைப் பெறும் என்றும், புதியதொரு சாதனையை நிலைநாட்டும் என்றும், புதியதொரு சகாப்தத்தைத் தோற்றுவிக்கும் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

ஆண்டு மலர் ஓராண்டோடு மட்டும் நிற்காமல், ஆண்டாண்டு தோறும் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று ஆசித்து, இலண்டன் வாழ் தமிழர்களின் இலட்சியங்கள் இனிது நிறைவேற வேண்டும் என்று வாழ்த்தி, எல்லாம் வல்ல கதிர்காமக் கந்தனை நெஞ்சிருத்தி இறைஞ்சுகின்றேன்.

தினபதி காரியாலயம்,
5, குணசேன மாவத்தை,
கொழும்பு 12, 20—9—1973
நச

எஸ். டி. சிவநாயகம்,

ஆசிரியர் : தினபதி



இயல்—1970 பாரதி விழாவில்
பேராசிரியர் G. R. தாமோதரன் அவர்கள் உரை



இசை—திருமதி பானுமதி சந்திரசேகரன் பாட்டு



நாடகம்—திரு. சங்கர் சங்கரமூர்த்தி (B.B.C.)
பாரதியாக நடிப்பு



பாரதிவிழா பேச்சு



தமிழ்ச் சங்க மேடையில் நடனம்
செல்வி. புஷ்பா தில்லைவராஹினி சிவஜோதி



தமிழ்ச்சங்க மேடையில் நடனம்
செல்வி. ராசையா



திரு. மதியழகனுக்கு வரவேற்பு



திரு. சீனிவாசனுக்குத் தமிழ்ச்சங்க செயற்குழுவினரும்
அவர்களது நண்பர்களும் வரவேற்பு

1972-73 ம் ஆண்டு இலண்டன் தமிழ்ச்சங்கத்தின் சில நிகழ்ச்சிகள்

16—9—'72 பொதுக்குழுக் கூட்டம், புதிய செயற்குழுத் தேர்தல் டாக்டர் பொன். கோதண்டராமன் அவர்கள் தலைமையில்.

21—9—'72 டாக்டர் பொன். கோதண்டராமன் அவர்களுக்கு செயற்குழு விருந்தளிப்பு. இடம்: இந்தியா கிளப்

5—11—'72 தீபாவளி விழா: திரு. & திருமதி நம்பி ஆரூரன்—பேச்சு, திரு. ஆ. சு. இராமலிங்கம்—நாடகம், செல்விகள் மலர்விழி & அருண்மொழி இராமலிங்கம்—நடனங்கள், திரு. குருப்—தாரா இசை, திருமதி ஜெயலக்ஷ்மி கந்தையாவின் மாணவிகள்—நடனங்கள்.

17—12—'72 கிருஸ்துமஸ் விழா: புனித முக்கூறு தேவாலய மண்டபத்தில் மாறுவேடப் போட்டி, குழந்தைகள் விளையாட்டுகள், கிருஸ்துமஸ் கரோல், பாட்டுக்கள் முதலியன.

14-1—'73 பொங்கல் புது நாள்—தமிழர் திருநாள்: மதியம் பொங்கல் விருந்து, இந்தியா கிளப்பில். மாலை பொங்கல் விழா, இந்திய இளங்கிருத்துவ மன்றத்தின் மகாத்மா காந்தி மண்டபத்தில்.

பேச்சு: டாக்டர் செ. வை. சண்முகம், ரெடிங் பல்கலைக் கழகம்.

பாடல்கள்: திருமதி ஜானகி வெங்கடேஸ்வரன்.

வீணை இசை: திருமதி ஜெயலட்சுமி கந்தையா.

நடனங்கள்: திருமதி ஜெயலட்சுமி கந்தையாவின் மாணவி, புஷ்பா-சிவஜோதி, வள்ளி சுப்பையா, வேதசொருபி நடராஜா.

பாம்பாட்டி நடனம்: திரு. ஆ. சு. இராமலிங்கம்.

29—3—'73 1971, 1972ம் ஆண்டுகளுக்கான தணிக்கை முடிவு.

29—4—'73 இடைக்கால ஆண்டுப் பொதுக்கூட்டம், கணக்குகள் (71, 72) பொதுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

4—7—'73 பீலிக்ஸ் அந்தோணி, M L A., மலேசியா, அவர்களுக்கு விருந்து.

7—7—'73 கேன்ட்டர் பரி, ராம்ஸ்கேட் ஆகிய ஊர்களுக்கு மகிழ்வுப் பயணம்.

31—7—'73 மக்கள் திலகம் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு வரவேற்பு.

29—8—'73 தமிழ் விழா: சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், தாமரைத்திரு சுந்தரவடிவேலு, மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், டாக்டர் மு. வ. ஆகியோர் உரை. நடனங்கள்: செல்வி ஆதீஸ்வரி சுப்பிரமணியம், செல்விகள் மலர்விழி & அருண்மொழி இராமலிங்கம். பாடல்கள்: திருமதி சாரதா நம்பி ஆரூரன்.

16—9—'73 தமிழக சட்டசபை துணைச் சபாநாயகர், திரு. சீனிவாசன் அவர்களுக்கு செயற் குழு வரவேற்பு. இடம்: இந்தியா கிளப்பில்.

22—9—'73 தமிழக சட்டசபை துணைச் சபாநாயகர் திரு. சீனிவாசனுக்கு செயற்குழுவினரும் அவர்களது நண்பர்களும் விருந்து, இந்தியா கிளப்பில்.

தமிழ் இலக்கணமும் மொழியியலும் - சொல்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

இந்திய நாடு மிகப் பழமையான நாடு. இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தனக்கென ஒரு வாழ்வையும் வரலாற்றையும் அமைத்துக் கொண்டதுடன் தனக்கென தனியொரு சிறந்த பாரம்பரியத்தையும் கொண்டிருந்த பெருமையுடையது. இலக்கியத்திலும் இலக்கணத்திலும் தனியொரு பாதையை வகுத்துச் சென்ற பெருமையுடையது இந்நாடு.

இந்நாட்டின் இலக்கிய, இலக்கண வரலாற்றில் தனியிடம் பெற்று நிற்பது தமிழ்நாடு. இன்று உலக மொழியாக விளங்கும் ஆங்கிலம் பிறப்பதற்கு எத்தனையோ நூற்றாண்டுகட்கு முன்னரே சிறந்த இலக்கியப் பரப்பினையும் சீரிய இலக்கண வரம்பினையும் கொண்டு நின்ற மொழி தமிழ் மொழி. நம் சிந்தனைக்கும் அப்பாற்பட்ட பழம்பெரும் பாரம்பரியத்தையும் பெருமையையும் கொண்டு விளங்குவது. இதனால்தான் அமரகவி பாரதியாரும்,

> ஆதிசிவன் பெற்றுவிட்டான்—என்னை
> ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர்
> வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
> மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்

எனப் பாடிப்பாடி மகிழ்ந்து நின்றார்.

அன்று அகத்தியன் கண்ட இலக்கணப் பரம்பரை வாழையடி வாழையாக வாழ்ந்து ஏற்றமும் எழிலும் பெற்று இன்னும் நம்மிடையே வளர்ந்து நிற்கக் காண்கிறோம். இரண்டாயிரம் ஆண்டைய இலக்கண வரலாற்றில் எத்தனையோ மேடுகள்; எத்தனையோ பள்ளங்கள்: எனினும் புத்தம் புதிய மெருகுகள் பல கொண்டு தத்தம் வழியே நின்ற இலக்கண ஆசிரியர்கள் பலரைத் தமிழ் இலக்கண வரலாற்றில் காணமுடியும். சிந்தனைத் தெளிவுடனும் சிறந்த கணித நுண்மையுடனும் இலக்கணம் படைத்துச் சென்றவர் பலர். எழுத்தென்றும் சொல்லென்றும் பகுத்துத் தமிழின் அமைப்பினை ஆராய்ந்து காட்டியவர் பலர். இவர்கள் ஆக்கிய சூத்திரங்களினூடே புகுந்து செல்லின் கிடைக்கும் பொக்கிஷங்கள் பல: மறைந்து கிடக்கும் மாமணிகள் பல; சிந்திச் சிதறி ஆங்காங்கே கிடக்கும் இலக்கணக் கொள்கைகள் பலப்பல; ஒலியியல் உண்மைகள் பல; சொல்லியல் கருத்துக்கள் பல; சொல்லியலும் தொடரியலும் கூடிக் குலவும் இடங்கள் மிகப்பல.

ஒரு மொழியின் சொல்லியல் அம் மொழியின்கண் காணப்படும் சொற்களின் அக அமைப்பினைப் பற்றி (Internal Structure)ப் பேசும். சொல்லின்கண் காணப்படும் பல்வேறு சொற்கூறுகள் எவ்வெவ்வாறு இணைக்கப்படுகின்றன என்பது பற்றியும் அவற்றின் வரிசை முறை பற்றியும் பரக்கப் பேசுவதே சொல்லியல். இதனை விளக்கப்போந்த மொழியியலாளர்கள்,

Morphology is the study of the internal structure of words

என்றும்

Morphology is the study of morphemes and their arrangements in forming words

என்றும் குறிப்பிடுவர். இத்தகைய நிலையினை ஒட்டு மொழிகளில் சிறக்கக் காணலாம். தமிழ் ஒரு ஒட்டு மொழி என்பதும், அதன்கண் காணப்படும் சொற்கள் இந் நிலையில் ஆராயப் படத்தக்கன என்பதும், நாம் அறிந்த உண்மைகள். இத்தகைய ஒரு ஆராய்ச்சியினைத் தமிழ் இலக்கணங்கள் முழுவதிலும் பரக்கக் காணமுடியும். தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம் போன்ற பல நூற்களில் இதனைக் கண்டு களிக்கலாம்.

தமிழ் இலக்கணத்தை ஐந்து வகையினதாகப் பிரிப்பர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற இவ் ஐவகை இலக்கணங்களுள் ஒன்றாய சொல் இலக்கணம் சொல்லியலையும் தொடரியலையும் பற்றிக் கூறுவது. சொல்லின் அமைப்பையும் அச் சொற்களாலாய தொடர்களையும் பற்றிக் கூறுகின்ற நிலையில்

தான் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் இரண்டையும் ஒரே தலைப்பின் கீழ் கூறுவாராயினர். மேலும் இவ்விரண்டுக்குமிடையே உள்ள வேற்றுமையும் மிக நுணுகியது. சொல்லியலிலேயே சொல்லப்பட வேண்டியவை எனக் கருதும் சில செய்திகள் இன்று தொடரியல் உண்மைகளாகக் காணப்படுகின்றன. இதனால்தான் மொழியியலாளர்கள்

It would be wrong to assume however, that morphology and Syntax constitute air-tight compartments in the structure of any language

என்றும்

The distinction between morphology and syntax is not always sharp

என்றும் கூறுவாராயினர். இந் நிலையினைப் பண்டைத் தமிழ் இலக்கண ஆசிரியர்களிடமும் காணலாம்.

எனினும் சொல்லியலுக்கும் தொடரியலுக்கும் இடையே வேற்றுமை பல உண்டு. சொல்லின் அகவாக்கும் சொல்லியலின் உறுப்பு இதனையும் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். சொல்லின் ஆக்கம் பற்றி கூறப்புகுந்த பவணந்தியார் சொற்களையெல்லாம் பகுபதம், பகாப்பதம் எனப் பிரித்து பகுபதத்தின் உறுப்புக்களைக் காட்டு முகத்தான்,

பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்

—நன்னூல் 133

எனக் கூறி நிற்பது தமிழ் இலக்கண நூலோரின் சிந்தனைத் தெளிவை நன்கு காட்டும்.

பொதுவாக மொழியியலாளர்கள் சொல்லியலின்கண் பெயர், வினை போன்றவைகளை அடக்கி அவற்றின் ஆக்கம் பற்றி ஆராய்வர். ஆங்கில மொழியின் சொல்லமைப்பினைப் பற்றி ஆராய்கின்ற ஆசிரியர்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடைகள், வினையடைகள் போன்ற பல்வேறு கூறுகளாகப் பகுத்து ஆங்காங்கே காணப்படும் சொற்களின் அமைப்பினை ஆராய்வர். இதே நிலையினை கிரேக்கம் இலத்தின் போன்ற மொழிகளிலும் காணலாம்.

தமிழ் மொழியின் அமைப்பினை விளக்க எண்ணிய ஆசிரியர்கள் தமிழ் மொழியில் காணப்படும் சொற்களைப் பெயர்ச்சொல் என்றும் வினைச்சொல் என்றும் உரிச்சொல் என்றும் இடைச்சொல் என்றும் நான்கு கூறுகளாகப் பகுத்து நின்றனர். இச் சொற்களுக்கும் விளக்கம் கூறும் முறையிலும் இவருடைய சொல்லியல் கொள்கைகள் விளங்கும்.

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

—தொல்காப்பியம் 682

என்ற நூற்பாவில் வினைச்சொல் வேற்றுமை ஏற்காது காலங்காட்டி நிற்கும் என சொல்லியல் அடிப்படையில் விளக்கம் தருவது சிந்தித்து மகிழ்வதற்குரியது. இது போன்றே பெயர்ச்சொல்லையும்

கூறிய முறையி னுருபுநிலை திரியா
தீறு பெயர்க் காகு மியற்கைய வென்ப

—தொல்காப்பியம் 552

பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே

—தொல்காப்பியம் 553

எனச் சொல்லியல் அடிப்படையில் விளக்கிப் போந்தமை பாராட்டற்குரியது.

பெயர்ச் சொற்களைப் பற்றி ஆராய்கின்ற ஆசிரியர்கள் அவற்றோடு இணைகின்ற ஒட்டுக்கள் பலவற்றைப் பற்றியும் ஆராய்வர். தமிழ் மொழியில் காணப்படும் ஒட்டுக்களில் மிக முக்கிய இடத்தைப் பெறுவன வேற்றுமை உருபுகள். இன்றைய மொழியியல் அடிப்படையில் எழுதப்படும் இலக்கணங்களில் எல்லாம் வேற்றுமை உருபுகள் நன்கு விவாதிக்கப்படுகின்றன. இதே நிலையில்தான் தமிழ் இலக்கண நூற்களும் காணப்படுகின்றன. இது பற்றி கூறவந்த தொல்காப்பியர் மூன்று இயல்களை வகுத்து வேற்றுமை பற்றி பரக்கக் கூறிச் செல்வதும் அவரைப் பின்பற்றி நன்னூலார்,

ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றுய்ப் பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை

—நன்னூல் 291

என்ற சூத்திரம் முதல் பல்வேறு சூத்திரங்களில் தமிழ் வேற்றுமைப் பற்றி கூறுவதும் இவண் குறிப்பிடத்தக்கது.

இது போன்றே வினையியலிலும் இன்றைய மொழியியல் கொள்கைகள் பலவற்றைக் காணலாம். வினைச்சொல், வினைப் பகுதி, காலங் காட்டும் இடை நிலைகள், விகுதிகள் ஆகியவற்றைக் கொண்டன என்பதும் அவற்றுள் வினைப்பகுதி பகுக்கமுடியாதது என்பதும் நன்னூல் போன்ற இலக்கண நூற்களைப் படிப்பார்க்கு நன்கு தெரியும். தமிழ் வினைப்

பகுதிகள் பல உலக மொழிகளில் காணப் படுவது போன்ற ஏவல் வினைகளாகயிருப்பதை "நடவா மடி சீவிடு" போன்ற சூத்திரங்களில் கூறிச் செல்வார். இது போன்றே பல் வேறு விகுதிகள் பற்றி

அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்
அஆ குடுதுறு என்ஏன் அல்அன்
அம்ஆம் எம்ஏம் ஓமொ டும்மூர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்
ஈயர் கயவு மென்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே

—நன்னூல் 140

எனும் சூத்திரத்திலும் நன்னூலார் கூறிச் செல்வார். காலங்காட்டும் இடைநிலைகள் பற்றி கூறப்போந்த நன்னூலார்

தடற வொற் றின்னே யைம்பான் மூவிடத்
திறந்த காலந் தரும் தொழிலிடைநிலை

—நன்னூல் 142

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினையிடைநிலை

—நன்னூல் 143

போன்ற சூத்திரங்களில் காலங்காட்டும் இடைநிலைகள் பற்றிப் பேசுவார். கால ஒட்டுக்களைப் பற்றி பேசுகின்ற மொழியியலாளர்கள் இவ் வொட்டுக்கள் எங்கெங்கே வருகின்றன என்பது பற்றியும் இவற்றைத் தகர ஒற்றி லிருந்து கொண்டுவர முடியுமா என்பன போன்றவற்றைப் பற்றியும் பல்வேறு நிலை களில் ஆராய்வர். இத்தகைய நிலை தொல் காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூற்களில் காணப்படவில்லை. காலம் பற்றிப் பேசவந்த தொல்காப்பியம் மூன்று காலங்கள் உள்ளன என குறிப்பிட்டுச் சென்றதேயன்றி அக் காலங்கள் எங்கெந்த இடை நிலைகளால் காட்டப்படுகின்றன என்றோ அவை வரு மிடங்கள் எவை என்றும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இத்தகைய பல நிலைகள் ஆங்காங்கே காணப்படினும் தமிழ் இலக் கணங்கள் பொதுவாக சிறந்த மொழியியல் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

எம்.ஏ., பிஎச்.டி. (கேரளம்)

பிஎச்.டி. (இந்தியானா)

நெறியாளர் & பேராசிரியர்

மொழியியல் உயர் கல்வி நிலையம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அண்ணாமலைநகர், 608 101

தமிழ்ச் சங்கத்தைப் பற்றி...

கடந்த 50 ஆண்டுகளாக இலண்டன் நகரில் தமிழர்கள் ஒன்று சேரும் ஒரு பொது அமைப்பாக, ஏதாவது ஒரு உருவில் இலண்டன் தமிழ்ச் சங்கம் இயங்கி வந்துள்ளது உலகின் பல பகுதிகளில் இருந்தும் இலண்டனுக்கு வருகை தரும் தமிழர்கள் சந்திக்க இலண்டன் தமிழ்ச் சங்கக் கூட்டங்கள் பெரும் வாய்ப்பு அளித்து வந்துள்ளன.

❖ ❖ ❖

பேசும் மொழியாலும் பிறந்த இனத்தாலும் ஒன்றுபட்ட தமிழர்கள் உலகின் பல பகுதிகளிலும் வாழுகின்றார்கள். அவர்கள் இலண்டனுக்கு வரும்போது இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தினர்களாகச் சேருவதற்கு வரவேற்கப் படுகிறார்கள் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தினர்களாக தமிழகத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் வந்த தமிழர்கள் மட்டுமல்ல, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், தென் ஆப்ரிக்கா, ட்ரினிடாட் முதலிய பல பகுதிகளிலிருந்தும் வந்த தமிழர்கள் அங்கத்தினர்களாகவும், செயற்குழு உறுப்பினர் களாகவும் இருந்து வந்துள்ளனர்.

❖ ❖ ❖

தமிழைப் பேணிக் காக்கும் இலண்டன் தமிழ்ச் சங்கம் ஒரு பதிவு பெற்ற நிறுவனமாக இயங்க வேண்டும் என்ற நோக்கில் 1960ம் ஆண்டு ஏப்ரல் மாதம், முன்னாள் தலைவர் டாக்டர் சேசா அவர்களது முயற்சியாலும் அவ்வாண்டு பணியாற்றிய செயற்குழுவின் முயற்சியாலும் இலண்டன் தமிழ்ச்சங்கம் பதிவு செய்யப்பட்டது.

BARTHOLOMÄUS ZIEGENBALG'S TRANSLATION OF THE ULAKANĪTI

(Notes on an unpublished manuscript in the Royal Library at Copenhagen.)

Dr Albertine Gaur

In 1708, two years after his arrival in Tranquebar, the German-born Danish missionary Bartholomäus Ziegenbalg (1682–1719) wrote a descriptive catalogue of all the Tamil palm-leaf manuscripts he had by then collected for the library of the newly founded mission. The catalogue bears the title *Verzeichnis der Malabarischen Bücher* and is in the possession of the British Museum in London[1]. It lists altogether hundred and twelve palm-leaf manuscripts. One of the items in the Catalogue is the description of book No. 100 which reads as follows.


'Ulaganidi (உலக நீதி); the civil law. This little book lays down moral rules about how to abstain form vice and practice virtue. I have translated it into German just to find out what kind of morality exists amongst such heathens. It is the first book the school children study, yet all those rules are never properly explained to them. Whenever I visit a school and ask some youngsters what certain things mean they are always unable to give me a satisfactory answer. The same happens in the case of other books dealing with ethics, they are learnt by heart but without proper understanding; just as we Christians often learn the Catechism by heart without understanding it.'[2]

The German translation of the *Ulakaniiti* which Ziegenbalg mentions is now in the possession of the Royal Library at Copenhagen.[3] It was sent there in 1708 by the author himself in a parcel containing a collection of manuscripts which is frequently refered to in ziegenbalg's letters as *Bibliotheca Malabarica.*[4] The translation itself is written on paper and bound into a small booklet not more than 16×9 cm. in size, consisting of altogether fifty-three pages. Almost half of it is taken up by an elaborate introduction which at the end bears Ziegenbalg's name and the date 3rd of September, 1708 The title pages states that the *Ulakaniiti* consists of '...sixty–five moral rules which many years ago had been written down by a heathen poet called 'ùlagą Náden' in *Malabari* [i. e. Tamil] verse and which are herewith translated into High-German...'

This is followed by a long and, as was the fashion in Ziegenbalg's time, exremely servile dedication to the *Allerdurchleuchtigsten Prinz und Herrn, Herrn Carl zu Dennemarck und Norwegen etc.* Only the last eight pages of the introduction are devoted to discussing the merits of the *Ulakaniiti* itself, where Ziegenbalg gives again the name of the author and acknowledges the high ethic value of the work. keeping an anxious eye on his pious Christian friends in Europe who had to supply the moral and financial support for the Tranquebar mission, and who were indeed often greatly displeased with his all too enthusiastic study of the Hindu religion, he hastely afirms that though those 'heathens' seem to lead a 'very virtuous life' all their moral values were taken 'from nature' and not the fruit of any divine revelation. A little more at ease he continuous '...I am confident that I have translated all *Malabari* words correctly into my own mother–tongue and 'in some cases '... I have also written a short explanation under each verse according to what I have been told by the *Malabari* poet who at that time stayed with me...'

It is interesting to note how Ziegenbalg arranges his translation giving first the Tamil text, followed by a Roman transliteration, then the German translation and in some cases a short commentary.


Thus the manuscript begins :-

1) a. 

b. Otaamel órunaalum irùkkawentaam.


c. Sey Niemals ohne Lernen. [Be never without learning.]

d. Du solt allezeit Beten, Lesen, Hören und etwas Verrichten, ¦das zu dem Gottesdienst Gehöret, damit du Immer im Lernen Begriffen seyst. [You must always pray, read, listen and perform actions which will serve God so that you are rever without learing.]

2) a. 

b. òruwereiùm pollaanku tschólla wentaam.

c. Rede von Niemand nichts Böses. [Do not speak ill of anyone.]

3) a. 

b. Maadawei orunaalam egischa wentaam.

c. Niemals Verachte deine Mutter. [Never dispise your mother.]

d. Diese Heyden dringen sehr auf die Verehrung und Hochachtung der Mutter, weil sie Wissen, dass die Mutter von den Kindern viel leichter kan Verachtet werden als der Vatter, darumb weil die mutter ihnen weit Gemeiner als der Vatter ist. [These heathens put great stress on the veneration of the mother because they know that it would be far easier for children to slight their mother since she is on more familiar terms with them than their father.]


When it came to purchasing, identifying and translating Tamil palm–leaf manuscripts Ziegenbalg had to rely greatly on the help of the *Malabari* poet mentioned in the introduction and in many of his letters and on informations he received from some of the 'learned Brahmins' he knew in Tranquebar. The manuscript of the *Ulakanīti* upon which he based his German translation must in many ways have been different to other known texts of the same work. There are irregularities in the spelling of Tamil words which may have been caused through faulty copying or by actual errors in the manuscript itself; in some cases they may simply represent the mode of spelling Tamil words towards the end of the 17th century, just as ziegenbalg's way of writing German is greatly divorced from modern standards. The text also contains a number of verses not to be found in other versions of the *Ulakanīti* and some verses appear in a different order. A few lines praising Hindu deities are missing. No doubt the missionary feared that by translating them he might put too heavy a strain on the religious susceptibility of his royal patron in Copenhagen.

In the introduction ziegenbalg claims that he has '...translated all *Malabari* words correctly into [his] mother–tongue', however, one cannot help but feel that quite often he depended more on his Tamil adviser than he thought; at times neither he nor his adviser seem to have understood the text clearly and seem to have found it difficult to grasp and then transfer the real meaning of the *sutra*–like verses into another idiom.

An interesting feature of this work forms the Roman transliteration ziegenbalg inserts between the actual text and his German translation, for he simply seems to have written down spoken Tamil according to German rules of pronounciation From this purely phonetic transliteration we can thus obtain an interesting glimps of the way Tamil was pronounced towards the beginning of the 18th century along the east coast of Madras.

The manuscript ends :

4) a.



b. Odiwídda waśchagattàl ùlaganáden.
Unmeiài pàriwídda Ùlagà nìdi.
Púdaladdil mÍga wàra pórulúm deri.
Púlogammadirndírawe wàrwa táme.

c. Derjenige, so dieses Büchlein zu singen Gelehrt hat, ist in Wahreit *odiwÍdda wàschagattaal ulaga náden* i. e. ein solcher, der da die Wahrheit Gelehret und der Welt Heyland ist. Ulaga Nàden ist ein Nahme so Gott selbsten zu Kommet. Demit du in der Welt wohl leben möchtest, solstu Reichthum (nehmlich an der Weisheit suche), und selbsten so leben, dass sich die welt für dich fürchtet. i. e. das Jederman in der Welt sich deiner Verwundern Muss, und für dir eine demüthige Ehrverbiethigkeit haben. [He who has taught how to sing these verses is truely... i. e. one who has taught the truth and is the world's saviour. Ulaga Naden is a name worthy of God himself. In order to live well in this world you should acquire wealth (in wisdom) and live in a way which will inspire the world with awe; i. e. that everybody in the world is surprised and full of reverence for you.]

Though the Tranquebar mission continued to purchase books and manuscripts ziegenbalg's original collection was not to survive for long. There is another unpublished manuscript in the Royal library at Copenhagen.[5] Composed in 1731 which gives a comprehensive list of the entire holdings of the Mission library. In the introduction the author, one of ziegenbalg's successors, mentions an inventory held in 1726 which could locate only twenty-six out of the hundred and twelve manuscripts listed in the *Verzeichnis der Malabarischen Bücher*. The *Ulakaniiti* is not amongst them and thus Ziegenbalg's translation remains the only account of this particular Version. Since the text and the translation appear side by side the reader can gain an idea of Ziegenbalg's method of interpretation and of his ability to obtain, almost by instinct, an insight into the material at hand; even though his knowledge of Tamil at that time was limited in its scope.

Apart from the linguistic aspect the German version of the *Ulakaniiti* has an interesting human angle. It shows how the mind of a Tamil poet and Christian missionary, divided by matters of faith, tradition and calling could meet on the universial and therefore more or less neutral ground of pure ethics.

Dr Albertine Gaur,
Dept. of Oriental Manuscripts and Printed Books
British Museum, London, U. K.

---

[1] *Sloane* 3014. British Museum, London.

[2] For the English translation See *A Catalogue of B. Ziegenbalg's Tamil Library*. In *The British Museum Quarterly*. Vol. XXX, no. 3-4 pp. 99-105. London, 1966.

[3] *Cod. Tamul.* 5 (*UB*). Det Kongelige Bibliotek, Copenhagen.

[4] B. Ziegenbalg: *An Account of the Malabarians*. p. 29. Published in *Propagation of the Gospel in the East*. 3rd ed. London, 1718.

[5] Ny. Kgl. Sam. no. 589, *Bibliotheca Tamulica consistens in recensione librorum nostrorum, mscr. torum, ad cognoscendam et lingunam & res Tamulicas inseruientium*. Anno MDCCXXXI. Det Kongelige Bibliotek, Copenhagen.

† மாற்றிலக்கணத்தில் பாலெண் இயைபு விதிகள்

டாக்டர் கி. அரங்கன்

1.1. மாற்றிலக்கணத்தின் தொடரியல் பகுதியில் (Syntactic Component) இரு வேறு தன்மையுடைய விதிகள் உள்ளன. ஒரு வாக்கியத்தின் அக அமைப்பை (Deep Structure) தோற்றுவிக்க தொடரமைப்பு விதிகள் (Phrase Structure Rules) பயன்படுகின்றன. இந்த அக அமைப்பிலிருந்து புற அமைப்பை வருவிக்க நாம் மாற்று விதிகளைப் (Transformational Rules) பயன்படுத்துகிறோம். பாலெண் இயைபு விதிகள் (Concord Rules) மாற்று விதிகளுள் அடங்கும்.

1.2. பாலெண் இயைபு விதிகளின் தன்மையை முதலில் விளக்கிவிட்டு பின்பு இதில் உள்ள பிரச்சனைகளை ஆராய்வோம். தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு போன்ற திராவிட மொழிகளிலும் இந்தி, வங்காளம் போன்ற இந்தோ-ஆரிய (Indo-Aryan) மொழிகளிலும் வினைச் சொல்லோடு சில விகுதிகள் காணப்படுகின்றன. இதை விளக்க நாம் தமிழையும் இந்தியையும் எடுத்துக் கொள்வோம்.

(1) கண்ணன் வந்தான்
(2) கமலா வந்தாள்
(3) பையன்கள் வந்தார்கள்
(4) நான் வந்தேன்
(5) நீ வந்தாய்

மேலே காட்டியுள்ள வாக்கியங்களைக் கூர்ந்து நோக்கினால், ஒரு செய்தி தெளிவாகும். வினையோடு பல்வேறு விகுதிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் மாறுகின்ற பொழுதெல்லாம், இவ் விகுதிகளும் மாறுகின்றன. வாக்கியம் (1)லும் (2)லும் வினையோடு—ஆன் என்ற விகுதியும்—ஆள் என்ற விகுதியும் காணப்படுகின்றன.—ஆன் என்ற விகுதி வாக்கியத்தில் படர்க்கை ஒருமை ஆண்பால் எழுவாயாக இருக்கும்பொழுது மட்டும் காணப்படுகிறது. இவ்வாறே எழுவாய் படர்க்கை ஒருமை பெண்பாலாக இருக்கும்பொழுது — ஆள் என்ற விகுதி வினையோடு வருகிறது. எழுவாய் பலர்பாலாக இருக்கும்பொழுது —ஆர்கள் என்ற விகுதி வருகிறது. வாக்கியங்கள் (4)லும் (5)லும் எழுவாய் தன்மை ஒருமையாகவும் முன்னிலை ஒருமையாகவும் இருக்கின்றன. ஆகையால் வினையோடு -ஏன் என்ற விகுதியும்—ஆய் என்ற விகுதியும் காணப்படுகின்றன. இந்த இயைபு விதியை மீறிய வாக்கியங்களை யாராவது எழுதினாலோ கூறினாலோ அவை வழு (Ungrammatical) வாக்கியங்கள் என்று கருதப்படும். இவ் விதிகளை மீறியதால் வாக்கியங்கள் (6—8) இலக்கண வழுவானவை என்று கருதப்படுகின்றன.

*(6) கோவலன் மதுரைக்குப் போனாள்
*(7) கண்ணகி நெடுஞ்செழியனுடன் வாதாடினான்
*(8) நான் பாடினாய்

ஆகையால் எழுவாயும் வினையோடு வருகின்ற பாலெண் விகுதிகளும் இயைபு உடையதாய் இருத்தல் வேண்டும் என்பது தமிழில் ஒரு விதி. இந்தியிலும் பாலெண் விகுதிகள் எழுவாயோடு ஒத்திருக்க வேண்டும்.

(9) mãẽ Jaataa hũũ 'நான் போகிறேன்'
(10) tum Jaatee hoo 'நீர் போகிறீர்'
(11) vah Jaataa hæ 'அவன் போகிறான்'
(12) vah Jaatii hæ 'அவள் போகிறாள்'
(13) vee Jaatee hãẽ 'அவர்கள் போகிறார்கள்'

இவ் விதிகளை மீறிய வாக்கியங்கள் இலக்கண வழுவான வாக்கியங்களாகும்.

*(14) mãẽ Jaatee hoo
*(15) vah Jaatee hãẽ
*(16) tum Jaataa hæ


எழுவாயும் பாலெண் விகுதிகளும் இயைபுடையதாயிருப்பதால் வினைச் சொல்லைக் கொண்டே எழுவாயைப் பற்றிய விபரத்தை அறிந்துகொள்ள முடியும். படித்தான் என்ற வினையிலிருந்தே எழுவாய் படர்க்கை ஆண்பால் ஒருமை என்பதை உணர முடியும். இதைப் போன்றே எழுதினாள், எழுதினார்கள் என்ற வினையிலிருந்து எழுவாய் படர்க்கை

பெண்பால் ஒருமை என்பதையும் படர்க்கை பலர்பால் என்பதையும் தெரிந்துகொள்ள இயலும். இவ்விகுதிகளை அடிப்படையாகக் கொண்டே தொல்காப்பியரும் பெயர்ச் சொற்களின் பாகுபாட்டை வகுத்திருக்கிறார்.[1]

1.3. மாற்றிலக்கணத்தின் பாலெண் இயைபு விதிகளைப் பொதுவாகக் கடைசியில் செயல்படுகின்றவை என்று கூறுவார்கள். முதலில் தொடரமைப்பு விதிகள் செயல்படும் பொழுது வாக்கியத்தின் அக அமைப்பு உருவாகிறது. இந்த அக அமைப்பில் உள்ள குறியீடுகளை நீக்கிவிட்டு சொற்களை சொல் விதிகள் (Lexical Rules) செருகுகின்றன (Insert). மாற்று விதிகள் சொல் விதிகளுக்குப் பிறகு செயல்படுகின்றன.[2] மாற்று விதிகளில் பலவகைப்பட்ட விதி உள்ளன. சில விதிகள் அக அமைப்பில் உள்ள சில உறுப்பை (Element) நீக்கும். இவ் விதிகளை நீக்கல் விதிகள் (Deletion Rules) என்று அழைக்கலாம். வேறு சில விதிகள் அக அமைப்பில் உள்ள உறுப்புகளை இடமாற்றம் செய்யும். இவற்றை இடமாற்று விதிகள் (Permutation Rules) எனலாம். அக அமைப்பில் சில உருபன்களை (Morphemes) சில விதிகள் சேர்க்கும். இவற்றை கூட்டல் விதிகள் (Additive Rules) என்று கூறலாம். பாலெண் இயைபு விதிகள் எழுவாய்க்குரிய சில இயல்புகளை (Features) வினை விகுதிகளுக்குச் சேர்க்கின்றன இவ் விதிகளும் கூட்டல் வகை விதிகளைச் சார்ந்ததுதான். இருப்பினும் இவை மற்றைய மாற்று விதிகள் செயல்பட்ட பிறகுதான் இவை செயல்படுகின்றன என்பது ஒரு பொதுவான நம்பிக்கை. இதை ஆராய்வதுதான் இந்தக் கட்டுரையின் அடிப்படை நோக்கமாக அமைகிறது.

1.4. வாக்கியம் (17)ஐ எடுத்துக் கொள்வோம்.

(17) நான் அவன் வருவதைக் கண்டேன். இந்த வாக்கியத்தின் அக அமைப்பை பின்வரும் கிளைப் படத்தின் மூலம் காட்டலாம்.



படம் (1)

பெயராக்க மாற்று விதி (Nominalization Transformation) S_2 மீது செயல்படும்பொழுது நமக்கு அவன் வருவது என்பது கிடைக்கிறது. பாலெண் இயைபு விதி செயல்படும்பொழுது —ஏன் என்ற விகுதி வினையோடு சேர்க்கப் படும். இதை,

நான் அவன் வருவதைக் கண்—ட்—>

$\begin{bmatrix} +\text{Speaker} \\ -\text{Plural} \end{bmatrix}$

நான் அவன் வருவதைக் கண்—ட்—ஏன்

$\begin{bmatrix} +\text{Speaker} \\ -\text{Plural} \end{bmatrix}$ $\begin{bmatrix} +\text{Speaker} \\ -\text{Plural} \end{bmatrix}$

என்று காட்டலாம். இவ் விதி செயல்பட்ட பிறகு நமக்கு

(17) நான் அவன் வருவதைக் கண்டேன்.


என்ற வாக்கியம் கிடைக்கிறது. பாலெண் இயைபு விதி பெயராக்க விதிக்குப் பிறகு படுவதை இந்த வாக்கியத்தில் பார்க்கிறோம். செயல் இவ்வாறு பல வாக்கியங்களில் இவ் விதி செயல்படுவதால் இதைக் கடைசியாக செயல்படுகின்ற விதி என்று மாற்றிலக் கணத்தார் கருத ஆரம்பித்தார்கள். ஆனால் இக் கருத்து தவறானது.

1.5. சில வாக்கியங்களின் அமைப்பு முறையைக் கவனிக்கும்பொழுது, பாலெண் இயைபு விதி நீக்கல் விதிக்கு முன் செயல் படுவதைப் பார்க்கலாம்.

(18) உட்காருங்கள்
(19) எழுதுங்கள்
(20) எல்லோரும் போகிறோம்
(21) எல்லோரும் போகிறீர்கள்

(22) எல்லோரும் போகிருர்கள்
(23) எத்தனை பேர் இருக்கிரேம்?
(24) எத்தனை பேர் இருக்கிருர்கள்?
(25) எத்தனை பேர் இருக்கிறீர்கள்?

வாக்கியங்கள் (18—19) ஏவல் வாக்கிய வகையைச் சார்ந்தவை. இவ் வாக்கியங்களின் (18—19) அக அமைப்பில் நீங்கள் என்ற எழுவாய் இருக்கிறது.[3] வாக்கியம் (19)ன் அக அமைப்பை பின்வரும் கிளைப் படம் விளக்கும்.



படம் (2)

இந்த அக அமைப்பிலிருந்து புற அமைப்பான வாக்கியம் (19) பல்வேறு மாற்று விதிகள் செயல்படும்பொழுது கிடைக்கிறது. இதை,

Imp நீங்கள் எழுது Fut -> (நீக்கல் விதி)
Imp நீங்கள் எழுது —> (நீக்கல் விதி)
நீங்கள் எழுது —> (பாலெண் இயைபு விதி)

[— Speaker
+ Honorific]

நீங்கள் எழுது—ங்கள் —> (நீக்கல் விதி)

[— Speaker
+ Honorific] [— Speaker
+ Honorific]

(19) எழுதுங்கள்

கடைசியாக செயல்படுகின்ற நீக்கல் விதி சிறப்பு விதி (Optional Rule). இவ் விதி செயல்பட்டாலும் படலாம் செயல்படாமலும் போகலாம். மேலே காட்டிய உதாரணத்தில் பாலெண் இயைபு விதி கடைசியாக செயல்படவில்லை. சிறப்பு விதியான நீக்கல் விதிக்கு முன்பு இது செயல்படுகிறது. இவ் விதிகள் செயல்படுகின்ற முறைமையை (Order) மாற்ற முடியாது. நீங்கள் என்ற எழுவாயை பாலெண் இயைபு விதி செயல்படுவதற்கு வாக்கியத்திலிருந்து முன்பு நீக்க முடியாது,

வாக்கியங்கள் (20—22)லும் எழுவாய் மறைந்து நிற்கிறது. இருப்பினும் எழுவாயின் தன்மையைக் காட்டுகிற பாலெண் இயைபு விதிகள் காணப்படுகின்றன. புற அமைப்பில் எழுவாய் காணப்படாவிட்டாலும் அக அமைப்பில் இது இருக்கிறது. பாலெண் இயைபு விதி செயல்பட்ட பிறகு நீக்கல் விதி எழுவாயை வாக்கியத்திலிருந்து நீக்குகிறது. வாக்கியங்கள் (23—25)லும் எழுவாய் காணப்படவில்லை. இவ் வாக்கியங்களிலும் பாலெண் இயைபு விதி செயல்பட்ட பிறகு நீக்கல் விதி செயல்படுகிறது. ஆகையால் பாலெண் இயைபு விதிகள் மற்றைய மாற்று விதிகள் செயல்பட்ட பின்புதான் செயல்படுகின்றது என்ற கருத்து ஏற்றுக் கொள்ள இயலாதது.

1.6. சிறப்பு மாற்றுவிதிகள் பாலெண் இயைபு விதிகளுக்குப் பின் செயல்படலாம். ஆனல் கட்டாய மாற்றுவிதிகள் (Obligatory Transformational Rules) பாலெண் இயைபு விதிகளுக்கு முன் செயல்படுகின்றன என்று கூறி ஒரு வகையில் ஆறுதல் அடைய முடியும். பாலெண் இயைபு விதிகள் கடைசியில் செயல்படுகின்ற விதிகளே என்பதை நிலைநாட்ட இச்சமாதானம் உதவும். ஆனல் இக் கருத்தும் தவருனது என்று காட்ட நமக்கு சில வாக்கியங்கள் தமிழில் கிடைக்கின்றன. வாக்கியங்கள் (26—28)ஐ எடுத்துக் கொள்வோம். இவைகளின் அமைப்பை விளக்கிக் காட்டுவதிலேயே பாலெண் இயைபு விதிகள் கட்டாய மாற்றுவிதிகள் செயல்படுவதற்கு முன்பு செயல்படுகின்றன என்பதை மெய்ப்பித்து விடலாம்.

(26) ஆசிரியர் வந்தாரா?
(27) நான் போக முடியாது.
(28) கார்த்தி தான் வருவேன் என்று சொன்னுள்.

வாக்கியம் (26)ன் அக அமைப்பில் Q என்ற உருபன் (Morpheme) இருக்கிறது. இதை நீக்கல்விதி மூலம் புற அமைப்பில் விலக்க வேண்டும். இவ்விதி கட்டாய மாற்று விதி. பாலெண் இயைபு விதி இதற்கு முன்பே செயல்படுகிறது. இதை

Q ஆசிரியர் வ—ந்த்—> (பாலெண் இயைபு விதி)


Q ஆசிரியர் வ—ந்த்—ஆர்—> (கூட்டல் விதி)

Q ஆசிரியர் வ—ந்த்—ஆர்—ஆ—> (நீக்கல் விதி)

(26) ஆசிரியர் வந்தாரா?


பாலெண் இயைபு விதி முதலிலேயே செயல்படுகிறது. இவ் விதிக்குப் பின்புதான் கட்டாய கூட்டல் விதியும் கட்டாய நீக்கல் விதியும் செயல்படுகின்றன. ஆகையால் பாலெண் இயைபு விதிகள் கட்டாய விதி களுக்குப் பின்புதான் செயல்படுகிறது என்பது பொருத்தமாக இல்லை.

வாக்கியம் (27)ன் அக அமைப்பை நோக்குவோம். இங்கும் பாலெண் இயைபு விதி சில கட்டாய விதிக்கு முன் செயல்படு வதைக் காணலாம். கீழைப் படம் (4) வாக் கியம் (27)ன் அக அமைப்பைக் காட்டுகிறது.



படம் 3

பெயராக்கவிதி S_3ன் மேல் செயல்படும் பொழுது **நான் போவது** என்ற பெயர்த் தொடர் கிடைக்கிறது. நீக்கல் விதி S_2ல் உள்ள Futயை நீக்கும். இடமாற்ற விதி S_2ல் உள்ள முடி என்ற வினையை S_1க்குக் கீழ் உள்ள VP யோடு இணைக்கிறது, படம் (4) இவ் விதிகள் செயல்பட்ட நிலையில் உள்ள அமைப்பைக் காட்டும்.



படம் 4

இந்த அமைப்பின் மீது பாலெண் இயைபு விதி செயல்படுகிறது.

நான் போவது முடி—ஆ[4]
—> (பாலெண் இயைபு விதி)

நான் போவது முடி—ஆ—து—

$\begin{bmatrix}-\text{Human}\\-\text{Plural}\end{bmatrix}$ $\begin{bmatrix}-\text{Human}\\-\text{Plural}\end{bmatrix}$

இவ் விதி செயல்பட்ட பிறகு நீக்கல்விதி —அது என்ற விகுதியை **போவது** என்பதில் குறைக்கிறது. இடமாற்று விதி **போ** என் பதைத் திரும்பவும் VP யின் கீழ்க் கொணர் கிறது. —அ என்ற எச்சவினை விகுதியைக் கூட்டல் விதி இணைக்கிறது. இதை


நான் போவது முடி—ஆ—து
—>(நீக்கல் விதி)

நான் போ முடி—ஆ—து
—>(இடமாற்று விதி)

நான் போ—முடி—ஆ—து
—>(கூட்டல் விதி)

நான் போக—முடி—ஆ—து


படம் (5) புற அமைப்பைக் காட்டுகிறது,



படம் 5

பாலெண் இயைபு விதி செயல்பட்ட பிறகு கட்டாய மாற்று விதிகள் செயல் படுகின்றன. ஆகையால் பாலெண் இயைபு கடைசியாக வாக்கியத்தில் செயல்படுகின்ற விதிகள் என்ற கூற்று பொருந்தாது.

வாக்கியம் (28)ன் அமைப்பை விளக்கு வதின் மூலம் இக் கூற்று தவறானது என்பதை மேலும் மெய்ப்பிக்கலாம். இதன் அக அமைப்பின் **தான்** என்ற இடத்தில் **நான்** என்பது இருக்கும்.



படம் 6

பாலெண் இயைபு விதி S_2ன் மேல் செயல்படுகிறது. இதனால் நான் வருவேன் என்பது கிடைக்கிறது. இதன் பின்பு நான் என்பதை தான் என மாற்றும் பிரதிப்பெயராக்க விதி [Pronominalization Rule] செயல்படுகிறது.[5] இதனால் பாலெண் இயைபு விதி கட்டாய மாற்று விதிகளுக்குப் பின்பு செயல்படுகின்றன என்பது பொருந்தாது என்பது தெளிவாகிறது. மாற்றிலக்கணத்தில் பாலெண் இயைபு விதிகளின் இடத்தை எதிர்கால ஆராய்ச்சிதான் நிர்ணயிக்க வேண்டும்.

1.7. இக் கட்டுரையை முடிப்பதற்கு முன்பு பாலெண் இயைபு விகுதியோடு தொடர்புடைய வேறு ஒரு பிரச்சனையையும் இங்கு குறிப்பிடுவது நல்லது என்று நினைக்கிறேன். எதிர்கால ஆராய்ச்சிதான் இப்பிரச்சனைக்குரிய தீர்வைக் காண வேண்டும். தமிழ்ப் பேச்சு வழக்கில்

(2) நான் வருவேனுங்க
(30) நான் உங்களை நாளை பார்க்கிறேனுங்க

இந்த வாக்கியங்களில் நான் என்பது எழுவாயாக இருக்கிறது. —ஏன் என்றால் பாலெண் இயைபு விகுதி மட்டும் காணப்படுவதுதான் தமிழில் இயல்பு. இந்த வாக்கியங்களில் முன்னிலை ஒருமையைக் காட்டக் கூடிய விகுதியும் காணப்படுகிறது. இந்த விகுதியின் தோற்றத்துக்கு விளக்கம் அளிக்க வேண்டுமானால் நீங்கள் என்பதும் வாக்கியத்தின் அக அமைப்பில் இருக்க வேண்டும். இவ்வாறு இருப்பின் வாக்கியங்கள் (29—30) மற்றொரு வாக்கியத்தினுள் புதைந்து கிடக்கிற துணை வாக்கியங்களா?

Dr K. Rangan
M. A., B O. L., Ph. D
Central Institute of Indian Languages
Manasa Gangotri
Mysore-570006

† இக் கட்டுரையைப் படித்து திருத்தங்கள் செய்த டாக்டர் இ. அண்ணாமலை அவர்களுக்கு என் நன்றி.
* இக்குறியிட்ட வாக்கியங்கள் இலக்கண வழுவானவை.

குறிப்பு

1 இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றில் நின்றிசைக்கும் பதினோரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே
தொல். சொல். 10.

வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே
தொல். சொல் 11.

2 மாற்றிலக்கணத்தார் அனைவரும் இதை ஒத்துக்கொள்வதில்லை. சில சொல்விதிகள் சொற்களை சில மாற்று விதிகள் செயல்பட்ட பிறகு செருகின்றன என்று மெக்காலே போன்றோர் வாதிடுகிறார்கள். Mccawley (1968).

3 அக அமைப்பில் ஏன் நீ, நீங்கள் போன்ற எழுவாய் இருக்க வேண்டும் என்ற விளக்கத்திற்கு அரங்கனின் 'தமிழில் ஏவல் வாக்கியம்' என்ற கட்டுரையைப் பார்க்கவும். Rangan (1972).

4 Neg+Fut ⟶ ஆ என்றாகும். எழுவாய் அஃறிணையாகவும் இருக்க வேண்டும். இது ஒலியனியல் பகுதியைச் (Phonological Component) சார்ந்ததால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறப் போவதில்லை.

5 This Observation is due to Dr E. Annamalai.

References

Mccawley, J. (1968) Lexical Insertion in a Transformational Grammar without Deepstructure' in *Papers From the Fourth Regional Meeting of Chicago Linguistic Society*. Chicago, pp. 71-80.

Rangan, K. (1972) 'Imperatives in Tamil' in *Proceedings of the First All India Conference of Dravidian Linguists* Trivandrum pp, 180-89.

தமிழ்

தொல்காப்பியர்
'சொல்லதிகாரம்: சேனாவரையர் உரை' திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், லிட். சென்னை. (1970 Reprint)

பாரதியாரின் தத்துவக் காட்சி

ப. அருணாசலம்

பாரதியார் பாடிய பாடல்களில் பெரும் பகுதி சமய தத்துவப் பாடல்களாக விருப்பி னும் அவரை ஒரு தேசீயகவி என்று கருதும் அளவுக்குச் சமயக் கவிஞர் (Relgious poet) அல்லது தத்துவக் கவிஞர் (Philosophic poet) என்று கருதுவதில்லை. பாரதியாரின் கவிதைகள் அனைத்தையும் ஒருங்கு கொண்டு ஆராயும் போது அவர் தேசீயம் தானும் சமய அடிப் படையில் எழுந்த ஒன்ருகவே—இந்து தேசீய மாகவே விளங்கக் காண்கிருேம். தம் நாட்டை இந்துஸ்தானம் என்று கூறுவதோடு, தம் நாட்டின் நாகரிகம், பண்பாடு வாழ்க்கை முறை அனைத்தும் இந்து மத அடிப்படையில் அமைந்தனவே என்பதையும் பல விடங்களில் விளக்குகிருர்.

'ஊனமொன்றில்லா ஞான மெய் பூமி'[1]
'பூரண ஞானம் பொலிந்த நன்னடு'[2]

என்று மெய்யுணர்வு ஒளிவீசி நிற்கும் நில மாகத் தம் நாட்டைக் குறிப்பிடுவதோடு அம் மெய்யுணர்வு நூல்களின் பெருமையினையும் தம் தேசீயப் பாடல்களில் பாடுவர்,

'அன்னையே அந்நாளில் அவனிக்கெல்லாம்
ஆணிமுத்துப் போன்ற மணி
மொழிகளாலே
பன்னிநீ வேதங்கள் உபநிடதங்கள்
பரவுபுகழ் புராணங்கள் இதிகாசங்கள்
இன்னும் பன்னூல்களிலே இசைத்த
ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம்
அதனை இந்நாள்
மின்னுகின்ற பேரொளிகாண் காலம்
கொன்ற
விருதுகாண்! கடவுளுக்கோர்
வெற்றிகாணே'[3]

என்பது பாரதமாதா நவரத்தின மாலை, மேலும் 'பன்னரும் உபநிடதநூல் எங்கள் நூலே பார்மிசை ஏதொரு நூல் இதுபோலே' 'நாவினில் வேதமுடையவன்'[5] எனறெல்லாம் தேசிய கீதங்களில பாடும்போது வைதிக தருமத்தின் தாயாகவே பாரத தேவியைப் போற்றுகிருர் என்பதும், பாரதம் பாரதியார் அளவில் இந்துஸ்தானமே என்பதும். நன்கு விளங்கும்,

'வேத நூல்பழிக்கும் வெளித்திசை
மிலேச்சர்
பாதமும் பொறுப்பாளோ பாரததேவி'[6]

என்ற சிவாஜி பேச்சில் பாரதியாரின் வேகத் தைக் காண்கிருேம். தமிழ்நாடும் அவரள வில் வேதம் நிறைந்த தமிழ் நாடே.[7]

பாரத அன்னையை வேற்றவராட்சியி லிருந்து விடுவிக்க எழுந்த அறப் போரிலும் காந்தியடிகளின் தலைமையைப் பாராட்டும் போது,

'தன்னுயிர்போலத் தனக்கழிவெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்
மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென்றுணர்தல்
இன்னமெய்ஞ்ஞானத் துணிவினை
ஆங்கோர்
இழிபடுபோர் கொலை தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியலதனில்
பிணைத்திடத் துணிந்தனை பெருமான்'[8]

எனப்பாடுவர். இங்கு மெய்ஞ்ஞானத் துணிவு வைதிக நெறி நின்றுபெற்ற ஞான வைராக்கியமே. 'இந்து சமய நெறிநின்று அதன்வழி அமைதி, மகிழ்ச்சி, ஒளி என்ப வற்றைக் காண்பதன்றி இவ்வுலகில் வேறெரு அவாவும் எனக்கில்லை'[9] என்று காந்தியடிகளே கூறுவது இங்குக் கருதத்தக்கது, மேலும் தேசியத் தலைவர்கள் வரிசையில், விவேகா னந்தரை யடுத்து இராமகிருஷ்ணர் மடத்தில் மதிப்புற்றிருந்த பூபேந்திரரைப் பாடும்போது,

'பாபேந்திரியஞ் செறுத்த எங்கள்
விவேகானந்தப் பரமன்ஞான
ரூபேந்திரன் தனக்குப்பின்வந்தோன்,
விண்ணவர்தம் உலகையாள்ப்ர
தாபேந்திரன் கோபமுறினுமதற்கஞ்சி
அறம் தவிர்கிலாதான்'[10]

என்று அவர் தம் ஞான பரம்பரையினைப் பாடுவர்.

எனவே பாரதியாரின் தேசியத்திலும், சமய உணர்வே, ஆத்மஞானமே சிறப்பாக

வுள்ளது என்பது புலப்படுகிறது. இந்தியா லோக குருவாக விளங்கப்போகிறது என்று அவர் பாடும்போதும் கட்டுரை எழுதும் போதும் இந்து சமய ஞானத்தையே அவர் எண்ணினர்.

'எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்
என்றுரைத்தான் கண்ண பெருமான்
எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை
இந்தியா உலகிற்களிக்கும்'[11]

என்பது பாரதியாரின் தேசிய கீதம்,

விவேகானந்தர் ஆத்மாவின் பயிற்சியை மாத்திரம் காட்டினர்; ரவீந்திரர் உலக வாழ்க்கையும் உண்மையான கவிதையும் ஆத்மஞானமும் ஒரே தர்மத்தில் நிற்பன என்பதை வெளிநாடுகளுக்குச் சொல்லும் பொருட்டாக பாரதமாதாவினல் அனுப்பப் பட்டிருக்கிறார்[12] என்பது அவர் கட்டுரையில் ஒரு பகுதி. ரவீந்திரர் குறிப்பிடும் ஆத்மஞானத்தை விளக்கும் போது பாரதியார் அஃது பழைய வேத உண்மை; எல்லாப் பொருள்களும் ஒரே வஸ்துவாகக் காண்பவன் ஒருவனுக்கு மருட்சியேது, துயரமேது[13] என்றும் குறிப்பிடுவர்.

இந்து சமயத்தின் உயர்ந்த ஞானமே அவர் உள்ளத்தைப் பெரிதும் பற்றி நின்றது. பிற சமயங்களிலே அவருக்கு வெறுப்பில்லை; ஓரளவு ஈடுபாடும் உண்டு. இயேசுவைப் பற்றியும் அல்லாவைப் பற்றியும் அவர் பாடியுள்ளார். இருப்பினும் எல்லா மதங்களிலும் அவர் வைதிகக் கோட்பாட்டையே காண்கிறார்.

'பூமியிலே கண்டம் ஐந்து, மதங்கள்கோடி!
புத்தமதம் சமணமதம் பார்ஸிமார்க்கம்
சாமியென யேசுபதம் போற்றும் மார்க்கம்
சநாதனமாம் இந்துமதம், இஸ்லாம் யூதம்
நாமமுயர் சீனத்துத் தாவு மார்க்கம்
நல்ல கன்பூசிமதம் முதலாப் பார்மேல்
யாமறிந்த மதங்கள் பல உளவாமன்றே?
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங்
கொன்றே
பூமியிலே வழங்கிவரும் மதத்துக்கெல்லாம்
பொருளினை நாம் இங்கெடுத்துப்
புகலக்கேளாய்
சாமிநீ சாமிநீ கடவுள்நீயே
தத்துவமஸி தத்துவமஸி நீயே அஃதாம்
பூமியிலே நீகடவுளில்லை என்று
புகல்வது நின்மனத்துள்ளே புகுந்தமாயை
சாமிநீ அம்மாயை தன்னைநீக்கிச்
சதாகாலம் சிவோஹம் என்று
சாதிப்பாயே'[14]

இங்கு வைதிகக் கோட்பாடு என்பதும் வேதாந்த ஞானமே; அத்துவிதஞானமே. தத்துவமஸி என்னும் வேத மகாவாக்கியத்தின் பொருளையே எல்லாச் சமயங்களும் கூறுகின்றன என்பர்.

இவ்வாறு பாரதியார் கூறும் விளக்கத்தைப் பிற சமயத்தவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்ற கேள்வி வேண்டுவதன்று. பிற சமயங்களின் கருத்தைப் பாரதியார் எவ்வாறு விளக்குகிறார் என்பதே நாம் கருதத்தக்கது. இந்து சமயங்களின் உட்பிரிவுகளிலும் அவர் ஒன்றைச் சார்ந்து நின்று பேசுவதில்லை. வழிபடு கடவுளரின் அடிப்படையில் பிணங்கி நிற்பனவாயினும் வைதிக ஞானத்தைக் கூறுவன என்ற அடிப்படையில் இணங்கி நிற்பதை அவரால் காணமுடிகிறது. ஆயின் பிணங்கும்போது புராணங்களையே நம்பி வேதங்களை ஒதுக்குவதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 'பிற்காலத்தில் வேதத்திற்கு நாம் மாத்திரையாகக் கொடுக்கப்பட்ட உயர்வைக்கூட இந்தக் கட்சிக்காரர் சிலர் மறுக்கலாயினர். திருஷ்டாந்தமாகப் பிற்காலத்துச் சைவர்களிலே சிலர் வேதங்களைக் காட்டிலும் சிவாகமங்களே மேலென்று சொல்லத் தலைப்பட்டார்கள். இங்ஙனம் ஏற்பட்ட புராணச் சண்டைகளுக்கு வேதமே காரணமாக இருந்ததென்று தவருகக் கருதி வைதிக ஞானிகளிலே சிலர் வேதத்தைக் கரும காண்டமென்றும் உபநிஷத்தை ஞான காண்டமென்றும் சொல்லலாயினர்.'[15] இங்குப் பாரதியாரின் கருத்து எந்த அளவுக்கு வலிவுடைய தென்பதைவிடவும், பாரதிக்கு வைதிக ஞானத்திலிருந்த பிடிப்பு எத்தகையது என்பது தெளிவாக விளங்கும்.

மேலும் இந்து சமயத்தின் ஒற்றுமைக்கும் சில கருத்துக்களைக் கூறுவர்.

1. வேதம், உபநிஷத்துக்கள், புராணங்கள் இவற்றை இக்காலத்தில் வழங்கும் தேச பாஷைகளில் தெளிவாக மொழிபெயர்க்கவேண்டும்.

2. புராணங்களில் தம்தம் தேவர்களை மேன்மைப்படுத்தும் அம்சங்களையும் மேற்படி பொது வேதக் கொள்கைளாகிய தவம், உபாஸனை, யோகம் முதலியவற்றை

விளக்கும் அம்ஸங்களையும், உலகநீதி, பூர்வ சரித்திரம் இவற்றை விளக்கும் அம்ஸங்களையும் மாத்திரம் பிரமாண மாகக் கொண்டு இதர தேவதூஷணை செய்யும் அம்ஸங்களைப் பிரமாணமில்லாதன என்று கழித்துவிட வேண்டும்.

3. வேதத்தின் உண்மைக் கருத்தை உணர்ந் தோரும் சமரச ஞானிகளுமான பண்டிதர் மூலமாக, நாடு முழுவதும் புஸ்தகம், பத்திரிகை, உபந்நியாசங்கள் முதலிய வற்றால் பிரம்மாண்டமான பிரசாரத் தொழில் நடத்த வேண்டும். இந்துக் களே பிளவுண்டு மடியாதீர்கள்! வேதத்தின் பொருளை உணர்ந்து மேம்பட்டு வாழ வழிதேடுங்கள்.[16]

இக்கருத்துக்களிலும் வேத ஞானமே அவர் உள்ளத்தில் ஆழ்ந்து நிற்பது தெளிவாக வுள்ளது. 'எல்லா தர்மங்களைக் காட்டிலும் வேதத்தை நிலைநிறுத்தும் தர்மம் சிறந்த தென்று நான் கருதுகிறேன்'[17] என்றும் எழுதுவர்.

இவ்வைதிக ஞானம் இவரிடம் எவ்வாறு வெளிப்படுகிறது என்ற வினா எழுகிறது. இதனைச் சிறிது ஆராய்வோம். முதலில் பிரம சூத்திரத்தைச் சங்கரருடைய விளக்கவுரை யோடு தம் நண்பர்கள் சூழப் பயின்றுவந்த கல்வி, இவருக்கு இவ்வுணர்வு கிடைத்த மைக்குத் துணைசெய்திருக்க வேண்டும். வேதாந்தக் கல்வி விசாரம் செய்வதுபோல் இவர் பாடிய பாடல்களுண்டு.

'ஆயிரங்கோடி அறிஞர்கள் பற்பல
ஆயிர யுகங்கள் ஆராய்ந் தறிகிலா
யான் உடை இயற்கை யானோ அறிவன்
மீனுணர்ந் திடுங்கொல் வியன் கடற்
பெருமை
அருள்வழிக் காண்கென் றருளினர்
பெரியோர்
மருள்வழி யல்லான் மற்றொருன்
றுணர்கிலேன்
அகிலமும் யான் என ஆன்றோரிசைப்பர்
மகிதலத் திருளின் மண்டிய மனத்தேன்
யானதை ஒரோவழிக் கண்டுளேன்;
எனினும்
மானது ஒளியது மங்குமோர் கணத்தே
யானெனும் பொருள்தான் என்னைகொல்?
அதனையிவ்
வூனெனக் கொள்வர் உயிரிலார் சிலரே.
பிரமமே யானெனப் பேசுவோர் பேசுக
பிரமமே யானெனப் பேசினர் பெரியோர்'[18]

யான் எனும் தலைப்பில் பாரதியார் பாடிய பாடலிது, இங்குப் பெரிதும் நூற்கல்வியே பாட்டுருவம் பெற்றதாகத் தோன்றுகிறது. மாயையைப் பழித்தல் என்றும் தலைப்பிலும், வேதாந்தத்தை விளக்கிப் பாடுவர்,

'உண்மையறிந்தவர் உன்னைக்
கணிப்பரோ மாயையே—மனத்
திண்மையுள்ளாரை நீசெய்வது
மொன்றுண்டோ மாயையே...
சித்தத்தெளிவெனும் தீயின்முன்
நிற்பாயோ மாயையே...
தேகம் பொய்யென்றுணர் தீரரை
என் செய்வாய் மாயையே
இருமையழிந்த பின் எங்கிருப்பாய்
அற்ப மாயையே—தெளிந்து
ஒருமை கண்டோர் முன்னம் ஓடாது
நிற்பையோ மாயையே'[19]

இவ்வாறு வேதாந்த விசாரம் செய்வது போன்று தோன்றினும் இப்பாடலில் உள்ள வேகம் பாரதியாருக்கு வேதாந்த ஞானம் வெறும் கல்வியால் கைவந்த ஒன்றன்று; உணர்ச்சி ஒன்றிய ஒன்றுஎன்பதை விளக்கும்.

'நீதரும் இன்பத்தை நேரென்று
கொள்வேனோ மாயையே—சிங்கம்
நாய்தரக்கொள்ளுமோ
நல்லரசாட்சியை மாயையே'[20]

என்று கவிதை வீறோடும் தம் உணர்ச்சியினை வெளிப்படுத்தக் காண்கிறோம்.

சித்தர் போன்ற சில துறவிகள் தொடர்பும் இவ் வேதாந்த ஞானத்தை உணர்ச்சியோடு ஒன்றி நின்று பாடுவதற்குக் காரணமாதல் வேண்டும். குள்ளச்சாமியார் போன்றவர்கள் தொடர்பு இவருக்கு அத்துவித ஞானத்தில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும், 'குள்ளச் சாமியார் காட்டிய குறிப்பில் வேதாந்த மரத்திலொரு வேரைக் கண்டேன்'[21] எனப் பாடுகிறார். மேலும் அவர் கூற்றாக,

நான் புதியன், நான் கடவுள்
நலிவிலாதேன்
என்றறிந்த உலகின் மிசை
வானோர் போல
இயன்றிடுவார் சித்தர்[22]

எனவும் பாடுவர். குள்ளச்சாமியார் போன்ற சித்தர்கள் தொடர்பால் அத்துவித ஞானத்தை வளர்த்துக் கொண்டதோடு, தாமும் ஒரு சித்தராக வாழ விரும்புவதை,

எனக்கு முன்னே சித்தர் பலர்
இருந்தாரப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன்
இந்நாட்டில்[23]

என்று பாடுவதாலுமறியலாம்.

பாரதியார் தாமே சித்தர் எனக் கூறிக் கொள்கிறார். இவர் உறவினர் சிலரும் அறிஞர்கள் சிலரும் தாங்கள் அறிந்த செய்திகளைக்கொண்டு இவரை ஒரு சீவன் முத்தராகக் கருதினர்.[24] பேராசிரியர் ஒருவர் 'வறுமையின் சந்நிதியில் இவர் கவித்துவம் வளர்ந்து முதிர்ந்தது. இவரது ஆத்மா தனது பூரண ஆகிருதியை அடைந்தது. இவரது ஞானம் சுருங்கி வற்றிவிடாது விரிந்து பேராறாகப் பெருகி அகண்டத்தின் எல்லையைத் தொட்டு ஒழுகியது' என்பன போன்ற பொதுத் தொடர்களால் இவரது ஞான பக்குவத்தை விளக்குவர்.[25] ஆயின் இவர் பாடல்களை ஒருங்குகொண்டு ஆராயும்போது சீவன்முத்தர் என்ற நிலையில் இவரைக் கருத முடியவில்லை. உள்ளொடுங்கி நின்று பரமானந்தத்தில் அல்லது வேதாந்த ஞானத்தில் திளைக்கும் உணர்வுக்கு வேறாக உள்ளம் உலகப் பொருள்களில் எல்லாம் பரந்து சென்று அவற்றில எல்லாம் வேதாந்த உண்மையின் ஒளிக் கதிர்களைக் கண்டு கிளர்ச்சிப் பெற்றுப் பாடுவதாகத் தோன்றுகிறது. 'உலக வாழ்க்கையும் உண்மையான கவிதையும் ஆத்மஞானமும் ஒரே தர்மத்தில் நிற்பன என்பதை வெளிநாடுகளுக்குணர்த்தினார் ரவீந்திரர்' எனப் பாரதியார் தாகூரைப் பற்றிக் கூறினாலும் இக்கருத்துப் பாரதியார் பாடல்களுக்கும் பொருந்துமொன்றே. உலக வாழ்க்கையின் எல்லாக் கூறுகளும் ஆத்ம ஞானத்தோடு ஒன்றி நிற்பதையே இவர் கவிதை வெளிப்படுத்துகிறது.

இதனால் இவர் பாடல் ஒவ்வொன்றும் உலகியலையும் இறை இயலையும் கலந்து பேசுகிறது என்பது பொருளன்று. பாரதியாரின் பாடல்கள் சில உலகியலைப் பாடுகின்றன. நாட்டு விடுதலை, பெண்கள் விடுதலை பற்றிய பாடல்களில பலவற்றை இங்குக் குறிப்பிடலாம். இதைப் போன்று தெய்வ இயலை அல்லது ஆதம ஞானத்தைத் தனியே பாடும் பாடல்களும் உண்டு. எடுத்துக்காட்டாக முருகன், கண்ணன் பற்றிய பாடல்களில் பலவற்றைக் குறிப்பிடலாம். உலக வாழ்க்கையோடு இறை இயலை அல்லது ஆத்ம ஞானத்தை இணைத்துப் பாடும் பாடல்களும் பலவாகவுள்ளன.

ஆக்கத்திலே தொழில் ஊக்கத்திலே புய
வீக்கத்திலே உயர் நோக்கத்திலே
காக்கத்திறல் கொண்ட மல்லர் தம் சேனைக்
கடலினிலே உயர் நாடு[26]

இப் பாடல் உலகியற் சிந்தனையை வெளிப் படுப்பது.

யாகத்திலே தவவேகத்திலே—தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்திகொண்டார் தம்
அருளினிலே உயர் நாடு[27]

இப் பாடல் தெய்வ—இயல் சிந்தனையை வெளிப்படுப்பது. ஒரு பாட்டிலேயே,

வேதம் நிறைந்த தமிழ்நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு - நல்ல
காதல் புரியும் அரம்பையர்போல்—இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு[28]

என்று வேத உணர்வையும் காதலுணர்வையும் இணைத்து வெளிப்படுத்துகிறார்.

எனக்கு வேண்டும் வரங்களை இசைப்பேன்
கேளாய் கணபதி
மனதிற் சலனமில்லாமல் மதியின் இருளே
தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின் மவுனநிலை வந்திட
நீ செயல்வேண்டும்
கனக்குஞ்செல்வம் நூறுவயது இவையும் தர
நீகடவாயே[29]

இப் பாடல்களும் உலக வாழ்க்கையும் ஆத்ம ஞானமும் இணைந்து செல்வதையே உணர்த்துகின்றன.

எனவே உமார்கயாம் பாடல்கள் போல் உலக இன்பத்தையோ, மெய்யுணர்வுக் கவிஞர்கள் போல் வீட்டு இன்பத்தையோ பாடாமல் உலக வாழ்வும் தெய்வ வாழ்வும் ஒட்டி உறவுகொண்டிருப்பதையே பாரதியார் தம் பாடல்களில் படைத்துள்ளார் எனலாம். 'காணி நிலம்வேண்டும்' எனப்பாடும் பாடலைப் பார்ப்போம்.

பாட்டுக்கலந்திடவே அங்கேயொரு
பத்தினிப் பெண் வேணும்—எங்கள்

கூட்டுக் களியினிலே கவிதைகள்
கொண்டு தரவேணும் — அந்தக்
காட்டுவெளியினிலே அம்மா நின்றன்
காவலுறவேணும் — என்றன்
பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப்
பாலித்திடவேண்டும்[30]

இப்பாடற் பகுதியை உமார்கயாம் பாடலோடு சேர்த்துப் படித்துப் பார்த்தால் இவ்வுண்மை விளங்கும்.

வெய்யிற் கேற்ற நிழலுண்டு வீசும் தென்றற்
காற்றுண்டு
கையிற்கம்பன் கவியுண்டு கலசநிறைய
மதுவுண்டு
தெய்வகீதம் பலவுண்டு தெரிந்துபாட நீயுண்டு
வையம்தரும் இவ்வாழ்வன்றி வாழும்
சொர்க்கம் வேறுளதோ[31]

இப் பாடல் ஆத்ம ஞானத்தை விடுத்து உலக வாழ்க்கையை எண்ணுவது.

உலக வாழ்க்கையும் ஆத்ம ஞானமும் விரவிக் கலந்து இவர் பாடல்களில் வெளி வருகின்றன. இக் கருத்தைப் பாரதியே போகமும் யோகமும் கலந்து நிற்றலாகக் கூறுவர். 'முற்றிய ஞானத்திலே எவ்வாறு அபேத நிலை ஏற்படுகிறதோ அதுபோல பரிபூர்ணமான போகத்திலேயும் அபேதநிலை தோன்றுகிறது...போகநிலை நன்றாக உணர்ந்த வர்களுக்கு அத்வைதநிலை இயற்கையிலேயே உண்டாகும். போகமறியாதவர்கள் பேசும் அத்வைதம் பொய். உங்கள் மண்ணுலகத் திலே அந்த ஞான நடிப்பு மிகுதியாகவுண்டு... போக மூர்த்தியாகிய விஷ்ணுவும் யோக நாதனாகிய சிவனும் ஒன்றே என்பதை அறியாயா'[32] என்று தம் ஞானரதத்தில் பாரதி கூறுவர்.

வேதாந்த ஞானம் கைவந்த ஒரு சீவன் முக்தனிடமிருந்து இக் கருத்தை எதிர்பார்க்க முடியுமா? இக் கருத்தினை ஒரு கவிஞனே கூற முடியும். தனித்தனியாகக் காணப்படும் உலகியலும் இறை இயலும் கவிக் கண்களுக்கு எவ்வாறு நெருக்கமடைந்து வருகின்றன எனப் பார்ப்போம்.

உலக வாழ்க்கையின் எல்லாக் கூறு களும் ஆத்ம ஞானத்தோடு ஒன்றி நிற்கும் காட்சி, பெரிதும் கவிக் காட்சியே. கவிதா தேவியின் அருளை முற்றாகப் பெற்று நின்ற பாரதியார், உலகப் பொருள்களில் தன்னை மறந்த லயம் தன்னில் இருந்தபோது உலகி யலும் இறை இயலும் உலக வாழ்க்கையும் ஆத்ம ஞானமும் பிரிப்பின்றி இருப்பதைக் கண்டு அனுபவித்தார் பாரதியே தம் அனுபவத்தைப் பாடக் கேட்போம்.

'நீலநெருக்கிடையே நெஞ்சு செலுத்தி
நேரம் கழிவதிலும் நினைப்பின்றியே
சாலப் பலபல நற் பகற்கனவில்

தன்னை மறந்த லயம் தன்னிலிருந்தேன்'[33]

இயற்கையோடு ஒட்டி நின்ற கவிஞன் அனுபவம், இயற்கையினூடே இரண்டறக் கலந்து நிற்கின்ற பரம் பொருள் உணர்வை வெளிப்படுத்தும் பாங்கினைக் காண்போம்.

'மழைபொழிந்திடும் வண்ணத்தைக் கண்டு
நான்
வானிருண்டு கரும்புயல் கூடியே
இழையுமின்னல் சரேலென்று பாயவும்
ஈரவாடை இரைந்து ஒளி செய்யவும்
உழையெலாம் இடையின்றி இவ்வானநீர்
ஊற்றுஞ்செய்தி உரைத்திட வேண்டுங்கால்
மழையும் காற்றும் பராசக்தி செய்கைகாண்
வாழ்கதாயென்று பாடும் என் வாணியே'[34]

இங்கு உலகியற்கையும் தெய்வமும் கலந்து நிற்கின்ற காட்சியைப் பாடுவது போன்று இயற்கையைப் பற்றிய பாடல்களில் தெய் வீகத்தைக் கண்டு பாடுவது பாரதியிடம் பார்க்கக் காணும் ஒன்று. இச் சிந்தனையின் முதிர்ச்சிதான் கண்ணன் தரிசனத்தை இயற்கையில் கண்டு பாடுதல்.

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா நின்றன்
கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா நின்றன்
பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா
கேட்கும் ஒலியிலெல்லாம் நந்தலாலா நின்றன்
கீதமிசைக்குதடா நந்தலாலா
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா நின்னைத்
தீண்டுமின்பம் தோன்றுதடா நந்தலாலா'[35]

இயற்கையில் தெய்வ தரிசனத்தைக் கண்டு பாடினாலும் இப் பாடல் நம்மாழ்வார் பாடிய ஞானப் பாடலின் எதிரொலியாக அமைந்து[36] இக் கவிதைக்கு ஒரு தனிச் சிறப்பைத் தந்து நிற்பதாகக் கொள்ள வேண்டும். இறைவன் இயற்கையோடு பிரிப்பினறி நிற்கும் அத்து விதத்தை மட்டுமன்று, நாம் இயற்கையோடு

அத்துவிதமாக நிற்றலையும் கவிக்கண்கள் அவருக்குக் காட்டுகிறது.

'காக்கை, குருவி எங்கள் சாதி, நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி
வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்'[31]

கவிக் கண்களால் பெற்ற அத்துவிதக் காட்சியே இவர் பாடல்களால் வெளிப்படுத்த படுகிறது.

இயற்கையினூடே மட்டுமன்று, சமுதாய நலன்களினூடேயும் பராசக்தி பிரிப்பின்றி நிற்பதைத் தம் கவிக் கண்களால் கண்டு பாரதியார் பாடுவர்.

'நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானிலத்தவர் மேனிலை எய்தவும்
பாட்டிலே தனி இன்பத்தை நாட்டவும்
பண்ணிலேகளி கூட்டவும் வேண்டிநான்
மூட்டும் அன்புக் கனலொடு வாணியை
முன்னுகின்ற பொழுதெலாம் குரல்
காட்டி அன்னை பராசக்தி ஏழையேன்
கவிதையாவும் தனக்கெனக்
கேட்கிருள்'[33]

நாடு வாழ, உலகம் வாழ, கவிதையில் கற்பனை இன்பத்தோடு இசை இனிமையையும் குழைத்தூட்டப் பக்தியோடுகலைமகளை யடுத்தேன். பராசக்தியோ அக் கவிதைகளை எனக்குத் தந்துவிடு என்கிருள். நாட்டு நலனிலும் அல்லது உலக வாழ்க்கையிலும் பராசக்தியின் ஒளி அல்லது ஆத்மஞானம் பிரிப்பின்றி இருப்பதையே இப் பாட்டு நமக்கு உணர்த்துகிறது. இவ்வுண்மையைக் கவிக் கண்ணுல் கண்டு பாடினும் இக் காட்சி அவருக்கு ஞானப்பேற்றுக்குத் துணை செய்திருக்க வேண்டும்.

அவர் பெற்ற ஞானம், வாழ்க்கையை நடுநிலையோடு நோக்க உதவுகிறது. இந் நடுநிலை நோக்கு அல்லது சமதரிசனமே, ஆத்ம ஞானத்தின் பிறிதொரு தோற்றம். இச் சம தரிசனத்தில் ஞானி ஒன்றையே காண்கிருன். அவனுக்குக் கவலையில்லை. அந்த ஒன்றில் ஆனந்த அநுபவமே உள்ளது. பாரதி வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்றினைத் தம் கட்டுரையில் எழுதியதோடு,அழகான கவிதையாகவும் பாடியுள்ளார். அவர் விளக்குவதைக் கேட்போம். இளவெயில் அடிக்கிறது...எதிர் வீட்டில் குடி இல்லை; அதற்குப் பக்கத்து வீட்டிலிருந்து சங்கீத ஓசை வருகிறது. வீதியிலிருந்து குழந்தைகளின் சப்தமும் கேட்கிறது, வண்டிச் சப்தம், பக்கத்து வீட்டில் விறகு பிளக்கிற சப்தம், நான்கு புறத்திலும் காக்கைகளின் குரல், இடையிடையே குயில், கிளி, புறாக்களின் ஓசை. வாசலில் காவடி கொண்டுபோகும் மணி ஓசை, தொலைவிலிருந்து வரும் கோயிற் சங்கின் நாதம், தெருவிலே சேவலின் கொக்கரிப்பு, இடையிடையே தெருவில் போகும் ஸ்திரீகளின் பேச்சொலி, அண்டை வீடுகளிற் குழந்தை அழும் சப்தம், நாராயணு கோபாலா என்று ஒரு பிச்சைக்காரனின் சப்தம், நாய் குலைக்கும் சப்தம், கதவுகள் அடைத்துத் திறக்கும் ஒலி, வீதியில் ஒருவன் ஹும் என்று தொண்டையை லேசாக்கி இருமித் திருத்திக் கொள்ளும் சப்தம், தொலைவிலேயே காய்கறி விற்பவன் சப்தம், அரிசி அரிசி என்று விற்றுக்கொண்டு போகிற ஒலி, இப்படிப் பலவிதமான ஒலிகள் ஒன்றன்பின் மற்ருென்ருக வந்து செவியில் படுகின்றன. இந்த ஒலிகளை எல்லாம் பாட்டாக்கி, இயற்கைத் தெய்வத்தின் மகா மவுனத்தைச் சுருதியாக்கி என் மனம் அனுபவித்துக் கொண்டிருந்தது என்பது அவர் கட்டுரைப் பகுதி.[39] இவ்வனுபவத்தின் விளைவாகப் பாட்டொன்று உருவாகிறது.

மண்ணுலகத்து நல்லோசைகள் காற்றெனும்
வானவன் கொண்டு வந்தான்
பண்ணிலிசைத்தவ் வொலிகளனைத்தையும்
பாடி மகிழ்ந்திடுவோம்
நண்ணிவரு மணியோசையும் பின்னங்கு
நாய்கள் குலைப்பதுவும்
எண்ணு முன்னே அன்னக்காவடிப்பிச்சை
என்(று)
ஏங்கிடுவான் குரலும்
வீதிக் கதவை அடைப்பதும் கீழ்த்திசை
விம்மிடும் சங்கொலியும்
வாதுகள் பேசிடும் மாந்தர் குரலும்
மதலையழுங் குரலும்
ஏதெது கொண்டு வருகுது காற்றிவை
எண்ணிலகப்படுமோ?
சீதக்கதிர்மதி மேற்சென்று பாய்ந்தங்கு
தேனுண்ணுவாய் மனமே[40]

தம் மனச்சிறு புள்ளினை ஓட்டி மேலெழுந்த பாரதியார், காற்றெனும் வானவன் கொண்டு வந்த பல்வேறு ஒலிகளையெல்லாம் செவி மடுத்துக் குளிர்ந்த கதிர்களை உடைய திங்களில் சென்று பாய்ந்து தண்ணிலவுத் தேனைப் பருக விரைகிருர்.

கட்டுரையில் அவர் கேட்டதாகக் கூறும் ஒலிகளை எல்லாம் பாட்டாக்கவில்லை. சில ஒலிகளையே தேர்ந்தெடுத்துள்ளார். 'தொலை விலிருந்து மணி ஓசை கேட்கிறது, ஒலி நெருங்கி வரவே ஆளரவம் என்றெண்ணி நாய்கள் குரைக்கின்றன நாய்கள் குரைப் பதைப்பற்றி எண்ணு முன்னே அன்னக் காவடிப் பிச்சை என்ற ஏக்கம் நிறைந்த குரல் கேட்கிறது. அதோடு சேர்ந்து தெருக் கதவை அடைக்கும் ஒலி கேட்கிறது. பெரிய வீட்டுச் செல்வன் பிச்சைக்காரனுக்குச் செய்த மரியாதை அது. அது கட்டாயமாக மனிதன் எழுப்பிய ஒலியே. அங்கிலையில் கிழக்குத் திசையில் சங்கொலி விம்முகிறது. கோவிற் சங்கு இறைவனுக்குத் திருவமுது படைப் பதை உலகிற்கு அறிவிக்கிறதா அல்லது பேராசிரியர் ஒருவர் விளக்குவது போன்று யாரோ ஒருவன் காந்த விளக்கு, கொட்டு மேளம், சங்கநாதம் முதலிய மயானமரியாதை களோடு கடைசிப் பிரயாணத்தைத் தொடங்கி விட்ட சங்கொலியா? இத்தனை ஒலிகளுக்கும் பின்னால் கேட்பதோ மனிதர் வாதிடும் குரல். இப்படியே சென்று கொண்டிருக்கும் உலகில் அடுத்த பரம்பரையும் ஆயத்தமாகி விட்டதா? மதலை அழும் குரலும் கேட்கிறதே' என்கிறார்.

இதனை விளக்கும்போது இந்த ஒலிகளை எல்லாம் பாட்டாக்கி, இயற்கைத் தெய்வத் தின் மகாமவுனத்தைச் சுருதியாக்கி என் மனம் அனுபவித்துக் கொண்டிருந்தது என்றாரே, அந்தச் சுருதியிலேயே இப்பாட்டுச் சிறப்படைகிறது. அந்த மகாமவுனம்தான் யாது? வேடிக்கை மனிதரைப் போல வாழ மாட்டேன் எனப் பாடியவர் முதுமைக் கூட்டம், வாதிடும் கூட்டம், வருங்காலச் சந்ததி என்ற வேடிக்கை உலகத்தைக் காட்ட விரும்புகிறாரா? இங்கு வேடிக்கைக்கு இட மில்லை. இவ்வொலி உலகனைத்திலும், காற்றால் கொணரப்பட்ட வாழ்க்கையனைத் திலும், ஒன்றையே கண்டு விட்டமையின் எழுந்த ஆத்ம ஞானமே, இப் பாட்டில் அமைதியாக வெளிவருகிறது,

உள்ளதெல்லாம் ஒருயிர் என்று தேர்ந்தபின்
உள்ளம் குலைவதுண்டோ — மனமே
வெள்ளமெனப்பொழி தண்ணருள்சூழ்ந்தபின்
வேதனை உண்டோடா

என்று பாடியவர் பாரதி. இந்தச் சமதரிசனம் தந்த அமைதி இன்பத்தையே சிதக்கதிர் மதிமேற் சென்று பாய்ந்தங்கு தேனுண்ணு வாய் மனமே எனப் பாடுவர். எவ்வாறு இந்தச் செய்தியைக் காற்றெனும் வானவன் கொண்டு தந்தான் எனக் கூறுகிறாரோ அதைப் போல் காற்றின் செய்தி ஒன்றைக் கட்டுரையிலும் விளக்குவர், இந்த ஜகத்தின் பேத ரூபங்களில் ஒன்று காண்பார் எவரோ? அவரே உண்மை காண்பார். பிறரல்லர்; பிறரல்லர். இதுதான் ஜீவ ஒலி. வாயு பகவானுடைய ஸ்ரீ முகவாக்யம். எல்லா வற்றிலும் ஒருயிரே அசைகிறது. அதை யறிந்தால் பயமில்லை. பயம் தீர்ந்தால் சாவில்லை. அமிர்தம் ஸதா என்று எழுதுவர்.

P. Arunachalam
Indian Studies
University, of Malaya
Kuala Lumpur
Malaysia

அடிக் குறிப்பு

1 தேசிய கீதங்கள், 'எங்கள் நாடு'.
2 தேசிய இயக்கப் பாடல்கள், 'சத்திரபதி சிவாஜி'.
3 தேசிய கீதங்கள், 'பாரத மாதா நவரத்தின மாலை'.
4 தேசிய கீதங்கள், 'எங்கள் நாடு'.
5 தேசிய கீதங்கள், 'எங்கள் தாய்'.
6 தேசிய இயக்கப் பாடல்கள், 'சத்ரபதி சிவாஜி'
7 தமிழ் நாடு, 'செந்தமிழ் நாடு'.
8 தேசியத் தலைவர்கள், மகாத்மா காந்தி பஞ்சகம்'
9 இந்து மதம், T. M. P. மகாதேவன்.
10 தேசியத் தலைவர்கள், 'பூபேந்திரர் விஜயம்'.
11 தேசிய கீதங்கள், 'பாரத சமுதாயம்'.
12 கட்டுரைகள், 'தத்துவம்'. பக். 59,
13 பாரதி தமிழ், பக் 516.
14 பாரதி அறுபத்தாறு.
15 கட்டுரைகள். 'தத்துவம்', பக். 98.
16 ,, ,, பக். 99.
17 ,, ,, 'சமூகம்' பக். 78.
18 புதிதாகச் சேர்க்கப் பெற்ற பாடல்கள், 'பான்'
19 ஞானப் பாடல்கள், 'மாயையைப் பழித்தல்'.
20 ,, ,, ,, ,,
21 சுயசரிதை, பக். 27.
22 ,, பக். 34.
23 பாரதி அறுபத்தாறு.
24 Bharati Tamil Sangam Silver Jubilee Vol.p. 57 (1966)
25 தமிழ்ச் சுடர்மணிகள், பக். 337.
26 தேசிய கீதங்கள், 'பாரத நாடு'.
27 ,, ,, ,, ,,
28 தமிழ் நாடு, 'செந்தமிழ் நாடு'.
29 தோத்திரப் பாடல்கள், 'விநாயகர் நான் மணி மாலை'.
30 தோத்திரப் பாடல்கள், காணி நிலம் வேண்டும்;
31 மலரும் மாலையும் 'உமார் கயாம் பாடல்கள்'.
32 கவிதைகள், ஞானரதம், பக். 21—22.
33 கண்ணன் பாட்டு, 'கண்ணம்மா என் காதலி .
34 தோத்திரப் பாடல்கள், 'பராசக்தி'.
35 ,, ,, 'நந்தலாலா'.
36 திருவாய் மொழி, 4. 4.
37 ஞானப் பாடல்கள்; 'ஜயபேரிகை'.
38 தோத்திரப் பாடல்கள், பராசக்தி'.
39 கட்டுரைகள், தத்துவம், 14. 5.
40 தனிப் பாடல்கள், 'நிலாவும் வான்மீனும் காற்றும்.

விடுதலைப் போரில் வீழ்ந்த மலர் - வாஞ்சி

கே. சி. எஸ். அருணாசலம்

சாளரத்தின் அருகினிலே தனியாக நிற்கின்றேன்
'பாளை கமுகு பரிசுடைய பந்தர் கீழ்'
வாழைக் குலைகள் வனப்புநிறை தோரணங்கள்
மாலை மரியாதை மகராசர் திருக்கூட்டம்!
காலைப் பொழுதுமுதல் கண்கொள்ளாக் காட்சிபல
சாளரத் தருகினிலே தனியாக நிற்கின்றேன்

அந்நிய அரசொழிய அடிமைத் தளைநொறுங்க
முன்ஒலித்த எக்காலம் விடியலின் முன்குறிகள்!
வாழ்ந்தகதை இங்கு வரலாற்றில் நின்றகதை
பொன்னான இந்தப் பொழுதில் நினைவுவரும்

விடுதலை என்னும் வேள்வி வளர்த்ததிலே
விறகாகித் தமிழகத்து வீரர்கள் வெந்திடும்நாள்!
ஆரவர்கள் அங்கே அமர்ந்துள்ள கூட்டத்தார்?
ஆரென்று உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா?
சரிகைத் தலைப்பாகை உத்தரியம் தங்கப்பூண்
தரித்தவர்கள் பெரிய தடபுடலாய் அமர்ந்துள்ளார்!
பூட்சுக்கு 'பாலிசு' போட்டுக் கொடுக்கின்றார்!

பத்துவிரல் மோதிரம்
எத்தனை பிரகாசமது
பார்ப்பவர் கண்கள் கூசும்!
பத்து விரலும்நவ ரத்தினம் ஒளிவீச
'பாலீசு' போடுகின்றார்

தேம்சு நதிக்கரைவாழ்
சீமான்கள் காலணிந்த
பூட்சுக்குப் 'பாலீசு' போட்டுக்கொடுக்கின்றார்

இந்த நேரந்தனில் இதே பொழுதினில்
இருந்தவன் ஒருவன்
இதே மண்ணினில் உறங்குகிறான்

தென்பொதிகைச் சந்தனமும்
செந்தமிழும் மணம்வீசும்
இந்த மண்ணிலே உறங்குகிறுன்
வாஞ்சிநாதன் என்னும் வாலிபனே திருவுடையோய்!
பாரதத்தாய் மணிவயிறு வாய்ந்த திறல்வீர!
மார்பில் விருதில்லை மானியங்கள் ஏதுமில்லை
போர்முகத்து நடுகல்லில் பொற்கல்லாய் வாழ்கின்ருய்
இன்னும் சுடுகிறது
நீ உறங்கும் இப்பூமி
பாரதத்தை வாழ்விக்கச் சீறியெழுந்திட்ட
புயலில் நீஒருவன்! பூகம்ப வழித்தோன்றல்!!
வெள்ளையர்தம் ஆட்சியதன் வேரறுக்கச் சினந்தெழுந்த
தொழிலாளர் இயக்கத்தை சுதந்திரத்தின் சுடர்க்கொழுந்தை
ரத்தப் பெருக்கினிலே நசுக்க வெறிகொண்டு
பித்தம் தலைக்கேறிப் பேயாய்க் குதித்திட்ட
ஆஷ்துரையை அன்றுமணியாச்சியிலே சுட்டொழித்து
அந்நியன்கை யாற்சாதல் ஆகாதென நினைத்து
தன்னையும் சுட்டுச் சரித்திரத்தில் வீழ்ந்திட்டாய்!
நாங்கள்—
புதுவாழ்வு தனையடையப் போனவழி கணக்கில்லை
போனவழி எத்தனையோ போய்ச்சேர்ந்த இடம் ஒன்றே!
வாகார் திறல்வீர! வாஞ்சிநாதா! நீ
ஏகாதி பத்தியத்தின் இதயம் தனைநோக்கி
வைத்த குறியதனை நான்வாங்கிக் கொள்ளுகிறேன்
உன்னுடைய
கனவு நனவாகி, காற்றும் திசைமாறி
புதுமை அரும்பெடுத்துப் பொழுது புலர்ந்தாலும்
இங்கிருந்து போய்விட்ட ஏகாதி பத்தியத்தின்
பொங்குசினம் சூழ்ச்சி போகாதிருக்கிறது!
லாவோசில் வியத்நாமில் கம்போடி யாவில்அது
சாவோலை நீட்டச் சதிபுரிய நான்கண்டேன்!
டோன்சின் வளைகுடாவின் துள்ளும்அலை மேல்விரைந்த
"கான்ஸ்டலேஷன் என்னும்" கப்பலிலே அதைக் கண்டேன்
பொங்காழி போல் குமுறி விடுதலைப் போர்தொடுத்த
பங்காள தேசத்தை பாரதத்தை அச்சுறுத்த
வங்கக் கடல்மீது வந்த திரிந்திட்ட
என்டர்பிரைஸ் மேலுனது
இலக்கைத் திருப்புகிறேன்!

மருகும் மருக்கொழுந்தும் மணமணக்கும்—அந்த
மணஞ்சுமந்த பனிக்காற்று சிலுசிலுக்கும்
வெட்கங்கொண்ட பெண்போலே வேலியிலே—மடல்
விரிந்துமேனி சிவந்த தாழை ஒளிந்திருக்கும்
காவிரிக் கரையோரம்
காலை இளநேரம்
தெம்மாங்குப் பாட்டுப்பாடி நடப்பேன்
உதயத்தின் பொன்விதை
தூவிய வாஞ்சி
உரமாய் மண்ணில் கலந்துவிட்டான்
ஒளியெனும் கதிர்களை
அறுவடை செய்தவன்—அவன்
பெயரினைக் கூட மறந்துவிட்டான்—என்று
தெம்மாங்குப் பாட்டுப்பாடி நடப்பேன்.

கே. சி. எஸ். அருணாசலம்
சோவியத் நாடு,
44, தியாகராயர் ரோடு, சென்னை-600 017

[இது அகில இந்திய வானொலிநிலையம், சென்னையில், இந்திய சுதந்திர வெள்ளி விழாவை முன்னிட்டு ஒலிபரப்பானது.]

தமிழைப்பற்றி...

இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் கடந்த கால வளர்ச்சியிலே நடந்த விழாக்கள் எண்ணிலடங்கா. தைப் பொங்கல், தமிழ் வருடப் பிறப்பு, வள்ளுவர் விழா, பாரதி விழா, தீபாவளி, கிருஸ்மஸ் முதலிய விழாக்கள் குறிப்பிடத் தக்கன. இவ்விழாக்களிலே இலண்டன் தமிழ்ச் சங்க உறுப்பினர்களும் அவர்தம் விருந்தினர்களும் பெரும் அளவில் கலந்து கொண்டு சிறப்பித்து வந்துள்ளனர். விழாக்கள் பொதுவாக பேச்சுக்கள், கருத்தரங்குகள், இசைக் கருவிகள் மீட்டல், பாடல்கள், நடனங்கள், நாடகங்கள் முதலிய பல அம்சங்களும் நிரம்பி முத்தமிழ் விழாக்களாக பரிணமிக்கும்.

❖ ❖ ❖

இலண்டன் தமிழ்ச் சங்கத்திற்கென ஒரு நூல் நிலையம் உள்ளது. அது அவ்வப்போது பணியாற்றும் பொருளாளர்களிடம் மாறிவரும். பல தமிழ் நூல்கள் அங்கத்தினர்கள் படிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

விடுமுறை நாட்களில் பல ஊர்களுக்கு இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் மகிழ்வுப் பயணங்கள் சென்று வருவது மரபு. பிரைட்டன், அருண்டேல், பாக்னர், கேன்டர்பரி, மார்கேட் கவென்ட்ரி, ஆக்ஸ்போர்டு ஹெமல் ஹேம்ஸ்டட், பிரிஸ்ட்டல் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றுள் மிகவும் குறிப்பிடத் தகுந்தது: தமிழுக்காக வாழ்ந்து மறைந்த மேதை, ஆங்கில நாட்டுத் தமிழ் அறிஞர் டாக்டர் போப் அவர்களின் கல்லறைக்கு இலண்டன் தமிழ்ச் சங்க அங்கத்தினர்கள் சென்று அஞ்சலி செலுத்தி வந்தமையாகும்.

'அலி'

1. வேரில்லா மரம்

ஏழுமாடிக் கட்டி
டம்
விழுந்தது.
எடுத்து முடிக்குமுன்
சீட்டுவீடு
போல பொல
உதிர்ந்தது.

மேலே போகப் போக
கீழே ஆழம் தேவை.
தெரிந்தது.
மண்ணில் வேரின்றி
ஆகாயத்தில் பழுக்காது
புரிந்தது.
தாமதமாக.

2. மறுமுனையில்

சாலையின் இருபக்கமும்
வரிசையாகக் கார்கள்.
ஓரிடம் காலி.
மற்றவரை முந்திக்கொண்டு
இடத்தைப் பிடித்து
இம்ப்பாலாவை நிறுத்திவிட்டு
வீட்டின்முன் வந்தேன்.
கதவு திறந்தது தானாக.
சிவப்புக் கார்ப்பெட்டில்
கால் நோகாமல் நடந்து
எலிவேட்டரின் பித்தானை அமுக்
கினேன்.
கூப்பிட்ட குரலுக்கு
ஓடிவந்து ஏற்றிச் சென்றது.
பாலியெஸ்டர் உடைகளைந்து
குளிர்வித்த கோலாவுடன்
மெத்தை விரித்திருந்த
கட்டிலில் சாய்ந்து
பித்தானை அமுக்கினேன்.
மூலையில்இருந்த டிவியில்
கலர்ப்படம். காதல்.
மயங்கிய சமயம்
டெலிபோன்மணி அடித்தது.
கைநீட்டி எடுத்துக் காதில்
வைத்தேன்.
'I love you, man, and your...
I want to.........'
தலை சுற்றியது.
சுற்றி இருந்த எல்லாம்
மறைந்தது.

இருபதும் அறுபதும்

அவன்
இருபது வயது இளைஞன்
இலக்கிய சிந்தனை யாளன்.
புது புது கற்பனை
புனைந்திடும் மாந்தன்
இருபதைக் கடந்தால்
திருமணப் பேச்சு.
திருமணம் என்றால்
மணமகள் வேண்டும்.
மணமகள் என்றதும்
கற்பனை ஆயிரம்
அவன் மனத்தினில்
உதயம்
எப்படி?
இப்படி...
பஞ்சு மெல்லடி
பாலவ கூந்தல் ஆறடி
பிடியிடை
துகிர்மேனி
கச்சவிழ் கொங்கை
காவிவிழி மங்கை
மயிலியல் சாயல்
மானினது நோக்கு
குயிலின் குரல்
கிளியின் மழலை.
ஓவியத்தின் உருவம்
வில்லை யொத்த புருவம்
பிறையன்ன நுதல்
அறலன்ன கூந்தல்.
கடற்கரையின் மணலும்
அவன் கற்பனையில் அடக்கம்.
எண்ணம் பல எண்ணி
எதிர்நோக்கி யிருந்தான்.
மனத்தில் மட்டும் இருந்தாள்
நேரில் வரவில்லை.
வருவாள் வருவாள்
எனக் காத்திருந்தான்
விழிப் பூத்திருந்தான்.
வந்தவளெல்லாம்
எதோ ஒரு
குறையுடன் வந்தாள்,
அவன் சொன்னான்.
அவள் வேண்டாம்
பின்பு...
அவள் சொன்னாள்
அவன் வேண்டாம்.
சொன்னான்
சொன்னாள்
சொன்னான்
சொன்னாள்....
காலங்கள் உருண்டோடின
கருத்துக்கள் புரண்டோடின.
ஒருநாள்
அவன்
அவள்
திருமணம்.
வந்தவர்கள் சொன்னார்கள்
அய்யய்ய...
அவன் சொன்னான்
என்ன அழகு
அவனா சொன்னான்.
அவன் வயது
அறுபது.

சாமி. அறவணன், எம்.ஏ.,
(பிச்சைப் பிள்ளை)
அறிஞர் அண்ணா அரசினர் ஆடவர் கல்லூரி
நாமக்கல்-637012

குறிப்பு:—பல ஆண்டு காலமாக கவிதை எழுத முயற்சித்து நல்ல காலமாக 'புதுக் கவிதை' கைக் கொடுக்க பிறந்தது இந்த...

TAMIL LOAN-WORDS IN ENGLISH

Dr R. E. Asher

Most discussions of the subject of loan-words in connection with the Tamil language tend to be directed towards the question of words that Tamil is assumed to have borrowed from other languages. What proportion of the Tamil vocabulary, it may be asked, is not of pure Dravidian stock? In spite of the difficulty of producing an exact figure, the evidence of various sources, such as dictionaries, might be called into account. Thus it may be shown that in Winslow's Dictionary (1862), for example, 8,000 of the 22,000 primary terms are Sanskrit, or that in the Tranquebar Tamil-English Dictionary (1933) 48 per cent of the entries are non-Tamil in origin. Such figures, however, can be grossly misleading for a number of reasons. In the first place, there are errors in the body of words marked as being derived from Sanskrit. For, as recent research has shown, it is in some cases more reasonable to assume the debt of Sanskrit to Tamil. Then again, calculations based on a dictionary word-count do not take note of the fact that a large number of the 'loans' occurred only in one or two isolated texts and are not, nor have ever been, in common and constant use. Further, they take into account neither those foreign words that may have been used in Tamil texts, but have since passed out of use, nor those for which there is a more frequently used synonym that belongs to the oldest stock of native Tamil words. Tamil, in fact, as Bishop Caldwell pointed out a century ago, 'can readily dispense with the greater part of the whole of its sanskrit.'[1] Though modern technical and scientific developments mean that it must open its doors to entrants from European languages, for example, it remains true that Tamil, much more than most languages which have had so frequent contact over the centuries with alien cultures, has kept as its central body of vocabulary those words which cannot be shown ever to have been imported from outside.

The same could not be said of English, which throughout its history has generally shown no reluctance to accept words from the other languages with which it has been in contact.[2] The result is that, though it may sometimes seem on the surface that the proportion of Anglo-Saxon words in English is no less than the proportion of Dravidian words in Tamil, the reality is quite otherwise.[3]

One of the very frequently tapped sources of English vocabulary is that provided by the British connection with the Indian sub-continent.[4] Of the languages relevant to this topic, those of the Dravidian group are far from being the least important. As was shown above to be the case with Tamil, it is again not possible to establish the exact proportion of non-native words in English. If words that have at one time or another occured in books or documents written in English are all taken into account, then the number of Dravidian words in English is exceedingly large. Thus Wilson's *Glossarry*[5] contains upwards of 4,000 Dravidian words, about one thousand of them being Tamil. The greater part of these, however, are plainly very specialised and form no permanent part of the English stock of words. Far more selective was Whitworth's *Dictionary*,[6] containing nevertheless over 400 Dravidian words, more than one third of them being Tamil. A number of these, too, must be considered obsolete, and the great *Oxford English Dictionary* (in common with the more recent *Webster's Third New International Dictionary*) includes only about sixty words of which the etymology is definitely Tamil. This number, however, is plainly in no sense insignificant.

Most of the Indian words that are found in current English entered it after the establishment of the East India Company. But English does share with Tamil a few words that came to it by the route of classical European languages. Though it is plainly not possible to affirm that they were borrowed directly from Tamil by Greek or Latin, the parallels are perhaps worth noting in the cases of 'rice' and அரிசி, 'ginger' and இஞ்சி.[7]

It has been suggested that the origion of the latter word is Malayalam, though it is doubtful whether we can usefully distinguish between a Tamil and a Malayalam source for words borrowed 2,000 years ago. Even for loans of the last two or three centuries it is not always possible to say with certainty from which of the Dravidian languages a word passed into English. Thus 'fanam' (பணம்),[8] 'olla' (ஓலை), 'chuckler' (சக்கிலி), 'poonga' (புங்கம்), 'teak' (தேக்கு) might have come from either Tamil or Malayalam. Similarly, 'tope' (தோப்பு), 'chatty' (சட்டி) pollam', 'poligar' (பாளையம், பாளையக்காரன்). could, equally well be traced back to Telugu.

Similar difficulties occur with a small number of words which have north- Indian affinities. Such words are 'cot' (கட்டில்), for which a Hindi derivation is just as reasonable, and 'coolie' (short for கூலிக்காரன் or கூலியாள்) which could, though far less plausibly, be traced to various non-Tamil sources.

A further problem arises as to whether words reached English directly from Tamil, or indirectly through Portugese. Fairly certain examples of the indirect route are 'Mango' (மாங்காய்), 'betel' (வெற்றிலை), and 'teak'. In the same way 'cheroot' (சுருட்டு) reached English by way of French.

Other words of very doubtful origin have been hesitantly traced back to Tamil for want of any more satisfactory etymology. The best known of these is 'anaconda', applied originally to a very large and terrible snake of Ceylon, but now to a South American variety, or even to any large snake that crushes its prey. Because a nineteenth century story told of a snake so large that it could crush an elephant, the name has been said to come from ஆனைகொன்ற,[9] an explanation which lacks nothing in ingenuity.

By contrast, a considerable number of words unquestionably came into English directly from Tamil. Among these it is appropriate to note first of all the word 'Tamil' itself. 'Dravidian' might have come to English from Sanskrit, and in any case the word திராவிடம் in its present form must be considered to be a Tamil borrowing from Sanskrit. In origin, however, it is most probably a Sanskrit adaptation of the word தமிழ்.[10]

Other proper names that should not be forgotten are the numerous South Indian place-names which have passed into use in English, being adapted to the phonetic laws of English in the process. Here it is not without interest that the abbreviated English form sometimes finds its way back into Tamil. Thus 'Ooty' leads to ஊட்டி, and 'Pondy' to பாண்டி (a considerable change from புதுச்சேரி). One town gave its name in English to an object made there, so that a 'trichi' (short from 'Trichinopoly') was a cigar made in that town. Though there seems some uncertainty about the true derivation of some geographical names, such as that of 'Coromandel' Coast, the Tamil சோழமண்டலம் is certainly the best explanation that has been offered.

Of the common nouns that Tamil gave to English, those referring to food figure high on the list. 'Curry' (கறி) is a word well-known throughout western Europe. The English version of ரசம், namely 'mulligatawny' soup (மிளகு தண்ணீர்), is still quite widely appreciated, as is 'popadam', which may have some connection with அப்பளம்.[11] Similarly the less well-known 'hopper' probably comes from அப்பம். 'Conjee' (கஞ்சி) is less familiar than it used to be, but the word is worthy of note because of its extended use as a verb meaning 'to starch with rice water'.[12] 'Tyre' (தயிர்) is probably unknown to people without an Indian background. Among fodder for animals is 'poonac' (புண்ணாக்கு).[13]

A few products of plants and shrubs have Tamil names in English. They include 'patchouli' (பச்சிலை), 'yercum' (எருக்கு), 'chay' (சாயம்).[14]

It is inevitable that the English resident in India should adopt the native words for coins and local weights and measures, and a large number from Tamil occur in writings in English. The best-known coins were 'fanam' 'cash' and (காசு). Weights include 'viss' (விசை) and 'candy' (கண்டி).[15] In the same realm is the grain-measure 'mercal' (மரக்கால்) and the land-measure 'cawney' (காணி).

Contact with a new civilisation meant contact with unfamiliar social groupings and occupations, and so led to the taking over of terms to describe them. 'Poligar', 'chuckler' and 'coolie' have already been mentioned. Other names of social or religious groups are 'modeliar' (முதலியார்), and 'pandaram' (பண்டாரம்). Among occupation are 'conicopoly (கணக்குப்பிள்ளை) and

toty' (தொட்டி). Though the meaning of these English words may not in all cases correspond exactly to that of the Tamil original, their use is largely restricted to Indian contexts. Exceptional, therefore, in this respect is the word 'pariah' (பறையன்) which can now be taken to mean 'social outcast' in the widest possible sense.

Most of the other words that English has borrowed from Tamil do not admit of too ready a classification. With 'tope' we might group 'shola' (சோலை`. 'Anicut' (அணைக்கட்டு) and 'chunam' (சுண்ணம்) are little known, though the latter is interesting as another case of a verb being formed in addition to the noun borrowed 'to chunam' meaning 'to cover with plaster or chunam'. 'Pandal' (பந்தல்) adds nothing to the Tamil meaning, but 'catamaram' (கட்டுமரம்) has travelled far. Originally applied to the rafts used for fishing off the cost of South India, it later came to mean also a kind of raft made of two boats fastened together side by side, used in the St. Lawrence River of Canada. Now, along with the abbreviated from 'cat', the word is having a new lease of life to designate a type of twin-hulled sailing boat that is becoming increasingly popular in Britain and Australia. More recently the word 'catamaran' has led to the coining of 'trimaran' for a three-hulled boat.

As was noted above, the list of words contained in this essay is far from exhaustive, but it is enough to show that among the languages to which English owes a debt, Tamil holds a significant place. Tamil speakers, it is true, consciously use quite a number of English words. Englishmen frequently return the compliment by using at least a small number of Tamil words more often than not without knowing it. For though a fair proportion of the words cited are likely to be found only in Indian contexts, a certain number is the property of speakers whose knoledge of Tamil Nad may be nil. One important fact as therefore been clearly illustrated, namely that linguistic borrowing is always a two-way affair. A language that gives of its stock to another is almost certain to take some words back in return.

One other feature not yet mentioned is that over half the loan-words discussed above were taken over in the late 16th and in the 17th century, the flow apparently being slower for the 18th and 19th centuries Perhaps we may hope to see an increase in the traffic in the 20th, for we in the West are again beginning to realise the importance of Asian culture. If we take an interest in the civilisation, ideas and achievements of the peoples of the East, we shall once again find ourselves borrowing new words. And as always throughout its history, we can assume that Tamil will have much to offer.

Dr R. E. ASHER
Department of Linguistics
University of Edinburgh
Edinburgh, U. K.

[1] R. Caldwell, *A Comparative Grammar of the Dravidian...Languages*, 3rd edn reprint, Madras. 1956, p. 47

[2] On this see Mary S. Serjeantson, *A History of Foreign words in English*, London. 1935. Cf. also *The Stanford Dictionary of Anglicised words and Phrases*, ed. by C.A.M. Fennell, Cambridge, 1892.

[3] See Caldwell, op. cit., p. 46:

[4] See Ernest Weekly's interesting essay 'The Anglo-Indian's, in *Something about words*. London, 1935. pp. 177-190.

[5] H. H Wilson, *A Glossary of Judicial and revenue terms, and of useful words occuring in official documents relating to the administration of the government of British India*, enlarged edn by A. C. Ganguli and N.D. Basu. calcutta, 1940,

[6] A. c. Whitworth, *An Anglo-Indian Dictionary. A Glossary of Indian terms used in English*, London 1885

[7] Mentioned in Pliny's *Natural History*, XII- 7, as 'zingiberi' (இஞ்சி வேர்). on this see Henry yule and A. c, Burnell, *Hobson-Jobson, a glossary of colloquial Anglo-Indian words and phrases*, 2nd edn by W. crooke, London, 1903 It is possible to trace quite a large number of classical Greek words back to the Dravidian Languages. On this fact and its possible implications, see F. Legrand, 'Tamil loan words in Greek', *Tamil Culture*, vol. III, No. (Jan, 1954), pp. 36-45.

[8] The fact that one may trace this back ultimately to a Sanskrit root does not invalidate that it was from a Dravidian tongue that the word passed European Languages,

[9] See Yule. and Burnell, *Hobson-Jobson*,

[10] See caldwell, *Comparative Grammar*, pp. 9-10. and S. K. chatterji, 'Old Tamil, Ancient Tamil and Primitive, Dravidian'. *Tamil Culture*. vol. V, No. 2, p. 161.

[11] For a further discussion of this, see *Hobson-Jobson* under 'Popper-cake.'

[12] cf. also the verb 'to curry', and the compound noun 'curry-powder' as further example of the extension of the use of Tamil words in English.

[13] Though this word may be ultimately Sanskrit, the English source in almost certainly Tamil,

[14] cf. note 13.

[15] Traceable back to Marathi. See P. C. Ganeshsundaram and V. I. Subramoniam, 'Marathi loans in Tamil', *Indian Linguistics*, XIV (1954), p. 119.

நெஞ்சில் ஒரு நெருஞ்சி

டாக்டர் கு. ஆறுமுகன்

எங்கே சென்றால் என்ன?

"எங்கே சென்றால் என்ன? எவளிடம் தங்கினால் என்ன? எவ்வளவு காலம் தங்கினால் என்ன? உன் மேல் அன்பில்லை என்றால், அங்கேயே அவளிடமே அவர் இருந்து விடுவாரே. அவர் அங்கேயே எப்படி இருக்க முடியும்? அவர் உடல் அங்கிருந்தாலும், அவரது உள்ளம் என்றும் இங்கு தானே இருக்கும்? அந்த உள்ளத்தில் அவளா இருக்கிறாள்? நீதானே அவர் உள்ளம் கவர் கள்வி. அவர் உள்ளத்தில் உன்னையன்றி வேறு யார் வாழ முடியும். அவரது உடலை வேண்டுமானால் அவள் கவர்ந்து விட முடியும். அவரது உள்ளத்தை நீதானே கவரமுடியும்; இன்று அவரது உள்ளம் மட்டுமா இங்கு ஓடி வந்தது? உள்ளத்தை முந்திக்கொண்டு அவரது உடலும் இங்கு வந்து, உன் வீட்டின் புறத்தே கதவுக்கு வெளியே, அஞ்சி ஒளிந்து நிற்கிறதே. அவரது உள்ளத்தின் உருவமாக நான் மட்டும் உள்ளே வந்து நிற்கிறேன்"

வண்டும் பூவும்

"எப்படி இருந்தாலும், அவர் ஆடவர், நாம் மகளிர். வண்டைப்போன்றவர் ஆடவர். பூவைப் போன்றவர் மகளிர். குளத்தில் முளைத்திருக்கும் அழகிய தாமரைப் பூவில் தங்கி, வண்டு அதன் தேனை உண்கிறது. அத்துடன் அது நிற்கிறதா? சாக்கடையில் முளைத்துள்ள குவளை, ஆம்பல் முதலான புல்லிய பூக்களையும் நாடுகிறது. அவற்றில் உள்ள இழிந்த தேனையும் அது உண்டு சுவைக்கிறது. அவற்றில் உள்ள சிறிய தேனை உண்ட பிறகுதான் தாமரைத் தேனின் பெருமையை அவ்வண்டு உணர்கிறது. மீண்டும் அத்தாமரையை நாடுகிறது. தாமரை அந்த வண்டை நோக்கி "நீ எங்கெங்கோ சென்று, எந்தெந்த மலர்களிலோ உள்ள இழிந்த தேனையெல்லாம் உண்டு வருகிறாய். இங்கே என்னிடம் வர வேண்டாம்" என்று கடிந்து மறுத்து ஒதுக்குகிறதா? அன்புடன் ஏற்று அந்த வண்டிற்குத் தன் தேனை அள்ளிக் கொடுக்கிறதே"

"அப்படித்தான் நம் தலைவரும். உயர்குடிப் பிறந்த உன்னிடம் சில நாள் தங்கி உனது நல்லின்பத்தில் திளைக்கிறார். அத்துடன் நில்லாமல் எங்கெங்கோ ஓடுகிறார். எவளெவளையோ நாடுகிறார். இழி குடிப் பரத்தையர் தரும் புல்லிய சிற்றின்பத்தில் மூழ்குகிறார். அப்படி மூழ்கிய பிறகுதான் உயர்குடித் தலைவியின் அன்பு இன்பத்தின் அருமை பெருமைகளை அவர் உணர முடிகிறது. உடனே விலைமகளிரின் புல்லிய அவ்வின்பத்தை வெறுத்து ஓடோடி உன்னிடம் வருகிறார்."

பாலு காடியும்

"நாள்தோறும் இனிய நல்லாவின் பாலையே குடித்து வெறுத்துவிடுகிறான் ஒருவன். பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது நம் நாட்டுப் பழமொழி ஆயிற்றே. பாலை வெறுத்துப் போய்ப் பிறர் தரும் புளிங்காடியைக் குடிக்கிறான். அப்புளிங்காடியைக் குடித்த பிறகுதான் பாலின் அருமையும் பெருமையும் அவன் உணர்கிறான். புளிங்காடியைக் குடிக்கவில்லையென்றால் பாலின் அருமை பெருமையை உணர்வது எப்படி?

நிழலின் அருமை வெயிலில் தெரியும்

"குவளைத் தேனின் இழிவை அறியவில்லை என்றால், தாமரைத் தேனின் இனிமையை வண்டு உணர்ந்திருக்க முடியுமா? காடியின் புளிச் சுவையை உண்டு உணராமற் போனால், பசும்பாலின் இன்சுவையை ஒருவன் எங்ஙனம் உணரமுடியும்? விலைமகளின் புல்லிய இன்பத்தை நுகராமல் இருந்தால், திருமகள் போன்ற உனது நல்லின்பத்தின் அருமை பெருமைகளை அத்தலைவர் உணர்ந்திருக்க முடியுமா? உணர்ந்தமையால் தானே அவர் இங்கு ஓடோடி வந்தார்? நிழலின் அருமை வெயிலில்தானே தெரியும்?"

குவளைக்கும் காடிக்கும் நன்றி

"தாமரைத் தேனின் இனிமையை உணர வைத்த குவளைக்கு அத் தாமரை நன்றி செலுத்தி தன்பால் மீண்டும் வந்த வண்டினை வரவேற்க வேண்டாமா? பாலின் இன்சுவையை உணர வைத்த புளிங்காடிக்கு அந்தப்பால் நன்றி செலுத்துவதுடன் தன்னை மீண்டும் உண்ண வருவோனை அது வர

வேற்க வேண்டாமா? அங்ஙனமே உனது தூய அன்பின் பெருமையை, நீ தரும் நல்லின்பத்தின் அருமையைத் தலைவன் உணரும்படி செய்த அவ்விலைமகளுக்கு நீ நன்றி தெரிவிக்க வேண்டாமா? நன்றி தெரிவித்து, உன்னிடம் மீண்டும் ஓடோடி வந்த உன் காதலனை எதிர்கொண்டு வரவேற்று இன்பம் நல்க வேண்டாமா? ஆதலின் இவ்வாறு முகத்தைச் சுளித்து, சினம் கொண்டு, கதவைத் தாளிட்டு, அவரை வரவிடாமல் கடிந்து நிற்பது உனக்குத் தகுமா? போகும்பொழுது புறம் தொழுது, வரும்பொழுது எதிர் தொழுது வரவேற்று உபசரிப்பதல்லவோ உன்போல் உயர்குடிப் பிறந்த மகளிரின் பண்பும் கடமையும் ஒழுக்கமும் ஆகும்?''

ஏன் இந்த உபதேசம்?

இவ்வாறு உபதேசம் செய்கிறாள் தோழி தலைவிக்கு. ஏன் இந்த உபதேசம்? தலைவி இளமையும் அழகும் எழிலும் உடையவள். தலைவன் வீரமும் கொடையும் ஈரமும் கொண்டவன். அவன் அவளை நெஞ்சாரக் காதலித்தான். அவளும் அவன்மீது ஆராக் காதல் கொண்டாள். இருவரும் சிலகாலம் இன்புற்று வாழ்ந்தனர். எப்படியோ தலைவன் ஒரு நாள் விலைமகள் ஒருத்தியின் விழி வலையில் சிக்கினான். அவள் வசமாயினான். அன்புத் தலைவியை மறந்தான். பல காலம் அப் பொல்லாத விலைமகளுடன் தங்கினான். ஒரு நாள் தன் தலைவியின் தூய காதலும், அவளிடம் தான் எய்திய ஐம்புல இன்பமும் அவனது நினைவுக்கு வந்தன. அவ் விலைமகளைத் துறந்தான். வீடு நோக்கி ஓடி வந்தான். தான் செய்த தவறு தன் நெஞ்சை உறுத்தியது. விரைந்து தன் இல்லத்துள் நுழைய அஞ்சினான். தலைவியின் கடுஞ்சினத்தைத் தணிப்பதற்குரிய வழி என்ன என்று சிந்தித்தான். வாயிலில் தோழியைக் காண்கிறான். அவளை முன்னே விட்டுத் தான் பின்னே நுழையலாம் என்று எண்ணினான். தோழி உள்ளே நுழைந்தாள். தலைவியின் சினமும் வருத்தமும் அவள் முகத்தில் பொங்கின. தோழி அவள் சினத்தைத் தணித்தால்தான் தலைவன் உள்ளே நுழைய முடியும். அதனால் தான் அவள் தலைவியை நோக்கி வண்டையும் பூவையும், பாலையும் காடியையும் எடுத்துக் காட்டி இவ்வாறு உபதேசம் செய்கிறாள்.

நெஞ்சில் நிழற்படம்

தலைவனுக்குத் தூதாக வந்த தோழியைப் பார்க்கிறாள் தலைவி. அவள் புரிந்த உபதேசங்களைக் கேட்கிறாள். அதனால் தலைவியின் சின நோய் கொஞ்சம் தணிகின்றது. ஆனால் அவள் மனநோய் தணிந்தபாடில்லை. தோழியின் உபதேசம் தலைவியின் நெஞ்சு வலியை இன்னும் மிகுதியாக்கிவிட்டது. தலைவன் முன்னொரு காலத்தில் இருந்த இனிமையும், பின்னர் மாறிய கொடுமையும் அவள் நெஞ்சில் நிழற்படம் போல ஓடின. இவற்றை நினைக்க நினைக்க அவள் நெஞ்சம் துயர் மிகுதியால் வெடித்துவிடும் போல் இருந்தது. வாய்விட்டுக் கதறுகிறாள். ''நோகின்றதே என் நெஞ்சம், நோகின்றதே என் நெஞ்சம்'' என்று மனம் விட்டு வாய் விட்டுக் கதறி அழுகின்றாள்.

இனிமை இனிமை இனிமை!

''அதோ பார் தோழி, அங்கே பார் அந்த நெருஞ்சிப் பூவைப் பார். காண்பதற்கு எத்தனை அழகு. அதன் பொன்னிற அழகு கண்ணைப் பறிக்கின்றதே. அதனை மெதுவாகத் தொட்டுப் பார். எவ்வளவு மென்மை. அந்தப் பூ நம் உடலில் படும்பொழுது அதன் மென்மை நம் உடம்பிற்கு நல்கும் மெத்தென்ற இன்பம் தான் என்னே! பார்க்கின்ற கண்ணுக்கும், தொடுகின்ற மேனிக்கும், நினைக்கின்ற நெஞ்சிற்கும் இனிமை, இனிமை, இனிமை.

''என் காதலரும் அப்படித்தானே. அவர்தம் அகன்ற பொன்னிற மார்பு எத்தனை அழகு. வல்லென்ற அவர்தம் அகன்ற வீர மார்பு, நான் பள்ளி கொள்ளுதற் பொருட்டு, மெல்லென்று, மெத்தென்று, குழைந்து கொடுத்து என் மேனிக்குத் தந்த அந்த இன்பத்தை என்னென்று கூறுவேன்? அந்த இன்பத்தை நினைக்க நினைக்க என் நெஞ்சம் பூரிக்கின்றதே. அவர்தம் ஊரில் முளைத்து வளர்ந்து மலர்ந்துள்ள அதோ அந்த நெருஞ்சிப் பூவைப் போன்றே, அவ்வூரில் பிறந்து வளர்ந்து என்னைக் காதலித்து மணந்த என் தலைவரும்—கண்ணுக்கும் மேனிக்கும் நெஞ்சிற்கும் தேனாய், பாலாய், தெவிட்டாத தெள்ளமுதாய்த் தந்த இனிமையை என்னென்று சொல்லுவேன்?''

கொடுமை கொடுமை கொடுமை!

''அதோ பார். அந்த நெருஞ்சிப் பூ காயாகிப் பழுத்துவிட்டதைப் பார். எல்லாப் பூக்களும் காயாகிப் பழுக்கத்தான் செய்கின்றன. மற்றைய பூக்கள் முன்னர்க் காயாகிப் பின்னர்க் கனிந்து பழமாகும் பொழுது எத்துணை கனிந்து குழைந்து இனிமையாக விளங்குகின்றன. காயாக இருந்த கடுமை மாறிக் கனிந்து குழைவதால்தானே

பழத்தைக் கனி என்று அன்புடன் அழைக்கின்றோம். ஆனால் இந்த நெருஞ்சிப் பூ காயாகிப் பழுத்தவுடன் கல் போன்று கடிதாகி, முள் போன்று கொடிதாகி முற்றிலும் மாறிவிட்டதே. ஏன் அப்படி மாறிவிட்டது? தாயைப்போலப் பிள்ளை, நிலத்தைப் போலப் பயிர். அந்த நெருஞ்சி முளைத்துள்ள இடத்தைப் பார். நல்ல நிலத்திலா அது முளைத்திருக்கிறது? நன்புலத்தில் அது முளைக்கவில்லையே. கல்லும் முள்ளும் கரடுமாக உள்ள வன்புலமாகிய புன்புலத்திலல்லவா அது முளைத்திருக்கிறது. தாயின் குணம் மகளுக்கு இருப்பது போல, தான் தோன்றிய நிலத்தின் புன்மை, இழிவு, கடுமை, கொடுமை எல்லாம் அந்த நெருஞ்சிக்கும் இருந்துதானே தீரும். தாயின் குணம் அவளது மகள் குழந்தையாக இருக்கும்பொழுது தெரியாது. அம்மகள் வளர்ந்து பெரியவள் ஆன பிறகுதானே தெரிகிறது? அது போலத்தான் அந்த நிலத்தின் குணம், நெருஞ்சி, பூவாக இருந்தபொழுது தெரியவில்லை. அப்பூ காயாகிப் பழுத்த பிறகுதான் தெரிகிறது."

"கண்ணுக்கும் மேனிக்கும் நெஞ்சிற்கும் இனிமை தரும் ஏனைய பூக்கள் பழமான பிறகு மேலும் மிகுந்த இனிமை தருகின்றனவே. அப் பழங்கள் உருண்டு திரண்ட வடிவமும், பொன் போன்ற நிறமும் உடையனவாய்க் கண்ணுக்கும், மெய்க்கும், மனத்திற்கும் இனிமை தருவதுடன் நிற்கவில்லையே சுவைக்கின்ற நாவிற்கும் இனிமை தந்து இன்பக் கடலில் ஆழ்த்துகின்றனவே. ஆனால் இந்த நெருஞ்சிப் பழத்தைப் பார். பாம்பு போல் வளைந்து, பாம்பின் பல் போன்ற முள்ளுடன் காண்போர் கண்ணுக்குக் கொடுமை. தெரியாமல் தொட்டவரையும் பாம்பு போலவே குத்தித் துன்புறுத்தும் கொடுமை, இவற்றை நினைத்தாலே நெஞ்சிற்கும் கொடுமை—எல்லாம் கொடுமை மயமாக உள்ளதே. பார்ப்போர் கண்ணுக்கும் தொடுவோர் மேனிக்கும் நினைப்போர் நெஞ்சிற்கும் இந் நெருஞ்சிப் பழம் செய்யும் கொடுமையை என்னென்பது?"

"நம் காதலர் இப்பொழுதுள்ள நிலையை நினைத்துப் பார். அவரும் அப்படித்தானே கொடியவராய் மாறிவிட்டார். அவரைச்சொல்லிப் பயனில்லை. அவர் பிறந்த அந்த ஊரைப் பார். நெருஞ்சி தோன்றிய நிலம் போன்று தானே அவ்வூரும் கொடுமை நிறைந்துள்ளது. விலை மகளிரும், அவர்களைக் காமுற்றுத் திரிகின்ற காமுகரும் தெருத்தெருவாக அலைகின்ற ஊர்தானே அது. நெருஞ்சி, பூவாக இருந்தபொழுது இனிமையாகத்தான் இருந்தது. நம் தலைவரும் தொடக்கத்தில் எவ்வளவு அன்பும், பண்பும், இனிமையும் உடையவராய்த் திகழ்ந்தார் என்பதை நினைக்க நினைக்க என் உள்ளமும் உடலும் உயிரும் எல்லாம் இனிக்குமே. 'உன்னைப் பிரியேன், பிரியின் உயிர் தரியேன்.'

இந்த இப்பிறவிக்கிரு மாதரைச்
சிந்தை யாலும் தொடேன்.

என்று அவர் கூறிய காதல் மொழிகள் இன்னும் என் செவிகளில் ஒலித்து அமிழ்தம் போன்ற இன்பத்தில் என்னை ஆழ்த்துகின்றனவே. நான் எண்ணிய இன்பம் அனைத்தையும் எண்ணியாங்கு எனக்குஅளித்த அவரது தண்ணளியை என்னென்பேன்?"

"காதலர் தந்த அவ்வின்பம் அனைத்தும் இன்று பொய்யாய்க் கனவாய்ப் பழங் கதையாய் மெல்லப் போயினவே. காற்றும் இடை நுழையாத முயக்கத்தை விரும்பிய அவர், இன்று காத தூரம் இடை விட்டுப் பிரியவும் துணிந்தார். துணிந்து துறந்தார், என்னை மறந்தார், என் அன்பை மறந்தார், தன்னை மறந்தார், தான் செய்த இனிமைகளை மறந்தார்—இழிந்த விலை மகளை நாடினார், அவள் இருக்குமிடம் நாடி ஓடினார். அவள் தரும் புல்லிய இன்பத்தில் மூழ்கினார். ஆறும் குளமும் வாவியும் உற்று, அவ்விலைமகளுடன் புனல் விளையாட்டுப் புரியும் கொடுமையை என் செவிகளில் நஞ்செனப் பொழிகின்றனரே. கடிமலர்ச் சோலைகளை நண்ணி அப்பரத்தையுடன் காம இன்பம் துய்க்கும் கொடுமை என் நெஞ்சை உடைக்கின்றதே. தொடக்கத்தில் நெருஞ்சிப் பூப் போல் என் நெஞ்சில் தங்கி, என் கண்ணுக்கும் மேனிக்கும் நெஞ்சிற்கும் இன்பம் செய்தார். அதே காதலர் இன்று தாம் பிறந்த ஊரின் சூழ்நிலைக்கு ஏற்ப மாறி நெருஞ்சி முள்ளாய் நின்று என் நெஞ்சைக் குத்திப் பிளக்கும் கொடுமையை என்னென்பேன்?" இதோ தலைவனுக்குத் தூதாய் வந்த தோழிக்கு அத் தலைவி கூறும் மொழி,

நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முள்பயந் தாஅங்கு
இனிய செய்தநம் காதலர்
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே.

குறுந்தொகை. 202

இங்ஙனம் தலைவியின் நெஞ்சைத் திறந்து, அவளது நெஞ்சில் பூவாக நின்று இன்பம் செய்து, பின்னர் முள்ளாக மாறி அந்நெஞ்சைக் குத்திக் கொடுமை செய்த அந் நெருஞ்சியை எடுத்துக் காட்டி அறுவை மருத்துவம் (Surgery) புரிகின்றார் அள்ளூர் நன்முல்லையார் என்னும் பெண் புலவர்.

Dr K. Arumugan
Professor of Tamil, Delhi University

நீராட்டவோ?

முகிலுக்குக் கலை விருந்தென்று
மயில் ஆடுகின்றது!
பிறருக்கு மன மருந்தென்று
குயில் பாடுகின்றது!
கடலுக்கு வள நிறைவென்று
நதி பாய்கின்றது!
கவின்உலகு விலை தருமென்று
மதி காய்கின்றது!
மலர்நல்கும் செழு மரமென்று
நிலம் தாங்குகின்றது!
மணம்வழங்கும் கொழு மலரென்று
கிளி ஏங்குகின்றது!
அன்புதரும் மென் குழவியென்று
தாய் சீராட்டுவாள்!
தனக்குவரும் நல், வாழ்வென்று
குரு பாராட்டுவான்!
குளத்திற்கு மேல் ஆடையென்று
கதிர் பொன்விரிக்குது!
வழிச்செல்வோர் கீழ் அமரவென்று
மலர் படுக்கைபோடுது!
எதைஎதையோ நான் பாடுகின்றேன்
பிறர் பாராட்டவோ!
வதைக்குமுளம் குமிழ்ந் துயிர்க்குமுளம்
கண் நீராட்டவோ!

சு. இந்திர பவானி
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
திரு பராசக்தி கல்லூரி
குற்றாலம்-627 802

சங்க கால அரசர்கள், வள்ளல்கள், புலவர்கள் தலைமுறை குறித்த ஓர் ஆராய்ச்சி

டாக்டர் வெ. இந்திரா சுப்புலட்சுமி

சங்ககாலப் புலவர்களின் காலத்தைப் பற்றியது இக் கட்டுரை. அவர்கள் வாழ்ந்த காலத்தை ஆராய அக்காலத்தில் செங்கோல் புரிந்த மன்னர்கள், குறுநில மன்னர்கள் பற்றிய செய்திகள் துணைபுரிகின்றன. புறநானூறும், பதிற்றுப்பத்துமே வரலாற்றுக் குறிப்புக்களை மிகுதியாகப் பெற்றுத் திகழும் சங்கத் தொகை நூல்கள். அவ்விரண்டு தொகை நூல்களில் காணலாகும் அரசர்கள், குறுநில மன்னர்களின் வரிசை முறை ஓரளவு துணைபுரியும் என்பது முன்பே இவ்வாசிரியரால் எழுதப்பட்ட கட்டுரை தெளிவாக்கும்.[1] ஒவ்வொரு சங்கப் புலவரும் வாழ்ந்த ஆண்டுகளை அறுதியிட்டுக் கூற இயலாதெனினும் அவர்களைக் குழு குழுவாகப் பிரித்து அடுத்தடுத்து வந்த புலவர் குழு இதுவாக இருக்கக் கூடும் என்பதைக் குறித்து ஆராய்வதே இங்கு நோக்கமாக உள்ளது. இதனைக் குறித்து ஆராய்வதற்கு அவர்களால் பாடப்பட்ட பாடல்களே உள்ளனவேயன்றி வேறு அகச் சான்றுகள் இல்லை; அவர்கள் பாடிய பாடல்களில் காணப்படும் அரசர்கள், வள்ளல்கள், குறுநில மன்னர்கள் போன்ற வரலாற்றுச் செய்திகளை ஆராய வேண்டியது இன்றியமையாததாகும். எனவே அத்தகைய வரலாற்றுச் செய்திகள் உள்ள பாடல்களில் கருத்தைச் செலுத்துவது முதற்படியாகும்.

புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்களில் காணப்படும் முறையே இங்கும் பின்பற்றப்பட்டுள்ளது. மேலும் அப்பாடல்களில் உள்ள கொளுக்களும் இங்குச் சான்றாகக் கொள்ளப்பட்டுள்ளன. சேர அரசரில் தொடங்கி, பாண்டிய, சோழ அரசர்கள் பற்றியும் அவ்வரசர்கள் காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்கள் பற்றியும் காண வேண்டும். இதனைக் குறித்து ஆராய்ந்தபின் அவ்வரசர்களையும் குறுநில மன்னர்களையும் நேர்முகமாகப் பாடிய புலவர்களைப் பற்றிய காலத்தை ஆராய்வது, எளிமையாக இருக்கும்.

புறநானூற்றில் காணப்படும் முதல் சேர அரசன் உதியன் மரபைச் சார்ந்த பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனாவான். இச் சேர அரசனே பதிற்றுப்பத்தில் கிடைக்காத முதல் பத்தின் பாட்டுடைத் தலைவனாவான். இவனே முதற்பத்தின் தலைவன் என்பது இரண்டாம் பத்தின் பதிகம் உணர்த்தும். இவ்விரண்டு நூல்களில் முதற் பாடலின் பாட்டுடைத் தலைவன் சேரன் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

முதல் தலைமுறையினைச் சேரன் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனே தொடங்கி வைக்கின்றான். புறநானூற்றில் பேசப்படும் முதல் பாண்டிய அரசன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதியாவான்; அதில் பேசப்படும் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி முதல் சோழ அரசனாவான், சேர மரபில் உதியன், பொறையன் என்ற இரு மரபினர் உண்டு. எனவே பொறையன் மரபைச் சார்ந்த முதல் அரசன் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்பொறையாவான். இம் மூவேந்தர்கள் ஆட்சி செய்த காலத்தைச் சார்ந்த குறுநில மன்னர்கள் பற்றிய குறிப்பு ஒன்றும் இவர்களைப் பற்றிய பாடல்களில் இருந்து அறிந்துகொள்ள இயலவில்லை.

முதல் சேர அரசனைக் குறித்துப் புறநானூற்றுப் (புறம். 2) பாடலைப் பாடியவர் முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற புலவராவார். இவ்வரசன் பாண்டவர் படைகளுக்குப் பெருஞ்சோறு வழங்கியதாக இப்பாடலில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. மேலாக நோக்கும் பொழுது இவ்வுதியஞ் சேரலாதன் பாண்டவர்களும் கௌரவர்களும் வாழ்ந்த காலத்தைச் சார்ந்தவர் என்று கூறத் தோன்றும். ஆயின் அவ்வாறு

கொள்ள வழியில்லை என்பதற்கு மற்றொரு சான்று பகரும். மாமூலனார் அகநானூற்றுப் பாடலில் (அகம். 233) இச்சேர அரசன் சங்கப் புலவரான மாமூலனார் பாடிய பாடல் எவ்வாறு முன்னோர்களான பாண்டவர்களின் நினைவாகப் பெருஞ்சோறு வழங்கினான் என்பது புலனாகும். மற்றொரு புலவரான கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என்பவர் தம் பாடலில் (அகம். 168) அச்சேர அரசன் குழுமூர் என்ற ஊரில் உதியன் அளித்த பெருஞ்சோறு குறித்துக் கூறியுள்ளார். இதனைக் குறித்து, திருச்சூர் மாவட்டத்தைச் சேர்ந்த கூணூர் என்ற ஊரில் கிடைக்கப் பெற்றுள்ள குறிப்புக்கள் உணர்த்தும். அங்குள்ள கோயில்களில் உள்ள பதிவேடுகளில் அங்கு நடைபெறும் திருநாள் ஒன்றில் ஆவினம் சிறப்பிடம் பெறும் என்று குறிக்கப் பட்டுள்ளது. அகநானூற்றுப் பாட்டொன்றில் (அகம், 168) குழுமூர் என்ற ஊரில் ஆவினத்தினைப் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் போற்றி வந்தான் என்ற குறிப்புக் காணப் படுகின்றது. மேலும் அப்பதிவேட்டில், எட்டாம் நாள் திருநாள் திருப்பள்ளியெழுச்சியில் மறையோதுவோர், மகாபாரதத்தைப் படித்துக் காட்டுவார் என்றும் காணப்படுகிறது, ஏறத்தாழ 25 ஆண்டுகட்கு முன்பு வரை இக் கோயிலில் எட்டாம்நாள் திருநாளன்று குலவேறுபாடின்றி யாவர்க்கும் உணவளித்த செய்தி Indian Express[2] இல் வெளியிடப்பட்ட கட்டுரையொன்று உணர்த்தும். இவையனைத்தும், அச் சேர அரசன் பாரதப் படையைச் சார்ந்த வீரர்களுக்குப் பெருஞ்சோறு அளிக்கவில்லையெனவும், அவர்கள் நினைவாகவே அளித்தானென்றும் கூறும்.

மாமூலனார் என்ற புலவர்தம் அகநானூற்றுப் பாடலில் (அகம். 233) 'இறந்த முன்னோர்கள் நினைவாகப் பெருஞ்சோறு அளித்தபோது குழுமியிருந்த பேய்கள்' என்ற குறிப்புக் காணப்படுகிறது. பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் சேரன் செங்குட்டுவன் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனின் பெயரன் என்று தெரிகின்றது. அச் சேரன் செங்குட்டுவன் கி. பி. முதலிரு நூற்றாண்டுகளைச் சார்ந்தவன் என்பது இதே ஆசிரியரால் எழுதப்பட்ட கட்டுரையொன்று[3] புலப்படுத்தும். சேரன் செங்குட்டுவனை நேர்முகமாகப் பாடிய அரசர்களும் அவ் வரசன் காலத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. பெயரன் ஒரு நூற்றாண்டைச் சார்ந்தவனாக இருக்கும் பொழுது அவன் பாட்டன் எவ்வாறு பல நூற்றாண்டுகட்கு முற்பட்டவனாக இருக்க இயலும்; அதாவது சேரன் செங்குட்டுவன் கி. பி. முதலிரு நூற்றாண்டைச் சார்ந்தவனாக இருக்கும்பொழுது அவன் பாட்டனான பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் எவ்வாறு பாரத காலத்தைச் சார்ந்தவனாக இருக்க முடியும்? சேரன் செங்குட்டுவன் குறித்துப் பாடிய புலவர் மூன்றும் சங்க காலமான கி. பி. முதலிரு நூற்றாண்டைச் சார்ந்தவனாக இருக்கும்பொழுது பாட்டனும் அந் நூற்றாண்டைச் சார்ந்தவராகவே இருக்க வேண்டும். வரலாற்றாராய்ச்சியாளரான கே. ஜி. சேஷ அய்யர் என்பவரும் இச் சேர அரசனே சேர மரபைத் தோற்றுவித்தவன் எனத் தம் நூலில் (Cera Kings of the Cankam age, Page, 8) எழுதியுள்ளார்.

இச்சேர அரசன் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட அரசன் கருங்கை யொள் வாட் பெரும்பெயர்வழுதி என்பவனாவான். இவனை இரும்பிடர்த்தலையார் என்னும் புலவர் புறநானூற்றில் (புறம். 3) நேர்முகமாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். வேறு புலவர்கள் இவ்வரசனைக் குறித்துப் பாடியதாகப் பாடல் இல்லை.

இதே காலத்தைச் சார்ந்த சோழ அரசனாக உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி காணப் படுகிறான் (புறம். 4). இவனைக் குறித்துப் பரணர் புறநானூற்றில் (புறம். 4) நேர்முகமாகப் பாடியுள்ளார். சோழன் இளஞ்சேட் சென்னியின் மகனான கரிகால் வளவனையும் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். பெருங்குன்றூர்கிழார் என்ற புலவரும் சோழன் இளஞ்சேட்சென்னியை நேர்முகமாகப் பாடியுள்ளார் (புறம். 266). உதியன் மரபின் முதற் சேர அரசன் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனாக விளங்க, பொறையன் மரபின் முதல் அரசனாகச் சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரலிரும்பொறை காணப்படுகிறான். இவ்வரசனைக் குறித்து நரிவெரூஉத்தலையார் என்ற புலவர் நேர்முகமாகப் பாடியுள்ளார் (புறம். 5).

மேலே கூறப்பட்ட அரசர்களும் அவர்களை நேர்முகமாகப் பாடியுள்ள புலவர்களுமே முதற் தலைமுறையைச் சார்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இரண்டாந் தலைமுறையைச் சார்ந்தோராகப் பின்வருபவர் உள்ளனர். உதியன்

மரபைச் சார்ந்த இரண்டாம் சேர அரசனாக - அதாவது பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை அடுத்து - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பேசப்படுகிறான். இவன் தலைநகர் தொண்டி யாக இருந்தது. இவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்பவன் மாந்தை என்பதைத் தலைநகராகக் கொண்டு சேர நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செய்தான். பொறையன் மரபைச் சார்ந்த அந்துவஞ்சேர லிரும்பொறை என்பவன் இத் தலைமுறை யைச் சார்ந்தவனாகக் காணப்படுகின்றான். இவன் தலைநகர் கருவூராக இருந்தது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனின் மூத்த மகனாகக் கொள்வதற்குப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பதிகம் இடமளிக்கின்றது. இவ் வரசன் ஆட்சியாண்டு நாற்பத்தைந்து என் பதையும் பதிகம் கூறும். குமட்டூர்க் கண்ண னார் என்ற புலவர் பதிற்றுப் பத்து இரண் டாம் பத்தினை இவன் மேல் பாடியுள்ளார். இவன் கடம்பை வென்றவன் என்றும், ஏழு அரசர்களை வென்று அவர்கள் முடிப்பொன் னினால் ஆன மாலையை அணிந்தவனென்றும், இமயமலையில் தன் விற்பொறியைப் பொறித் தவன் என்றும், யவனர்களை வென்றவன் என்றும், பதிற்றுப் பத்துப் பாடல்கள் பகரும். மாமூலனார் என்ற மற்றொரு புலவரும் தம் அகப் பாடல்களில் இச் செய்திகளைக் குறிப் பிட்டுள்ளார், இவ்வரசனுக்குரியதாக மாந்தை என்ற நகரம் குறிக்கப்பட்டுள்ளது. கே. ஜி. சேஷ அய்யர் என்பவரும் இவ்வரசனுக் குரிய மாந்தையை பெரிப்ளூஸ் ஆசிரியர் குறித்துள்ள மந்தகாரா என்பதே ஆகும் என்று எழுதியுள்ளார்.

அடுத்து, கழாத்தலையார் என்ற புலவர், சேரன் நெடுஞ்சேரலாதன், சோழன் பெரு நற்கிள்ளி ஆகியோர் போர்க்களத்தில் துஞ்சி யது குறித்துக் கையறுநிலையாகப் பாடியுள் ளார் (புறம். 63). குமட்டூர்க் கண்ணனார், பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தை நெடுஞ் சேரலாதன் மீது பாடியுள்ளார் என்று முன்பே பார்த்தோம். கழாத்தலையார் என்ப வரும் குமட்டூர்க் கண்ணனார் என்பவரும் எனவே ஒரே காலத்தைச் சார்ந்தவர்களாக ஆகின்றனர். இச் சேர அரசன் நாற்பத் தெட்டு ஆண்டு ஆண்டதாகப் பதிற்றுப் பத்து இரண்டாம் பதிகம் கூறும்.

அடுத்த அரசனாகப் பதிற்றுப்பத்தில் காணப்படுபவன் பல்யானைச் செல்கெழு குட்டுவனாவான். இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆண்டபொழுது சேர நாட்டின் மற்றொரு பகுதியை ஆண்டவனாகக் காணப்படுகின்றான். இமயவரம்பன் தம்பி யாகிய இவன் உம்பற்காட்டில் தன்னாட்சியை நிறுவி அகப்பா என்ற இடத்தை சோழ அரச ரிடமிருந்து கைப்பற்றியவன். இவன் இருபத் தைந்தாண்டுகள் செங்கோலோச்சினான்; கொங்கு நாட்டையும் வெற்றிகண்டவன். இளங்கோவடிகளும் இவ்வரசனைத் தம் காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார். தம்மைப் பாடிய புலவர் துறக்கம்புகப் பத்து வேள்வி- கள் செய்து, பத்தாவது வேள்வியினிறுதியில் புலவர் பாலைக் கௌதமனார் தம் மனைவியுடன் மறைந்தார் என்று பதிகத்தில் காணப் படுகிறது.

பதிற்றுப்பத்தில் காணப்படும் அடுத்த சேர அரசன் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்பவனாவான். இவன் இமயவரம்ப னுக்கு வேளாவிக்கோமான் மகள் மூலமாகப் பிறந்தவன். நன்னன் என்பவனிடமிருந்த சேரநாட்டிற்குரிய பூழி நாட்டை மீட்டுக் கொண்டான். வாகைப் பெருந்தலை என்ற இடத்தில் இப்போர் நிகழ்ந்தது. நன்னன் அப்போரில் மாண்டான். இச் செய்திகள் அனைத்தும் கல்லாடனார் என்ற புலவர் பாடிய அகநானூற்றுப் பாடலில் (அகம். 199) உள் ளன. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் குறித்துப் பதிற்றுப்பத்தில் (பதிற்.4) காப்பியாற்றுக் காப்பியனார் என்ற புலவர் பாடியுள்ளார். நெடுமிடல் என்ற சிற்றரச னொருவன் சேரநாட்டில் ஒரு பகுதியைக் கைப்பற்றினனாக, நார்முடிச் சேரல் அவன் மேல் பகைகொண்டு அவனைப் போரில் வெற்றிகண்டான். இந் நார்முடிச்சேரல் என்ற சேரன் இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

வரலாற்றுச் சிறப்பிற்கும், பல ஆராய்ச் சிக்கும் காரணமாக விளங்கும் சேரன் செங்குட்டுவனே அடுத்துப் பேசப்படுகின்ற சேர அரசனாகப் பதிற்றுப்பத்தில் காணப்படு கின்றான். இவன் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனாவான், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலும் ஆடுகோட்பாட்டுச் சேர லாதனும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாத னுக்கும் வேளாவிக் கோமான் பதுமன் தேவிக்கும் பிறந்தவர்கள். சேரன் செங்குட்டு வன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாத னுக்கும் சோழன் மணக்கிள்ளி மகளுக்கும் பிறந்தவன்(பதிற்.5ம் பதிகம்). செங்குட்டுவன்

வியலூரை வெற்றி கண்டவன். சோழர் குடியைச் சார்ந்த ஒன்பதின்மருடன் நேரி வாயில் என்ற இடத்தில் போரிட்டு வெற்றி கண்டதாகச் சிலம்பு, பதிற்றுப்பத்து ஆகிய இருநூல்களும் கூறும். சோழர் ஒன்பதின் மரை வென்று, நெடுங்கிள்ளிக்கு அரசினைப் பெற்றுக் கொடுத்தான் (சிலம்பு. காதை 27). எவ்வாறு சேரநாடு உதியன், பொறையன் என்ற இரு மரபினரால் ஆட்சி செய்யப் பட்டதோ, அதேபோன்று சோழ நாட்டினையும் புகார், உறந்தை என்ற இரு தலைநகரங்களிலிருந்து சோழ மரபினர் இருவர் ஆண்டு வந்தனர். சோழன் கரிகால் வளவனுக்குப் பின் இவ்வாறு மாறியது. பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்த பின்பு, வெற்றிவேற் செழியன் அரசுக்கட்டிலேறினான். செங்குட்டுவன் வடதிசை சென்றபொழுது வெற்றிவேற் செழியன் முடிசூட்டிக்கொண்டான். கரிகால் வளவன் காலத்தில் சோழ நாடு அவ்வாசனது ஒரே வெண்கொற்றக் குடையின் கீழ் சிறப்புற்றுத் திகழ்ந்ததாகக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்றபுலவர் பட்டினப்பாலை என்ற பாடலில் கூறியுள்ளார். நெடுங்கிள்ளி துஞ்சிய பின்பு, பெருநற்கிள்ளி ஆளத் தொடங்கியிருக்கலாம். மலையமான் என்பவனே உறையூர்ச் சோழருக்குப் போருதவி அளித்து வந்தான். இவன் இறந்துபடவே, இளமைப் பருவத்திலிருந்த பெருநற்கிள்ளியைப் புகார்ச் சோழர்கள் நாட்டைவிட்டுத் துரத்த நெடுங்கிள்ளி மலையமானுக்குரியதாயிருந்த முள்ளூர் மலையில் சென்று மறைந்து கொண்டான். மலையமான் மகன் திருக்கண்ணன் என்பவன் அவர் மறைந்து வாழ உதவி புரிந்தான். இச் செய்தியை மாறோக்கத்து நப்பசலையார் என்ற புலவர் பாடிய பாடல் (புறம். 174) உணர்த்தும். தன் தாய்மாமன் மகனை பெருநற்கிள்ளி இவ்வாறு மறைந்தொழுகுவதைக் கேள்வியுற்று, சேரன் செங்குட்டுவன், நேரிவாயில் என்ற இடத்தில் சோழர் குடிக்குரியோர் ஒன்பதின்மரை போரில் வென்று பெருநற்கிள்ளிக்கு அரசினை மீட்டுக் கொடுத்தான். இவனே இராசசூயயாகம் செய்து இராசசூயயாகம் வேட்ட பெருநற்கிள்ளி எனச் சிறப்புப் பெற்றான் எனலாம்.

சேரன் செங்குட்டுவன் சேரநாட்டை ஆண்டுவரும்பொழுது, பாண்டியநாட்டை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும், அவனுக்குப் பின் வெற்றிவேற் செழியனும் ஆண்டனர் என்று சிலம்பிலிருந்து (நீர்ப் படைக் காதை. 184) அறிந்துகொள்ளலாம், சேரன் செங்குட்டுவனும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் ஒரே காலத்தைச் சார்ந்தவர்கள். வெற்றிவேற் செழியனை அடுத்து, அகநானூற்றுத் தொகுப்பித்தோனான பாண்டியன் உக்கிரப் பெருவழுதி காணப்படுகிறான். இவனே சங்க காலப் பாண்டியர்களில் இறுதி அரசனாவான். இப் பாண்டியன் சேர மரபைச் சார்ந்த வேங்கை மார்பன் என்பானை கானப்பேரெயில் என்ற இடத்தில் வெற்றி கண்டவன், எனவே அவன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி எனச் சிறப்பிக்கப்பட்டான். இப்பாண்டிய அரசனும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒரே காலத்தைச் சார்ந்த சிறந்த நண்பர்களாகத் திகழ்ந்தனர் என்பதை ஔவையார் பாடல் (புறம். 367) விளக்கி நிற்கும்.

சேரன் செங்குட்டுவன் 55 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். ஆறாம் பத்தின் தலைவனாக ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் காணப் படுகிறான். இவன் உதியன் மரபைச் சார்ந்தவன். இவனைக் குறித்துக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் சிறப்பித்துப் பாடியுள்ளார். இச் சேரன் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரனுக்கும் சேரன் செங்குட்டுவனுக்கும் தம்பியாவான். இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்-வேளாவிக்கோமான் மதுமன் தேவி—மகனாவான். இவன் 38 ஆண்டுகள் அரசாண்டான்,

பொறையன் மரபைச் சார்ந்த அரசர்கள் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இவர்கள் சேரநாட்டின் வட பகுதியை ஆண்டு வந்தனர். ஒள் வாட்கோப் பெருஞ்சேரலிரும்பொறையை அடுத்துச் சேரன் அந்துவருசேரலிரும்பொறை காணப் படுகின்றான். இவன் ஏழாம் பத்தின் பதிகத்தில் செல்வக் கடுங்கோ வாழியாதனின் தந்தையாகக் குறிக்கப் பெற்றிருக்கின்றான், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவர் இவ்வரசனை நேர்முகமாகப் பாடியுள்ளார். இவ்வரசன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவன். இரண்டாம், ஏழாம்பத்தின் பதிகங்களிலிருந்து இவ்விரு சேர அரசர்களின் மனைவியரும் வேளாவிக் கோமான் மக்கள் என்பதை அறிந்துகொள்ளலாம்.

இரும்பொறை மரபினரைச் சார்ந்த அடுத்த அரசன் பெருஞ்சேரல்இரும்பொறை யாவான். இவன் எட்டாம் பத்தின் பாட்டு

டைத் தலைவனாவான். இப்பத்தைப் பாடிய புலவர் அரிசில் கிழாராவார். இவ்வரசன் பெற்றோர் செல்வக்கடுங்கோ வாழியாதனும் வேளாவிக்கோமான் பதுமன் தேவியுமாவார். இவ்வரசன், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், சேரன் செங்குட்டுவன் ஆகியோர் ஒன்று விட்ட அண்ணன் தம்பி முறையாவர்.

பெருஞ்சேரலிரும்பொறை, அதியமான் அஞ்சியைப் போர்க்களத்தில் வெற்றி பெற்றவன்; அவன் இரு பெரு வேந்தரையும் வெற்றி கண்டவன்; அதியமானுக்குரிய தகடூரையும் கைப்பற்றியவன். இரு பெரு வேந்தரும் யாரெனக் குறிக்கப்படவில்லையாயினும் அவர்கள் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியாகவும், சித்திமாடத்துத் துஞ்சிய நன்மாறனாகவும் இருக்கக்கூடும் என்று உய்த்துணரலாம். இதே புலவர் அரிசில்கிழார் கையறுநிலைத் துறையில், அதியமானைக் குறித்தும் பாடியுள்ளார். மோசிகீரனார் என்ற மற்றொரு புலவரும் இச்சேரனைக் குறித்துப் போற்றிப் பாடியுள்ளார் (புறம் 5). ஔவையார் என்பாரும் அதியமான் மேல் பல பாடல்களை இயற்றியுள்ளார். பெருஞ்சித்திரனார் என்ற பிறிதொரு புலவரும் அதியமானை நேர்முகமாக விளித்துப்பாடியுள்ளார், எனவே ஔவையார், அரிசில் கிழார், பெருஞ்சித்திரனார் ஆகியோர் ஒரே காலத்தைச் சார்ந்தவர்களாவர்.

பாண்டிய மரபில் பேசப்படுகின்ற அடுத்த அரசன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியாவான். இவனைக் குறித்துக் காரிகிழார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார், நெடும்பல்லியத்தை ஆகியோர் சிறப்பித்துள்ளனர். இப் புலவர்கள் அப் பாண்டிய அரசன் வாழ்ந்த காலத்தைச் சார்ந்தவர்கள்,

சோழ மரபைச் சார்ந்தவனாகக் கரிகால் வளவன் காணப்படுகின்றான். கருங்குழலாதனார் (புறம். 7), கழாத்தலையார் (புறம். 65), வெண்ணிக்குயத்தியார் (புறம். 66) மாமூலனார் (அகம். 55), கடியலூர் உருத்திரங்கண்ணனார் (பட்டினப் பாலை), முடத்தமாக்கண்ணியார் (பொருநராற்றுப்படை) நக்கீரர் (அகம். 141), பரணர் (அகம். 125, 376) ஆகியோர் சிறப்பித்துள்ளனர். இச்சோழன் வெண்ணி என்ற இடத்தில் பெருஞ்சேரலாதனுடன் நடத்திய போரில் வெற்றி பெற்றது குறித்தும், சேர அரசன் வடக்கிருந்து உயிர் நீத்தது குறித்தும் அவர்கள் பாடிய பாடல்கள் காணப்படுகின்றன. பரணர், கரிகால்வளவன் வாகைப் பெருந்தலையில் ஒன்பதின்மரை வெற்றி கண்ட செய்தி குறித்துப் பாடியுள்ளார்.

ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர் புறநானூற்றில் (புறம். 10) இளஞ்சேட் சென்னி என்ற சோழ அரசனைக் குறித்துப் பாடியுள்ளார். இவனே பாமுளூர் எறிந்த இளஞ்சேட் சென்னி என்றும் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியென்றும் அழைக்கப்படுகின்றான் (புறம். 203, 270).

இதே தலைமுறையைச் சார்ந்த மற்றொரு பாண்டிய அரசன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பவனாவான். இடைக்குன்றூர் கிழார் என்ற புலவர் இவன் தனியொருவனாய் எழுவரை வென்ற செய்தியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் (புறம். 76, 79). கல்லாடனாரும் இதே நிகழ்ச்சியைக் குறித்துப் பாடல் இயற்றியுள்ளார் (அகம். 209, புறம். 23, 25 371). நக்கீரர் அவ்வெழுவர் யாவர் என்பதைத் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். (அகம். 36). திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவெண்மான், பொருநன், சோழன், சேரன், என்று அவ்வெழுவர் காணப்படுகின்றனர். இப் பாண்டிய அரசன் முசிறியை வெற்றி கண்டதாகவும், கொங்கர்களை வென்றதாகவும் அகநானூற்றுப் பாடலொன்று (அகம், 253, 162) கூறும்; பத்துப் பாட்டில் ஒன்றான நெடுநல்வாடையும், இப் பாண்டியனையே போற்றும். பரணர் என்ற புலவரும் இப் பாண்டியனைப் 'பசும்பூண் பாண்டியன்' என்று போற்றுகின்றார் (அகம். 162, குறுந். 303) பரணர், அதிகன் என்பவன் அப் பாண்டிய அரசனின் அடைத் தலைவனாக விளங்கினான் என்று குறித்திருப்பதால், அவர் குறிக்கும் பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாக இருக்க வேண்டும் என்று கூறலாம்.

இப் பாண்டியனை, மதுரைக் கணக்காயனார் (அகம். 338), பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார் (நற். 387) மாங்குடி மருதனார் (புறம். 26, 372) ஆகியோரும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். மாங்குடி மருதனார் புறநானூற்றில் (புறம். 24, 26, 372) இப் பாண்டியன் எவ்விக்குரிய மிழலைக் கூற்றத்தையும், முதுவேளிர்க்குரிய முத்தூற்றுக் கூற்றத்தையும் வெற்றி கண்டதாகப் பாடியுள்ளார். மாங்குடி மருதனரால் பாடப்

பெற்ற மதுரைக் காஞ்சி இப் பாண்டியன் மேல் பாடப்பட்டதாகும். புறநானூற்றில் (புறம். 7) குடபுலவியனார் இதே அரசனைப் புகழ்ந்துள்ளார். தலையாலங்கானப் போரை யும் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஈழத்துப் பூதன்தேவனார் (அகம். 231), ஆலம் பேரிசாத்தனார் (அகம். 175). இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் (சிறுபாண். 61, 67), தாயங்கண்ணனார் (அகம். 335), மருதன் இளநாகனார் (நற். 39), முதுகூத்தனார் (அகம். 137), விற்றூற்று வண்ணக்கன் தத்தனார் (நற்.298) ஆகியோர் இவனைச் சிறப்பித்துள்ளனர்.

அடுத்து இக் காலத்தில் வாழ்ந்த வள்ளல்கள், குறுநில மன்னர்கள், அவர் களைப் பாடிய புலவர்கள் குறித்த விளக்கம் காணப்படும்.

பேகன் என்ற வள்ளல் குறித்து, அரிசில் கிழார், பரணர், கபிலர், பெருங்குன்றூர் கிழார் ஆகியோர் இவனை நேர்முகமாக விளித்துப் பாடியுள்ளனர் (புறம். 146, 142-145, 143, 147) இப் புலவர்கள் இவ் வள்ளலைப் பாடிப் பரிசில் பெற்றவர்கள்.

பேகன் அடுத்து ஆய் அண்டிரன் என்ற வள்ளலை ஏணிச்சேரி முடமோசியார் (புறம். 127, 128, 129, 130), குட்டுவன் கீரனார் (புறம். 240), துறையூர் ஓடைகிழார் (புறம். 136), காரிக்கண்ணார் (நற். 237), இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் (சிறுபாண் 96, 99), கொற்றங் கொற்றனார் (அகம். 69), பரணர் (அகம். 152, 198), மோசிகீரனார் (குறுந். 84), ஆகியோர் போற்றிப் பாடி யுள்ளனர். இவ் வாய்யண்டிரன் பொதில் மலைத் தலைவனாவான்.

காரி என்ற வள்ளலை, அம்மூவனார் (குறுந். 84), கபிலர் (அகம் 35), கல்லாடனார் (குறுந். 312, நற். 320, புறம் 122), கோவூர் கிழார் (அகம், 209) மாறோக்கத்து நப்பசலையார் (புறம். 646) வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் (புறம். 126) நத்தத்தனார் (சிறுபாண். 192, 195) ஆகியோர் புகழ்ந்து பாடியுள்ளனர். கபிலர் பாடலிலிருந்து முள்ளூர்த் தலைவன் காரி என்றும், காரி என்பானும் ஓரி என்பானும் ஒரே காலத்தைச் சார்ந்தவர்களென்றும் புலனாகும். கல்லாடனார் என்ற புலவரும் கொல்லிமலையை உரிமையாகப் பெற்ற ஓரியைக் காரி என்பவன் அழித்துக் கொல்லி மலையைச் சேரனுக்களித்தான் என்றும் குறிப்பிட்டுள்ளார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், காரி மக்களை யானை யினால் இடறிக் கொல்ல இருந்தபொழுது அம் மக்களைத் தாம் காப்பாற்றியதாகக் கோவூர்கிழார் என்னும் புலவர் பாடியுள்ளார்.

இக் காலத்தைச் சார்ந்த மற்றொரு வள்ளல் அதியமான் அஞ்சியாவான். ஔவை யார், அரிசில்கிழார் ஆகியோர் இவனை விளித்துப் பாடியுள்ளனர். ஔவையார் பாட லிலிருந்து, பரணரும் அதியமான் அஞ்சியைப் பாடியிருக்க வேண்டும் எனப் புலனாகின்றது. ஆயின் பரணர் பாடிய அப்பாடல் சங்கப் பாடல்களில் இடம் பெறவில்லை. தொண்டை மான், அதியமானுடன் போர் செய்ய இருந்த பொழுது ஔவையார் தொண்டைமானிடம் தூதாகச் சென்று அப்போர் நடைபெறாமல் செய்த செய்தி அனைவரும் அறிந்த ஒன்று. அரிசில்கிழார் தகடூர் என்ற இடத்தில் ஒரே போரில் வெற்றியடைந்து பெருஞ்சேரலிரும் பொறை குறித்தும், தோல்வியடைந்த அதிய மான் அஞ்சி குறித்தும் பாடல்கள் பாடியுள் ளார். பரணர் அஞ்சி அத்தை மகள் நாகை யார் ஆகியோர் இவனைக் குறிப்பிட்டுள்ள னர் (அகம். 372, 352).

அடுத்து இதே காலத்தைச் சார்ந்த கொல்லி மலைத் தலைவனான ஓரி என்ற வள் ளலை கல்லாடனார், பரனர், கழைதின் யானை யார், கபிலர், வன்பரணர், நப்பாலத்தனார், நல்லூர், நத்தத்தனார், ஆகியோர் பாடியுள்ள னர். தோட்டி மலைத் தலைவனான நள்ளி குறித்து வன்பரணர், கபிலர், பரணர், நச்செள் ளையார், நத்தத்தனார், பெருஞ்சித்திரனார் ஆகி யோர் புகழ்ந்து பாடியுள்ளனர்.

எவ்வி என்பானும் இத் தலைமுறை யைச் சாரந்தவனே. கபிலர் (புறம். 202), குடவாயிற் கீரத்தனார் (அகம். 365), நக்கீரர் (அகம்,205), பரணர் (அகம். 266, குறுந்.19) மாங்குடி மருதனார் (புறம். 233, 234): மாமூலனார் (புறம். 233), வெள்ளெருக்கிலை யார் (அகம். 126) ஆகியோர் இவனைச் சிறப் பித்துள்ளனர். நக்கீரர் தன பாடலில் எவ்வி, திதியன், அன்னி முதலியோர் ஒரே காலத்தைச் சார்ந்தோர் என்று கொள்ளத் தக்க வகையில் செய்திகளைக் குறித்துள்ளார். பரணர் (அகம். 196, 262), மாமூலனார் (அகம். 331) ஆகியோரும் இச் செய்தியினைத் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். கயம

னர். வெள்ளி வீதியார் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் போன்றோரும் இவனைப் பாடி யுள்ளனர்.

நன்னன் என்பவனைக் குறித்துச் சங்கப் பாடல்களில் போற்றியுள்ளனர் புலவர்கள். இவன் பாழி மலைத் தலைவன். பாரம் என்ற இடத்தின் தலைவனாகவும் இவன் சிறப்பிக்கப் பட்டுள்ளான். பரணர் பறம்பு மலையும் அவ னுக்குரியதாக இருந்தது எனப்பாடியுள்ளார். பெண் கொலை புரிந்த நன்னன் என இவன் குறுந்தொகைப் பாடலொன்றில் (குறுந்.292) கூறப்பட்டுள்ளான்.

அகநானூற்றில் கல்லாடனார் (அகம். 199), களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் வாகைப் பெருந்துறையில் நன்னனை வீழ்த்திய செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். கல்லாடனார் (அகம். 113) மாமூலனார் (அகம். 61, 295, 311, 359) ஆகியோர் வேங்கடத் தலைவனான எவ்வி என்பானைப் பாடியுள்ளார்.

இரண்டாம் தலைமுறையைச் சார்ந்த புலவர்களாகப் பின்வருபவர்களைக் கூறலாம். காரிகிழார், நெடும்பல்லியத்தனார், நெட்டி மையார், நெடும்பல்லியத்தை, குமட்டூர்க் கண்ணனார், கபிலர், படுமரத்து மோசிகீர னார், கழாத்தலையார், வெண்ணிக் குயத்தியார், பாண்டியன் ஆரியப் படைகடந்த நெடுஞ் செழியன், குட்டுவன்கீரனார், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், துறையூர் ஓடை கிழார், கடியலூர் உருத்திரங் கண்ணனார், தொண்டைமான் இளந்திரையன். முடத் தாமக் கண்ணியார், பேய் மகள் இள வெயினி, பாலைபாடிய பெருங்கடுங்கோ, மருதம்பாடிய இளங்கடுங்கோ, மதுரைக் கணக்காயனார், தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன், குடபுலவியனார், கூடலூர்கிழார், மாங்குடி மருதனார், குறுங் கோழியூர்கிழார், இடைக்குன்றூர்கிழார், கல் லாடனார். நக்கீரர், வெள்ளெருக்கிலையார், அரிசில்கிழார், காப்பியாற்றுக் காப்பியனார், பாலைக் கௌதமனார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், பாரிமகளிர், நக்கண்ணை யார், சாத்தந்தையார், வெள்ளிவீதியார், ஆதிமந்தி தூங்கலோரியார் ஆகியோர்.

மேலே கூறப்பட்டுள்ள புலவர்கள், தமிழகத்தைச் சார்ந்த சேர, சோழ, பாண்டி யர் குலங்களைச் சார்ந்த சமகால அரசர்களைப் பாடியவராவர்கள். அவர்களில்பரணர், பெருங் குன்றூர் கிழார் இருவரும் மற்றவரைக் காட்டிலும் மூத்தவர்கள் என்பதைக் காண லாம். கபிலரால் விளித்துப் பாடப்பட்ட செல்வக்கடுங்கோ வாழியாதனைக் குண்டுகட் பாலியாதனார் என்ற மற்றொரு புலவரும் விளித்துப் பாடியுள்ளார். எனவே இவ்விரு வரும் ஒரே காலத்தைச் சார்ந்தவராகின்றனர். பரணர் பாடல்களை நோக்குமிடத்து அவர் நீண்ட காலம் வாழ்ந்தவராகக் காணப்படு கின்றார். அவர் மூவேந்தர்களைப் பாடிய தோடல்லாமல் நன்னி, நன்னன், பேகன், மலையமான், நெடுமிடல், ஓரி, ஆய் ஆகிய குறுநில மன்னர்களையும் வள்ளல்களையும் பாடியுள்ளார். பெரும்பெயர் வழுதியை அடுத்து ஆண்ட பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய காரி கிழார் நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார் ஆகிய புலவர்கள் வேறு அரசர்மேல் பாடிய தாகக் கொள்வவற்குச் சங்கப் பாடல்களில் சான்று இல்லை. எனவே பரணரைவிட முதுமை மிகுந்தவராக இம் மூவரையும் கூறலாம்.

முடத்தாமக் கண்ணியார், கருங்குழ லாதனார் இருவரும் சோழன் கரிகால் வள வனை விளித்துப் பாடியுள்ளனர். பெருங் குன்றூர்கிழார், கரிகால்வளவன் தந்தையான சோழன் இளஞ்சேட் சென்னியையும், சேர மரபைச் சார்ந்த இளஞ் சேரலிரும் பொறை யினையும் பாடியுள்ளார். குமட்டூர்க் கண்ண னார், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மேல் இரண்டாம் பதிற்றுப்பத்தைப் பாடியுள்ளார். இச்சேரன், செங்குட்டுவன் தந்தையாவான். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் அந்து வஞ் சேரலிரும்பொறையை விளித்துப் பாடி யுள்ளார். இச்சேரனே செல்வக் கடுங்கோ வாழியாதனின் தந்தையாவான். கபிலர் இவ் வந்துவரு சேரனின் மகனான செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடியுள்ளார். இக் கபிலர், பாரி இறந்தபின் செல்வக் கடுங்கோ வாழியாதனையன்றி வேறு ஒருவர் மேலும் பாடல் இடற்றவில்லை, அம்மூவனார் (அகம் 35) தம் அகப்பாடல்களில் காரியைக் குறித் தும், குட்டுவன் மாந்தை குறித்தும் பாடி யுள்ளார். இச் சேரன் டல்யானைச் செல் கெழு குட்டுவனாக இருக்க வேண்டும். அவ் வாறு கொள்ளின், இப் புலவர் அவ்விருவரும் வாழ்ந்த காலத்தைச் சார்ந்தவராகவோ, அல் லது அவர்கள் காலத்துப் பின்னுள்ள காலத் தைச் சார்ந்தவராகவோ இருக்க வேண்டும் என்று கூறலாம்.

பாலைக் கௌதமனார், பல்யானைச் செல் கெழு குட்டுவன் மீது மூன்றும் பதிற்றுப் பத்தைப் பாடியுள்ளார். இவன் இமயவரம் பன் நெடுஞ்சேரலாதன் தம்பியாவான்,

மோசிகீரனார், அதியமான் அஞ்சியை வென்ற தகடுரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறை மேல் பாடல் இயற்றியுள்ளார். ஔவையாரை ஆதரித்த வள்ளல் இவ் வதியமான் அஞ்சியாவான். அரிசில் கிழாரும், இவ் விருவரைக் குறித்தும் பாடல்கள் சிறப் புறப் பாடியுள்ளார். மோசிகீரனார், ஆய் அண்டிரன் என்ற வள்ளலையும் விளித்துப் பாடியுள்ளார். இவ் வாய் அண்டிரனைக் குட்டுவன்கீரனார் (புறம். 24), துறையூர் ஓடைகிழார் (புறம். 136), ஆகியோர் பாடி யுள்ளார். இப் புலவர்கள் அனைவரும் ஒரே குழுவைச் சார்ந்தவர்கள். பாலை பாடிய பெருங்கடுங்கோவால் பாராட்டப்பட்டுள்ள கொண்கானங்கிழானை, மோசிகீரனாரும், பாடி யுள்ளார் (நற். 391). இவனுக்குரிய எழில் குன்றத்தைக் குறிப்பிட்டுள்ளார். பொன்படு கொண்கானத்தை களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரல் கொண்கானங்கிழார் நன்னன் வெற்றி கண்டு கைப்பற்றினான். பாலை பாடிய பெருங்கடுங்கோ என்பவனே பெருஞ் சேரலிரும்பொறை என்றும், இளஞ்சேர லிரும்பொறையே, மருதம் பாடிய இளங் கடுங்கோ என்றும் பன்னீர் செல்வம் என்பவ ரால் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.[4] புற நானூற்றில், இப்பாலை பாடிய பெருங் கடுங்கோ பேய்மகள் இளவெயினி என்ற புலவரால் பாராட்டப்பட்டுள்ளான். இவ் வரசன் செல்வக்கடுங்கோவை யடுத்துக் காணப்படுகின்ற அரசனாகப் புறநானூற்றில் உள்ளான். கூடலூர் கிழார், யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையைப் பாடி யுள்ளார். இவன் இளஞ்சேரலிரும் பொறையை அடுத்து அரசாண்டவன் எனக் கருதப்படுகிறான். இளஞ்சேரலிரும்பொறை, இளம்பழையன் மாறன் என்பவனையும் பெருஞ்சோழன் என்பவனையும் வென்ற தாகக் கூறப்படுகிறான். அரிசில்கிழார், இளஞ் சேரலிரும்பொறையும், பேகன் என்ற வள்ள லையும் பாடியுள்ளார் (புறம். 146). இவர்க ளனைவரும் ஒரு குழுவைச் சார்ந்தவர்களா கின்றனர்.

மூன்றும் தலைமுறையைச் சார்ந்த சேர அரசன் இளஞ்சேர லிரும்பொறையாவான். அவன் ஐந்து எயில்களை வென்றவன்; பெருஞ்சோழன், இளம் பழையன் மாறன் ஆகியோரை வென்றவன். இவன் மாம னையே தன் அமைச்சனாக ஆக்கிக் கொண் டான். தன் அரண்மனையில் பூத சதுக்கத் தினை நிறுவி, பல யாகங்களையும் செய்தான் இவை பதிகம் கூறும் செய்திகளாகும். அவன் கொங்கு, பூழி, மாந்தை ஆகியவற்றிற்குத் தலைவனாக இருந்தான். இச் சேரன், இவன் தந்தை பெருஞ்சேரலிரும்பொறை புத்திர காமேஷ்டியாகம் செய்ததன் பயனாகப் பிறந்த வன். ஆகையால் இவனைப் பல ஆண்டுகள் வாழவேண்டும் என்று வாழ்த்துகிறார். பெருஞ் சோழன் என்பவன் கோப்பெருஞ்சோழனே என்று கூறலாம். கூடலூர் கிழாராலும், குறுங்கோழியூர் கிழாராலும் பாடப்பட்டுள்ள மாந்தரஞ்சேரலிரும்பொறை என்பவனே கிடைக்காத பத்தாம் பத்தின் தலைவனாக இருக்கவேண்டும் எனக் கருதப்படுகிறது.

பாண்டியன் வரிசையில் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியனையடுத்து உக்கிரப் பெருவழுதி காணப்படுகின்றான். இப் பாண்டியன் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சேரமான் மாரி வெண்கோ ஆகியோர் ஒருங்கிருந்த பொழுது ஔவையார் என்ற புலவர் இம் மூவரையும் பாடியுள்ளார். ஐயூர் மூலங்கிழார் (புறம்.21) வேங்கைமார்பனை வெற்றி கண்ட உக்கிரப் பெருவழுதியின் வெற்றிச் சிறப்பைப் பாராட்டியுள்ளார். இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியை உலோச்சனார் என்ற புலவரும் பாண்டரங்கண்ணனார் என்பவரும் சிறப்பித்துள்ளனர். பேரிச்சாத்தனார், இச் சோழனுக்குப் போரில் துணைபுரிந்த தேர் வண்மலையனை (காரி) குறிப்பிட்டுள்ளார் (புறம். 115).

இவ் வரசருக்குப் பின் சோழ, பாண்டிய நாட்டுப் பகுதிகள் பல பிரிவுகளாகத் தொடங்கின. பாண்டிய மரபில் வெள்ளியம் பலத்துத் துஞ்சிய மாறன்வழுதி, பாண்டியன் கூடாகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி ஆகி யோர் காணப்படுகின்றனர். சோழர் மரபில், சோழன் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, குராப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி, சேட்சென்னி, குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் ஆகி யோர் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். சேரர் மர பில் சேரமான் குட்டுவன் கோதை காணப் படுகின்றான். இச் சேரனுடன் பிட்டங் கொற்றன் தொடர்பு படுத்திப் பேசப்படு கின்றான். கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் (புறம். 54, 61, 167) மருதன் இளநாகனார் (புறம், 57, 58, 169, 171), ஒரு சிறைப் பெரியனார் (புறம். 52,55, 138): ஆகியோர் மேலே கூறிய செய்தி களைக் கூறியுள்ளனர்.

அடுத்து ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் காணப்படுகின்றான். ஆலங்கானப் போரில் தோல்வியடைந்த திதியன் என்பானை இப் பாண்டியன் இறந்த காலத்தில் தாம் பாடிய பாடலில் (அகம். 36) குறிப்பிட்டுள்ளான்.

ஆவூர் மூலங்கிழார் (புறம். 196) காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் (புறம் 51) நக்கீரர் (புறம், 56), மருதன் இளநாகனார் (புறம். 55), வடம் வண்ணக்கன் பேரிசாத்தனார் (புறம். 198), ஆகியோர் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியுள்ளனர். இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடிய ஆவூர் மூலங்கிழார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவள்வனையும் (புறம். 40), பாடியுள்ளார். இச் சோழ அரசனை, ஆடுதுறை மாசாத்தனார் புறம். 227), ஆலத்தூர் கிழார் (34,36,39) இடைக்காடனார் (புறம். 42), ஐயூர் முடவனார் (புறம். 228), கோவூர் கிழார் (புறம் 41,46,70), தாயங்கண்ணனார் (புறம். 397), நல்லிறையனார் (புறம். 393), மாறோக்கத்து நப்பசலையார் (புறம். 37, 39, 226), வெள்ளைக்குடி நாகனார் (புறம். 35), ஆகியோர் விளித்து நேர்முகமாகப் பாடியுள்ளனர். இந்த அரசனைப் பாடிய கோவூர் கிழார், (புறம் 373) சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திரு மாவளவனைப் போற்றியுள்ளார்; இதே சோழனை உறையூர் மருத்துவன் தாமோதரனார் (புறம். 60), காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் (புறம். 197) கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் (புறம். 197) விளித்துப் பாடியுள்ளனர். மேலே கூறப்பட்ட புலவர்களும் அவர்களால் பாடப்பட்டோரும் (விளித்து) ஒரே காலத்தைச் சார்ந்தவர்களாகின்றனர்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை நக்கீரர் தம் இளம் வயதிலும், இளவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைத் தம் முதுமைப் பருவத்திலும் பாடியிருக்க வேண்டும். இவ்விரு பாண்டியர்கள் ஆண்ட இடைப் பகுதியில உக்கிரப் பெருவழுதி ஆட்சி செய்திருக்க வேண்டும். நக்கீரரால குறிப்பிடப்பட்டுள்ள வழுதி என்பானும் கோதை என்பானும் முறையே பாண்டியன் உக்கிரப் பெருவழுதியையும் கோக்கோதை மார்பனையும் உணர்த்தி நிற்கும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர் கிழார், இடைக்காடனார், ஆலத்தூர் கிழார், ஆவூர் மூலங்கிழார், ஆடுதுறை மாசாத்தனார், மாறோக்கத்து நப்பசலையார், வெள்ளைக்குடி நாகனார், ஐயூர் முடவனார் ஆகியோர் நேர்முகமாக விளித்துப் பாடியுள்ளனர்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திரு மாவளவனையும், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியையும், காரிக் கண்ணனார் என்பவர் பாடியுள்ளார். உறையூர் மருத்துவன் தாமோதரனார் என்ற புலவரும் (புறம். 60) இச் சோழனைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

பாண்டிய இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை நக்கீரர், பாடியுள்ளார் (புறம். 56) காரிக் கண்ணனாரும் அதே போன்று நேர் நின்று பாடியுள்ளார் (புறம். 57). ஆவூர் மூலங்கிழார். (புறம். 196) மருதன் இளநாகனார் (புறம். 57), வடம் வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் (புறம். 196) ஆகியோரும் இப் பாண்டியனை விளித்துப் பாடியுள்ளனர். பாண்டியன் கூடாகாரத்துக் துஞ்சியமாறன் வழுதியை ஐயூர் முடவனாரும் (புறம். 55) மருதன் இளநாகனாரும் (புறம். 198) விளித்துப் பாடியுள்ளார்.

சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறைக்கும் சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்குமிடையே நடந்த போரினைக் குறித்து வடம் வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் குறிப்பிட்டுள்ளார் (புறம். 251).

சோழன் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் இத் தலைமுறையினைச் சார்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கோவூர் கிழார் இவர்களைக் குறித்துப் பாடியுள்ளார்.

இக் குழுவைச் சார்ந்த குறுநில மன்னர்களோ, வள்ளல்களோ அவ்வளவு சிறப்பாகக் காணப்படவில்லை. பிட்டங் கொற்றன் என்பவனை உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடியுள்ளார (புறம். 170), இவன் குதிரைமலைத் தலைவனுவான். கருவூர்க்கதப் பிள்ளைச் சாத்தனார் மருத இளநாகனார் (புறம். 170) ஆகியோரும் இவனை விளித்துப் பாடியுள்ளனர். இவன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவன் என்று கொள்ள கலவெட்டுச் சான்று உள்ளது.[5]

சிறுகுடிகிழான் பண்ணன் அடுத்துக் காணப்படுகிறான். சோழன் குளமுற்றத்துத்

துஞ்சிய கிள்ளிவளவனும் இவன் பாராட்டப்பட்டுள்ளான் (புறம். 168). கொற்றங் கொற்றனார் (அகம். 54), கோவூர் கிழார் (புறம். 70) இவனைச் சிறப்பித்துள்ளனர்.

நாஞ்சில் வள்ளுவனை ஒருசிறைப் பெரியனார் (புறம். 137), மருதன் இள நாகனார் (புறம் 139), ஔவையார் (புறம். 318), கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் (புறம். 140) ஆகியோர் நேர்முகமாக விளித்துப் பாடியுள்ளனர்.

காரியின் பின்னோனாக மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் காணப் படுகின்றான். திரையன் என்பவனைக் கடிய லூர் உருத்திரங் கண்ணனாரும் (பெரும்பாணாற் றுப்படை), காட்டூர்கிழார் மகனார் கண்ண னாரும் (அகம். 85), நக்கீரனாரும் (அகம். 340) பாடியுள்ளனர்.

மூன்றாந் தலைமுறையைச் சார்ந்த புலவர் களாகச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மாறோக்கத்து நப்பசலையார், கோவூர் கிழார், கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார், நல்லிறையனார், சோழன் நலங்கிள்ளி, மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், ஆலத்தூர் கிழார், ஆடுதுறை மாசாத்தனார், மாவளத் தான், தாமப்பல் கண்ணனார் இடைக்காடனார், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பூதப்பாண் டியன்தேவி, பேராலவாயார், பாண்டரங்கண் ணனார், வடமவண்ணக்கன் தாமோதரன், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், ஔவை யார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ண னார், மதுரை மருதவிளநாகனார், உலோச்ச னார், பொருந்தில் இளங்கீரனார், கதப் பிள்ளையார், கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்த னார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், வடமவண்ணக்கன் பேரி சாத்தனார், ஆவூர் மூலங்கிழார், ஐயூர் முடவனார் ஆகியோர் விளங்குகின்றனர்.

ஔவையார், சேரமான் மாரிவெண்கோ, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, கானப் பேர் தந்த உக்கிரப் பெருவழுதி ஆகி யோரை விளித்துப் பாடியுள்ளார். இம் மூவரும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை அடுத்தோ அல்லது அவனது முதுமைப் பருவத்திலோ வாழ்ந்தவ ராதல் வேண்டும்.

ஐயூர் மூலங்கிழார் உக்கிரப் பெரு வழுதியை விளித்துப் பாடியுள்ளார். உலோச்சனார், பாண்டரங்கண்ணனார், வடம வண்ணக்கன் பேரி சாத்தனார், ஆகியோர் ஔவையாரால் விளித்துப் பாடப்பட்டுள்ள இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடியுள்ளனர். இவர்கள் அனைவரும் மூன்றாம் தலைமுறையைச் சார்ந்த புலவர்களா வார்கள்.

கோவூர்கிழார், வெள்ளைக்குடி நாகனார், மாறோக்கத்து நப்பசலையார், ஆவூர் மூலங் கிழார், தாயங் கண்ணனார், உறையூர் முதுகண்ணன் சாத்தனார், ஆகியோரில் கோவூர் கிழார் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, நலங் கிள்ளி தம்பி மாவளத்தான், பண்ணன் ஆகியோரைப் பாடியுள்ளார். ஆலத்தூர் கிழாரும் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, கிள்ளி வளவன் மூவரையும் பாடியுள்ளார்; வெள்ளைக்குடி நாகனார், தாயங்கண்ணனார், மாறோக்கத்து நப்பசலையார் ஆகியோரும் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனையும் பாடியுள்ளனர்.

அடுத்து நான்காம் தலைமுறையைச் சார்ந் தவராகக் கோப்பெருஞ்சோழன், பாண்டியன் அறிவுடைநம்பி, சேரமான் குட்டுவன் கோதை ஆகியோரைக் குறிப்பிடலாம். கோப்பெருஞ்சோழனுடன் பிசிராந்தையார் கொண்ட நட்பு யாவரும் அறிந்தது. பொத்தியார், கோப்பெருஞ்சோழனைக் குறித் துப் பாடியுள்ளார். பாண்டியன் அறிவுடை நம்பியைப் பிசிராந்தையார் (புறம். 184) பாடியுள்ளார்.

சேரமான் குட்டுவன் கோதையைக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியுள்ளார் (புறம். 54). சேரன் கணைக்காலிரும்பொறை என்பவன் சோழன் செங்கணான் என்பவனால் தோல்வியடைந் தான். சங்க காலச் சோழர் மரபில் செங்கணானே இறுதிச் சோழனாகலாம். பாண்டியர் வரிசையில் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் இறுதிப் பாண்டிய னாகலாம்.

இத் தலைமுறையைச் சார்ந்த புலவர் களாகக் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தை யார், பொத்தியார், பாண்டியன் அறிவுடை நம்பி, கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூதநாத னார், புல்லாற்றூர் எயிற்றியனார், கணைக்கனார், சேரமான் கணைக்காலியரும்பொறை,

பொய்கையார், சீத்தலைச் சாத்தனார் ஆகி யோர் காணப்படுகிறார்.

ஐந்தாம் தலைமுறையைச் சார்ந்த அரசர்கள் ஒருவரும் காணப்படவில்லையாயினும் வள்ளல்கள் சிலர் உள்ளனர். பெருஞ்சித்திரனாரால் பாராட்டப்பட்டுள்ள குமணன், பெருந்தலைச் சாத்தனாரால் பாராட்டப்பட்டுள்ள இளங்குமணனும் இத் தலைமுறையைச் சார்ந்தவர்கள். நத்தத்தனார், நல்லியக் கோடன் என்பவனைச் சிறுபாணாற்றுப்படையில் பாராட்டியுள்ளார், இவன் காலத்தில் மதுரை, வஞ்சி, உறந்தை ஆகிய தலைநகரங்கள் வறிதாயின எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வுண்மை மூவேந்தர்கள் ஆட்சியின் வீழ்ச்சியினை உணர்த்தும். புறத்திணை நன்னகனார் என்ற புலவரும் இந் நல்லியக் கோடனை விளித்துப் பாடியுள்ளார். ஓய்மான் என்ற வள்ளலைப் புறத்திணை நன்னாகனார் என்ற புலவர் பாடியுள்ளார். கடிய நெடுவேட்டுவனையும் மூவன் என்பானையும் பெருந்தலைச் சாத்தனார் பாடியுள்ளார்.

இத் தலைமுறையைச் சார்ந்தவர்களாகப் பெருந்தலைச்சாத்தனார், புறத்திணை நன்னாகனார், பெருஞ்சித்திரனார், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இதுவரை காணப்பட்ட சான்றுகளை நோக்கின் அரசர்கள், வள்ளல்களையும் அவர்களைப் பாடிய புலவர்களையும் ஐந்து தலைமுறைகளாகப் பிரிக்க இயலும் என்பது விளங்கும். இவர்களனைவரும் கி.பி. முதலிரு நூற்றாண்டுக்குள் அடக்க இயலும் என்பதும் தெளிவு.

டாக்டர் (திருமதி) இந்திரா சுப்புலட்சுமி M.A.Ph.D
தமிழ்த் துறை
பாத்திமா மகளிர் கல்லூரி
மதுரை-625 018

[1] நான்காவது, ஐந்தாவது அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு மலர்.

[2] Inducudan, V. T-, 'The Gaint kitchen in Sangam Monarch: *Indian Express*, 7. September 1969

[3] நான்காவது, ஐந்தாவது அனைத்திந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு மலர்.

[4] *The Hindu* 7 March 1965

சுருக்க விளக்கம்

புறம் : புறநானூறு
பதிற் : பதிற்றுப்பத்து
அகம் : அகநானூறு
நற் : நற்றிணை
சிலம்பு : சிலப்பதிகாரம்
குறுந் : குறுந்தொகை
சிறுபாண் : சிறுபாணாற்றுப்படை

பயன்படுத்திய நூல்கள்

1. சங்க இலக்கியத் தொகுப்பு
2. Sesha Iyer-K G , (1937) The cera Kings of the Sangam period
3. Sivaraja Pillai, K,N . (1932) Chronology of the Early Tamils
4. Krishnaswamy Iyengar, S., (1940) Seran Vanji

தமிழ்ச் சங்கத்தைப் பற்றி...

திருமதி ஜெயலட்சுமி கந்தையா அவர்கள் தமிழ் இசை, நடனத் துறையில் வல்லுனராக விளங்குவதோடு தமிழ்க் கலாசாரத்தை வளர்க்க ஒரு இசை, நடன பயிற்சிப் பள்ளியை இலண்டனில் நிறுவியுள்ளார். இவரது பள்ளியில் பயிற்சி பெற்றுத் தேறிய மாணவிகள் அவ்வப்போது இலண்டன் தமிழ்ச் சங்க மேடையை அலங்கரித்து வந்துள்ளனர்.

இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினரும், தமிழ் அறிஞருமான திரு. வை. முத்துக்குமாரசாமி அவர்கள் பல தமிழ் நூல்களையும், ஆங்கிலத்தில் தமிழ் அறிஞர்களைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டுள்ளார். Sri Lasri Arumuga Navalar A Biographical Study, Writers of Modern Tamil G.W. Thamotharam pillai, Tamil Sages and Seers of Ceylon, ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களுக்கு அஞ்சலி, ரவீந்திரநாத் தாகூரின் மூன்று நாடகங்கள், முதலியன அவரது படைப்புக்கள். அவரது நூல்களில் மூன்று அண்மையில் இலண்டன் தமிழ்ச் சங்கம் நடாத்திய தமிழ் விழாவில் அரங்கேற்றம் பெற்றன.

கடல் கடந்த தமிழர்

டாக்டர் இராஜம்மாள் பா. தேவதாஸ்

> கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும்
> கடல் ஞாலம் ஆகுவனும் யானே—திருவாய்மொழி.

நீலக் கடலையும், பாற்கடலாக்கும் சக்தி மிகுந்தது தமிழ் நிலம். பக்தி மிகுந்த பரத கண்டத்து மக்கள் நீலக்கடலிலும் தெய்வத்தைக் கண்டனர். 'நீலத் திரைக் கடலில் நின் முகம் கண்டேன்' எனக் கண்ணன் முகத்தைக் கடல் வண்ணத்திலே கண்டார் பாரதியார். 'கடல் வண்ணன்' என்றே திருமாலைச் சிலப்பதிகாரம் கூறிப் பெருமைக் கொண்டது. மையோ, மரகதமோ, 'மறி கடலோ, மழை முகிலோ' என இராமனின் கடல் வண்ணத்தை விவரித்துப் பாடினார் கம்பர். 'பிறவிப் பெருங்கடல்' எனக் கூறினார் வள்ளுவர்.

கடல் போலப் பரந்த தமிழிலக்கியம் தோன்றுவதற்கான காலத்திற்கு முன்பே கடல் கடந்த வாழ்க்கையைத் தமிழர்கள் மேற்கொண்டிருந்தார்கள். வரலாற்று அடிப்படையில் தமிழக எல்லை வகுக்கப்பட்ட பிறகு கடல் கடந்த தமிழர்களின் வாழ்வு பற்றிய குறிப்பேடுகளுள் வகுக்கப்பட்டன. வணிகத்தின் வழியாக ஏற்பட்ட கடல் உறவு உலகு தழுவிய நிலையாக வளர்ந்து உயர்ந்தது. வணிகப் பெருமக்கள் தமிழ்நாட்டுப் பண்பாட்டின் தூதுவர்களாக உலக நாடுகளுக்குச் சென்றார்கள். பிறநாட்டு மொழிகளைக் கற்றார்கள். ஆனால் தங்கள் பண்பாட்டிலிருந்து மதக் கொள்கையினை மாற்றாமல் உலக நிலைக் கேற்ப எடுத்துக் கூறிப் பணி செய்தார்கள். 'வாணிகத்தின் பின்னே வாளும், கொடியும், செல்லும்' என்பதற்கேற்ப வலிமையற்றுக் கிடந்த அரசுகளுக்கு, ஆட்சிப் பரப்பும், சிறப்பும், உயர்வும் விரிவதற்கும் உதவினார்கள்.

பழங்காலத்தில் கடல் கடந்து செல்ல உரிமை பெற்றிருந்தவர்கள் ஆண்களே என்பதைத் தொல்காப்பியம்,

'முந்நீர் வழக்கம் மகடூவோடில்லை' என்று காட்டினும் இன்றைய உலக முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி, இலக்கியம், வாழ்க்கை-சூழ்நிலை ஆகியவை மாற்றி விட்டன. 'சென்றிடுவீர் எட்டு திக்கும்' எனப் பாரதியார் புதுமைப் பெண்ணுக்கு ஆணையிட்டிருக்கிறார்.

> உலக வாழ்க்கையி னுட்பங்கள் தேரவும்
> ஓது பற்பல நூல்வகை கற்கவும்
> இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
> யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
> திலக வாணுத லார்நங்கள் பாரத
> தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்

என்று பாரதியார் அறைகூறியிருப்பதைத் தொடர்ந்து வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் திறன் வளரத் தமிழர் கடல் கடந்து, வளமுற வாழ்ந்து வருகின்றனர். 'தேமதுரத் தமிழோசை' உலகெலாம் பரவும் வகைக் கடல் கடந்த தமிழர்கள் லண்டன் தமிழ்ச்சங்கம் அமைத்து, தொண்டாற்றி வருகின்றனர்.

தமிழகத்து வீர மறக்குலப் பெண்ணின் வாழ்க்கைக் காவியம்-பொய்யாய், பழங் கதையாய்ப் போய்விடாமல், நடைமுறையில் மெய்ப்பித்துக் காட்டிய தில்லையாடி வள்ளியம்மை இந்திய விடுதலை வரலாற்றுடன் தன் பெயரை இரண்டறக் கலந்துவிட்டத் தமிழ்ப் பெண் என்று எண்ணும்பொழுது மயிர் சிலிர்த்து நீர் பெருகுகிறது. கரங்கள் குவிகின்றன.

> 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு
> 'காடுமலை நாடும் கடலோடியும் பொருளைத்
> தேடவே வேண்டும் தினகரா'

என்ற நிலையில், வயிற்றுப் பிழைப்புக்காகத் தமிழர், தமிழ்ப் பெண்கள் கடல்கடந்து சென்று பல துன்பங்களைக் கண்ணீர்க் கதையாகப் பாரதியார் கூறுகின்றார்.

'தெற்கு
மா கடலுக்கு நடுவினிலே யாங்கோர்
கண்ணற்ற தீவினிலே—தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்கியும்

இன்று வீராங்கனைகளாக, இங்கிலாந்து போன்ற நாடுகளில் செயலாற்றி வருகின்ருர். நமது நாட்டு விடுதலைக்குப் பிறகு அவர்கள் பெற்றுள்ள விடுதலை பெரிது.

ஆய கலைகள் அறுபத்து நான்கும் கொண்ட தமிழ் மக்கள் இன்று உலகின் பல பாகங்களில் வாழுகின்ருர்கள். இங்கிலாந்து அமெரிக்கா, பிஜித் தீவுகள், மலேசியா, டிரினிடாட், மொரிஷியஸ், தென்னுப்பிரிக்கா போன்ற பல நாடுகளில் தமிழர்கள் சுதந்திர மாக வாழுகிருர்கள். ஒரு காலத்தில் தமிழர் கடல் கடந்து கடாரம் வரை சென்று தமிழர் நாகரிகத்தைப் பரப்பினர். இன்று 'உலகத் தமிழ் மாநாடு'-மேலை நாட்டு நாகரிக அழகு நகரமான பாரிசிலேயே நடைபெற்றது, தமிழுக்கு இந்த வையகம் தந்த வாய்ப்பாகும்.

பழம் பெருமையைப் புது மெருகுடன் வளர்ந்து வரும் புது உலகிற்குத் தருவதற்கு 'லண்டன் தமிழ்ச் சங்கம்' காட்டும் ஆர்வமும் எடுத்துக் கொள்ளும் முயற்சியும் பாராட்டுக் குரியன.

'தமிழரைக் கண்டால் தமிழில் பேசுவோம்
நம் வீட்டுக் குழந்தையிடம் தமிழிலேயே பேசுவோம்'

என்று கடல் கடந்த தமிழர் உணர்ச்சியுடன் வாகை சூடும்போது, தாய்நாட்டின், தமிழர் களின் பெருமையை அளக்கவும் முடியுமோ!

வாழ்க தமிழ்! வெல்க அறம்!!

டாக்டர் (திருமதி) இராஜம்மாள் பா. தேவதாஸ்,
எம்.ஏ.,எம்.எஸ்ஸி.,பிஎச்டி. (ஒஹியோ ஸ்டேட்)
இயக்குநர்-முதல்வர்,
திரு. அவிஞசிலிங்கம் மனையியல் கல்லூரி,
கோயம்புத்தூர்-641011

தமிழ்ச் சங்கத்தைப் பற்றி...

மூன்ரும் உலகத் தமிழ் மாநாடு பாரிஸ் நகரில் நடந்தபோது இலண்டன் தமிழ்ச் சங்கம் மூன்று பேராளர்களையும் பல பார்வையாளர்களையும் அனுப்பி வைத்தது.

❖ ❖ ❖

முதல் உலகத் தமிழ் மாநாட்டுக்கு ஆணிவேராகத் திகழ்ந்த தவத்திரு தனிநாயக அடிகள் கடந்த காலத்தில் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகக் குழு அங்கத்தினராக இருந்துள்ளார்.

❖ ❖ ❖

தமிழ்த் தலைவர்கள் தமிழகத்திலிருந்தும், ஈழம், மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளி லிருந்தும் இலண்டனுக்கு வருகை தரும்போது, இலண்டன் தமிழ்ச் சங்கத்திற்கு உரிய முறையில் தகவல் கிடைத்த நேரங்களில், தலைவர்களை வரவேற்று உபசரித்து வந்துள்ளது சங்கம். இத்தகைய வரவேற்பு வைபவங்கள் பல நாட்கள் அவகாசம் இருந்தால் அங்கத் தினர்களை அழைத்துக் கூட்டும் பெருங்கூட்டங்களாகவும், சில நாட்கள் அவகாசம் இருந்தால் செயற்குழு அங்கத்தினர்கள் மட்டும் கலந்துகொள்ளும் சிறு கூட்டங்களாகவும், ஓரிரு நாட்கள் மட்டுமே இருந்தால் தலைவர், செயலாளர் மட்டும் சென்று தலைவர்களைச் சந்தித்து வரும் ஒரு சந்திப்புக் கூட்டமாகவும் அமையும். இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் படிகளிலே கால்வைத்துச் சென்ற தமிழ்த் தலைவர்கள் ஏராளம். டாக்டர் கலைஞர் கருணநிதி, டாக்டர் நாவலர் நெடுஞ் செழியன், பேராசிரியர் மு. வரதராசனர், பேராசிரியர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனர், தாமரைச் செல்வர் நெ. து. சுந்தரவடிவேலு, மூதறிஞர் ராஜாஜி, பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன். மக்கள் திலகம் எம். ஜி. இராமச்சந்திரன், திருவாளர்கள் மதியழகன், தில்லை வில்லாளன், அரங்கண்ணல், கோவை செழியன், புலவர் கோவிந்தன், ராஜா சர் முத்தையா செட்டியார், திருமதி சத்தியவாணிமுத்து, திருவாளர்கள் நவரத்தினம், கார்த்திகேசு, சிவத்தம்பி, தனிநாயக அடிகள், இரா. செழியன், ஆசைத்தம்பி இப்படி எழுதிக் கொண்டே போகலாம். இப்படிப் பல தலைவர்களும், அறிஞர்களும் இலண்டன் தமிழ்ச் சங்கத்தை அவ்வப்போது சிறப்பித்துச் சென்றுள்ளனர்.

தமிழனும் தமிழ் பண்பாடும்

டாக்டர் இராதா தியாகராசன்

இந்தியத் துணைக் கண்டத்தின் தென் பகுதியில் இன்று வாழும் தமிழ் இனம் கிறிஸ்துவின் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே பல நூற்றாண்டுகளாகப் பண்பாட்டிலும், நாகரிகத்திலும் சிறப்புற்றிருந்தது. கி மு. முதல் இருநூற்றாண்டுகளில் தமிழர் கிரேக்க, ரோம நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. தமிழ்மொழிச் சொற்கள் இலத்தின், கிரேக்க மொழிகளில் கலந்தன என்பதற்கும் சான்றுகள் உள்ளன. 'சால்டியா' (Saldia) என்னும் பெயரால் முன்பு அழைக்கப்பட்ட மேலை நாட்டுப் பகுதி, 'சோழ தேயம்' என்பதன் நினைவாக அவ்வாறு அழைக்கப்பட்டது எனச் சுவாமி விபுலானந்தா எழுதியுள்ளார்.

இத்துணைத் தொன்மைக் காலம் முதல் இன்று வரை வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் கீழ்த்திசை நாடுகளில் ஒரு மாபெரும் வரலாற்றைப் படைத்துள்ளார்கள், இந் நாடுகளின் நாகரிகம், பண்பாட்டு வளர்ச்சியில் தமிழ் மக்களுக்குப் பெரும்பங்கு உண்டு. கி. பி. ஆறும் நூற்றாண்டு முதல் பதினாறும் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பல பேரரசுகள் அமைந்து வெளிநாடுகளையும் வெற்றி கொண்டு ஆணை செலுத்தி வந்தன. அவற்றின் பேரரசர்கள் இன்று இலங்கை, பர்மா, வியட்நாம், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா என்று வழங்கப்படும் நாடுகளுக்குப் பண்பாட்டுத் தூதர்களை அனுப்பி, அங்குத் தமிழ்மொழி, பண்பாடு, சமயம், தத்துவம் ஆகியவற்றைப் பரப்பச் செய்தனர். இன்றும் அந் நாடுகளில் அந்தப் பண்பாட்டுச் சின்னங்கள் கலைப் பொருள்களாகவும் இறைவர் திருவுருவங்களாகவும், மக்களின் வாழ்க்கைப் பழக்க வழக்க நடைமுறைகளாகவும் இருந்து வருகின்றன. அந்த நாடுகளிலும் ஆப்பிரிக்காவிலும் மொரீசியஸ் தீவிலும் முன்பு குடியேறிய தமிழ்ப் பரம்பரையினர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். தமிழினம் பழமையும் பல நாட்டுத் தொடர்பும் இன்று உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெறுவதற்கு அடிப்படைக் காரணமாக விளங்குகின்றன.

தமிழர்களின் வாழ்க்கை முறை, கலையுணர்வு, கலைப் படைப்புக்கள், இறையுணர்வு, இறைவழிபாடு, இறைக்கொள்கை- ஆகிய பண்பாட்டுக் கூறுகள், கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே முறையாக வளர்ந்து வருகின்றன தமிழர்களின் குடும்ப வாழ்க்கை காதலால் சிறப்புற்றது. அவர்கள் அமைத்த அரசுகள், அவர்களின் வீரத்தால் வெற்றி பெற்றன. இப் பண்புகள் இரண்டும் பழந் தமிழ்ப் பண்பாட்டின் மாபெருந் தூண்கள் ஆகும். 'காதல்' என்று பொருள்படும் 'மாதர்' என்னும் சொல்லாலேயே, குடும்ப வாழ்க்கையின் அணிகலனாகிய பெண் அழைக்கப்படுகின்றாள். இந்தக் காதல் உணர்வு குடும்ப வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைந்து, அதற்கு வெற்றி தேடித் தந்ததைப் போல, வீர உணர்வு நாட்டு வாழ்க்கையின் உயிர்நாடியாக அமைந்து வெற்றி தேடித் தந்தது. தமிழரின் வீரம் வெறும் முரட்டுத்தனம் அல்ல. உலகெங்கிலும் உள்ள நன் மக்களிடம் காணப்படுவது போல், அவர்களின் வீரம் அறவுணர்வி லிருந்து பிறந்தது. இவ்வாறு காதலும் வீரமும் கொண்ட தமிழரின் வாழ்வில் இயற்கையோடு இயைந்த கலையுணர்வும், இறையுணர்வும் கலந்திருந்தன. அவர்களின் அழகுணர்வு மிகவும் நுட்பம் வாய்ந்ததாகப் பழங்காலத்திலேயே இருந்தது. மலைப்புறத்திலும், கடற்கரைச் சோலையிலும், பயிர் நிறைந்த பண்ணையிலும், பசுமை தவழும் காடுகளிலும் இயற்கையை நன்கு அநுபவித்தவர்கள் தமிழர்கள். அதன் அழகில் மெய்ம் மறந்து ஈடுபட்டவர்கள். அந்த அழகு அநுபவத்தால் இசை, ஓவியம், சிற்பம், நடனம், இலக்கியம் ஆகிய கலைகளைப் படைத்தார்கள். இறையுணர்வையும் அவ்வழகனுபவத்திலிருந்தேபெற்றார்கள். இவ்வாறு வாழ்க்கை முறை, கலைப்படைப்பு, இறையுணர்வு என்னும் மூன்று தலைமைக் கூறுபாடுகளைச் சிறப்புறப் பெற்றிருந்த தமிழ்ப் பண்பாடு பற்றிய சில செய்திகளை இங்கு எழுதுவேன்.

வாழ்க்கையில் பண்பாடு

தமிழில் உள்ள பழைய, சிறந்த நூல்களாகிய தொல்காப்பியமும் திருக்குறளும், தமிழர்கள் வாழ்க்கை பற்றிக் கொண்டிருந்த கொள்கையையும், அதை நிறைவேற்றும்வண்

ணம் மேற்கொண்ட வாழ்க்கை முறையையும் தெளிவுறக் கூறுகின்றன. தமிழரின் வாழ்க்கை, குடும்பம், சமுதாயம் என்னும் இரண்டு கூறுபாடுகளையும் பெற்று முழுமையுடையதாய் விளங்கியது. சமுதாயத்தில், சான்றோன் என்னும் நன்மதிப்புடன் வாழவும் போர்க் காலத்தில் அரசனுக்குக் கடமை செய்யும் வகையில் பகைவருடன் போர் புரிந்து நாட்டைப் பாதுகாக்கவுமே ஆண்மகனைப் பெற்றெடுத்து, அவனை அதற்குத் தக்க முறையில் வளர்க்கவேண்டும் என்று அக் காலத் தாய் நினைத்தாள். அழகு மிக்க பெண் மகவு பிறக்கவேண்டும் என்று முருகக் கடவுளை வேண்டினான் தந்தை. ஆண், பெண் இருபாற் குழந்தைகளும் பெற்றோரால் நன்முறையில் வளர்க்கப்பெற்றன.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே...
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்துபெயர்தல் காளைக்குக் கடனே

—புறநானூறு. 312

என்பது சங்க இலக்கியத்தில் உள்ள ஒரு பழம் பாடல். தாயன்பு, தந்தையின் பாதுகாப்பு, தோழர் தோழியரின் நட்பு, சமுதாயப் பெரியோர்களின் அறிவுரை—இவை அனைத்தும் குழந்தைகளுக்குக் கிடைத்தன என்று தொல்காப்பியத்தில் 'பாங்கன், தோழி அறிவர்' என வரும் குறிப்புக்களால் அறியப்படுகிறது. இங்ஙனம் குடும்பக் கட்டுக்கோப்பு, சமுதாயக் கட்டுக்கோப்பு ஆகியவற்றின் நன்மைகளைப் பெற்றுப் பருவம் எய்திய ஆணும் பெண்ணும், காதல் கொண்டு தனித்துப் பழகவும், தமிழ்ச் சமுதாயம் உரிமை அளித்திருந்தது. காதல் கூட்டுறவில் தனித்துப் பழகுவதால் இளைஞரின் மனத்தில் ஆழமாக வேர் கொள்ளும் அன்பே, அவர்களைக் குடும்பமாகப் பிணைத்து, அவ்வாழ்க்கையில் அறிவும், இன்பமும், அமைதியும் பெற்று, இன்னும் உயர்ந்த செய்திகளை—சமுதாயம் வளர்வதற்கான இல்லறக் கடமைகளை நினைக்கவும், செம்மையுறச் செய்யவும் வைத்தது. வீட்டிலும், வெளியிலும் ஆண்மகனும் பெண்ணும் செய்த கடமைகளுக்கெல்லாம் அடிப்படையான மன ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் காதலே உண்டாக்கியது.

தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை மிக்க சிறப்புற்றிருந்தமையால், சங்ககாலப் புலவர்கள் அதனை இலக்கியப் பொருளாகவே கொண்டு மிகப்பல பாடல்களை இயற்றினர். காதலைக் கவிதையாகப் பாட ஓர் இலக்கிய மரபும் தொல்காப்பியர் காலத்திலிருந்து வழங்கிவந்தது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து பிரிவுகளாகக் காதல் ஒழுக்கத்தை வகுத்துக்கொண்டது இம்மரபு. நிலங்களின் பிரிவுகளாகிய இவற்றைக்கொண்டு காதல் ஒழுக்கத்திற்குப் பெயர் வழங்கியமை, தமிழகம் முழுதும் இவ்வொழுக்கம் பரவியிருந்தமையைக் காட்டும். காதல் ஒழுக்கத்திற்கு நிலங்களின் பெயர்களை வழங்கியமை தமிழர்களின் சிறந்த கலையுணர்வைப் புலப்படுத்துகின்றது. நிலங்களையும் அவற்றில் நிகழும் பருவங்களையும் பொழுதுகளையும் முதற் பொருள் என்றும், நிலங்களில் உள்ள பொருள்களைக் கருப்பொருள் என்றும், காதல் ஒழுக்கமாகிய கூடல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் ஆகியவற்றை உரிப்பொருள் என்றும், வகுத்து இவை மூன்றும் அமைய அகப்பொருட் கவிதை பாடவேண்டும் என்று மரபு வகுக்கப்பட்டிருந்தது. நிலங்களும் பருவங்களும் ஆகிய இயற்கை, காதல் ஒழுக்கத்தைச் சித்தரிப்பதற்கு ஏற்ற பின்னணியாக இருந்தமையைக் கண்டே தமிழர் இம்மரபை வகுத்தனர்.

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலும் காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை

—தொல். அகத்திணையியல். 3

காதல் வயப்பட்டுப் பழகிவரும் தலைவன் தலைவியரின் அன்பு மிகவும் ஆழமாக இருந்தது என்பதைச் சங்ககாலக் கவிதைகள் நன்கு சித்திரிக்கின்றன. இவற்றுள் திருமணத்திற்கு முன்னைய காதலைச் சித்திரிப்பது குறிஞ்சித் திணை. தலைவியைக் காண்பதற்காகத் தன் ஊரிலிருந்து மலைப்பாதையில் இரவு நேரத்தில் வருகின்றான் தலைவன். அவனது வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாள் தலைவி. அவளது மனம் தலைவனையும் அவன் வரும் வழியைப் பற்றியுமே எண்ணுகின்றது. அவனுக்கு இடையூறு நேர்ந்துவிடுமோ என்று அஞ்சுகின்றது. மலைச்சாரலில் அவன் நடந்துவரும் நேரம் இருள் சூழ்ந்த இரவு. யானையின்மீது அம்பாரி வைத்துக் கட்டுவதற்குப் பயன்படுத்திய கயிறு அதன் உடலில் உண்டாக்கிய வெள்ளைக் கோடு போன்ற ஒற்றையடிப்பாதையே இருக்கின்றது. மழைக்காலமாதலின் பாதையை ஒட்டித் தண்ணீர் நிரம்பிக் கிடக்கும் குழிகளுள் ஒன்றில் அவன் தவறாகக் கால் வைத்து

விட்டால் என்னவது என்று அஞ்சுகின்றது தலைவியின் உள்ளம். குழியில் விழாமல் அவன் வந்து சேரல் ஒண்ணுமோ என்று கவலைப்படுகின்றது. இதனைப் பாடலாகப் பாடும் கபிலர், தலைவியின் கூற்றாகவே பாட லியற்றி, "என் உள்ளம் தலைவன் வரும் பாதையிற் காத்திருந்து, அவன் குழியில் தவறிக் காலை வைக்கும்போது, அதைப் பிடித்துத் தாங்கிக்கொள்வதற்காகச் சென்று விட்டது" என்று அவள் கூறுவதாகப் பாடுகின்றார்.

> இட்டருங் கண்ண படுகுழி இயவின்
> இருளிடை மிதிப்புழி, நோக்கி, அவர்
> தளரடி தாங்கிய சென்றது இன்றே
>
> —அகம் 128

என்பன அப்பாடலின் சில வரிகள். தலைவன் குழியில் விழுந்து இடர் உறுதலாகாது என்று எண்ணும் அன்புடைத் தலைவியின் எண்ணம் இவ்வழகிய பாடலாக உருவெடுத்துள்ளது.

திருமணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தும் தலைவன் கடமையாற்றுவதற்காகத் தலைவியைப் பிரிபவன், அவளிடம் தன் பிரிவைப் பற்றிக் கூறி விடைபெற முயன்றான். அக்காலத்தில் அஞ்சல் போக்குவரவு இல்லை யாதலின், பிரிந்தவர் மீளும்வரை அவர் நலனை அறிவதற்கு இயலாது. ஆதலால் இவன் 'பிரிந்து செல்கின்றேன்' என்று கூறியவுடன் தலைவியின் முகம் வைகறை நேரத்தில் வானில் உள்ள சந்திரனைப் போல் ஒளியிழந்துவிட்டது. தலைவன் வினையாற்று வதற்காகச் செல்லும் நாடு பல காதங்கள் தொலைவில் உள்ளது. நீரும் நிழலும் இல்லாத பாலை நிலத்தைக் கடந்து அங்குச் செல்ல வேண்டும். அந்நிலத்தில், நீரின்றி வறண் டிருக்கும் தேக்க மரங்களின் பெரிய இலைகள் காய்ந்து கிடக்கும். அங்கு வீசும் பெருங் காற்றால் பல இலைகள் காம்பொடிந்து, வானம் எங்கும் பருந்துக் கூட்டம்போல் மிதந்து பின்னர், அங்குள்ள பாதைகளை மறைத்துக் கொண்டு சிதறிக் கிடக்கும். வழிப்போவார் பாதையறியாமல் தடுமாற்றம் அடைவார்கள்.

> கடுவளி எடுத்த கால்கழி தேக்கிலை
> நெடுவளிப் பருந்தின் வெறி எழுந்தாங்கு
> விசும்புகண் புதையப் பாஅய்ப் பலவுடன்
> அகலிடம் செல்லுநர் அறிவுகெடத் தாஅய்க்
> கவலை கரக்கும் காடகல் அத்தம்
>
> —அகம் 299

நிழல் நீரின்றி, வழியும் எளிதில் அறிய மாட்டாத பாலை நிலத்தைக் கடந்து செல்லத் தலைவன் எண்ணினான். ஆயின், அவன் நலங்குறித்துத் தலைவி கவலையும் துயரும் அடைவதில் வியப்பில்லையன்றோ? நாள் தோறும் புத்தழகுடன் பொலிகின்ற அவளது முகம், தலைவனைப் பிரிந்து தனிமையில் இருக்கப் போவதை எண்ணித் துயர நினைவால் வாடிவிட்டது. தலையைக் குனிந்த வாறு கால் கட்டை விரலால் தரையைக் கிறினாள். கண்ணீர் பெருகி அவளது உடலில் துளித்தது. கால்கள் ஓரிடத்தில் நிற்கவில்லை. கூந்தல் அவிழ்ந்து முகத்தை மறைத்தது. நெஞ்சத்தின் அளவுபடாத் துயரம் மெய்ப்பாடுகளால் நன்கு புலப் பட்டது. ஆயினும், தலைவனை வினையாற்றச் செல்லவேண்டாம் என்று அவள் தடுக்க வில்லை. நாக்கு நடுங்க, குழறும் சொற்களால் "நும் செலவு பயன் அடைவதாக' என்று கூறிப் பெருமூச்சு உயிர்த்தாள்.

> புலம்புகொள் அவலமொடு புதுக்கவின் இழந்த
> நலங்கெழு திருமுகம் இறைஞ்சி நிலம்கிளையா,
> நீரொடு பொருத ஈரிதழ் மழைக்கண்
> இருதரு தெண்பனி ஆகத்து உறைப்பக்,
> கால்நிலை செல்லாது கழிபடர்க் கலங்கி
> நாநடுக்கு உற்ற நவிலாக் கிளவியொடு
> அறல்மருள் கூந்தலின் மறையினள், திறல் மாண்டு
> திருந்துக மாதோ நும் செலவு என வெய்துயரா
>
> —அகம். 299

காதலனைப் பிரிதல் ஆற்றாத அன்பின் செறிவும், ஆற்றாமை மிகினும் அவன் வினை யாற்றத் தடை செய்யாமல் வாழ்த்தி விடை கொடுக்கத் துணிந்த பண்பாடும், இதனைச் செய்யும்போது உணர்வுக்கொந்தளிப்பில் தடுமாறும் உள்ள நிலையும் இப்பாடலில் கூறப் படும் தலைவியது பெண்மைப் பண்பின் உயர்வை நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

வினையாற்றுதற்குப் பிரிந்துசென்ற தலை வனின் வருகையை எதிர்நோக்கிப் பிரிவுத் துயரை அகத்தே அடக்கிக் காத்திருக்கும் தலைவியை முல்லைப்பாட்டு நம் கண்முன் நிறுத்துகின்றது. மழை பொழிந்த மாலை நேரத்தில், பாவை விளக்குகள் ஒளிசெய்ய, அவள் கட்டில்மீது படுத்திருக்கின்றாள். தலைவனைப் பிரிந்த தனிமைத் துயர் ஒருபுறம், அவன் பிரிந்து வினையாற்றினாலன்றி அரசியல் நிகழாது என்னும் நினைவு ஒருபுறமாக எழுந்து அவளை உணர்வுப் போராட்டத்திற்கு உள்ளாக்க, கழல்கின்ற கைவளைகளைத் திருத்துதலும், மையலால் மயங்குதலும், அதனைப் போக்குபவள்போலப் பெருமூச்சு விடுதலுமாக, அம்புப்பட்ட மயில்போல

நடுங்கியவண்ணம் படுத்திருக்கின்றாள். அரசன் 'கார்காலத்தில் மீள்வேன்' என்று கூறிப் பிரிந்து சென்றிருந்தான், ஆதலால், மழை பொழிந்தமையால் அரண்மனை மேன் மாடத்தில் வீழ்ந்த நீர், மேற்கட்டியின் மூட்டு வாய்களினின்றும் அருவிபோல விழுந்த ஓசையைக் கேட்டவாறு, 'கார்காலம் வந்தது' கணவன் வரவில்லையே? என்று எண்ணிக் கலங்குகின்றாள்.

.. துயர்உழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஒடுவளை திருத்தியும்
மையல்கொண்டும் ஒய்யென உயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி, இழை நெகிழ்ந்து
பாவை விளக்கின் பரூஉச்சுடர் அழல,
இடம்சிறந்து உயரிய எழுநிலை மாடத்து
முடங்கு இறைச்சொரிதரும் மாத்திரள் அருவி
இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்

—முல்லைப்பாட்டு, வரி 80-88

அவளுடன் வாழும் சில முதிய பெண்கள், நெல்லும் முல்லை மலரும் தூவிக் கடவுளை வழிபட்டு, நற்சொல் கேட்டற்காக வாயிலில் நின்கின்றனர், அப்பொழுது, அண்மையில் இருந்த வீட்டில், ஓர் ஆயர் மடந்தை பசுங்கன்றுகளின் அருகில் நின்ற வாறு, அவை தம் தாய்ப் பசுக்களின் பிரிவால் வருந்துவதை அறிந்து, "உங்கள் தாய்ப் பசுக்கள் இப்பொழுது வந்துசேரும்" என்று கூறுகின்றாள். இந்த நற்சொல்லைத் தலைவிக்கு நற்குறியாகக் கொண்ட பெண்கள், அவளிடம் சென்று, "நற்சொல் கேட்டோம்; நல்லவரின் சொல் உண்மையாகும். தலைவன் வினை முடிந்து இப்பொழுதே வருவான்; உன் துயரத்தை நீக்குக" என்று தேறுதல் கூறுகின்றனர்.

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோல் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள், தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது, நீ நின்
பருவரல் எவ்வம் களைமதி மாயோய்,

—முல்லைப்பாட்டு, வரி 11-21

இச்சொற்களும் தலைவிக்கு ஆறுதல் அளிக்கவில்லை. அவள் கண்களின் ஓரத்தில் கண்ணீர் அரும்பியது.

பிரிவுக் காலத்தில், துயரை அறிவால் அடக்கி, காதலனை நினைக்கும் வினைவே நினைவாக, அவன் சொல்லைக் கடைப் பிடித்துத் தவமிருக்கும் தலைவியின் செறிவும் பொறுமையும், அவளது உள்ளத்துள் நிகழும் துயரைக் குறிப்பால் உணர்ந்த உடன்வாழ் பெண்டிர், நற்சொல் கேட்டு, ஆறுதல் கூறும் தாய்மைப் பண்பும் இப்பாடல் வரிகளில் அழகுறச் சித்தரிக்கப்படுகின்றன.

இவ்வாறு தலைவனே வாழ்வு எனத் தவமிருக்கும் பெண்மை, அவன் தவறு செய்யினும் பொறுத்துக்கொள்கின்றது. அவனது மனம், தலைவியை விட்டுப் புறமே போந்து அலைந்தாலும், அவனையன்றித் தனக்கு வாழ்வில்லை என்று கருதி, மன்னித்து ஏற்றுக்கொள்கின்றாள் தலைவி இந்த மன நிலையைக் குறுந்தொகையுள் ஒரு பாடல், அழகிய உவமையால் சித்தரிக்கின்றது. "வயலில் பயிருக்கு நீர்ப் பாய்ச்சுவோர் வரப்பில் மலர்ந்து நிற்கும் நெய்தலைக் கவனி யாமல் வாடவிடினும் அந்நெய்தல் செடி, 'கொடியவர்களே, யாம் வேறு நிலத்திற்குச் செல்வோம்' எனச் சொல்லாமல், மீண்டும் பூக்கள் மலர்ந்து விளங்குகின்றன. அந் நெய்தல் போல யாமும், நின்னையின்றி வாழ்தல் அமையோம் ஆதலின், நீ கொடுமை செய்யினும் பொறுத்துக்கொள்கின்றோம்" என்பது, தலைவிக்காகத் தலைவனிடம் பேசும் தோழியின் கூற்று.

கைவினை மாக்கள்தம் செய்வினை முடிமார்
சுரும்பு உண மலர்ந்த வாசம் கீழ்ப்பட
நீடிய வரம்பின் வாடிய விடினும்
கொடியரோ,
நிலம்பெயர்த்து உறைவேம் என்னாது, பெயர்த்தும்
கடிந்த செறுவின் பூக்கும் நின்னூர்
நெய்தல் அனையம் பெரும; நீ எமக்கு
இன்னா தனபல செய்யினும்
நின் இன்று அமைதல் வல்லாமாறே

—குறுந்தொகை 309

இது அன்புடையாரின் கொடுமையைத் தாங்கிக் கொள்ளும் தலைவியின் மன வலிமை

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்று நன்று உள்ளக்கெடும்

—திருக்குறள் 109

என்ற திருக்குறளுக்கு இலக்கியமாய் அமைகின்றது இப்பொறுமை. தனக்கு எனத் தலைவனையும் வேண்டாது, அவன் வாழ்வே தனக்கும் வாழ்வெனக் கருதும் தியாக உள்ளம் இத்தலைவியிடம் விளங்குகின்றது.

கடல் அலைகள் ஒவென இரையும் நெய்தல் நிலம், பிரிவால் துயர் உறும் தலைவியின் மனநிலையைச் சித்திரிப்பதற்கு ஏற்ற பின்னணியாக அமைகின்றது. பிரிவு நீட்டிப்பின் தலைவி, தலைவனை நினைந்து மறுகி, ஊண் உறக்கம் துறந்து மெலிகின்ருள். இந்த மெலிவைக் கடலில் நிகழும் ஒரு சிறு நிகழ்ச்சியுடன் உவமித்து, அவளது ஆற்ரெருணுத்துயரை எடுத்துக் காட்டுகின்றது, ஒரு குறுந்தொகைப்பாடல். இதில், "நான் என் காதலனைக் காணவில்லை, துயரம் நாளுக்கு நாள் பெருகுகின்றது. கடலில் பாறையொன்றில் அலை மோதும்போது, தண்ணீரில் நுரை உண்டாகிப் பின் மெல்ல மெல்ல மறையும். அதுபோல என் வலிமையும் உயிராற்றலும் மெல்ல மெல்லத் தேய்கின்றன" என்று கூறுகின்ருள் ஒரு தலைவி:

யாம் எம் காதலர்க் காணேம் ஆயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு, பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லாகுதுமே

—குறுந்தொகை 290

காலத்தின் வன்மை மிகப்பெரிது. பிரிவைப் பொறுத்துக் கொள்ளும் தலைவியின் ஆற்றல் அதனேடு மோதுகின்றது. ஆயினும் காலம் அசையவில்லை; தலைவியின் ஆற்றல் தான் சிதைகின்றது. இதனை இச்சிறு கவிதையின் உவமை மிக்க அழகாகக் காட்டுகின்றது.

இங்கே காட்டிய கவிதைகளில், தலைவியின் அன்பு மிகுதியும், பெண்மைப் பண்பும் நன்கு கூறப்படுகின்றன. பெண்ணின் காதல்-அன்பு சீரான குடும்பத்தை உருவாக்கி வளர்க்கின்றது. ஆதலின், வாழ்வின் இன்றியமையாத பகுதி காதல் வாழ்வு என்றும், திருமணத்திற்கு முன்னர் மாந்தரிடை இக் காதல் தோன்றி வளர வேண்டும் என்றும், அது கனிந்து மணவாழ்க்கையாக வேண்டும் என்றும் இயற்கையை ஒட்டித் தமிழர் வாழ்க்கை நெறி வகுத்திருந்தனர். காதலுறவு குடும்ப வாழ்வாக நிறைவுபெற வேண்டும் என்பது அவர்களின் விருப்பம். பருவவுணர்வு வெற்றின்பமாகக் கழியாமல் அறத்திற்கு வழியாக அமைய வேண்டும் என்னும் கொள்கையே இவ்விருப்பத்தைத் தோற்றுவித்தது. பெண்ணின் காதல் வளர்ந்து, கற்பு அமைந்த குடும்ப வாழ்வாக மலர்வதற்கு அவளுடைய தோழி உதவினுள். இதற்கு "அறத்தொடு நிற்றல்" எனத் தமிழர் இட்ட பெயர், மேற்சொன்ன கருத்திற்குச் சான்ருகும்.

குடும்ப வாழ்க்கை 'இல்லறம்' என அழைக்கப்பட்டது. குடும்பம் 'சமுதாய உணர்வோடு' செயற்படத் தக்கது என்னும் தமிழர் கொள்கைக்கு இச்சொல் சான்ருகும். விருந்தினர், அறிஞர், அறவோர், துறவியர், ஆதரவற்ருேர், ஏழையர், மாணவர் ஆகியோர்க்கு இல்வாழ்வார் செய்யும் பல்வகை உதவிகளே 'இல்லறம்' எனப்பட்டன.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

—திருக்குறள் 41

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. —திருக்குறள் 42

என்பவை திருக்குறட் பொன்மொழிகள். குடும்பத் தலைவன் பொருள் ஈட்ட விரும்பியமை இவ்வுதவிகளைச் செய்தற்கே ஆகும். இக் கடமைகட்காகக் காதல் மனையாளைப் பிரிவதையும் அவன் பொருட்படுத்தவில்லை. பொருளீட்டுதற்காக நெடுந் தொலைவில் உள்ள நாடுகட்குத் தரைகடந்தும், கடல் கடந்தும் சென்ருன். வீட்டில் கணவன்—மனைவிக்கு இடையில் ஏற்படும் சிறு மனமாறுபாடும் விருந்தினர் வந்தால் நீங்கிவிடும். விருந்தினரோ, வறியவரோ, யாருக்கேனும் வீட்டில் உணவு அளித்து உதவி செய்வதே சிறந்த கடமை என்று கருதப்பட்டது. இல்லாதவரை உடையார் காப்பாற்றும் இவ்வழக்கம் சமுதாய நல்வாழ்வு கருதியதாகும்.

கணவனின் வருவாய்க்கு ஏற்பக் குடும்பம் நடத்தும் பண்பு மனைவியிடம் இருந்தது. 'செல்வரின் மகளாகப் பிறந்த பெண், கணவன் வீட்டிலும் ஆடம்பர வாழ்வு நடத்த முயலவில்லை. அவன் ஏழையாக இருந்தால், ஒரு வேளை உணவுடன் ஒரு நாளை முடித்துக் கொள்ளவும் அவள் தயங்கவில்லை; தன் தந்தை வீட்டை நினைக்கவில்லை; புகுந்த வீட்டின் பொருள் நிலைக்கேற்ப வாழப் பழகிக்கொண்டாள்' என்று நற்றிணைப் பாடல் கூறுகிறது.

அவள் குழந்தையாக இருந்தபொழுது, செவிலித்தாய் தேன் கலந்த பாலைப் பொற் கிண்ணத்தில் ஏந்தி, 'உண்க' என்று வேண்டவும், அவள் அதை.மறுத்து, வீட்டு முற்றத்தில் இருந்த பந்தரைச் சுற்றி ஓட, செவிலி பிரம்பொன்றை ஓங்கி அவளைத்

துரத்துவாள். அவ்வாறு பசி நினைவின்றிச் செல்வமாக வளர்ந்தவள், தன்னைக் கொண்ட கொழுநனின் குடும்பம் வறுமையுற்றமையால், தாய்வீடு சென்று தந்தையின் செல்வத்தில் வளமாக வாழ நினைக்கவில்லை; மாறாக, ஒரு வேளை மறுத்து மறுவேளை மட்டும் உண்ணப் பழகிவிட்டாள். அவள் அறிவும் ஒழுக்கமும் இருந்தவாறு என்னே என்று வியப்பது இப்பாடல்.

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்என்று ஓக்குபு பிழைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரிமெலிந்து ஒழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கு அறல்போலப்
பொழுதுமறுத்து உண்ணும் சிறுமதுகையளே

—நற்றிணை 110

இது தலைவன்பால் கொண்ட அன்பால் வறுமையையும் பசிப்பிணியையும் தாங்கிக் கொள்ளும் தலைவியின் மதுகை. அவனது வீட்டு நிலைக்கு மட்டும் அன்றி, நாட்டு நிலைக்கும் ஏற்பத் தன்னைப் பழக்கிக் கொண்டாள் தலைவி. தான் பிறந்த நாட்டில், கிடைத்த தேன் கலந்த பாலைவிடத் தலைவனது நாட்டில், கிணற்றின் அடியில், விலங்குகள் சென்று உண்ணுதலால் கலங்கியிருக்கும் கலங்கல்நீர் இனிது என்று கருதினாள் என்று ஐங்குறு நூறு கூறுகின்றது:

அன்னாய்! வாழி! வேண்டன்னை! நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு
உவலைக் கூவல் கீழ
மானுண்டு எஞ்சிய கலிழி நீரே

—ஐங்குறுநூறு-குறிஞ்சி 203

பணத்தையும் வசதிகளையும் பெருக்கிக் கொண்டு, ஆடம்பரமாக இருப்பதைத் தமிழ் அறிஞர் 'செல்வம்' என்று கருதவில்லை என்பதையே குடும்பப் பெண்ணின் இந்தப் பண்பாடு எடுத்துக் காட்டுகிறது. வீட்டிலோ, வெளியிலோ, யாரேனும் துன்புறும்போதும், இடையூறுபடும்போதும், உளம் பதைத்துத் துன்பம் துடைக்க முனையும் இரக்கம் ஒருவனுக்கு இருப்பின், அதுதான் 'செல்வம்' என்றனர் பழங்காலத் தமிழறிஞர். அது தமிழ்ப் பெண்களிடம் இன்றும் உள்ளது. முன்பும் காப்பியத் தலைவியாகிய மணிமேகலையிடம் இந்த அருள் உணர்வு கனிந்துநின்றது. இடைக்காலத்தில் அருளை, 'அருட்சக்தி' எனப் பெண்ணாகவே தத்துவக்கலை கூறியதிலும் இவ்வுண்மையே விளங்குகின்றது. பசி நீக்குதலும் துன்பம் துடைத்தலும் ஆகிய அறம், காலப்போக்கில், இடையிடையே பல்வேறு செல்வாக்கு மோதல்களால், மக்களால் மறக்கப்பட்டபோதெல்லாம், அருளறம் உணர்ந்த அறிஞர் அதனை மக்களுக்கு நினைவுபடுத்தி வந்தனர்.

நீர் இன்றமையா யாக்கைக்கு எல்லாம் உண்டி
கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே

—புறநானூறு 18

என்பது சங்கப்பாடல்.

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி

—மணிமேகலை, 1, வரி 70-71

என்பது மணிமேகலைக் காப்பியப் பாடல்.

ஆர்க்கும் இடுமின், அவர்இவர் என்னன்மின்

—திருமந்திரம் 250

என்பது இடைக்கால முற்பகுதிப் பாடல்.

பசித்தோர் முகம் பார்

என்பது இடைக்காலப் பிற்பகுதிப் பாடல்.

அயலார் பசியினால். பிணியால் மெய்புளம் வெதும்பிய வெதுப்பைப் பார்த்தபோதெல்லாம் பயந்து எனதுள்ளம் பதைத்தது

—திருவருட்பா, பிள்ளைப்பெரு விண்ணப்பம் 10

என்பது 19ஆம் நூற்றாண்டில் எழுந்த திருவருட்பா.

வயிற்றுக்குச் சோறிடவேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்

பாரதி பாடல், முரசு 30

என்பது பாரதியார் பாடல்.

கலைகளில் பண்பாடு

பழந்தமிழரிடம், ஓவியம், சிற்பம், நடனம், இலக்கியம் முதலிய கலைகள் சிறந்திருந்தன. இயற்கையில் அவர்கள் மிகுதியாக ஈடுபட்டு, அழகை அனுபவிக்கும் முருகு உணர்வுடன் விளங்கியமையே இதற்குக் காரணம். மலைச்சாரலில் மூங்கில்களில் உள்ள துளைகளில் புகுந்து வெளிப்பட்ட

காற்று, இசையாக அவர்கட்குக் கேட்டது. அந்த ஓசைகளை 'ஸ்வரங்களாகக்' கொண்டு அவற்றை ஒன்றன்பின் ஒன்ருக அடுக்கிப் 'பண்முறை' (Melody) என்னும் இசையை அமைத்தனர். இதுவே இன்றைய இந்திய இசையின் அடிப்படை. இயற்கையில் எழும் ஓசைகளில் ஓர் ஒத்திசை (Rhythm) உண்டு. இதைத் தாளங்களாக வளர்த்து, இசையுடன் இணைத்துப், பாடல் (Musical Composition) அமைத்தார்கள். இசையில் கலந்த உணர்வை முகத்தாலும், சிற்ப, ஓவியங்களின் நிலையழகைக் (Posture) கைமுத்திரைகளாலும், இசையில் கலந்த தாளத்தைக் காலசைவுகளாலும் காட்டும் ஒருங்கிணைந்த கலையாக நடனக் கலையை வளர்த்தார்கள்.

இசையும் நடனமும் அவர்களின் வாழ்வில் கலந்திருந்தன. நோய்வாய்ப்பட்டுத் துன்புறுவோரின் துன்பம் இசையால் தணிக்கப்பட்டது. கொள்ளைக்காரரும் இசையில் மயங்கிக் கொடிய செயல்களைக் கைவிட்டனர், இசை, இறை வழிபாட்டிலும் கலந்திருந்தது. இயற்கையழகின் வெளிப்பாடு (Expression) இசையும் நடனமும் என்ருல், வாழ்க்கையில் உள்ள அழகுகளை, அறிவும் கற்பனையும் மிளிரச் சொல்லால் வெளிப்படுத்துவது இலக்கியக் கலையாகும். இதனையும் தமிழ்மக்கள் நன்கு வளர்த்தனர். இதனுல் தமிழும் வளம்பெற்றது; தமிழரும் வளம் பெற்றனர். தமிழகத்தில் பல்வேறு தொழில் செய்தவரும் கவிஞராக விளங்கினர். மன்னர்கள் பாடிய கவிதைகள் சங்க இலக்கியத்துள் இடம்பெற்றுள்ளன. பாமர மக்களும் நாட்டுப் பாடல் இயற்றினர். இன்றும் ஏராளமான நாட்டுப் பாடல்கள் தமிழகத்தில் வழங்குகின்றன. இவை, தமிழரின் வாழ்வில் இசை எத்துணை கலந்துள்ளது என்பதைக் காட்டும். நடனமும் இறைவழிபாட்டில் இடம்பெற்றது. சிலப்பதிகாரத்தில் வரும் 'ஆய்ச்சியர் குரவை' என்னும் நடனமும், இடைக்காலத்தில் தேவதாசியர் கோயில்களில் நடனம் ஆடி வழிபட்டமையும் இதற்குச் சான்றுகள்.

கலைகளை வளர்த்த கலைஞர்களை மன்னர்கள் நன்கு ஆதரித்தனர். மக்களும் ஆதரவு அளித்தனர். இலக்கியத்தில் இடம் பெற வேண்டும் என்னும் ஆர்வம் மன்னர்களுக்கு இருந்தது. அவரதுபணத்திற்கும் அதிகாரத்திற்கும் அஞ்சிப் புலவர்கள் புகழ்ந்து பாடியதில்லை. ஆதலால், அதற்குரிய தகுதி பெறுவதற்காக, மன்னர்கள் நன்முறையில் அரசு நடத்தி, மக்களுக்குப் பாதுகாப்பு அளித்துக் கலைகளை ஆதரித்தார்கள்.

ஆட்சியில் பண்பாடு

'நல்ல அரசே மக்கள் வாழ்க்கையில் உயிர்நாடி; உணவும் நீரும் அத்தகு சிறப்புடையன அல்ல' என்னும் கருத்துப் பழந்தமிழர்க்கு இருந்தது. இது அவர்களின் அரசியற் பண்பாட்டை எடுத்துக்காட்டுவதாகும்.

நெல்லும் உயிர்அன்றே நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

—புறம். 186

நல்ல அரசியல் நடைபெறுவதற்குக் கல்வி தேவை என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். கல்வி அறிவுடையவனே அரசனுக அமர்த்தப்பட்டான். ஒருவன் அரச குலத்தில் பிறந்தவனுயினும், ஆசிரியரிடம் கல்வி பயிலும்போது மிகவும் அடக்கத்துடனும் பணிவுடனும் நடந்துகொள்ளும் பண்பு அவனிடம் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

நீதிமன்றத்திற்கு மக்கள் கொண்டுவரும் வழக்குகளை நன்கு ஆராய்ந்து, நீதி வழங்குவதில் மன்னர் மிகுந்த கருத்துச் செலுத்தினர். நீதிபதியை நியமிப்பதிலும் மிக்க கருத்துச் செலுத்தப்பட்டது. இதனை ஒரு பாண்டிய மன்னன் போருக்குச் செல்லுங்கால் கூறிய உறுதிமொழியால் அறியலாம்.

'போரில் நான் வெற்றி பெறேன் ஆயின், நீதியறியாதவனை நீதிபதியாக வைத்த குற்றம் என்னை. வந்து சேர்வதாக', என்பது அவன் கொண்ட உறுதி.

அறன்நிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக

—புறம். 71

மற்ருெரு பாண்டிய மன்னன், இதுபோன்ற நிலையில், 'என் அரசில் வாழும் மக்கள் என் கொடுமையால் வருந்தி, வேறு புகலிடமும் காணுமல், 'எம் மன்னன் கொடியவன்' என்று கூறிக் கண்ணீர்விடும்படி செய்த குற்றம் என்னை வந்து அடைக' என்ருன்:

என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணுது
கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக

—புறம். 72

மன்னர்கள் போர்க்காலங்களிலும் அறத்தைக் கடைப்பிடித்தனர். ஒரு நாட்டின்மீது போர் தொடுத்தால் அவர்கள் அங்கு அறிவிப்பது இதுதான் :

> பசுக்களைப் பாதுகாப்பான இடத்திற்குக்கொண்டு செல்க. அறிஞர்களும் பெண்களும் விலகிச் செல்க எம்முடைய ஆயுதங்களால் அவர்கள் நீங்குறக் கூடாது
>
> —புறம். 9

பகைவரின் நாடாயினும், வீரரைத்தவிர மற்றவர் உயிர் இழக்கக்கூடாது என்று கருதிய அக்காலத் தமிழரின் பண்பாடு இது. போரில் இறந்த வீரர்க்கு நடுகல் அமைத்து, வீர வணக்கம் செய்வதும் தமிழரின் வழக்கமாகும்.

இறையுணர்வுப் பண்பாடு

இறை உணர்வு தமிழ்ப் பண்பாட்டில் குறிப்பிடத்தக்க கூறுபாடாகும். பழங்காலம் முதல் இன்றுவரை தமிழர்களின் தெய்வ வழிபாட்டு முறைகள் கணக்கில்லாதனவாகப் பெருகியுள்ளன. அவர்களுக்குத் தொடக்கத்தில், இறையுணர்வு இயற்கையிலிருந்து பிறந்தது. இயற்கை என்னும் எழில் உலகத்தில் பல கூறுபாடுகளும், நிகழ்ச்சிகளும் அவர்கள் அழகுணர்வுடன் அனுபவிப்பதற்கும், மருட்சியுடன் நோக்குவதற்கும், அச்சத்துடன் விலகி நிற்பதற்குமாக அமைந்தன. இந்த அழகு, பெருமை, ஆற்றல் என்ற மூன்றையும் இயற்கையில் கண்ட அவர்கள், அதிலே இறைவன் உறைவதைக் கண்டார்கள். மரங்கள் மலர்ந்து விளங்கும் மலைச்சாரல், அதனூடே பாயும் அருவி, கரைமோதி வெள்ளமிடும் ஆறு, நீர் நிறைந்த ஏரி, குளத்தில் மலரும் பூக்கள், எங்கெங்கும் வண்ணம் உறத் திகழும் செடிகொடிகள், பசேலென விளங்கும் புல்வெளி, பறவை, விலங்கு-இவற்றில் எல்லாம் அளவில்லா அழகைக் கண்டு அனுபவித்தார்கள். அந்த அழகை 'முருகு' என்னும் தமிழ்ச்சொல்லால் அழைத்தார்கள். அந்த அழகு என்றும் உள்ள அழகு; ஆதலின் இளமையுடையது எனக் கண்டார்கள். அழகும் மணமும் இளமையும் உடைய இயற்கையினையே ஊன்றி ஊன்றி அனுபவித்து, அதிலேயே இறைவன் உறைகிறான் என்று உணர்ந்து, அவ்வாறு தெய்வத் தன்மையை உணர்ந்ததால் அவனுக்கு 'முருகன்' என்று பெயரிட்டார்கள். அழகுணர்வும், மண நுகர்வும், இளமை போற்றும் பண்பும், இறுதியில் 'தெய்வத் தன்மையாக' உணரப்பட்டபோது, இயற்கையிலிருந்த இறையுணர்வு பிறந்தது. தமிழ் மக்களின் பழைய கடவுள்—முதற் கடவுள்—முருகனே. முருக வழிபாடு அழகு வழிபாடே. சைவநெறி பிற்காலத்தில் வளர்ந்தபோதும் முருகனும் சிவனும் ஒருவரே என்றுதான் கூறப்பட்டது. முருகனை, ''அறுமுகச் சிவனார்'' என்று கந்த புராணம் கூறும். சிவனே தேவர்களுக்கெல்லாம் தலைவன் என்ற செய்தியும் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. சிற்றூர்களில் கடம்ப மரமே முருகனின் கோயிலாகக் கருதப்பட்டது. நகரங்களில் தெய்வங்களுக்குக் கோயில் கட்டப்பட்டது. பெண்கள் தம் குழந்தைகளை ஏந்திக் கொண்டு, பூவும் புகையும் எடுத்துச் சென்று கோவில்களில் வழிபாடு செய்தனர். தமிழ் மக்களின் குடும்ப வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணமான காதல் நெறியே, பிற்காலத்தில் கடவுளிடம் செலுத்தும் பக்தி நெறியாக வளர்ச்சி பெற்றது. கடவுளை வணங்கும் அடியார்கள், அவனிடம் வேறு எப்பொருளையும் வேண்டாமல், அவனையே விரும்பினர். காதலி தன் காதலனை விரும்புவது போல அவர்களின் அன்பு உணர்வு முதிர்ந்ததால் இறைவனையே அடைய விரும்பினர். சைவ, வைணவ அடியார்கள் புலவர்களாகவும் விளங்கிப் பாடிய பாடல்கள் இதற்குச் சான்றாகும். தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம், திருவருட்பா முதலிய தமிழ்க் கவிதைகள், பக்திநெறியில் சிறந்த அடியார்கள் இறைவனிடம் காதல்கொண்டு, அந்த உணர்வால் மனங்கசிந்து, உருகிப் பாடியவையே ஆகும். இவை தமிழ் மொழிக்குத் தமிழ்ப்பண்பாடு தேடிவைத்த ஈடு இணையற்ற செல்வம். இவற்றில் உள்ள இனிமையும், உணர்ச்சியும், உருக்கமும், இறைவனை அனுபவித்து உணர்ந்த அனுபவமும் தமிழ் இலக்கியப் பரப்பில் வேறு எந்த நூலிலும் காணமுடியாதனவாகும். பிற்காலத்தில் தோன்றிய 'தத்துவக்கலை வளர்ச்சிக்கு' இந்நூல்களே ஆதாரமாக நின்றன.

பண்டைத் தமிழரின் இல்லற வாழ்வில் கனிந்து நின்ற அன்பு முதிர்ந்து அருளாகிக் குளிர்ந்து நின்றது. அவர்களின் உளம் நிறைந்த அன்பு குடும்ப வாழ்வில் இன்பம் விளைத்தது. அருளோ ஆன்மாவை அழியாமல் நிலைக்க வைக்கும் இன்பம்விளைத்தது. இவ்வின்பத்தைத் தமிழர் 'பேரின்பம்' என்றனர். அழகில் ஈடுபடும் காதல்

உணர்வை அடிப்படையாகக் கொண்ட தமிழரின் வாழ்க்கைப் பண்பாடு. அழகையே இறைவனாகக் கண்டு, அவனைக் காதலிக்கும் பக்தி நெறியை வளர்த்து, அவனிடம் அழியா இன்பம் பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டு சிறப்புற்றது. இசை, நடனம் முதலிய கலைகள், முன்பு, காதல் வளர்ச்சியில் இணைந்தது போலவே பக்திநெறி வளர்ச்சியிலும் இணைந்தன. தேவாரம், திருவாசகம், முதலிய கவிதைகள் இசைக்கலை இணைந்த இலக்கியப் பாடல்களே ஆகும். நடமாடும் வடிவத்தில் இறைவன் காட்சி தரும் கோலம் 'நடராசர்' எனப்பட்டது. அது இறையுணர்வும் நடனக்கலையும் இணைந்த இணைப்பாகும். பிற்காலத்தில் இதில் மந்திரமும் தத்துவமும் இணைந்தன. மேலைநாட்டார் இந் நடனக் கோலத்தில் அறிவியலையும் கண்டனர். இங்ஙனம், எல்லாம் சேர்ந்த 'ஒருமை வடிவாக' அவ்வுருவம் விளங்குகிறது எனினும், அதில் தமிழரின் சிற்பக் கலைச் சிறப்பையும், கலையுணர்வால் அவர்கள் இறையுணர்வு பெற்றதையும் ஐயமின்றி அறியலாம்.

பண்பாட்டின் காவலர்

சமுதாயத்தில் பண்பாட்டின் காவலர்களாகச் சிலர் எப்போதும் இருப்பார்கள். அவர்களோடு நட்புக் கொண்டு தமிழகத்தை ஆட்சிபுரிந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பண்பாட்டைக் காக்கும் காவலர்களாக விளங்கினர். சங்க காலத்தில் அவர்களுக்கு மிக்க மதிப்பிருந்தது. அவர்கள் ஊர் மக்களுக்கு ஆலோசனை கூறி நல்வழிப்படுத்தினர். தொல்காப்பியர், திருவள்ளுவர் போன்ற பெரும்புலவர்கள் அவர்களின் மதிப்பைப் பற்றிக் கூறியுள்ளனர். இப்புலவர்களும் பண்பாட்டின் காவலர்களே. பிசிராந்தையார் என்னும் புலவர், தம் ஊரில் இத்தகைய சான்றோர் பலர் இருந்ததால், தமக்கு மனக்கவலை உண்டாகவில்லை; அதனால் நரையும் உண்டாகவில்லை என்று கூறியுள்ளார்.

யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர் என வினவுதிர் ஆயின்...
ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே

—புறம் 191

காலமாறுபாட்டால் பண்பாடும் மாறிவிடாமல் பாதுகாக்கும் பணியை, இத்தகைய சான்றோர்கள், தமிழகத்தில் எல்லாக் காலத்திலும் செய்து வருவதால்தான், முன்பு கூறியவாறு 'பண்பாட்டுத் தொடர்ச்சி' தமிழகத்தில் இருந்து வருகிறது. பண்டைக்காலக் கவிதை போல இடைக்காலத்தில் தேவார, திருவாசகம் போன்ற பண்பாட்டுக் கவிதைகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராமலிங்கர் பாடிய பண்பாட்டுக் கவிதையான 'திருவருட்பா'வும் தோன்றின. பாரதி, பாரதிதாசன் ஆகிய இருபதாம் நூற்றாண்டுக் கவிஞரும் பண்பாட்டு வழியிலிருந்து விலகிச் சென்றவர்கள் அல்லர்.

புற நாகரிகம்:

ஆளுமையுடன் கலந்து திகழும் பண்பாட்டின் வெளித் தோற்றமே நாகரிகம். உட்பொருளில்லாத புறத் தோற்றத்தின் பெருமையும் நாகரிகம் எனப்படும். இந்நாகரிகத்தின் கூறுபாடாகிய ஆடை, அணி, கட்டிட அமைப்பு—ஆகியவற்றிலும் தமிழ் மக்கள் பழங்காலம் முதல் சிறந்து விளங்குகின்றனர். கண்பார்வை நுழையாத, நெருக்கமான நெசவு அமைந்த, பாம்புத்தோல் போன்றனவும், பாலாவி போன்றனவும் ஆகிய ஆடைகளைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் உள்ளன. சிலப்பதிகாரத்தில் கூறப்படும் நகரமைப்பும், கட்டிட அமைப்பும் குறிக்கத் தக்கவை. ஏழு மாடங்களைக் கொண்ட பெரிய வளமனைகளும் அக்காலத்தில் இருந்தன. எண்ணற்ற அணிகலன்களின் பெயர்களை இலக்கியத்திலும், அவற்றுட் பலவற்றை ஆலயங்களிலும் சிற்பங்களிலும் காண்கின்றோம். மகளிர் காலில் அணியும் 'சிலம்பு' என்னும் அணியை மையமாக வைத்துத் தமிழில் காப்பியமே தோன்றியது.

முடிவுரை:

''கட்டிடங்கள் உயரமாகக் கட்டலாம். அணிகளை ஆடம்பரமாக அணியலாம். ஆனால் புறநாகரிகங்களாகிய இவை எல்லாம் பெருமையில்லாதவை: பணிவுற்ற நடத்தை, இன்சொல் கூறும்பண்பு—இந்த இரண்டுமே வாழ்க்கையின் அணிகலன்கள்'' என்று திருவள்ளுவர் கூறும் பண்பாட்டுக் கருத்தும் பழங்கால முதல் இன்று வரை தமிழரிடையே நிலவிவருகிறது. பழைய கட்டிடங்கள் இன்று இல்லை; பழைய அணிகளும் இன்று இல்லை. ஆனால் பண்பாடு அழியாது இருந்து வருகிறது.

டாக்டர் (திருமதி) இராதா தியாகராசன்
M.A., B. Sc., Ph. D
மீனாட்சி இல்லம்
மதுரை

தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கை

மா. இளையபெருமாள்

இலக்கியத்தின் வெளியீட்டு முறை பற்றியும் அது நுவல் பொருள் பற்றியும் உள்ள ஒரு வரையறையைத் தொல்காப்பியர்,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். இதனுள் நாடக வழக்கு என்பதனை இளம் பூரணர் 'சுவைபட வருவன வெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல்' என்று விளக்குகிறார். செல்வம், குலம், ஒழுக்கம், அன்பு முதலியவற்றில் ஒத்த தலைவனும் தலைவியும் தமரின் நீங்கி எதிர்பட்டனர் எனவும், வேட்கை மிகுதியாற் புணர்ந்தனர் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையால் திருமணம் நிகழ்த்தினர் எனவும் தொடர்ச்சியாக வருதலை எடுத்துக் காட்டாகக் காட்டுகின்றார். இளம் பூரணரைப் பொறுத்த அளவில் இத்தகைய ஐந்திணைக் கூட்டம் உலகில் அரிதாகவே நிகழ்வது. எனவே நுவலப்படுகின்ற முறை போன்று உலகில் நிகழாது. ஆனால் நுவல்கின்ற பொருள் உலகில் நிகழ்வனவற்றோடு ஒத்து வருவனவே. இதுவே தொல்காப்பியர் கருத்து என்பது இளம் பூரணர் உரை.

ஆனால் நச்சினார்க்கினியர் நாடக வழக்கு என்பதற்கு இலக்கிய மரபு என்றே பொருள் தெளிவாகக் கொள்கின்றார். இலக்கிய வெளியீட்டு முறையில் மரபு மிகமிக இன்றியமையாதது என்பதைத் தொல்காப்பியர் வேறு பல இடங்களிலும் வற்புறுத்துகின்றார்.

'மரபுநிலை திரிதல் செய்யுட்கில்லை'
'மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்'
'மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடுநூல்'

முதலியன சில சான்றுகள். அகப்பொருள் இலக்கிய மரபிற்கு எடுத்துக் காட்டாக, பாடற் பொருளை முதல், கரு, உரிப்பொருள் என வகுப்பது. தலைவனும் தலைவியும் கூடுதலைக் குறிஞ்சிக்கு உரிய உரிப்பொருள் என்பது போன்று பிற திணைகளுக்கும் வரையறுப்பது முதலியவற்றை நச்சினார்க்கினியர் சுட்டிக் காட்டுகின்றார். 'நாடக வழக்கு என்பன புணர்ச்சி, உலகிற்குப் பொதுவாயினும் மலை சார்ந்து நிகழுமென்றும்...பிறவாறும் கூறும் செய்யுள் வழக்கம்' என்பது அவர் உரை. இத்தகைய இலக்கிய மரபு பெரும்பான்மைப் பாடல்களில், அவற்றின் உட்பொருளாகிய உலகியல் வழக்கோடு இணைந்து வரும் என்பது அவர் முடிவு. எடுத்துக்காட்டாக

மனை நெடு வயலை வேழம் சுற்றும்
துறை கேழ் ஊரன் கொடுமை நாணி
நல்லன் என்றும் யாமே;
அல்லன் என்னும் என் தடமென் தோளே,

என்ற பாடலில் 'ஊர்-முதற்பொருள், வயலை; வேழம் - கருப்பொருட்கள்; ஊடல் - உரிப்பொருள்' என மூன்றும் கூறல் நாடக வழக்கு என்றும், தலைவனைத் தலைவி பரத்தையிற் பிரிவு காரணமாகக் கொடுமை கூறல் உலகியல் வழக்கு என்றும் அவர் விளக்குகின்றார். எனவே நச்சினார்க்கினியர் கருத்தில், உலகியல் நிகழ்ச்சிகளை இலக்கிய மரபின் வழிநின்று பாடல்கள் அமைகின்றன என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

எனினும் இத்தகைய இலக்கண மரபு இல்லாது சிறுபான்மையாக வரும் பாடல்களையும் நச்சினார்க்கினியர் எண்ணாமல் விடவில்லை. எடுத்துக்காட்டாக

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் உழந்து அட்ட தீம்புளிப் பாகர்
"இனிது" எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே

என்ற குறுந்தொகைப் பாடல், தயிர் பிசைந்த கையைக் கழுவாமலே நெகிழ்ந்த உடையைத் திருத்திக் கொண்டு, கண் புகையினுற் கலங்க, தான் சமைத்த மோர்க் குழம்பைச் சுவைத்து உண்கின்ற கணவனைக் காணுந்தோறும் மகிழ்ச்சி அடைகின்ற பெண்ணைப் பற்றிப் பேசுகின்றது. இதனில், முதல், கரு, உரிப் பொருளமைப்பு இல்லையாதலால், 'இஃது உலகியலே வந்தது' என விளக்குகின்றுர். அதனேடு, இவ்விரண்டிலும் இலக்கியத்திற்கு 'உலகியல் வழக்கே சிறந்தது' என்ற கருத்தையும் தருகின்றுர். இதற்குச் சான்றுக

> வழக்கு வழிப்படுத்தல் செய்யுட்குக் கடனே

என்ற தொல்காப்பியத்தைச் சுட்டிக் காட்டுகின்றுர். எனவே நச்சினர்க்கினியர் கருத்துப் படி, 'இலக்கியம், உலகில் நிகழ முடியாதவற்றைப் பேசாது' என்ற கருத்து அமைகின்றது. இதற்கு அவர் இரண்டு காரணங்களைக் காட்டி வற்புறுத்துகின்றுர்.

1. இலக்கிய ஆசிரியர்கள் 'யாண்டும், எஞ்ஞான்றும் இல்லன கூறுர்'

2. இல்லாத ஒன்று கேட்போர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பம் செய்யாது.

இவ்வாறு உலகியல் வழக்கை நச்சினர்க்கினியர் வற்புறுத்தினுலும், உலகியலில் காணப்படும் எந்நிகழ்ச்சியையும் பாடலின் உட்பொருளாக அமைக்கும் உரிமையை அவர் இலக்கிய ஆசிரியனுக்குக் கொடுக்கவில்லை. உலகியலில் உயர்ந்தோர் ஒழுகலாறு தான் இலக்கியத்தில் அமையவேண்டும் என்பது அவர் கருத்து. இதற்கு ஆதாரமாக

> வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர் கட்டாகலான

என்ற தொல்காப்பிய நூற்பாவையும் சுட்டிக் காட்டுகின்றுர். இதனுல்தான் சங்க இலக்கியத்தில்காணப்படும்பரத்தையிற் பிரிவு, கைக்கிளை, பெருந்திணை முதலியனவும் சான்றேர் வாழ்க்கையில் நிகழ்வன எனக் குறிப்புடவும் அவர் தயங்கவில்லை.

சிறந்த இலக்கியம் இவ்வாறு அமைந்திருக்கின்றது என்பதனேடு சிறந்த இலக்கியம் இவ்வாறு அமைய வேண்டும்; இவ்வாறு அமைதல் கூடாது என்பதனையும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றுர் என்ற கருத்துடையர் நச்சினர்க்கினியர். அதனுல்தான்,

> வழக்கொடு சிவணிய வகைமையான

என்ற தொல்காப்பிய நூற்பா அடியைத் தனி நூற்பா ஆக்கி, (இவையெல்லாம்) சான்றேர் செய்த புலனெறி வழக்கோடே பொருந்தி வந்த பகுதிக்கண்ணேயான பொருள்களாம் என்றும், 'எனவே புலனெறி வழக்கின் வேறுபடச் செய்யற்க' என்னும் பொருள் எழுதுகின்றுர். எடுத்துக் காட்டாகக் கீழ்க்காணும் கட்டுப்பாடுகள் சில.

1. ஒருவன் புகழைப் பாடும் போதும் மரபைமீறி மிக உயர்த்திப் பாடல் கூடாது,

2. ஒருவனை இழித்துக் கூறும்போதும் மரபை மீறி மிக இழித்துப் பாடல் கூடாது.

3. உலாத்தலைவர்மீது குலமகளிர் காதல் கொண்டதாகப் பாடுதல் கூடாது.

இவ்வாறு இலக்கிய ஆசிரியனது விடுதலை உணர்விற்கு எதிரான பல கட்டுப்பாடுகளை நச்சினர்க்கினியர் ஆங்காங்கு அமைத்துச் செல்கின்றுர். ஒரு சிறந்த இலக்கியம் வருங்கால இலக்கியங்களுக்கு நுவல் பொருளிலும் வழிகாட்டி என்பது அவர் கருத்துப் போலும். அன்றியும் இலக்கியத்தில் பயனைக்கூட 'இன்புறுத்தல்' என்பதனேடு, உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்து ஒழுகுதற்குமாகும் என்பதும் அவர் கருத்து.

இக்கட்டுரையில் கூறப்படும் தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கையினைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

இளம் பூரணர் கருத்துப்படி உலகியல் வழக்கு இலக்கியத்தில் உட்பொருளாக அமைய வேண்டும், அது இலக்கியத்தில் சுவைபடச் சொல்லப்படுதல் வேண்டும் என்பது.

நச்சினர்க்கினியர் உரைப்படித் தொல்காப்பியர் கருத்துக்கள் பின்வருவன;

1. இலக்கிய வெளியீட்டு முறை மரபினைப் பின்பற்றிப் பெரும்பான்மை அமைதல் வேண்டும்.

2. மரபு முறைக் குறிப்பு இல்லாதும் இலக்கியம் சிறுபான்மை அமையலாம்.

3. மரபைப் பின்பற்றியே இலக்கியப் பொருள் அமைதல் வேண்டும்.

4. மரபை மீறி இலக்கியப் பொருளும் நுவல் முறையும் அமைதல் கூடாது.

5. உலகில் நிகழ முடியாதனவற்றை இலக்கிய ஆசிரியன் பாடுதல் இல்லை.

6. உலகியல் என்பது சான்றேர் வாழ்வில் நிகழ்வனவே.

M. Elayaperumal M.A., M. Litt.
Dept. of Tamil, University of Kerala
Kariavattam, Trivandrum-695 017

'கனி'

சேடி பிறக்குமிடம் பொதிகை —அவள்
செழித்து வளருமிடம் வைகை
ஓடித் திரியுமிடம் சோலை—அவள்
உறவு இன்றியது பாலை
ஆடிக் களிக்குமிடம் ஆழி—அங்கு
அசையும் அலைகளவள் தோழி
நாடி யோடுமிடம் மன்றம்—அந்த
நங்கைக்குப் பெயரென்ன, 'தென்றல்'!

அழகு வயற்புறத்தில் உலவி—அங்கு
அலையும் கதிர்களிடை பரவி
உழவன் தோட்புறத்தைத் தழுவி—அவன்
உடலின் வேர்வையெல்லாம் கழுவி
உழத்தி ஆடையினைத் தடவி—அவள்
ஒளிரும் கூந்தலுடன் பழகி
உழைக்கும் கூட்டத்துடன் ஒன்றும்—அந்த
உயர்மகள் பெயரென்ன, 'தென்றல்'!

கூடும் காதலர்க்கு உறவில்—ஆஹா
கொள்ளை இன்பமவள் வரவில்!
வாடும் காதலர்க்குப் பிரிவில்—ஐயோ
வதைக்கும் அவள்படலம் பெரிது!
காடு கழனியெலாம் செல்வாள்—அவள்
கவிஞன் பாடல்களில் நிற்பாள்!
பாட எனக்கும் பொருள் தந்தாள்—அந்தப்
பாவைக்குப் பெயரென்ன, 'தென்றல்'!

த. கா. காதர்கனி எம். ஏ., பி. இட்.,
தமிழ்த்துறை
டாக்டர் ஜாகிர் உசேன் கல்லூரி
இளையான்குடி
முகவை மாவட்டம்

சங்கத் தமிழில் கிளைமொழிகள்

டாக்டர் செ. வை. சண்முகம்

சங்க இலக்கியம் என்று இன்று பெரும் பாலாராலும் ஒத்துக் கொள்ளப்படுபவை தொல்காப்பியமும் எட்டுத்தொகையும் பத்துப் பாட்டுமே. சங்க மருவிய காலத்தில் எழுந்த திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியனவும் மொழித் திறத்தால் சங்க இலக்கியத்தோடு ஒத்திருப்பதால் அவற்றை யும் உள்ளடக்கி சங்கத் தமிழ் இலக்கியம் என்று நாம் அழைக்கலாம்.

சங்கத் தமிழ் நூல்களுக்குள் மொழித் தன்மையில் சிறுசிறு வேறுபாடு உண்டு. அவற்றைக் கால வளர்ச்சியில் ஏற்பட்ட மொழிமாற்றமாகக் கருதி அந்நூல்களைக் கால வரிசையில் முன்பின்னாக எழுதப்பட்டதாகக் கருதுவர் இலக்கிய ஆராய்ச்சியாளர்கள்.

இந்த நூல்களுக்குள் காணப்படும் மொழி வேறுபாடுகள் அனைத்தையும் காலவளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றமாகக் கொள்ள முடியாது. வரலாற்றுக் கண்கொண்டு பார்க்கும்போது சில வேறுபாடுகள் மிகத் தொன்மையான மொழித் தன்மையைக் காட்டுவதாகவும் வேறு சில பிற்கால அதாவது இடைக்காலத் தமிழின் தன்மைக்கான ஆதாரத்தைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளன. உதாரணமாக, நான்கு என்ற எண்ணுப்பெயர் நால்கு என்று சங்க இலக்கியத்தில் வந்திருப்பது மிகப் பழைமை யான வடிவம் எங்கோ பாதுகாக்கப்பட்டு பயிலப்பட்டுள்ளது. அவ்வாறே 'செய' 'செய்யின்' என்ற வாய்பாடுகள் (Patterns) சில வினைகளில் பகரமெய்யை ஏற்று (நடப்ப, நடப்பின்) வரும்பெரு வழக்கத்திற்கு மாறாகச் சிறுபான்மையாக ககர மெய்யை ஏற்று(நடக்க, நடக்கின்) வருவது இடைக்காலத் தமிழுக் குரிய ஆதாரமே தவிர கால வளர்ச்சியால் ஏற்பட்ட மொழி மாற்றமாகக் கருதமுடியாது. எனவே இம் முறையில் வரும் வேறுபாடுகளைக் கிளை மொழிகளின் (dialect) செல்வாக்கு என்றே கொள்ளவேண்டியுள்ளது. மேலும் ஒரு கால எல்லைக்குள் எழுந்த நூல்களின் மொழியை விளக்க முறையில் ஆராயும்போது வரலாற்று வளர்ச்சி என்று கூறக்கூடாது; எல்லா வேறுபாடுகளையும் கிளைமொழி வேறு பாடாகவே கொள்ள வேண்டும் என்பர் மொழி இயலார்.

தமிழில் செந்தமிழ் என்ற ஒரு வழக்கு காணப்படுகிறது. தொல்காப்பியரும் 'செந் தமிழ்' என்று பேசுகிறார். சொற்களை நான்கு வகையாகப் பாகுபாடு செய்து அவற்றை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வட சொல் என்றும் குறிப்பிட்டுள்ளார். (சொல். 397) இயற்சொல்லுக்கு விளக்கம் கொடுக்கும் போது,

> செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
> தம்பொருள் வழாமை இசைக்குஞ் சொல்லே.
> (சொல். 398

என்று கூறியுள்ளார். இதற்கு உரையாசிரி யர்கள் 'செந்தமிழ் நிலத்து வழக்கு ஆதற்குப் பொருந்திக் கொடுந்தமிழ் நிலத்தும் தம் பொருள் வழுவாமல் உணர்த்துஞ் சொல்' என்றும் பொருள் எழுதி செந்தமிழ் நிலம் என்பது 'வைகையாற்றின் வடக்கும் மருத யாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்' என்று விளக்கமும் தந்துள்ளனர். இவர்கள் கருத்துப்படி தமிழ் நாட்டில் மேலே குறிப்பிட்ட இடங்களில் வழங்குவது செந்தமிழ் ஆகிறது. அதாவது இன்றைய மொழியில் கூறினால் அதுவே பொது மொழி (Standard language) ஆகிறது. ஏனைய இடங்களில் பேசப்பட்டது கொடுந் தமிழ் அல்லது கிளைமொழிகள் (dialects) என்று அழைக்கப்பட வேண்டும்.

சங்க இலக்கியங்களை ஆராய்ந்தால் பழந் தமிழகத்தில் சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று பேரரசர்களும் பல சிற்றரசர்களும் ஆட்சி புரிந்தனர் என்பது தெளிவாகிறது.

> 'மண்டினி கிடக்கை தண்டமிழ்க்கிழவர்
> முரசு முழங்கு தானை மூவர்' (புறம் 35)

> 'தமிழ் கெழு மூவர்' (அகம் 31)

என்ற வரிகள் மூன்று பேரரசர்கள் ஆண்ட உண்மையை வலியுறுத்தும். இம் மூன்று பேரரசர்களுள்ளும் பாண்டி நாட்டுத் தலைநக ரான மதுரையே தமிழோடு பெரிதும் தொடர்பு உடையது. அங்குத்தான் தமிழ்ச் சங்கம் அமைந்திருக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது.

> 'தமிழ் கெழு கூடல்' (புறம் 58)

> 'தமிழ் நிலைபெற்ற தாங்கருமரபின்
> மகிழ்நனை மறுகின் மதுரை'
> (சிறுபாணாற்றுப்படை 66)

என்ற வரிகள் மதுரைக்கும் தமிழுக்குமுள்ள நெருங்கிய தொடர்பை விளக்கும். ஆனல்

மதுரைத் தமிழ் மட்டும் செந்தமிழாகக் கருதப் பட்டதா என்பதற்கு ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. மேலும் பிற வட்டாரங் களில் வழங்கிய தமிழின் சிறப்புத் தன்மை பற்றியும் செய்திகள் கிடைக்கவில்லை. அவ்வாறே பழந்தமிழகத்தில் பல்வேறு தொழில் செய்து வந்த உழவர், குறவர், ஆயர், வேட்டுவர், பரதவர் போன்ற மக்கள் பேசிய மொழியில் என்னென்ன வேறுபாடு இருந்தன என்பதும் அறிய முடியவில்லை.

சங்கத் தமிழ் நூல்களிடையே பல பொதுத் தன்மைகள் காணப்படுகின்றன. இவை எந்தப் பகுதியில் எவ்வகை மக்களால் பேசப்பட்டன என்று அறிய முடியா விட்டாலும் அக் கூறுகளைப் பொதுமொழி என்று அழைக்கலாம். இதுவே ஒரு கிளை மொழி என்றும் கொள்ளவேண்டும். முன்னிலைப் பன்மையைக் குறிக்க 'நீயிர்' என்ற வடிவத்தைப் பயன்படுத்துதல், நிகழ்காலத் திற்கும் எதிர்காலத்திற்கும் ஒரே விகுதியைப் பயன்படுத்துதல், சகரத்தில் தொடங்கும் சொற்களுக்குப் பதிலாக வேறு சொற்களைக் கையாளுதல் ('சரக்கு' என்பதற்காக 'பண்டம்' என்பது போன்றது) முதலிய பல கூறுகள் சங்கத் தமிழின் பொதுமொழிக் கூறுகும்.

பழைமையான மொழியின் தன்மைகளை உடைய மற்றொரு கிளைமொழியும் சங்கத் தமிழில் உண்டு. இதைத் தொன்மொழிக் கிளைமொழி (Archaic Dialect) என்று அழைக் கலாம். நான்கு என்பதை நால்கு என்றும் ஒன்பது என்பதைத் தொண்டு என்றும் இக் கிளைமொழியில் வழங்கியிருக்க வேண்டும். இவ்வாறே நான்காம் வேற்றுமைக்குமுன் மகர ஈற்று அஃறிணைப் பெயர்கள் அத்துச் சாரியை இல்லாமல் வழங்குவது (ஆசிரியம்- ஆசிரியருக்கு. வேழம்-வேழக்கு போன்றவை) இக்கிளை மொழியின் பண்பாகக் கருத வேண்டும். ஏனெனில் இந்தக் கூறுகள் எல்லாம் வரலாற்று முறைப்படி பார்க்கும் போது பழைமையான மொழிக் கூறுகள் என்று ஒப்பிலக்கண ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

சங்க இலக்கியத்திலும் சிறுபான்மை வழக்காக இருந்து அவையே இடைக் காலத்தில் பெருவழக்காக இருக்குமானுல் அக் கூறுகளை இடைக்காலத் தமிழின் தாய்க் கூறுகள் என்றும் அக் கூறுகளைத் தொல்- இடைக்காலக் கிளைமொழி (Proto Middle Tamil dialect) என்றும் அழைக்கலாம். மேலே குறிப்பிட்டதுபோல செய, செய்யின் என்ற வாய்பாட்டு வினையெச்சங்களில் ககரம் உள்ளது இக்கிளை மொழிக்குரிய பண்பாகும். செய்யாது என்ற வாய்பாட்டை எதிர் வினை யெச்சமாகப் (Negative verbal participle) பெரும்பான்மையும் இருக்க சிறுபான்மை செய்யாமல் என்ற வாய்பாட்டில் (வழங்காமல், மறவாமல் போன்றவை) உள்ளதும் இக்கிளை மொழிக்குரிய பண்புகளில் ஒன்று. இப் பண்புகளே இடைக்காலத்தில் பெருவழக்காக பயிலப்பட்டுள்ளது.

சங்க நூல்களில் வழங்காத சில இலக் கணக் கூறுகள் சங்க காலத்தில் பேச்சு வழக்கத்திலாவது இருந்திருக்க வேண்டும் என்பர் தமிழ்மொழி வரலாற்று ஆராய்ச்சி யாளர்கள். இக்கூறுகள் உடைய கிளை மொழியை வழக்குத் தமிழ் கிளைமொழி (Colloquial dialect) என்று அழைக்கலாம். முன்னிலைப் பன்மையாக 'நீம்' என்று வடிவம் வழங்குவது, சகரத்தை முதலாக உடைய திராவிட மொழிக் குடும்பத்திற்கு உரிய சொற்களை ஆளுவது (சரக்கு, சக்கை போன்றவை) போன்ற கூறுகள் இக்கிளை மொழியின் பண்புகளாகக் கருதலாம்.

ஆகவே இன்றைய நிலையில் சங்கத் தமிழில் பொதுத் தமிழ் கிளைமொழி, தொன் மொழிக் கிளைமொழி, தொல் இடைக்காலக் கிளைமொழி, வழக்குத் தமிழ் கிளைமொழி என்ற நால்வகைக் கிளை மொழிகள் வழங்கி யிருக்கவேண்டும் என்று கருதலாம்.

டாக்டர் செ. வை. சண்முகம்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
ரீடர், மொழியியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608 101

தமிழ்ச் சங்கத்தைப் பற்றி...

இலண்டன் தமிழ்ச் சங்கத்திற்கு நான்கு புரவலர்கள் உள்ளனர். இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் ஆரம்பத்தில் இருந்து அரும் பாடுபட்டவரும் பல ஆண்டுகள் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றியவருமான டாக்டர் சேகர்; இலண்டன தமிழ்ச் சங்கம் பதிவுபெற அரும்பாடுபட்டவர்களில் ஒருவரும், அக் காலத்தில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றிய வருமான கேப்டன் C.S.K. பதி; இலண்டன் தமிழ்ச் சங்கம் பதிவு பெற்ற காலத்தில் இருந்து நிர்வாகக் குழுவிலும், பின்னர் பல ஆண்டுகள் தலைவராகவும் பணியாற்றிய திரு. L. மெய்யப்பன்; இலண்டனிலே இரண்டாண்டு காலம் பணியாற்றிய போதிலும் பல ஆண்டு பழக்கத்தின் அபிமானத்தைப் பெற்றவரும், இந்த மலர் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வெளிவர வேண்டும் என அருட்பாடுபட்டவருமான டாக்டர் பொன். கோதண்டராமன்.

தமிழ்ப் புதுக் கவிதைகளில் ஒரு புதிய போக்கு—

படிமச் சிதைவே படிமம் ஆதல்

இரா. சந்திரசேகரன்

[கட்டுரையாளர், தற்காலத் தமிழ் இலக்கியத்தில் நான்காண்டுகள் 'டாக்டர்' பட்டத்திற்காக ஆராய்ச்சி செய்தவர். புதுக் கவிதை இயக்கத்துடன் நீண்டகாலத் தொடர்புடையவர். இக் கட்டுரையில் 'படிமச் சிதைவு' பற்றி ஆராய்கிறார்.]

தற்காலத் தமிழிலக்கியத்தில் புதுக் கவிதை மிகச் செல்வாக்குப் பெற்று வருகிறது. பல அற்புதமான சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 'எழுத்து' இயக்கத்தின் மூலமாக ந. பிச்சமூர்த்தி, சி. சு. செல்லப்பா முதலியவர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட புதுக் கவிதை இயக்கம் வல்லிக்கண்ணன், தர்மூ சிவராமு, சி. மணி, க. நா. சு, இரா. மீனாட்சி, தி. சொ. வேணுகோபாலன் போன்ற கவிஞர்களாலும், சி. கனகசபாபதி போன்ற ஆய்வாளர்களாலும் பேணி வளர்க்கப் பட்டது. அதன் பின் இரண்டாம் கால கட்டத்தில் கசடதபற, ஞானரதம், கணையாழி இதழ்களின் மூலம் நல்ல கவிஞர்கள் புதிதாக அறிமுகமானார்கள். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் ஞானக்கூத்தன், கங்கை கொண்டான், மகாகணபதி, கலாப்ரியா முதலியோர். இந்த நேரத்தில் தாமரை, கண்ணதாசன் மூலமாக நா. காமராசன் மிக அற்புதமான ஒரு சோதனைக் கவிஞராக வெளிப்பட்டார்.

கோவையிலிருந்து 'வானம்பாடி' இயக்கம் புதுக் கவிதைக்கு ஒரு புதிய வரலாற்றை ஏற்படுத்தியது.[1] புவியரசு, சிற்பி, அக்கினி புத்திரன், தமிழ்நாடன், தமிழன்பன், அப்துல் ரகுமான், மு. மேத்தா, முதலிய பல நல்ல கவிஞர்கள் அறிமுகமானார்கள். இதைத் தொடர்ந்து மதுரையின் வான்குயில் இயக்கம் பரிணுமன் பொன்மணி, வேலுசாமி, நவபாரதி சீனிச்சாமி ஆகியோரைத் தந்தது. இது தவிர அங்கங்கே பல நல்ல கவிஞர்கள் தமிழ்ப் புதுக் கவிதை முயற்சிகளில் இறங்கினார்கள்.

இப்படி நல்ல கவிஞர்கள் பலர் இத் துறையில் இறங்கியதன் மூலம் அற்புதமான பல சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் படிமச் சிதைவும் ஒன்று. படிமச் சிதைவையே ஒரு படிமமாக்குகிற சோதனை முயற்சி, தமிழ்ப் புதுக் கவிதைகளில் அறிமுகமாகியிருப்பதை ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

'படிமச் சிதைவு' என்பது கவிஞனின் ஆற்றல் குறைவினால் அல்லது கலை வெளிப்பாட்டின் தோல்வியினால் ஏற்படுகிற ஒன்று அல்ல என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே படிமம் உடைந்து போவதில்லை. படிமத்தைச் சிதைப்பதன் மூலமாக வேறொரு படிமப் பாங்கை உருவாக்கக் கவிஞன் முயற்சி செய்கிறான். எவ்வாறு 'நவீன ஓவியத்தி'ல் ஓர் உருவத்தின் புற வடிவத்தைச் சிதைப்பது ஒரு கலையாகிறதோ, நவீன நாவலில் கருப்பின்னலை (plot) சிதைக்கின்ற நிலையே ஓர் அமைப்பு (Form) ஆகிறதோ அதுபோலவே படிமத்தைச் சிதைக்கிற நிலையே ஒரு கலை வெளிப்பாடு ஆகிறது. கண், வாய், மூக்கு முதலியவற்றை நவீன ஓவியன் சிதைத்துப் போடுவதானது அவனுக்கு ஓவியம் வரையத் தெரியாத காரணத்தினால் அல்ல. அவனுக்கென்று சில நோக்கங்கள் உண்டு. அதுபோலவே சமீப காலத் தமிழ்ப் புதுக் கவிதைகளில் காணப்படுகிற படிமச் சிதைவானது, கவிஞன் படிமத்தை வளர்க்கத் தெரியாமல் உடைத்துவிட்டு நின்று விழிக்கிற நிலைமை என்று கொள்ளாமல் இது ஒரு வகைக் கலை வெளிப்பாட்டு முறைமை என்னும் கருத்துடன் இந்தப் பாங்கினை ஆராய்தல் வேண்டும். இன்னும் அடிப்படையாக நின்று சொல்லப்போனால், ஒரு கலையில் அல்லது இலக்கிய வடிவத்தில், சாதாரண மரபு வழக்காக, பொருளும் வடிவமும் இணையாக வளர்ந்து வெளிப்படும். இந்த இணைவளர் வளர்ச்சியின் போது ஏற்படும் முறை நாதம் (rhythm) அளவுக்கு மீறிய ஏற்றத் தாழ்வுகளுக்குட்படாமல் இருப்பதால் எளிதாகப் புரிகிறது. ஆனால் நவீன ஓவியம் அல்லது நவீனக் கவிதைகள் சிலவற்றில் வேண்டுமென்றே அந்த இணைவளர் முறையை, அல்லது பொருளுக்கும் வடிவிற்குமுள்ள தொடர்பின் 'இணைமை'யைக் கலைஞன் சிதைக்கிறான். இந்த 'இணைமை சிதைப்பு' நிலை ஒரு கலையின் எல்லா மூலங்களி (media)லும் வெளிப்படும். படிமச் சிதைவும் அவற்றுள் ஒன்று. இந்தப் படிமச் சிதைவு ஒரு கலை வெளிப்பாடாக, தற்காலத் தமிழ்ப் புதுக்

கவிதைகளில் சில கவிஞர்களால் முயற்சி செய்யப்படுகின்றன.

இந்தப் படிமச் சிதைவுப் போக்கின் சில நிலைகளை ஆய்வதற்கு முன்னால் கவிதை அல்லது கலையில், 'படிமம்' அதனுடைய வெளிப்பாட்டு நிலையில் என்ன செயல் திறன்களைக் கொள்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். பொதுவாக, மேற்போக்காக படிம வெளிப்பாட்டு முறைகளையொட்டி இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, படிமம் விளக்க நிலையில் அமைதல். படிமம் என்பதை ஓர் உத்தியாகக் கொள்கிற பான்மையின் விளைவு இது. தமிழ்ப் புதுக் கவிதைகளைப் பொறுத்த அளவில் உருவகத்தின் உச்ச வளர்ச்சி நிலை என்ற நிலையில் இவ்வகைப் படிமங்கள் உருவாக்கப்படுகின்றன என்று மதிப்பிடத் தோன்றுகிறது. இரண்டாவது, படிமம் உணர்ச்சிப் பிழம்பின் பிரதிபலிப்பாக அமைதல். 'அனுபவ சத்தியம்'[2] என்று வெ. சாமிநாதன் மிகப் பொருத்தமாகக் கருத்தாழத்துடன் குறிப்பிடுவது இதை விளக்கும் நல்ல தொடராக அமையும்.

படிமம் என்பதே காட்சித் தோற்றமும் உணர்ச்சிப் பாங்கும் இணைகிற அனுபவம். இவ்விரண்டும் எந்தெந்த அளவுகளில் இணைகின்றன என்பதைப் பொறுத்துத் தான் மேற்கண்ட இருவகைகளின் பிரிவும். காட்சித் தோற்றத்தின் கலை வெளிப்பாடு முதன்மை பெறுகிற பொழுது முதல் வகையாகவும், உணர்ச்சிப் பாங்கின் கலை அழுத்தம் முதன்மை பெறுகிற பொழுது இரண்டாம் வகையாகவும் படிமம் நிலைபெறுகிறது. அமைப்பியல் நிலையில் இவ்விரண்டு வகைகளுக்கும் இடையே இருக்கிற அடிப்படையான வேறுபாடு என்ன என்றால் முதல் வகையில் படிம வெளிப்படு செயல் நிலை வடிவமைப்பு நோக்குடையது. (Concretionary). இரண்டாவது வகையில் படிம வெளிப்படு செயல் நிலை, பீறிட்டு வெளிப்படுகிற (explosive) நோக்குடையது.

படிமச் சிதைவு ஒரு வெறும் உத்தியாகவும் ஏற்படலாம். ஆனால் படிமச் சிதைவு ஓர் அனுபவ நிலையில் நிகழுகிற பொழுதுதான் அந்தக் கவிதைப் பொருளுக்கும் அந்த வெளிப்பாட்டுக்கும் இடையே ஒரு நெருங்கிய உறவு ஏற்பட்டு, அந்த வெளிப்பாட்டின் அமைப்பு நிலை அந்த இடத்தில் அவ்வாறு அமைவதற்குரிய 'நியாயம்' ஏற்படும்.

தமிழ்ப் புதுக் கவிதை வரலாற்றில் படிம ஆளுமை சிறப்பான இடம் பெற்று வந்திருக்கிறது என்பது வெளிப்படை. அதிலும் முதல் வகைப்பட்ட 'படிம விளக்க'த் திறனில் பல கவிஞர்கள் அற்புதமான சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள். புதுக் கவிதையின் முதல் கால கட்டத்தில் ந. பிச்சமூர்த்தி, சி. சு. செல்லப்பா, தி. சொ. வேணுகோபாலன் எஸ். வைத்தீஸ்வரன், தருமூ. சிவராமு ஆகியோர் படிம வெளிப்பாடுகளில் பல நல்ல வெற்றிகளை ஈட்டினார்கள். தருமூ. சிவராமின் 'விடிவு'[3] 'இறப்பு'[4] ஆகிய இரண்டு கவிதைகளும் மிகக் குறிக்கத்தக்கவை. இரண்டாம் கால கட்டத்தில் நா. காமராசன், அப்துல் ரகுமான், தமிழன்பன் நாஞ்சில் ஆரிது, அபிபுல்லா, ஞானக்கூத்தன் முதலியவர்கள் சிறப்பான சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். இன்குலாப் கவிதைகளில் மிகச் சிறப்பான படிமங்களை அடுக்கடுக்காகக் காண முடிகிறது. இந்த முதல்வகைப் படிம அமைப்பிலேயே பல வகையான பாணிகளை (Patterns) வகை பிரித்து ஆராய்வது மிகச் சுவையான ஆராய்ச்சியாக அமையும்.

காட்சித் தோற்றத்திற்குள்ளே தத்துவ முனைப்புகளைக் கொண்டு வந்து இணைத்துப் படிமமாக்குகிற சோதனை முயற்சிகளில் புவியரசு, சிற்பி, பரிணாமன், கை. தி, ஞானி[5] ஆகியோர் சில புதிய வழிகளை அமைத்து வெற்றி கண்டிருக்கிறார்கள். புவியரசுவின்[6] 'சிலுவைப் பாடும்,' சிற்பியின் 'ராட்சதச் சிலந்தி'[7]யும் இந்த வகைப் படிமக் கோட்பாட்டில் மிக நல்ல வெற்றி கண்டிருக்கின்றன.

அக்கினிபுத்திரன், தமிழவன்[8] ஆகியோர் கவிதைகளின் படிமங்களில் ஆற்றல் தருகிற நெகிழ்ச்சித் தன்மை அதிகமிருக்கின்றது. மு. மேத்தா, சக்திக்கனல், மீரா, கலாப்ரியா, ஆகியோர் படிம அமைப்புகள் ஒரு தனி பாணிக்குட்பட்டவை. உருவகத்தின் பாதிப்பு மிகுந்த அளவில் இவர் தம் படிமங்களில் பொருந்துகின்றன.

படிம அமைப்பியலைப் பற்றிப் பேசும் போது மிகக் குறிப்பிட்டுப் பேச வேண்டிய ஒரு கவிஞர் ப. கங்கைகொண்டான். பல அற்புதமான படிமப் பிரயோகங்கள் அவருடைய கவிதைகளில் காணப்படுகின்றன.

படிமச் சிதைவு என்று பேசுகிறபோது படிமத்தைச் சிதைத்து எறிந்து விட்டுப் போவதைக் குறிப்பதில்லை. நவீன ஓவியத்தில் கண்ணையும் மூக்கையும் சிதைத்துப் பொருத்துகிறபொழுது ஓவியன் ஏதோ ஒரு தொடர்ச்சியை மனப்பதிவு நிலையில் வைத்திருக்கின்றான் என்பதை உணரவேண்டும். அதே போலவே படிமச் சிதைவு நிலைக்கும் ஒரு தொடர்ச்சி உண்டு. இந்தத் தொடர்ச்சி முனைப்பு ஒவ்வொரு கவிதையிலும் என்ன என்பதை இனங் காண நாம் முயல வேண்டும். இந்தத் தொடர்ச்சி முனைப்பையொட்டியே படிமச்

சிதைவின் பல நிலைகள்—அதாவது படிமப் பண்பு சிதைதல், படிம வடிவம் சிதைதல், படிம வளர்ச்சி சிதைதல், படிமப் பழமை சிதைதல், படிமக் கற்பிதம் (Myth) சிதைதல் ஆகியன அமைகின்றன, இந்தத் தொடர்ச்சி முறைப்பிற்கும், சிதைவு நிலைக்கும் இருக்கக் கூடிய தொடர்பினை வைத்துக் கொண்டு படிமச் 'சிதைவின் வளர்ச்சி'யை நாம் உணர முடியும். சமீப காலத் தமிழ்ப் புதுக் கவிதைகளில் சிதைவின் வளர்ச்சிப் பாங்கு கீழ்க் கண்ட இரு வழிகளில் அமைகின்றன என்று மதிப்பிடலாம்.

(1) அக மைய வளர் பாங்கு,
(2) புற மைய வளர் பாங்கு.

அக மைய வளர் பாங்கில் கவிதையின் பொருள் மையமும், படிமத்தின் தோற்ற மையமும் இணை சேர்ந்து அதனுடைய வளர்ச்சியில் படிமத்தின் ஏதாவதொரு அமைப்பியல் தன்மை சிதைந்து கொண்டு வரும். புறமைய வளர்பாங்கில், பொருள் மையத்தின் பின்னணி அல்லது தூண்டு சக்திகள் படிமத்தின் தோற்ற மையத்துடன் தொடர்பு கொள்ளும். இதன் மறு தலையாக பொருள் மையமும் படிமத் தோற்றப் பின்னணியும் இணையலாம். ஆனால் இந்த மறுதலை அமைப்பில். தமிழ்ப் புதுக் கவிதையில் படிமச் சோதனைகள் நடைபெறவில்லை என்றுதான் மதிப்பிடத் தோன்றுகிறது. அது போலவே இரண்டினுடைய பின்னணி சக்திகள் மட்டும் இணைவதும் அதிகமாகச் சோதனை செய்யப்பட வில்லை. இந்தச் சோதனை முயற்சியின் முளை மட்டும் ப. கங்கை கொண்டானின் 'ங்ஙா' என்ற கவிதையில் காணப்படுகிறது.[9]

தர்மூ அரூப் சிவராம் இந்தப் படிமச் சிதைவு வெளிப்பாட்டைக் கையாளுவதில்—சில இடங்களில்—மிக அற்புதமான வெற்றிகள் அடைந்துள்ளார். அக மைய வளர் பாங்கு அவருடைய படிமச் சிதைவின் ஒரு 'Pattern' ஆக மிகச் சிறப்புப் பெறுகிறது. 'அற்புதம்'[10] என்ற அவருடைய கவிதையில் ஒரு துறைமுகத் தொழிலாளியின் உழைப்புத் திறன் பொருள் மையமாகிறது. இந்தப் பொருள் மையத்தோடு அவருடைய படிமத் தோற்ற மையம் இணைந்து வெளிப்பட்டுக் கொண்டு வருகிறது.

"துருப் பிடித்த
இரும்புக் கோடுகளினூடே
சிதறும்
பயனற்ற
உப்பு நீர்ப் பாறைகள்"

—என்று வருகிறபொழுது, 'உப்பு நீர்ப் பாறைகள்' என்பது வந்து ஒரு சிதைவை ஏற்படுத்துகிறது.[11] ஆனால் இந்தச் சிதைவுதான் இந்தக் கவிதையின் தலையாய சிறப்பம்சம், இந்தச் சிதறல் நேரிட்டதற்கு. கவிஞருடைய கருத்துப் படி, சிதறல், பயனின்மை ஆகிய இரண்டும் தனித் தனியே அழுத்தம் பெறுதல் காரணமாகிறது.[12] இந்த அழுத்தம் இரண்டிலும் தனித் தனியே நேரிடுவதற்குக் காரணம் பொருள் மையத்தின் தாக்கம். இவ்வளவு தூரம் இந்தத் தாக்கம் வீச்சுடையதாக இருப்பதற்குக் காரணம் ஒரு குறிப்பிட்ட பொருளைப் பாட நினைக்கிற கவிஞர் அந்தப் பொருள் மையத்திலே மிக ஆழமான பார்வையைச் செலுத்தியிருப்பதுதான். இந்த ஆற்றல் தர்மூ சிவராமிடம் இருப்பதினாலேதான் கொள்கை ரீதியிலே இவரோடு மிக முரண்பாடு கொள்கின்றவர் கூட இவருடைய கவிதை, கலைவெளிப்பாட்டுத் திறனை மதிக்கத் தோன்றுகிறது.[13] அடுத்தடுத்த வரிகள் 'பொருள் வாயிலாகக்' கலத்தல் என்று அவர் தன்னுடைய கவிதை வரியமைப்பை விளக்குவதானது,[14] மேலே நாம் சொன்ன கருத்தமைவுக்கு அரண் செய்வதாகும். ஆக, தர்மூ சிவ்ராம் படிமச் சிதைவுப்போக்கின் ஒரு குறிப்பிட்ட பாணியை மிகத் திறம்படக் கையாண்டு வெற்றி பெறுகிறார் என்பது வெளிப்படை.

புறமைய வளர் பாங்கில் படிமச் சிதைவுகள் நேரிடுவதற்கு நித்திலன், மாதவி ஆகியோருடைய கவிதைகள் நல்ல சான்றுகளாகும். மாதவியின் 'செந்தாழம்பூக்கனவு'[15] என்ற கவிதை இந்த வகை அமைப்பை ஒட்டி ஆய்ந்து பார்க்கவேண்டிய, மிக அற்புதமான கலை வெளிப்பாட்டுத் தன்மையோடு கூடிய கவிதையாகும்.

நெருப்புக் குளித்த நீண்ட கறுப்பிரவில்
துடிக்கும் இதயம்—வெடித்து
வெண்முகிற் குஞ்சுகளை வடிக்கிறது...
வெண்முகிற் குஞ்சுகள் கரையுமிருட் கடலில்
விசித்தழும் அலைகள்—மணலில்
சூனியக் கால்தடங்கள் பதிகின்றன...
கசியும் தென்றற் கீற்றின் புல்லரிப்பில்
கருகும் இதய வீணை—அதன்
செந்தாழம் பூக் கனவுகள் நீப்கின்றன...

(வானம்பாடி-1)

சமூக அவலங்களையும், அந்த அவலங்களில் தோய்ந்து மீள நினைக்கிற உணர்வுகள் தோல்வியடைகிற வேதனையின் அந்தக் கண நேரத்தின் ஏமாற்றத்தையும் வேதனையையும் வெளிக் கொட்டுகிற—படிம அமைப்பைக் காட்ட வரும் இக் கவிதையில், படிமச் சிதைவு, ஒரு குறிப்பிட்ட தன்மையை மட்டும் (aspect) கருதாமல் அதன் எல்லாத் தன்மைகளையும் உள்ளடக்கி ஒரே நேரத்தில் அதை உடைத்து, இன்னொரு படிமத் தோற்ற மையத்திற்குள்

கலக்கவிடுகிற வெளிப்பாட்டுடன் அமைகிறது. இந்த வெளிப்பாடு கொஞ்சம் கடினமான காரியம்தான். அடுத்து வருகிற படிம மையத்துடன் கலக்கவிடும் செயலில் எங்கோ ஒரு இடத்தில் முரண் அல்லது தடுமாற்றம் விளைந்தாலும் கவிதை முழுவதுமே படுதோல்வியடைந்து 'செத்துப்' போய்விடும். ஆனால் மாதவியின் இந்தக் கவிதை இந்த வகைப் படிமச் சிதைவில் ஒரு சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது. படிமத் தோற்ற மையம், பொருள்மையத்தின்பின்னணியோடுதொடர்புபடுவதானது, இந்த 'செந்தாழம்பூக் கனவு' கவிதையைப் பொறுத்தவரை, இந்தக் குறிப்பிட்டவகை வெளிப்பாட்டு அம்சம் சிறப்புப் பெறக் காரணமாக அமைகிறது. இந்தக் கவிதையின் இன்னொரு தனித் தன்மையான அம்சம், உருவ நிலைப்பட்ட படிமங்களுக்கு அருவத் தன்மைகளை நுழைப்பதன் மூலமாக கவிதைக்கு செறிவமைப்புத் தன்மை (Organic) யினைத் தருதல் ஆகும். இந்த 'Organism' கவிதையில் வெறும் உத்தியாக அமையுமானால் அது கலைக்கு அழகில்லை. 'செந்தாழம்பூக்கனவு' கவிதையில் இந்த அடி உயிர்ப்பு கவிதைப் பொருளின் பாதிப்புடன் அதன் தீவிரத்தை எட்டியிருக்கிறதா என்பது தனியே ஆராய வேண்டிய செய்தியாகும்.

இந்த வகை அமைப்புடன் கூடிய படிமச் சிதைவு காட்டுவதில் நல்ல வெற்றி கண்ட மற்றொரு கவிதை நித்திலனின் 'செம்மைக் கீற்று[16] ஆகும்.

வைம மொக்குள் ஆமை வரிசைகள்
உடைந்த கோபிற் சிலைகள்
நிமைப் பாம்பினம் தொட்டுக் கருகும்
தெய்வச் சிறுமலர் ஆயின்
மௌனம் சுமந்த வானம்
மையிருள் பூசிய உலகம் எனினும்
செம்மைக் கீற்றும் தோன்றும்—செந்
தாமரைக் காடும் மலரும்...

(தாமரை-ஜூன். 70)

மேலே கண்ட செந்தாழம்பூக்கனவு கவிதையும், இந்தச் 'செம்மைக் கீற்று' கவிதையும் இரண்டுமே புறமைய வளர்பாங்கு அமைப்புக்குட்பட்டாலும் இரண்டிலும் வேறு வேறு 'பாணி'களைக் காணமுடிகிறது. முதலாவது கவிதையில் ஒரு படிமம் சிதைந்து அடுத்த படிமத்தில் கலக்கிறது. இந்தக் கலத்தல் தன்மை அந்தக் கவிதைப் படிமச் சிதைவின் அடிப்படை. ஆனால் செம்மைக் கீற்றில், அடுத்த படிமத்துடன் கலக்கச் செய்கிற தன்மையை விட, தனித்தனிப் படிமக் கூறுபாடுகளை, அதாவது படிமத்தை ஏற்படுத்திச் சிதைக்காமல், தனித்தனிச் சிதைவுக் கூறுகளை இணைத்து ஒருபடிமக் கலவையை ஏற்படுத்தும் முயற்சி காணப்படுகிறது. அந்தப் படிமக் கலவை ஏற்படுத்தும் முயற்சியில் செம்மைக் கீற்று ஒரு புதிய வகையை அறிமுகப்படுத்துகிறது.

இவ்வாறு புறமைய வளர் பாங்குத் தன்மையில், படிமங்களைச் சிதைத்துப் புதியதொரு படிமக் கலவையை ஏற்படுத்தும் முயற்சியை முல்லை. ஆதவனின் 'யுக சந்தி'[17] யிலும் காண முடிகிறது.

கங்கைத் தெருவின் பூர்ணிமைகள்
காயும் பாலைப் பெரும்பொழுதில்
முல்லைத் தோட்டச் சாளரங்கள்
முறுக்கித் திறக்கும் சந்திப்பு...

என்று ஆரம்பமாகும் இவருடைய கவிதை ஒரு புள்ளியைநோக்கி கவிதை படிமக்கலையை நிகழ்த்துகிறது. ஆனால் கலை வெளிப்பாட்டுத் தன்மையில் இந்தக் கவிதையின் அக ஆளுமையினைப் பாதிக்கக் கூடிய சில அழுத்தங்கள் (Dippressions)ஏற்பட்டுள்ளன. சாதாரணமாக ஒரு படிமச் சிதைவு வெளிப்பாட்டில் இம்மாதிரி அழுத்தங்கள்—கவிதையின் புற அம்சங்களை ஒட்டியவை—ஏற்படுவது இயற்கை. ஆனால், அம்மாதிரி அழுத்தங்கள் கவிதையின் அக ஆளுமையைப் பாதித்துவிடாமல் காப்பாற்றுவது கவிஞனின் ஆற்றல்ஆகும். அப்படி அது பாதிக்குமானால் படிமச் சிதைவின் ஒத்திசைவு (Rhythm) குலைந்து போகும். மேலே கண்ட 'யுக சந்தி'யில் அக ஆளுமை பாதிக்கப்படுவதன் காரணமாக ஏற்பட்ட ஒத்திசைச் சீர்குலைவுக்கு இரண்டு காரணங்களைப் பொதுவாகச் சொல்லலாம். ஒன்று, வேறோர் பரிமாணத்தில் கவிதையின் அக ஆளுமையும் படிமச் சிதைவும் ஏற்படுத்துகிற ஓர் இசை யோட்டத்திற்குள், கவிதையின் புற இசைமை (Physical rhythm) யைக் கவிஞர் நுழைக்க முயல்கிறபோது இரண்டும் ஒன்றுக்கொன்று இணைய முடியாமல் முரண்படுகிறது. இரண்டாவது கவிதையின் கருப்பொருள் பரிமாணத் (Thematic dimension) திற்கு ஏலாத ஒரு பரிமாணத்தில் நின்று, சில சொற்களின் படிமங்களைக் கவிஞர், கவர்ச்சி கருதி உபயோகிப்பதால், அந்தச் சொற்பிரயோகம் வெறும் அலங்காரமாகிவிடுகிறது.

சோதனைக் கால கட்டங்களில் இம்மாதிரி பாதிப்புகள் நிகழ்வது தவிர்க்க முடியாதது. ஆனால் இந்தப் பாதிப்புகளை இனங் கண்டு கொண்ட பார்வையுடன் முயற்சிகள் தொடருமானால் அற்புதமான கலை வெளிப்பாடுகள் ஏற்படும்; புதிய சாதனைகள் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

இந்தப் படிமச் சிதைவு வெளிப்பாடு ஒரு கலையம்சமாக மாறுவதன் அடிப்படை என்ன

என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சிதைவு என்பது முரண்பாடுகளின் குறியீட்டு வெளிப்பாடு. இந்தச் சிதைவுக்கு ஒரு அகக் கருத்திசைமை (Conceptual rhythm) அமைந்து பொருந்துகிறபொழுது அது கலை யாகிறது. மேலே இதுவரை நாம் கண்ட படிமச் சிதைவு வகைகள் (Patterns) அமை வதற்கு முரண்பாடுகளின் கருப்பொருள் தன்மை (Thematic aspect) எந்த வகையி லேனும் துணை செய்கிறதா அல்லது பாதிப்பு ஏற்படுத்துகிறதா என்று கவனிக்க வேண்டும்.

தமிழ்ப் புதுக் கவிதைகளைப்—படிமச் சிதைவு இயல்பு கொண்டவைகளைப்—பொறுத்தவரை முரண்பாடுகளைப் பற்றிய கருப் பொருள் பார்வை நிலையில் இரண்டாகப் பகுத்துப் பார்க்க வாய்ப்பிருக்கிறது.

(1) சமூக முரண்பாடுகளின் காரணமாக அமையும் தனி மனித முரண்பாடுகளை மட்டும் வெளிப்படுத்த முனைதல்.

(2) தனி மனித முரண்பாடுகளுக்குக் காரணமாக அமையும் சமூக முரண்களுக்கு அழுத்தம் தருதல்.

—இவ்விரண்டினுடைய அடிப்படையும் ஒன்றுதான். ஆனால் வெளிப்பாடுகள், பார்வை நிலையினாலே, வேறுகின்றன. தர்மூசிவ்ராம் முதல் வகைக் கவிஞராக அமைகிறார். ஞானக் கூத்தன், வைத்தீசுவரன், சி. மணி, தி. சொ. வேணுகோபாலன், இரா. மீனாட்சி முதலி யோர் புதுக் கவிதையின் மற்ற துறைகளில் இந்த வகைக் கவிதைகள் சிறப்பாக எழுதி யிருக்கிறார்கள். படிமச் சிதைவு வெளிப் பாட்டை அவர்கள் முயன்றால் இந்தவகைக் கவிதைகள் அழுத்தமுடன் வெளிப்படும்.

மக்கள் கவிஞர்களாக சுட்டிக்காட்டப் பெற வேண்டும் என்று விரும்புகிற நா. காம ராசன், இன்குலாப், தமிழன்பன், சிற்பி, புவியரசு, அக்கினிபுத்திரன், மீரா முதலிய வர்கள் இரண்டாம் வகைக் கவிஞர் வரிசையில் அமைவார்கள். இந்த துறையில் நின்று படிமச் சிதைவு சோதனைகள் செய்தவர்கள், மேலே காட்டியபடி, மாதவியும், நித்திலனும்.

படிமச் சிதைவைப் பொறுத்தவரை, இதுவரை வந்துள்ள தமிழ்க் கவிதைகளை மட்டும் வைத்துக் கொண்டு பார்க்கிற பொழுது, தனி மனித முரண்பாடு கவிதைப் பொருளை ஆட்சி செய்கிறபொழுது அங்கே படிமச் சிதைவின் வளர்ச்சி அகமையாகவும், சமூக முரண்பாடுகள் கவிதைப் பொருளை ஆட்சி செய்கிறபொழுது புறமை யமாகவும் அமைகின்றன. மேலே சொல்லப் பட்ட மாதவி, நித்திலன் ஆகியோருடைய கவிதைகளில் பொருள் மையத்தின் பின்னணி படிமச் சிதைவின் தூண்டு சக்தியாக அமை வதற்கு இந்த வகை விளக்கம்தான் பொருந்துவதாக இருக்கும். ஆனால் இந்த விதியை, கவிதையில் படிமச் சிதைவுக்கும் பார்வை நிலைக்கும் இடையே உள்ள உறவு நிலை படிமச் சிதைவினை இப்படித்தான் அமைக்கும் என்ற பொதுக் கொள்கையாக அங்கீகரிக்க முயல்வதில் சில தடைகள் ஏற்படலாம். இதுவரை, தமிழ்ப் புதுக் கவிதைகளில் இந்தமாதிரி அமைந்திருக் கின்றன, என்று விளக்கம் சொல்வதே பொருத்தமாகும்.

தமிழ்ப் புதுக் கவிதைகளில் பல சோதனை கள் மேற்கொள்ளப்படுவதில், படிமத்தைச் சிதைக்கின்ற கலையம்சத்தின் சில நிலைகளை இதுவரை கண்டோம். இது மிகச் சமீபத்தில் முயற்சிக்கப்பட்ட ஒன்று. ஆனால் நல்ல வெற்றி கண்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்தின் சமூக முரண்பாடுகளின் வெளிப் பாட்டு முயற்சிகள், கலைத் தன்மைகளோடு அமைவதற்கு இந்தச் சோதனைகள் நல்ல சான்றுகளாகின்றன. சமூக அவலங்களால பாதிக்கப்படுகிற உணர்ச்சிகளின் கொந்தளிக் புத் தன்மையும் வெறுமையும் நம்பிக்கையும் மாதவி, நித்திலன் ஆகியோர் தம் கவிதைப் படிமங்களின் சிதைவுத் தன்மையின் கலையம்ச மாகிறபோது, உழைப்பின் வெறுமை தர்மூ சிவராமின் கவிதையில் கலையாகிறது. இந்த முயற்சிகள் தொடருமானால் தமிழ்ப் புதுக் கவிதைகளில் சில நல்ல அற்புதமான கவிதைப் கலையாளுமைகள் உருவாகும் என்பதில ஐயமில்லை.

இரா. சந்திரசேகரன். எம், ஏ, பி. எஸ்ஸி,

தமிழ்த் துறை
அரசு கலைக் கல்லூரி
கோவை—641018

குறிப்பு விளக்கம்

1 சி. கனகசபாபதி: தீபம்: பேட்டி—ஆகஸ்டு 73—ப. 25.
2 வெ. சாமிநாதன், 'கண்ணாடியுள்ளிருந்து' முன்னுரை அஃ மார்ச் 73.
3 தருமு சிவராமு, புதுக் குரல்கள் ப—30.
4 தருமு சிவராமு, புதுக் குரல்கள்—ப. 32.
5 ஞானி, 'கல்லிகை' வானம்பாடி—7.
6 புவியரசு, வானம்பாடி—9.
7 சிற்பி, வானம்பாடி—3.
8 தமிழவன், ஆக்டோபசும் மீர்ப்பூவும்:
9 ப. கங்கை கொண்டான், 'க்ஙா'- வானம்பாடி—10.
10 தர்மு சிவ்ராம், 'கண்ணாடியுள்ளிருந்து' அஃ 8, 9, 10
11 காண்க தர்மு சிவ்ராம்: 'தர்சனம்': ப. 6—அஃக 8,9,10.
12 காண்க, தர்மு சிவ்ராம்: 'தர்சனம்' ப. 6.
13 பீனிக்ஸ், 'கண்ணாடியுள்ளிருந்து' மதிப்பீடு: உதயம் ப. 19
14 தர்மு சிவ்ராம் தர்சனம்: அஃ 8; 9, 10.
15 மாதவி, 'செந்தாமம்பூக் கனவு' வானம்பாடி—1
16 மித்திரன், 'செம்மைக் கீற்று' தாமரை; ஜுன் 1970, ப. 46
17 முல்லை. ஆதவன், 'புகசக்தி' வானம்பாடி—10

தமிழ்ச் சங்கத்தைப் பற்றி...

இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் புரவலர் டாக்டர் பொன். கோதண்டராமன் தமிழகத்தில் இருந்து இரண்டு தமிழ் நூல்களையும் ஒரு ஆங்கில நூலையும் தாயகம் திரும்பிய குறுகிய காலத்தில் வெளியிட்டுள்ளார். இலக்கண உலகில் புதிய பார்வை, பி.பி.சி தமிழோசையில்; Studies in Tamil Linguistics ஆகிய இவரது வெளியீடுகளால் இலண்டன் தமிழ்ச் சங்கம் பெருமைப் படுகிறது.

❖ ❖ ❖

இலண்டனிலே தமிழ் வளர்க்க பல நிறுவனங்கள் உள்ளன. இவற்றுடன் இலண்டன் தமிழ்ச்சங்கம் நல்லதொடர்பு வைத்துக் கொண்டுள்ளது. B.B.C.யில் வாரம் மூன்று முறை தமிழ் ஒலிபரப்பு இடம் பெறுகிறது. பிரிட்டிஷ் மியூசியத்தில் சுமார் 18,000 தமிழ் நூல்கள் உள்ளன. இலண்டன் பல்கலைக் கழகத்தில், கீழ்த்திசை நாடுகள் மற்றும் ஆப்ரிக்கா பிரிவில் தமிழ் நூலகம் உள்ளது. இலண்டன் பல்கலைக் கழகத்தில் தமிழில் PhD. செய்ய வாய்ப்பு உண்டு. ஆங்கில நாட்டுத் தமிழறிஞர்களான டாக்டர் ஆஷர்; டாக்டர் மார், டாக்டர் கௌர் ஆகியோருடன் இலண்டன் தமிழ்ச் சங்கம் நல்ல தொடர்பு வைத்துள்ளது. இலண்டன் பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ் கற்கும் மேல் நாட்டவர்கள் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தினர்களாக உள்ளனர். இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் விழாக்கள் பெரும்பாலும் (Indian Y.M.C.A.) இந்திய இளங்கிருத்துவர் மன்றத்தில் உள்ள மகாத்மா காந்தி மண்டபத்தில் நடைபெறும். இந்திய இளங்கிருத்துவ மன்றமும் இலண்டன் தமிழ்ச் சங்கமும் இணைந்து பணியாற்றுவதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் புரவலர் டாக்டர் சேகர் அவர்கள் (Indian Y.M.C.A) இந்திய இளங் கிருத்துவ மன்றத்தின் நிர்வாகக் குழுவில் ஒரு அங்கத்தினர் ஆவர்.

❖ ❖ ❖

தமிழ்த் தலைவர்கள் இயற்கை எய்துகின்ற நேரத்தில் இலண்டன் தமிழ்ச் சங்கம் அஞ்சலி செய்து வந்துள்ளது. அறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, ஔவை T. K. சண்முகம், மோகன் குமாரமங்கலம் முதலிய தமிழ்த் தலைவர்கள் மறைந்த போது இலண்டன் தமிழ்ச் சங்கம் அஞ்சலி செய்துள்ளது.

ஐந்நிலங்களில் அக்காலத் தமிழர்தம உணவு முறை

சாரதா நம்பி ஆரூரன்

தமிழரது நாகரிகம், கலை, சமயம், இலக்கியம் போன்ற துறைகளில் மட்டுமன்றி உணவுத் துறையிலும் சிறப்புற்றிருந்தமையை இலக்கியங்கள் வாயிலாக அறியும்போது வியப்படைகிறோம். அக் காலத்தில் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நில அமைப்பின்படி ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவ்வைந் நில இயல்புகளுக்கேற்ப உணவு முறைகளும், வாழ்க்கை முறைகளும் மாறுபட்டிருந்தன.

குறிஞ்சி என்பது மலையும், மலை சார்ந்த இடமுமாகும். தமிழ்க் கடவுளாம் முருகனை இக் குறிஞ்சி வாழ் வேடர்கள் வழிபட்டனர். தேனும் தினைமாவும், கிழங்கு வகைகளும் இவர்களது முக்கிய உணவுப் பொருட்கள். கார் காலத்தில் செம்புற்றின் ஈயலை இனிய மோரோடு கூட்டி சமைத்த புளிங்கறியைச் சிறு தினையோடு சேர்த்து மலைநாட்டினர் உண்டதாகப் பாரியின் மலைவளம் பற்றிக் குறிக்கையில் கபிலர் கூறுகிறார்.

"செம்புற்ற ஈயலின் இன்அலைப் புளித்து"
—புறம் 120

என்று குறிப்பிடுகின்றார்.

குதிரைமலை மிக்க வளமுள்ள நாடு. அந்நாட்டு மக்கள் பசும்பாலை உலைநீராக்கி சந்தன விறகை எரித்து தினை சமைத்து அகன்ற வாழை இலையில் மானிறைச்சியோடு உண்டனராம். மலைவாழ் வேடர் குடிமக்கள் விருந்தோம்பலில் விருப்புடையர். தம்மிடம் உள்ள வரகு, தினை இவற்றை இரவல் மாக்களுக்கு அளித்து, புது விளைவும் வாரா நிலையில் விருந்து வரக் கண்டும் மனம் சலியாது, கதிர் கொய்து உலர்த்திய வித்தினையேனும் உரலில் பெய்து குத்தி உணவு தருவாள். பசியோடு செல்ல விடமாட்டாள் என வேடர் குடி மகளிரின் விருந்தோம்பும் திறம் பற்றிப் புறம் பகரும்!

மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த இடமுமாகும். வேளாண்மையே இந்நிலத்தின் முக்கியத் தொழில். உண்டு களித்து ஒய்ந்த இந்நில மக்களுக்குரிய கருப்பொருள் ஊடல் என்றமைந்தது சாலப் பொருந்துமல்லவா? மருத நிலத்துறையும் குடியானவர்கள் காலையும் மாலையும் புறாக்கருப் போன்ற புஞ்சை வரகைப் பால்பெய்து சமைத்து, தேனுடன் கலந்தும், அத்துடன் கொழுத்த முயலின் சூடான இறைச்சியையும் உண்டதாக.

காலை அந்தியும் மாலை அந்தியும்
புறவுக் கருவண்ண புன்புல வரகின்
பாற்பெய் புன்கம் தேனொடு மயக்கிக்
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த ஒக்கலொடு
—புறம் 34

என்று ஆலத்தூர் கிழார் குறிப்பர்.

நெல் விளையும் வயலில் புள் ஓட்டுபவர் பனைமட்டை விறகால் கழிமீனைச் சுட்டுண்டு அதோடு வெம்மையான கள்ளினையும், தெங்கின் இளநீரையும் அருந்தியதை,

நெல்விளை கழனிப் படுபுள் ஒப்புநர்
ஒழிமடல் விறகின் கழிமீன் சுட்டு
வெம்கள் தொலைச்சியும் அமையார் தெங்கின்
இளநீர் உதிர்க்கும் வளமிகு நன்னாடு பெற்றனர்
—புறம் 29

என்ற பாட்டால் அறியலாம்.

வேலை செய்து களைத்த உழவர்கள் புளித்த கள்ளினை நிரம்பவும் அருந்தி புளிப்புச் சுவையை மேலும் விரும்பி களாப்பழமும், துடரிப் பழமும் உண்டு, அப்படியும் திருப்தி அடையாததால் மணற் குன்றுகளில் ஏறி கருநாவற் பழத்தைப் பறித்துண்டதை,

புளிச்சுவை வேட்ட செங்கண் ஆடவர்
தீம்புளிக் களாவொடு துடரி முனையின்
மட்டுஅறல் நல்யாற்று எக்கர் ஏறி
கருங்கனி நாவல் இருந்து கொய்துண்ணும்

என்ற பாடல் வரிகளால் உணரலாம்.

நல்லியக் கோடானது ஆமூரில் உழவர் குல நங்கை ஆடவரில்லாத சமயத்தில் இல்லத்திற்கு விருந்தினர் வரக் கண்டால், தான் கதவின் பின்னே மறைந்து கொண்டு தன் பிள்ளைகள் மூலம் விருந்தினரை உபசரிப்பாளாம்!

உலக்கை கொண்டு குற்றிய அரிசியாக்கப் பட்ட சோற்றை நண்டும் பீர்க்கங்காயும் கலந்த கலவையோடு படைப்பாள் என்பதை

அரிசி அமலை வெள்சோறு
கவைதாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்

என்ற சிறுபாணாற்றுப் படை வரிகள் விளக்குகின்றன.

மருத நிலம் பற்றிக் கூறும் போதெல்லாம் பழைய சோறு அடிக்கடி கூறப்படுகிறது. கதிரவன் உதிக்கு முன்பே வயலுக்குப் புறப்படும் உழவர்களுக்கு எளிதில் கிடைக்கக் கூடிய உணவல்லவா? அதுமட்டுமின்றி, கொக்கின் நகம் போன்ற மூக்குநுனி உடையாத அரிசிச் சோறு பற்றியும் (கொக்கு உகிர் நிமிரல்—புறம் 398) உலக்கை கொண்டு குத்திய கைக்குத்தலரிசிச் சோறு பற்றியும் அடிக்கடி இலக்கியங்கள் குறிப்பதால், அரிசியிலுள்ள புரதச் சத்து வீணாகாமல் சமைத்துண்ணும் முறையை அக்காலத் தமிழர் அறிந்திருந்ததும் உணரப்படும்.

'அவல் எறி உலக்கை பாடு விறந்து' என அவல் இடிக்கும் ஓசை பற்றியும் நிறைய கூறப்படுவதால் உழவரது விருப்பமான உணவுகளில் அவலும் ஒன்றென அறியலாம்.

முல்லை என்பது காடும் காடு சார்ந்த இடமுமாகும். இங்கு வாழும் இடையர்களுக்குப் பாலும் தயிரும் வெண்ணெயும் எளிதில் கிடைப்பவையாதலால் இந் நிலம் பற்றிய பாடல்களிலும் இவை அதிகமான இடம்பெறுகின்றன. முல்லைநிலப் பெண்கள் தயிர் கடையும் ஒலி, புலி முழக்கம் போல இருந்ததை,

புலிகுரல் மத்தம் ஒலிப்ப வாங்கி —புறம்

என்ற வரி உணர்த்தும். வெண்ணெயை எடுத்துவிட்டு கொழுப்புச் சத்தற்ற மோரையே அதிகம் விரும்பியருந்தியதை பெரும்பாணாற்றுப் படை பகர்கின்றது. அது மட்டுமல்ல. பூளைப் பூவையொத்த வெள்ளிய வரகை, வேங்கைப் பூ போன்ற வரிகளையுடைய அவரை விதையின் பருப்போடு சேர்த்து வேகவிட்டு பருப்புச் சோறு சமைத்த விதம் பற்றியும் பெரும்பாணாற்றுப் படையால் அறிகிறோம்.

நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த இடமுமாகும். இங்கு வாழ்ந்த பரதவர்களின் உணவுகளில் மீன் வகைகள் பெரும் பங்கைப் பெற்றிருந்ததில் வியப்பில்லை. பரதவர் மகளிர் பனை நுங்கின் நீரும் கருப்பஞ் சாறும் இள நீருடன் கலந்தருந்தியதை,

இரும்பனையின் குரும்பை நீரும்
பூங்கரும்பின் தீஞ்சாறும்
ஓங்குமணல் குவவுத்தாழை நீரோடு உடன்விரவி
—புறம்

என்ற பாடல் செப்புகின்றது.

பொதுவாக ஐந்நிலங்களிலும் உணவு சமைத்து முடிந்ததும், நெய்யிட்டு தாளித்தனர் என்பதையும், அப்போது 'குய்' யென்ற ஓசை எழும்பிற்று என்பதையும் 'கமழ்குய் அடிசில்' என்ற புறநானூற்றுச் சொற்றொடர் விளக்கும். துவையலைச் சோற்றில் கலந்துண்டதை,

புலவுநாற்றத்த பைந்தடி பூநாற்றத்த புகை கொளீஇ
ஊன்துவை கறிசோறு உண்டு

என்ற புறப்பாட்டு வரியுணர்த்தும். வறுமையுற்ற காலத்து சோற்றில் நீர்விட்டு பெருக்கி, கஞ்சியாக்கி அருந்தினர். இக் கஞ்சி புற்கை எனப்பட்டது. 'நெடு நீர் புற்கை' என்ற சொற்றொடரைப் பல இலக்கியங்களில் காணலாம்.

சோழன் நலங்கிள்ளியிடம் இருந்த படை மிகப்பெரிது. ஒரு பெரும் பனங்காட்டை அப் படை கடக்கும்போது முன்னணி வீரர் பனம் நுங்கை உண்டனர். இடையில் உள்ள வீரர் அவ்விடத்தைக் கடக்கையில் நுங்கு முற்றி பனங்கனியாகி விட்டதால் 'அதை உண்டனர். கடைசியில் உள்ள படை வீரர்கள் அவ்விடம் அடைந்தபோது பனங்கனி கிழங்காகிவிட்டதால் அதைச் சுட்டு உண்டதாகவும் புறநானூறு கூறுவதால் சோழனது படையின் நீளத்தையும் அக் காலத்திலும் பனம்நுங்கு, கனி, கிழங்கு அனைத்தும் மக்களால் விரும்பி உண்ணப்பட்டதையும் அறியலாம்.

அக் காலத்தில் கைம்மை நோன்பு நோற்கும் பெண்களுக்குரிய உணவு பற்றியும் புறநானூறு குறிக்கின்றது.

வெள்ளரி விதைபோன்ற பெரிய பெரிய அரிசியை நெய்யில்லாது சோறாக்கி, சுடச் சுட உண்ணாது நீர் விட்டு பழைய சோறாக்கி உண்டனராம். எள்ளுத் துவையலையும் புளி விட்டுச் சமைத்த குப்பைக்கீரை, வேளையிலை ஆகியவற்றை உண்டும் பாயின்றி பருக்கைக் கற்கள்மேல் படுத்தும் கைம்மை நோன்பு நோற்றனர் என்பதை,

அணில்வரிக் கொடுங்காய் வாள் போழ்ந்திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடை இடைக்கிடந்த கைபிழிபண்டம்
வெள்எள் சாந்தொடு புளிபெய்து அட்ட
வேளை வெந்தை வல்சியாக

என்ற பெருங்கோப் பெண்டின் பாடல் உரைக்கின்றது. கைம்பெண்டிர் தலைமழித்து வெறும் அல்லி அரிசி மட்டுமே உண்டு உயிர் வாழ்ந்தனர் என்பதை,

சிறுவெள் ஆம்பல் அல்லி உண்ணும்
களிகல மகளிர் போல

என்று நப்பசலையார் கூறுகிறார்.

மதுபான வகைகள் தமிழரால் விரும்பி அருந்தப்பட்டன. யவனர்கள் கப்பல் மூலம் கொண்டு வந்த மதுபானங்களைத் தமிழக அரசர்கள் அருந்தியதை

''யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்''

என்ற பாடலடி உறுதிப்படுத்தும். தங்களை நாடி வந்த புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் வழங்கியதோடமையாது இனிமையான கள் வகைகளைக் கொடுத்தும் அரசர்கள் விருந்தோம்பியதையும், கள்ளின் தெளிவை காட்டிலும் அடியில் உள்ள கலங்கலே அதிகமான சுவையுடையதாகக் கருதப்பட்டது என்பதையும்,

''எமக்கே கலங்கல் தருமே தானே
தேறல் உண்ணும் மன்னே'' —புறம் 322

என்ற ஆவியார் பாடலால் அறியலாம்.

கரும்புச் சாறு, இளநீர் முதலியவற்றைக் கோடைக் காலத்தில் தமிழர் விரும்பியருந்தனர். கரும்புச் சாறெடுக்க அக்காலத்திலேயே எந்திரம் இருந்தது என்பதை,

''கரும்பின் எந்திரம் சிலைப்பின் அயலது
—புறம் 322

என்ற அடியால் அறியலாம்.

''அரியல்'' என்ற சொல் கள்ளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. அக்காலத்திலேயே நெல்லிலிருந்து கள் வடிக்கப்பட்டது. 'அவிழ் நெல்லின் அரியல்' என்ற சொற்றொடரால் இதையுணரலாம்.

ஐந்நிலங்களிலுமே பொதுவாக தயிரும் மோரும், பாலும் தமிழருணவில் மிகுதியான இடத்தைப் பெற்றிருந்தன. இது தமிழரது வளமான வாழ்வை நமக்கு அறிவுறுத்தும் சான்றாயமையும். கூழையும் தயிரையும் கலந்து குறிஞ்சி நில வேடர் உண்டனர் (புறம் 326). அக்கால நங்கை மோர்க் குழம்பு தயாரித்த பாங்கினை

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ

என்ற குறுந்தொகைப்பாட்டால் அறியலாம். ''திம்புளிப் பாகர்'' என்ற சொல் இலக்கியத்தில் மோர்க் குழம்பைக் குறிக்கப் பயன்பட்டது.

காய்கறிகளைச் சோற்றுடன் சேர்த்து இன்று நாம் சமைக்கும் 'பிரியாணி' என்ற கலவைச் சோறு அன்றைய தமிழரால் எப்படி சமைக்கப்பட்டது என்பதைப் புறம் (399) பகரும். கைக்குத்தலரிசிச் சோறும், வரால் இறைச்சியும், சுறுமீனின் கொழுத்த கறியும், வள்ளைக் கீரையும், பாகற்காயும் அவ்வவற்றின் இனத்தோடு கலந்து மூடி, ஆவியிலே சோறு சமைத்தனராம். எனவே Pressure Cooker முறை அன்றே இருந்தது என்பதையும் 'முழு அவிழ் புழுக்கல்' என்று அம்முறை இலக்கியங்களில் வழங்கப்பட்ட பாங்கினையும் அறியும்போது வியக்கின்றோம்.

அந்தணர் வீட்டில் தொடுகறி (Side dish) சமைக்கப்பட்ட முறையைப் பெரும்பாணாற்றுப்படை சுவைபட விவரிக்கின்றது. கொம்மட்டி மாதுளையின் பசிய இளங்காய்களை நறுக்கி, மிளகுப்பொடி தூவி, கருவேப்பிலை மணக்க மணக்க, பசு மோரிலிருந்து எடுக்கப்பட்ட வெண்ணெயில் வதக்கி உண்டதை,

நறுமோர் வெண்ணெயில் மாதுளத்து உருப்புறு
பசுங்காய் போழொடு கறிகலந்து கஞ்சக
நறுமுறி அளைஇ

என்ற அடிகள் விளக்குகின்றன.

உணவு உண்டபின் வாழை, பலா, மா என்ற முக்கனிகள் சிறப்பாக உண்ணப்பட்டதையும், சேம்பு, வள்ளிக் கிழங்கு வகைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதையும், இளநீரும், நுங்கும் கோடை காலத்தில் அதிகம் அருந்தப்பட்டதையும் பெரும்பாணாற்றுப்படை குறிக்கின்றது.

திருமண வீட்டில் உளுந்தம் பருப்பும் அரிசியும் கூட்டி சமைத்த சோறு முக்கிய உணவாக இருந்ததை அகநானூற்றால் அறிகிறோம். இன்றும் நெல்லை மாவட்டத்தினர் உளுந்தையும் அரிசியையும் கூட்டி சோறு சமைத்து எள்ளுத் துவையலோடு உண்கின்றனர்.

இவற்றையெல்லாம் நோக்குகையில் 'Balanced diet' என்ற இன்றைய மேனாட்டினரின் திட்டமிட்ட உணவு முறையை அன்றைய தமிழர் அறிந்து அதற்கேற்ப தத்தம் உணவு முறைகளை மேற்கொண்டிருந்தனர் என்றறிகையில் வியப்பேற்படுகிறது. அரிசிச் சோற்றில் ஸ்டார்ச் என்ற சர்க்கரைப் பொருளும் நாமுண்ணும் துவரை, உளுந்து, கடலை வகைகளில் நிறைய புரோட்டின்களும், தயிர், பால், வெண்ணெ இவற்றில் கொழுப்பு, கால்ஷியம் என்ற சுண்ணாம்புச் சத்து, சக்தி (Energy) உள்ளதையும் யாரே மறுப்பர்? நம் அன்றாட உணவில் முக்கிய இடம் பெற்ற மிளகு நீரில் உள்ள மிளகு. சீரகம், உள்ளி போன்றவை உண்ட உணவு செரிப்பதற்கன்றோ உதவுகின்றன? கருவேப்பிலை, பொதினா போன்றவை மணம் தருவதோடு உணவைச் செரிக்கவைத்து, பசியேற்படுத்தும் மருத்துவப் பொருளாகவும் பயன்படுகின்றன.

இங்ஙனம் வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை அன்றே அறிந்து உணவு வகைகளில் கூட நிலத்திற்கும் பருவத்திற்கும் ஏற்ற உணவு வகைகளையும், பானங்களையும் உண்டும் அருந்தியும் வந்தனர் என்றறியும்போது அவர்தம் நாகரிகம், உணவு முறையிலும் சிறந்துள்ள பாங்கினைக் கண்டு இறும்பூதடைகின்றோம்!

பி.கு: (பி.பி.சி. தமிழோசையில் ஒலிபரப்பாயிற்று)

Mrs Saradha Nambi Aaruuran, M A.
Gilmore house
113, Clapham Common North Side
London S.W. 4, U.K.

எங்கே இருக்கிறது கோணல்?

டாக்டர் சாலை இளந்திரையன்

எனக்கு வேண்டியது என்ன?... வாழ்க்கையிலே இன்பம்; மனநிறைவு; இதைத்தான் ஒவ்வொரு மனிதனும் சொல்லுகிறான். ''வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர், இங்கு வாழும் மனிதரெல்லோர்க்கும்!'' என்று பாடியவனும், ''எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி நடக்கிறது இந்த வையம்'' என்று நாடியவனும் இதைத்தான், தங்கள் தங்கள் சொற்களிலே சொல்லி இருக்கிறார்கள்.

மகிழ்ச்சியே மனித நோக்கம்

ஒரு செடியை நட்டு வைத்து, நீர்பாய்ச்சி உரமிட்டுக் களை எடுத்துப் பேணி வந்தால், ஒருநாளில், அழகான மலர்களை ஏந்தி மகிழ்ச்சி காட்டுகிறது; நம்மையும் ஒருவித மகிழ்வுக்குள் நடத்துகிறது. மலரை ஏந்துவதே செடிக்கு மகிழ்ச்சி; அந்த மகிழ்ச்சி, அதைக் காண் போருக்கெல்லாம் மகிழ்ச்சியாகப் படர்ந்து பரவுகிறது. ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று விரும்புவதன் நோக்கம் இதுவே. அவனளவில் மனநிறைவு தருகின்ற மகிழ்ச்சி, அவனைச் சுற்றி இருப்பவர்களுக்கும் இன்பம் தருகிறது. அதனாலேதான் மனிதன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறான்.

''இது மிக நல்ல எண்ணம் அல்லவா? இதுதான் ஒவ்வொரு மனிதனின் நோக்கமும் ஆகும் என்றால், இங்கே சண்டை சச்சரவுகள் ஏன்? ஆதிக்கப் போட்டிகள் ஏன்? ஒருவன் மற்றவனை அமுக்கி அழிக்கும் கெடும்பு ஏன்? அவைகளுக்கு நியாயம் கற்பிக்கவே மதங்களும், தத்துவங்களும், சாத்திரங்களும் எழுப்பி வைக்கப்பட்டது ஏன்?....''

இதுபோன்ற சீற்றக் கேள்விகளுக்கெல்லாம் இன்றைச் சமுதாயத்திலே இடம் இருக்கிறது என்பது உண்மைதான்; தங்களுக்கு மகிழ்ச்சி தேடும் தடத்திலே, - சில மனிதர்கள் மற்ற மனித மலர்களைக் கசக்கிப் போடுகிறார்கள், இந்தக் கொடுநடைக்கும் இங்கே ஒரு நீண்ட வரலாறு இருக்கிறது என்பதெல்லாம் கண்கூடான உண்மைகளே. ஆனாலும், ஒவ்வொரு மனிதப் பிள்ளையும், தன் அடிமனத்தில், தனக்கு மகிழ்வும் அதன் மூலம் பிறர்க்கு இன்பமும் தேடவே முந்துகிறான் என்பதும் உண்மையே.

வாழ்விலக்கணப் பிழை

ஒரு தோப்பில் நெருக்கமாகப் பல மரங்கள் உள்ளன; ஒவ்வொரு மரமும் செழித்து வளரத் துடிக்கிறது. இந்த துடிப்பிலே, மற்ற மரங்களையும் இடித்துத் தள்ளி ஒதுக்கிவிட்டுத் தனது கிளையை ஓங்கி உயர்த்துகிறது ஒரு மரம்; அந்தக் கிளையையும் அமுக்கும் விதமாகத் தனது கிளையை மேலே பரப்புகிறது மற்றொரு மரம். இதனால், தோப்பே ஒரு நெருக்கடிப் பண்ணை ஆகிறது. உயர்ந்து வெளியேறி, உரிய வெளிச்சமும் காற்றும் பெற்றுக்கொண்ட மரம் செழித்து வளர்ந்து பயன்கொடுக்கிறது; உள்ளே அமுங்கி, அவைகளைப் பெற முடியாமல் போன மரம் குமைச் சாடி நலிந்து, பயனற்ற வெறும் கொம்புக் குவியலாகிப் போகிறது.

இதைப் பார்க்கின்ற மனிதன், ''வாழத் தகுதி பெற்றது வாழும்'' என்று சொல்லிக் கொள்ளுகிறான். அதாவது, மற்றவற்றை அமுக்கி விட்டு மேலே வந்த மரம் வாழத் தகுதி பெற்றது என்பதும் மற்றது அந்தத் தகுதியைப் பெற்றில்லை என்பதும் மனிதனின் கணிப்பு. இந்தக் கணக்கையே அவன் மனிதக் குலத்துக்கும் பொருத்தி விடுவதாலேதான், மகிழ்ச்சி தேட முந்தும் மனிதர்களிலே சிலர், மேல்வந்த மரம்போல், மற்றவர்களை அமுக்கிப் போடுகிற தீய வரலாற்றை மனிதனால் மாற்ற முடியவில்லை.

மரத்துக்கும், செடிகொடிகளுக்கும், மற்றப் பிராணிகளுக்கும், ''வாழத் தகுதி பெற்றது வாழும்'' என்ற வாழ்விலக்கணம் பொருந்தும் என்றால், மனிதனுக்கும் அது பொருந்தித்தானே வரவேண்டும்? என்றே பலர் நினைத்து வருகிறார்கள். இப்போது உலகெங்கும் எழுந்துள்ள பல சமுதாயச் சிந்தனை அலைகளைக் கண்டு பயந்து, பலர் இதை வெளிப்படையாகச் சொல்லத் தயங்கினாலும், - அவர்களின் உள்ளார்ந்த எண்ணம் இந்தத் தத்துவத்திலேதான் தோய்ந்து கிடக்கிறது. இல்லை என்றால், ஏய்ப்போரும் அமுத்துவோருமாகிய சிலரும் ஏய்க்கப் படுவோரும் ஒடுக்கப்படுவோருமாகிய பலருமாக இந்த உலகம் பிரிந்து இயங்கிக் கொண்டு இருக்க முடியாது அல்லவா? அத்தகையதொரு பிரிவு வரலாறே தொடர்ந்து நீடிக்கவும் முடியாது அல்லவா?

மனிதன் வேறுபடுகிறுன்...

இருக்கின்ற இடத்தை விட்டு பெயர முடியாதது தாவரம்; அதற்கு இன்பமோ வளர்ச்சியோ எதுவும் ஒரே இடத்தில்தான் ஏற்பட்டாக வேண்டும். மழை இல்லை, வெளிச்சம் இல்லை என்றோ, மற்றவற்றின் வளர்ச்சி தன்னைப் பாதிக்கிறது என்றோ, ஒரு மரம் (அல்லது செடி) தானாக இடம் பெயர்ந்து வேற்றிடம் செல்ல முடியாது; இருக்கின்ற இடத்திலேயே தனக்குப் போதிய பாதுகாப்பைத் தேடிக் கொள்ளவும் முடியாது. எனவே, ஒரு மரம் முழுமையான மகிழ்ச்சி மலர்ச்சி காட்ட வேண்டுமானால், அது, மற்றவற்றின் உணவு, ஒளி, இடம் என்பவைகளையும் பறித்துக் கொண்டே ஆகவேண்டியுள்ளது. எனவே, அவைகளைப் பொறுத்த அளவில், ''வாழத் தகுதி பெற்றது வாழும்'' என்பதே வாழ்வுக்குரிய சரியான வரைவிலக்கணம்.

விலங்குகளும் பிராணிகளும் இடம் பெயரக் கூடியவை. வெயில், குளிர், மழை, நெருப்பு போன்ற இயற்கைத் தாக்குதல்களிலிருந்து (ஓடித்) தப்பித்துக் கொள்ளும் ஆற்றல் அவைகளுக்கு உண்டு. ஆனாலும், உணவைப் பற்றிய தேவை வரும்போது, அவைகளும் தாவரங்களின் நிலைக்கே இறங்க வேண்டியதாகி விடுகிறது: அவைகளால் தங்கள் விருப்பம்போல் உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்ய முடியாததால், ஓர் இடத்தில் கிடைக்கின்ற உணவு குறைவாக இருந்தால், விலங்குகளும் பிராணிகளும் மற்றவைகளின் உரிமையைப் பறித்துத்தான் தங்களை நிறைவு செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. இருக்கவே, விலங்கு மற்றும் பிராணிகளின் வாழ்விலும், ''வாழத் தகுதி பெற்றது வாழும்'' என்ற சூத்திரமே வாழ்விலக்கணமாகி விடுகிறது.

மனிதனின் நிலை என்ன? அவன் ஓர் இடத்திலேயே பதிந்து கிடக்க வேண்டிய தாவரமல்ல; உணவையும் மற்றத் தேவைகளையும் உற்பத்தி செய்துகொள்ள முடியாத விலங்கும் அல்ல. அடிப்படைத் தேவை வகையில், மனிதனும், தாவரங்களையும் விலங்கு பிராணிகளையும் போன்றவனே யானாலும், அவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் அவனுக்கென்று தனிவழி இருக்கிறது; அதற்குரிய வாய்ப்புகளையும் அவனுடைய அறிவு படைத்துத் தந்து கொண்டு இருக்கிறது.

இருக்கின்ற இடத்திலே வறுமை என்றால், திரை கடல் ஓடியும் திரவியம் தேடிவரத் தெரிந்தவன் மனிதன்; இருக்கின்ற இடத்திலே தேவையான ஒரு பொருள் கிடைக்கவில்லை என்றால், அது கிடைக்கின்ற இடத்திலிருந்து தன்னுடைய இடத்துக்கே அதைத் தருவிக்கும் தொழிலாகிய வியாபாரத்தை வளர்த்திருப்பவன் மனிதன். இவை தவிர, தன் அறிவின் வளர்ச்சிக்கு ஏற்ப, இயற்கையின் தாக்குதல்களை இருந்த இடத்திலிருந்தே சமாளிக்கவும், தனக்குத் தேவையானவற்றை அங்கேயோ அதன் அருகிலேயோ உற்பத்தி செய்யவும் கற்றிருப்பவன் மனிதன்; அந்தக் கல்வியிலே நாள்நாளும் வளர்ச்சி அடைந்து வருபவனும் மனிதன்.

கொடுக்கலும் வாங்கலும்

இப்படி ஒரு வேறுபட்ட தளத்தில் வாழ்வு அமைத்துக் கொண்டிருக்கும் மனிதன், ''வாழத் தகுதி பெற்றது வாழும்'' என்ற இலக்கண விலங்கைத்தனக்கு மாட்டிக்கொள்ளமுடியாது; அவன் தனது வாழ்வுக்குவேறோர் இலக்கணம் கண்டு ஆகவேண்டும். மனிதப் பண்ணையிலே, தகுதிபெற்றவை தகுதி அற்றவை என்ற பாகுபாடு கிடையாது. ஒவ்வொருவர் மூலமும் ஒவ்வொரு விதமாக வெளிப்படும் சாதனை ஆற்றலை ஒன்றுபடுத்தி அதன் விளைவை ஒருங்குவைத்துப் பகிர்ந்து அனுபவிக்க அறிந்தவன் மனிதன், அவன், 'நான் விளைத்த பொருளை நீ உண்ணக் கூடாது!' என்றோ, 'நான் கண்டு பிடித்த மின் வெளிச்சத்தில் நீ பார்க்கக் கூடாது!' என்றோ மற்றவனைத் தடுக்க முடியாது. மனிதனின் படைப்புகளும் கண்டுபிடிப்புகளும் அடிப்படையிலேயே பொதுமையானவை; தனி ஒரு மனிதனுக்கே பயன்படவேண்டும் என்ற நோக்கு அவைகளிலே இல்லை.

வெவ்வேறு இடங்களில் கிடைக்கும் உப்பு புளி, மஞ்சள், மிளகாய், மல்லி, காய்கறி என்னும் அனைத்தும் சேர்ந்து ஒரு கூட்டு அல்லது குழம்பு ஆவதுபோல, பல மனிதர்கள் பல்வேறு வகையாகப் படைக்கும் பொருள்கள் அனைத்தும் இணையும் போதுதான் மனிதனின் பொதுத்தேவை நிறைவடைகிறது. ஆகவே, மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் இடம் விட்டு, ஒருவருக்கு ஒருவர் ஊட்ட உதவி செய்து கொண்டு ஒருமிக்கச் செழிக்க வேண்டிய பொதுப் பயிர்கள். இவர்கள் பொதுவில் ஏந்தும் மகிழ்ச்சியே அனைவருக்கும் மன நிறைவு தரவல்லது. எனவே, இங்கே,—மனிதப் பண்ணையில்,—இடமில்லை என்ற நெருக்கடிக்கோ, ஒருவர் உணவை ஒருவர் பறிக்கின்ற குழப்பபடிக்கோ இடமில்லை. ஒன்றைக் கொடுத்துத்தான், ஒவ்வொருவரும் மற்றவரிடமிருந்து வேறொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் நியதியின் மீது அமைந்த

வாழ்வில் அமுக்குவதற்கும் பறிப்பதற்கும் இடமில்லை.

பழக்கத் தழும்பு

'இந்த உண்மை இவ்வளவு தெளிவாக இருக்கும்போது, இங்கே,—மனிதச் சமுதாயத்தில்,—சுரண்டலும் அமுக்கலும் ஏன்? உயர்ந்தார் தாழ்ந்தார் என்ற படித்தரங்கள் ஏன்? கொடுமைகளுக்கும் இங்கே ஒரு பாரம்பரியம் இருப்பது ஏன்?...' இந்தக் கேள்விகளுக்குக் கிடைக்கின்ற பதில், ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நம்மை மிகமிக நாணமடையச் செய்கிறது; நாம் சொல்லிக் கொள்வது போல, மனிதர்களாகிய நாம், உண்மையிலேயே (மற்றப் பிராணிகளுக்கு இல்லாத) ஆறும் அறிவு உடையவர்கள் தானா என்ற அய்யப்பாட்டையே எழுப்பிவிடுகிறது!

மனிதர்களாகிய நாமும், மரஞ்செடிகளைப் போலவும் விலங்குகளைப் போலவும் இயற்கையின் ஒரு கூறுன பிராணிகளே; முன் ஒரு காலத்தில், நாமும், மற்றப் பிராணிகளைப் போல், "வாழத் தகுதி பெற்றது வாழும்" என்ற இலக்கணப்படியே வாழ்ந்தவர்கள். நமது அறிவு வளர, வளர, நாம் வேருேர் அடிப்படையில் வாழ்வு அமைத்துக் கொண்ட (மனிதப்) பிராணிகளாக வளர்ச்சி அடைந்தோம். ஆனாலும் பழக்கக் கேடு என்பார்களே, அது போல, நமது வாழ்க்கை நடைமுறை இன்னமும் மரஞ்செடிகளின் போக்கையும் விலங்குகளின் போக்கையும் பின்பற்றுவதாகவே இருக்கிறது. அந்தப் போக்கு நம் வாழ்வில் ஒரு தழும்பாகவே விழுந்து பதிந்து கிடக்கிறது...

மனிதர்களிலே பலருக்கு மற்ற மனிதர்களைப் பார்ப்பதை விட மரஞ்செடிகளைப் பார்ப்பதிலே ஒரு ஆனந்தம். பட்டணத்து வீடுகளிலே, சிலர், கள்ளியையும் கற்றாழையையும் அக்கறையோடு வைத்து வளர்த்து, நாள்தோறும் கண்டு களிக்கிருர்கள் அல்லவா? ஏன், நமது பழைய முனிபுங்கவர்கள் கூட, "நாட்டிலே மக்களோடு இருப்பதைவிட, காட்டிலே மரஞ்செடிகளோடு இருந்தால்தான் அறிவு செழுமை அடையும்" என்று சொல்லி அங்கேதானே ஆசிரமங்கள் அமைத்து வாழ்ந்தார்கள்? இன்றைக்கும், நம்மிலே பலருக்கு மக்கட்குழவிகளை விட மிருகப் பிள்ளைகளிடம் தானே அதிகமான அன்பு! சில வீடுகளில் நாய்க்கும் பூனைக்கும் கிடைக்கிற உபசாரம், இந்த நாட்டின் மனிதப் பிள்ளைகளில் எத்தனை பேருக்குக் கிடைக்கிறது?

இவைகளை எல்லாம் பார்க்கையில், மனிதர்களிலே பலர் வேறொரு சமுதாயமாக வாழ வந்த பிறகும், தங்கள் பழைய தாவர, விலங்கு வாழ்க்கையின் அடித்தளத்திலேதான் தங்கள் நெஞ்சைக் கிடத்தியிருக்கிருர்கள் என்று தெரிகிறது; மரஞ்செடிகள் மற்றும் விலங்கு பிராணிகளின் வாழ்வுகளையே பார்த்துப் பார்த்து அவர்கள், அவைகளின் வாழ்க்கை முறையையே (தங்களை அறியாமலே) தங்களின் வாழ்க்கைக் கோட்பாடாக ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள் என்றும் நினைக்க வேண்டியுள்ளது. எனவேதான், மக்களிலே பெரும்பாலோர் அடிப்படையில் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வாழ்க்கைநெறியையே மனிதச் சமுதாயத்திலே கடைப்பிடித்து வருகிருர்கள்.

எல்லோரும் குடியர்களாய்...

"ஆறு அறிவுடைய மனிதர்கள் எல்லோரும் இப்படி அய்ந்து அறிவுக்கும் மூன்று இரண்டு அறிவுக்கும் உரிய நெறியிலே வாழ முடியுமா? யாரோ சிலர் அப்படி இருந்தாலும், எல்லோருமே அப்படித்தான் என்று சொல்ல முடியுமா?" இப்படி ஒரு கேள்வி எழுவது இயல்பே. ஆனால், அதற்குத் தெளிவான விடை இருக்கிறது: இப்போது நாட்டிலே குடியர்கள்,—அதாவது புனல் குடியர்களும் புகைக் குடியர்களும், பெருகியிருக்கிருர்கள்; என்னைப் போன்ற குடியா மக்களும் சிலர் இருக்கிருர்கள். என்ருலும், ரெயிலிலும் வசுவிலும் தெருவிலும் போகிற பலர் குடித்துக் குடித்து விடுகின்ற புகையையும் புளிச்சேப்பத்தையும் என் போன்றவர்களும் (குடியா மக்களும்) குடித்துக் கொண்டுதானே இருக்கிரேம்? நாங்கள் புகைக்குடி மற்றும் புனல் குடியின் விளைவுகளிலிருந்து முழுவதுமாகத் தப்ப முடியுமா? குடியின் கேடு எங்களையும் பற்றிக் கொண்டுதான் இருக்கிறது என்பது உண்மையல்லவோ? இதுபோலத்தான்,—உல

கில் பரவிய மூடத்தனங்களாலும் தவருன தத்துவங்களாலும் சரியான அறிவுத்திசையில் வளராமல்,—தாவர விலங்கு வாழ்வுத் தளத்தி லேயே தங்கள் வாழ்வை இயக்குவோர் பலராக இருப்பதால், மற்றுள்ள சிலரும் அதுபோன்ற தொரு வாழ்வுக்குள்ளேயே அகப்பட்டுக் கிடக் கிருர்கள். ஆகவே, நமது சில நடைமுறைகள் நமது மனித மேம்பாட்டுக்கும் ஆறு அறிவிக்கும் ஒத்தவைகளாக இருந்தாலும், பல நடை முறைகளிலே நாம், இன்னமும், என்றைக்கோ நாம் கைவிட்டுக் கரையேறிய விலங்குத் தடத் துக்கு உரியவர்களாகவே வாழ்ந்து வருகிருேம்.

கோணல் நிமிர வேண்டும்

இந்தப் பெரிய குழப்பத்திலுலேதான், மனிதச் சமுதாயத்தில் இன்னமும் அழுத்தல் களும் மிதித்தல்களும் உள்ளன. நாம் இப்படி யானதொரு வாழ்க்கை முறைக்கு உரியவர்கள் அல்லர், இது நமது மனிதத்தனத்துக்கே இழுக்குத் தேடும் நடைமுறை என்பது மக்க ளுக்கு எடுத்து விளக்கித் தெளிவுபடுத்தப் பட்டால், அவர்கள், தங்கள் அறிவிலே விழுந்த சுருக்கம் அவிழப் பெற்று நேராக நடப்பார்கள். இந்தச் சுருக்கை நெகிழ்த்து வதற்குத்தான், மனிதக்குல வளர்ச்சி வர லாற்றில் மதம், தத்துவம் என்பனவற்றின் பேரால் ஊட்டப்பட்ட தவருன கருத்துக் களைச் சீவித் தள்ள வேண்டியுள்ளது. சுருக்க மாக, அறிவுத் தளத்தில் மனிதனுக்கும் மற்ற உயிர்களுக்கும் உள்ள தராதரமும், ஆறும் அறிவு உடைமையால் (மற்றவற்றினின்று வேறுபட்டு) மனிதக் குலத்துக்கு மட்டுமே அமைந்த பொதுமைநல வாழ்க்கை நாட்டமும் தெளிவுபடுத்தப்பட்டால், மனிதர்கள் தாங்க ளாகவே நாணித் திருந்தி நிற்பார்கள். இந்த அடிப்படைக் கோணலை நிமிர்த்தாமல், எத் தனை புதிய தத்துவச் சுமைகளை ஏற்றினுலும் மனிதச் சமுதாயம் விலங்கு, தாவரங்களின் தளத்திலிருந்து உயர மாட்டாது.

Dr Saalai Ilanthiraian
M.A.,M.Litt.,Ph.D.,Dip.U. N.I.U.
(Delhi Univeristy)
3362/1, Chiristian Colony
New Delhi-110005

தமிழ்ச் சங்கத்தைப் பற்றி...

இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சிப் படிகளிலே, முக்யத்துவம் பெறுவது இந்த ஆண்டு மலர். தமிழன்னையின் பாத கமலங்களை அலங்கரிக்கும் ஏராளமான தமிழ் மலர்களில் இம்மலரும் இடம் பெறும் என்பதை எண்ணி அகமகிழ்கிறது இலண்டன் தமிழ்ச் சங்கம்.

✥ ✥ ✥

தமிழைப் பற்றி...

"It is not perhaps extravagant to say, that in its poetic form Tamil is more polished and exact than the Greek, and, in both dialects, with its borrowed treasures, more copious thau the Latin. In its fulncss änd power it morc resombles English and Cerman, than any other living languages"

—JULIAN WINSLOW.

✥ ✥ ✥

"The Tamil language is extra—ordinary in its subtlety and sense of logic. The perfection with which it has been developed into an organ for precise and subtle thought combined with the fact that it represents a much earlier stage in the evolution of inflexional language, than any Into—Germanic tongue suggests...the priority of the Dravidian in attaining settled order and regular Government. As it in knowu to us, it is the product of a somewhat elaborate civilisatioe."

—GILBERT SLATER.

உலகியல் நடத்துக

சு. சிவகாம சுந்தரி

இந்திய நாட்டுக்குப் பலவகையான சிறப்புக்கள் இருந்த போதிலும், தலைமையானது, ஆன்மீகத் துறையில், உலகிற்கு அது தொடர்ந்து வழிகாட்டி வரும் சிறப்பே ஆகும். காரணம்... இந்து சமயம் உலகியலுக்கு ஏற்ற முறையில், மக்களின் அன்றாட வாழ்வில், பின்பற்றத் தக்கவாறு ஆன்மிக வாழ்க்கை நெறியைப் புகட்டி வருவதுதான். தேவை ஏற்படுங் காலங்களிலே யெல்லாம் இந்த மண்ணில், மகான்கள் தோன்றிப் புதிய புதிய திட்டங்களைப் புரட்சிகரமான முறையில் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அருளியலின் பண்ணையான தமிழ் நிலம், அவர்கள் உபதேசங்களின் அடிப்படையை மட்டும் மாற்றவில்லை. "அவன் அன்றி ஓரணுவும் அசையாது" என்பதும், "வேத ஆகமங்களே நமக்கு வழிகாட்டி" என்பதும் இவ்வடிப்படைகள் எனலாம். அவ்வாறு தோன்றிய மகான்களில் ஒருவர்தான் வள்ளலார் என்றழைக்கப்படும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்.

கருணையும், சிவமே பொருள் எனக்காணும்
காட்சியும் பெறுக! மற்றெல்லாம்
மருள்நெறி எனநீ எனக்கறிவித்த
வண்ணமே பெற்றிருக்கின்றேன்

என்று இறைவனிடமே அவர் கூறும் அனுபவம் அவரது கடவுட் கோட்பாட்டையும்,

ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகின்ற ஓங்கிய அருட்பெருஞ்சோதி

என்ற அகவல் வேத நெறிக்கு அவர் புறம்பானவரல்லர் என்பதையுமே காட்டுகிறது. "யாதொரு தெய்வம் கண்டீர், அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" என்ற சித்தாந்த சாத்திரத்திற்கு இலக்கியமே அருட்பா என்று கூறலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், மேனாட்டார் ஆட்சி, ஆட்சி மொழி, நாகரிகம் இவை பெற்ற செல்வாக்கின் விளைவாக, இந்து சமயத்தில், சீர்திருத்தப் புயல் விசியது. இந்தச் சீர்திருத்தத்தின் ஆர்வ வேகத்தில், இந்து சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களையே மூட நம்பிக்கையென்று புறக்கணித்து, மேனாட்டார் கருத்துக்களைத் தமதாக்கிக் கொள்ள சிலர் எண்ணினார்கள்.

இந்தச் சூழ்நிலையில்தான், வடநாட்டில் இராமகிருஷ்ண பரமஹம்சர் தோன்றி, இந்து சமயத்தின் மேன்மையை உலகிற்கு உணர்த்தினார். அந்தப் பெருமையை மேலும் உலகம் உணருமாறு செய்தார் வேதாந்த சிங்கம் சுவாமி விவேகானந்தர்.

வள்ளலார் வாழ்ந்த காலமும் இதுவே. வள்ளலாரின் ஆன்ம நேய ஒருமைப்பாடு உலகளாவிய ஒன்று. வாழையடி வாழையென நம் தமிழகத்தில் தொன்று தொட்டு முளைத்தெழுந்த தொண்டர் குலத்தின் பரிசு—தமிழகம் உலகினுக்கே தந்த பரிசு வள்ளலார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டைத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் ஆரம்பகாலம் என்றும் கூறலாம். ஏறத்தாழ மூன்று நூற்றாண்டு காலமாக வளம் குன்றியிருந்த தமிழ், மதிப்பிடற்கரிய புதிய வளம்பெற்ற காலம் இது. அச்சு எழுத்தை, 'எழுதா எழுத்து' என்று இக்காலத்திலேயே போற்றினர். இந்தப் புதுமையைப் பயன்படுத்திப் பழைய நூற்கள் பலவற்றைப் பாதுகாக்கப் பெரியோர் பலர் பாடுபட்டனர். வித்துவான் தாண்டவராய முதலியார், விசாகப் பெருமாளையார், மழவை மகாலிங்கையர், வேதகிரி முதலியார் முதலியோர் இத்துறைக்கு முன்னோடிகளாவர். தமிழ்மறை வள்ளுவம், நாலடியார், தேவாரப்பாக்கள், கம்பராமாயணம் போன்ற பல நூற்கள் அச்சேறின. சைவ நூற்களைத் திருத்தமாக அச்சிட்டு அருந் தொண்டாற்றினார் ஆறுமுக நாவலர். தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி ஆகியவற்றோடு, வேறு சில நூற்களையும் பதிப்பித்தவர் அறிஞர் தாமோதரம் பிள்ளையாவார். பதிப்புத் துறையில் தன்னேரில்லாத் தொண்டு புரிந்த டாக்டர் உ. வே. சா. பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தம் தலையாய பணியைத் துவக்கிவிட்டார். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, காஞ்சி சபாபதி முதலியார், மயிலை சண்முகம் பிள்ளை, பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, மாயூரம் முனிசிப் வேதநாயகம் பிள்ளை போன்றவர்களின் தமிழ்ப்பணியும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தக் காலத்துப் புலவர்களுள், புதிய இலக்கியப் படைப்பாளர்களில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர் வள்ளலார். இவர் வடலூரார், இராமலிங்க சுவாமிகள், இராமலிங்க அடிகள், இராமலிங்கப் பெருமான், அருட்பெருஞ்சோதி மகான், சமரச சுத்த சன்மார்க்க

ஞானி எனப் பல பெயர்களால் அழைக்கப்படு கின்ருர்.

"எல்லா மக்களும் எல்லா மதத்தினரும், எல்லா இனத்தவரும், எல்லா நாட்டினரும், வேற்றுமையின்றி வாழவேண்டும். அறிவே இறைவன், அன்பே இறைவன் என்ற உண்மையை உணர்ந்து வழிபடவேண்டும். இறைவன் சோதி வடிவானவன்; கருணை உள்ளவன்; இந்த இரண்டின் கூட்டுறவே சன்மார்க்கம். இதை உணர்ந்து நடப்பவர்கள் ஒன்றுபட்டு வாழ்வதே தங்கமே அனையார் கூடிவாழும் சன்மார்க்க சங்கம். இந்தச் சங்கத்தை உருவாக்க, இறைவன் வருவிக்கவே நான் உலகிற்கு வந்தேன்; மறைகிறேன்; "நான் மீண்டும் தோன்றுவேன்" என்று கூறி மறைந்த வடலூர் வள்ளலார், பத்தொன்பதாம் நூற்றுண்டிலே வாழ்ந்து மறைந்த புலவர் பட்டியலிலே மட்டும் இடம் பெறத்தக்கவரா? அதற்கு அப்பாலும், அப்பாலுக்கப்பாலும், அவரைப் பற்றிச் சிந்திக்க வியலுமா? கோடானுகோடி தமிழ் மக்களின் உள்ளங்களில் ஏற்றி வைக்கப்பட்டுள்ள சன்மார்க்க விளக்கு, இன்று உலக மக்களின் உள்ளங்களிலும் சுடர்விடத் துவங்கியுள்ளதென்ருல் சிந்திக்க வேண்டியதுதான்!

"எனக்குப் பேசிய தந்தையும், தாயும்" என நினைந்து, நினைந்து, நெகிழ்ந்து, நெகிழ்ந்து, வணைந்து, வணைந்து பாடும், போற்றும் பலருக்குத் தாயாகி, தந்தையுமாய், தாங்கி நிற்கும் தெய்வமுமாக விளங்கும் வள்ளலார் சென்ற நூற்றுண்டு கண்டெடுத்த மனித தெய்வம். பொற்சபையில், சிற்சபையில் உலக மக்களை அழைத்துச் செல்லப் பிறந்த வழிகாட்டி, உலக மக்கள் அனைவரும் சன்மார்க்க சங்கத்தைச் சாராமல் ஒருமை உணர்ச்சி அடைய இயலாது. ஒருமை உணர்ச்சியின் வளர்ப்புத்தாய்—சமரச சுத்த சன்மார்க்க சங்கம். இந்தப் பேருணர்ச்சியைப் பெற்றெடுத்த பெருமைமிக்க தாய் அருட்திரு இராமலிங்கம் என்னும் வள்ளலார் ஆவார்.

"திருவருட்பா" என்னும் அரும்பெரும் திருமுறையைப் பாடி அருளிய வள்ளலார். சிதம்பரத்திற்கு அருகிலுள்ள மருதூர் என்ற ஊரில் கருணிகர் குலத்தைச் சார்ந்த இராமையாபிள்ளை, சின்னம்மைக்கு மகவாக கி. பி. 1823-ம் ஆண்டில் பிறந்தார். இளமைப் பிறப்பு துவங்கிய நாள் முதல் பக்திச் சுவை நிரம்பிய பாடல்கள் பாடி உருகும் அருள் நலமும், புலமை நலனும் பெற்று விளங்கியதை அவர் பாடலே சான்று காட்டி விளக்குகிறது.

வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித் திரியும்
மிகச்சிறிய பருவத்தே வியந்துனை நமது
பெம்மானென்றடி குறித்துப் பாடும் வகை புரிந்த
பெருமானே நான்செய்த பெருந்தவ மெய்ப் பயனே
செம்மாந்த நெறியேனைச் சிறுநெறியிற் செறிதந்
செலுத்தாமற் பெருநெறியிற் செலுத்திய
நற்றுணையே
அம்மானே யென்றுவிக் கானபெரும் பொருளே
அம்பலத்தென் னரசேயென் னலங்கலணிந் தருளே

திருவருட்பா அருள் விளக்க மாலையில் வருகின்ற இந்தப் பாடல், இளமை முதல் இறைவனை வணங்கும் பழக்கம் உடைமையை தெற்றென விளக்குகிறது.

இராமலிங்க அடிகள் பாடியுள்ள திருவருட்பா சற்றேறக் குறைய 10,000 பாக்களைக் கொண்டது. இந்த நூல் ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டு ஏறக்குறைய 360 உட்பிரிவுகளாகிய சிறு தலைப்புகளைக் கொண்டுள்ளது. இவை தவிர வள்ளலார் பாடிய பல தனிப் பாடல்களும் உள்ளன. சீவகாருண்ய ஒழுக்கம், ஒழுவிலொடுக்கப் பாயிர விருத்தி, தொண்டை மண்டல சதக இலக்கணம், மனுமுறை கண்ட வாசகம், விண்ணப்பங்கள் முதலிய உரைநடைகளும் இயற்றியுள்ளார்.

திருவொற்றியூர் தியாகராசப் பெருமான், தில்லை அம்பலவாணர், திருத்தணிகை முருகப் பெருமான், சென்னைக் கந்தகோட்டக் கந்தப் பெருமான், சைவசமயக் குரவர்களான நால்வர் முதலியோரைப் போற்றி இவர் பல பாக்கள் பாடியுள்ளார். இராமநாமத் திருப்பதிகம், வீரராகவப் பெருமாள் போற்றித் திருப் பஞ்சகம் முதலிய பாடல்கள் அவரது சமயக் கோட்பாட்டின் சமரசத்தை வலியுறுத்து கின்றன.

நாடு, மொழி, சாதி, சமயம் முதலிய வேற்றுமையின்றி, மக்கள் எல்லோரும் தேசிய ஒருமைப்பாட்டுடன் கலந்து வாழவேண்டுமென்று வள்ளலார் விரும்பினர். சாதி, சமயச் சண்டைகள் தேவையில்லை என்பதை வலியுறுத்தப் பாடினர்.

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரங்கள் தடிகளிலே கோத்திரச்
சண்டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து வீணேநீ ரழிதலழ கலவே

என்றும்,

நால்வருண மாச்சிரம மாசார முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டே

என்றும் கூறினர்.

வேற்றுமைகளை மறந்த ஒற்றுமை நிலையை நிலைநாட்டி உலக மக்கள் அனைவரிடமும் தாய் போல் பரிந்து பேசி உபசரிக்க சன்மார்க்க

சங்கத்தை நிறுவினார். சீவகாருண்யம் நிலை பெறுதல் வேண்டும். நிலைபெற்றால் உயிர்களுக் கிடையே இன்பம் நிலவும். சீவகாருண்யம் இல்லாதபோது அறிவும், அன்பும் தோன்றாது. அவை தோன்றாதபோது கண்ணோட்டமும், ஒருமையும், உதவியும் தோன்றாது. எனவே தான், சுத்த சன்மார்க்கம் என்னும் புதுநெறி யினைச் செலுத்தி, இந்நெறி வான் புத்தமுது அருளும் என்று திண்ணமாகக் கூறினார்.

இராமலிங்க வள்ளலார் தாம் மண் ணுலகில் பிறந்தமைக்கொரு காரணத்தை வேண்டுகோள் பதிகத்தில் கூறுகிறார். உலகில் வாழ்வோர் பலர் அகத்தே கருச்சிந்தனையும், புறத்தே வெண்பற்கள் கொண்ட நகைப்பும் உடையவர்களாக வாடுகின்றார்கள். இவர்கள் அனைவரும் உண்மை அறிந்து திருந்த வேண்டும். உண்மையை வற்புறுத்தி இவர் களை நாம் திருத்தவும் வேண்டும். திருத்த மாகிய நன்மையை இவர்கள் அடைவதற்கு இவர்கள் யாவரும் சன்மார்க்க சங்கத்தை அடைதல் வேண்டும். இதனைச் செய்தற்கே இந்த யுகத்தே இறைவன் என்னை இவ்வுல கிற்கு வருவித்தான் என்கிறார் அடிகளார்.

> அகத்தே கறுத்துப் புறத்து வெளுத் திருந்த உலகர்
> அனைவரையும்
> சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடை
> வித்திட அவரும்
> இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந் திடுதற்
> கென்றே எனை இந்த
> உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப்
> பெற்றேனே

''அன்பே சிவம்'' என்றார் திருமூலர். அவர் வழி வந்த வள்ளலாரும் ''கருணையே சிவம்'' என வற்புறுத்தினார். அக்கருணை வழி உலகில் நின்று கருணைக் கடலாகிய கடவுளைச் சேர்ந் திருக்க கருணை நெஞ்சுடன் சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்த அருள் பெற்றுயர்தலையே பணியாகக் கொண்டிருந்தார் திருவருட் பிரகாச வள்ளலார்.

> ஒத்தாரும் உயர்ந்தாரும்
> தாழ்ந்தாரும் ஒருமை யுளராகி
> உலகியல் நடத்தல் வேண்டும்

என்பது வள்ளலாரின் வாக்காகும். இதுவே நம் குறிக்கோளுமாக அமையட்டும்!

திருமதி சு. சிவகாம சுந்தரி எம். ஏ.
தமிழ்ப் பேராசிரியர்–துறைத் தலைவர்
திரு. அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி
கோயம்புத்தூர்-641011

புலவர் திறன்

டாக்டர் கு. சீநிவாசன்

நந்தமிழ்ச் சங்கப் புலவர்கள் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கை வாய்ந்த சான்றோர் ஆவர். சிலர் எல்லாம் அறிந்தவர்கள்; சிலர் யாவதும் உணர்ந்தவர்கள்; சிலர் கலை பல கற்றுத் தெளிந்தவர்கள்; சிலர் திர்க்க தரிசிகளாக விளங்கிய முனிவர்கள்; தங்கள் அறிவிற் பழுத்தவற்றை அங்ஙனமே கூறும் மதுகை உடையவர்கள். இயற்கை உண்மைகளையும், தமது மூதறிவில் முகிழ்த்த ஆழ்ந்த கருத்துக்களையும் உயர்தனிச் செஞ்சுவைப் பாக்களாக யாப்பதில் அவர்கள் ஒருவரை ஒருவர் விஞ்சி நின்றனர். மெய்ஞானமும் விஞ்ஞானமும் வியத்தகு வண்ணம் மலிந்து மிளிரும் பாக்களும் எழுந்தன.

விஞ்ஞான அறிவு மிக வளர்ந்து ஓங்கி வருகிற காலம் இது. அண்டத்தின் தோற்றத்தையும், நில உலகில் வாழும் உயிர்களின் தோற்றத்தையும் பெரும் விஞ்ஞானிகள் அறுதியிட்டு உரைக்கின்றனர். இவர்கள் கூறும் அவ் வுண்மையைப் பழம் புலவர் ஒருவர் அங்ஙனமே குறிப்பிடுகின்றார். அவரது திறனை வியப்பதா? போற்றுவதா? மகிழ்வதா?

கல்லும் மண்ணும் கலந்தது இந் நில உலகம், நிலம் தோன்றி நானூற்று அறுபது கோடி (4·6 பிலியன்) ஆண்டுகள் ஆகின்றன என்று விஞ்ஞானிகள் ஒருவாறு கணக்கிடுவர் அப்படியானால் நிலம் தோன்றுவதற்குக் காரணமான ஏனைய பூதங்கள் இன்னும் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருந்தன என்பதாகும். இதனை அறுதியிட்டு உரைப்பதற்கு மிகப் பெரிய விஞ்ஞானிகள் கூடினர். ஏறக்குறைய ஆயிரங்கோடி (10 பிலியன்) ஆண்டுகட்கு முன்னர் அண்டம் (Universe) தோன்றி இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர். அதற்கு முன் வெளி எனப்படும் ஆகாசம் என்ற பூதமும் இல்லாதிருந்தது. வெளி தோன்றி பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. வெளியில் எப்பொருளும் இல்லை. எல்லாம் ஒரே சூனியமாக இருந்தது. பின்னர் அவ் வெளியில் காற்று தோன்றிற்று. வெளியின் நாலா பக்கங்களிலும் காற்று அடித்துக்கொண்டேயிருந்தது. பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. காற்றில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. அதனால் காற்றில் தீ உண்டாயிற்று. வெளியில் உலவிய வளி தீப்பிடித்து எரியத் தொடங்கிற்று. வெளி எங்கும் ஒரே நெருப்பு மழை! இப்படியே பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தன. அண்ட வெளியில் பால்வழித் தோற்றமும், அதில் நட்சத்திர மண்டிலமும், சூரிய மண்டிலமும் தோன்றலாயின. ஆகாயம், காற்று, தீ ஆகிய மூன்று பூதங்களின் கூட்டுறவால் நீர் உண்டாயிற்று. பெருமழை பொழிந்தது. எரிந்துகொண்டேயிருந்த அண்டம் நீரால் குளிரத் தொடங்கிப் பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தன. பின்னர் நில மடந்தை பிறந்தாள். கடல்களை உடுத்திக் கொண்டாள். இருநூறு கோடி ஆண்டுகள் சென்றன. கடலில் மூழ்கி மூழ்கி எழுந்தாள். கடல் கோள்களால் சிதைவுண்டாள். உயிர்த் தோற்றத்திற்கு வேண்டிய உலோகங்களையும் உலோகப் பொருள்களையும் எரிமலைகளின் மூலமாக தனது உள்ளீட்டிலிருந்து வெளிப்படுத்தினாள். ஐம்பூதங்களும் ஒருங்கே நிலை பெறலாயின. மேலும் ஒரு நூறு கோடி ஆண்டுகள் கழிந்தன. சூரிய மண்டலத்தில் பல வேறு கோள்களுடன் தானும் சூரியனை வினாடிக்கு இருபது மைல் வேகத்தில் சுற்றி வருகின்றாள்.

உலகில் உயிர்கள் தோன்றலாயின. அவை ஒரு செல் (Cell) உயிர்களாக இருந்தன. மேலும் ஒரு நூறு கோடி ஆண்டுகள் ஓடி மறைந்தன. தாவர உயிர்களும் விலங்கு உயிர்களும் பரிணமித்துச் சிறந்தன. அவை இன்றைய நிலையை எய்துவதற்கு ஏறக்குறைய அறுபது கோடி ஆண்டுகள் பிடித்தன. பத்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதன் உருப்பெற்றான். கிட்டத்தட்ட ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான் தீயின் துணை கொண்டு உணவு ஆக்கத் தெரிந்து கொண்டான். லினன் (Linun) பஞ்சு இழைகளைக் கொண்டு ஆடை நெய்து அணியத் தொடங்கினான், மனித நாகரிகம் வளரத் தொடங்கிற்று. மிக நுண்ணிய இழைகளை முறுக்கி, நெய்து ஆடையாக்குமாறு போல, நுல்லிய, செவ்விய கருத்துக்களைப் பாக்களாக்கிச் சிறந்த நூல்களைத் தமிழ் மகளுக்கு

அணிவித்தான். புலவர் பெருமக்கள் திரண்டனர். இறைவன் தலைவனாகப் புலவர்கள் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தனர். அவருள் வணிகர்களும் பேரரசர்களும்கூட இருந்தனர். இத்தகைய தமிழ்ப் பெருங்குடியினர் வளர்த்த நாகரிகம் பழந்திராவிடர் நாகரிகம் (Pre Dravidian Civilisation) எனப்படும். மனித நாகரிகம் பிறந்தது தென்னிந்தியாவி லென்றும், அதுதான் பழந்திராவிட நாகரிகம் என்றும், அதிலிருந்தே சிந்துவெளி நாகரிகம் (Indus Valley Civilisation) தோன்றியிருக்க வேண்டுமென்றும், புதைபொருளாய்ச்சி வல்லுநராகிய ரெவரண்டு ஹீராஸ் (Rev. Heras) கூறுவர்.

சங்கமாக இருந்து ஆராயப்பட்ட சங்கத் தமிழ் இலக்கியங்களுள் எட்டுத்தொகை நூல்கள் மிகச் சிறந்தவை. அவற்றுள் பரிபாடல் என்பது இப்போதைக்கு இருபத்திரண்டு செய்யுள்களை உடைய தொகை நூலாகும். அதனுள் காணப்படும் இரண்டாம் பாடல் திருமாலைப்பற்றியது; கீரந்தையார் என்ற புலவரால் பாடப்பட்டது. அதற்கு இசை வகுத்தவர் நன்னாகனார். இப்பாடலில் தான் புலவர் கீரந்தையாரின் திறன் அமைந்துள்ளது. இந்த இருபதாம் நூற்றாண்டில் தான் விஞ்ஞான வளர்ச்சி வானையும் முட்டிவிட்டது. மேலை நாட்டு விஞ்ஞானிகள் அண்டத்தின் தோற்றத்தை அறுதியிட்டு உரைக்கும் வண்ணம் புலவர் கீரந்தையார் ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அங்ஙனமே கூறியுள்ளார். இதோ அவருடைய பாடலின் ஒரு பகுதி.

...விசும்பு இல்லூழி ஊழ் ஊழ் செல்ல
கருவளர் வானத்து இசையில் தோன்றி
உருஅறிவாரா ஒன்றன் ஊழியும்,
செந்தீச் சுடரிய ஊழியும், பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும்; அவையிற்று
உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்...
ஊழியாவரும் உணரா
ஆழிமுதல்வ நிற்பேணுதும் தொழுது...

(உருஅறிவாரா=உருவத்தெரிய முடியாத; தண்பெயல்=குளிர்ந்த மழை; தலைஇய=தலைப்பட்ட; உள்ளீடு=உட்கூடான; இருநிலம்=பெரிய மண்ணுலகம்.)

ஆகவே புலவர் கீரந்தையாரின் திறன் வானினும் உயர்ந்தது; வியத்தகு ஆழமும், நுட்பமும் ஒட்பமும் உடையது; அறிவியல் மதிநலம் மிக்க பெரியோர்களால் போற்றுதற்குரியது.

டாக்டர் கு. சீநிவாசன்
ரீடர், தாவரவியல்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்—608101

தமிழைப் பற்றி...

"The Tamil poets use the genuine language of poetry on the subject of the divine attributes and the nature of virtue."

—Fr BESCHI

ஃ ஃ ஃ

"I have felt sometimes as if there must be a blessing in store for a people that delight so utterly in compositions thus remarkably expressive of a hunger and thirst after righteousness."

—Dr POPE

ஃ ஃ ஃ

"The Tamil is the oldest and most influential of the Vernacular literatures of Southern India. This language, in structure and its vocabulary forms the best representative of cultivated Dravidian speech."

—Sir William W. HUNTER

எங்கள் மாமியார்

ஷீலா லக்ஷ்மண்

[இந்த வர்ணனையை எழுதுபவர் ஓர் ஆங்கிலேயப் பெண்மணி. இவரது கணவர் ஒரு தமிழர். தமிழ் மொழியின் மீது பற்றுக் கொண்டு தமிழைக் கற்றுக்கொண்டு வருகிறார். அவரது ஆர்வத்தைப் பெரிதும் பாராட்டி இதை வெளியிடுகிறோம்.

—ஆண்டு மலர்க் குழு.]

இந்த ஆண்டில் எங்கள் மாமியார் லண்டனுக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் எவ்வளவு நாளாக இங்கே வர விரும்பிக் கொண்டிருந்தார்கள்! இங்கிலண்டைப் பற்றி அத்தனைப் புஸ்தகங்களை அவர்கள் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தார்கள்! ஆகையால், பக்கிங்ஹாம் பேலஸும் ஆக்ஸ்போர்டும் கேம்பிரிஜும் பிற இடங்களின் பெயரும் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். நிச்சயமாக, இவை யெல்லாம் அவர்கள் பார்க்க வேண்டிய இடங்கள்தான்.

எங்கள் மாமியார் பெங்களூரில் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். ஆனுல், அவர்கள் சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் பல ஆண்டுகளைக் கழித்திருக்கிருர்கள். இந்தியாவிலும் அவர்கள் பல பிரயாணங்களைச் செய்தார்கள். ஆகையால், லண்டன் ஏர்போர்ட்டுக்கு வந்து சேர்ந்தபொழுது, மிகுந்த கூட்டமும் பெரிய ஒலியும் இருந்தாலும் அவர்கள் அஞ்சவில்லை. இதைக் கண்டு, எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. எங்கள் மாமியார் அச்சப்பட்டால், பார்க்க வேண்டிய இடங்களுக்கெல்லாம் அவர்களை அழைத்துப் போகக் கஷ்டமாக இருக்கும்—இல்லையா?

அடுத்த நாள் எங்கள் மாமியாருக்கு மிகவும் களைப்பாக இருந்தது. அவர்கள் ஓய்வு எடுத்தார்கள். நான் சாம்பாரும் கறியும் சமைத்துக் கொண்டு, அவர்களுக்கு உணவு கொடுத்தேன். லண்டனில் கறி மசாலாவும் ஊறுகாயும், மிளகாயும் பிறவும் கிடைக்கின்றன என்பதைத் தெரிந்து, அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். “நான் லண்டனுக்குப் போகிறபொழுது, இங்கிலீஷ் உணவு சாப்பிட வேண்டும். அது எனக்குக் கஷ்டமாக இருக்கும்” என்று அவர்கள் நினைத்திருந்தார்கள். அப்படியிருந்தாலும், அவர்களுக்கு இப்பொழுது சில இங்கிலிஷ் பலகாரம் மிகவும் பிடிக்கும்—உதாரணம் பிஷ்பிங்கர்ஸ்! சில சமயங்களில் எங்கள் மாமியார்தான் சமைத்தார்கள். என் கணவர் குழந்தையாக இருந்தபொழுது சாப்பிட்ட உணவைச் சமைக்குமாறு அவர் தங்கள் தாயை வேண்டிக் கொண்டார். அந்த நாட்களில், நாங்கள் சிறப்பாக சுவையான உணவு சாப்பிட்டோம்.

சில நாட்களில் எங்கள் மாமியார் இங்கே வந்து சேர்ந்த பிறகு நான் ஆக்ஸ்போர்ட் ஸ்ட்றீட்டுக்கு அவர்களை அழைத்துப் போனேன். அவர்களுக்கு பெங்களூரில் வாழுகிற சொந்தக்காரர்களுக்காகச் சில பரிசுகள் வாங்க வேண்டும். நாங்கள் ஒரு பெரிய கடைக்குப் போனேம், அங்கே பல பேர்கள் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். திடீரென்று எங்கள் மாமியார் ஒரு எஸ்கலேடரைப் பார்த்தார்கள். “அந்த எஸ்கலேடர் மேல் போகக் கஷ்டமாக இருக்கும். ஆனுல், பாருங்கள், இந்த மக்கள் எல்லாரும் அதில் சுலபமாக நடந்து கொண்டிருக்கிருர்கள். நானும் அப்படி நடப்பேன்” என்று அவர்கள் சொன்னுர்கள்.

உங்களால் முடியாவிட்டால்..." என்று சொல்ல நான் ஆரம்பித்தேன், ஒரு சிறு புன்னகை செய்து கொண்டு, அவர்கள் எனக்கு முன்னே அந்த எஸ்கலேடர் மேல் நின்றார்கள். உண்மையாக, எங்கள் மாமியார் மிகவும் தைரியமாக இருக்கிறார்கள்!

ஒவ்வொரு வாரமும் நாங்கள் லண்டனுக்கு வெளியே இருக்கிற இடங்களுக்கு எங்கள் மாமியாரை என் கணவருடைய காரில் அழைத்துச் சென்றோம். அவர்கள் ஆக்ஸ்போர்டையும் கேம்பிரிஜையும் மிகவும் விரும்பினார்கள். அந்த நேரத்தில், சூரியன் ஒளி வீசிக் கொண்டிருந்தது. ஆகையால் இங்கிலண்டு ஒரு அழகான நாடாகத் தோன்றியது. எங்கள் மாமியாருக்குத் தோட்டங்களில் பூச் செடிகளை எல்லாம் பார்க்கப் பிடிக்கும். அவர்கள் விடுமுறையின் கடைசி நாளில், நாங்கள் ஹம்ப்டன் கோர்ட்டுக்குப் போகத் தீர்மானித்தோம். பல ஆண்டுகளுக்கு முன்பு, எங்கள் மாமியார் பெரிய கப்பலில் கடலைக் கடந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் ஆற்றின் மேல் கப்பலில் எப்பொழுதும் போகவில்லை. அன்று காலை முழுதும், நாங்கள் ஒரு சிறிய கப்பலில் மெதுவாகப் பிரயாணம் செய்தோம். ஹம்ப்டன் கோர்ட்டுக்கு அருகில் வந்து சேர்ந்தபொழுது எங்கள் மாமியார் அந்தக் கட்டடத்தைப் பார்த்துக் கொண்டு, "அது ஒரு அழகான காட்சி" என்று சொன்னார்கள். "ஆமாம், அது ஒரு பிரசித்தமான இடம்" என்று நான் விடை கூறினேன். அப்புறம், நாங்கள் அங்கே பூங்காவில் உலாவப் போனோம்.

அன்று மாலையில் குளிர் அதிகமாயிற்று. ஆகையால், நாங்கள் ரயில் ஏறிக் கொண்டு, லண்டனுக்கு வேகமாகத் திரும்பி வந்தோம். அவ்வாறு நாங்கள் ஒரு நாள் பொழுதை இனிமையாகக் கழித்தோம். அடுத்த நாள் எங்கள் மாமியார் ஒரு விமானத்தில் ஏறி, பெங்களூருக்குத் திரும்பிவிட்டார்கள்.

Mrs Sheila Laxman
11-A Queen's Grove, London NW-8 U.K.

மேற்கிலே தமிழர் வாழ்க்கை

சுகந்தி பிரான்சிஸ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்...
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்...

என்று பாரதியார் பாடியபோது உலகத்தின் தெருக்களிலெல்லாம் தமிழில் ஆடிப் பாடித் தொழுது மட்டும்தான் பரப்ப வேண்டும் என்ற ஒரே காரணத்தை மட்டும் கொண்டு சொல்லவில்லை. அவர் கூறியதை அப்படியே பிடித்துக் கொண்டு இன்று நாம் உலகத்தின் மாநகரத் தெருக்களிலெல்லாம் தமிழில் சொற்பொழிவாற்றித் துதி செய்தால் தமிழ் தெரிந்தவர்கள் மட்டும்தான் அதனை அறிந்து கொள்ள முடியும். மற்றவர்களால் அறிய முடியாது.

இன்று இந்த இருபதாம் நூற்றுண்டிலே, தமிழ் பேசுபவர்கள் தொகை அதிகமில்லை. தமிழ் மிகவும் தொன்மை வாய்ந்த மொழி. ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மை, அதே சமயத்தில் இன்று மனிதன் விண்ணிலும், மண்ணிலும் புகுந்து விளையாடும் யுகத்திலே, நாம் தமிழ் தமிழ் என அடித்துக் கொண்டால் என்னத்தைத்தான் சாதிக்க முடியும்? தமிழை பரப்ப ஒரு வழிதான் உண்டு. எந்த மொழியையும் உலகமெல்லாம் பரப்ப வேண்டுமானல், முதலில் அதன் கலாசாரத்தைப் பரப்ப வேண்டும். நம் மொழியின் பெருமையை மற்றவர்கள் அறியக் கூடிய வகையில் எடுத்துக் கூறவேண்டும். தமிழர் தம் கலாசாரத்தை—பெருமை வாய்ந்த நம் கலாசாரத்தை பிற நாட்டவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். இன்று—நாம் நமது பிறந்த மண்ணைவிட்டு ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் வந்திருக்கின்றோம். நாம் பழகும் விதத்திலிருந்துதான் இந் நாட்டவர்—கள் நம் நாட்டுப் பெருமையை அறிந்து கொள்ள முடியும். அதற்கு ஒரே வழி மேற்கத்திய நாடுகளில் வாழும் தமிழர்கள் ஒன்று சேர வேண்டும். ஒரு கைதட்டி ஒலி எழுப்ப முடியாது. பல கைகள் தட்டப்படும்போது ஒலி அதிகமாகிறது. அதுபோல ஒரு சிலரால் இதனைச் சாதிக்க முடியாது. எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். நமது அறிவீனத்தால்—சுயநலத்தால் நமது நாட்டுப் பெருமையை குலைக்கக்கூடாது. ஒரு சிலரால் ஒரு நாட்டின் பெருமை குறையலாமா? இன்று அன்னிய நாட்டில் வாழும் நாம் நமது ஒற்றுமையால் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையால், மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். நமக்கு நாமே கூட்டம் போட்டு பேசினல் மட்டும் போதுமா? இதனல் நாம் சாதிக்கப் போவதுதான் என்ன? ஒன்றும் இல்லை. நமது கலாசாரத்தை பரப்ப இதுவல்ல வழி. நாம் செய்ய வேண்டியன வேறு எத்தனையோ உள்ளன. உப்பு புளியில்லாத உணவை உண்டு வாழ்கின்ற இந்த ஆங்கிலேயரின் பெருமை, மொழி கலாசாரம் உலகமெல்லாம் பரவியிருக்கும்போது, அறு சுவைகளோடு உணவுண்ணும் நமது மொழி, கலாசாரம், பெருமை எவ்வளவு தூரத்துக்குப் பரவ வேண்டும்? தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா! என்றனர். அதற்கேற்ப நாம் நடந்து கொள்ள வேண்டாமா?

'ஊரோடு ஒத்து வாழ்' என்பார்கள். இதற்காக ஒரேயடியாக நமது பண்பாடு மறந்து திரியாமல், ஓரளவுக்காவது இழைந்து நடக்க வேண்டும். தமிழர்களுக்கு என்று ஒரு கூட்டம். அதில் சேர்ந்து நம்மை மற்றவர்களிடமிருந்து பிரித்துக்கொண்டு தனித்து வாழக் கூடாது. இன்று நாம் ஆங்கிலேயரிடமிருந்து எத்தனையோ விஷயங்களை அறிந்து அவைகளைப் பின்பற்றி வருகின்றோம். அவர்களைப் போல ஆடை அணிகின்றோம். அவர்கள் மொழியைப் பேசுகின்றோம். அவர்கள் நடத்தும் அலுவலகங்களில் பணி புரிகின்றோம். இவைகள் இப்படியாக இருக்க, ஏன் நாம் மற்ற வகைகளில் மட்டும் நம்மை அவர்களிடமிருந்து பிரிக்க வேண்டும். நம்மை நாமே பிரித்துக் கொண்டால், பிறகு அவர்களால் எப்படி நம் கலாசாரத்தை அறிய முடியும்? நமது பழக்க வழக்கங்களைப் பார்த்து, அவர்கள் நாமும் இப்படிச் செய்தால் என்ன என்று யோசிக்கவாவது இடம் கொடுக்க வேண்டாமா? இவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்ருல் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை நம்மிடையே வளர வேண்டும். இதற்கு சில சமயங்களில் நமது சமயம் முட்டுக்கட்டையாக இருப்பதுண்டு. இதனை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆதி அந்தமில்லாதது நமது இந்து மதம். இந்து மதம்

எப்போது தோன்றியது என்று யாராலும் வரையறுத்துக் கூற முடியாது; கிறிஸ்தவ சமயம் தோன்றிய நாளைக் கூறலாம். அதே போல இஸ்லாமிய சமயத்தினதும், பௌத்த சமயத்தினதும் வயதைக் கூறிவிடலாம் ஆனால் இந்து சமயத்துக்கு மட்டும் வயதில்லை. தொன்மை வாய்ந்த சமயம் அது. வயதைக் கூற முடியாவிட்டாலும், அதன் வரலாற்றை ஓரளவுக்குக் கூறலாம். அறிஞர் பலரின் ஆராய்ச்சிகளினால், இந்து சமயத்தைப் பற்றி ஒரு சில உண்மைகள் அறியப்பட்டுள்ளன. நம்மில் பலருக்கு இது அதிர்ச்சியைக் கொடுக்கலாம். ஆத்திரத்தைக் கிளரலாம். ஆனால் இந்து மதம் தோன்றியது இந்தியாவிலல்ல, ஸ்காண்டிநேவியா போன்ற மேற்கத்திய நாடுகளில் என்பது ஒரு கசப்பான உண்மை. ஆதியில் இந்நாடுகளில் பின்பற்றப்பட்டு வந்த இம்மதம், மாவீரன் அலெக்சாண்டர், கிழக்கு நாடுகளுக்குப் படையெடுத்த வந்தபோது அப்படையுடன் தானும் பிரயாணப்பட்டு வந்தது. இதனைக் கிழக்கு நாடுகளுக்குக் கொண்டு வந்தவர்கள் ஆரியர்கள். சமயத்தைக் கொண்டு வந்த இந்த ஆரியர்கள், தமது சௌகரியத்துக்காக ஒரு சில வசதிகளையும் செய்து கொண்டனர், அவர்கள் வகுத்தபடி, படிப்பறிவு உள்ளவர்கள், எதனையும் ஆராய்ந்து அறியும் தன்மை வாய்ந்தவர்கள்: அவர்கள் எல்லோருக்கும் மேலானவர்களாக மதிக்கப்பட்டனர். அதன்படி தோன்றியதுதான் க்ஷத்திரியக் குலம், நாட்டுக்குத் தேவை படை பலம். இதற்காகத் திறமையான உடற்கட்டு உள்ளவர்கள் ஒரு வகுப்பாக பிரிந்தனர் (Warriers), அடுத்த பிரச்சினை வாணிபம். இதற்கு ஏற்றவர்கள் அலைந்து திரியும் தன்மை உடையவர்கள். உடனே அவர்கள் தம்மைச் சுற்றி ஒரு வேலி போட்டுக் கொண்டனர். இவர்களெல்லாம் போக, மிகுதியாக கழிவுபட்டவர்கள் சிறிய வேலைகள் செய்வதற்கு உபயோகிக்கப்பட்டனர். இது உண்மையோ பொய்யோ ஆனால் அறிஞர் பலரின் ஆராய்ச்சிகளின் பலனால் அவர்கள் நிரூபித்த உண்மை.

இதே இந்து சமயம் இன்று வட துருவத்திலோ, அல்லது, தென் துருவத்திலோ பரவியிருந்தால், இத்தனைக் கட்டுப்பாடுகளுடன் பின்பற்றக்கூடியதாக இருக்குமா? கங்கையிலே மூழ்கி, தண்ணீர் சொட்ட, சொட்ட நம்மால் ஆலய வழிபாடு செய்யத்தான் முடியுமா? அல்லது மார்கழி மாத பஜனைதான் செய்ய முடியுமா? இன்று இந்துமதம், இந்தியா, இலங்கை போன்ற உஷ்ணவலய பிரதேசங்களிலே பரவியிருப்பதினால்தான் நம்மால் இவ்வளவு கொள்கைக் கட்டுப்பாடுகளுடன் பின்பற்ற முடிந்தது—முடியாது என்று கூற வரவில்லை. ஆனால் இவற்றைச் செய்வதில் இன்று எத்தனையோ இடர்கள் உண்டு. அதனை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இன்றும் எத்தனையோ பேர் இந்த நாட்டில்கூட நமது இந்துமதக் கொள்கைகளை அப்பழுக்கில்லாமல் பின்பற்றி வருகின்றனர். போற்றத்தக்க விஷயம். ஒரு சிலரால் முடிகின்ற இந்தக்காரியம் பலரால் முடிவதில்லை. இதனால் அவர்கள் பண்பாடு மறந்தவர்கள் என நினைப்பது மிகத் தவறு. இன்றைய வாழ்வுக்குத் தேவையானவைகளை எடுத்துக்கொண்டு மற்றவைகளை விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும். இது கஷ்டமான காரியமல்ல. நமது பண்பும் மாறாமல், அதே சமயத்தில் மற்றவர்களிடமும் தாழ்ந்து போகாமல் நமது கலாசாரத்தைப் பரப்ப வேண்டும். இங்கிலாந்திலும் மார்கழி மாத பஜனை நடத்துகிறார்கள். திருவெம்பாவை பாடுகிறார்கள் என்பது போற்றத்தக்க விஷயமல்ல, ஆனால் திருவெம்பாவை என்றால் என்ன? அது நம் வாழ்க்கைக்கு கூறும் அறிவுரை என்ன? மார்கழி மாத பஜனையினால் ஆவதென்ன? இதனால் மனதுக்கும். உடலுக்கும் கிடைக்கும் ஆறுதல் என்ன? என்பதை மற்றவர்களுக்குப் புரிய வைத்தால் தான் பெருமை. அப்போதுதான் நமது சமூகத்தின் அருமை பெருமைகளை மற்றவர்கள் அறிந்துகொள்ள முடியும்.

அதிர்ஷ்டவசமாக நாம் இன்று எல்லா வசதிகளும் உள்ள இந் நாட்டில் இருக்கின்றோம். நமது கலாசாரத்தை பரப்ப எத்தனையோ வழிகளுண்டு. வானொலி மூலம் பரப்பலாம். அல்லது டெலிவிஷன் மூலம் அறியவைக்கலாம். இவ்வளவு வசதிகள் இங்கிருக்கும்போது எவ்வளவு துரிதமாக விஷயங்களைச் செய்து முடிக்க முடியும்? இதை விட்டுவிட்டு, நீ பெரியவனா? அல்லது நான் பெரியவனா? என்று போட்டி போட்டுக் கொள்வதும், வாக்கு வாதங்களில் ஈடுபடுவதும் கூடாது. வசதி இருக்கும்போது அதனை உபயோகப்படுத்த வேண்டும். இன்று மேற்கிலே வாழும் அத்தனைத் தமிழர்களும், ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தோமேயானால் ஏட்டோடு இருக்கும் எத்தனையோ விஷயங்கள் எழில் நடைபோட வழி உண்டு.

Miss Suhandi Francis
Bank of England
London, U. K.

காஞ்சித் திணை

பொ. சுந்தர மகாலிங்கம்

0-1. நிலையாமைத் தத்துவத்தை விளக்குவதுதான் தொல்காப்பியக் காஞ்சித் திணை என்பது உரையாசிரியர்களின் முடிபு. இதனை மறுப்பதும், தக்க இலக்கண இலக்கியப் பின்னணிச் சூழலிலே புதுமை விளக்கம் காண்பதும் என் நோக்கமாம்.

> பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
> நில்லா உலகம் புல்லிய நெறித்தே[1]

என்பது தொல்காப்பியக் காஞ்சித் திணை நூற்பா. இந் நூற்பாவில், "பல்லாற்றானும்" என அமையும் வருமொழியால், "சிறப்பிற்" எனத் திரிந்த நிலைமொழி ஆயத் தக்கது. 'சிறப்பின்" என வரவேண்டிய நிலைமொழி "சிறப்பிற்" என "ன்" ஈறு "ற்" ஆகித் திரிந்தமையை,

> னகார இறுதி வல்லெழுத்து இயையின்
> றகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கே[2]

என்ற தொல்காப்பியத்துடன் இணைத்து நோக்குவோம். நோக்கின் "சிறப்பின்" என்பது "சிறப்பிற்" எனத் திரிந்ததன் மூலம் அங்கே ஒரு வேற்றுமைப் பொருள் உண்டென்று அறியலாம். அந்த வேற்றுமைப் பொருளை விரிக்கும்போது ஒன்று முதல் எட்டு வரையுள்ள வேற்றுமைப் பொருள்களுள் எதனைக் கொள்வது?

1-2. "சிறப்பின்" என்ற தொடர்மொழி "சிறப்பு+இன்" எனப் பிரிவுபடும். இவ்விடத்து வரும் "இன்" எனும் சொல்லின் இயக்கம் யாவை? "இன்" எனும் சொல் மூவகை இயக்கம் உடையது என்பது தொல்காப்பியம். "இன்" எனப் பெயரிய ஐந்தாம் வேற்றுமையாகவும்,[3] மூன்றாம் வேற்றுமைப் பொருளுடைய உருபுச் சொல்லாகவும்,[4] சாரியையாகவும்[5] அது வரும். எனவேதான் இளம்பூரணர் "சிறப்பின்" என்பதனைச் "சிறப்பினால்" என்று மூன்றாம் வேற்றுமைப் பொருள் கொடுத்து விரிக்கின்றார்.[6] ஐந்தாம் வேற்றுமைப் பொருள் கொண்டு அதனை "வீட்டின்பம் ஏதுவாக" என்று நச்சினார்க்கினியர் விளக்குகிறார்.[7] இருவரும் "இன்" என்பதனைச் சாரியையாக எண்ணவில்லை.

1-3. தொல்காப்பிய நூற்பா ஒன்று "அ, ஆ, உ, ஊ, எ, ஔ என்னும் எழுத்துக்களில் ஒன்றை ஈற்றெழுத்தாக நிலைமொழி பெற்றிருந்தால் 'இன்' எனும் சாரியை பெற்றுத்தான் வேற்றுமை ஏற்கும்" என வரையறுத் துள்ளது.[8] இந் நூற்பாவிற் கேற்பவே "சிறப்பு" எனும் நிலைமொழி "உ" எனும் ஈறு பெற்று வேற்றுமை ஏற்கின்றது. எனவே 'சிறப்பு' எனும் நிலைமொழி 'இன்' எனும் சாரியை பெற்றுச் 'சிறப்பின்' என்றாகி வேற்மைப் பொருள் ஏற்கச் "சிறப்பிற்" எனத் திரிந்தது என்பது தெளிவு.

1-4. "சிறப்பிற்" என வரும் ஏனையிடங்கள் எப்படிப் பொருள் கூறப்படுகின்றன எனக் கண்டால் என் கருத்து மேலும் வலிவுறும். தொல்காப்பிய புறத்திணையியலுள் மட்டும், "சிறப்பிற் றாவா விழுப் புகழ்"[9] "சிறப்பிற் றுறையிரண்டுடைத்தே"[10] சிறப்பிற் சான்றோர்"[11] "சிறப்பிற் சிறுவன்"[12] என வருகின்றன. இவ் விடங்களுக்கு உரை கூறும் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் 'சிறப்பின்" என்பதில் உள்ள "இன்" எனும் சொல்லை மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபாகவோ அல்லது ஐந்தாம் வேற்றுமைப் பொருளாகவோ எண்ணிப் பொருள் கூறவில்லை, மாறாக "இன்" என்பதனைச் சாரியையாக ஏற்றுச் "சிறப்பினை உடைய" என இரண்டாம் வேற்றுமைப் பொருள் விரித்தன்றோ உரை கூறியுள்ளனர், இத்தகைய மரபு நெறி நின்றே நானும் இக் காஞ்சித் திணை நூற்பாவின் "பாங்கருஞ் சிறப்பிற்" என்ற பகுதிக்குப் "பாங்கருஞ் சிறப்பினை" எனப் பொருள் விரிக்கின்றேன்,

1-5. இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும் ஆடிய இலக்கணச் சிலம்பாட்டம் பிழைபட்டதுதான் என்பதற்கு மற்றுமோர் சான்று. தற்போது தொல்காப்பியக் காஞ்சித் திணை நூற்பாவை முழுமையோடு காண்போம். "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே" என்ற நூற்பாவைப் "பல்லாற்றானும் நில்லா உலகம் (மக்கள்), பாங்கருஞ் சிறப்பிற் புல்லிய நெறித்தே" என உரை நடைப் படுத்தலாம். இளம்பூரணர் கருத்துப்படிச் "சிறப்பிற்"

என்பது மூன்றும் வேற்றுமைப் பொருளில் "சிறப்பினுல்" என வரும்போது "பல்லாற்ருனும் நில்லா உலக மக்கள் பாங்கருஞ் சிறப்பினுல் தழுவிய நெறி காஞ்சி" என விளக்கம் கிடைக்கும். நச்சினர்க்கினியர் கருத்தின் வழிப் "பல்லாற்ருனும் நில்லா உலக மக்கள் பாங்கருஞ் சிறப்பின் ஏதுவாகத் தழுவிய நெறி காஞ்சி" எனப் பொருள் விரியும். இவ்விளக்கங்கள் மூலம் "உலக மக்கள்" என்ற "எழுவாயோடு பொருந்தி வருகின்ற "பயனிலே" யாதெனத் தெளிவில்லை. "தழுவிய நெறி காஞ்சி" என்றுதான் விளக்கம் உள்ளதே தவிர "எதைத் தழுவிய நெறி' என்று வரையறுத்துக் கூறும் பயனிலைப் பொருள் இங்கில்லை. தொல்காப்பியர், ஓம்பல் வெட்சி என்றும், அடல் குறித்தல் வஞ்சி என்றும், முற்றலும் கோடலும் உழிஞை என்றும், தலையழித்தல் தும்பை என்றும், மிகுதிப்படுத்தல் வாகை என்றும் பயனிலைத் தெளிவின்றியா ஏனைத் திணைகட்கு விளக்கம் தந்துள்ளார்? இல்லையே! ஆதந்தோம்பல் வெட்சி; வந்த மன்னனேடு அடல் குறித்தல் வஞ்சி; அரணை முற்றலும் கோடலும் உழிஞை; பகைவனைத் தலையழித்தல் தும்பை; தத்தம் பகுதியை மிகுதிப் படுத்தல் வாகை; என்றே எழுவாயோடு இணையும் பயனிலைகளையும் தெளிவாக்கினர். எனவே பயனிலைத் தெளிவு தராத உரையாசிரியர்களின் விளக்கங்களை விலக்கலே சாலும்.

1-6. இனிப் "பாங்கருஞ் சிறப்பிற்" என்பதற்குப் "பாங்கருஞ் சிறப்பினை" என விரிக்கும் என் கருத்தின் நிலை காண்போம். இப்போது காஞ்சித் திணை நூற்பா "பல்லாற்ருனும் நில்லா உலக மக்கள் பாங்கருஞ் சிறப்பினைத் தழுவிய நெறியே காஞ்சி" எனப் பொருள் விரியும். இங்கே "உலக மக்கள்" என்ற எழுவாய், "பாங்கருஞ் சிறப்பினை" எனப் பயனிலைபெற்றுச் சிறக்கக் காணலாம் எனவே இளம்பூரணர், நச்சினர்க்கினியர் கருத்தினும் என் கருத்தே தெளிவுடைத்து.

2-1. இனிப் "பாங்கருஞ் சிறப்பு" என்ற சொற்ருெடருக்கு உரையாசிரியர்களின் விளக்கங்கள் காண்போம். இளம் பூரணர் "பாங்கருமைச் சிறப்பாவது ஒருவற்கு ஒரு துணையாகாமை. நிலையாமை மூவகைப்படும். இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை" என்கிருர்.[13] நச்சினர்க்கினியரோ "பாங்கருஞ் சிறப்பு" என்பதற்கு "வீடுபேறு" என்கிருர்.[14] இவர் தம் வழி நின்றே இக்காலத்து நாவலர் பாரதியும்,[15] புலவர் குழந்தையும்[16] உரை எழுதினர். இப்படிப் "பாங்கருஞ் சிறப்பு" என்பதற்கு நிலையாமை, வீடுபேறு, என்கின்ற உரையாசிரியர்களின் கருத்து பொருந்துமா? பொருந்தாதாயின் மாற்று விளக்கம் யாது?

2-2. இலக்கியத்தை "அகம், புறம்" என இரண்டாகப் பிரித்து விளக்கியதுதான் சங்கத்து மரபு. பின் 'அறம், பொருள்' எனப் "புறத்தை" இரண்டாக்கி, "அகத்தை இன்பம்" எனச் சேர்த்து 'அறம், பொருள், இன்பம்' எனப் பிற்சான்ருேர் முப்பிரிவாக்கினர். இறுதியில் அகத்தையும் இரண்டாக்கி 'இம்மை இன்பம், மறுமை இன்பம்' எனப் பிரித்து 'மறுமை இன்பத்தை' "வீடு" எனக் குறித்தனர்.[17] ஆக மறுமை இன்பமாம் "வீடு" பற்றிய எண்ணம் பிற்கால இலக்கியக் கருத்து வளர்ச்சியிற் பிறந்தமை தெளிவு. எனவேதான் சங்க இலக்கியத்துள் "அகம்" பெற்றுள்ள ஆயிரத்து எண்ணூற்று அறுபத்திரண்டு பாடல்களும் 'இம்மை இன்பத்தையே' கூறுகின்றன. மறுமை இன்பமாம் வீட்டின்பம் சங்கத்து அக இலக்கிய இலக்கணங்களுள் யாண்டும் இல்லை. ஏதோ சிற்சில இடங்களில் வரும் கடவுளர்க்குரிய காமப் பகுதியைக்கூட "அகத்திணை" யுள் அடக்காமல் விலக்கிப் "புறத்திணையுள்" அடக்கியமையும் ஆயத்தக்கது.[18] எனவே சங்கச் சான்ருேர் 'மறுமை யின்பமாம் வீட்டின்பத்தைக் காட்டிலும் இம்மை இன்பமே சிறந்தது; செய்யுட் கருவுக்கும் உகந்தது என்ற இலக்கியக் கொள்கையர் என்பது தேற்றம்.

2-3. என்ருலும் சங்ககாலத்திலும் 'வீரர் உலகம்' என்ருெரு நம்பிக்கை உண்டு. அந்த 'வீரர் உலகம்' போர்ப்புண் பெற்று இறந்த வீரர்க்கே கிட்டும். ஏனைய நோய் வாய்ப்பட்டு இறந்து போகின்ற ஆட்கட்கு அவ் வீரர் உலகம் கிட்டாது. எனவே நோய்ப்பட்டு இறந்தானை.

> மறங்கடந் தாக நல்லமர் வீழ்ந்த
> நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
> வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தனர் மாதோ[19]

எனக் குறுக்கு வழியில் வீரர் உலகிற்கு அனுப்பினர். மேலும் "குழந்தை இறந்தோ, அரைகுறைப் பிறவியாகவோ பிறந்தாலும் கூட அவற்றையும் வாளாற் கீறியே அடக்கம் செய்தனர்.[20] இவ் வண்ணம் போர்ப்புண்

பெற்று இறந்தார்க்கே உரிய "வீரர் உலகத்தைப்" பிற்காலச் சமயச் சாயம் தோய்ந்த வீடுபேற்றுடன் இணைத்தல் பொருந்தாது.

2-4. "இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா. வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா" ஆனால் 'அந்தமில் இன்பமாம் வீடே' நிலையானது என்ற கருத்துப் பிரச்சாரம் சங்கத்து நூலுள் மிகமிகக் குறைவு. 'கழிந்த இளமை தர அரிதரோ'[21] என்று இளமை கழியுமுன் காம இன்பந் துய்க்கத்தான் துடித்தனரே யன்றித் துறவு மேற்கொள்ள வன்று. "அறனும், பொருளும், இன்பமும் மூன்றும் ஆற்றும் பெரும நின் செல்வம்[22] என்று செல்வத்தைப் போற்றினரே அன்றி அது 'சகடக்கால் போல வரும்[23] எனத் தூற்றினர் அல்லர். "அரிதிற் றோன்றிய யாக்கை"[24] என உடம்பைப் பேணி அந்த உடற்கூட்டத்தால் ஈட்டிய "குழந்தைச் செல்வமே இம்மை இன்பம் மட்டுமன்று மறுமை இன்பமும் தரும்;"[25] எனவே "இக் குழந்தைப் பேறு பெருதோர் வாழ்க்கை பயனற்றது"[26] எனப் பாடினரே அன்றிப் பாழாகிப் போய் அழியும் பாவி உடம்பெற்று அருவெறுப்புக் கொள்ளவில்லையே! எனவே சங்கப் பண்பு இளமை, செல்வம், யாக்கை இவற்றின் நிலையாமையை எண்ணித் துறப்பதன்று; மாறாக அவற்றால் பெறும் இன்பம் எண்ணித் துய்ப்பதே ஆகும்.

2-5. எனவே "பாங்கருஞ் சிறப்பு" என்ற பகுதிக்கு "நிலையாமை" என்றோ 'வீடுபேறு' என்றோ பொருள் விரித்தல் பொருந்தாது.

3·1. ஆயின், "பாங்கருஞ் சிறப்பு" என்பதற்கு யாது பொருள்? இதற்குச் சங்கத்தார் அன்று எதனை மிக்க சிறப்பாக எண்ணிக் கொண்டாடினர் எனவறிதல் சாலும்.

3-2. சங்கத் தத்துவர்களுக்கு இறப்பு ஒரு புதுமையாகத் தோன்றவில்லை.[27] ஏனென்றால் இறப்போடு பிறப்பும் வாழ்க்கையில் ஒரு சேரத்தான் நிகழ்கின்றது.[28] ஆனால் ஒருவன் இறந்த பின்னால், அவன் செல்வம் யாக்கை என்று எல்லாவற்றையும் இழந்தாலும் தான் நிலைநாட்டிய புகழை மட்டும் என்றென்றும் இழப்பதில்லை. இந்த வாழ்க்கைத் தத்துவத்தை உற்று நோக்கிய சங்கத் தமிழனுக்கு, உலகில் நிலையாமையைப் புகழால் வீழ்த்தி நிலைபெறலாம் என்ற புகழ்த் தத்துவம் உதித்தது. எனவே அதை,

> மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
> தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே[29]

எனச் சிந்தை மலர்ந்து பாடி வெளிப்படுத்தினர். எனவே அத்தகைய அழியாப் புகழைத் "தொலையா நல்லிசை"[30] என்றும் 'கெடாஅ நல்லிசை"[31] என்றும் அடை கொடுத்துப் பாடினர். புகழைத் தவிர உலகில் நிலைத்தது எதுவும் இல்லை என்றும் அறிவித்தனர்.[32] எனவே தம் உயிரைத் தந்தும் அத்தகைய நிலைத்த புகழைப் பெற விரும்பினர்,[33] எனவே சங்கத் தத்துவம் நிலையாமைத் தத்துவமன்று; அந்த நிலையாமையையும் வெற்றி கொள்ளும் புகழ்த் தத்துவம் எனத் தெளியலாம்.

3-3. இப்போது "பாங்கருஞ் சிறப்பு" என்பதற்குத்" "துணையாகும் பெரும்புகழ்" எனப் பொருள் கொண்டால் "பல்லாற்றானும் நிலையற்ற உலக மக்கள், (நிலைத்து நிற்கத்) துணையாகும் பெரும் புகழைத் தழுவும் நெறியே காஞ்சித் திணை" என விளக்கம் கிடைக்கும்,

4-1. உலக மக்களுக்குப் புகழை விளைத்து வளைக்கப் பற்பல வழிகளுண்டு. வீரத்தால் வெற்றியை விளைத்துப் புகழையடையலாம். அப்படிப் பெற்ற வெற்றியைப் பாட்டாகப் பாடியும், இசைத்தும், கூத்தாக நடித்தும் புகழ் தேடலாம். இல்லெனின் துறவு மேற்கொண்டு முத்தீ வளர்த்து முத்தி அடைந்தும் இசை நாட்டலாம். இப்படிப் பரந்துபட்ட உலகியலை உட்கொண்டுதான் தொல்காப்பியர், பற்பல வழிகளிலே புகழடையும் நிலைகளைக் காஞ்சித் திணையின் துறைகளாக்கினர்.

4-2. புகழின் விளைநிலம் வீரமே என்பது சங்கச் சான்றோர் துணிபு எனவேதான் பண்டை வேந்தர்கள்,

> நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
> பாசறை அல்லது நீயொல் லாயே[34]

எனப்பாடும் அளவிற்கு "மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது"[35] வாழ்ந்தனர், அவர் தம் ஆட்சிக்கு உட்பட்ட மக்களும் "போரெனிற் புகலும் புனைகழல் மறவராய்"[36] இருந்தனர். எனவேதான் இருபது காஞ்சித் துறையுள் எட்டுத் துறைகள் வீரப் புகழ் விரிக்கும் துறைகளாயின. அவற்றுள் வஞ்சினங் கூறிப் போர்க்குப் புறப்படுதல் 'வஞ்சினக் காஞ்சி.' அப்படி வஞ்சினம்கூறிய வன் வெஞ்சினம் மிக்குதன் புண்ணைக்கிழித்து

இறப்பது "மறக்காஞ்சி." புண்பட்ட வீரனைப் பேய் மகள் காப்பது "பேய்க் காஞ்சி" புண்பட்டு வீழ்ந்த கணவனைப் பேய்மகள் தொடா வண்ணம் மனைவி காப்பது "தொடா அக் காஞ்சி". கணவனைக் கொன்ற வேலால் மனைவி தன்னையும் தீர்த்துக் கொள்ளல் "ஆஞ்சிக் காஞ்சி." இறந்த கணவனின் தலையை அணைத்தவாறே மனைவி இறத்தல் "தலையொடு முடிதல்." பெண் கேட்ட வேந்தனுக்குப் பழங்குடி மக்கள் தம் குடிச் சிறப்பை எண்ணி அதற்கஞ்சிப் பெண் தர மறுப்பதுதான் "மகட் பாற் காஞ்சி."

4-2. உயிரோடு இருக்கையில் குவியும் பாராட்டுக்களைவிட இறந்த பின் வருகின்ற பாராட்டுக்களே மிகுதி. ஒருவனிடமிருந்து மேன்மேலும் புகழ்ச் செய்கைகளை எதிர் பார்த்து அவனைப் பாராட்டத் தயங்கும் உலகம், திடீரென அவன் இறந்துவிட்டால் தான் இதுவரை தேக்கிய தயக்கத்தை விட்டொழித்துக் கண்ணீர் பரப்பி அவன் புகழ் பாடுவதே இயற்கையாம். இத்தகைய உலகியல் மனநுட்பமே காஞ்சித் திணையின் பொதுமைத் துறைகளில் இழையோடிக் கிடக்கின்றது.

4-3. பேரிசை பெற்று இறந்திட்ட நன் மகனைச் சுற்றமெல்லாம் சூழ்ந்து நின்று அழுது புகழும் நிலையே "பூசன் மயக்கு." அப் பெருமகனின் இறப்புக்காகத் தனித் தனியே சுற்றமெல்லாம் ஏங்கி வருந்தும் நிலை "பையுள்." அவ் வீரப் பெருமகனால் காக்கப் பெற்ற புலவரும், பாணரும், பிறரும், 'இவனை இழந்த உலகம் இனி என்னுகுமோ'[37] என்றெல்லாம் கலங்கிப் பாடுவது கையறு நிலை. அப் புகழ் சிறந்த மகனைப் பெற்ற தாய் அவனைப் பறிகொடுத்து வருந்துவது "தனிப்பெயனிலை." இவ்வாறு ஒருவன் இறப்புக்காக மக்களெல்லாம் மனம் மகிழா மல், அழுதழுது கலங்கும்படிப் புகழ் பெற்றுச் சிறப்பதை நான்கு துறைகள் விளக்கு கின்றன.

4-4. பெண்கள், கணவன் இறந்த வுடன் தாங்களும் இறப்பதாலும், அல்லது உடன் கட்டை ஏறுவதாலும் அல்லது தாம் பெற்ற சிறு மகவின் நல்வாழ்விற்காகக் கைம்மை நோற்பதாலும் புகழ்பெறுகின்றனர். திடீரெனத் தலைவனைப் பறிகொடுத்த தலைவி புலம்புதல் "பாலைநிலை" "கணவனை இழந் தோர்க்குக் காட்டுவதில்"[38] என்று தானும் இறந்தாளை மக்கள் புகழ்வது "மூதானந்தம்" கணவனின் ஈமத்தீயில் பாய்கின்ற மனைவி கூடியுள்ள மக்கட்கு உரை நிகழ்த்துவது "மாலை நிலை." தன் சின்னஞ்சிறு மகவிற் காகக் கணவனை இழந்தாள் கைம்மை நோற்றல் "தாபதநிலை." இந் நான்கு துறை களும் நன் மனைவியாகிப் பெண்கள் பெற்ற பெருஞ் சிறப்பை விரிக்கின்றன.

4-5. மனைவியை இழந்தோன் உடனே மறுமணம் நாடாமல் நாளும் தன் மனைவியின் நினைவாக வருந்துதல் "தபுதார நிலை." இறந்த பின்னும் தன் மனைவியைக் காதலிக் கும் நற் கணவன் என்ற புகழ்பெறுதலை இத் துறை விளக்கிற்று.

4-6. சில தத்துவர் உலகப் பற்றைத் துறப்பதுதான் புகழுக்குச் சிறந்த வழி என எண்ணினர். மேலும்,

> இன்று வைகல் வாரா முன்னே
> செய்ந்நீ முன்னிய வினையே
> முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே[39]

எனத் துறவை வற்புறுத்தும் போக்கும் ஆங் காங்கே தோன்றின, எனவே புகழடையத் துறவும் ஒரு நெறி எனக் கண்ட தொல் காப்பியர் அதனை மூன்று துறைகளால் விளக் கினர். உயிர் நிலையாமையைக் கூறுவது "பெருங்காஞ்சி." செல்வம், இளமை இவற் றின் நிலையாமை கூறுவது "முதுகாஞ்சி." இறப்பின் நிலைப்பை எடுத்துரைப்பது "காடு வாழ்த்து" இவ்வாறு நிலையாமை கூறித் துறவை வற்புறுத்தித் துறவால் பெரும் புகழடையலாம் என்ற தம்காலக் கருத்தைத் தொல்காப்பியர் காஞ்சித் திணையின் ஒரு சிறு கூறுக்க எண்ணி அதற்கு மூன்று துறைகள் ஒதுக்கினர். இந் நுட்பம் தெளியாமல் காஞ்சித் திணை என்பது முழுக்க முழுக்கத் துறவை வற்புறுத்தும் நிலையாமைத் திணை என்பது பொருந்தாது. எனவேதான் வீர சோழியமும் நிலையாமையே காஞ்சித் திணை எனப் பிழைபடக் கூறாமல் "நிலையாமை" யைக் காஞ்சித் திணையின் பதினைந்து துறை களுள் ஒன்றாகத்தான் கூறியுள்ளது.

5-1. இவ்வண்ணம் காஞ்சித் திணை என்பது "நிலையாமை" கூறும் திணையன்று. நிலையாமையை வென்று நிலைபெறுதலை விளக்கும் திணை என்று தெளிகின்றோம்.

பொ. சுந்தரமகாலிங்கம் எம். ஏ,
அரசுக் கலைக் கல்லூரி
தருமபுரி-636701

அடிக் குறிப்புகள்

1 தொல். புறத் திணையியல், 23
2 தொல். புள்ளிமயங்கியல், 37
3 தொல். வேற்றுமையியல். 16
4 தொல். வேற்றுமையியல் 13, வரி 7-8
5 தொல். உருபியல் 1
6 தொல். பொருள். இளம்பூரணம். பக் 127
7 தொல். பொருள். நச்சினார்க்கினியம் பக். 235
8 "அ ஆ உ ஊ எ ஔ என்னும்
அப்பா லாறன் மிசைமொழி முன்னர்
வேற்றுமை உருபிற் கின்னே சாரியை"
9 தொல். புறத்திணையியல் 5, வரி 9-10
10 தொல். புறத்திணையியல் 8, வரி 13
,, ,, 24, வரி 37
11 தொல். புறத்திணையியல் 21, வரி 15
12 தொல். புறத்திணையியல் 24, வரி 32
13 அடிக்குறிப்பெண் 6, காண்க.
14 அடிக் குறிப்பெண் 7 காண்க.
15 தொல்காப்பியர் பொருட் படலம், நாவலர் பாரதி, பக். 155
16 தொல்காப்பியர் பொருளதிகாரம், குழந்தையுரை பக். 495
17. நன்னூல் 10 "அறம்பொரு ளின்பம் விடடைதல் நூற்பயனே."
18 தொல். புறத்திணையியல் 28
19 புறநானூறு 93, வரி 9-12
20 புறநானூறு 74, வரி 1-2
21 கலித் தொகை, பாலை 17. வரி 12
22 புறநானூறு 28, வரி 15-18
23 நாலடியார் 2
24 கலித் தொகை 141, வரி 1
25 அகநானூறு 66, வரி 1-5
26 புறநானூறு 188, வரி 6-7
27 புறநானூறு 192, வரி 4 "சாதலும் புதுவதன்றே"
28 புறநானூறு 27, வரி 12 "மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்"
29 புறநானூறு 165, வரி 1-2
30 மலைபடுகடாம் வரி 70
31 பதிற்றுப் பத்து 14, வரி 21 .
32 திருக்குறள் 233
33 புறநானூறு 182, வரி 5 "புகழெனின் உயிரும் கொடுக்குவர்"
34 புறநானூறு 31, வரி 5-6
35 முல்லைப்பாட்டு, வரி 67
36 புறநானூறு 31, வரி 9
37 புறநானூறு 217, வரி 12-13
38 சிலப்பதிகாரம், வழக்குரை காதை. வரி 80
39 புறநானூறு 363, வரி 17-19
40 வீர சோழியம் 100

தமிழைப் பற்றி...

"Perhaps no language combines greater force with equal brevity; and it may be asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind. The sequence of things – of thought, action, and its results – is always maintained inviolate."

—Rev. P. PERCIVAL

ஃ ஃ ஃ

"The Dravidian peoples possess one of the noblest literatures, from a moral point of view, the world has seen."

—Charles E. GOVER

ஃ ஃ ஃ

"Tamil is the only vernacular literature in India which has not been content with imitating the Sanskrit but has honourably attempted to emulate and outshine it. In one department at least, that of ethical epigrams, it is generally maintained, and I think it must be admitted, that the Sanskrit has been outdone by the Tamil."

—Dr CALDWELL

ஆங்கில நாட்டு மியூசியத்தில் அன்னைத் தமிழ்

கு. க. சுப்பிரமணியன்
(செயலாளர், லண்டன் தமிழ்ச் சங்கம்)

இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு மலர் வெளியீட்டிற்கு எழுத்தோவியங்கள் தேவை என்று ஆங்கில நாட்டுத் தமிழறிஞர் பலருக்கும் எழுதியிருந்தோம். முதலாவதாக வந்து சேர்ந்தது பிரிட்டிஷ் மியூசியத்தில், கீழ்த்திசை மொழிகளின் புத்தகப் பகுதியில் திராவிட மொழிகளின் உட்பிரிவின் தலைவ ராகப் பணியாற்றிவரும் டாக்டர் கௌர் (Dr A. Gaur) அவர்களிடமிருந்து உலகநீதி என்னும் தமிழ் நூலைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதி அனுப்பியிருந்தார். தமிழ் இலக்கியத்திலும், மொழியிலும் ஈடுபாடு கொண்டு டாக்டர் பட்டம் வரை கற்றுத் தேர்ந்த ஆங்கில அறிஞர்கள் பேராசிரியர் பரோ, டாக்டர் ஆஷர், டாக்டர்மார் முதலியோரைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறிந்திருக்கும். அந்த வழியைப் பின்பற்றி பிரிட்டிஷ் மியூசியத்தில் இருந்து தமிழ் நூலைப் பற்றிய ஓர் கட்டுரை வந்ததும், அங்குள்ள தமிழ் நூலகப் பகுதியைக் காண வேண்டும் என்ற பேரவா எழுந்தது, அந்த ஆவலின் விளைவே 'ஆங்கில நாட்டு மியூசியத்தில் அன்னைத் தமிழ்,'

> சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்
> செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குசேர்ப்பீர்.
> —பாரதி

பாரதியின் வாக்கை நிருபிக்கும் வண்ணம் கலைச் செல்வங்கள் பலவற்றையும் உலகத்தில் எல்லாப் பகுதிகளில் இருந்தும் கொணர்ந்து குவித்து வைத்திருப்பது பிரிட்டிஷ் மியூசியத்தில்தான். முன்பெல்லாம் பிரிட்டிஷ் மியூசியத்திற்குள் சென்று பார்த்த போது தொல் பொருள்களைப் பார்வையிடும் நோக்கத்துடன் தான் சென்று பார்த்துத் திரும்புவது வழக்கம். இம் முறை ஆங்கில நாட்டில் உள்ள கலைச்செல்வங்களில் தமிழ்ப் பகுதியில் என்னதான் உள்ளது என்று அறியும் நோக்கத்துடன் உள்ளே நுழைந்தேன்.

'கீழ்த்திசை நாடுகளின் புத்தகப் பகுதிக்குச் செல்ல வேண்டும்' என்றதும் 'நெறியாளர் அலுவலகத்திற்குச் சென்று அனுமதி பெற்று வாருங்கள்' என்று கூறினார்கள். அதன்படியே அனுமதி பெற்று உள்ளே சென்றதும், 'டாக்டர் கௌர் அவர்களைக் காண வேண்டும்' என்று எனது விருப்பத்தை வெளியிட்டேன். 'அவர் மூன்றுவார விடுமுறையில் சென்றுள்ளார். தங்களுக்கு என்ன உதவி தேவை? என்று கேட்டார்கள்; 'இங்கே உள்ள தமிழ் நூல்களைக் காண வேண்டும் என்ற ஆவலில் வந்தேன். டாக்டர் கௌர் அவர்கள் இருந்தால் நலமாக இருக்கும் என்று பார்த்தேன்' என்று இழுத்தேன், 'இதோ பாருங்கள் புத்தகப் பட்டியல்கள் கொண்ட அட்டைச் சீட்டுகள். உங்களுக்கு எந்த நூல் வேண்டும் என்று சொல்லுங்கள், கொண்டு வந்து தருகிறோம்' என்று மறுமொழி உரைத்தார்கள். அத்துடன் திருப்தி அடையவில்லை என்பதைக் காட்டிக் கொள்ளாமல் 'வேறு யாராவது தமிழ் நூல்கள் பற்றி விவரமறிந்தவர்கள் இருந்தால் காண விரும்புகிறேன். இங்குள்ள தமிழ்ப் புத்தகங்களைப் பற்றியும், கையெழுத்துப் பிரதிகள், ஓலைச் சுவடிகள் பற்றியும், இன்னும் பல தகவல்களையும் சேகரிக்க வேண்டும் என்று வந்துள்ளேன்' என்று எடுத்துக் கூறினேன். 'அதற்குரிய தலைவர் டாக்டர் கௌர்தான். இருப்பினும் ஒரு வேளை வடமொழித் துறையின் தலைவர் திரு. லாஸ்டி (Mr J. P. Losty) அவர்கள் உங்களுக்கு உதவக்கூடும். அவரை இப்போது காண இயலாது. நாளை வாருங்கள்' என்று காலமும் குறித்து அனுப்பி வைத்தார்கள்.

அடுத்த நாள் குறித்த நேரத்தில் திரு. லாஸ்டி அவர்கள் கீழ்த்திசை நாடுகளின் புத்தகப் பகுதியின் கதவுகளுக்கு அருகே வந்து வரவேற்றார். 'நீங்கள்தானே திரு. சுப்ரஹ்மண்யம்' என்றார். நான் சிரித்துக் கொண்டே 'நான் சுப்பிரமணியன்' என்றுரைத்தேன். 'டாக்டர் கௌர் இருந்திருந்தால் உங்களுக்கு மிகவும் உதவியாக இருந்திருக்கும். இருப்பினும் என்னால் இயன்ற உதவிகளைச் செய்ய முயற்சிக்கிறேன்' என்றார். நான் கேட்ட கேள்விகளுக்கு மிகவும் அமைதியாகவும், அன்புடனும், அவர் அளித்த பதில்கள் என்னை வியப்பில் ஆழ்த்தியது,

வடமொழிப் புலமை பெற்ற ஒருவர் தமிழ் மொழியைப்பற்றி இவ்வளவு தெரிந்து வைத் திருக்கிறரே என்று ஆச்சரியப்பட்டேன்.

'உங்கள் மியூசியத்தில் உள்ள தமிழ்ப் பகுதியைப் பற்றிப் பொதுவாகக் கூறுங்கள்' என்றதும்,

'கீழ்த்திசை நாடுகளின் அச்சிட்ட புத்த கங்களை எடுத்துக்கொண்டால் ஆங்கில நாடு முழுவதிலும், பிரிட்டிஷ் மியூசியத்தில் தான் மிக அதிகமான புத்தகங்கள் உள்ளன. உங் கள் மொழியான தமிழ் மொழி நூல்களைப் பத்தொன்பதாம் நூற்ருண்டில் இருந்து சேகரித்து வருகிறேம். சேகரிக்கத் துவங்கிய காலம் பத்தொன்பதாம் நூற்ருண்டுஎனினும் அதற்கு முற்பட்ட காலத்திலிருந்து நூல்களைப் பல வழிகளிலும் சேகரித்துள்ளோம். முத லில் தனிப்பட்டோர் சேகரித்து வைத்திருந்த நூல்களையெல்லாம் விலை கொடுத்து வாங்கி னேம். இப்போதெல்லாம், புத்தக வெளி யீட்டாளர்கள் வெளியிடும் பட்டியல்களை வைத்துக்கொண்டு புத்தகங்களைத் தருவிக் கிறேம். சென்னையில் உள்ள ஹிகின் பாதம்ஸ் போன்ற வெளியீட்டாளர்களின் பட்டியல்களைப் பார்வையிட்டு நூல்களைத் தேர்ந்தெடுத்து வரவழைக்கிறேம்' இந்தியா வில் எங்களுக்கு புத்தக வெளியீட்டர்களிடம் நல்ல தொடர்பு இருந்து வருகிறது' என்ருர் திரு. லாஸ்டி அவர்கள்.

'இந்திய மொழிகளில் முதன் முதலாக அச்சு வடிவில் தோன்றிய நூல் எந்த மொழி யில் தெரியுமா?' என்று எனது ஆவலைத் தூண்டினர். என்ன சொல்லப் போகிருரோ என்று பார்த்தபோது, கவலைப்படாதீர்கள் என்று சொல்வது போல, 'முதன் முதல் அச்சில் தோன்றிய மொழிதமிழ்மொழிதான்' என்று அவர் கூற என்னிடத்தில் தோன்றிய திருப்தியை அவர் உணர்ந்துகொண்டார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. ''தமிழ் மொழியில் முதல் அச்சு நூல் 1714ம் ஆண்டு வெளிவந்தது. இது தரங்கம் பாடியில் அச்சாகியது. 'The earliest Known Indian Printed Script is in Tamil' என்ருர். 'அப்படி யானல் உங்கள் சிறப்புத் துறையான வடமொழியில் முதல்அச்சு நூல் எப்போது வெளியாகியது'' என்று நான் கேட்டேன், முதல் வடமொழி அச்சு நூல் 1792ம் ஆண்டு வெளியாகியது. அது காளிதாசரின் 'ரிது சம்ஹாரம்' என்ருர். தொடர்ந்து,

''தமிழ் மொழியில் மட்டும் இப்போது சுமார் 18000 நூல்கள் உள்ளன. வட மொழியில் சுமார் 24,000 நூல்கள் உள்ளன. முதன் முறையாக பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ள தமிழ் நூல்களைப் பற்றிய ஒரு தொகுப்பினை திரு. L. D. பார்னெட் (L. D, (Barnett M. A. LITT.D.) அவர்களும், ஆங்கில நாட்டுத் தமிழ் மேதையான திரு G. U. போப் (Dr G.U. Pope) அவர்களும் சேர்ந்து 1909ம் ஆண்டு வெளியிட்டனர். அப்போது பிரிட்டிஷ் மியூசியத்தில் சுமார் 3000 தமிழ் நூல்கள் இருந்தன. இதைப் பாருங்கள் என்று தமிழ் நூல்களைப் பற்றிய தொகுப்பினை எடுத்துக் காட்டினுர். அதன் முன்னுரையில் முச்சங்கங்களைப் பற்றியும், தொல்காப்பியர், வள்ளுவர், நக்கீரர் முதலி யோர்களைப் பற்றியும் குறிப்பிட்டு இருந்ததை பார்த்து மெய் சிலிர்த்தேன். அடுத்த முறை 1931ம் ஆண்டு ஒரு தொகுப்பு வெளியாகி யது. அப்போது சுமார் 3600 தமிழ் நூல்கள் இருந்தன'' என்ருர் திரு. லாஸ்டி.

''இப்போது சுமார் 18000 தமிழ் நூல்கள் இருப்பதாகக் குறிப்பிட்டீர்களே இவற்றைப் பற்றி ஒரு தொகுப்பு நூல் இல்லையா? என்றதும் அப்பணியை டாக்டர் கௌர் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள். அத் தொகுப்பு தயாராக உள்ளது. விரைவில் வெளிவரும்'' என்ருர். ''சரி வாருங்கள் புத்தகங்கள் அடுக்கி வைத்திருக்கும் பகுதிக்கு உங்களை அழைத்துச் சென்று காட்டுகிறேன்'' என்று புத்தகங்களைப் பாதுகாத்து வைத் திருக்கும் அறைகளுக்கு அழைத்துச் சென்ருர். 'இதோ பாருங்கள் 1749ல் ஜெர்மனியில் அச்சாகிய தமிழ் பைபிள்.' இதைப்பார்த்தீர்களா 1747ல் அச்சாகிய தமிழ் பைபிள்.' அதன் தலைப்பு 'Bible in Malabar' இது என்ன மலபார் பைபிள்! ஒரு வேளை மலையாளத்தில் பைபிளோ என்று உள்ளே பார்த்தால் பழைய தமிழ் எழுத்துக்கள். எனது சந்தேகத்தைத் தீர்க்கும் வகையில் 'முன் காலத்தில் தமிழகம் வந்த மேல் நாட்ட வர்கள் தமிழை மலபார் மொழி என்று அழைத்து வந்தனர்' என்ருர். 'அதையேன் கேட்கிறீர்கள் தமிழில் இருந்துதான் மலை யாளம் தோன்றியது என்று நாங்கள் வருடக் கணக்காகக் கூறி வருகிறேம்' என்றேன்.

''கவின் மலையாளமும் உன் உதிரத்தே உதித்தெழுந்து ஒன்று பல வாகிடினும்'' என்ற பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின்

வர்க்கு என் மனக் கண் முன் தோன்றியது. தொடர்ந்து 1772ம் ஆண்டு ரோம் நகரில் அச்சாகிய தமிழ் நூலை எடுத்துக் காட்டினர். அதன் தலைப்பு 'Alphabetum—Grandonico-Malabaricum-Sive-samscridonicum'' -நூலாசிரியர்—Amaduzzi.

தமிழ் நூல்கள் பலவற்றைக் கண்குளிரக் கண்டு களித்தேன். தேவாரம், திருவாசகம், திருமூலர் திருமந்திரம், திருக்குறள், திருவருட்பா, கந்தபுராணம், பெரியபுராணம், கம்பராமாயணம், நற்றிணை, குறுந்தொகை, திருப்புகழ், தற்கால நூல்களில் திரு வி. க., மு. வ. ஆகியோரின் படைப்புகள் இப்படிப் பலப்பல சப்தரிஷி நாடி போன்ற சோதிட நூல்களும் உண்டு. ''தென்னிந்தியக் கோவில்களின் கல்வெட்டுக்கள்'' என்ற தொகுப்புக்கள். இப்படிப் பலப் பல. திருப்பதி தேவஸ்தானக் கல்வெட்டுகளைப் பற்றி எட்டுப் புத்தகங்கள் உள்ளன. அங்கே வெள்ளையடித்து மறைக்கப் பட்டாலும் இங்கே அச்சடித்து வைக்கப் பட்டுள்ளது திருப்பதி தமிழனுடையது தான் என்று.

நூல்களைப் பார்த்து முடித்ததும்'ஏதாவது கேட்க விரும்புகிறீர்களா?' என்றார் திரு. லாஸ்டி. ' இங்கே தமிழ் நூல்களைப் பேணி அடுக்கி வைத்திருக்கும் முறையைக் கண்டு பெரிதும் வியப்படைகிறேன். இவற்றைத் தேர்ந்தெடுப்பதில் ஏதேனும் முறைகளைக் கையாளுகின்றீர்களா?'' என்றேன். சாதாரணமாக, நாங்கள் அரசியல், வரலாறு, இலக்கியம், கலாசாரம், சமயம் போன்ற நூல்களைப் பட்டியல்களில் இருந்து தேர்ந்தெடுக்கிறோம். விஞ்ஞான நூல்களைத் தமிழ் நாட்டில் இருந்து வரவழைப்பதில்லை' என்றார். 'ஏன்' என்றதும் உங்கள் நாட்டு விஞ்ஞானிகள் தான் ஆங்கிலத்திலே அழகாக விஞ்ஞான நூல்களை வெளியிடுகிறார்களே! தமிழ்மொழி விஞ்ஞான நூல்கள் வெளிவந்தால் அவற்றை வரவேற்போம் என்றார். எனக்கு சற்று வருத்தமாகத் தான் இருந்தது. நாம் விஞ்ஞான அறிவுடன் ஆங்கில அறிவையும் வளர்த்துக் கொள்ளும் அளவிற்கு, தமிழ்மொழியில் விஞ்ஞானத்தை வளர்த்துக் கொள்ளவில்லையே என்று வருந்திக் கொண்டேன்.

அடுத்து கையெழுத்துப் பிரதிகளின் பகுதியைக் காட்டினர். இதில் கையெழுத்தில் வெளியான நூல்கள், ஓலைச் சுவடிகள் பட்டயங்கள் முதலியன அடங்கும். இவற்றில் கம்பராமாயணம், மருத்துவப் பாடல்கள் சைவப் பாடல்கள், கடிதங்கள் இப்படிப் பல அடங்கும். ஓலைச் சுவடிகள் பலவும் பாதுகாப்பாக பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டு முறையே எண்களும் தரப்பட்டு, கண்ணாடிப் பேழைகளுள் வைக்கப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு மணி நேரத்தை என்னுடன் செலவிட்ட திரு. லாஸ்டி அவர்கள் 'உங்களுக்கு எங்கள் மியூசியத்தின் நூலகத்தில் உள்ள அக்கரையைப் பெரிதும் பாராட்டுகிறேன்.' 'வேறு ஏதும் இறுதியாகக் கேட்க விரும்புகிறீர்களா?' என்று கேட்டார்.

''எனது முன்னோடியான டாக்டர் கோதண்டராமன் அவர்கள் உங்கள் தமிழ் நூல் நிலையத்தைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளார். நானும் பயன்படுத்த விரும்புகிறேன். அதற்கு விசேட அனுமதிச் சீட்டுப் பெற வேண்டுமே, நான் எப்படிப் பெற வேண்டும் என்று சொல்லுங்கள்'' என்றேன், 'அதற்கென்ன இப்போதே ஏற்பாடு செய்கிறேன்' என்று கீழ்த்திசை மொழிகளின் நூல் நிலையத்திற்கும், படிக்கும் அறைக்கும் தேவையான விசேட அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுத் தந்தார், 'வேலை நேரங்களில் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வந்து பயன்படுத்துங்கள் பயன் பெறுங்கள்'' என்றார்.

வடமொழித் துறையில் வல்லுநராக இருந்தும், தமிழ் உள்ளத்தோடு, தமிழ் மொழித் துறையை விரிவுபடுத்திக் காட்டிய திருவாளர் லாஸ்டி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு விடைபெற்றேன்.

S. K. Subramaniam
B.E (Mech.), M. Phil., D. S. S,
17 Medlar House
Longlands Road,
Sidcup, Kent, U. K.

தமிழைப் பற்றி...

''The mode of collocating its words follows the logical or intellectual order more so than even the Latin or Greek.''

—Dr SCHIMID

தமிழ் மெய்யொலி மாற்றங்கள்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

தொல்காப்பியக் காலமுதலே மெய் யொலியில் சிலமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதைப் போலி (தொல் 82, நன்-122) என மரபிலக்கணங்கள் கூறுகின்றன. Free Variation என மொழியியல் கூறும்.

இம்மாற்றங்கள் தோன்றுவதற்குப் பல காரணங்கள உள. (அ) சரியாக ஒலிகளை உச்சரிக்கும் தன்மை குறைந்து, சரியாக உச்சரிக்க இயலாமை. கறுப்பு-கருப்பு, குறும்பி-குரும்பி, பவழம்-பவளம் போன்றவை. இன்று கன்னியாகுமரி மாவட்டத்தினரைத் தவிரத் தமிழகத்தில் ற, ர, ஒலிகளை வேறுபடுத்தி ஒலிப்பவர்கள் குறைவு-இதனால் இம்மெய்மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். (ஆ) (1) பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக்க விரும்பியதால் ஏற்பட்டவை. தசரதன - தயரதன, வசந்தமாலை-வயந்தமாலை, வயசு-வயது, கவசம-கவயம், கலசம-கலயம், அசா-அயா, போன்றவை. (இ) (1) தமிழ் மொழியிலேயே காலத்தால் ஏற்பட்ட மாற்றங்களால் ஏற்பட்டவை. யாண்டு-ஆண்டு, யாடு-ஆடு, யானை-ஆனை போன்றவை-இதனல் மொழிககு முதலில் அமைந்துள்ள உயிர்மெய்யில மெய்யின் வீழ்ச்சி. முந்திய திராவிட மொழியில் மொழிக்கு முதலில் உயிரெழுத்துக்களே அமைந்து, இடைக்காலத்தில் உடமபடு மெய்யாகிய 'ய்' கரம் இணைந்து பின்பு மறுபடியும் வீழ்ந்ததாகக் கொள்ளலாம். அதேபோனறு சபை-அவை, சமணர்-அமணர், சநதி-அநதி, சமர்-அமர், சூசி-ஊசி, சேமம-ஏமம் போனறவற்றிலும் திராவிடமொழியிலிருந்து வடமொழிக்குச், சென்று மறுபடியும் பழைய வடிவத்தையே நாம் பயன்படுத்தியதாகக் கொள்ளலாம். திறை-இறை, காசு-ஆசு போனறவையும் நினைககததக்கவை. (2) பிற்காலத்தில் கடையிலுள்ள மெய்கள் வீழ்தன. பார்-பாத்து, சேர்-சேத்து, வேர்-வேத்து கோர்-கோத்து, தண்ணீர்-தண்ணி. மேல்-மே; அவள்-அவ, இவள்-இவ, உங்கள்-உங்க.

(3) இடைவீழ்ச்சி-மருமகன்-மருகன்.

(ஈ) கவிஞர்களுக்கென அமைந்த சலுகையால் எதுகை, மோனை, போன்றவற்றால் ஏற்பட்ட விகாரங்களால் ஏற்பட்ட மாற்று வடிவங்கள்-(1) கரும்பு-கருப்பு, வேம்பு-வேப்பு; பாம்பு-பாப்பு, செம்பு-செப்பு, வேந்து-வேத்து; அன்பு-அற்பு, நண்பு-நட்பு, கன்று-கற்று, வென்றி-வெற்றி; குரங்கு-குரக்கு; (2) எண்-எள்; வேண-வேள்; இவற்றுள் எது முந்திய வடிவமெனக் காண்பது இன்றியமையாத ஒன்று. தறை-தரை.

(உ) ஒருகாலத்துப் பொருள் வேறுபாடு அமைந்து, பிற்காலத்து அவ்வேறுபாடு இழக்கப்பட்டு ஒத்த வடிவமானவை ஓதை-ஓசை. (உ) ஒருமை, பன்மை, வேறுபாட்டோடிருந்து, பின்புவேறுபாடற்றுப் போலியானவை. அறம்-அறன், இடம்-இடன்; சினம்-சினன், கயம்-கயன், கலம்-கலன், குலம்-குலன், குணம்-குணன், சுரம்-சுரன், திறம்-திறன், தேம்-தேன், நயம்-நயன், நலம்-நலன், நயம்-நயன், நிலம்-நிலன்; பயம்-பயன்; புலம்-புலன்; பொலம்-பொலன்; மணம்-மணன்; மடம்-மடன்; மரம்-மரன்; மறம்-மறன்; முகம்-முகன்; வலம்-வலன்; வறம-வறன்;

(ஊ) (1) முன் அண்ணஒலி (Alvelor) நடுஅண்ண ஒலியாதல்(Palatal) பேச்சுவழக்கால் இவை அமைந்திருக்கலாம்-வைத்து-வைச்சு, சிரித்த-சிரிச்ச; (Dental) தெரிந்து-தெரிஞ்சு; கைந்நின்ற-கைஞ்ஞின்ற;-மெய்ந்நின்ற-மெய்ஞ்ஞின்ற; அத்தன - அச்சன், செய்து-செஞ்சு, ஐந்து-அஞ்சு,

(2) ஞெகிழ்ந்தது-நெகிழ்ந்தது, ஞண்டு-நண்டு; ஞாயிறு-நாயிறு;

(3) ஒன்று-ஒண்ணு:

(எ) (1) வளைநா ஒலியாக அமைந்த ஒலிகளில் சில-நிழல்-நிணல்; தழல்-தணல்.

(2) குழல்-குரல்.

(எ) சேரல்-சேரன்; வியல்-வியன்.

(ஐ) காமம்-காமர்; திறம்-திறல்.

(ஒ) புதர்-புதல்; அயிரை-அயிலே.

(ஓ) பெண்சாதி —பெஞ்சாதி; பெண்பிள்ளை — பொம்பிளை.

(ஔ) மகன்-மவன்; மகள்-மவள்; அதிகன்-அதியன்.

(கொடுக்கப்பட்டுள்ள சான்றுகள் அனைத்தும் இலக்கியச்சான்றுகள்)

Dr S. V. Subramanian
M.A., Ph. D.
Reader & Head of the Dept. of Tamil
University of Kerala
Kariyavattam,
Trivandrum — 695017

பயன்பட்ட நூல்கள்

தொல்காப்பியம் மூலம் கழகவெளியீடு 1954
நன்னூல் காண்டிகையுரை 1958
Dr S. V. Subramanian, Grammer of AkanaanuuRu
— do — Descriptive Grammar of Cilappatikaaram
T. P. Meenachisundaram, History of the Tamil Language
யாருக்காக அமுதான்-இலக்கண விளக்கம்-இலின் டாகிறிஸ்டி கட்டுரை.
ச. வே. சுப்பிரமணியன். தமிழில் உயிரொலி மாற்றங்கள்.

THE AALVAARS CONCEPT OF SALVATION

Dr N. Subbu Reddiar

It was shelley who wrote "Die if though wouldst be with that thou dost seek". But the experiences and the teachings of the ALvars are to the contrary. To the true lover of God whose love is truly reciprocated, departure from this world and from this body is not essential for the realisation of spiritual bliss. Encased in the material body and surrounded by this material world with all its temptations and allurements, he still finds it possible to realise the fulfilment of his soul and to reach the goal of his spiritual endeavour. In spite of his physical shortcomings and his material surroundings, he is able to centre his mind in God and convert this world of samsara, in so far as he is concerned, into a world of eternal bliss. when in that frame of mind he breaks into rhapsody he sings in the following strain : "what is there wrong or low in my continuing in this life, if my beautiful lotus-eyed Lord so grant that my lips shall always utter His ever-increasing greatness and glory, my mind ever be filled by His rapturous and seductive Form, and my hands be unceasingly engaged in offering the choicest flowers at His divine Feet?"[1] Those who render service to Lord Krishna are verily in the Paramapadam and so need not aspire to reach that place.[2] Offering greetings to Him shall be practised assiduously not minding the worlds here and hereafter.[3] ToNTaraTi-p-poTi ALvar is fascinated by the sleeping Beauty at Sri Rangam Therefore he emphatically rejects the offer of even Indra's post in heaven [4] Vedanta Desikan, who could be said, without any exaggeration, to have lived a peaceful life dedicating himself to the service of the Lord, enjoyed the supreme and ineffable charm of Lord Varadraja at KaaNchi and swore that he did not have any attraction for VaikuNTham [5] Devotees like these pious souls did not really choose to leave the world but God chose them to be withHim in VaikuNTham and so they have to leave their mortal frame.

Intense experience of God fills the mystic devotee with delectable enjoyment relieving him of the stress and storm of worldly life. This experience lasts only for short periods which may vary from individual to individual. This state can be equated with the bliss of the Eternals. On attaining this earthly-unearthly state, the mystic feels all the security and all the bliss that are usually understood to be the lot of the mukta, and thinks that this state itself is mokSa and not merely a pale foretaste of it. He even feels in the first flush that this stage is higher and sweeter and more difficult of attainment than moksa itself. Many of the ĀLvar claim for this state greater excellence than for the state of mokSa in the eternal region of Paramapadam.[6] Occasions when such an experince is not had make the mystic yearn passionately for a reunion with the Divine.

There are still other mystics who become conscious of the worldly ills and plead to God for an escape from them. The actual impact of the sufferings of people, mystical and non-mystical, impress alike upon the mystics. The inevitable nature of the sufferings of the world is admitted by them. Ailments of mind and body, old age and requirements of daily life and the social adjustment with people of different abilities and capacities which are invariably unpalatable to the mystics together with the arousing of the impressions in themselves that have been imbedded in the beginningless series of previous births show the mystics that the world and the life here, however much they are kept beyond the comprehension by the mystic experiences, have to be got rid of once and for all.[7] This shall be sought after, if sufferings, which had fallen to their lot, should be ended and are never to recur. God too teaches His man only this by withdrawing from time to time the intense experiences which are afforded by Him, in order that the real nature of

mortality could be made known to them. Thus arises the need for final release or emancipation.

It is pertient that a definition of the general concept of mokSa according to the ancient seers might be attempted here. MokSa, according to them, is the state of release of the soul from bondage due to karma. It is a return from the becoming of samsaara to the being of Brahman. It is thus a reversal of the empirical process due to the complex of avidyā, kāma and karma and the infinite regress of causality. In other words, it is liberation from worldly and other-worldly limitations and entry into the infinite. It thus implies self-transcendence in the subjective aspect of mastery over karma and in the objective aspect of going beyond the limits of space-time. Thus in a true emancipation the eternal transcends the temporal, and it is only in the world of Brahman transcending the phenomenal world that the self is transformed or brahmanised and enjoys eternal life. The mukta belongs to the realm of Brahman. NammāLvār in his vision of mokSa views himself so far advanced in realisation that he transcends the realm of senses apprehends the key differences between ātman and prakrti, rises above the joys and sorrows, punya and pāpa of the world, and thereby experiences the release of the soul [8] The verse under reference contains a full and apt description of the experiences of mokSa in and through the soul.

The state of final release is conceived differently by the different schools of thought and it is due to the concept of life that is idealised by the particular school. The schools like Sankhya, Nyāya, Buddha and Jaina which stress the worldly ills, declare the state of release as nirvāNa (blowing out everything that is distressing), apavarga (escaping from the material world), and kaivalya (existing in isolation). The VaiSeSika school, though closely allied to the Nyāya in its attitude to the world, mentions the state of release as supremely prosperous (nihsreyasa), verily a state in which the self is free from the material bonds and so lies in its own state To the Advaitin, the state of mokSa is the ideal one when the attributeless Braman alone exits. The same is the case with the schools of Bhadaabhada and Suddhaadvaita. All the other school of Vedaanta and the theistic schools of religion believe in the omni-presence of God. God comes down to this world and enables his devotees to have communion with him. The love which the devotees have for God must per force be wished to be everlasting The awareness that mortality could not permit this naturally makes them wish to have the name experience in a life hereafter when no material binding can out it at any stage. God who condescends to grant His devotees such an experience here by presenting Himself unto them must and will grant an experience of the same kind to the maximum degree of delectability when the selves are not bound by any limitations. Naturally, the state of release is held by all these school to be marked by supreme bliss without the least trace of suffering.

It is also said that mukti is the realization of the meaning of the relation between the self and the universal self enshrined in the Upanisadic text 'Thou art that'.[9] There is more value in abolishing the ahankara of the jiiva by self- ffacement and surrender of the self to the true Self. Kainkaryarasa brings out the joy of self-less service. In attuning his naughted will to that of the seSi the mukta feels that he is like a lute on which the supreme singer plays Love is fulfilled in surrender and service; its cosmic value lies in attuning itself to the infinite. But it is the experience of the bliss of Braman that expresses the supreme value ofmukti in the VisiStaadvaitic sense of the ecstasy of the unitive consciousness.[10] Then the mukta is immersed in the supreme and unsurpassable bliss of Brahmānubhava without losing his self-being. It is a state of saayuja in which the unitive experience of bliss is present without the loss of selfexperience [11]

NammaaLvar conceives mokSa as the God's abode and also a place of the freed souls who are the real immortals. The ĀLvaar refers to this place in his works as 'VīTu'[12], 'Tuyar illaa viTu'[13], 'ViN naaTu'[14], 'VaikuNTham'[15], 'VaikuNTha vaan naaTu'[16], 'VaikuNTha maanakar'[17] and 'Ponnulaku'[18], The reference to 'VaikuNtha natan'[19] or the Lord of VaikuNtham signifies that God is the ruler of the city VaikuNtham. ViTu is deliverence from the worldly life or samsaara, The conception of VīTu is not given by TiruvaLLuvar in detail but the neraest approach to the ĀLvaars' concept can be seen in TirukkuRaL[20]. But the Tamil saint refers to this place in one place as 'TaamaraikkaNNaan

Ulaku'[21] (the world of lotus-eyed God) of course signifying ViSNu. The same concept is clearly expressed by NammaaLvaar as 'ARRatu paRRenil uRRatu ViTutuyir'[22] 'the jīva (soul), once it gives up its attachment to the worldly things, attains mokSa.' The words 'ViNNaaTu', VaannaaTu'suggestthatthe so-called place of mokSa is situated far above the world in the endless space. The place is free from misery 'Tuyar illaa vīTu'. The ĀLvar while stating thespecific result flowing from a recitation of his hymns gives expression to mokSa. Generally the ideal is always described in a positive way such as 'those who recite the decad of ten verses will reach VaikuNTham'[23] 'the decad on His sacred feet will lead us to His feet'[24] etc. Other ĀLvaars too have same conception regarding moksa. They too refer to mokSa more or less in the same words and phrases. Other words and phareses employed by them are 'Perunilam' (Great land).[25] 'Peruvicumpu'[26] (Great space). 'Umpar ulaku'[27] (world of Devas), 'ViNNakam'[28]. (celestial abode) etc. The description of moksa by the Alvars coincides more or lesswith the Nitya-vibhuuti as described in the VaiSNavite *AAgamas* and other VaiSNavite texts.

The path to mukti or moksa is referred to "celkati"[29], and "Maak-kati"[30]., Celkati is the good path which a jiva has to choose and Maakkati is moksa. These two concepts in combination may be interpreted to mean the straight and shinging path of *arciraadigati* as mentioned in *chandogya Upanisad.*[31] Thiru-mankaiyaaLvar mentions this in his *cirut-tiru-matal*[32] and elaborates it in his *Periya-tiru-matal*[33] The soul travels through the solar rays, reaches the sun, enters through a minute hole in the sun and then attains the place called moksa where, it is said, it enjoys the bliss of the Lord. The making of a single mukta is a cosmic event, as it were, and even the celestials hail the entry of the finite self into infinity and sing hallelujahs in their own celestial way. The glorious ascent of the soul to its original home has been vividly described by NammaLvar [34] It is also beautifully portrayed by Vedanta Desikan in his *Parama padaso panam.* where the author indicates nine steps in the path to Perfection. The first five vis. viveka, nirveda, virakti, bhiti-bhava and - upaya conatitute the means and awaken the religious consciousness and induce the mumuksu to practise devotion and self-surrender. The remaining four steps consisting of utkramana, arciraadi,divya desa prabhava and praapti relate to the *summun bonum* of spiritual endeavour. They portray in a pictorial way the ascent of the redeemed soul to its home in the Absolute.[35] The author, it is presumed, follows the *Vaikuntha Gadyam* of Ramanuja and the *Kaausitaaki Upaanisaad* in his description.

According to VaiSNavism, IIsvara is the object of the knowledge which is the means, upaaya, and also the object of the knowledge which is attainment. He is the means as being the giver of the desired fruit and the bestower of grace, and likewise, He is upaya because Himself is the object that is to be reached. He is the ever-attained means (Siddhoopaaya). As auxiliary to this means there are two other means, namely, bhakti and prapatti. The former is mainly based upon the teaching of the *Upanisads* and its adoption is restricted to the higher castes; the latter is meant for all and its source is to be traced mainly to the Vaisnavite to *Agamas.*

The course of bhakti involves a training in three stages known as karma-yoga, jgnana-yoga, and bhakti-yoga in the progressive realisation of moksa. These three stages constitute the to-be-attained means (Saadhyo-paaya). The path of karma means the performance of certain kind of karma or rites and duties[36] as the result of knowledge acquired from the Saastras in regard to the true nature of the self and the universal Self. One should perform one's duties for the fulfilment of God's purpose; the person should do them subordinating his will completely and whole-heartedly to the divine will. The duties are done solely to please God. By thus working for the Lord, one not only renounces the fruits associated with them, but purifies one's heart. This purification is looked upon as the necessary result of so dedicating all one's deeds to God. This karma-yoga has several sub-divisions[37] which include such items as the adoration of the gods, the performance of austerities (tapas), pilgrimage to sacred places, giving in charity and sacrifices. Some of these rites and duties are referred to by the ALvars.NammaLvar says : "Enjoying the sight of Thy presence with my eyes, and offering flowers culled from all directions at Thy feet to my hands' content, and dancing and singing song Thy praises"[38]; "without separation from the Lord, offering Him holy water, and after that, incense and flowers"[39]; "are not the

days near when I circumambulate and worship with folded palms the deity at Tiruvaranvilai[10] etc. In this process, the self-regarding sentiments like self-love and self-possession are subdued. Animal instincts and inclinations are transmuted into an organic craving for God, as baser matals are transmuted into gold in the furnace. The whole process is one of self-realisation by self-renunciation; the earth-bound self then becomes spiritualised.

The path of knowledge (jgnaana-yoga) is a stage of constant and uninterrupted contemplation, by one who has conquerred one's mind by karma-yoga, of his essential nature or the self as being distinct from matter (the body, the senses and the like) - his svaruupa which is the mode of Isvara in virtue of its relation to Him as His body. Jgnaana-yoga is a path of contemplation, of self-illumination and of self-renunciation leading to its positive sequal of self-realisation. Contemplation is turning the out-going mind within with the help of yogic auxiliaries like yama (self-restraint), niyama(observation of rites)and praanaayaama (the control of the breath) and seeing the inner quiet. In this state all activity is swallowed up. The yogi can arrest the outgoing tendency by thinking on thought itself, on contemplation and on the nature of the aatman. NammaLvar says: "O Father lend me the helping hand of jgaana so that I may reach Thy inaccesible feet"[11]. When the purified self reflects on itself, all the thoughts are thought away; the contractions caused by karma and the confusions due to avidya are then destroyed by the fire of jgnana. The atman at this stage returns to itself and shines by itself and enjoys the quiet of kaivalya. It is no longer bound by the prakrti and its three guNas, but attains calmness and serenity. This self-cognition itself is an orientation towards God - cognition. The yogin who has intuited the atman sees the same self in all jivas owing to the similarity of their spiritual intelligence. The seer who has a soul-sight and sweet reasonableness intuits the same atman in a dog as in a god. In a higher stage he has a glimpse of Paramaaman, the Supreme Self as the pervading identity in all jivas, and sees Him in all beings and all beings in Him. TirumaLicaiyaaLvar says: with the complete shutting of the gates of the senses, and with an opening of the gate of God-knowledge, by kindling the blaze of gjnana, by making the body and the heart pine away for God, by such fully mature devotion one can realise the Lord with the discus."[12] In the next higher stage this spiritual experience is further enriched. PeeyaaLvar says: "The jgnanis are those who can penetrate with knowledge the Lord who is the inner meaning of the four *Vedas* and who is immanent in their hearts."[13] The spiritual insight of atmajgnana is completely acquired in the fourth stage by which the exhibition of universal sympathy in which the jgnani realises the kinship of all jivas and regards the joys and sorrows of others as his own. NammaLvar says: "May we all (entire mankind) never more wallow in this woeful state of false knowledge, evil conduct and filthy body"[14]. If he escapes the snare of being (permanently) attracted by the pleasure of enjoying this vision which is so great as to create a distaste for all sense-pleasures, then he begins the practice of bhakti-yoga which is the direct means for the attainment of the supreme goal of enjoying Bhagavan While practising bhakti-yoga, the aspirant contemplates on Bhagavan as the Inner self of his own self which is His body. The vision that he has already acquired of his own pure self is then useful, for it is only through it that he reaches the Inner self, just as the cloth within which a gem is tied up is first to be seen before the gem itself can be seen. In this way the vision of one's self serves as a qualification or a stepping stone for the practice of bhakti-yoga. The chanters of a hymn of *ThiruvaaymoLi*, according to NammaLvar, will be blessed with jgnana.[15]

Bhakti-yoga is the special form of meditation which is of the nature of unsurpassed love and which has, for its object, the essential nature and form and qualities of Bhagavan who is not dependent on any one else, who is not subject to the authority of any one else, and who does not exist for the fulfilment of the purposes of any one else. It is a process in which the seeker after salvation sheds his egoism and egocentric outlook, attunes himself to the will of God and yearns for eternal conmunion with Him. Bhakti is of the form of a continuous stream of knowledge which is of the nature of uninterrupted memory like the flow of oil streaming down continuously; it has clearness similar to that of visual perception; it grows from strength to strength by being practised everyday until the day of journey to Paramapadam and terminates in the rememberance of past moment. This yoga

is the direct path to perfection as it leads to the very heart of religious consciousness which consists in shifting the centre of reference from the atman to the Paramatman. This stage effects a revolution in our life, which is of far greater importance than the Copernican revolution.' While the astronomer realises the littleness of the earth and the greatness of the sun that draws it to itself, the relgious man or devotee knows the emptiness of the earth-bound self and the saving might of God who is the source and centre of all living beings. The Knowledge of the finite self has its religious fulfilment in the integral experience of the infinite which is its ground and goal. The self is merged in the Supreme Self like the sponge in the sea. NammaLvar says: "To the Lord, the sandal paste for wearing is my heart; the garland is the garland of verses composed by me, the silken garment too consists of these;the bright ornaments are the folding of arms in worship."[46] To this saint KaNNan (Krishna)is everything; He is the food that he eats, the water he drinks, and the betel he chews.[47] Again the ALvar says:"Even if it is not given to me to worship Thee with cool flowers at the appropriate hours, I give over my very life as ornament to Thy fair-head, well decorated with flowers"[48] PeriyaaLvar's sentiment of bhakti runs like this: "Laying out the shrine of the heart, and installing the deity of Maatavan there and offering the flower of devotion at the point of death will enable one to escape the horrors of the world of death"[49] The whole hymn stresses the sentiment that thoughts of the Lord at the point of death will ensure salavation. The ALvar's foster-daughter says: "To worship the Lord with fresh flowers in a state of purity, to utter His glory with one's tongue and to cherish it in one's heart would dispose of past and future demerits as dust in fire "[50] Similar sentiments are found expressed in the verses of other ALvars. Among the four kinds of devotion referred to in the *Giita*[51] and *Mahaabharatam*[52] the one who worships Bhagavan with exclusive devotion is the best and he attains moksa.

Bhakti-yoga has also been called para-bhakti. Love of the Lord which results from intimacy with sattvikas (and the scriptures) and which produces parabhakti is also called bhakti, because it generates an eager desire to know Isvara with perfect clearness. When this parabhakti develops in its in turn into thirst or eagar desire and determination to see the Lord it is called parajgnana. By this keen desire alone, the devotee wins the grace of the Lord who rewards him with a perfect visual perception of Himself for the time being. This visual perception is parajgnana. From this perfect vision of the svaruupa of the Lord is born an excessive and unsurpassed love for Him and unquenchable spiritual thirst similar to that felt by a man suffering from great thirst at the sight of a tank. This excessive and unsurpassed love for the Lord is called paramabhakti which produces an eager desire and determination to enjoy the Lord without any limitations.[53] as the devotee feels that it is impossible to live any longer without this experience of eternal bliss as described by NammaLvar[54] where he cries out that he will not hereafter allow the Lord to leave Him(ini naan pookal oTTeen)and that he must become one with the Lord and declare all this with an oathr that cannot be ignored by the Lord, It canses likewise an excessive eagerness in the Lord to give him moksa immediately and makes him attain it after quenching this great thirst for union; they are finally united in the realm of mukti. The soul is a glow with divine fire but is not identical with it. As the life of our life, God feeds the soul and divinises it. Likewise the soul feeds on God: and in the unitive stage 'I' becomes He and He becomes 'I'. In the bliss of unitive consciousness, the soul hunger of God and the God-hunger of the soul are both finally satisfied. The temporal pleasures of earth, the seductive joy of svarga and the joy of Kaivalya are nothing when compared to the bliss of the integral experience of Brahman. The ecstasy is only a momentary rapture, but the instant is construed as eternity. The soul is not passive, but energises enthusiastically and shares its joy witn others.

The other means to moksa is known as *Prapatti* or unqualified and absolute self-surrender. It is also called saraNnagaati. It is the highest stage of God-love. Prapatti stands in the place of parabhakti to the man who adopts it as the direct and independent means. This way preserves the essentials of bhakti, dispenses with its predisposing causes or conditions, and omits the non-essentials like the need for ceaseless practice. The question of caste distinctions does not arise here. Since it will be the means of securing all the desired objects, it has been prescribed in the place of para-bhakti for those who know the irlimita

tions. The spiritual experience of the Tamil ALvars is epitomised in the saraNaagati of NammaLvar who is extolled as the super-prapanna of Sri VaiNSavism. TheALvar says: "Henceforward it is impossible for me to possess myself in misery without the darsana of Thy feet"[56]. He extends the hospitality of his divine experience to the whole world of jivas, with a view to establishing a spiritual community of bhaktas. The saint records his experience in performing the act of self-surrender at the feet of the deity at Tirumookuur "There is no salvation other than surrender to KaLameekam, the presiding deity at Tirumokur"[57]. and "The lotus-like feet of the deity is the only salvation"[58]. The peak of his action is seen performed in the presence of Lord of Tirupati Hills.[59] Almost all the ALvars speak of their self-surrender to the Lord.

The paths of devotion and self-surrender have more relevance to the position of God inVaiSNavism than those of karma and jgnana as such. To fall in line with the upanisadic concept that knowing Him is the means of obtaining final release, the great exponent Ramanuja evolved a very convincing exposition of bhakti, jgnana and prapatti, according to which all these represent certain stages of jgnana itself.[60] All the same, stress is laid more on the bhakti and prapatti aspects of jgnana. It is in the light of this stress that the three esoteric doctrines have come to be formulated as the basis of the VaiSNavite religion. These three secrets contain the essentials of Vedanta in terms of tattva, hita and puruSartha. The Lord Himself has expounded the technique of self-surrender. The three secrets are known as muulamantram, dvayam and carama-slokam of which the first states it in a nutshell, the second makes the meaning more explicit and the third elaborates it still further These three mysteries which are an epitome of the truths that ought to be known and of the means of attaining salvation, which are the distinotive, unique and exclusive doctrines of this system of religion and philosophy are invaluable and are therefore to be preferred like ambroSia in the ocean.

The state of the emancipated soul has to be understood here. The released self realises the unitive consiousness. The infinite of space-time, which staggers the scientific imagination, pales into infinitesimal littleness in the light of the infinite and the eternal glory of Paramapadam which transcends the limit of thought. The self enjoys all the perfection of VaikuNTham like salokya or identity of abode, samipya or proximity, sarupya or similarity of form and sayujya or intimate union; he is ever immersed in the eternal bliss of Brahman. Saalokya (co-existence) leads to saamipya (fellowship) and saaruupya(transformation and deification)and is consummated in saayujya (the bliss of communion). The form flavour, and fragrance of Brahmanubhava are not physical or psychical, but are super-sensuous.

Let me conclude this paper by narrating the graphic description of NammaLvar's proceeding to VaikuNTham, This is the result of his intuiting his departure from world. The ALvar is able to visualise the experience in anticipatien, and to live in his imagination the experience, in vivid detail and in the graphic present, of great welcome that will be accorded to him in Heaven as he enters it. Nature celebrates the occasion by wearing a festive garb; and the entire cosmos rejoices. The elements themselves such as the clouds and the ocean signify welcome to him. All the clouds roar giving peals of thunder resembling the sound of tabors announcing the auspicious occasion; all the seas dance in ecstasy at the emancipation of the soul of the ALvar'[61] The rSis and the gods welcome and show him the way standing in rows in the sky.[62] The kiNNaras and others sing and offer all honours; the celestial damsels sing the praises of the ALvar.[63] The Maruts and the Vasus accompany him to regions beyond theirs and extol him'[64] All of them take him to the limits of the material world[65]. On the borders of the eternal realms, the Eternals bid him welcome and wash his feet with the ladies of moon-like faces offering him jars filled with holy waters (puuraNkumpam), treasures fragrant powdars and suspicious lamps [66]Then the ALvar lives for ever withthe eternals enjoying eternal bliss performing kainkarya to the Lord,

Dr N. Subbu Reddiar

Head of the Dept of Tamil
Sri Venkateswara University
Tirupati p. o (A. P.)

1 *TiruvaymoLi* (TvM) 8. 10 : 4 Cf. *Periya Tiruvantati* (P. Tv·). 48

2 P. Tv. 79.

3 ibid 67.

4 Tirmmalai (T. M.) 2.

5 *Varadarajapancas' at*-49

6 P. Tv 51, 79.

7 *Periya Tirumoli* (Peri. Tm) 6. 1; 6.2; 9. 7' TVM 3 2;

8 T. V. M. 8. 8: 6; cf. idid 1.2:5

9 *Chaandogya Upanisad* 6. 8 : 7.

10 *Vendanta Sutra* (Ve. Sut) 4 4 : 21

11 *Rahasya Trayasara* (R. T. S) Chap. 22

12 *Tiruviruttam* (T. V. R.) 95; *Tiruvaaciriyam* (T. V C.) 2; P. Tv. 58; T V- M. 1. 1 : 10; 2. 8 . 1 etc.

13 T. V. M. 2. 8; 2

14 T. V. R. 23

15 ibid 66, 68. P. Tv. 53; T. V. R· 2.1.11; 2.5; 11 etc.

16 P. Tv. 68

17 T. V. M. 4 10:11

18 ibid 6.8:11

19 ibid 7.9.4

20 *KuRaL* chap 35-37

21 ibid

22 T. V. M. 1.2;5

23 ibid 2.5:11; 4.8:11

24 ibid 4.9:11

25 Peri. TM 1-1:9

26 ibid 5.6:5

27 ibid 11.4:10

28 *Mutal Tiruvantaati* (M. Tv) 68

29 Peri. Tm. 1.1:5,8.

30 *Muunram Tiruvantati* (Muu. Tv). 95.

31 Chan: Up· 4, 15: 5,

32 C. TML. KaNNi- 7, 8.

33 P. TML. KaNNi. 16, 17.

34 T. V. M 10.9

35 *Desika* Prabandham-Verses 134 to 150·

36 The rites and duties consist of (i) nitya karma or regular duties to be performed compulsorily (like the daily sandhyaavandanam (ii) naimittika karma or rites to be compulsorily performed on specified occasions (like the eclipse of the sun or the moon). and (iii) such kaamyakarmas or rites as are optional and as have been chosen to be within one's ability.

37 *Bhagavad-giita* 4: 25 and et seq.

38 T. V. M. 4.7:8.

39 idid. 1,6.1.

40 ibid 7 10:1.

41 ipid 2 9:2. cf. ibid 1.7:1.

42 *Tiruccanta Viruttam* (TC-V), 76.

43 Muu. TV. 84.

44 T. V. R. 1.

45 T. V. M. 1.10:11

46 ibid 4.3:2

47 ibid 6 7:1

48 ibid 4.3:4

49 *Periyalvar Tirumoli* (Periyal) 4.5 3

50 *Tiruppavai* (T. Pv,) 5

51 Bh, G. 7;16

52 M. Bh. Saanti, 350:33-35,

53 *Rahasyatrayasara* (R,T,S,) Ch. 9,

54 T, V, M, 10,10:1.

55 ibid, 10,10:2,

56 ibid 5,8:7

57 ibid 10.1:1,

58 ibid 10,1:6.

59 Ibid 6.10

60 PiLTan on T V M 10,9:1

61 T. V, M, 10,9;1,2,

62 ibid 10,9:3,4,

63 ibid 10,9:5,6,

64 Ibid 10,9:7

65 ibid 10.9:8

66 ibid 10,9:9,10.

TRANSLITERATION TABLE

Vowels		Consonants			
அ	a	க்	k		
ஆ	ā, aa	ங்	n		
இ	i	ச்	c		
ஈ	ī, ii	ஞ்	gn	ஷ்	S
உ	u	ட்	T	ஜ	j
ஊ	ū, uu	ண்	N	ஸ	s
எ	e	த்	t		
ஏ	ē, ee	ந்	n		
ஐ	ai	ப்	p		
ஒ	o	ம்	m		
ஓ	ō, oo	ய்	y		
ஔ	au	ர்	r		
		ல்	l		
		வ்	v		
		ழ்	Z, L		
		ள்	L		
		ற்	R		
		ன்	n		

Consonant + h = aspirated stop

இந்தியாவும் பாராளுமன்றக் குடியாட்சியும்

எஸ். செல்வநாயகம்

[பொருளாளர், லண்டன் தமிழ்ச்சங்கம் தமிழகத்தில் பிறந்தவர், சிங்கப்பூர் குடிமகன், தற்போது லண்டன் பல்கலைக் கழகத்தில் சட்டங்கள் பயின்று வருகிறார்.]

இந்தியா சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதாவது, பாராளுமன்ற ஜனநாயகம் என்ற அரசியல் அமைப்பு முறையின் கீழ் இந்தியா இயங்கத் துவங்கிக் கால் நூற்றாண்டாகிவிட்டது. இந்த 25 ஆண்டுகளில் இந்தியா அடைந்துள்ள மாற்றங்கள் பல உண்டு என்றாலும் பாராட்டத் தக்க வகையில் எந்த வளர்ச்சியும் அடையவில்லை. மாறாக, வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வீடு ஆகிய இந்த மூன்றுமே இல்லாது, முச்சந்திகளில் கும்பல் கும்பலாகக் கூடி, பிச்சை எடுப்பதே தங்களது தொழிலாகக் கொண்டு, நடைபாதைகளே தங்களது குடிசைகளாக நினைத்துக் கொண்டு வாழ்வை ஓட்டிக் கொண்டு போகும் இந்தியக் குடிமக்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய உண்மை.

இந்தியாவின் பெரிய நகரங்களான, கல்கத்தா, பம்பாய், டெல்லி, சென்னை ஆகிய இடங்களில் மாத்திரம் ஜூன் 1973ல் எடுக்கப்பட்ட புள்ளிவிவர பட்டியல், நான் மேலே குறிப்பிட்டுள்ள அவல நிலைக்கு ஆதாரங்களாகும்.

நகரம்	அங்கணத்தில் குடியிருப்போர்	நடைபாதையில் குடியிருப்போர்
கல்கத்தா	27,00,000	2,30,000
பம்பாய்	17,00 000	1,20,000
சென்னை	6,50,000	80 000
டெல்லி	2,45,000	85,000

இப்படிப் பல இலட்சம் இந்தியர்கள் வாழ்க்கை நடத்த, படித்துப் பட்டம் பெற்றவர்களின் நிலையோ பரிதாபகரமாக இருக்கிறது. இந்தியாவில் கிட்டத்தட்ட 20 இலட்சம் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருப்பதாகப் புள்ளி விவரம் காட்டுகிறார்கள். இந்நிலையில் மக்கள் தொகை 36 கோடியாக இருந்த நிலை மாறி, இப்போது 57 கோடிகளாகப் பெருகியிருக்கிறது. 'அரசியல்' என்ற பெயரில் நாட்டில் நடக்கும் அட்டகாசங்கள் அளவில் அடங்கா! அதிகாரத்தில் இருப்போரால் இலஞ்சத்தைத் தடுக்க முடியவில்லை. அதிகப் பணம் படைத்தோர் கறுப்புப் பணத்தால் அரசியல்வாதிகளை ஆட்டிப்படைக்கின்றனர். இன்னும், மத, இனக் கலவரங்கள், சாதிச் சண்டைகள், மொழிப் பிரச்சனைகள் இப்படிப் பல. இவை அனைத்தையும் விட பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு அவதியுறும் மக்கள் தொகை பல கோடிகளாகும்.

இந்தியாவின் இப்போதைய நிலைமையை எடுத்துக்காட்டி இடித்துரைத்த இந்திய குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள், சமீபத்தில் கீழ்க்கண்டவாறு லக்னோவில் பேசியிருக்கிறார்கள்.

'கொள்கை அற்ற அரசியலும், பண்பற்ற அறிவும், உழைக்காது சேர்க்கும் சொத்தும், மனச்சான்றற்ற மகிழ்ச்சியும், நீதிமுறை இல்லாத வாணிகமும், மனிதாபிமான மற்ற விஞ்ஞான வளர்ச்சியும், தியாகமற்ற வழிபாடும், என்று காந்தி அடிகள் எடுத்துக் கூறிய ஏழு தீவினைப் பாவங்களையும் இன்று இந்தியாவில் காண முடிகிறது என எடுத்துக் காட்டித் தன் நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை கொடுத்தார்.

மேல் குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் இந்தியாவிற்குப் புதிதல்ல. குறைந்தது ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்பிருந்தே இவை நீடித்து வருகின்றன. என்றாலும், இந்தியா சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதோடு, பாராளுமன்ற ஜனநாயகம் என்ற உயர்ந்த அரசியல் சட்ட அமைப்பு முறையின் கீழ் ஆட்சி நடைபெறுகிறது. ஆனாலும் மேல் குறிப்பிட்டுள்ள அவல நிலைமைகள் இன்னமும் நீடிக்கிறது. அப்படியானால், பாராளுமன்ற ஜனநாயகத்தால் இந்திய மக்கள் அடைந்துள்ள நன்மைகள்தான் என்ன? மக்களுக்காக ஒரு அரசியல் ஆட்சிமுறையா? அல்லது ஒரு அரசியல் ஆட்சி

முறைக்காக மக்களா? என்ற கேள்விகளை இன்று பலபேர் எழுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும்

இந்தியாவை வெவ்வேறு மொழி பேசுகின்ற மாநிலங்களாக பிரித்தெடுத்து, அவை ஒவ்வொன்றுக்கும் சட்டமன்றங்கள் அமைத்து, அவைகளின் கீழ் மாநகராண்மைக் கழகங்கள் அமைத்து, அதற்கும் கீழாக கிராம பஞ்சாயத்து என பல அதிகாரப்பிரிவினைகள் செய்து, ஆட்சிப் பொறுப்பின் அதிகாரங்களை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் ஒப்படைத்து, ஆட்சி நடைபெறுகிறது என அரசியல் சட்டத்தில் இருக்கிறது. உயர்ந்த அரசியல் தத்துவங்கள் நிறைந்த இந்த அமைப்பு முறையில், எந்தக் குறையும் இல்லை. ஆனால் இந்த அமைப்பு முறையால் இந்தியாவில் இப்போது நிலவும் அவல நிலையை அகற்ற முடியவில்லை. இதற்கான பல காரணங்களில் ஒன்று, இந்தியாவிலுள்ள மொத்த மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டோர் படிப்பறிவற்றவர்கள். இந்நிலையில் பாராளுமன்ற ஜனநாயகத்தின் தத்துவத்தை புரிந்துள்ளோர் கிட்டத்தட்ட 20 சதவிகிதத்தினர்தான் இருப்பர் என புள்ளி விபரம் காட்டப்படுகிறது. எனவேதான், ஜனநாயகத்தின் பெயரால் இந்தியாவிலுள்ள 60 சதவிகித மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்; என குறை காண்போர் கூறுகின்றனர். இது ஓரளவுக்கு உண்மை என்பதையும், நான் கடந்த வருடம் அங்கு இருந்தபொழுது நேரில் கண்டேன். ஒரு கிராம பஞ்சாயத்து மன்றத்தலைவர் பதவிக்காக ஒவ்வொரு வேட்பாளரும் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்து மக்களிடமிருந்து வாக்குகளை விலைக்கு வாங்குகிறார்கள். பஞ்சத்தால் பரிதவிக்கும் மக்கள், தங்களது ஜனநாயக உரிமையை பணத்திற்கு விலை பேசுகின்றனர். இவ்வளவு பணம் செலவு செய்து, இம்மாதிரி பதவிக்கு வருவோர், எந்த அளவுக்கு மக்களுக்குத் தொண்டு செய்வர் என்பதை இங்கு விளக்கத் தேவையில்லை. கிராமப் பஞ்சாயத்து மன்றங்களின் நிலையே இவ்விதம் என்றால், மாநில, பாராளுமன்றத் தேர்தல்களைப்பற்றி கூறவும் வேண்டுமா?

மாநிலங்களில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், விலை உயர்வு கொடுமைகளுக்கும் மத்திய அரசாங்கமே காரணம் என மாநில அரசியல்வாதிகள் குறை கூறுகின்றனர். மத்திய அரசாங்கமோ, தங்களால் இயன்றவரை அதிகாரங்களை அடக்கி வைத்துக் கொண்டு, 'இந்தியா பிளவு படாமல் ஒன்றாக இருக்கவேண்டுமானால் பாராளுமன்ற ஜனநாயகம் காப்பாற்றப்படவேண்டும்' என்று அரசியல் தத்துவம் பேசுகின்றனர். இது ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மைதான் என்றாலும், இதே நிலை நீடிக்குமேயானால், மக்கள் பொறுமை இழந்து விடுவர். அதிக அதிகாரங்கள் கேட்கும் மாநில அரசியல்வாதிகள் இனி தனிநாடு கேட்கவும் தயங்க மாட்டார்கள்.

பாகிஸ்தானிலிருந்து ஒரு 'வங்காள தேசம்' பிரிய முடிந்ததென்றால், இந்தியாவிலிருந்து, ஒரு பஞ்சாப் நாடோ, அல்லது தனித் தமிழ் நாடோ பிரிய முடியாது என்பதற்கு என்ன காரணங்கள் இருக்க முடியும்?

இந்நிலையைப் போக்க, ஒன்று மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் கொடுத்து, மத்திய அரசாங்கத்தின் மேல் மக்கள் கொண்டுள்ள குறையைப் போக்கி ஒவ்வொரு மாநிலங்களின் வளர்ச்சிக்கும், அம்மாநிலங்களின் அரசாங்கங்களையே பொறுப்பேற்கச் செய்வதோடு, மாநிலங்களிடையே ஒற்றுமை நிலவுவதற்கான பொறுப்பேற்பதோடு, வெளிநாட்டு விவகாரம், நாட்டின் தற்காப்பு போன்ற முக்கிய பொறுப்புக்களை மாத்திரம் மத்திய அரசாங்கம் ஏற்று நடத்தும்படியான மாற்றங்கள் செய்தாக வேண்டும். அல்லது, மாநிலச் சட்ட மன்றங்களையே அகற்றிவிட்டு மத்திய அரசாங்கம் முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும். இன்றுள்ள நிலையில், பாராளுமன்றத்திலும் மாநிலச் சட்ட மன்றங்களிலும், விவாதங்கள் புரிவதிலும், கட்சி அரசியல் பேசுவதிலும் நேரத்தையும் காலத்தையும், மக்களின் வரிப் பணத்தையும் அரசியல்வாதிகள் விரயமாக்கிக் கொண்டிருக்கிறார்களே தவிர, மக்களின் வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவில்லை.

இந்தியாவில் அரசியல் கட்சிகள்

இன்று உலகத்திலேயே அதிகப்படியான அரசியல் கட்சிகள் உள்ள நாடு இந்தியா ஒன்றுதான். இதை ஒரு பெருமையாக பேசுவோரும் இந்தியாவில் பலர் உண்டு. ஆனால், ஒரு நாட்டில், அரசியல் கட்சிகள் ஒவ்வொரு வருடமும் ஒன்றாக உருவாகிக் கொண்டிருக்குமேயானால், அந்த எந்த அளவிற்கு மக்களிடையே ஒற்றுமை குறைந்து வருகிறது என்பதை எண்ணிப் பார்க்க ஏனோ

மறந்துவிடுகிறார்கள். பாராளுமன்ற ஜனநாயகம் என்றால் பல அரசியல் கட்சிகள் இருக்க வேண்டுமென்று கட்டாயம் ஏதும் கிடையாதே?

இந்தியாவில் அரசியல் கட்சிகளைக் குறைத்தாக வேண்டும். மொத்தமுள்ள அத்தனை அரசியல் கட்சிகளையும் மூன்று கட்சிகளாக உருவாக்கலாம். அதாவது, ஒரே அரசியல் கொள்கைகள் உள்ள அத்தனை அரசியல் கட்சிகளையும் ஒன்றுபடுத்தலாம். சாமாதான முறையில் இயலவில்லை என்றால் சட்டங்கள் இயற்றி ஒன்றுபடுத்த வேண்டும். "இப்படிச் செய்வது ஜனநாயகத்திற்கு ஏற்றதல்லவே!" என ஆவேசம் கொள்வோரும் பலர் இருப்பர். அவர்களுக்கு ஒன்று கூறுவேன். இந்தியாவில் பல கோடிப் பேர் பிச்சை எடுக்கின்றனர். அவர்களில் ஒரு இந்திய குடிமகனைப் பார்த்து, 'ஜனநாயகம் என்ற பெயரில் இந்தியாவின் பிரதம மந்திரியையே தேர்ந்தெடுக்கும் அளவிற்கு உமக்கு உரிமை உண்டு' என்று கூறும் போது," அவன், 'உண்ணுவதற்கு உணவில்லையே, அந்த உரிமையை எனக்குத் தாருங்களேன்' என்று கேட்பானேயானால், அவனுக்குப் பதில் சொல்ல முடியாமல் இருப்பதுதான் ஜனநாயகத்திற்கு விரோதம். தனிப்பட்டவர்களின் சுயநலத்திற்காக, அல்லது பதவிகள் கிடைக்காத காரணங்களுக்காக பல அரசியல் கட்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை ஒழுங்குபடுத்துவதாலோ, அல்லது சட்டங்கள் இயற்றி தடை செய்வதாலோ, ஜனநாயகம் அழிந்துவிடாது, மாறாக, 'மக்களின் நன்மைக்காக ஜனநாயகம் நல்ல முறையில் பயன்படுத்தப்படுகிறது' என்று பொருள்படும்.

இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை

சுமார் 57 கோடி இந்தியர்களில் 8 கோடிப் பேர் தாழ்த்தப்பட்டவர்கள். அதாவது 'ஜாதி' என்ற பெயரால் தாழ்த்தி வைக்கப்பட்டிருப்பவர்கள். இவர்களின் வாழ்க்கை நிலையை நேரில் காணும்போது, தூய்மை உள்ளம் கொண்ட எந்த பகுத்தறிவாளனும் கண்ணீர் வடிக்காமல் இருக்க முடியாது. தாழ்த்தப்பட்டவர்கள் அந்த அளவிற்கு சில உயர்ந்த சாதி இந்தியர்களால் இன்னமும் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார நிலைமையை எடுத்துக் கொண்டால், அரசியலில் ஈடுபட்டுள்ள சில அரசியல்வாதிகளின் குடும்பங்களைத் தவிர்த்து, மற்றைய அத்தனைக் குடும்பங்களும் வாழ்க்கையின் அடித்தளத்தில் அமுக்கப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படிக் கூறுவதால், 'இந்தியாவில்' உயர்ந்த ஜாதி இந்தியர்களிடையே ஏழைகளே கிடையாது' என எண்ணம் கொள்வதும் தவறாகும். உயர்ந்த ஜாதி இந்தியர்களிடையேயும், ஏழைகள் ஏராளம் உண்டு. அன்றாடம் சாப்பாட்டிற்கு அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் குடும்பங்கள் எத்தனையோ உண்டு. ஆனால், தங்களை உயர்ந்த ஜாதியினர் என எண்ணிக் கொண்டிருக்கும் அந்த ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஏழைகளுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், 'வாழ்வதற்கு வழியில்லை' என்பது மாத்திரம் இல்லாது, நாயிலும் கீழ்த்தரமாக நடத்தப்படுவதோடு, மனித உரிமையற்று, அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள் தாழ்த்தப்பட்டவர்கள்.

மேல் நாடுகளுக்கு வந்து போகும், இந்திய அரசியல்வாதிகளிடம் இது பற்றிக் கேட்டால், "இந்தியாவில் ஜாதி ஒழிந்து விட்டது. பெரிய நகரங்களில் வந்து பாருங்கள், ஜாதி வேறுபாடே கிடையாது,' எனக் கூறுவதோடு, 'அண்மையில் தான் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த திரு. ஜெகஜீவன் ராம், போன்ற மத்திய மந்திரியின் வீட்டில் எத்தனையோ தடவைகள் உணவு அருந்தியிருக்கிறேன்' எனக் கூறிவிட்டுச் செல்லுகின்றனர்.

இந்தியாவில் ஜாதி ஒழிந்துவிட்டதா? இதற்கான, உண்மையான விடை தெரிய வேண்டுமானால், கிராமங்களில் சென்று பார்க்க வேண்டும். பெரும் நகரங்களில் 25 ஆண்டுகளுக்கு முன்பே ஜாதி வேறுபாடு குறைவாகத்தான் இருந்திருக்கும். இன்றுள்ள மொத்த மக்கள் தொகையில் 85 சதவிகித மக்கள், கிராமங்களில்தான் வாழ்கின்றனர். ஆயிரக் கணக்கான கிராமங்களில் ஜாதி வேறுபாட்டால் எவ்வளவ மனிதாபிமானமற்ற செயல்கள் நடக்கின்றன! இந்த ஜாதி வேறுபாட்டால், நாட்டின் பொருளாதாரம் எந்த அளவிற்கு சீர்கெட்டு ஒழுங்குபடுத்தப்படாமல் கிடக்கிறது! இதையெல்லாம் பொறுப்புணர்ச்சியோடு நேரில் பார்த்தால் நன்கு உணர முடியும்.

மேலே குறிப்பிட்டுள்ள உண்மை நிலையை எடுத்துக் கூறுவதால், இந்தியாவில், யாரும் ஜாதி வேறுபாட்டை ஒழிக்க எதுவுமே

செய்யவில்லை' என எண்ணம் கொள்வதும் தவறாகும். 'ஜாதி' என்ற பேயை ஒழித்துக் கட்ட உண்மையாகப் பாடுபட்ட, அல்லது பாடுபட்டு கொண்டிருக்கும் தலைவர்கள் பலர் உண்டு, அதிலும், உயர்ந்த ஜாதி இனத்தைச் சேர்ந்தவரும், இந்தியாவின் சீர்திருத்தத் தந்தையுமான பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள், தன் வாழ்நாள் முழுமையும் இதற்காகவே அற்பணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்திய அரசியல் சட்டத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தனிச் சலுகைகளை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அவைகளில் முக்கியமாக குறிப்பிடத்தக்கவை, 522 பாராளுமன்றத் தொகுதிகளில் 77, தொகுதிகளையும், 3771 தொகுதிகளைக் கொண்ட மாகாண சட்ட மன்றங்களில் 516 தொகுதிகளையும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அதோடு, சில அரசாங்க பதவிகளைப் பெறவும் கல்லூரிகளில் இலகுவாக சேர்ந்து படிப்பதற்கும் வாய்ப்பளித்து சட்டத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். சில மாநில அரசாங்கங்கள், அச்சட்டங்களை முறையோடு நிறைவேற்றியும் வருகின்றன. ஆனாலும் ஜாதி ஒழியவில்லை. இந்நிலை நீடிக்குமேயானால், இன்னும் 25 ஆண்டுகள் ஆனாலும், இந்தியாவில் ஜாதி ஒழிந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

சமீபத்தில், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை அறிய, மத்திய அரசாங்கத்தாரால், அமைக்கப்பட்ட ஆய்வுக் குழு ஒன்று, வெளியிட்ட ஆய்வு முடிவின் அறிக்கையைக் காணும்போது, தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காக, டாக்டர் அம்பேத்கார் அவர்களால் உருவாக்கப்பட்ட தனிச் சலுகைகள், எந்த அளவிற்கு அவர்கள், அடிமைப் பிடியிலிருந்து விடுபடத் தடையாக இருக்கிறது என்பதைக் காண முடிகிறது. இதற்காகத் 'தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிச் சலுகைகள் கூடாது' என நான் கூற வரவில்லை. இச் சலுகைகளால் நன்மை பெற்றோர் மிகச் சிலர்; குறிப்பாக 77 பாராளுமன்ற உறுப்பினர்களின் குடும்பங்களும், 516 மாகாண சட்ட மன்ற உறுப்பினர்களின் குடும்பங்களும் தான். இன்னும் சிலர் அரசாங்க உத்தியோகங்களில் அமர்ந்திருக்கின்றனர். இவர்கள் அந்த எட்டுக் கோடியில் எத்தனை சதவிகிதம் இருப்பார்கள்? இன்னும் கூறவேண்டுமானால், இப்படி உயர்ந்தவர்கள் அத்தனை பேர்களும், தாங்கள் தாழ்ந்த ஜாதி இனத்தைச் சேர்ந்தவர்களென காட்டிக்கொள்ளாமல் இருக்கவே விரும்புகின்றனர். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள், சில உயர்ந்த ஜாதி இந்தியர்கள் செய்யும் ஜாதிக் கொடுமைகளை கண்டிக்கவோ, தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்றுபடுத்தி, வழி நடத்திச் செல்லவோ தயங்குகிறார்கள், காரணம், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளின் 'அரசியல் பதவிகள்' நீடிக்க வேண்டுமானால், உயர்ந்த ஜாதி இந்தியர்களின் ஆதரவு தேவை. அவர்களுக்கென தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, அவர்களைச் சட்டமன்றத்திற்கோ, அல்லது பாராளுமன்றத்திற்கோ, தேர்ந்தெடுக்கும் அதிகாரம் எல்லாத் தொகுதிகளிலும் உயர்ந்த ஜாதி இந்தியர்களிடம்தான் இருக்கிறது. எனவே, பதவி பறிபோய்விடுமே, என்ற பயத்தால், பலர் பதுங்கிக் கிடக்கிறார்கள். நல் உணர்வோடு, தன் இனத்தின் உயர்வுக்காகப் பாடுபட முன் வரும் தலைவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். அல்லது, ஒழித்துக்கட்டப்படுகிறார்கள். அதோடு, இந்த இழிவு நிலையிலும் கூட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கிடையே ஜாதி வேறுபாடுகள் அவர்களுக்குள், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற அறிவற்ற எண்ணங்கள். இந் நிலையில், ஜாதியை எப்படி ஒழிக்க முடியும்? பாராளுமன்ற ஜனநாயகத்தால் இங்குப் பயன் ஏதும் பட்டதாகத் தெரியவில்லை.

இந்தியாவும், பொருளாதார வளர்ச்சியும்

இந்தியா, இதுவரையில் நான்கு ஐந்தாண்டு திட்டங்களை நிறைவேற்றி, ஐந்தாவது, ஐந்தாண்டுத் திட்டத்தை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் துவக்கவிருக்கிறது. இத் திட்டங்களினால், தொழிற்றுறையிலும் விவசாயத் துறையிலும் நிறைய உற்பத்தி செய்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தியாவின் தொழில் துறைக்கான கருவிகள் எல்லாவற்றையுமே இப்போது இந்தியாவில் உற்பத்தி செய்கிறார்கள். விவசாய உற்பத்தியை கடந்த இரண்டு வருடங்களில் இருமடங்காக்கியிருக்கிறார்கள். ஆனால் இதன் பலன்களை எந்த அளவிற்கு இந்தியாவிலுள்ள பொதுமக்கள் அனுபவிக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, இங்கு ஜனநாயகம், முறையோடு பயன்படுத்தப்படவில்லை என்பதை நன்கு உணர முடிகிறது. இந்தியாவில், உயர்ந்த; உல்லாச வாழ்க்கை வாழ்பவர்கள் ஏராளமானவர்கள்

இருக்கிறார்கள். சமீபத்தில் வெளியான புள்ளி விவரப்படி, இந்தியாவிலுள்ள மொத்த மக்கள் தொகையில் 20 சதவிகிதத்தினர் உயர்ந்த வாழ்க்கை வாழ்கின்றனர். அவர்களில் மிகவும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள், தொழில் துறை அதிபர்கள், திரைப்பட அதிபர்கள், நடிகர்கள், நிலம் கொண்ட மிராசுதாரர்கள் ஆகியோர். நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை இவர்களால்தான் அனுபவிக்க முடிகிறது. அந்த அளவிற்கு இவர்களிடம் வெள்ளைப் பணமும், கறுப்புப் பணமும் குவிந்து கிடக்கிறதாம். இவர்களுக்குத்தான் பாராளுமன்ற ஜனநாயகம் மிக்க பாதுகாப்பு அளிப்பதோடு, மிகப் பயன் உள்ளதாகவும் இருக்கிறது.

என் எண்ணம்

இந்தியா என்ற இந்த மாபெரும் நாடு, பல தத்துவ அறிஞர்களை உலகுக்கு வழங்கிய நாடு, உலகப் புகழ் பெற்ற அரசியல் மேதைகளை உருவாக்கிய நாடு. இந்த நாடு இன்று இந்த நிலையில் இருப்பதைக் காணும்போது, மன வேதனைப்படாத இந்தியர்கள் யாரும் இருக்க முடியாது. இந் நிலை நீடிக்காமல் இருக்க இந்திய மக்களின் மனப்போக்கில், மாற்றங்களை ஏற்படுத்தி, இந்தியச் சமுதாயத்தை ஒன்றுபடுத்தி, ஒழுங்குபடுத்தியாக வேண்டும். உண்மையாக உழைப்பவனுக்கு நல்வாழ்வு என்ற உண்மையை நிலை நாட்ட வேண்டும். அங்கு வாழும் அத்தனை குடிமக்களும் ஒரு குலமக்கள் என்ற எண்ணம் உருவாக்கப்பட வேண்டும். அரசியலில் ஈடுபடுவது, அவரவருக்குள்ள வேலை இல்லாத நிலைமையைப் போக்கவே என்ற நிலைமை மாறி, மக்களுக்குத் தொண்டு செய்யும் தியாகப் பசியை தீர்க்கவே என்ற நிலை உருவாக வேண்டும். வயது முதிர்ந்த அரசியல்வாதிகள், அதாவது 60 வயதிற்கு மேற்பட்ட அரசியல்வாதிகள் 'கட்சி அரசியல்' பேசுவதை விட்டொழித்து, நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கியமான, சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கான நல் அறிவுரைகளை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறும் தூய தொண்டில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் பாராளுமன்ற ஜனநாயகம், பண்போடு பயன்படுத்தப்படுவதாகப் பொருள்படும்.

S. Selvanayagam
70 Mayall Rd.
Herne Hill
London S E. 24 u. k

மண்ணும் மனமும்

டாக்டர் பா. சௌந்தரா

> *காடா கொன்றோ காடா கொன்றோ*
> *அவலா கொன்றோ மிசையா கொன்றோ*
> *எவ்வழி நல்லவர் ஆடவர்*
> *அவ்வழி நல்லை வாழிய நிலனே*

என்றார் தமிழ் மூதாட்டி. நாடு என்பதாக ஒன்று இல்லை; மக்களைப் பொருத்ததே மண்ணின் பெருமை என்கிறார் அவர். காடு கொன்று நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கிய அளவில் மண்ணிற்குப் பெருமை மனிதனால் என்றாலும், மனிதனை உருவாக்குவது மண்ணே எனலும் மிகையாகாது. மண்ணில் தோன்றி, மண்ணில் வாழ்ந்து, மண்ணலே மடிந்து போகும் மனிதனது வாழ்வு மண்ணோடு மண்ணாகவே ஒன்றியுள்ளது. மண்ணின் வளத்திற்கு ஏற்பப் பயிரின் செழுமை அமைவதைப் போன்று, மண்ணின் உரத்திற்கு ஏற்பவே மனிதனின் வாழ்வும் அமைகின்றது.

தமிழகத்தைக் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என ஐந்து வகையாகப் பகுத்திருந்தனர் நம் முன்னோர். அந்த அநத நிலங்களில வாழும் மக்களது பழக்க வழக்கங்களையும் திணைகள் எனப் பாகுபடுத்தியிருநதனர். இந் நிலங்கட்கு, முறையே, கூடல, இருத்தல, பிரிதல், ஊடல், இரங்கல் என்பனவறறை உரிப் பொருளாகக் கூறினர். இது வெறும் இலக்கியக் கற்பனையோ அலலது இலக்கண மரபோ அன்று. நிலவியல் சார்நத உளவியல் அடிப்படையில கண்ட உண்மையே. பாலைநிலம் வெம்மையும் வறட்சியும் உடையது. அங்கு வாழ்வு துன்பமயமானது. போராட்டம் மிக்கது. அத்தகைய சூழலில, அங்கு வாழ்வாரும வன்நெஞ்சினராய மாறுதல் தவிர்க்க இயலாததே. நீா வளமும் நிலவளமும் சானற மருதப் பகுதியில உழைபபு குறைவு; ஊதியமும் ஓய்வும் மிகுதி. இதமான தட்ப வெபபமும், அமைதியான வாழவும் அமையுமானால், மனத்திலும் அன புணர்சசியும அழகுணர்ச்சியும் எழல் இயல்பே. இந்த அடிப்படையிலதான் நம்மவர், நிலத்திற்கு உரிப் பொருள் வகுத்துள்ளனர். ஒவ்வொரு நிலத்திலும காணபபடும் தாவரங்கள, உயிரினங்கள போன்றவற்றை முதல் என்றும் கரு என்றும் கூறி, அந்தந்த நிலத்திறகேயுரிய உணாவினை மட்டும் உரிப்பொருள் என்று கூறியுள்ள நயம் உணர்தற்பாலது. மணணுக்கும் மனத்துக்கும் உள்ள நெருக்கத்தினை இத்துணை நுட்பமாகக் கண்டு சொன்னவர் வேறு எந்த நாட்டிலும் எம்மொழியிலும் இல்லை என்று துணிந்து கூறலாம். பெருமைக்குரிய இந்தச் சிந்தனை முதிர்ச்சியைத்தான் நமது இன்றைய தேசிய வணக்கமும் நினைப்பூட்டி வருகின்றது. பாரத்தாயை "ஜன கண மண அதிநாயக" என்றுதானே கவிஞர் போற்றுகின்றார்! எந்தையும் தாயும் முந்தையரும் வாழ்ந்த இந்த மண் தான் அவர்கள் சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் தோன்றிச் சிறக்கக் காரணமாக இருந்தது. இந்த உண்மையை மனதில் இருத்தி, வந்தித்து வாழ்த்த வேண்டாமோ என்கிறார் வரகவியும்.

முந்தையர் சிந்தனையின் வைத்தமாநிதி, இலக்கியங்களே யல்லவா? காலத்தோடு ஒட்டி வாழ்ந்துவரும்—காலம் கடந்த இலக்கியங்களில் இந்த மண்ணின் படலம் படிந்திருப்பதைத் தெளிவாகக் காணலாம்.

மாற்றான் கவர்ந்து சென்ற தன் மனைவியைப் பெரும் படைதிரட்டிச் சென்று மீட்டு வந்த ஒரு நிகழ்ச்சியைத்தான் ஹோமர், வால்மீகி இருவரது பெருங் காப்பியததிலும் காணுகின்றோம். ஆனால் ஹெலனுக்கும் சீதைக்கும் எவ்வளவு வேறுபாடு! சிறைப் பட்டிருந்த பத்தாண்டு காலமும் இளவரசன் பாரிசுடன் வாழ்ந்தவள் ஹெலன். பத்துமாத காலம் நோற்று உயர்ந்தவள் நம் கற்பின் கனலி. பாத்திரத்தின் பெருமையோ சிறுமையோ அன்று இது. கிரேக்க மண்ணுக்கும் பாரத மண்ணுக்கும் உள்ள வேறுபாடே இது. இந்த இடத்தில், இன்னொன்றும் நினைக்கத் தோன்றுகிறது ஞான பூமியாகிய, விதேக நாட்டு மண்ணைக் கிளறும் போது கலப்பை நுனியில் தோன்றியவள் சீதை என்றும், பக்தி மணம் கமழும் பாண்டி நன்னாட்டில், தெய்வத் திருத்துழாயின் அடியில் கிடநதவள் கோதை என்று கூறப்படுகின்றது. குழந்தை கண்டெடுககப் பட்டது பறறிய ஆய்வு இங்குத் தேவையில்லை. இந்தக் கதைகளுக்கு ஒரு உருவகத் தன்மையும் தரக் கூடியதாக இருப்பதே சிந்தனைக் குரியது. சீதையிடத்தும் கோதையிடத்தும் அமைந்திருந்த கற்பும் பக்தியுமாய பண்புகள் அவ்வம் மண்ணின் வளம் என்பதையே, அவாகள் மணணிலிருந்து உதித்தனர் என்ற குறிப்பு காட்டுகின்றதோ!

பாஞ்சாலியும் மணிமேகலையும் வைத்திருந்த அட்சய பாத்திரம் அமுதசுரபி

போன்றவை சோறு, காய்கறிகள் கொண்ட உணவினைத் தந்தன. கிரேக்க வீரன் அனியன் ஆயின் என்ன வரவழைத்துத் தருவான்? ட்ரோஜன் போரின் போது, அவன் தன் படையினருக்குத் தானியமும் எண்ணெயும் மதுவுமே தருவித்துத் தந்தானும்.

Here with a loaf of bread beneath the bough
A flask of wine, a book of verse - and thou
Besides me singing in the wilderness
And wilderness in Paradise enow

எனும் பிட்ஸ் ஜெரால்டின் வரிகளும் அவற்றைக் கவிமணி,

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு,
கையில் கம்பன் கவியுண்டு,
கலசம் நிறைய மதுவுண்டு.
தெய்வகீதம் பலவுண்டு,
தெரிந்து பாட நீயுமுண்டு.
வையம் தருமிவ் வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ!

எனத் தமிழாக்கியுள்ள பான்மையும் இங்கு நினைக்கத் தக்கவை. தென்றலும் தெய்வ கீதமும் தமிழ் மண்ணின் தனிச் சிறப்பல்லவா? உமர் கய்யாமிடமிருந்தும் பிட்ஸ் ஜெரால்டிட மிருந்தும் கவிமணி வேறுபட்டு நிற்கும் போது தான் மண் மணத்தினைத் தெளிவாக நுகரமுடி கிறது.கோசல நாட்டையும் சரயுவையும்கங்கை யையும் பாட முற்படினும், கம்பன் பாடிய தெல்லாம் சோழ நாடும் காவிரியுமே என்பது தெளிவு. அராபியப் பாலைவனத்தினை,

பின்னிய நிரைவா ருதியினைச் சுவற்றிப்
பெரும்புறக் கடலினைத் தேக்கித்
தன்னகம் களித்து வடவையின் கொழுந்து
தனிவிளை யாடிய தலமோ.
பன்னரும் தென்கீழ்த் திசையினன் திரண்ட
படையொடும் இருந்தபா சறையோ
உன்னதக் ககன முகடற உருக்கும்
உலை கொலோ என அறி கிலமால்

என்று உமறுப்புலவர் வருணிக்கின்றார். வடவா முகாக்கினியும் தென்கீழ்த் திசைக் கடவுளான அக்கினி பகவானும் அராபியர் அறியாதவை. தமிழர் நம்பிக்கைகளே. தமிழ் நாட்டு முகமதியரான உமறுப் புலவர் அரேபிய நாட்டைக் கற்பனையில் கண்டாலும், வாழ்ந்தது தமிழ் மண்ணில்தானே. ஷேக்ஸ் பியரின் நாடகங்களுக்கான கரு, பல்வேறு இடங்களிலிருந்து திரட்டப்பட்டிருப்பினும், நாடகப் பின்னணி, பொற்காலம் எனக் கொண்டாடப்படும் முதலாம் எலிசபெத்தின் குடை நிழல் மண்ணே. பிரிட்டிஷ் சாம் ராஜ்யம் உலகெங்கும் பரவியதன் காரணமாக, இங்கிலாந்தின் மண்ணே ஒரு முழம் உயர்ந்த காலம் அது. அந்த உயர்வை, அக்காலத்தின் பிரதிநிதியாகிய ஷேக்ஸ்பியரிடத்தே காணமல் இருத்தல் இயலுமா? கவிஞன் தான் காலூன்றி நிற்கும் மண்ணின் நெடியை நுகர்ந்து கொண்டிருப்பவன். அவன் மூச்சில் இழையோடும் அந்த மணம், அவன் பேச்சிலும் இயல்பாக வீசவே செய்யும். ஆர். கே. நாராயணன் ஆங்கிலத்தில் எழுதினாலும், கதைக்களம் தமிழகம்தான். அவர் லண்டனி லேயே தங்கி, ஆங்கிலத்திலேயே சிந்தித்து எழுதினாலும்கூட, அவரது குருதியில் கலந் துள்ள இந்திய மணம் தவிர்க்க முடியாததே. பாஞ்சாலம், சிந்து, கூர்ஜரம், மராட்டியம், தமிழகம் அனைத்தையும் தமது வங்காள நாட்டோடு நாடாகவே கருதி, பாரத பாக்ய விதாதாவை வணங்கும் கவிஞர்-கீதாஞ்சலியை ஆங்கிலத்திலேயே எழுதிய கவியரசர்— கங்கைக் கரையில் வாழ்ந்தவர். அவரது ஜீவ நாயகி காதலனைக் காணச் செல்கிறாள். ஆற்றிலே தோணிக்காரன் படகு செலுத்து கிறான். "ஏந்திப் படகைக் கடலில் விடுவாய். இதுவே தருணம் மீகானே" என்றுதான் ரவீந்திர நாயகி பதியைச் சென்றடையத் துடிக் கிறாள். இந்திய ஆறுகளுள் படகுப் போக்கு வரத்திற்கு மிகுதியும் பயன்படுவது கங்கையே யல்லவா? உலகமெல்லாம் சுற்றி வந்த கவிஞ ரானாலும், அவராலும் வேறு பாதையில் செல்ல முடிவதில்லை. வங்க மண்ணைப் பொன்னாக்கும் அன்னைதான் கவிஞரின் எண்ணத்தில் முன் நிற்கின்றாள். பாண்டிச்சேரியை அடுத்த வங்கக் கடலும், கடற்கரை வெண்மணலும், கானற் சோலையும்தான் பாரதிதாசன் முன் அழகாகச் சிரிக்கின்றன. கங்கா தீரத்தில், சாதுக்களின் மத்தியில் வாழ்ந்த துளசிதாசரின் எண்ணத் தடாகத்தில் பூத்த காவிய மாமலர், அந்தக் கங்கையைப் போலவே ஆழமும், தெளிவும், வேகமும், கம்பீரமும், புனிதமும் உடையதாக இருப்பதைப் போலவேதான், தனி வாழ்விலும், சமுதாய வாழ்விலும் மிடிமை, சிறுமை ஆகிய பல்வேறு கொடுமைகளோடு போராடி, உத்திர பிரதேசத்திலும், தென் மேற்குப் பகுதியிலும் பள்ளித் துணை ஆய்வாளராகவும், பஞ்சை எழுத்தாளராகவும் உழன்ற பிரேம்சந்தின் எழுத்துக்கள் நடுத்தர, கடைத்தர வர்க்கத் தின் அவலங்களையும், சமுதாயத்தில் புரை யோடிப்போன சீர் கேடுகளையும் சித்தரிக்கும் கண்ணீர்க் கதைகளாகவே அமைந்துள்ளன. தகழியின் செம்மீன் ஜனாதிபதி பரிசு பெற்றது கேரளத்தின் இயல்பான இனிய மண் மணத் தினாலும் வளத்தினாலுமே என்பது மறுக்க மாட்டா உண்மைதானே? பேர்ல்பக்கின் குட் எர்த் சிறப்புப்பெற்றமைக்கும் இந்த மண்ணின் மாட்சிதானே காரணம்! எழுத்தாளன் தான் வாழும் இடத்தின் காற்று மண்டலத்தில் அழுந்திக் கிடப்பவனேயல்லவா? தாமஸ் ஹார்டியின் நாவல்கள், அவரது சொந்த ஊரான, வெஸெக்ஸ் எனப்படும், இங்கிலாந் தின் தென் மேற்குப் பகுதியையே படம் பிடித் துக் காட்டுவதும் இத்தகைய சூழல் ஆதிக்கத் தின் காரணமேயாகும்.

உயர்ந்த மலைச் சிகரங்களும், ஆழ்கடலும், பள்ளத்தாக்குகளும், எரிமலைகளுமாகக் கரடு முரடான நில அமைப்பில் வாழ்வு இன்னல்

நிறைந்ததாக—இயற்கைப் போராட்டமாகத்தான் இருக்கும். ஹெர்குலிஸ், பெர்சியஸ், தீஸியஸ் போன்ற வீரர்களின் சாகச வரலாறுகள் எழுவதற்கு இச் சூழ்நிலையே காரணமாக அமைந்தது எனலாம். நூற்றுக் கணக்கான தீவுக் கூட்டங்களால் ஆன கிரீஸில் வாழ்ந்த வீரன் யுலிஸஸ் (ஒடிஸஸ்) கடற் செலவில் ஆர்வமுடையவனாக இருத்தலும் இயல்பே.

அப்படியானால், கவிஞனின் கற்பனை காலம் இடம் கடந்து செல்லும் ஆற்றல் அற்றதாமோ என்ற ஐயம் எழலாம். கற்பனைச் சிறகு முளைத்து உலகெங்கும் பறந்துவரலாம். ஆயினும் கவிஞன் தன் சொந்த மண்ணை—தான் காலூன்றி நிற்கும் தாயக மண்ணை—அறவே உதறிவிட்டு மேலெழுந்து போய்விட முடிவதில்லை. கம்பனுக்கும் ஷேக்ஸ்பியருக்குமே கூட முடியவில்லையே. முடிந்ததாகக் காட்டிக் கொள்வது, ஊட்டிக் கிழங்கையும், நீலகிரித் தேயிலையையும் குறிஞ்சி மலரையும், தஞ்சை மாவட்ட டெல்டாப் பகுதியில் சாகுபடி செய்யும் முயற்சியே யாகும். காஷ்மீரத்து மண்ணையே கொண்டு வந்து தொட்டியில் நிரப்பிப் பயிரிட்டாலும், வேதாரண்யத்தில் குங்குமப்பூ விளையுமோ?

இவ்வாறு, தொன்றுதொட்டு, நிலத்திற்கேற்ப மனமும், மனத்திற்கேற்ப இலக்கிய பாரம்பரியமும் நாகரிகமும் அமைதல் பெருவழக்கு. ஆனால். இங்கிலாந்தின் சமய, அரசியல் அடக்கு முறைகளைத் தகர்த்துக் கொண்டு வெளியேறிய ப்யூரிடன்களாலும், பில்கிரிம் பாதர்களாலும் உருவாக்கப்பட்ட அமெரிக்காவில்—ஐரோப்பாவின் பல்வேறு இனத்தவர்களும் குடியேறிய கலப்பு நாட்டில—எந்தக் கலாசாரத்தை எதிர்பார்க்க முடியும்? மண்ணில் உரிமையை நிலைநாட்டவே போரிட வேண்டியிருந்த நிலையில், மண்ணின் மணத்தை நுகர மனம் ஏது? எனவே தான், புதிய மண்ணில் தோன்றிய அந்தப் புதிய சமுதாயத்தில் எல்லாமே புதுமையாகவும் புரட்சியாகவுமே அமைந்தன. வால்ட் விட்மனின் கவிதைகள் இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. கருத்தல் மட்டுமன்றி வடிவத்திலும் புதியதான அக்கவிதை பரபரப்போடு முன்னேறி வரும் அப்புதிய சமுதாயத்தின் வேகத்திற்கும் மாற்றத்திற்கும் பிரதிநிதித்துவம்வகிக்கின்றது.

இப்படிச் சொல்வதனால், பிற நாடுகளில் இலக்கியப் போக்கில் மாற்றமில்லை என்பது பொருளன்று. மண்ணின் இயல்பும் நிலையானதன்றே! காலத்துக்குக் காலம் இயற்கையின் போக்கிற்கு ஏற்ப மாறுவதுதான். தாவர மட்கு, தாதுக்கள் போன்றவை சேர்வதனாலும், மண் அரிப்பு, மண்ணடிப்பு போன்றவற்றாலும் மண்ணின் தன்மை மாறுவதுண்டு. டால்ஸ்டாயின் அன்னா கரீனினா, போரும் அமைதியும் ஆகியவற்றில் நாம் காண்பதும் ஒரு வகை ரஷ்ய மண்தான். முடியாட்சிக் காலத்து, ஆடம்பர, அதிகார, ஆரவாரச் சமுதாயமெனும் பகட்டான சூரியகாந்திப்பாத்தி அது. பின்னர் புரட்சி வெள்ளம் பொங்கி எழுந்து எல்லாம் மண் மூடிப்போனபின், வண்டலடித்த அந்த வளமான புது மண்ணில் புத்திலக்கியங்கள் முளைவிட்டன. மாக்சிம் கார்க்கி, ஆன்டன் செகாவ், துர்க்கானேவ் ஆகியோர் புதிய விவசாயிகள்.

ஏறத்தாழ இதே காலத்தில் ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளில் அறிவியலாகிய இரசாயன உரம் மிகுதியாகச் சேர்ந்ததன் விளைவாக மண்ணின் மணம் முற்றிலும் மாறுபட்டது. ஜூல்ஸ் வெர்ன், ஹெச். ஜி. வெல்ஸ் ஹக்ஸ்லி போன்றோரின் மாதிரிப் பண்ணைகள் புதுமையானவை மட்டுமல்ல; செழிப்பானவையும் பயனுடையனவும், சுவையுடையனவும் கூட. ஆனால் இத்தகைய புதுமைகள் இந்திய நாட்டில் ஏற்படா. பாரதநாடு பழம்பெரும் நாடென்றோ! பழைய குப்பைகளே அழுகி, மக்கி, மண்ணில் புதைந்து நிறைந்து கிடப்பதால் மேலுரத்திற்குப் பெரும்பாலும் இடமே இல்லை. இங்கு, இன்றைய புதுமை இலக்கியங்களில் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில தலைகாட்டுவது ஓரளவு ஆறுதல் அளிக்கக் கூடியதாக உள்ளது. திருமதி ராஜம் கிருஷ்ணனின் வேருக்கு நீர் எனும் நாவலில் நீலகிரி மாவட்ட மண் மணத்தினை முழுமையாக நுகர முடிகின்றது. அதே நேரத்தில் இன்றைய சமுதாய பிரஞ்ஞையும், பிரச்னையும் கூடத் தெளிவாக உள்ளன. ராஜம் கிருஷ்ணனின் குறிஞ்சித் தேன், தி. ஜானகிராமனின் செம்பருத்தி, இப்படி இன்னும் ஒன்றிரண்டையும் குறிப்பிடலாம். விட்மன்பாணி வசன கவிதைகளும், மாப்பசான் பாணி யதார்த்தக் கதைகளும் புதுமை என்ற பெயரில் தலையெடுத்து வருகின்றன. களர் நிலத்தில் கள்ளியும் காளானும் தோன்றுவது போல, நியூவேவ் வேறு முளைத்துள்ளது.

ஆனால் பொதுவாகவே, இந்த அணுயுகத்தில், உலகிலேயே மண்ணின் சாரம் குறைந்துதான் போய்விட்டது. வளமான மண்ணில் தன்னிச்சையாகச் செழித்து மண்டிய காட்டு மலர்களின் காலம் மாறிவிட்டது. வீட்டுத் தோட்டத்தில் பயிரிடப்பட்ட இடைக்காலமும் போய் விட்டது. வீட்டு முற்றத்தில் தொட்டியில் வளர்க்கப்பட்ட குரோட்டன்ஸ் காலமும் கூடப் போய் விட்டது. நடு அறையில், மொசெய்க் தரையில், கண்ணாடிக் கிண்ணத்தில் பொருத்தி வைக்கப்பட்டிருக்கும் பிளாஸ்டிக் மலர்களின் காலம் இது. மலர் மணத்தையே மறந்து விட்ட—மரத்துவிட்ட மனத்துடன்—மகோன்னத வாழ்வு வாழும் நாம் மண் மணத்தையா உணரப் போகிறோம்!

டாக்டர் பா, சௌந்தரா
எம். ஏ., பிஎச். டி.

பேராசிரியை, தமிழ்த் துறை
விசாலாட்சி மகளிர் கல்லூரி
உடுமலைப்பேட்டை
கோவை மாவட்டம்

வாழி! வாழி!

பூமலர்ந் தருளு கின்ற
புதுச் சுவைத் தேனை, தாயின்
நாமலர்ந் தருளு கின்ற
நற்றமி ழமுதை என்றும்
யாமறந் தறியோம் என்றே
அருந்திறற் சங்க மொன்றை
நீர்மகிழ்ந் தங்கும் அன்பால்
நிறுவிய தறிந்தின் புற்றேன்!

பிறந்தநன் னாட்டை விட்டுப்
பிரிந்தபின் னாலும், வாழ்வு
சிறந்திட உதவு கின்ற
செந்தமிழ்த் தாயை, நீங்கள்
மறந்திட வில்லை, உங்கள்
மனநடு வீட்டி னுள்ளே
நிறைந்தவள் அவளே யாக
நிற்கிறீர் வாழி வாழி!

அகலமொ டாழம் நுட்பம்
அழகினொ டழுத்தம் என்று
சகலமும் உடைய தெய்வச்
சந்நிதி போலப் பொன்றுப்
புகழுடன் விளங்கு கின்ற
பூந்தமிழ்ச் சங்கம் வாழ
நெகிழ்வுடன் வாழ்த்தி நெஞ்ச
நிறைவுறு கின்றேன் நானே!

குறளொடு சிலம்பும் கம்பன்
கொடுத்ததோர் இராம காதைத்
திரளொடு பலவும் நெஞ்சுள்
செலுத்திய அருமைத் தாயை
திரைமறை வின்றிச் சங்கம்
திறந்ததில் தொழுகின் றீர்கள்
குறையெது மின்றி வாழ்வீர்
குமரனின் அருளி னாலே!

திருமதி சௌந்தரா கைலாசம்
'முருகனடி'
7, கஸ்தூரி ரங்கய்யங்கார் ரோடு
தேனாம்பேட்டை
சென்னை—600018

இராவணனின் தன்மானம்

டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி

சான்றோர்கள் இந்நில உலகின் வாழ்வியலை நுண்ணிதின் ஆய்ந்து பல பேருண்மைகளைத் தேர்ந்து தெளிந்துள்ளனர். இவைகள் நிலையானவை. பல யுகங்களாயினும் இவ்வுண்மைகள் மாறா. இவ்வுண்மைகளை அடிப்படையாகக் கொண்டே பல சீரிய இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அறிவியல் நுட்பம், தொழில் நுட்பம் ஆகியவற்றிற்கு அடிப்படையாக அமையும் உண்மைகள் காலத்திற்குக் காலம் மாறலாம். ஆனால் சிறந்த இலக்கியங்களில் பொதிந்துள்ள பேருண்மைகள் என்றும் மாறாத தன்மை உடையவை. காலந்தோறும் இலக்கிய வடிவம் மாறுவதுண்டு. ஆனால் அவ்விலக்கியத்திற்கு உயிர்நாடியாக உள்ள வாழ்வியல் உண்மைகள் மாறுவதில்லை. சான்றாகச் சங்க கால இலக்கியங்கள் தனிநிலை செய்யுட்களால் ஆனவை. பிற்கால இலக்கியங்கள் தொடர்நிலைச் செய்யுட்களால் இயன்றவை. இக் கால இலக்கியங்கள் உரைநடையில் அமைந்த புதினம், சிறுகதை இன்னோரன்னவையாகும். ஆனால் இவை அனைத்திலும் அடிப்படையாக அமைந்துள்ள வாழ்வியல் உண்மைகள் ஒரு தன்மையனவே. எனவே நாளடைவில் இலக்கிய வடிவங்களே மாறியுள்ளன அவைகளின் கண் காணும் வாழ்வியல் உண்மைகளில் மாற்றமில்லை.

கம்பர் பெருமான் படைத்த ஒப்பருங் காப்பியமாகிய இராம காதையில் வாழ்வியல் பேருண்மைகள் நிறைந்து மிளிர்கின்றன. அறிவிலும் ஆற்றலிலும், அன்பிலும், நிகரற்று விளங்கும் ஒருவர் உணர்ச்சி வயப்பட்டுத் தவறிழைப்பாராயின் அத்தவற்றினை உணர்ந்து தம்மைத் திருத்திக் கொள்வதற்கு மாறாக தாம் இயற்றிய தவற்றையே இயைந்ததாகக் கொள்ளும் தன்மையை இந் நில உலகில் நாம் காண்கிறோம். தவறு என்று பிறர் சுட்டிக்காட்டினும் அதை ஏற்றுக் கொள்வது தமக்கிழுக் கென்று அத்தகையோர் கருதுபவராவர். உலகில் ஒரு சிலரிடத்தில் காணும் இத்தன்மையினைக் கவி வேந்தர் கம்பர் தம் காப்பியத்தின் சிறப்புப் பாத்திரங்களுள் ஒன்றாகிய இராவணன் வாயிலாக நன்கு விளக்கியுள்ளார்.

இராவணன் இலங்கையை ஆட்சிபுரிந்த பெரு மன்னனாவன். அவன் மூவுலகையும் வெற்றி கண்டு தன் வீரச் சிறப்பை நிலை நாட்டினான். மேலும், அவன் தவமும், தெய்வ பக்தியும், ஆண்மையும், ஆட்சித் திறனும், பேராற்றலும், பெருங் கலைகளில் ஆன்ற புலமையும் மானமே பெரிதென மதித்து வாழும் பெருந்தகவும் வாய்ந்தவன்.

இராமன் தன் மனைவி சீதையோடும், இளவல் இலக்குவனோடும் பஞ்சவடியில் தங்கி இருந்தபோது இராவணனின் தங்கை சூர்ப்பனகை இராமனைக் கண்ணுற்றாள். அவனழகு அவள் நெஞ்சைக் கவர்ந்தது. அவனையே அடைய அவள் பெரிதும் முயன்றாள். முடிவில் இலக்குவனால் தன் காதும், மூக்கும் அறுபட்டு இலங்கைக்கு ஓடிச் சென்று இராவணன் திருவடியில் விழுந்து புரண்டாள். இராம இலக்குவரால் தனக்கு இழிவு நேர்ந்ததெனக் கூறினாள், இராமனைப் பழிவாங்க அவள் உறுதி கொண்டாள், இராவணன் உள்ளத்தில் காமஉணர்வு பெருக்கெடுக்குமாறு சீதையின் மேனி அழகைச் சுவையுற வருணித்தாள். இராவணன் மனக்கண் முன் சீதையின் அழகுருவம் நின்றது. காமத் தீயால் அவன் வெந்து சாம்பினான். முடிவில் சீதையை வஞ்சித்துக் கவர்ந்து வந்து தன் நகரின் கண்ணுள்ள அசோக வனத்தில் சிறை வைத்தான்.

அவனைச் சார்ந்தவரும், மற்றவரும் சீதையை நயந்து சிறை வைத்தது தவறு என்று அறிவுறுத்தினர். ஆனால் அதை அவன் தவறாகக் கருதவில்லை. தான் நயந்து சீதையைக் கவர்ந்து வந்த பிறகு அவளை விடுப்பது தன்னுடைய தன்மானத்திற்கு இழுக்கு என்றவன் கருதலானான்.

அசோக வனத்தில் அனுமன் சீதையைக் கண்டு, அவளிடம் விடைபெற்றுக் கொண்ட பிறகு அவ்வனத்தினை அவன் அழித்துச் சிதைத்தான்; எதிர்த்த பல அரக்கர்களையும் கொன்று குவித்தான்; முடிவில் இந்திர சித்தின் பிரமாத்திரத்தால் கட்டுண்டான். அவனை அரக்கர்கள் இராவணன் முன்

கொண்டு சென்றனர் இராவணன் ஆணைப்படி அவன் வாலுக்கு தீயிட்டு விரட்டினர். அனுமன் இலங்கை நகரெங்கும் பாய்ந்து அதைத் தீக்கிரையாக்கினான். அனுமனால் தன் நகரம் அழிக்கப்பட்டதையும் அதனால் தனக்கு நேர்ந்த பழியையும் எண்ணி இராவணன் நெஞ்சம் வருந்தினான். இராவணனின் சேனைத் தலைவரும் ஏனையோரும் இராமனுடன் போரிட வேண்டும் என்று கூறினர். இராவணன் தம்பியாகிய வீடணன் ஒருவனே தன் தமையன் உயர்வதற்கேற்ற நெறியினை எடுத்துக் கூறினான். சானகியை விடுவிக்காமல் போனால் இராவணன் அழிவது திண்ணம் என்பதைத் தக்க சான்றுகளுடன் எடுத்துரைத்தான்.

''இலங்கை மாநகரமும் நினது வெற்றிச் சிறப்பும், வெந்து அழிந்தது உண்மையில் ஒரு குரங்கினால் அல்ல; உலகத் தாயாகிய சீதையின் கற்பினாலேயேயாம் என்று நீ உணர்தல் வேண்டும்'' என்றான். மேலுமவன் ''பழியும், கீழ்மைத் தன்மையும் பெருகி நம் சுற்றத்தோடு மடியாமல் புகழும், செல்வமும் நம் உயர் குலத்தன்மையும் நிலைத்து நிற்க வேண்டுமானால் தளராத கற்புடைய சீதையை விட்டருள்க; இதைவிட நமக்குச் சிறந்த வெற்றி வேறொன்றுமில்லை என்று அறிவுரை பகர்ந்தான்.

கோநகர் முழுதும் நினதுகொற்றமும்
சானகி எனும்பெயர் உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால் வெந்தது அல்லதோர்
வானரம் சுட்டது என்றுணர்தல் மாட்சியோ

(யுத்த-75)

இசையும் செல்வமும் உயர்குலத்து
இயற்கையும் எஞ்ச
வசையும் கீழ்மையும் மீக்கொள கிளையொடும்
மடியாது
அசைவில் கற்பின் அவ்வணங்கை விட்டருளுதி
அதன்மேல்
விசையமில் எனச்சொல்லினன் அறிஞரின்
மிக்கான்...''

(யுத்த—99)

இவ்வறிவுரையை இராவணன் சிறிதும் பொருட்படுத்தவில்லை. மானிடராகிய இராம இலக்குவருக்கு அஞ்சி வீடணன் பேசியது அவனுக்குச் சீற்றத்தை விளைத்தது. மேலுமவன், வீடணன் 'இராம இலக்குவர்பால் அன்பு கொண்டு தனக்கு வஞ்சனை புரிவதாகக் கருதினான்.

''அஞ்சினை யாதலி னமர்க்கு மாளலை
தஞ்சென மனிதர்பால் வைத்த சார்பினை
வஞ்சனை மனத்தினை பிறப்பு மாறினை
நஞ்சினை உடன்கொடு வாழ்தல் நன்றரோ''

யுத்த—313

''நம் பகைவரைக் கண்டு நீ அஞ்சினாய் ஆதலினால் போர் செய்வதற்குத் தக்க வீரன் ஆகமாட்டாய் மானிடரிடம் கொண்ட பற்றினால் அவர்களே புகலிடம் என்று கருதுகிறாய்; வஞ்சனை புரிந்த மனம் உடையவன்; அரக்கர் பிறப்பொழுக்கத்தினின்றும் மாறிவிட்டனை; உன்னுடன் பொருந்தி வாழ்தலினும் விடத்தை உடன் கொண்டு வாழ்தல் நல்லது'' என்பது இப்பாடலின் பொருளாகும்.

உண்மையான அன்பின் பெருக்கால் வீடணன் கூறிய நல்லுரையை இராவணன் புறக்கணித்த தன்மையினை ஓர்மின். தான் இயற்றிய, பெருந்தீய செயலை வீடணன் சுட்டிக் காட்டியபோது, அதைச் சிறிதும் உணராது அவனுடைய உண்மை அன்பின் மீதே அவன் ஐயங் கொண்டான். இதற்குக் காரணம் தான் மேற்கொண்ட செயலினின்றும் தவறுதல் தன்னுடைய ஆண்மைக்கும், பெருமைக்கும் இழுக்கு என்று கருதியதேயாகும்.

இராவணன் கோபுரத்தின் மீதிருந்து இராமனையும் அவனுடனிருந்த வானர சேனையையும் கண்டான். அப்போது சுக்ரீவன் சீற்றமுற்று இராவணன் மேல் பாய்ந்தான். இருவரும் போரிட்டனர். முடிவில் இராவணனது மகுட மணிகளைச் சுக்ரீவன் பறித்துக் கொண்டு மீண்டான். இராவணன் மானத்தால் மனமழிந்தான். அப்போது இராவணனின் தாய் மாமனாகிய 'மாலி' என்பவன் இராவணனை நோக்கி காமம் உன்னை வேரோடு கெடுத்தது. இந்த ஊரை எரித்த அனுமனுக்குச் சக்கரமுண்டோ, வில்லுண்டோ? அம்புதான் உண்டோ? மகுடத்தைப் பறித்துச் சென்ற சுக்ரீவர்க்கும் வாள் முதலாய படைக் கலங்கள் உண்டோ? தம் கையில் ஒரு படைக்கலமும் இல்லாமல் அவர்கள் வீரச் செயல்கள் புரிந்துள்ளார்கள் என்பதை நீ உணர வேண்டும். இராமனுடைய அம்புகள் தூண்டுதற்கு முன்னேயே சீதையை அவனிடம் கொடுத்துவிட்டு, அவனை அடைக்கலம் புகுவது நமக்கு நன்மை தருவதாகும் இப்போது சிறந்த அறம் இதைவிட வேறில்லை'' என்றான்.

இதைக் கேட்டதும் இலங்கை வேந்தன் மாலியை எரியெழ நோக்கி, "எனக்குக் கொடிய பழியை விளைவிக்கின்றாய்; அன்பற்ற சிந்தையோடு முறையற்றனவும் தகுதி யற்றனவுமான சொற்களை என்னிடம் கூறாதே" என்றான்.

என்பழி மாலி தன்னை வெரியெழ நோக்கி என்பால்
வன்பழி தருதி போலாம் வரன்முறை
யறியா வார்த்தை
அன்பழி சிந்தை தன்னால் அடாதன அறைய
லென்றான்...

சீதையை இராமனிடம் கொடுத்து விடுவது தனக்குக் கொடிய பழியாகும் என்று இராவணன் கூறியதை நாம் சிந்தித்தல் வேண்டும். மாற்றான் மனைவியைக் கவர்ந்து வந்தது தன்னுடைய வீரச் செயலுக்குத் தக்கதென்றும், அவளை விடுத்தால் தனக்கு வன்பழி நேரும் என்றும் உண்மையாகவே அவன் கருதினான். இதனாலேயே மாலியவான் சீதையை விட்டுவிடும்படி, கூறியது அவனுக்கு கடும் சீற்றத்தை விளைவித்தது.

இராமன் படைக்கும் இராவணன் படைக்கும் நிகழ்ந்த முதல் நாட் போரில் பல அரக்கர்கள் மாண்டார்கள். முடிவில் இராவணன் சேனைத் தலைவனும் இறந்து பட்டான். இதை அறிந்ததும் இராவணன் தேரேறி போர்க்களம் சென்றான். மிக்க வீரத்தோடு இராவணன் போர் புரிந்தான். வானர சேனை நிலை குலைந்தது. இராமன் இராவணனை எதிர்த்துச் சென்றான், இருவருக்கும் கடும்போர் மூண்டது. இராமனுடைய அம்புகளால் அரக்கர் சேனை முழுதும் அழிந்தது. இராவணனின் படைக்கலங்கள் சிதைவுண்டன; அவனது தேர் சிதைந்தது. இராவணன் மகுடம் இழந்து நாணி நின்றான் அப்போது இராமன் இராவணனை அம்பினால் கொன்றிருக்கலாம். ஆனால் கொல்லாது அவன்பால் பேரிரக்க முற்று "இனி போர் புரிந்தால் நீ பிழைப்பாய் என்று மட்டும் நினைக்காதே; இன்று போய்ப் போர்க்கு நாளை வா" என்று கனிவோடு கூறினான்.

முதல் நாள் போரில் தன்னுடைய படைக்கலங்களெல்லாம் இழந்து கொற்றம் சிதைந்து இராவணன் மீண்ட காட்சியைக் கம்பர் நெஞ்சுருகப் பாடுகின்றார்.

வாரணம் பொருத மார்பும் வரையினை
எடுத்த தோளும்
நாரத முனிவற் கேற்ப நயம்பட உரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும் சங்கரன்
கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையே
மீண்டு போனான்
(கும்ப. வதை. பா. 1)

இராவணன் யாவராலும் வெல்லப் பெறாத மிகப் பெரிய வீரன். எண்டிசை யானைகளோடு பொருத மார்புடையவன்; கையிலை மலையை எடுத்த தோளன்; நாரத முனிவரைப் போல நயம்படப் பாடும் இன்னிசைப் புலமை உடையவன்; சிவ பெருமான் கொடுத்த வாள் உடையவன் இவற்றை எல்லாம் பொருகளத்தே போட்டு விட்டு வெறுங் கையோடு மீண்டு போனான் என்று கம்பன் நயம்பட இப் பாடலில் உரைக்கின்றான்.

இவ்வாறு பெரிதும் இரங்கத்தக்க நிலையில் இராவணன் தன் அரண்மனையை அடைந்தான். அப்போது மாலி அவனை அடைந்து அவன் வருத்த நிலை அறிந்து "நிகழ்ந்தது யாது?" என வினவினான். இராவணன் இராமன் அம்பெய்யும் பேராற்றலை வியந்து கூறினான். "இராமனுடைய அம்பின் வேகத்தைப் பொறுக்க மாட்டாது யானே வருந்தினேன் என்றால் மற்றவர் யார் அவ்வம்புகளைக் கண்ணெடுத்துப் பார்க்க முடியும்? என்றான்.

"...தாபதன் அம்புக் காற்றா
தொய்ந்தனன் யானே யென்றால் யாரவை
நோக்க கிற்பார்"
(கும்ப. வதை. பா. 3)

இராமனின் வீரப் பெருமையை இராவணன் நன்கு உணர்ந்தான் என்பதை இங்கு நாமறிகிறோம். தான் இராமனால் இறந்து படக்கூடும் என்ற உணர்வும் அவனுக்கு ஏற்பட்டது. ஆனால் இப்போதும் சீதையை விடுவிப்பது தன்னுடைய, தன்மானத்திற் கிழுக்கென்றே கருதினான்.

"நாசம் வந்துற்றபோது நல்லதோர்
பகையைப் பெற்றேன்"
(கும்ப. வதை, பா. 23)

என்று தன் மாமன் மாலியவானிடம் அவன் கூறுவதின் மூலம் இவ்வுண்மை புலனாகின்றது.

பின்பு இராவணன் கும்பகர்ணனை அழைத்துப் போர்க்கோலம் பூண்டு இராம இலக்குவர் உயிரைப் போக்க வேண்டும் என்று அவனிடம் கூறினான். அதைக் கேட்டதும் கும்பகர்ணன் கற்பின் செல்வியாகிய சீதையை இராவணன் இன்னும் விடுவிக்காததை எண்ணி அதிர்ச்சி அடைந்து

திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை
விட்டிலையோ இதுவிதி யின் வன்மையோ?
(கும்ப. வதை. பா. 80)

என்று கூறினான். கும்பகர்ணன் கூறிய உரையைக் கேட்டதும் இராவணனுக்குச் சினம் மூண்டது. "மானிடர்களாகிய இராம இலக்குவர்களை வணங்கி மற்றுமக் கூனுடைய குரங்கைக் கும்பிட்டு வாழ்தல் உன் தம்பியாகிய வீடணனுக்கும் உனக்குமே முறையான செயலாகும். யான் அது செய்யேன்; இவ்விடத்தினின்றும் போவாயாக" என்று இராவணன் அவனைக் கடிந்துரைத்தான். கும்பகர்ணன் இராவணன் திருவடிகளை வணங்கிப் பொறுத்தருள வேண்டிப் போர்க்களம் சென்றான். இங்கும் இராவணனின் தன்மானப் பெருக்குணர்வு கும்பகர்ணன் நல்லுரையை ஏற்பதற்குத் தடையாக இருப்பதைக் காணுகின்றோம்.

கும்பகர்ணன் இராமனோடு போரிட்டிறந்தான். அடுத்து இராவணன் தன் மகனாகிய அதிகாயனை போருக்கு அனுப்பினான். அவனும் இலக்குவன் அம்பினால் இறந்தான். பின்பு இந்திரசித்து இலக்குவனைக் கொல்வதாகக் கூறிப் போருக்குச் சென்றான். அவன் விடுத்த நாக பாசம், பிருமாத்திரம் முதலிய அம்புகளால் இலக்குவன் முதலியோர் அயர்ந்து சோர்ந்தனர். இலக்குவன் அயர்ச்சி நீங்கி இந்திரசித்துவோடு கடும் போர் புரிந்தான். இந்திரசித்துவின் தேர் சிதைந்தது என்றும் அழியாதத் தேர் பெறுதற்கு அவன் இராவணனை அடைந்தான். இப்போது இலக்குவனின் வல்லமையை இந்திரசித்து நன்கு உணர்ந்திருந்தான். எனவே தன் தந்தையாகிய இராவணனை நோக்கி,

குலம் செய்த பாவத்தாலே கொடும்பகை
தேடிக் கொண்டாய்
சலம்செயின் உலகம் மூன்றும் இலக்குவன்
முடிப்பன் தானே
(இந்திர—வதை. பா. 4)

என்றான். "குலம் செய்த பாவத்தின் விளைவினாலே நீ இராம இலக்குவருடைய பகையைத் தேடிக் கொண்டாய். இந்தப் பகையை வளர்த்தால் இலக்குவன் ஒருவனே மூவுலகையும் அழித்துவிடுவான்" என்பதே இவ்வடிகளின் பொருளாகும்.

மேலும் இராவணனை நோக்கி "சீதை பால் கொண்டுள்ள ஆசையை விடுத்து அவளை விடுவிப்பாயாயின் இராம இலக்குவர் சீற்றம் தணியும். இலங்கையை விட்டு அவர்கள் அகல்வர்; உன்னை மன்னிப்பர்; உன்மேல் கொண்டுள்ள பேரன்பினால் இதைக் கூறுகின்றேன்" என்றான். அன்பு மேலீட்டால் தன் மகன் சொன்ன இச் சொற்களில் ஒன்றுகூட அவன் செவிகளில் ஏறவில்லை. அவன் தன் மகனை நோக்கி "முன்பே போரிட்டு இறந்தவர்கள் எல்லாம் இப் பகையை முடிப்பரென்றோ, இப்போதுள்ளவர்களெல்லாம் பகைவர்களை வெற்றி கொள்வார்கள் என்றோ, நீ பகைவர்களை வென்று எனக்குப் புகழைத் தருவாயென்றோ நான் இப்பகையைத் தேடிக் கொண்டேன் அல்லன். யான் என் வல்லமை ஒன்றையே கருதி இப் பகையைத் தேடிக் கொண்டேன்" என்றான்.

முன்னைபோர் இறந்தோ ரெல்லாம் இப்பகை
முடிப்பரென்றும்
பின்னைபோர் நின்றோ ரெல்லாம் வென்றவர்
பெயர்வர் என்றும்
உன்னை நீ அவரை வென்று தருதி
என்றுணர்ந்து மன்றல்
என்னையே நோக்கி யான்இந் நெடும்பகை
தேடிக் கொண்டேன்
(இ. வதை. பா. 8)

"யான் நிலையற்ற யாக்கையை விடுவேனே யல்லாமல் சீதையை விடுவேனோ" என்றும் அவனுரைத்தான். உயிர் கொடுத்தேனும் தன் மானத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற அவன் தன் உணர்வினை இதனின்றும் உணர்கின்றோம்.

இந்திரசித்து போரில் இலக்குவன் அம்பால் மடிந்தான். முடிவில் இராவணன் போர்க்கோலம் பூண்டு இராமன் சேனையை எதிர்த்துச் சென்றான். இரு திறத்துப் படைக்கும் கடும்போர் நிகழ்ந்தது. இறுதியில் இராமன் அயன் படையை எய்து இராவணனைக் கொன்றான்.

இராமன் விடுத்த அம்பு இராவணனின் வாழ்நாளையும், பெருந் தவத்தையும், அவன் பெற்ற வரத்தையும், அவன் புய வலிமையையும் உண்டு. அவன் மார்பினூடு பாய்ந்து,

அவன் உயிரை உண்டு வெளியே சென்றதென்று கம்பர் நயம்படப் பாடுகின்றார். அதாவது இராமன் விடுத்த ஒரம்பினாலே அவன் பெருமையெல்லாம் நிலைகுலைந்தழிந்து போயிற்றென்பதாகும்.

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாவராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடு உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர்ப்பருகிப் புறம்போயிற்று
இராகவன்தன் புனித வாளி
(இரா. வதை. பா 197)

இராவணன் எத்துணைப் பெரிய வீரன்! எத்துணை ஆற்றல் பொருந்தியவன்! மூன்றுலகிலும் தன் ஆணையைச் செலுத்தும் பேரரசன் தன்மானத்தை நிலைநிறுத்தும் பொருட்டுத் தன் உயிரையே இழந்தான். உண்மையிலேயே அவன் நிலைநாட்ட முயன்றது தன்மானமா என்பது சிந்திக்கற்பாலது.

பல்லாற்றானும் பெருமை வாய்ந்த பேரரசனாகிய அவன் பிறன்மனை நயத்தலாகிய பெருந்தீங்கைப் புரிந்தது சாலவும் இரங்கத்தக்கது. எத்துணைப் பெருமையும், சிறப்பும், ஆற்றலும், அறிவும், அருந்திறனும் எய்தியவராயினும் பிறன் மனைவியை விரும்புதலாகிய இழி செயலைச் செய்தால் அத்துணைப் பெருமை, சிறப்பு முதலியன அனைத்தையும் இழந்து சிறுமை எய்தியவராவர். இவ் உண்மையைத் திருவள்ளுவர்,

எத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல் —144

என்ற குறளில் அறிவுறுத்துவதைக் காண்க.

பெருமைக்கெல்லாம் நிலைக்களனாய் விளங்கிய இராவணன் பிறன் மனையாளாகிய சீதையை நயந்து சிறை வைத்துச் சிறுமை எய்தினான். பெருந்தவறாகிய இதனை அவன் சிறிதும் உணராது தனக்கு இது பொருந்திய செயலென்றே கருதினான்.

அங்ஙனம் கருதியதோடல்லாமல் அவளை விடுவிப்பது தன்னுடைய தன்மானத்திற்கு இழுக்கென்றே' கருதினான். தான் செய்த பெருந்தவற்றை உணர்ந்து திருத்திக் கொள்வது தன்னுடைய பெருமைக்கிழுக்கிழுக்கென்று அவன் நினைத்தது எத்துணைப் பேதமைத் தன்மை! சீதையை விடுவிப்பது தன்மானக் குறைவென்று கருதிய அவன் பிறன் மனையளாகிய அவளைக் கவர்ந்து வந்தது தனக்கு மிகப் பெரிய மானக்கேடான செயல் என்பதை உணராமல் போனான். இதுவே நாம் அவனிடம் காணும் பெருங்குறையாகும். பல வகையிலும் சிறப்புற்று விளங்கிய அவன்தான் செய்தது பொருத்தமுடையதென இறுதி வரை நிலைநாட்ட முயன்றது பெரிதும் இரங்கத்தக்கது.

பல நற்பண்புகளும் ஒருங்கியைந்த ஒரு சிலரிடத்து இதுபோன்ற குறை பொருந்தி இருப்பதை இவ்வுலகில் காணுகின்றோம். இதனைத்தான் கம்பர் தம் காப்பியத்தில் இராவணன் பாத்திரத்தின் வாயிலாக விளக்கி உள்ளார்.

டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி
எம். ஏ., பிஎச். டி
'தமிழ் இன்பம்'
11, தாமு நகர்
கோயமுத்தூர்—641018

யாயும் ஞாயும் யார் ஆகியரோ!
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்!
யானும் நீயும் எவ்வழி அறிதும்!
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடைய நெஞ்சம் தாம் கலந்தனவே!
—குறுந்தொகை

நிகழ்காலத் தமிழ் இலக்கியப் போக்குகள் - ஒரு பின்னணி சார்ந்த பார்வை

— தமிழவன் —

ஒவ்வொரு மொழிக்கும் அதற்குரிய சில மோசமான அல்லது சில நல்ல மரபுகள் இருந்தே தீரும். அதுபோல தமிழுக்கு, அதற்கென்ற தனியான ஒரு மரபு-நீண்டகால மரபு-இருக்கிறது. பல தற்கால விமர்சகர்கள் பிற மொழி, பிறநாட்டு மரபு பற்றித் தெரிந்து வைத்துக் கொள்வதாய் காட்டும் பாவனை கூட தமிழ் மொழியின் நீண்ட மரபு பற்றிப் பேசும் போது காட்டுவதில்லை. அதற்குத் தமிழ் மொழியின் - அதுபோல தமிழ் சிந்தனையின் மரபை, சரித்திரத்தை அதன் சமூகப் பின்னணியுடன் புரிந்துகொள்ள வேண்டும். அதுக்கு எந்த எந்தச் சமூக உந்துதல்கள் எந்த மொழி மரபு மாற்றத்தை ஏற்படுத்தியது, எந்த இலக்கிய வடிவம் தீர்மானிக்கப்பட்டது என்பதையெல்லாம் தெரிந்துகொள்வது ரொம்பவும் அத்தியாவசியமாகும். இந்தத் தமிழிலக்கியத்தின் காலமுறையாவது (இது இலக்கியச் சரித்திரமல்ல) ஓரளவு புரிந்து கொண்ட தமிழ்க் கல்வித் துறையினர் சமூகப் பின்னணியுடன் விஷயங்களையும், பாதிப்புக்களையும் புரிந்துகொள்ள முயலாதிருக்கின்றனர். இதற்கு மாருக மேல்நாட்டு இலக்கியப் புத்தகங்கள் ஒன்றிரண்டை உதிரியாகப் படித்து அவைகளை முழுக்க செரிக்கக்கூட சக்தியற்ற சிலர் தற்கால இலக்கிய மேல்வரிச் சட்டாம் பிள்ளைகளாகத் தோற்றமளிக்க முயல்கின்றனர். இப்படிப்பட்ட விமர்சகர்கள் சில ஆரம்ப வாசகர்களை 'மயக்கியும்' விடுகின்றனர். இப்போ நமக்கு எது தேவையானதென்ருல் தமிழிலக்கியங்களின் உண்மையான சமூகப் பின்னணியுடன் உள்ள அறிவும், மேல்நாட்டு இலக்கியங்களின் பின்னணியுடன் கூடிய முழுமையான பரிச்சயமும் ஆகும். இந்த இரண்டோடு, இந்திய, உலக, இலக்கியங்களின் மரபும் தற்கால வளர்ச்சியும் புரிந்து கொண்டுள்ள உண்மையான இலக்கிய அறிஞரால் மட்டுமே விமர்சனம் வளரமுடியும். தமிழில் விமர்சகர்கள் என்று சொலலிக்கொளகின்றவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது இங்கே சிந்திப்பதற்குரியது. நல்ல விமர்சகர்கள இல்லாமல் இலக்கியம் ஒன்றும் வளர்ந்துவிட முடியாது. நல்ல விமர்சனம் உதவி செய்யாத வகையில் நம் தமிழிலக்கியக் குழந்தை இங்கே எப்படி வளர்ந்துவருகிறது என்பதை அறிமுகம் செய்ய இககட்டுரையில் முயல்கிறேன்.

ந. பிச்சைமூர்த்தியின் கவிதைகள் நாற்பதுக்களிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. என்ருலும் அந்தப் புது மரபுக் கவிதை தற்சமயம், அதாவது 70 - வாக்கிற்குப் பின்னரே யாவராலும் கவனிக்கப்பட்டுவருகிறது. இந்த இடத்தில ஓர் அடிப்படை விஷயம் சொலலி விடவேண்டும். எந்த ஒரு இலக்கிய இலக்கியமும் அல்லது இலக்கிய உத்தி, அமைப்பு இவைகளும் ஓர் அடிப்படைச் சமூகக் காரணததின் விளைவுகளேயாகும். வெள்ளைக்காரர்களது வியாபாரஸ்தலமாக விளங்கிய இந்தியா மேல நாட்டுப் பொருளாதாரப் பெருவளர்ச்சிப் பண்பையும் மெல்ல மெல்லப் பெற்றுக்கொண்டு வந்தது. மேல்நாட்டில் இந்தப் பொருளாதாரப் பெருவளர்ச்சி அல்லது முதலாளித்துவம் இலக்கியத்தில் தன்னுடைய தாக்கததைச் செலுத்தியுள்ளது. இது இலக்கியத் தொடர்புள்ள எலலாருக்கும் தெரிந்ததுதான். இங்குச் சொன்ன பொருளாதாரப் பெருவளர்ச்சி இந்தியாவில் ஏற்பட்டபோது சாதாரண மக்கள் சொல்லொணுத்துயர் அடைந்தனர். இக்கால கட்டத்தில் இந்தியாவில் உள்ள அரசியல கட்சிகளில் விநோதமான ஒரு கட்சி தமிழகததில் தோன்றியது. பொருளாதாரப் பெருவளர்ச்சியால் ஒரு சிலர் கையில் செலவம் ஒதுங்கி ஏழைகள் துன்பப்பட்டபோது இந்தக் கட்சி, மொழி, சாதி உணர்ச்சிகளைத் தூண்டி உண்மைக் காரணத்தை விளக்காமல் வளர ஆரம்பித்தது. மேலும் விஞ்ஞான ரீதியற்ற முறையில் ஏழைகளின் துனபம், முதலாளிகளின் கொடுமை என்பவைகளைக் கொச்சையாக எழுதிப் பரப்பியது. தேவையானபோது சில சோஷலிசக் கோஷங்களையும் உதிர்ததது இக் கட்சி. பல இளைஞர்கள் தெளிவின்றி இக்கட்சியின் மயக்கக் கவர்ச்சியில் ஆழ்ந்திருந்தனர். பாரதிதாசன், அவர் வழி வநத மறற எழுத்தாளர்கள், ஆகியோர் இக்கட்சி மயக்கத்தைப் பாடல்களில எழுதி இலக்கிய உலகில் போலி ரசனையை ஏற்படுததினர், இந்த மயக்கத்தில் பிச்சமூர்த்தி போன்ருேர் கவிதைகள் யார் கண்ணிலும் படவில்லை. இலக்கியத்தை மேம்போககாக ரசித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டு வாசகர்கள் பிச்சமூர்ததி போன்றவர்களைக் கவனிக்கும் வாய்ப்பு அன்றில்லை. பிச்சைமூர்த்தி கவிதைகள் அன்று கவனிக்கப்படாததற்கு வேறு காரணங்

களும் உண்டு. மரபுக் கவிதைகள் அன்று முழுதாய் தம் வீரியத்தை இழக்கவில்லை. அதோடு பிச்சமூர்த்தி போன்றவர்கள் சமூகக் கொடுமைகளை விட்டு அகவியல் நிலையில் நுழைந்து தலைமூடிக் கிடந்தனர். பிறகு பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்ற பட்டயத்தோடு வந்தவர்கள் மரபுக் கவிதைகளைச் சிரழித்தனர். தமிழ்க் கவிதை வளர்ச்சி இந்த நிலையில் தடைபட்டு நின்றது.

இந்த மாதிரியாக எல்லாம் நடந்து கொண்டிருந்த காலத்தில் மேல்குறிப்பிட்ட கட்சி அரசியலுக்குள் ஆளும் நிலையைப் பெற்றது. அதன் சுயரூபம் வெளிப்பட்டதும் இளைஞர்கள் கண்களைத் திறந்து மறு பரிசிலனை செய்ய ஆரம்பித்தனர். உண்மையான உணர்வுடைய பலரும் மாயையினின்றும் விடுபட்டனர். இலக்கியத்திலும் அக்கட்சியின் இலக்கியங்கள் 'குப்பைகள்' என்று உதறப்பட்டு வேறு இலக்கிய உணர்வுகள் தேட ஆரம்பித்தனர் இளைஞர்கள். இத்தகைய ஏமாற்ற உணர்ச்சி சிலர் கவிதைகளில் உள்ளடக்கமாகவும் மாறியது. கவிதை, புதுமையை எதிர் நோக்கி மரபை விட்டுவிடாத வசன கவிதை ரூபம் பெற்றது. ஒருவித 'மெலங்களி' கவிதைகளில் தோன்றியது. இந்தப் போக்கைக் காமராசனின் 'கறுப்பு மலர்கள்' காட்டும். கு. ப. ரா. மரபில் வந்த காமராசனைத் தொடர்ந்து வானம்பாடிக் கவிஞர்கள் பெரும் பிரகாசத்துடன் 'பேச்சு நிலைப்பா' என்னும் கவிதை முறையை வளர்த்துச் சமூகத்திற்கு சோஷலிச லட்சியங்களை முழக்கத் தொடங்கியுள்ளனர்.

'கலைகலைக்காகவே' என்னும் குரலும் அதிகமாகக் கேட்க ஆரம்பித்தது. ந. பி. பசுவய்யா, மயன், வல்லிக்கண்ணன், தி. சோ. வேணுகோபாலன் வைதீஸ்வரன், ஞானக்கூத்தன், கலாப்ரியா, ஷன்முகசுப்பையா போன்றோர் இக் குழுவை அதிக சக்தியுள்ள தாக்கினர். இலக்கியத்தில் புதுமை புதுமை என்னும் குரல் அதிகம் கேட்க ஆரம்பித்தது. பல பத்திரிகைகள் தோன்றின; நடை, கசடதபற, போன்றனவும், வானம்பாடி, உதயம்,போன்றனவும் ஒவ்வொருவாசகனுக்கும் புதுப்புதுச் செய்திகளைச் சொல்லின.

புதுக் கவிதை பற்றிப் பேச்சு அதிகமாக அடிபட ஆரம்பித்தது. எல்லோரும் (தமிழ்த் துறையினர் உட்பட) 'அது என்னது புதுக் கவிதை' என்று ஆவலாய் வினவ ஆரம்பித்தனர். புதுக் கவிதை உண்மையில் புதுமையுள்ளதா என்றெல்லாம் சர்ச்சைகள் பலமாக ஏற்பட்டன. தத்துவரீதியாகவும்இக்கட்டத்தில் க. நா. சு., சி. சு. செ, போன்றோரின் இலக்கியக் கொள்கைகள் உள்ளவர்கள் ஒரு குழுவாகவும், முற்போக்குக் கொள்கையுள்ளவர்கள் ஒரு குழுவாகவும் பிரிந்தனர். அவர்களுக்குள் சுவையான இலக்கிய மோதல்களும் ஏற்பட்டதுண்டு.

மேற்கத்திய ஒரு போக்குப் பொருளாதார வளர்ச்சியின் விளைவால் ஏற்பட்ட இலக்கியங்கள் நம் நாட்டிலும் பரவ ஆரம்பித்தது. இதற்கு அடிப்படைக் காரணம், நம் நாட்டுப் பொருளாதாரத்திலும் ஒரு போக்கு மூலதனப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதுதான். என்றாலும் மேற்கத்திய நாடுகளின் அளவு பூதாகரமான ஒருவழிப் பொருளாதார வளர்ச்சி நம் நாட்டில் ஏற்பட்டு கிராமத் தன்மைகளை, கிராமியத் தன்மையுள்ள மன நிலைகளை உடைத் தெறிந்து விடவில்லை யாதலால் புதுக் கலைகளான மேற்கத்திய பாணி கவிதை கதை போன்றன உற்சாகமான வரவேற்பைப் பெறவில்லை. இந்தமாதிரியான இரண்டுங்கெட்டான் நிலை ஜெயகாந்தன் போன்றோரை நாவலிலும் குறுநாவலிலும் பிரச்சனைகளை ஆயத் தூண்டியது. கிராமியப் பண்பாடுகளில் ஊறி வளர்ந்த சாரங்கனின் தந்தைக்கும் புதிய பொருளாதார வளர்ச்சியின் பிள்ளைகளான சாரங்கன், முரளி, நரசிம்மன் போன்றோருக்கும் மோதல் ஏற்படுகிறது. இது ஜெயகாந்தனின் 'பாரிசுக்குப் போவில், வருகிறது. முழுமையாக அழியாத ப்யூடல் சமூகத்திற்கும் (நிலப்பிரபுத்துவம்) பொருளாதாரத்தில ஒருநிலைப் போக்காக வளர்ந்துள்ள சமூகததிற்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடும் மோதலும் முத்துவேலரைக் குடும்பத்தைவிட்டு ஓடவைக்கிறது. அதுவும் முடியாத நேரத்தல் முத்துவேலர் தற்கொலை பண்ணிக் கொள்கிறா. நிலப்பிரபுத்துவ மன நிலையில் பணத்தைக கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும் முத்துவேலரின் குடும்பத்தினரை ஜெயகாநதன் 'சமூகம் என்பது நாலு பேரில்' காணபிக்கிறார். இப் பாத்திரங்கள் எதைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன என்பது முககியமானது. இவ்வாறு முதலாளித்துவ முறையில் வளர்ந்த சமூகத்திற்கும் வளராத சமூக நிலைகளுக்கும் ஏற்படுகிற போரை நாவலில கருப் பொருளாககி ஜெயகாந்தன் எழுதினார். இந்திரா பார்த்தசாரதியின் கால வெள்ளம் கால மாற்றத்தை நன்கு பிரதிபலித்தது. இந் நிலையிலேயே ஹெப்ஸிபா ஜேசுதாசனின் புததம் வீடு கிராமச் சூழ்நிலையில ஏற்படும் மாறறத்தைப் பிரதிபலிததது. சா. கநதசாமியின் சாயாவனம் ஏதோ தனிமனித வாததை நிலைநாட்ட வந்து யதார்தத நிலை பிறழ்ந்து சமூகப் புரிதல் நிலைகுறைவை ஆசிரியரிடம் காட்டி நின்றது. (இந நாவலில் உரையாடலும் வருணனைகளும் யதார்த்தமாகவுள்ளன.) மெல்ல மாறிககொண்டிருக்கும கிராமச் சூழலை இந்தியக் கிராமங்களுக்கே உரிய பாரம்பரியச் சரடு அறுவதை நுண்ணிதாய் காட்டிய, நீல.

பத்மநாபனின் "தலைமுறைகள்" என்னும் உன்னதஸ்தானம் வகிக்கும் நாவல் சமூகத்தின் சரியான வெளிப்பாடு ஆகும். இங்குக் குறிப்பிட்ட நாவல்களில் கலா ரீதியான குறை நிறைகள் தனி சர்ச்சைக்குரியன.

பொருளாதார அடி நிலைக்கும் மேல் நிலைக்கும் நடக்கும் போரை நாவல்கள் பிரதிபலிக்கும் அளவு கவிதைகள் பிரதிபலிக்க வசதியில்லை. இதனுல் நாவல்கள், சிறு கதை, குறு நாவல்கள் படிக்கும் அளவு கவிதைகளை மக்கள் படிக்கவில்லை. இவ்வாறு கவிதை தனிப்பட்டு ஓர் துணுக்கு உணர்வைப் பிரதிபலிக்கும் சாதனமாக விளங்கியது. முந்திய பெரும் வரலாறும் தமிழ்க் கவிதைக்கு உள்ளதால் சோதனை ரீதியாகவே புதுக் கவிதைகள் இன்று மிகப் பலராலும் எழுதப்பட்டு வருகின்றன.

மேல் நாட்டுக் கவிதைகளின் தாக்கத்தைப் போலவே தமிழ்க் கவிதைகளின் தாக்கமும் புது முறையில் ஞானக் கூத்தன் கவிதைகளில் காணலாம். இப்போது பாலகுமாரனும் இவ்விதத்தில் முயல்கிருர். பழைய யாப்பில் புதிய கேலிநயம், புதிய உள்ளீடுகள் அமைந்த கவிதைகள் ஞானக் கூத்தன் எழுதினுர். 'கிளன்த் புரூக்' என்பவர் புதுக் கவிதையும் மரபும் என்ற புத்தகத்தில் முன் மரபின் தொடர்ச்சியின்றித் திடீரென ஒரு புது முயற்சி தோன்றும்போது அது தடுமாறும் என்று கூறியுள்ளது இங்கு நினைக்கத்தக்கது. புதிய ஒன்றைக் கொண்டு வந்து ஒட்டும்போது புதுசுக்கும் பழசுக்கும் உள்ள தொடர்பு அடிப்படையில்தான் புதிசின் வாழ்வு நிச்சயிக்கப்படும். அதுபோல மரபின் கழுகுப் பிடியில் சிக்கித் தவிக்கும் தமிழ்க் கவிதை போன்றன மாற்றத்தை உட்கொள்ளுவதும்கூட மரபு தான். இம் மாற்றத்தை எதிர்க்கிறவர்கள் தான் மரபை மீறுகிறவர்கள். ஏனெனில் மாற்றம்தான் மரபு. சமூகமும் அதோடு சம்பந்தப்பட்ட இலக்கியமும் மாறும் என்பதே இயக்கவியல். ஞானக்கூத்தன் இடைக்கால யாப்பில் புதுமையாகச் சிலவற்றைக் கூறியபோது புதுக் கவிதை ரசிகர்கள் அதிகரித்தனர் என்பதும் நாம் மனங்கொள்ளற்குரியது. இவரது தற்சமயக் கவிதைகளில் சில வேளைகளில் காணப்படும் 'மனிதா நீ உய்வதற்கு வழியே இல்லை' என்னும் உபதேசம் கண்டிப்பதற்குரியது. இப் பண்பு க. நா. சு. போன்ருேர் இலக்கியம் மனிதனைச் சந்தோஷிப்பிக்கிற சாதனம் மட்டுமே என்று திருப்பித் திருப்பி சொல்வதால் ஏற்படும் ஆபத்து.

ஒரு வழிப்போக்குப் பொருளாதார வளர்ச்சியால் மனிதனின் குழப்பங்களை மன நிலையில் உள் வாங்கி எழுதும் கவிதைகள் பல தமிழில் தோன்றிக் கொண்டிருக்கும் வேளையில் அதே வடிவத்தைப் பயன்படுத்தி முதல் வளர்ச்சியால் சமூகத்தில் மொண்ணைத்தனமாக மாறிக் கொண்டிருக்கும் எல்லாவற்றையும் கண்டு கோபம் கொண்டுள்ளவர்களும் தோன்றியுள்ளனர். ஆக்டோபஸும் நீர்ப் பூவும் என்ற கவிதைத் தொகுப்பு இதை உணர்த்தும். முற்போக்குக் கருத்துக்கள் இதற்கு முந்தி வெளிப்பாடடைந்த முறையிலன்றி மிக நுண்மையாகப் புதுக் கவிதைகளில் உணர்த்தப்பட்டன.

நாவல் மொத்தமான பார்வையுடன் எழுதப்பட வேண்டும் என்பது இன்றைய நிலையில் பின்பற்றப்படவில்லை. மேல் நாட்டில் வெர்ஜீனியா உல்ஃப் என்பவர் பென்னட், கால்ஸ்வொர்த்தி ஆகியோரை materialists என்றும் ஜேம்ஜாய்ஸ் என்பவரை ஆன்மீகவாதி (spiritualist) என்றும் குறிப்பிட்டார். இவ் விதக் கருத்துக்களைத் தன்னுடைய Modern Fiction என்ற கட்டுரையில் வெளியிட்டார். அவர் மேலும் சொல்கிருர் "இன்றைக்குப் புறயத்தார்த்தத்திலிருந்து மனிதன் உள் நிலையைக் காண்பதற்கு வந்துள்ளான். எனவே உள்நிலையில் கதை, கட்டுக்கோப்பு, வடிவம், பாத்திரப் படைப்பு இவைகளில்லாமல் (இவை புறயதார்த்தத்தை எழுதிய காலத்தவை) படைப்புக்கள் புனையப் பெறவேண்டும்" என்று இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டு நகுலன் "நினைவுப் பாதை"யை எழுதியுள்ளார். ஒவ்வொரு கொள்கையும் இலக்கியத்தில் நுழையும்போது ஒருவிதப் புதுமையை ஏற்படுத்தியுள்ளது. நகுலன் நடையும் புதுவகையான தமிழுக்கு அணி செய்கிறது. ஆனுல் நாவல் அமைப்பு அறுபட்டுப் போய்விடுகிறது. இது தன்நிலை, புறநிலை இரண்டையும் நோக்கி, புறவயமான உந்துதல்களே அகவயமான மனநிலையை ஏற்படுத்துகிறது என்னும் யதார்த்த நோக்கு இல்லாததால் ஏற்பட்டதாகும்.

பொருளாதார ஒரு வழி வளர்ச்சி நாடகத் துறையில் சாமுவெல் பெக்கெட் போன்றவர்களை மேல் நாட்டில் 'அப்ஸர்ட் தியேட்டர்' என்னும் நாடக அரங்கை நாடச் செய்தது. வாழ்க்கையின் கேவலங்களை அந்நாடகங்கள் பெரிதுபடுத்தி மனிதனின் சிறுமை வளர்த்திக் காட்டப்பெற்றது. தமிழில் நாடகம் டென்னஸி வில்லியம்ஸ், சாமுவெல் பெக்கட் ஐயனஸ்கோ போன்ருேர்க்குக் கடன் பெற்றுத் தோன்ற ஆரம்பித்துள்ளது. நாடகம் இல்லாத தமிழ் என்ற அவச்சொல் இல்லாமல் செய்ய நாடகம் வளர்க்கப்பெற வேண்டும். விழிப்புப் பெற்ற வாசகர்களும், பத்திரிகைகளும் இன்று வசதி செய்துதரும். ந. முத்துசாமியின் நாற்காலிக்காரர் இந்திரா பார்த்தசாரதியின் மழை,

போர்வை போர்த்திய உடல்கள் (இவை இரண்டும் நடிக்கவும் பெறுகின்றன.) கால யந்திரம், போன்றனவும், அம்மையின் பயங்களும் பாரவியின் சில நாடகங்களும் குறிப்பிடத்தக்கதாகப் புது முறையில் தமிழர்களுக்கு வாசிக்கக் கிடைத்துள்ளன. கன்னடம், மலையாளம் போன்ற தென்னிந்திய மொழிகள் புது நாடகத் துறையிலும் நமக்கு முன்னோடியாய் போய்க்கொண்டிருக்கின்றன.

சிறு கதையைப் பொறுத்த வரையில் புதுவித பாணிகள் ந. முத்துசாமியால் கையாளப்பட்டுள்ளன. அவருடைய இழப்பு, வெட்கம், ஆகிய கதைகள் இன்றைய குழப்ப மனநிலையைப் படம் பிடித்துள்ளன. ஆனால் இவ்விதக் கதைகளில ஒலிக்கும் மனிதனைக் கொச்சைப் படுத்தும் பண்பு (De-humanisation) தவறான போக்கையே காட்டுகிறது. மிகச் சாதாரணமாய் சொல்லல் என்னும் பண்பு சிறு கதையில் தோன்றியுள்ளது. ராசேந்திர சோழன், தொடங்கி, உதயம், கணையாழி பத்திரிகைகளில் எழுதுவோர் இப்பண்பையே கதை வெளியீட்டு உத்திக்கு நன்கு பயன்படுத்தி வருகின்றனர். இது வளர்க்கப்படவேண்டிய பண்பு. அசோகமித்திரன், பூமணி, போன்றோர் நுண்மையான முற்போக்குக் கதைகளைப் படைக்கின்றனர். மு. தளையசிங்கம் என்ற அண்மையில் காலமான எழுத்தாளரைத் தமிழ் நாட்டு வாசகர்களும் மற்றவர்களும் போதிய முறையில் அறிந்துகொள்ளவில்லை என்று இங்கே கூற வேண்டும். இவர் எழுதிய 'புதுயுகம் பிறக்கிறது' என்ற சிறு கதைத் தொகுப்பு இவரது புதுவித இலக்கிய நோக்கைப் பறைசாற்றுகிறது. இவர் கதை வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காது கருத்து நிலையை உள்மனரீதியில் தத்துவமாய் கூறி, சைவ சித்தாந்த விளக்கம் கூறுகிறார். இவரை நாம் ஏற்றுக்கொள்ளாவிடினும் இவரது முயற்சியை அவசியம் அறிமுகப்படுத்திக் கொள்ளவேண்டும். புதுக்கவிதை முற்போக்கு கவிதை வரலாற்றில் ஓர் திருப்பத்தை ஏற்படுத்தியிருப்பதுபோல, உதயம் போன்ற பத்திரிகைகளில் வரும் கதைகள் இதுவரை எழுதப்பட்ட கதை இலக்கணத்தினின்று விலகி, முற்போக்குக் கதைகளை நுண்மையாகவும் ஆழமாகவும் பார்த்துப் படைக்கப்படுகின்றன.

S. CARLOSE
M.A., Dip. in Journalism
Lecturer,
Christ College
Bangalore-560029

தமிழில் எதிர்ச் சொற்கள்

கலாநிதி ச. தனஞ்சயராசசிங்கம்

பொதுக் குறிப்புக்கள்

அமைப்பு மொழியியலுக்கு அடிக்கல் நாட்டிய பேடினண்ட் சூசையர் என்னும் மொழி வல்லுநர் மொழியை எதிர்ப்புகள் அடங்கிய அமைப்பு என வருணித்துள்ளார். அமைப்பு மொழியியலின் உட்பிரிவுகளில் அமைப்புப் பொருளியலும் ஒன்ருகும். பழைய மரபில் பொருளியல் ஆய்வுகளை நடத்திய மொழி வல்லுநர் எதிர்ச் சொற்கள் உணர்த்தும் எதிர்ப் பொருள்களின் நுண்ணிய வேறுபாடுகளை வகைப்படுத்தாது யாவற்றினையும் ஒரே வகையாகக் கருதினர். அமைப்புப் பொருளியல் நோக்கில் எதிர்ச் சொற்களை ஆராய்ந்து ஆராய்ச்சியாளர் இவற்றின் எதிர்ப்புத் தன்மை அடிப்படையில் பல்வகைப் பாகுபாடுகளை ஏற்படுத்தினர். இவர்கள் வகுத்த வழியில் தமிழில் சிறப்பாக என் பேச்சில் வழங்கும் எதிர்ச் சொற்களை வகைப்படுத்தி அமைப்புப் பொருளியல் நோக்கில் அவற்றினை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

இயற்கையான மொழிகள் ஒவ்வொன்றிலும் ஏராளமான எதிர்ச் சொற்கள் வழங்குவதற்குக் காரணம் மக்கள் தம் அனுபவத்தையும் மதிப்பிடும் முறையினையும் பல எதிர்த் துருவங்களில் கருதும் பொதுவான இயல்பே. மொழியின் பொருள் ஆய்விற்கு முக்கியமான கொள்கைகளில் இரு கூறுபடுத்தி நோக்கும் முறை ஒன்ருகும். எதிர்ச் சொற்கள் பொதுவாக மொழியில் இணைபதங்களாய் வழங்கும்.

எதிர்க்கும் முறை

எதிர்ப் பொருளை உணர்த்தும் இணை பதங்களில் ஒன்று மற்றையதை முற்ருகப் பொருளில் எதிர்ப்பதில்லை. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயல்புகளில் பொதப்பட விளங்கும் இரு பதங்களே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயல்புகளில் எதிர்ப்பைப் புலப்படுத்துகின்றன.

உதாரணங்கள் :	பொது இயல்பு
கறுப்பு : வெள்ளை	நிறம்
அண்ணை : தம்பி	வயது
தண்ணி : வென்னி	நீர்

எதிர்ச் சொற்கள் தம் பொருத்தம் இன்மையால் குறிக்கும் எதிர்ப்பையும் (அதாவது பொது இயல்பில் குறிப்பிட்ட ஓர் அளவில் எதிர்ப்பையும் எதிர்நிலைச் சதுரப் பட மூலம் போலிங்கர் வருமாறு விளக்குகிறார்.

பெரிது	அளவு	சிறிது

பெரிசு என்னும் பதம் சிறிசு என்னும் பதத்தோடு அளவு என்னும் இயல்பில் ஓரளவு பொதுப்பட்டிருப்பினும் அதே அளவுநிலைகளில் இருபதமும் ஒன்றை ஒன்று எதிர்த்து வேறுபடுகின்றன. சிறிசு அடங்கிய வட்டத்தில் பெரிசு இணையும்; பெரிசு அடங்கிய வட்டத்தில் சிறிசு இணையும் அடக்க முடியாது. அளவு என்ற பொது இயல்பு சிறிசு அடங்கிய வட்டத்திலோ பெரிசு அடங்கிய வட்டத்திலோ தனியே அடக்கப்படாது இரண்டிற்கும் வெளியில் நின்று அவற்றின் எதிர்ப்புக்கு மையமாகும் பொது இயல்பினைச் சுட்டுகிறது. இவ்வாறு நாம் கறுப்பு : வெள்ளை, அண்ணன் : தம்பி முதலிய இணை பதங்களில் எதிர்ப்புக்கு அமையும் பொது இயல்பினை விளங்கிக் கொள்ளலாம். அண்ணை : தம்பி என்ற எதிர்ப்பில் வயது, ஆண்பால் ஆகிய இரு பொது இயல்புகள் உளவெனினும், வயது என்ற இயல்பின் ஒரு குறிப்பிட்ட நிலையில் மட்டுமே எதிர்ப்பு ஏற்படுகின்றது.

இத்தகைய எதிர்ச் சொற்கள் யாவும் இணை பதங்களாய் இரு எதிர்நிலைப் பொருள்களை மட்டும் தர வல்லன அல்ல. இவற்றுட் சில தம் இரு எதிர்நிலைப் பொருளுக்கும் இடைப்பட்ட நிலைப் பொருளைப் புலப்படுத்தும் மூன்ருவது பதத்துடன் சேர்ந்து தம் எதிர்ப்பில் ஒரு நடு நிலையினை உணர்த்த வல்லன. முன்பு விளக்கிய "பெரிசு" சிறிசு என்ற எதிர்ப்பு நிலைக்கு இடைப்பட்ட நிலை நடுத்தரம் ஆகும். காலம், இடம் ஆகிய நோக்குகளில் பேச்சுத் தமிழில் வழங்கும் மூப்பத எதிர்ச்சொற்களில் சிலவற்றினைக் கீழே தருவாம்.

	முதல்	இடை	கடைசி
இடம் :	நுனி	நடு	அடி
	மேல்	நடு	கீழ்
	பிட்டி	சமம்	பள்ளம்
காலம் :	முந்தி	இப்ப	பிந்தி
	நேற்றைக்கு	இண்டைக்கு	நாளைக்கு

பொருளில் முரண்பட்டு எதிர்ப்பைக் குறிக்கும் சொற்கள் தனிச் சொல் வடிவமாய் மட்டுமின்றிப் பல சொற்களையும் உருபன்களையும் கொண்ட அமைப்பில் எதிர்ப்பினை உணர்த்துவனவாய் இருப்பதும் உண்டு. "பெரிசு அல்ல" என்ற வழக்கு "சிறிசு" அல்லது "நடுத்தரம்" என்ற பொருளைக் குறிப்பாக உணர்த்துகிறது. அவ்வாறே "நடுத்தரம் அல்ல" என்பது "பெரிசு" அல்லது "சிறிசு" என ஒன்றினை நிச்சயிக்க உதவும் பொருளைத் தருகிறது. "மிச்சம் பெரிசு, அதிகம் பெரிசு, ஆகப் பெரிசு, மிச்சம் சிறிசு, அதிகம் சிறிசு, ஆகச் சிறிசு, ஏறக்குறையப் பெரிசு: ஏறக்குறையச் சிறிசு" முதலிய வழக்குகள் முரண்பாட்டின் (எதிர்ப்பின்) பல்வகை நிலைகளை நன்கு விளக்குகின்றன. "வைத்திருத்தல்: விற்றல்" என்ற எதிர் வழக்கில் ஒரு பொருளில் ஒருவர்க்கு உள்ள அதிகார உரிமை ஆகிய பொது இயல்பு புலப்படுகிறது. வாழ்க்கையில் ஒருவர் "நான் அதை வைத்திருக்கவோ, விற்கவோ மாட்டேன்" என்று பொதுவாகக் கூறுகிறார். தருக்க ரீதியாகவும் இக் கூற்று முரணானதாகும். ஒன்றில் "நான் அதை வைத்திருக்க மாட்டேன்" அல்லது "நான் அதை விற்க மாட்டேன்" என்று கூறவே சந்தர்ப்பங்கள் அடிக்கடி எழும். ஆனால், "நான் அதை இன்னாருக்குக் குடுக்கப் போறேன்" என்று கூறும் நிலையில் "நான் அதை வைத்திருக்கவோ விற்கவோ மாட்டேன்" என்ற முரண்பட்ட கூற்றில் வழங்கும் "வைத்திருக்கமாட்டேன்: விற்க மாட்டேன்" என்ற எதிர்ப்பு நிலை "குடுக்கப் போறன்" என்ற நிலைப் பொருளுடன் புதிய எதிர்ப்பினைத் தோற்றுவிக்கிறது.

எதிர்ச் சொற்பாகுபாடு

அமைப்புப் பொருளியலார் தரப்படுத்தக் கூடிய வகையில் எதிர்ப்புப் பொருளை உணர்த்தும் சொற்களையே (antonyms) என வழங்குவர். ஏனையவற்றை எச்சப் பொருளீடு செய்வன (Complementary terms) என்றும் மறுதலைப் பொருள் தருவன (Converse terms) என்றும் வழங்குவர்.

எச்சப் பொருளீடு செய்வன :

பொருத்தமின்மை காரணமாக இணை பதங்கள் தம் விசேட பண்பில் ஒன்று மற்றையதை எதிர்த்து நிற்கும் தன்மை இரு வகைத்தாகும்.

1. ஒன்று உணர்த்தும் இன்மைப் பொருள் மற்றையதன் உண்மை ஆகிய பொருளை உட்கிடையாகச் சுட்டும், அதாவது ஒன்றை (பொருளை) மறுத்துக் கூறல் மற்றையதை வற்புறுத்திக் கூறல ஆகும்.

2. ஒன்றை உண்டு எனல் மற்றையதை இல்லை எனல் ஆகும். அதாவது ஒன்றனை வற்புறுத்திக் கூறல் மற்றையதினை மறுத்துக் கூறல் ஆகும்.

உதாரணங்கள்

ஆண் : பெண்	காய் : பழம்
நன்மை : தீமை	வெய்யில் : நிழல்
சரி : பிழை	விருப்பு : வெறுப்பு
மொத்தம் : மெல்லிசு	உயர்வு : தாழ்வு

"அது ஆண் அல்ல," என்று நாம் கூறும் போது இக் கூற்று மூலம் "அது பெண்" என்ற பொருளை உட்கிடையாய் வற்புறுத்துகின்றோம். "அது பெண்" என்று சொல்லும் போது (வலியுறுத்தும் போது) "அது ஆண் அல்ல" என்ற மறுப்புப் பொருளை உட்கிடையாய் உணர்த்துகிறோம்.

ஒன்றுக்கொன்று பொருளில் பொருந்தாத சொற்களில் ஒரு சொல்லின் பொருள் மறுப்பு ஏனைய சொற்களின் பொருள் உண்மையை உட்கிடையாய் உணர்த்தும் தன்மையைக் காணலாம். "அதுகார் அல்ல" எனின் "அது லொறி அல்லது பஸ் அல்லது வான் அல்லது வண்டில்..." எனத் தனித்தனியே கார் என்ற சொல்லின் பொருளை எதிர்க்கக் கூடிய கலைச் சொற்கள் யாவற்றின் பொருளையும் உட்கிடையாகத் தரவல்ல ஆற்றல் உடையது.

ஒன்றுக்கொன்று பொருளில் பொருந்தாத சொற்களில் ஒரு சொல்லின் பொருளை வலியுறுத்தல் ஏனைய பொருளில் பொருந்தாத சொற்களின் பொருளைத் தனித்தனியே மறுக்கும் ஆற்றல் வாய்ந்தன. "ஒன்று" என்னும் எண்ணுப் பெயர் வழக்கு, இரண்டு, மூன்று" முதலிய ஏனைய எண்ணுப் பெயர்கள் உணர்த்தும் பொருளினைத் தனித்தனியே மறுக்கும் தன்மையது.

தம் எதிர்ப்பு நிலையில் தரம் காட்டக்கூடிய எதிர்ச் சொற்களே அன்ரொனிம் என்ற பாகுபாட்டில் அடங்கும். "பெரிசு, சிறிசு அதிகம் கொஞ்சம்" முதலிய வழக்குகள் ஒப்புமைக்குப் பெரிதும் பயன் படுத்தப்படுகின்றன. எச்சப் பொருளீடு செய்யும் எதிர்ச் சொல்லிற்கும் அன்ரொனிம் என்ற கூறுபாட்டில் அடங்கும் எதிர்ச் சொல்லிற்கும் உள்ள வேறுபாடு வருமாறு:

எச்சப் பொருளீடு செய்யும் எதிர்ச் சொல் (1) ஒன்றை இல்லை என்று மறுத்துக் கூறல் மற்றையதை உண்டு எனக் குறிப்பாக வலியுறுத்தல். (2) இல்லை என மறுத்துக் கூறல் ஆகிய தன்மையை உடையது.

அன்ரொனிம் என்னும் கூறுபாட்டில் அடங்கும் எதிர்ச் சொல் மேலே இரண்டாவதாகக் கூறப்பட்ட ஒன்றை உண்டு என வலியுறுத்தல் மற்றையதை இல்லை என மறுத்துக்

கூறல் ஆகிய ஒரு தன்மையை மட்டும் உடையது கலைமகிழ்நன் நல்லவர் என்னும் போது, கலைமகிழ்நன் கெட்டவர் என்ற பொருள் மறுக்கப்படுகிறது. ஆனால் கலை மகிழ்நன் நல்லவர் அல்ல என்றால் அக் கூற்று மூலம் கலை மகிழ்நன் கெட்டவர் என்ற பொருள் வலியுறுத்தப்படமாட்டாது.

பொருளில் தரப்படுத்தக் கூடிய எதிர்ச் சொற்களை குறிப்பு ஒப்புமை அன்ரொனிம் வெளிப்படை ஒப்புமை அன்ரொனிம் என இரு வகையாகப் பிரிக்கலாம். வெளிப்படை ஒப்புமை அன்ரொனிம் மேல் வரும் ஈரியல்புகளைக் கொண்டது. (1) இரு பொருள்கள் ஒரு தன்மை குறித்து அத்தன்மை ஒன்றில் மற்றை யதை விடக் கூடிய அளவில் இருப்பதாகக் காட்டல்.

உதாரணம்: எங்கட நாய் உங்கட நாயை விடப் பெரிசு.

(2) ஒரே பொருளின் இரு நிலைகள் தன்மையொன்று குறித்து ஒப்பிடப்படல்.

உதாரணம்: எங்கட நாய் முன்னிருந்ததை விடப் பெரிசு.

இரு வகை வெளிப்படை ஒப்புமை உதா ரணங்களையும் ஒரே வாக்கியத்தில் வருமாறு சேர்த்து அமைக்கலாம்.

உதாரணம்: எங்கட நாய் உங்கட நாய் முன்னிருந்ததை விடப் பெரிசு.

மேலே காட்டிய உதாரணத்தில் (1) எங்கட நாய் பெரிசு (2) உங்கடநாய் பெரிசு ஆகிய இரு வாக்கியங்கள் உள. உபமேயமாகிய எங்கட நாய், உபமானமாகிய உங்கட நாய் என்பதுடன் விட என்னும் தரம் காட்டும் உருபினாலும் 'ஐ' என்னும் உருபினாலும் பெருமை என்னும் பொருளில் எதிர்ப்பைக் காட்டுகிறது. ஆனால, எங்கட நாய், என்ற பெயர்த் தொடர் (NP) உங்கடநாய் என்ற பெயர்த் தொடருடன் ஒத்த தன்று.

குறிப்பு ஒப்புமை எதிர்ச் சொற்களில் ஒன்றனை மறுத்துக் கூறல் மற்றையதைக் குறிப்பாக வலியுறுத்தாது. எங்கட நாய் பெரிசு அல்ல, என்னுங் கூற்று மூலம் எங்கட நாய் சிறிசு என்பது பெறப்படமாட்டாது. ஆயினும், எங்கடநாய் பெரிசு, என்னும்போது எங்கட நாய் சிறிசு அல்ல என்னும பொருள் குறிப்பாக வலியுறுத்தப்படுகிறது.

சின்னன் பெரிசு, கொஞ்சம் அதிகம், சில பல முதலிய எதிர் வழக்குகளில் ஒப்புமை குறிப்பாகவே புலப்படுத்தப்படுகின்றன, அவை ஒரு பொருளின் தன்மையினை முற்றாகத் தரப்படுத்தி உணர உதவுவன, அல்ல. நல்லது கூடாது முதலிய வழக்குகள் தனிப்பட்ட எதிர்ப்புத் தன்மைகளைச் சுட்டுவன அல்ல. உண்மையில் அவை பத மூலம் குறிப்பாக உள்ள அளவையினால் தரங்காண உதவும் உத்திகளாம்.

"அந்தச் சிறிய புலி ஒரு பெரிய விலங்கு". என்னும் போது, அக்கூற்று சொற்பொருளியல் விளக்க நோக்கில் முரண்பட்டதாக அமைய விலலை. தனிப்பட்டமுறையில் ஒரு புலியின் அள வுத் தரத்தினை மதிப்பிடும் முறை பொதுப்பட விலங்கு இனத்தின அளவுத் தரங் கொண்டு மதிப்பிடும் முறையோடு ஒத்ததாயிருக்கத் தேவையில்லை. ஒரு புலியை ஏனைய புலி களுடன் ஒப்பிடும்போது, அது சிறிதாக இருக்கலாம். ஆனால் பொதுவாகப் பிராணி களின் அளவுத தரத்தினை நோக்கும்போது, அச் சிறிய புலியும் ஒரு பெரிய விலங்காகக் கணிக்கப்படலாம்.

மறுதலைப் பொருள்

எதிர்ச் சொற்களின் பாகுபாடுகளில் ஒன்று கொன்வேஸ்னஸ் என்னும் மறுதலைப் பொருள் பொருந்தும் தன்மையாகும். குடுக்கல்: வாங்கல், தேப்பன்: மேன், கொள்வனவு: விற் பனவு முதலியன இவ்வகை எதிர்ச் சொற் களுக்கு உதாரணங்களாம். கந்தையா பாலா வுககு விற்றான் என்ற கூற்று பாலா கந்தையா விடம் வாங்கினான் என்ற மறுதலைக் கூற்றைக் குறிப்பாக உணர்த்துகிறது. வேலு பாலாவை விட உயரம் என்பது பாலா வேலுவை விடக் குள்ளம் என்பதைக் குறிப்பாக உணர்த்து கிறது.

"கந்தையா பாலாவின் கூட்டாளி" என்னும்போது, "பாலா கந்தையாவின் கூட்டாளி" என்ற ஒரு முக நோக்குப் பொருளைப் பெற லாம். ஆனால், "கந்தையா விமலாவின்ர புருஷன்" என்ற கூற்றிலிருந்து மறுதலைப் பொருளாக "விமலா கந்தையாவின் புருஷன்" எனத் துணிய முடியாது.

சில சொற்கள் மறுதலைப் பொருள் உணர்த்தும் சொற்களுடன் ஒரு வகையில் தொடர்புடையன. "செல்வா கனகுவைக் கேட்டார்" எனின் "கனகு செல்வாவிற்கு மறு மொழி சொன்னார்" என்பதை எதிர்பார்க்க லாமே ஒழிய அதனைக் குறிப்பான கருத்தாக முன்னைய கூற்றிலிருந்து பெற முடியாது.

கனகு மறுமொழி சொன்னார் என்பதிலிருந்து செல்வா கனகுவைக் கேட்டார் என்ற முன்னைய கூற்றினை உய்த்துணரலாம்.

எதிர்ப்பு நிலை அழிவு

"அது எந்த அளவு பெரிசு"? என்ற ஐயவினாவில் வினவப்படும் பொருள் பெரிசாக இல்லாமல் சிறிசாகவும் இருக்கலாம். "அது பெரிசோ சிறிசோ" என்ற வினாவிற்குச் சமனாக இவ்வினாவினை அச் சந்தர்ப்பத்தில் கருதலாம். இத்தகைய வினாக்களில் சிறிசு பெரிசு என்ற எதிர்ப்புநிலை அழிந்து விடுகிறது. "அகலம்: ஒடுக்கம்", என்ற எதிர்ப்பு நிலை ஒருவன் "அந்த மேசையின் அகலம்" என்ன? என்னும்போது அழிந்து விடுகிறது. ஒடுக்கம் அல்லது அகலம் என ஓர் எதிர்ச்சொல்லையே ஐயமின்றித் துணிந்து கூறும்போது எதிர்ப்பு நிலைக்குச் சந்தர்ப்பம் இல்லை.

Dr S. Thananjayarajasingam,
M.Litt. (Anm.); Ph.D (Edin.)
Senior Lecturer, University of Ceylon,
Peradeniya Campus
Sri Lanka

இக் கட்டுரைக்கு உதவிய துணை நூல்கள்

1 Lyons, J *Structural Semantics*, Oxford: Blackwell, 1963

2 Lyons, J. *Introduction to Theoretical Linguistics*, Cambridge University Press, 1968;

3 Balinger, D.L., *Aspects of Language*, New York: Harcourt, Brace & World. Inc. 1968.

டாக்டர் திருமதி தே. தியாகராசன்

உருக்காட்சி என்ற சொல் ஆங்கிலத்தில் (Imagery) என்ற சொல்லிற்குத் தமிழாக்க மாகும். ஐம்புலன்களின் வாயிலாக வந்த புலனனுபவத்தின் வெளிப்பாடுதான் கவிதை யில் உருக்காட்சி. அது ஒரு வகையில் உளக் காட்சி அல்லது மனக்காட்சி (Mental Picture) ஆகும். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன்கள் தன் மனத்தை உட்பாடு (Impress) செய்வதன் விளைவாகக் கவிஞன் சில அனுபவிக்கிறான். தன் பட்டறிவைக் கற்போன் உளத்தில் அவன் உண்டாக்கு கிறான். அதற்குப் பயன்படும் கருவி உருக் காட்சி.

Bliss Perry இன் கருத்துப்படி கவிதை உருக் காட்சியாம், உருக் காட்சி புலனுணர்வு. (sensation). அவர் கவிதையின் தொழில், பொருள்களைப் பற்றிய அறிவைத் தருதலை விடப் பொருட்களைப் பற்றிய உணர்ச்சியை அறிவித்தலிலே அக்கறை காட்டுவது என்கிறார். கற்போன் உருக் காட்சிகளை உயிர்க்களை வாய்ந்ததாகப் பெற முயல வேண்டும். ஏனெனில் உருக்காட்சி வெறும் வார்த்தைகளால் உண்டாக்கப்படுவதில்லை. அவை பச்சை உணர்வு நிலவரம் (naked sense), புறத்தூண்டுதல் (stimules) ஆகும்[1]

உருக்காட்சிக் கவிஞர்களின் தந்தை எனப்படும் T. E. Hulme கூற்றுப்படி கவிதை என்பது மறுமொழி (Counter-language) அல்ல. கண்ணுக்குப் புலனாகும் பருப் பொரு ளாகும்.

கவிதைகளில் உருவங்கள் அல்லது படிமங்கள் (images) வெறும் புனைவொப் பனைக்கு மட்டுமல்ல. உள்ளுணர்வால் அறியப்படும் மொழி (Intuitive Language) யின் பிழிவு ஆகும். [2]

பலர் உருக்காட்சி என்பது பெரும்பாலும் காட்சி சார்ந்தது (Visual) என்பர். அது தவறு. ஏனெனில் எல்லாக் கவிஞர்களும் அல்லது எல்லாப் படிப்பாளரும் உருவாக்கிக் காண்பாளர்கள் அல்லர். கவிதை உரை நடையைவிட அதிகம் புலனுணர்வை (sensuous) அடிப்படையாகக் கொண்டது; ஏனெனில் அது வடிவில் முழுமை பெறக் குறிக்கோள் உடையது, கவிதைக்குக் கருத் துப் படிவம்(Concept)மனக்கிளர்ச்சி(emotion) புலனுணர்வு (sense) இவை முக்கியம். கவிதை உணர்வுக்கிளர்ச்சி (sensation) மனக் கிளர்ச்சி (emotion) அறிவாற்றல் (intellecet) இவை கொண்டிருக்க வேண்டும்.

இரு பொருட்களிடையே ஒப்புடைமை (similarity) யின் ஏதோ ஒரு ஆக்கக்கூறு (element) இருந்து இந்தத் தொடர்பு காணப் படும்படி அவற்றை ஒருங்கிணைக்கும் இட மெல்லாம் உருக்காட்சி இருக்கிறது.

கவிதை உருக்காட்சியை விளக்க ஒப் புமைக் கோட்பாடு (Principle of Comparison) தன்னளவில் மட்டும் போதாது. கவிதை உருக்காட்சி சொற்களில் கூறப்பட்டுள்ள மனக்கிளர்ச்சியின் தீவிரத்தை மெய்ப்பிக் கிறது. மனக்கிளர்ச்சி, சொற்களில் செறிந் துள்ள ஆழ்ந்த பொருளுக்குரிய காரணத்தை விளக்குகிறது. அது கவிதையில் ஒவ்வொரு சொல்லுக்கும் வேகத்தையும் முக்கியத்தை யும் கூட்டுகிறது. நேர்த்தியான உருக்காட்சி பல்வேறு பொருட்களுடன் அமைந்த வெளிக் கொணர்வு (evocation) நிறைந்தது. மற்றவை மிகராக இருக்க சிறந்த உருக்காட்சி முக்கிய மான கருத்துக்கள், சிக்கலான உறவுகள், அனுபவத்தின் மிகப் பரந்த எல்லை இவற் றைத்தரும் என்கிறார் Fogle[3]

உணர்வு உருக்காட்சி ஒப்புமை உள்ள விடத்திலெல்லாம் இருக்க இடமுண்டு. உருவங்களின் புலன்சார்ந்த உள்ளடக்கம் (sensory Content) ஆளுக்கு ஆள் வேறு படுகிறது. ஒருவருக்கே அவரது புரியும் ஆற்றலுக்கேற்ப வெவ்வேறு வேளைகளில் வெவ்வேறு உருக்காட்சி கிடைக்கிறது. மேலும் ஒரு உருக்காட்சியை உண்டாக்க வல்ல ஒற்றைச் சொல் ஒன்றிற்கு மேற்பட்ட புலனுக்குரிய உருக்காட்சியை உண்டுபண்ண வல்லது.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு இப்போது உயிரோடுள்ள கவிஞர்கள்

சிலரின் கவிதைகளில் உள்ள உருக்காட்சிகளைக் காண்போம்.

காண்டல் உருக்காட்சி (Visual Imagery)

'அவள் முகம் அழகு ரோஜா'
கண்கள் கருநீலம்,
இதழ்கள் மாதுளை மொக்கு'[4]
'அறுதைப் பிணமாய், நிழல்
நீட்டிக் கிடந்தது,
யாரு அது?
என்னை மண்ணிலிட்ட
காரட்டுரோ?'[5]
'பன்னீர்ப் பூநிற நிலவே'[6]
'பானைக் கொம்பாய்க்
குருந்துவிடும் வெண்ணிலவு'[7]
'பவளம் காக்கும்
முல்லைக் காடுடையாளே'[8]
'அவரைப்பூப்போல் சிவந்தமேனி'[9]
'பச்சை நிறச் சேலையிலைக் கட்டிக் கோவைப்
பழச்சிவப்பாம் இதழில் நகை காட்டி[10]

முதலியன இவ்வகைக்குச் சான்றுகள்

கேட்டல் உருக்காட்சி (Auditory Imagery)

'குளிர் நதியின் சங்கீதம்'[11]
'ஆவியின் நாக்கில்
மௌனத்தின் குரலில் அவள் பாடுகிறாள்'[12]
'மின்னல் நரம்பு மேகத்தில்—காற்று
மீட்டும் மழைப் பாடலில்
கண்ணீர் ராகம் பாய்ச்சுவேன்'[13]
'ஊமை வெளிகளில் கானம் பொழிந்திட
உதட்டு வீணைகள் மீட்டுகிறோம்'[14]
'புகபுகமாய்
ஆட்டம் நிறுத்தி
அறியாத எனக்கும்'[15]
'ஒருநாள் முதல் மழைப்பாடல் ஒலித்தது
பாட்டுக் குயில்கள் ஊமையாயின
ஊமை ஆறுகள் பேசத் தொடங்கின[16]

முகர்வு உருக்காட்சி (Olfactory Imagery)

'காற்றினில் ஏற்றமதியாகும் நறுமணங்கள்'[17]
'பிச்சிப்பூ மணம் என்றும் குறைவதில்லை'[18]
'தாய்ப்பெண்ணோ முல்லைப்பூ
தனிமலடி தாழம்பூ'[19]
'டெரிலின் சட்டையின்
ஆவியை முகர்ந்தான்'[20]

ஊறுணர்வு உருக்காட்சி (Tactual Imagery)

'புலனைக் கலக்கும் பனிக் கூச்சம்'[21]
'நுண்மிர்ச் கனவு'[22]
'நெருப்புக் கண் கொண்டவரே
சுடும் கதிர் கோன் ஆனவரே'[23]
'செங்கதிர்க்குப் பேரழகு ஒளிநெருப்பு'[24]
'செந்தணல் நோய் போக்குகின்ற மருந்தே'[25]

சுவையுணர்வு உருக்காட்சி (gustatory Imagery)

'தேனைக் கனியில் ஊற்றிப் பருகியபின்'[26]
'பச்சரிசிச் சோறுக்குப் பாகற்காய்க் குழம்பு
வைத்தே'[27]
'அடிக்கரும் பென்று சொன்னான்'[28]

உயிரியக்கவியல் உருக்காட்சி (Organic Imagery)

பகல் மூச்சுவிடும் நேரம்'[29]
'என் உள்ளத்துள்
மயக்க நீச்சல் செய்கின்ற எண்ணங்கள் போல்'[30]

இயங்கியல் உருக்காட்சி

நெருக்குதல், பிழிதல், கசக்கல், பிசைதல், சிந்துதல் போன்ற அழித்தல், பாழாக்கல் தொடர்பான உருவங்கள் இவ்வகையாம்.

'காற்றுப் பட்டாலோ
சுருந்தழியும் கதறல்'[31]
'ஆடையைக் கிழித்தாலும்
தோலை என்ன செய்ய?...'[32]
'நெருக்கித் தள்ளிய கருமை
என்னை மென்று கொண்டிருந்தது'[33]
'அட! மழையோ
விடாமல்
நிலத்தின் மண்கதவைத்
"திறதிற" வென்று
தட்டியுடைத்துப்
பின் உள்பாய்ந்து
ஓயாமல் கற்பழிக்கும்'[34]
'எண்ணக் கிறு கிறுப்பில் ஏக்கச் சுழிப்புகளில்
கண்வளர்க்கும் மாயக் கனவுகளின் சந்திப்பில்
புண்பட்டுக் காதல் புயலில் அடிபட்டு
விண்மின்னல் பாடுபடும் வேதனையைப்
பாடுகிறேன்[35]
'துன்பமெனும் கடலுக்குள் வீழ்த்திவிட்டுத்
தோணி மட்டும் போனதெங்கே? எங்கே?,
எங்கே'?[36]
'பாசம் வாழ்வை அழிக்கிறது'[37]
'சோகம் என்னைத்
தாக்குவதற்கு வருகிறதே, ஆசை என்னும்
தணல்வேறு சுடுகிறதே, என்ன செய்வேன்!'[38]
'கோன் எங்கள் கோன் எங்கே? ஐயையோ இக்
கோளங்கள் எல்லாமே தூளாகட்டும்'[39]
'கதலிமரம் பழுத்திருந்த எங்கள் தோட்டம்;
கதவங்கள் நிறைந்திருந்த தோட்டம்; வேறு
புதரெல்லாம் வாழ்கின்றபோது சாவுப்
புயல் கொள்ளச் சாய்ந்தபுதுக்
கொடுமையைப்பார்!'[40]
பொங்குகின்ற கடலலையே உன்போல் எம்மைப்
பொங்கவைத்த கள்வன் யார்? வான வீட்டில்
தங்குகின்ற தேய்பிறையே, உன்போல் எங்கள்
தங்கத்தைத் தேய்த்தவன் யார்?'[41]

முதலியன இவ்வகைக்குச் சான்றுகள்.

ஒன்று நுகர்வுணர்வு உருக்காட்சி (synaesthetic Imagery)

இதில் மணம், நிறம், ஓசை முதலியன கரைந்துருகி தூரத்தில் மங்கும் எதிரொலி

போல் ஒன்றோடொன்று கலந்து ஒன்றாகி விடுவது இதன் தன்மை.

இருட்டினிலே நிம்மதியாய் உறங்கப் போனால்
　　இமைமூட மறுக்கிறது; மணக்கும் காதல்!
மருக்கொழுந்தே உன்நினைவு நெஞ்சமெல்லாம்
　　மணக்கிறது; இனிக்கிறது; அதனால் இங்கே
இருக்கிறது துயரிரவு எனக்கு மட்டும்;
　　இளைக்கிறது என்னுடம்பு; வான வீதி
கருக்கிறதா வெளுக்கிறதா என்று கூடக்
　　காண்பதற்குச் சக்தியில்லை; உறக்கமில்லை'[12]

இது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், இயங்கியல் அடிப்படையான உருக்காட்சிகள் பலவும் கலந்து ஒரு உருவம் அல்லது படிமத்தைக் கற்போன் பெறச் செய்கிறது. இதை Keats, shelly இவர்களது உருக் காட்சிகளோடு ஒப்பிடலாம்.[13]

காமராசனின் உவமைகள், உருவகங் கள் (metaphors) குறியீடுகள் (symbols) இவை பிறப்பித்துள்ள ஒன்று நுகர் உருக்காட்சி எழுத ஒண்ணா இன்பந் தருவதற்கு இன்னொரு சான்று பார்ப்போம்.

'காலை வெயிலிலோர் நிலவு வருகுது—மனக்
　　காதல் அணிந்திரு கால்கள் வருகுது;
சோலை மலருடன் வண்டு வருகுது—சிறு
　　தோளை அசைத்தொரு தூது வருகுது;
பேதை விழிகளின் கனவு வருகுது—மொழி
　　பேசத் தெரியாத மனது வருகுது;
ஆதி மனிதனின் ஆவிவருகுது—எடுத்(து)
　　ஆளமுடியாத உவமை வருகுது'[14]

இதில் நாம் மேலே கண்ட வகைகளையும் அதோடு இனி வகுக்கப்பட வேண்டிய உருக் காட்சிகளுள் கூட வருகின்றன. அவ் வளவேன்? 'சோலை மலருடன் வண்டு வருகுது' என்பதில் மட்டும் ஐம்புலன் அடிப் படையில் உருக்காட்சிகள், இவை சேர்ந்த ஒன்று நுகர்உருக்காட்சி இவை காணலாகும். மீதிக் கருத்துக்களையும் சொற்களையும் விளக் கின் இடம் போதாதென விடுக்கிறேன்.

இக்கால பிரெஞ்சுக் கவிஞர் Paul Reverdy "உருவம் அல்லது படிமம் மனத்தின் கலப்பற்ற படைப்பு. ஒரு படிமம் கவனத்திற் குரியதாயிருப்பது அது கொடுமையானதாக அல்லது நம்ப முடியாக் கற்பனைச் சார்ந்த (Fantastic) தாக இருப்பதால் அல்ல. ஆனால் எண்ண இயைபு (association of ideas) மிகச் சிறிதாகவும் சரிநிகராகவும் இருப்பதாலே" என்கிறார்[15]

இதற்கொரு சான்று.

'இங்கேநான் துடிக்கின்றேன்; ஆசைஆடு
　　இதயத்தை மேய்கிறது'[16]

இன்னும் உருக்காட்சி வகைகளில் பலப்பல உள. விரிவஞ்சி நிறுத்துகிறேன். கவிஞர்தம் உருக்காட்சி நம் உள்ளம் உருக்கும் காட்சியாம்.

டாக்டர் திருமதி தே. தியாகராசன்
எம். ஏ., பிஎச் டி.
முதுகலைத் தமிழ்ப் பேராசிரியர்
மேற்றிசை மொழித்துறைத் தலைவர்
டோக் பெருமாட்டி கல்லூரி
மதுரை

அடிக்குறிப்பு :

1 Bliss Perry, *A Study of Poetry* pp 45, 94, 95
2 Foglo, Richard Harter, *The Imagery of Keate and Shelley*, p. 5.
3 ,, ,, ,, P. 24.
4 வல்லிக்கண்ணன், புதுக் குரல் இல் 'மலரும் நெருப்பும்,' (சென்னை, 1962), பக். 84.
5 வைதீஸ்வரன், எஸ்., உதய நிழல், (சென்னை, 1970), பக். 3
6 காமராசன், நா , சூரியகாந்தியில் 'களம் நோக்கி', (சென்னை, 1971), பக். 2,
7 ,, ,, தாமரைமடல்', பக். 6.
8 ,, ,, 'இதம் பாடல்', பக் 14
9 ,, ,, 'ஏழைக் குரல்', பக்: 18.
10 இராஜேந்திரன், மீ., மூன்றும் ஆறும் 'கருப்பு' (சென்னை, 1967), பக். 32
11 காமராசன், நா. கறுப்பு மலர்கள் இல் 'நடைப்பிணங்கள்' (சென்னை, 1971). பக்: 15
12 ,, ,, 'அனாதைகள், பக்.: 13
13 ,, ,, 'சபதம்., பக்: 11.
14 சாகுல் அமீது, எஸ். கே. எஸ்., மன்னர் துரை சிங்கம் நினைவுக் கல்லூரி வெள்ளிவிழா மலர், 'வாலிப ஊர்வலம் வருகின்றோம்' (சிவகங்கை, 1972-73), பக். 58.
15 சுந்தரராசன், கி., மன்னர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரி வெள்ளிவிழா மலர், 'கடல் பேசுகிறது' (சிவகங்கை, 1972-73), பக் 121
16 காமராசன், நா., சூரியகாந்தியில் விடுகதை' பக் 45
17 ,, ,, 'களம் நோக்கி' பக் 3
18 ,, ,, 'உறக்கமில்லை', பக் 19
19 ,, கறுப்புமலர்கள் இல் 'காகிதப் பூக்கள்' பக் 5
20 ரவிச்சந்தர், எஸ்., கணையாழியில் 'யதார்த்தம்' ஏப்ரல் 1973, பக் 32

21 வைதீஸ்வரன், எஸ்., உதயநிழல், பக் 1.
22 ,, ,, இல் 'முட்கள்', பக் 30
23 காமராசன், நா., சூரியகாந்தியில் தாமரை மடல்', பக் 6
24 ,, ,, 'கடிதம் பக் 20
25 ,, ,, 'நிழல்' பக் 30
26 வைதீஸ்வரன், எஸ்., உதயநிழல் இல் 'அனுபவம்', பக் 28
27 காமராசன், நா., சூரியகாந்தியில் 'சோலைவழி போனாரோ', பக் 16
28 ,, ,, 'காதல் வினாவுகள்', பக் 25
29 ,, ,, 'உடல் மரணம்', பக் 11
30 ,, ,, 'இதம் பாடல்', பக் 13
31 வைதீஸ்வரன், எஸ்., உதய நிழல் இல் '(என்) அறைக் கதவு', பக் 13
32 ,, ,, 'ஞானக்கருமை', பக் 3
33 ,, ,, ,, ,,
34 ,, ,, 'விலை' பக் 9
35 காமராசன், நா., சூரியகாந்தியில் 'முதற் கவிதை', பக் 17
36 ,, ,, 'உறக்கமில்லை', பக் 28
37 ,, ,, 'கடிதம்', பக் 21
38 ,, கருப்புமலர்கள் இல் 'முதல் கவிதை', (பாவேந்தர் பாரதிதாசனை இழந்தபோது பாடியது) பக் 89-90
39 ,, ,, ,,
40 ,, ,, ,,
41 ,, ,, ,,
42 காமராசன், நா., சூரியகாந்தியில் 'உறக்கமில்லை', பக் 29
43 Shelley, 'Alastor, lines 537-9 etc
'Skylark' ,, 20-25
Keats 'While, like held weath, the stars draw in their panting fires'
44 காமராசன், நா., சூரியகாந்தியில் 'குழந்தை', பக் 49
45 Herbert Read, *Collected Essays in Literary Criticism*,, p. 99
46 காமராசன், நா., சூரியகாந்தியில் உறக்கமில்லை', பக் 26

ஆதாரம்

திருமதி தே. தியாகராசன், பிஎச்.டி. ஆய்வு நூல் 'Studies in Akanānūru'இல் 'உருக்காட்சி (Imagery) பற்றிய ஆய்வில் ஒரு பகுதி (அடிக் குறிப்புகள் உட்பட)'.

அனைத்தறன்

டாக்டர் வி. பி. தேவதத்தா

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே. ஆம்! உலகிலுறையும் மக்கள் எண்ணற்றவரே யாயினும், உலகம் என்றுரைக்கும்போது அதன்கண் வாழும் சான்றோரையே அது குறிக்கும். ஆனால் பரந்த இவ்வுலகில் உயர்ந்தோர் மட்டுமா உறைகின்றனர்? மாறுபட்டோரும் வாழ்கின்றனரன்றோ? வாழ்வது மட்டுமா? வளரவும் செய்கிறார்களன்றோ?

ஆழிசூழ் உலகில் அனைத்துயிர் மக்களும் வளமார்ந்த வாழ்க்கையை நடாத்தி நன்னெறியின்கண் நின்று, மேனிலையெய்த எத்தனையெத்தனை ஆன்றோர் பாடுபட்டிருக்கின்றனர்? எத்தனையெத்தனை தத்துவ ஞானிகளும் சான்றோர்களும் தகவாய்த் தம் ஞானவொளியை உலகுக்கு வழங்கி ஒளியூட்டியுள்ளார்கள். அப்படியும் இவ்வுலகம் எங்கோ விரைந்து ஓடுவானேன்? மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிவகை செய்தும் வண்ண முற வாழாமல் வாடுவதேன்? எண்ணிப் பார்க்க வேண்டுமன்றோ?

பிறவிகளுள் மிகச்சிறந்ததாகப் பாராட்டப் படுவது மனிதப் பிறவியே. அரிதரிது மானிடராய்ப் பிறந்தலரிது. தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பதாம் நல்லறிவினைப் பெற்றமையாலேயே இப்பெருமைக்கு இப்பிறவி உகந்ததாயிற்று; தகுதியாயிற்று. அறிவிருந்தும் ஆற்றலிருந்தும் அனைத்துயிரை அணைத்துச் செல்லும் ஆண்மையற்றோரை இவ்வுலகம் போற்றுமோ? நினைமின்.

வையகத்துள் வாழ்வாங்கு வாழவும், வளம் பெறவும் விழைவது மனித இயல்பு; உயிர்கள் இயல்பு. இன்ப ஆக்கமும் துன்ப நீக்கவும் அவர்தம் முயற்சியின் அடிப்படை நோக்கமாகும். அல்லவை போக்கி நல்லவை நாடிச் செயல் என்பது நாம் நினைப்பதுபோல் அவ்வளவு எளிமையாமோ? உயர்ந்தோர்-தாழ்ந்தோர், நல்லவர் - அல்லவர், அறவோர் - மறவோர், உரவோர் - கரவோர் அனைவரும் ஒருங்குறைவதே வையத்தின் இயற்கை; நியதி. தடுக்குமாறு எங்ஙனம்?

விழுமிய அறத்தால் வாழும் உயிர்கள் செழுமைபெற வேண்டுமென்ற தீராக்காத லால் இறவா நூல்கள் பல எழுதி வைத்துச் சென்றனர், ஆன்றவிந்தடங்கிய நெஞ்சினர். அன்பார்ந்த நெஞ்சும் அருளார்ந்த இதயமும் பிறர் நலத்துக்காகப் பாடுபடுவதில் வியப்பென்னை? இக் கோணத்தில் நோக்கும் போது நம் தமிழகமும் தமிழ்மொழியும் சற்றும் பின்தங்கி விடவில்லையென்பதைப் பெருமிதத்தோடு கூறிக் கொள்ளலாம்.

பொய்கையில் பூத்துக் குலுங்கும் மலர்களுள் செழுமையும் நலனும் பெற்றிலங்கும் செந்தாமரையன்ன செம்மை நூலாம் குறள் ஓங்கி நின்று உண்மை வழி நடாத்துகின்றது. வள்ளுவர் வாழ்ந்தவர்; வாழ்க்கையை அறிந்தவர்; வளமாகப் பிறர்வாழ வகை செய நினைந்தவர். நினைவும் விழைவும் வாளாவிருக்க விடுங்கொல்? சிந்தித்தார்; சிந்தனையின் வெளிப்பாடு குறட்பாக்களாயின; மலர்ந்தன; மணம் வீசின. குறளாசிரியரின் நெஞ்சத் தடாகத்தே மலர்ந்த குறட்பாக்களுக்கும் மணமகள் மெய்யில் மலர்ந்த மலர்களுக்கும் வேறுபாடு என்னை?

பூத்துக்குலுங்கி வண்ணத்தாலும் வகையாலும் வாழும் மாந்தர்தம் உள்ளத்தே உவகைத் தேனைப் பிளிற்றிடும் பூக்கள் பல கோடியும் ஒரு நாளில் அழிந்து படுபவை தானே? மென்மையும் நளினமும் எண்ணிப் பார்த்து மகிழும் கால எல்லைக்குள் கட்டுப் பட்டவைதானே? மலரும் நேரத்திற்கும் வாழும் நேரத்திற்கும் எல்லையுண்டன்றோ? தெய்வப்புலவரால் வளர்க்கப்பட்ட குறட் பாக்களெனும் மலர்கள் வாடாதன; மணம் குன்றாதன; மண்ணில் மறையாதன. எண்ணில் கோடி யாண்டுகள் நின்று நிலவி யாண்டும் மணம் பரப்பித் தன்னழகால் வண்ணத்தால் - வடிவால் தன்னருகழைத்து, ஈர்த்து, உயர்ந்த நெறி நடாத்தும் அற்புத அன்பு மலர்கள்; சாகா மலர்கள்; தன்னைப் பெற்றாரைப், பெற்றுணர்ந்தாரைப் இறவாமல் வாழவைக்கும் தெய்வீக ஆற்றல் அமைந்தவை. அதிகம் கூறுவானேன்? யாவரும் அறிந்த உண்மையன்றோ?

குறளாசிரியர் உலகுக்கு வழி காட்டினார்; அவர் தமிழகத்தில் தோன்றி தன்னேரிலாத்

தமிழில் அவ்வறநெறிகளை வகுத்துத் தந்தமை நாம் செய்த தவப்பேறு. அதனை அன்பார்ந்த அறிவார்ந்த உள்ளத்தோடு நுணுகி நோக்க வேண்டாவோ? உன்னிப்பார்க்கவும்.

வளர்ந்துவரும் அறிவியல் வளம்பல கூட்டுகின்றது. நாடுகள் பல நாடாவளத்தனவாக அமைந்து நன்னிலையடைந்துள்ளன. தத்தம் நாட்டாரேயன்றி மற்றோரும் மாட்சி பெற மகத்தான உதவியைச் செய்கின்றன. ஆயினும் நாடுகளுக்குள் தோன்றுகின்ற பிணி முற்றும் அகன்றது கொல்? அகலாமைக்குக் காரணம் என்னை? அதனை முற்றுமறிந்து, அறவே நீக்கி, ஆக்கம் பெறச் செய்வது அறிவுடையார் பண்பன்றோ? உடனடியாகச் செய்யவேண்டிய கடமையன்றோ?

துன்புறுத்தும் நோய்களும் தொல்லை படுத்தும் பிணிகளும் மனித சமுதாயம் தோன்றியபோதே தோன்றிவிட்டன. உடன்பிறந்தது என்பதற்காக உயிரைப் போக்கும் நோய்களைப் பேணும் பேதையரும் உண்டோ? செல்வச் செழிப்பில் - செறிவார்ந்த அறிவில் - நுணுகிச் செல்லும் அறிவியலில் தலை சிறந்து, அரியணையில் அமர்ந்து ஆட்சி செய்யும் அரசுகள் இன்று எந்நிலையில் உள்ளன? அடுத்த நாடு எப்போது தங்களைத் தாக்க வருமோவென அஞ்சும் நிலையிலன்றோ இருக்கின்றன? காரணம் என்னை? ஆய்ந்து பார்த்து நீக்க வேண்டாவா?

நோய் என்றால் நோய்தீர மருந்திருக்கும். பிணியென்றால் பிணி போக்க வழியிருக்கும். எண்ணிப் பார்த்துச் செய்ய வேண்டுமன்றோ? நோய்நாடி, நோய்முதல்நாடி மருந்தளிப்பது மாந்தர்தம் கடன். மண்ணிலுள்ளோர் மாண்பு; மனிதப் பண்பு. எம்மருந்து இன்றைய மனித சமுதாயத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் பிணியை நீக்கும்?

தனிப்பட்ட மனிதன் தன்னை வளமாக்கிக் கொண்டால் உலக முழுவதும் வளமாக்கி விடும்; வாழ்வாகிவிடும். உலகம் என்பது என்னை? பலநாடுகளின் சேர்க்கையன்றோ? தனி மரம் தோப்பாவதில்லை; தனி மனிதன் உலகமாகிவிடான். உலகம் என்று கூறும் போதெல்லாம் நம்மையுமறியாது நம்மை அதனுள் அடிப்படுத்திக் கொள்கிறோமன்றோ? நாமும் சேர்ந்த ஒன்றின் குறையைச் சுட்டிக் காட்டுவதில் பயன் என்னை? பயன் உண்டு கொல்? குறையினின்றும் நாம் நீங்கி, நீங்க வழியறியாது தவிக்கும் பேதை மக்களை அன்பெனும் ஆளுமைகொண்டு ஆட்படுத்தி வழி நடாத்துதல் செம்மை சார்ந்த உள்ளத்தின் கடனன்றோ?

குறளாசிரியர் உலகை நினைத்தார்; உய்யுமாறு அறியாமல் திசையறியாது தொல்லைபடும் மனித இனத்தின் மேல் தீராக்காதல் கொண்டு தேனினுமினிய மாமருந்தை குறட்பாவில் திணித்துத் தந்தார். உண்டு பயன் பெறுவது மானிடரின் கடமை; உடனடியான கடமை. கடமையைப் போற்றாதார் கயவராவரன்றோ? மனிதர்களின் உள்ளமறிந்து, அவர்தம் இதயநிலைக்கேற்ப அறங் கூறிச் செல்கிறார் அருளாசிரியராம் குறளாசிரியர். குன்றென ஓங்கி நிற்கிறது அவர்தம் செம்மையுளம்.

தனிப்பட்டவன் துறந்தும் மறந்தும் வாழ விரும்பினால் வாழலாம். மனத்தையடக்கி மாதவம் செய்தலென்பது சிலர்க்கே சாலும். மானிடர் அனைவரும் அதற்குத் தகுதியுடையாரல்லர். தவம் செய்தார்க்கே தவம் செய இயலும். எனவே இல்லறம், துறவறமெனப் பிரித்து அறத்தைக் கூறுவாராயினர். அவரவர் நிலைக்கேற்ப அறத்தைச் செய்யலாம். அவரவர் விரும்பிய வழியில் நின்று செம்மை பெறலாம்.

தனித்தவொருவன் செம்மைசால் திறத்தொடு அறம்துஞ்சும் நெஞ்சினனாய் ஆன்றவிந்த கொள்கையை உடையவனாய்த் தலைமைப் பதவியை ஏற்றால் அங்கு எல்லோரும் இன்பத்தையே அடைவர். அங்கு இல்லாதாரில்லை; இன்னாதாரில்லை. இருப்பனவும் வளர்வனவும் இனிமை; இனிமையே.

உலகத்தில் எல்லாம் நிலைபேறுடையனவா? நெருநல் உளனொருவன் இன்றில்லையென்ற பெருமையை உடையதன்றோ இம் மன்பதையுலகம். மாந்தர்தம் மாண்பும் குணநலனும்தானே ஈண்டு நின்று நிலை பெறும் தன்மையன. பூத்துக் குலுங்கும் பூவின் அழகையும் விஞ்சி நிற்கும் இளமை, குபேரனின் செல்வமும் குறைபட நிற்கும் குன்றாச் செல்வம் எல்லாமே அழியும் தன்மையன; மாறும் தன்மையன; நிலை பேறற்றன. பின் நிலைத்து நிற்பதெது?

சிலம்பை இசைத்த சேரன்தம்பி
'இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்வது ஒழியாது

'செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்!'

என அறவுரை வழங்குகின்றார். செல்லும் தேயத்துக்கு உறுதுணையாக நிற்பதெது? வினையின் வந்து வினைக்கு விளைவாயது உடம்பு. அத்தகைய உடம்பும் அழியும் தன்மையதே. உயிரைப் பிரித்து உடம்பைப் பயனற்ற தாக்கும் பணியைப் புரியும் காலனே கொடியவன்.

முதியோர் என்னான் இளையோர் என்னான்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப
அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்...
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோர் உண்டோ?

என மணிமேகலை வியப்புறுகிறது? கொடுந்தொழிலாளன் கொல்வதற்கு முன் நல்லறத்தை விரும்பச் சொல்கிறது மணிமேகலை. இன்னும் சற்றே விளக்க விழைந்த காப்பிய ஆசிரியன்

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது

என்கின்றார். விழுத்துணையாம் அறத்தினைச் செய்தல் நம் தலையாய கடனன்றோ?

அறம் என்றால் என்னை? அதன் சிறப்பென்னை? அதனைப் பெறுமாறு எங்ஙனம்? வாழ்ந்து வாழ்விக்குமாறு எங்ஙனம்? அறனெனப்படுவது வாய்மையா? கொல்லாமையா? எதுவென இயம்பலாம்? உள்ளத்தே ஈரத்தோடு உயிர்களின் துன்பம் கண்டிரங்கி, அதனை நீக்க விழைந்து முனைந்து நிற்கும் பண்பன்றோ அறம்? அவ்வறத்தின் அடிப்படைதான் அன்பு; அன்பின்றேல் அறமில்லை, அதன்வழி நிற்பனவே மற்றயவை. அன்பும் அறனுமாய் நிற்பவன் இறைவன். அவன் அன்புக்கடல்; அருட்கடல்; அறக்கடல்.

இறையுணர்வற்ற வாழ்க்கை சாரமற்ற, சுவையற்ற வாழ்க்கை; சூன்ய வாழ்க்கை. அவனில்தான் சத்துள்ள வாழ்வு மலர வேண்டும். அவன்தன் இடையறா நினைவே அதற்கு நல்லுரமாய் அமையும். அவன் நினைவின்றி வாழ்வதும் ஒரு வாழ்வாகுமா? வளமாகுமா? அறிமின்.

அறம் செய்தல் நன்று; ஏன்? விழுத்துணையென்பதால்; நிலைபேறு உடையதென்பதால்; அறமே அனைத்தும் பயக்குமென்பதால், அப்படியாயின் அதனைச் செய்யுமாறு எங்ஙனம்? ஒல்லும் வகையில் ஓவாது செய்தால் போதுமென்கிறார் குறளாசிரியர்.

மனித மனத்தின் இயல்பை நன்கறிந்தவர் அருளாசிரியர். எனவே எல்லையில் அன்போடும் ஆர்வத்தோடும் அனைத்துலக மக்களின் தன்மையை ஆய்ந்து பார்த்து அவரவர் ஏற்கும் வகையில் அறிவுரை வழங்குகின்றார். மனவியலை நன்கறிந்த பேரறிவாளன் மக்கள் தம் மனப்பக்குவமறிந்து ஏற்பார் மனம் ஏற்கும் வகையில் எளிதாக சொல்கின்றார். மனித வாழ்க்கையின் நோக்கமென்னை? குறிக்கோள் என்னை? வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வரம்பில் இன்பமுடைத்தாம் இறைத் தன்மையை அடைதலன்றோ? இறையுணர்வற்றோரும் இயற்கையை நம்புகின்றனரன்றோ? யாண்டும் நின்று நிலவும் அப்பெற்றியனை நம்ப மனமில்லாமற் போனாலும் நானிலத்தில் நல்ல வண்ணம் வாழத் துடிக்கிறார்களன்றோ? அத்தன்மைய மாந்தர்க்கு அறத்தின் சீர்மையை - ஆக்கத்தை அளவெடுத்துக் கூறுகிறார். மன்னுயிரெல்லாம் இன்பத்தை நாடி நிற்றல் இயல்பு. சிறப்பு வேண்டினும் செல்வம் வேண்டினும் இசை வேண்டினும் அறத்தால் பெறலாமென ஆற்றுப்படுத்துகிறார். பொன்றுங்கால் பொன்றாத்துணையாக நிற்கும் அறத்தினைச் செய்யத் தூண்டுகிறார். பொலிவு பெற்றதும் பொலிவு பெற வைப்பதும் அறமேயென ஆணித்தரமாகக் கூறி நம்மையெலாம் நடாத்திச் செல்கிறார்.

இடையறாது இயன்றவகையில் அறத்தினைச் செய்கவெனக்கூறும் அப்பெருமகனார் தனிமனிதனுக்கு முதலில் கூற முனைகிறார். காரணம் என் கொல்? தனிமனிதன் திருந்தினால் தரணி திருந்திவிடும் என்ற எண்ணமன்றோ?

உலகத்தார் அறியும் வகையில் ஆற்றும் அறச்செயல்கள் அனைத்தும் தகவுடையவன் எனப்பிறர் பாராட்ட வேண்டுமெனச் செய்வதாம் மற்ற பிறவும் மண்ணிலுள்ளோர் மனம் திறந்து பாராட்டவேயாம். உள்ளத்தின் அடித்தளத்தில் பிறர் தம்மைப் பாராட்ட வேண்டுமென விழைந்து நிற்பது இயல்பே. அது குற்றமன்று; குறையுமன்று. இயற்கையேயாம். ஆயின் அனைவராலும் இத்தன்மைய அறத்தைச் செய்ய முடியுங்கொல்?

முடியாதாயின் யாது செய்தல் வேண்டும்? அறம் செய்யுமாறென்னை?

> மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்தறன்
> ஆகுல நீர பிற

என அமைதிபடுத்துகிருர். ஆம்! மனத்தில் குற்றமில்லாமலிருப்பதே அறம்! மனமாசைத் துடைப்பதே அறம்! எண்ணுமின் நன்ருய். எத்துணை எளிமையாக அறத்திற்கு விளக்கம் தந்துவிட்டார்! ஓர்ந்து பார்மின்; தேர்ந்து தெளிமின்! அருமையானவற்றை எளிமையாகக் கூறுவதே ஆன்ருேர்தம் அருட்திறம் அதனைச் செயலாக்குதலென்பது எளிய மக்கட்கு எளிதாகுமா? மனமென்பது ஒரு சலனமுள்ள பெருங்கடல். கடலலையைத் தடுக்க முடியுங்கொல்? பொங்கிவரும்போது தாங்க முடியுங்கொல்? அடங்காப் பெருமனத்தின் சலனத்தைப் போக்கியும் நீக்கியும் மாசில்லாமல் மிளிரச் செய்தலே மாந்தர்தம் கடனும்.

மனத்தையடைந்து மாசுபடுத்தும் குற்றங்கள் யாவை? அவை தோன்றக் காரணமென்னை? அவைகளை நீக்குமாறு எங்ஙனம்? குற்றங்களை அறிந்தாலல்லவோ போக்கவியலும்? நீக்கப்படவேண்டிய அழுக்குகள் இவையென்பதையும் ஆய்ந்து கூறுகிருர் அன்பாசான். அதனையறிந்து அறவே நீக்க முற்படுவது நம் செயற்கடமையன்ருே? அறிந்தும் உணர்ந்தும் அகற்ருமலிருப்பின் தெளிந்த நல்லறிவினுலாய பயனென் கொல்? நினைமின்

> அழுக்கார அவா வெகுளி இன்னுசொல் நான்கும்
> இழுக்கா இயன்ற தறம்

சொல்லும், சொல்லின்வழி செயலும் நெஞ்சின் அடித்தளத்தில் தோன்றும் நினைவின் வெளிப்பாடுகளே.

அழுக்காறடைய காரணம் என்னை? பிறர் வளம் காணப் பொருமை; தனக்கில்லையே என்ற ஏக்கமுடைமை; தானும் அதனைப் பெறவேண்டுமென்ற விருப்ப முடைமை. தான் ஏங்கியவொன்று விழைந்த ஒன்று தனக்குக் கிடைக்காமல் பிறருக்குக் கிடைப்பதை நோக்கியவுடன் பேதைமனம் வாளாவிருக்குங்கொல்? ஏங்கியவுள்ளம் பொருமுகிறது; தனக்கு வேண்டுமென அல்லற்பட்டு அலைவுறுகின்றது. கிடைக்காதபோது பிறர் நலங்கண்டு பொருமைப்படுகிறது. இப்பொருமையே மாசுகளில் முதன்மையாக வைத்துப் பேசப்படுவது. இவ்வழுக்காற்றை நீக்கின் ஒழுக்கம் தானே பிறக்கும். அவ்வொழுக்கத்தின்வழி விழுப்பம் விளையும். விழுப்பம் வேண்டிதானே இத்தனை பாடும். எத்துணைச் செவ்வியதாகச் செறிவுபடக் கூறியுள்ளார்.

அழுக்காறுடையான் அறன் ஆக்கம் வேண்டாதானே? ஏனெனில் அழுக்காறு என்ற தீய பண்பானது இம்மையில் வறுமையை யளித்து மறுமையிலும் துன்பந்தருவதாம். ஆக்கம் விழைந்து இன்பம் பெற நினைந்தவன் அழுக்காறு கொள்வதால் அடையும் பயன் ஆக்கவிழப்பும் இன்ப நீக்கமுமே யன்றி வேறென்னை? அழுக்காற்றினுல் உலகில் உயர்ந்தாருமில்லை. அதைத் தவிர்த்ததால் தாழ்ந்தாருமில்லை. இதுவே உண்மையாம். அழுக்காறுடைய நெஞ்சம் அவ்விய நெஞ்சமாகும். அதன் தன் ஏற்றமும் வளமும் தாற்காலிகமானதே; நிலை டற்றதே. அழியா இன்பத்தை மனநிறைவை அழுக்காறுடையான் அடைதல் அரிதினும் அரிதாம். எனவே அவ்வழுக்காறே அடுத்த குற்றமாம் அவாவிற்கு நம்மை ஆட்படுத்தி விடுகிறது. அவாவடக்குதல் என்பது அரிய பண்பாம். ஆயினும் பயிற்சியினுல் பயனடையாதாரும் உண்டோ?

அவாவென்பது ஆசையாம். உள்ள நிலையினின்றும் உயர்ந்த நிலைக்குச் செல்ல அவாவிநிற்றல் ஆருயிர்களுக்கு ஆக்கம் தரும். ஆனுல் தணியாக் காதலும் திரா வேட்கையும் ஆன்ம வளர்ச்சிக்கு மட்டுமே அமைந்தால் நனிமிக நன்ருெம். அதனை விடுத்து ஆரவாரமான பொருள்களையடைந்து நிற்க அவாவுதல் பயனை விளைக்குங்கொல்?

சமுதாயத்தில் இன்று நாம் எதனைக் காண்கின்ருேம்? பணத்தாசை; பதவியாசை தானே? தானே பிறரை ஆளவேண்டுமென்ற அதிகார ஆசை! எல்லாம் ஒன்ருகச் சேர்ந்து மனிதவுள்ளத்தில் பேயாய்ப் புகுந்து ஆட்டிப்படைக்கின்றன; வெறி பிடித்தலையச் செய்கின்றன. அன்புறைய வேண்டிய உள்ளம் - அருள் சுரக்கவேண்டிய நெஞ்சம் அவாவினுல் நிறைந்து நிற்பதைக் காண்கிருேம். இவ்வவாதானே கையூட்டு வாங்க களவாடத் தூண்டுகோலாய் அமைகிறது? நாட்டின் நலனைப் பெருக்கவேண்டிய மக்கள் இன்று எந்நிலையிலுள்ளனர்? தனக்கென வாழும் விலங்கை யொத்தல்லவோ வாழ்கின்றனர்? தாழ்வுற்று தந்நலமுற்று வாழ்வதை யாரே அறியார்? இன்று யாண்டும் கையூட்டும் கறுப்புப் பணமும் களிநடம் புரியக் காரணமென்னை? பொய்மையும் புன்மையும்

புகுந்து விளையாட யாது காரணம்? நினைந்து பார்மின்!

அவா நிறைவேருதபோது கோபம் தோன்றுகிறது. வெகுண்டு எழுகிறது உள்ளம். வெகுண்டெழும் உள்ளத்தினின்றும் வெளிவருவது வெகுளியன்ருே? இச்சினம் தோன்றக் காரணம் என்ன? இயலாமையால் - மனத்தையடக்க இயலாமையால் தோன்று கிறது எனவுரைக்கலாமன்ருே? மனித மனத் தின் பலவீனங்களில் இவ்வெகுளியும் ஒன் றெனக் கூறலாமன்ருே? மனம் கலங்கித் தடுமாறி நிற்கும் நிலையில் சினம் தோன்று கிறது. தோன்றினவுடன் விளைவதென்னே? தோன்றுவதற்கு இடமாக அமைந்தவனையும் அவனைச் சார்ந்தோரையும் துன்புறுத்தி அவனின் நீங்கவைப்பதன்ருே வெகுளி. அத்தன்மைய சினமெனும் சேர்ந்தாரைக் கொல்லியை நாம் உடமையாக்கிக்கொளல் பேதமையன்ருே? புல்லறிவாண்மையன்ருே? புரிந்து அதனைப் போக்க முயல்வது மாந்தர் தம் கடனும். இல்லையெனின் இச்சினமெனும் தீ தோன்றினவனையும் சுட்டு அவன் தன் இனத்தையும் சுட்டெரிக்கும் வெம்மையதாம். இத்தன்மையை வெகுளியைப் போக்கு மாற்றை அறியவேண்டாமா? நீக்குமாற்றை உணரவேண்டாவா? குறைக்கு - மாற்றை நினைந்து செயல்பட வேண்டாவா? உன்னிப் பார்க்கவும்.

தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் கெடுத்துக் கீழ்மைப்படுத்தும் இவ் வெகுளியை வெறுத்தொதுக்க வேண்டு மன்ருே? அதனை வளர்த்துக் கொள்வதால் வரும் பயனென்னே? வெகுளி தோன் றின் அறிவு மயங்கும். மயங்கிய நிலையில் எத்திறம் செல்லின் நல்லதென ஓர்தல் இயலாதன்ருே? மனம் கலங்கிய நிலை யில் அறம்பிறழக் கேட்பானேன்? மன் பதையுலகில் கொடிய செயல்களெல்லாம் நிகழக் காரணம் வெகுளியேயன்ருே? இச் சினம் தணிந்தாலொழிய அறவே நீங்கினு லொழிய ஆக்கத்திற்கும் அன்பின் பெருக்கத் திற்கும் வழியுண்டுகொல்? மனமெனும் கண் ணுடியில் படிந்து நிற்கும் இம்மாசை மாற்று வது நம் கடமை; உடனடியான கடமை.

சினம் ஈனும் குழவிதான் இன்னுச்சொல். இன்னுச் சொல்லைக் கூறும்போது வாய் கைக்கும்; கேட்கும்போது செவி கைக்கும்; நினையும்போது நெஞ்சம் கைக்கும். கடுஞ் சொல்லைக் கழறுவானுக்கே இந்நிலையாயின் கேட்பானின் நிலையென்னுதாம்? கொடியவன் எனப்பலர் பகர்வாரன்ருே? இன்னுன் - இரக்கமிலானென எல்லோரும் ஏசுவரன்ருே. ஏற்றம் பெறவேண்டிய நிலையில் இறக்கத் தையே அவன் பெறுவான். அவனை வையகம் வாழ்த்துமோ? வணங்குமோ? கூறுமின். இனம் புரியாத வேதனை - நிம்மதியின்மை - மனவேறுபாடு - வெறுப்பு இவையே அன்றி, குழம்பிய மனம் வேறெதற்கு நிலைக்களனுகும்? மாட்சியோடு தாழ்வின்றி வாழ மனத்தைத் தெளிவாக்கிக் கொள்ளவேண்டும். எனவே தான் குறளாசிரியர் தனி மனிதன் வாழ் வைத் தொட்டுத்துலங்க வைக்கிருர்.

குறளெனும் கோவிலுக்குள் நுழையப் பாயிரந்தான் கோபுரவாயில். நெடிதோங்கி நிற்கும் அவ்வாயிலின் வழி புகுந்தால் பொலிவு பெற நிற்பதெது? எண்ணுமின். இறைவன் இறைமையை இனிதாகக் காட்டியபின் இன்பத்தை வான்சிறப்பின் வழி வகுத்து ரைக்கின்ருர். அதன்பின் பேசப்படுவது அறம். அறங்கிடந்த நெஞ்சம் அறனை வலி யுறுத்திப் பேசுகிறது. ஆம்! வலியுறுத்தியும் வற்புறுத்தியும் உணர்த்த வேண்டிய ஒன் றல்லவா?

பலரும் போற்றிப் பாராட்டும் வகையில் ஆரவாரமான முறையில் அறங்கள் செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை. அப்படிச் செய்ய இயலவில்லையெனக் கவலை வேண் டாம். ஏனென்ருல் அவையெலாம் 'ஆகுல நீர பிற', எனவே பேரறிவாளன் பெருமிதத் தோடு மனமாசைத் துடைக்க அழைக்கிருன். அருகில் சென்ருல் அதன் தன்மையறியலாம்; அயராமல் உழைத்தால் அனைத்தும் அடைய லாம்; அகமின்புறலாம்.

சிரியதோர் வாழ்வை அமைத்துக் கொள் வது அவரவர் கையில்தான் உள்ளது. தன்னைத்தான் உயர்த்திக் கொள்வானும் தன்னைத்தான் தாழ்த்திக் கொள்வானும் தானேயன்ருே? அதற்குரிய வழியே மனமாசு நீக்கல் இப்படியொரு மாசற்ற வாழ்க்கைதான் வாழவேண்டும்; அவ்வாழ்வே பொருள் பொதிந்த வாழ்வாகும். மறுத்துரைப்பார் மறுத்துரைக்க; அவர் மாறுங்காலம் வரும்; அதுவரை சான்ருேர் பொறுத்திருப்பர்; புன்மையகற்றத் துணிபுரிவர். வாழ்வில் வளம்பல அடைய குறள்கூறும் செவ்வழி நடப்பின் செம்மை பெறலாம். பொன்னும்

பொருளும் குன்றெனக் குவிந்து விட்டால் மனநிறைவு வந்துவிடுமா? மகிழ்வுதான் மலர்ந்து விடுமா? வாராதென்பதை உரைக்க வேண்டுங்கொல்?

எளிமையான வாழ்க்கையில் ஏற்ற முண்டு; எழிலுண்டு; எல்லாமுண்டு. மன மாசற்ற வாழ்வில் மகிழ்வுண்டு; மன நிறைவுண்டு; மாட்சி உண்டு. எனவே மனத்தூய்மையே வேண்டற்பாலதென் பதனைப் பகரவும் வேண்டுமோ? அழுக்காறு கொண்டு, அவாவினின்று, வெகுளிக்கு ஆட் பட்டு கடுஞ் சொல்லைக் கூறுபவன் குறை வின்றி வாழ இயலுமா? அவனுக்கும் ஏற்ற முண்டென்று நினைக்கிறீர்? அவன் பெறும் ஏற்றமும் பெருக்கமும், வாழ்வும் வளனும், நலனும் பலனும் பார்ப்பவரை மயக்குவன. அத்துணையே.

தீமை செய்வான் மனம் தீயநினைவால் அல்லும் பகலும் சுட்டெரிக்கப்படும்; வெம்மை தாளாமல் வேதனைப்படுவானவன்; அமைதியின்றி அல்லற்படுவான். அதனை விளக்க முடியுமோ? ஆய்மின். அயராத உளப் போராட்டத்தில் சிக்கித் தவிப்பான்; அகத்தில் அமைதியின்றி அலமருவான். அவன் பெறும் பிற வசதிகளால் பயன் என்னை? மனம் அல்லற்படும்போது நிறை வான வாழ்வை வாழ முடியுமா? பெருங் கடலுள் சுற்றிச் சுழன்றடிக்கும் சுருவளியில் தத்தளிக்கும் சிறு தோணியென வாழ்க்கைக் கடலுள் அல்லலுறுமன்றோ அவனுளம்?

எனவே மனமாசு நீக்கி வாழும் உளத்தில் இன்பம் பிறக்கும்; இனிமை சூழும்; அமைதி தவழும்; அன்பு சுரக்கும். எதனையும் தாங்கும் இதயவுரம் ஆண்டு பிறக்கும். இது மனத் தூய்மையின் மாண்பு. அப்படியாயின் மற்றைய அறங்களைச் செய்ய வேண்டாவோ எனக் கடாவத் தோன்றும். மனத்தில் மாசில்லையேல் மனம் வாளா விருக்குங்கொல்? மாந்தர் உயர, மனித மனம் உயர செயல்படுமன்றோ? அச்செயலைத் தடுக்கவும் இயலுமோ? மாசற்ற மனத்தின் செயல்களெல்லாம் மன்பதையுலகம் மகிழும் அறச்செயல்களாகவன்றோ மலரும்? மறச் செயல்கள் ஆண்டு மாண்டு விடுமன்றோ? மறமழிந்து அறம்தோன்றின் ஆங்கு அன்பும் அருளும் களிநடம்புரியக் கேட்பானேன்? எனவேதான் அறம் மனத் தூய்மையில் முகிழ்க்கும் என்கிறார்.

தனி மனிதனுக்கு இழைத்த இச் சட்டமே சமுதாயத்திற்கும் ஒக்கும். நாடும் நாடும் அழுக்காறு கொண்டால் ஆவதென்னே? வெகுளி கொண்டால் விளைவதென்னே? போரும் பூசலுந்தானே? சண்டையும் சச்சர வுந்தானே? அழிவும் அவலமுந்தானே? மாய்தலும் தேய்தலும், தாழ்ச்சியும் வீழ்ச்சியும் விளைதலன்றி வேறென்ன விளையும்? எண்ணிப் பார்மின்!

அறவழியினின்றும் மறவழிக்குச் செல் லும் தலைவன் தன் தவறு எத்துணை பேரிழப் பைத் தருகிறது. கண்ணீர் களைய வேண்டி யோர் அதனை பெருக்கச் செய்யலாமா? துன்பம் துடைக்க வேண்டியோர் அதைத் தொடர்ந்து கொடுக்கலாமா? அழி வினின்றும் காக்கவேண்டியோர் அழிவை நோக்கியழைத்துச் செல்லலாமா? ஓர்ந்து பார்மின்; தேர்ந்து தெளிமின். வாழ்க்கை யென்பது வாழ்வும் தாழ்வும் கலந்ததுதான். எவ்விடத்தும் எக்காலும் இது பொருந்தும். ஆயினும் துன்பநீக்கம் இன்பப் பெருக்கத் திற்கு வித்திடுமன்றோ? அதற்குரிய நம் கடமை யைச் செய்ய வேண்டாமா? நாம் செயற் பாலன யாவை? தனக்கென வாழும் விலங் காய் இராது தன்னைச் சார்ந்தவர்களும் வாழ வழிவகை செய்ய வேண்டியதன்றோ நம் தலையாய கடமை? குவிந்த உள்ளத்தை விரியச் செய்து வாழ்வில் வளம்பல கூட்ட வேண்டுமன்றோ? வாழும் மாந்தரெல்லாம் வகையாய்த் தன்னைத்தான் திருத்தி வாழ்வ ரேல் வையகம் இத்துணை துன்பத்தைத் துய்க்குங்கொல்? தீராத நோய் தீரத்தேர்ந்து மாந்தர்தம் பிணிபோக்க மருந்தளிக்கிறார் மருத்துவப் பேராளன். அவர்தம் அரு மருந்தை அனைவரும் உண்டால் அனைத் துயிர்க்கும் ஆக்கமுண்டாம்.

வளர்ந்து வரும் அறிவியல் புறநிலையில் வளத்தைப் பெருக்கும்; வறுமையைப் போக்கும்; வளம்பல வழங்கும். உண்மை! ஆயின் உயிரில் - உள்ளத்தில்கலந்து உவப் பைத்தருவது அறமேயாம். ஆன்மவளர்ச்சிக்கு அடிகோலுவது அறமே; அமைதியைத் தரு வது அறமே; ஆக்கத்தை அளிப்பது அறமே; அனைத்துயிரையும் வாழச் செய்வது வளரச் செய்வது அறமே; அறமேயாம்.

தனி மனிதனுயினும் நாடாயினும் நன்மை பெறவேண்டின் அது அறத்தினுல் மட்டுமே இயலும். தாழ்வு போக்கி வாழ்வு

பெற விழையின் அது மறத்தினால் ஆகாது; அறத்தினாலேயே ஆகும். அடிப்படையறங்கள் எந்நாட்டார்க்கும் பொதுவே. அவை நாட்டுக்கு நாடு வேறுபடா. அறத்திற்கு மேலோனில்லை; கீழோனில்லை; உயர்ந்தோனில்லை; தாழ்ந்தோனில்லை; சாதியில்லை; சமயமில்லை. அது பொதுவுடைமை; பொதுவுரிமை. மனித சமுதாயமே விழித்தெழு; மாண்பு பெறத் துடித்தெழு!

அகவிருள் நீங்கப்பெறின் புறவிருள் தானும் நீங்கப்பெறும். அகத்தில் ஒளியுண்டாயின் புறத்தில் ஒளியுண்டாவதில் ஐயமென்னே? அறியாமை நீங்க-அவலம் நீங்க அருளுடையோன் குறளெனும் விளக்கினைக் கொடையாகத் தந்துள்ளான். அவ்விளக்கு அணையா விளக்கு; அன்பு விளக்கு; அருள் விளக்கு. ஆருயிர்களை அகவிருளினின்றும் ஒளிக்கு அழைத்துச் செல்லும் அற்புத விளக்கு. அதனைப் பயன்படுத்திப் பல னடைதல் யார்கடன்? நம் கடனன்றோ? உடனடியான கடனன்றோ?

வையகத்தீர்! விழிமின்; எழுமின்! இனியும் வாளாவிருத்தல் நன்றோ? வாரீர்! வளம் பெற குறள்வழி நிற்போம்; செம்மை பெறுவோம்; செம்மையாக்குவோம்.

வாழ்ந்து வாழ்விப்போம்!

டாக்டர் (செல்வி) வி. பி. தேவதத்தா பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியை
சீதாலட்சுமி ஆச்சி கல்லூரி
பள்ளத்தூர்—623107

தமிழைப் பற்றி...

"The Kural is the masterpiece of Tamil literature, One of the highest and purest expressions of human thought"

—M. ARIEL.

தமிழ் பற்றிய அடிப்படையுண்மைகள்

ஞா. தேவநேயன்

ஒருவர் தமிழின் இயல்பை அல்லது சிறப்பைச் செவ்வையாய் அறிய வேண்டுமெனின், மூவடிப்படை யுண்மைகளை முற்பட வுணர்தல் வேண்டும். அவையாவன:—

1. தமிழ் குமரிநாட்டில் தோன்றியதென்பது

தமிழ் குமரிநாட்டில் தோன்றியதென் பதனால், தமிழர் தென்னாட்டுப் பழங்குடி மக்கள் என்பதும் உடன் பெறப்படும்.

> பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
> தென்றிசை யாண்ட தென்னவன் வாழி

என்று, பதினெண் நூற்றாண்டுகட்கு முன்னரே, நற்றிற நடுநிலை முத்தமிழ் முனிவன் இளங்கோவடிகள் கூறிய தேர்தல் வேண்டாத் தெண்பொருட் கூற்றும், "தொடியோள் பௌவமும்" என்னும் சிலப்பதிகார வேனிற் காதைத் தொடருக்கு அடியார்க்கு நல்லார் உரைத்தவுரையும், இறையனாரகப் பொருளுரை முக்கழக வரலாறும், தமிழின் குமரிநாட்டுத் தோற்றத்திற்குப் போதியனவும் மறுக்கவொண்ணாதனவுமான சான்றுகளாம்.

தமிழ், வரலாற்றிற்கெட்டாத தொன்முது பழைமையான உலக முதன் மொழியாதலால், கிறித்துவிற்குப் பிற்பட்ட காலத்து முக்கழக வரலாற்றிற் பல காலமுரண்பட்ட குழறுபடைகள் குழம்பிக் கிடப்பது இயல்பே. அச்சிக்கல்களைக் களைத்து உண்மைகளை வடித்தெடுத்தல் வரலாற்றாராய்ச்சியாளன் கடமையாகும். அக் கடமையை மேற்கொண்டே, திரு (P. T.) சீநிவாசய்யங்காரும்[1] பேரா. (V. R.) இராமச்சந்திர தீட்சிதரும்[2] தமிழரின் தென்னாட்டுப் பழங்குடிமையைத் தத்தம் நூல்களில் ஐயந்திரிபற நாட்டிச் சென்றனர்.

ஆயினும், எல்லையற்ற இனவெறியும் மொழி வெறியும் பித்தொடு கலந்த பேய்கோள் போல் வருத்துவதால், பேரா. (K.) நீலகண்ட சாத்திரியாரும் அவர் மாணவரான பர். (Dr.) (N.) சுப்பிரமணியனாரும், பிறரும், இடைக் காலத்தில் தீத்திறமாகவும் தெற்று மாற்றாகவும் புகுத்தப்பட்ட சமற்கிருத மேம்பாட்டை என்றும் போற்றிக் காத்தற் பொருட்டு, தமிழரின் குமரிநாட்டுத் தோற்றத்தை விடாப் பிடியாய் மறைத்து வருகின்றனர்.

இன்றும் திராவிட மொழிகட்குள் முந்தியதும் தலைமையானதும் தமிழேயாதலால், ஆழ்ந்த தமிழ்ச் சொல்லாராய்ச்சி செய்யாதவர் தமிழன் பிறந்தகத்தை ஆய்ந்து காண்டலரிது. சொற்களின் வடிவொப்புமை காண்டல் வேறு; அவற்றின் முன்மை பின்மை ஆய்ந்தறிதல் வேறு. பர். (Dr.) (N.) இலகோவாரி (Lahovary) தம் 'திரவிடத் தோற்றமும் மேற்கும்' (Dravidian origins and the West) என்னும் நூலில், சொற்களின் வரலாற்றை ஆராயாது ஒருசார் வடிவொப்புமையொன்றே கொண்டு, திரவிடன் பிறந்தகம் நண்ணிலக் கடற்கரைப் பாங்கர் எனக் காட்ட முயல்கின்றார். திரவிடத்திற்கு மூலம் (குமரி நாட்டுத்) தமிழ் என்றும், திரவிடனுக்கு முந்தியவன் தமிழன் என்றும், தமிழம் என்னுஞ் சொல்லே த்ரமிள—த்ரமிட—த்ரவிட—த்ராவிட எனத் திரிந்ததென்றும், அடிப்படை யுண்மைகளையே அவர் அறியவில்லை. பல சொற்களைத் தவறாகவும் பிரித்துள்ளார்.

கால்டுவெலார் காலத்தில், தொல்காப்பியமும் கடைக் கழக (சங்க) இலக்கியமும் தலைமைத் தமிழ்ப் புலவர்க்குந் தெரியாது மறையுண்டு கிடந்தமையாலும், மறைமலையடிகள் போலும் வழிகாட்டியின்மையாலும், அவர் அயல் நாட்டினராதலாலும், ஏதேன் தோட்டக் கதையை எழுத்துப்படி நம்பிய கிறித்தவக் குரவராதலாலும், அவர் தமிழரின் முன்னோரை மேனாட்டினின்று வந்தேறியராகக் கொண்டதிற் குற்றமொன்றுமில்லை. அவர் அங்ஙனங் கொண்டவிடத்தும், தமிழ் ஆரியத்திற்கு மூத்ததென்றும், உலக முதன் மொழியோடு நெருங்கிய தொடர்

புடையதென்றும், கூறியது மிகமிகப் பாராட்டத்தக்கதாம்.

இன்று, சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியிதழில் (Journal of the Madras University),

திரவிடத் தோற்றப் புதிர்விறு—ஒரு மொழியியல் மாந்தநூலியல் பழம் பொருட் கலையியல் அடுத்தாய்வு (The Problem of Dravidian Origins—A Linguistic, Anthropological and Archaeological Approach) என்னும் தலைப்பில், 1956-57—இல் பேரா. (T.)பாலகிருட்டின நாயர் நிகழ்த்திய வயவர் வில்லியம் மெயெர் மானியச் சொற்பொழிவுகள் (Sir William Meyer Endowment Lectures). வெளியிடப்பட்டு வருகின்றன. அவை ஆழ்ந்த தமிழ்ச் சொல்லியலாராய்ச்சியில்லார்க்கு முழு மெய் போலத் தோன்றும். தமிழன் பிறந்தகம் மேனாட்டதென்பதற்கு அவை காட்டும் சான்றுகளின் போலிமை, அடுத்த ஆண்டு நான் வெளியிடவிருக்கும் The Lemurian Language and its Ramifications என்னும் நூலில் விரிவாக விளக்கப் பெறும்.

அடிப்படைக் கொள்கை தவறாயிருப்பின் எத்துணைப் பேரறிஞர் உறழாடினும் முடிபு தவறாகவேயிருக்கும். தென்குமரி நாட்டானை மேனாட்டானென்று தலைகீழாகக் கொண்டதனாலேயே, சமற்கிருத நெடுங்கணக்கினின்று தமிழ் நெடுங்கணக்குத் தோன்றிற்றென்றும், தமிழ் வேற்றுமைப் பாகுபாடு சமற்கிருத வேற்றுமைப் பாகுபாட்டைத் தழுவியதென்றும், கால்டுவெலாரும்; g, j, d, t, b, ஆகிய ஆரிய எடுப்பொலிகள் க, ச, ட, த, ப ஆகிய தமிழ் எடுப்பிலாவொலிகளாக மாறினவென்று பர். (Dr.) சு. கு. சட்டர்சியும்; வ்ருத்த என்னும் வடசொல் பிராகிருதத்தில் வட்ட என்றும் தமிழில் வட்டம் என்றும் திரிந்ததென்று வடமொழியாளரும்; தலைகீழாக உரைப்பாராயினர்.

2. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவென்பது

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே.

என்பது தொல்காப்பிய நூற்பா.(பெயரியல், 1).

தமிழ் இயன்மொழியாதலால், அதிலுள்ள பெயர் வினையிடை யென்னும் மூவகைப்பட்ட எல்லாச் சொல்லும், வேர்ப் பொருளுணர்த்தும் கரணியக் குறிகளே. ஆரியம் திரிமொழியாதலின், அதிலுள்ள சில பல சொற்கள், மேன்மேலுந் திரிந்து முதனிலையுருத் தெரியாவாறு முற்றுஞ் சிதைந்து, வேர்ப்பொருள் அறிய முடியா நிலையில் உள்ளன. அதனால், வடமொழியிலக்கண நூலார், வேர்ப்பொருள் விளங்காச் சொற்களை இடுகுறி யென்றனர். ஆயின், இற்றை வண்ணனை மொழி நூலாரோ, எல்லா மொழியும் இடுகுறித் தொகுதி யென்றொரு நெறியீடு செய்து, தம் இரு கண்ணையும் இறுகக் கட்டிக் கொண்டனர்.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன வேனும், வேர்ப் பொருள் சிலவற்றில் விளங்கித் தோன்றும்; சிலவற்றில் விளங்கித் தோன்றாது. அதை ஆய்ந்தே காணல் வேண்டும். இதனையே,

மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா

என்று குறித்தது தொல்காப்பியம்.

(உரியியல், 96)

எ—டு:

சுல்—சுள்—சுடு—சுடல்—சுடலை (விழிப்பத் தோன்றல்)

புல்-புள்-புழு-புழல்-புடல் - புடலை (விழிப்பத் தோன்றாமை)

காலஞ் சென்ற வையாபுரியார், பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு உலக முழுதும் இருண்டு விட்டதென்று கொண்டாற்போல, தம் அறியாமையைத் தொல்காப்பியர் மீதும் ஏற்றி, "Tolkappiyar only says that the origin of words is beyond ascertainment" என்று கூறிவிட்டார்.

வடமொழியென்னும் சமற்கிருதத்தில் ஐந்திலிரு பகுதி தமிழாதலால், அதை மறைத்தற்பொருட்டுப் பல வட சொற்கட்குப் பொருந்தப் பொய்த்தலாகவும் பொருந்தாப் பொய்த்தலாகவும் பொருள் கூறி வருகின்றனர்.

எ—டு:

தென்சொல்	வடசொல்	வடவர்கூறும் மூலப் பொருள்
இஞ்சிவேர்	ச்ருங்கவேர	(மான்) கொம்பு போன்ற வடிவுடையது.
உலகு-உலகம்	லோக	பார்க்கப்படுவது
முத்து-முத்தம்	முக்த	(சிப்பியினின்று) விடுதலை பெற்றது.
வடம்-வடவை	படபா (முகம்)	பெட்டைக் குதிரை முகத்தில் தோன்றியது (ஊழித்தீ)

காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் (கிளவியாக்கம், 58) பொருளையுணர்ந்து உண்மை தெளிக.

3. சமற்கிருதத்தைத் தாக்காது தமிழை வளர்த்தல் இயலாதென்பது.

தமிழ் சிவ மதமும் திருமால் மதமும் தோன்றிய ஒப்புயர்வற்ற உலக முதல் உயர்தனிச் செம்மொழியாயிருந்தும், வழக்கற்றுப் போன லையாரியம் கடலிற்காய முரசினது போல் வடநாட்டுப் பிராகிருதத்தொடு கலந்து போனதனாலாகிய வேத மொழியை, தமிழொடு கலந்தாக்கிய. ஒருகாலும் உலகவழக்கில்லாத இலக்கிய நடைமொழியாகிய சமற்கிருதத்தை, தேவமொழியென்று ஏமாற்றி, வழிபாட்டிற்குத் தகாத இழிந்தமொழியென்று தமிழைத் தள்ளி, அதற்குத் தலைமாறாகத் திருக்கோவில் வழிபாட்டு மொழியாகவும் திருமணக் கரணமுள்ளிட்ட சடங்கு மொழியாகவும், கடந்த மூவாயிரம் ஆண்டாக ஆண்டு வருகின்றனர் ஆரியப் பூசாரியர்.

முதன் முதல் தோன்றிய குமரிநாட்டுத் தமிழெழுத்து, அசோகன் கல்வெட்டுப் பிராமியெழுத்தினின்று தோன்றியதாகச் சொல்லப் படுகின்றது.

அடிப்படைத் தமிழ்ச் சொற்களெல்லாம் ஆரியச் சொல்லாகக் காட்டப்படுகின்றன.

இசை நாடகம் கணியம் மருத்துவம் முதலிய தமிழறிவியல்களெல்லாம், ஆரிய வண்ணமாக்கப் பட்டுள்ளன.

இருவகை அறநெறியும் அரசியல் முறையும் இம்மையின்பமும் கூறும் உலகப் பொதுமறையாம் திருக்குறளை, இறந்து பட்டதாகக் கூறும் திரிவர்க்கத்தின் மொழி பெயர்ப்பென்றும், தரும சாத்திரம் அருத்த சாத்திரம் காம சூத்திரம் ஆகிய வட நூல்களைத் தழுவியதென்றும், அஞ்சாது அலப்பி வருகின்றனர்.

ஐவகை யிலக்கணமுங்கூறும் தொல்காப்பியத்தை, எழுத்தும் சொல்லுமே கூறும் பிராதிசாக்கியங்களையும் பாணினீயத்தையும் பின்பற்றியதென்று பிதற்றி வருகின்றனர்.

மெய்ப் பொருள் திரிப்பாலும் தொன்மக் கதைகளாலும் சிவ மதமும் திருமால் மதமும் ஆரியமாக்கப்பட்டுள்ளன.

தமிழர் கண்ட அறம் பொருளின்ப வீடென்னும் நாற்பொருட் பாகுபாடு, 'தர்மார்த்த காமமோட்ச' என்னும் ஆரியச் சொற்றொடரின் மொழிபெயர்ப்பாகக் கூறப் படுகின்றது.

தமிழன் பிறப்பிற் பிராமணனுக்குத் தாழ்ந்தவனென்றும், அத் தாழ்வு மறுமையில் தான் நீங்குமென்றும், நெஞ்சத்திமிரும் வாய்க் கொழுப்பும் வெளிப்படையாக இருந்து வருகின்றன.

இங்ஙனம், அடி முதல் முடி வரை, தமிழ்மொழியிலக்கிய நாகரிகப் பண்பாட்டைத் தும் தருக்கப் பொருளாக்கப்பட்டிருப்பதால், சமற்கிருதத்திற்கும் தமிழுக்கும் இடைப்பட்ட வுறவு, தாக்குவோனுக்கும் தற்காப்போனுக்கும் இடைப்பட்டதாகும்.

ஆகவே, அடிமையரும் அறிவிலியரும் கோழையருங் கோடன்மாருமாயிராது, உண்மையை எடுத்துரைத்துத் தாம் இழந்த வுயர்வை மீளப்பெறுவதே உயர்திணை மக்கட்குரிய பண்பாம்.

வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யாலும் வலியராய்த்—தாளாண்மை
தாழ்க்கும் மடிகோ ளிலராய் வருந்தாதார்
வாழ்க்கை திருந்துத லின்று —பழமொழி 151

ஞா. தேவநேயன், எம்.ஏ,
ஆ 1135-2ஆம் மேற்குக் குறுக்குச்சாலை
காட்டுப்பாடி விரிவு
வ.ஆ. மாவட்டம்

பிராமி எழுத்துக் கல்வெட்டுகள்

நம்பி ஆருரன்

ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ள பலவகைப்பட்ட ஆதாரங்கள் உள்ளன. அவற்றுள் கல்வெட்டுகள் சிறப்பான மூல ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன. இந்திய வரலாற்றை, அதிலும் சிறப்பாக தமிழ் நாட்டின் வரலாற்றை நாம் அறிந்து கொள்ள உதவும் வகையில் எண்ணற்ற கல்வெட்டுகள் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றுள் அண்மையில் வரலாற்று அறிஞர்களின் கவனத்தை அதிகம் ஈர்த்தவை தமிழ் நாட்டிலுள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டுகளாகும்.

இருபதாம் நூற்ருண்டின் துவக்கத்தில் முதன் முதலாக பிராமி எழுத்துக் கல்வெட்டுகள் மதுரை மாவட்டத்திலும் பின்னர் திருநெல்வேலி மாவட்டத்திலும் கண்டு பிடிக்கப்பட்டன. இதுவரை மொத்தம் 76 பிராமி எழுத்துக் கல்வெட்டுகள் 21 இடங்களில் கிடைத்துள்ளன. ஆரம்பத்தில் சில ஆண்டுகளுக்கு இவை என்ன எழுத்துக்கள், என்ன மொழியைச் சார்ந்தவை என்பதெல்லாம் விளங்காத புதிராக இருந்தன. பின்னர் படிப்படியாக அறிஞர்கள் பலரது ஆராய்ச்சியின் பயனுக பல வியத்தகு வரலாற்றுச் செய்திகள் நமக்குக் கிடைத்துள்ளன. இன்னும் தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

பிராமி எழுத்துக் கல்வெட்டுகள் பெரும்பாலும் மலைப்பாறைச் சரிவுகளிலும், குகைகளிலும் உள்ளன. சில மலையுச்சிகளிலும், ஏறுவதற்குக் கடினமான செங்குத்தான பாறைகளிலும் உள்ளன. ஒரு சில கல்வெட்டுகள் அடர்ந்த காடுகளினுள்ளே உள்ளன. இவையனைத்தும் சமண, பௌத்த முனிவர்களுக்காகக் கற்பாறையில் அமைக்கப்பட்ட கற்படுக்கைகள் உள்ள இடத்தில் உள்ளன. இக்கல்வெட்டுகளில் இக்கற்படுக்கைகளை வெட்டியவர்கள் பற்றிய செய்திகளும் பொறிக்கப்பட்டுள்ளது.

சமண சமயமும், பௌத்த சமயமும் வடஇந்தியாவில் தோன்றியவை. மௌரியர்கள் ஆட்சிக்காலத்தில் இவ்விரு சயமங்களும் தென்னிந்தியாவில் பரப்பப்பட்டன. பின்னர் இலங்கையிலும் பரவின. பௌத்தர்களுடைய மொழி பிராகிருதம் தென்னிந்தியாவிற்கு வந்த பௌத்தர்கள் தங்கள் சமயக் கருத்துக்களைப் பரப்ப அந்தந்த நாட்டில் வசிக்கும் மக்களுடைய மொழி கலந்த பிராகிருத மொழியைப் பயன்படுத்தினர். அந்த அடிப்படையில் பிராகிருதமும், தமிழும் கலந்த பிராமி மொழியில் இக்கல்வெட்டுகள் அமைந்துள்ளன.

பாண்டிச்சேரிக்கு அருகாமையிலுள்ள அரிக்கமேட்டில் நிகழ்த்திய அகழ்வாராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்ட பானை ஓடுகளிலும் பிராமி எழுத்துக்களைப் போன்ற எழுத்துகள் உள்ளன. இதனடிப்படையில் பிராமி எழுத்துக்களின் தோற்றம் வளர்ச்சி பற்றி அறிஞர்களுடைய இரு வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. டாக்டர் பியூலர் போன்ரோர் வட இந்திய அசோகன் காலத்திய பிராமியினின்றும் தென்னிந்திய திராவிட பிராமி பிரிந்தது என்று கூறியுள்ளனர். கன்னிங்ஹாம் போன்ரோர் பிராமி எழுத்துக்கள் திராவிடர்களால்தான் உருவாக்கப்பட்டன. திராவிட பிராமியே மூலமொழியாகும்; அதனின்றே வட இந்திய பிராமி தோன்றிற்று என்று கருதுகின்றனர். மொஹஞ்சதாரோ, ஹாரப்பா நாகரிக எழுத்துக்கள் பிராமி எழுத்துக்களின் வளர்ச்சிக்கு ஒரு படியாக அமைந்துள்ளன என பேராசிரியர் லாங்டன் போன்ரோர் கருத்து தெரிவித்துள்ளனர். சிந்து சமவெளி நாகரிகத்தோடு திராவிடர்களின் தொடர்பைத் திட்டவட்டமாக நிறுவக் கூடுமானல் பிராமி எழுத்துக்களை முதன் முதலில் உருவாக்கியவர்கள் திராவிடர்களே என்பது உறுதியாகும்.

தமிழ்க் கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்ட எழுத்து வகைகளின் முதன்மையானது பிராமி எழுத்துக்களாகும். இதனின்றே பின்னர் சோழப் பேரரசர்கள் காலத்தில் விளங்கிய வட்டெழுத்து உருவாயிற்று. நமக்குக் கிடைத்துள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டுகளின் காலம் கி. மு. மூன்றும் நூற்ருண்டிற்கும், கி. பி. ஆரும் நூற்ருண்

டிற்கும் இடைப்பட்டதாகும். பிராமி எழுத்தினின்று படிப்படியாக வட்டெழுத்தும், பின்னர் வட்டெழுத்தினின்று இன்று நாம் பயன்படுத்தும் எழுத்துகளும் உருவாயின.

பிராமி எழுத்துக் கல்வெட்டுகளின் கால அடிப்படையில் தமிழ் மொழியின் வளர்ச்சியை மதிப்பிடுவது பற்றியும், அதன் பேரில் சங்க இலக்கியங்களின் காலக்கணக்கை நிர்ண யிப்பது பற்றியும் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. கல்வெட்டுகளில் உள்ள பிராமி எழுத்துக்களினின்று சங்க காலத் தமிழ் இலக்கிய நடை உருவாக இடையே பல நூற்றுண்டுகள் ஆகியிருக்கக் கூடும்; எனவே சங்ககாலம் கி. பி. 500க்கு பிற்பட்டதாகவே இருக்கவேண்டும் என டாக்டர் சக்கரவர்த்தி, மற்றும் ஐராவதம் மகாதேவன் போன்ருேர் கருத்து தெரி வித்துள்ளனர். ஆனல் இக்கருத்தினை டாக்டர் கே. பிள்ளை போன்ருேர் மறுத்துள்ளனர். காரணம் கல்வெட்டுகளில் உள்ள மொழி அவை வெட்டப்பட்ட காலத்து நிலவிய மொழியின் தரத்தைக் குறிப்பிடுவன அல்ல. அதனடிப் படையில் சங்க இலக்கியங்களின் காலத்தைப் பின்னுக்குத் தள்ளி போடுவதும் சரியல்ல. இப்பொழுது பெரும் பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்க இலக்கியங்களின் காலத்தை கி. மு. 300 முதல் கி. பி. 300 வரை என்பதனை - உறுதிப்படுத்த மேலை நாட்டவர் தம் நூல்களில் தமிழகம் பற்றி விட்டுச் சென்றுள்ள குறிப்புகளும், தமிழ கத்தில் கண்டெடுக்கப்பட்ட ரோமானிய நாணயங்களும், அரிக்கமேடு பானை ஓடுகளும் சிறப்பான மூல ஆதாரங்களாக உள்ளன.

பிராமி எழுத்துக் கல்வெட்டுகள் நமக்குப் பல சிறப்பான வரலாற்றுச் செய்தி களைத் தந்துள்ளன. சேர அரசர்களின் மரபு வழியைத் திட்டவட்டமாக அறிந்து கொள்ள புகலூர் கல்வெட்டு உதவுகிறது. பிள்ளையார்பட்டி, மாமண்டூர் - ஆகிய இடங் களில் உள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டு களிலிருந்து அன்று ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்களின் பெயர்கள் நமக்குக் கிடைத் துள்ளன. சங்க இலக்கியங்களில் காணப் படும் ஆதன், சாத்தன், சேந்தன், கீரன், கொற்றன் போன்ற பெயர்கள் இக்கல் வெட்டுகளில் காணப்படுகின்றன.

தமிழகத்தில் சமண, பௌத்த சமயங் களின் நிலையையும் அறிந்து கொள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டுகள் உதவுகின்றன. இக்கல்வெட்டுகள் உள்ள மலைக்குகைகள் 'பள்ளி' என்றும், 'உறை' என்றும் அழைக்கப் பட்டன. முனிவர்களுக்கு அமைக்கப்பட்ட கற்படுக்கைகள் 'அதிட்டானம்' எனப்பட்டன. சமணத் துறவியர்களைக் குறிக்க 'அமணன்' 'ஆசிவகர்' போன்ற சொற்களும், பௌத்த பெண் துறவியரைக் குறிக்க 'மாதவிரை' போன்ற சொற்களும் காணப்படுகின்றன.

கி. மு. மூன்றும், இரண்டாம் நூற்றுண்டு களில் நிலவிய வாணிப முறைகளைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள இப்பிராமி எழுத்துக் கல்வெட்டுகள் உதவுகின்றன. மாங்குளம் கல்வெட்டு ஒரு வணிகரின் கழகத்தைக் குறிப்பிடுகிறது. அழகர்மலை கல்வெட்டு பல திறப்பட்ட வணிகர்களின் பட்டியலொன்றைத் தருகிறது. அதில் உப்பு வணிகன், அறுவை வணிகன், கொழு வணிகன், பொன் வணிகன் ஆகியோர் இடம் பெறுகின்றனர். தச்சன், பொற் கொல்லன், பாகன் போன்ற பெயர்களும் இடம் பெறுகின்றன. இவ்வகையில் பல நுண்ணிய செய்திகளை நமக்குப் பிராமி எழுத்துக் கல்வெட்டுகள் தருகின்றன. அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு போன்ற இலக்கியங் களில் காணப்படும் செய்திகளை இக்கல் வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன.

K. Nambi Aaruuran M. A.,
School of Oriental and
African Studies,
University of London
London W C 1. U. K.

நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;

—புறம்

தமிழ் இலக்கியம் - உரைநடை

(இருபதாம் நூற்றுண்டுவரை)

அ. மு. பரமசிவானந்தம்

தமிழில் 'உரை' என்ற சொல்லுக்கு 'ஒலி' என்ற அளவில் பொருள் இருந்த காலம் உண்டு. பரிபாடல் 'குன்றம் குமுறிய உரை'[1] என்றே குறிக்கின்றது. எனவே இச்சொல் பொதுவாக உண்டாகும் ஒலி களுக்கு என அமைந்து, பிறகு மக்கள் வாயால் உரைக்கப்பெறும் உரைக்கும் பெய ராக அமைந்தது என்பது தேற்றம். மக்கள் தம் உள்ளக் கருத்தை உலகுக்கு உணர்த்தப் பயன்படுத்துவது உரையாம். இனி உரை என்பதற்குப் புகழ் என்ற பொருளும் உண்டு. என்பதை 'உரைசால் பத்தினி' என்ற சிலப் பதிகாரத் தொடர் நமக்கு விளக்குகின்றது. பொன்னின் தரம் அறியத் தட்டான் கல்லில் உரை இட்டுப் பார்ப்பதும் 'உரை'யாக உள் ளது. இவற்றல் உரை என்பது மக்கள் உள்ளக் கருத்தை உணர்த்தப் பயன்படும் ஒன்று என்பதோடு ஒன்றின் உண்மையான இயல்பை விளக்கப் பயன்படும் ஒன்று என்பதும் தெளிவாகின்றது.

உரைக்கப்படுவன அனைத்தும் உரை யாயின், அவ்வாறு உரைக்கப்படும் பாட்டும் உரையாமோ என்ற ஐயம் எழுதல் இயல்பு. இந்த ஐயத்தைப் போக்கவே மேலைநாட்டார் நன்கு ஆராய்ந்து பாட்டையும் உரையையும் பாகுபாடு செய்துள்ளனர். 'உரைநடை என் பது இலக்கிய மரபு கெடாத நல்ல நடையில், ஆழ்ந்த கருத்தோடு, பாட்டின் சந்தச் சேர்க்கை இன்றியே, நல்ல ஓசை நயம் உடையதாகி, ஒளிவுமறைவு இன்றி உள்ளதை உள்ளபடி உரையிட்டுக் காட்டும் வகையில் நேரிய முறையில், கருத்துக்கும் காரணத் துக்கும் பொருத்தமாக - ஒன்றனைப்பற்றியோ ஒருவனைப் பற்றியோ - விளக்கி உரைப்ப தாகும்.[2] உரைநடையென்பது நேராகச் சொற்களைக் கொண்டு விளக்குவது எனவும்[3] எழுத்து நடையிலோ பேச்சு நடையிலோ காட்ட விழைந்த பொருளை, சந்த அமைப்பு இல்லாமல் தெளிவாக விளக்குவது எனவும்[4] பிறர் காட்டியுள்ளனர். பாட்டோ இவற்றேடு கற்பனை நயம், சந்தம் முதலிய பொருந்தி வளர்வதாகும்.

இவ்வாறாக உரைநடை நம் தமிழ் மொழியில் மிகப் பழங்காலந் தொட்டே இருந்து வந்துள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றில் நமக்கு ஒரு மைல் கல்லாக இருப்பது தொல்காப்பியமே. அத்தொல் காப்பியத்துக்கு முன்பே பல இலக்கியங்கள் இருந்தள்ளன என்பதை அதன் சூத்திரங் களால் நன்கு அறிகிறோம். தொல்காப்பியத் துக்கு முன் தமிழ்நாட்டில் உரையும் பாட்டும் இருந்தன என்றும் அவற்றுள் உரையே காலத்தால் முந்தியது எனவும் காண் கின்றோம். தொல்காப்பியச் செய்யுளியல் 238ஆம் சூத்திரத்தில்

> தொன்மை தானே
> உரைபொடு புணர்ந்த பழைமை மேற்றே

என உரைநடை காட்டப்பெறுகின்றது. இச் சூத்திரத்துக்கு உரை எழுத வந்த இளம் பூரணர் ''நிறுத்த முறையானே தொன்மைச் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று'' எனக் காட்டி, ''தொன்மையாவது உரையோடு பொருந்திப் போந்த பழமைத்தாகிய பொருள் மேல் வருவது'' என விளக்குகிறார். பேராசிரி யரும் ''தொன்மை என்பது உரைவிராய்ப் பழைமையவாகிய கதைப் பொருளாகச் சொல்லப்படுவது'' என்கிறார். எனவே பாவாகச் செய்யப்பெறும் 'பாச்செய்யுளிலும்' 'உரைச்செய்யுள்' காலத்தால் முந்தியது என்பது தெளிவு. செய்யப்படுவன வெல்லாம் செய்யுள் ஆதலின் இரண்டையும் செய்யுள் எனவே காட்டினர்.

தொல்காப்பியர் காலம் இன்றைக்குச் சற்றேறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பது தெளிவு. எனவே கடந்த மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழில் உரைநடை இருந்திருக்கின்றது எனக் காண முடிகின்றது. இலத்தின், கிரேக்கம் போன்ற மொழிகளிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உரைநடையில் நூல்கள் இருந்தன என அறிகிறோம். ஆனல் தமிழ் உரைநடை பற்றிய விரிவான இலக்

கணமும் அவற்றின் நிலைபேறும் நம்மால் காணமுடியவில்லையே என எண்ணத் தோன்றும். உரைநடை மிக எளிமையாக அனைவராலும் பேசவும் எழுதவும் பெற்றமையின் அதற்குத் தனி இலக்கணம் எழுத வேண்டிய தேவை இல்லையன்றோ? எழுதினும் எல்லையற்று விரியும் என்பதும் தெளிவு. ஆனால் சிறப்பான கவிதைகளுக்கு இலக்கண வரம்பு இன்றியமையாத ஒன்றானமையின் அதற்கென இலக்கண நூல்கள் உண்டாயின. அப்படியே வழக்காற்றில் உள்ள உரைநடையை யாரும் பழங்காலத்தில் படி எடுத்து வைக்க நினைக்கவில்லை. ஏட்டில் எழுதும் தொல்லைகளுக்கிடையிலும் மிகச் சாதாரணமான வகையிலும் உரைநடை படி எடுக்குப் படவில்லை எனலாம். அதனாலேயே அக்காலத்தில் உரைநடை இல்லை என மறுத்தல் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகுமோ? இந்த ஐயத்துக்கு இடமில்லா வகையில் தான் தொல்காப்பியர் அதன் தொன்மையை விளக்கச் சூத்திரஞ் செய்துவிட்டுச் சென்றனர்.

இனி, அத் தொல்காப்பியர் காலந் தொட்டு வளர்ந்த உரைநடை வகையினைக் காண்போம். தொல்காப்பியர் காலத்திலும் கடைச் சங்க காலத்திலும் வழக்கத்தில் இருந்த உரைநடை நமக்குக் கிடைக்கவில்லை. சங்கப் பாடல்களுள் சில, தனிச் சொற்களால் இடைநிறுத்தப்பெற்று உரையெனச் சொல்லினும், அவற்றை யாரும் உரையாகக் கொள்ளவில்லை. எனவே நமக்குத் தெளிந்த உரைநடை காப்பிய காலத்திலேயே கிடைக்கின்றது.

கடைச்சங்க காலத்திற்குப் பிறகு உண்டான காப்பியம் சிலப்பதிகாரம். அது 'உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்' எனவே அழைக்கப்பெறுகின்றது. சிலம்பில் சங்க காலத்தில் ஆசிரியத்தோடு பல வரிப் பாடல்களும் இசைப்பாடல்களும் இடம் பெறுவதோடு, உரைநடையும் இடம் பெறுவதறிகிறோம். எனவே நமக்குக் கிடைக்கும் தமிழ் உரைநடையில் பழைமையானது சிலம்பின் நடையே யாகும்.

> அதுகேட்டு, கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான், நங்கைக்கு நாட்பலி பீடிகை கோட்டமுந்துறுத்து, ஆங்கு 'அரந்தை கெடுத்து வரந்தரு மிவள்' என, ஆடித்திங்கள் அகவையினாங்கோர் பாடி விழாக் கோள் பன்முறை எடுப்ப, மழை வீற்றிருந்த வளம்பல பெருக்கி, பிழையா விளையுள் நாடாயிற்று.

இது சிலம்பின் உரைக்கு ஓர் எடுத்துக் காட்டு. இவ்வாறே சில இடங்களில் உரை நடை - சிலம்பின் உரைநடை செல்லுகின்றது. இவ்வாறு அந்த இரண்டாம் நூற்றுண்டின் இடைப்பட்ட காலத்தில் தமிழ் உரைநடை, தனியாக இன்றேனும் பாவொடு கலந்து இலக்கிய மரபிலேயும், மக்கள் வாழ்வின் பேச்சு மரபிலேயும் வளர்ந்து வாழ்ந்து வந்தது என்பது தெளிவு.

சிலப்பதிகார காலத்தை அடுத்த சில நூற்றுண்டுகளில் தமிழகத்தில் எத்தனையோ மாறுதல்கள் உண்டாயின. எத்தனையோ வேற்றுநாட்டவர் இந்நாட்டில் ஆணைசெலுத்தி, தத்தம் சமய, பண்பாட்டு நாகரிகங்களை வளரச் செய்தனர். அதனால் தமிழர்தம் மொழி, சமயம், வாழ்க்கை, பண்பாடு நாகரிகம் அனைத்துமே மாறுதல் பெற்றன. ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் நாம் காணும் தமிழ் நாட்டிற்கும் சங்க காலத் தமிழ் நாட்டிற்கும் எத்தனையோ வேறுபாடுகளைக் காண்கிறோம். எனினும் உரைநடையைப் பொறுத்தவரையில் ஒன்றையும் நம்மால் புதிதாகக் காண முடியவில்லை. பின்னர் எட்டாம் நூற்றுண்டினதாகக் காணப்பெறும் இறையனார் களவியலுரையே நமக்கு உரையாகக் காட்சி தருகின்றது. அதன் உரையாசிரியர் கடைச்சங்ககாலத்து நக்கீரனார் என்பர். ஆயினும் அவர்காலம் இரண்டாம் நூற்றுண்டிற்கு முற்பட்டதன்றோ; எவ்வாறு அவர் எட்டாம் நூற்றுண்டில் உரை செய்திருப்பார்? இக்கேள்விக்கு அவ்வுரையே சான்று தருகின்றது. அவ்வுரை செவி வழியாகவே கேட்டுக்கேட்டுப் பல தலை முறைகள் கழித்தே உருவாயிற்று என விளக்கம் காண்கின்றோம். எனவே இவ்வுரை கடைச்சங்க காலத்தில் இருந்து எட்டாம் நூற்றுண்டு வரையில் தமிழ் நாட்டில் உரை நடை பேச்சிலும் எழுத்திலும் இருந்து வந்தது என்ற தெளிவையும் அதே வேளையில் அந்த இடைவெளியில் அவ்வுரைநடை எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது என்பதையும் நன்கு விளக்கிக் காட்டுகிறது. ஏழாம் நூற்றுண்டில் எழுந்த சமய இலக்கியங்களைப் போன்றே, இந்த உரையிலும் வடமொழி வாடையை ஓரளவு காணமுடிகின்றது. எனினும் தமிழ் உரைநடையின் ஏற்றமும் சிறப்பும் இதில் விளங்கக் காண்கிறோம்.

> யாங்ஙனம் நிற்குமோ வெனின் சந்தனமும் சண்பகமும் தேமாவும் நிம்பலாவும் ஆசினியும் அசோகும்

கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலோடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து, வட்டறைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் இசைபாட, தண்தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவுசெயும் பொழிலது நடுவண், ஒரு மாணிக்கச் செய்குன்றின் மேல், விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து, வண்டு துவைப்பத் தண்தேன் துளிர்ப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள் (பக் 25) என்று அவ்வுரை அழகுறச் செல்லுகிறது.

எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழில் உரைநடை நூற்றாண்டு தோறும் பல்வேறு வகையில் மாற்றம் பெற்றும் வேறுபாடுற்றும் வளர்ந்து கொண்டே வந்துள்ளது என்பதைத் தமிழ் இலக்கிய வரலாற்று எல்லையில் நின்று காண்பார் யாவரும் உணர்வர்.

இறையனார் களவியல் உரையை ஒட்டி, அக்காலத்துக்குப் பின் வந்த நூற்றாண்டுகளில் பல உரைகள் உண்டாயின. தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களுக்கும் பத்துப்பாட்டு, சிந்தாமணி போன்ற இலக்கிய நூல்களும் கற்றுத்துறை போய நல்லறிஞர்கள் விளக்கங்காட்டும் வகையில் உரைகள் எழுதினார்கள். நச்சினார்க்கினியர், சேனாவரையர், இளம்பூரணர், பேராசிரியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் போன்றார் இவர்களுள் முக்கியமானவர்கள்: இவர்கள் காலத்தால் வேறுபட்டவர்களே. ஏறக்குறைய ஒன்பதாம் நூற்றாண்டு தொடங்கிப் பன்னிரண்டு: பதின்மூன்றும் நூற்றாண்டு வரையில் இத்தகைய உரையாசிரியர்கள் பல சங்ககால இலக்கியங்களுக்கும் பிற்காலக் காப்பியங்களுக்கும் தொல்காப்பியத்துக்கும் உரை எழுதினார்கள், அந்த இலக்கண இலக்கிய நூல்களின் ஆழ்பொருள்களை இவை விளக்கியதோடு, தமிழ் உரைநடையின் தரத்தையும் உயர்வையும் உலகுக்குக் காட்டின. இவ்வுரைகளைப் பயில்வார் உண்மையில் அக்காலத்தில் வாழ்ந்த புலவர்தம் உரைநடை எழுதும் ஆற்றலை நன்கு உணரமுடியும். ஒரு சிலர் தம் உரைநடையில் வேற்று மொழிச் சொற்களை பழங்காலத்திலும் அதிகமாகப் பயன்படுத்தினார்கள் எனினும் அக்காலத்திய உரைநடை போற்றற்குரியதேயாகும். இந்தப் பழைய உரையாசிரியர்களை ஒட்டி, பிற்காலத்தில் - பதினாறும் நூற்றாண்டிற்குப் பிறகு வந்த சிவஞான முனிவர், சங்கர நமசிவாயர் சைவ சொக்கப்ப நாவலர் போன்ற நல்லறிஞர்கள் பல நூல்களுக்கு உரை எழுதிச் சென்றனர். தொல்காப்பிய முதற்சூத்திரத்திற்கும் பாயிரத்துக்கும் சிவஞான போதத்துக்கும் சிவஞான முனிவர் எழுதிய விருத்தி உரைகளும் பாடியமும் சிறந்த உரைநடைகளாகப் போற்றப் பெறுகின்றன. சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் இவர்களை ஒட்டிப் பல இலக்கியங்களுக்குத் தெளிந்த உரை எழுதுபவர் பலர் உள்ளமை அறிகிறோம். எனவே தமிழ் உரைநடை இவ்வாறாய நூல்களின் விளக்கங்காட்டும் முகத்தான் நன்கு வளர்ந்தமை கண்கூடு.

இடைக்காலத்தில் தமிழ் உரைநடை மற்றொரு வகையிலும் வளர்ந்தது. ஆம் - கற்கள் உரைநடையை வளர்த்தன. பாறைகளும் கோயில் மதிற்சுவர்களும் தமிழ் உரைநடையை வளர்த்த பெருமைக்கு உரியன. இடைக்காலத்தில் வாழ்ந்த தமிழக மன்னர்களும் மற்றவர்களும் தாம் ஆற்றிய அறப்பணிகள் பற்றிய நிலைத்த குறிப்பினை அவ்விடங்களில் செதுக்கி வைத்தனர். அவற்றுள் முற்பகுதி பெரும்பாலும் அவ்வக் காலத்தில் ஆண்ட அரசர்தம் புகழ்பாடும் மெய்க்கீர்த்திகளாக அகவற்பாவில் அமைய, பிற்பகுதியாகிய செய்தி உரைநடையாகவே இருக்கக் காண்கின்றோம், இவற்றை வடித்தவர்களுள் பலர் கல்லா மாந்தர்களாகவும் இருந்தமையின் அவ்வுரைநடை கலப்பு மொழியில் அமைந்துள்ளது. எனினும் தமிழ் உரைநடையை வளர்த்த பெருமை இக்கற்களுக்கும் உண்டு.

இடைக்காலத்தில் இலக்கிய மரபு சிறிது மங்கத் தொடங்கியது. வடமொழியை அதிகமாகக் கலத்தலே பெருமைக்குரிய செயலாக மதிக்கப்பெற்றது. இந்த நிலை உரைநடையிலும் காண்கிறோம். ‘மணிப்பிரவாள’ நடை எனப் பெயர் தந்து, மணியும் பவளமும் இணைந்தாற் போன்று வடமொழியும் தமிழும் இணைந்து எழுதிய காலம் ஒன்று தமிழ் இலக்கிய வரலாற்றில் உள்ளது. வைணவ இலக்கிய ‘ஈடு’ எனும் உரையும் ஸ்ரீபுராணம் முதலிய உரைநடை நூல்களும் பிறவும் அந்த வகையைச் சார்ந்தன. அவையும் தமிழ் உரைநடை வளர்ச்சியில் பங்கு கொள்ளுகின்றன என்றாலும், அவை தமிழ் மரபுக்கு மாறுபட்ட வகையில் அமைந்த காரணத்தால் சிறக்க வாழாது எங்கோ ஒரு சிலரிடை நின்று நிலைகுலைந்தன.

இன்று அவை நல்ல தமிழிலே மொழி பெயர்த்தமையாலே ஓரளவு உணரப்பெறுகின்றன. பிற்காலத்தில் 'நாட்குறிப்பு' எழுதும் வழக்கம் இன்றெனினும் ஆநந்தரங்கம் பிள்ளையின் 'நாட்குறிப்பு' போன்றன தமிழ் உரைநடை வளர்ச்சியில் பங்கு கொண்டன என்பதையும் ஈண்டு குறித்தல் வேண்டும். (இவைகள் அனைத்தையும் மேற்கோள் காட்டி விளக்கின் எல்லையற்று விரிவடையும் என்ற காரணத்தால் இவ்விளக்கங்களோடேமேலே செல்கின்றேன்.)

இவ்வாறு தொல்காப்பியர் காலந் தொட்டு வளர்ந்த தமிழ் உரைநடை கடந்த ஓரிரு நூற்றாண்டுகளில் மிக நன்கு வளர்ச்சியுற்றமையைக் காண முடியும். மேலை நாடுகளிலிருந்து ஆட்சியின் பொருட்டும் வாணிபத்திற்காகவும் சமயம் வளர்க்கவும் தமிழ் நாட்டை நாடிவந்த பலருள் சிலர் தமிழ் மொழியை நன்கு பயின்று, அம்மொழியில் இலக்கியம் எழுதும் அளவிற்குச் சிறந்திருந்தனர். ஒரு சிலர் தாமே பாட்டு, உரைநடை. இலக்கியங்கள் எழுத, ஒரு சிலர் ஊர் தொறும் சென்று ஆங்காங்கே வழங்கிவந்த கதைகளையும் பிறவற்றையும் தொகுத்து உரைநடையில் வெளியிட்டனர். தத்துவ போதகர் என்ற இராபர்ட்-டி-கோபிலி (Robert-De-Nobili) என்பாரும் வீரமாமுனிவரும் தத்தம் சமய உண்மைகளை உரைநடையில் வடித்துள்ளனர். மெக்கன்சி (Mac Kenzie), வில்சன் (H. M. Wilson) ஜான் முர்டாக் (John Murdock) போன்ற அறிஞர்கள் ஆங்காங்கே ஊர்தொறும் சென்று மக்களோடு பழகி, அவர்தம் வரலாற்றையும் வழக்காற்றுக் கதைகளையும் பிற பழக்க வழக்கங்களையும் தமிழ் உரைநடையில் எழுதி வைத்தனர். இவை யாவும் தெளிந்த நடையில் உள்ளன எனக் கொள்ள முடியாவிடினும் இவையும் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு உதவின என்பதை மறுக்க முடியுமோ?

சென்ற நூற்றாண்டிலும் அதற்கு முன்பும் தமிழில் உரைநடை மிக அதிகமாக வளர்ச்சியுற்றமையைக் காண்கிறோம். அவ் வளர்ச்சிக்கு மேலை நாட்டினர் மட்டுமின்றி அவர் வழியே வந்த அச்சுப்பொறியும் இதழ் முதலியனவும் அரசியல் அறிக்கைகளும் சமுதாய வாழ்வு பற்றிய வரலாற்று நூல்களும் வழிவகுத்தன. இந்தியாவிலேயே முதல் முதல் அச்சான நூல் தமிழ் நூலே. 1578ல் அம்பலர் காட்டில் 'தம்பிரான வணக்கம்' என்ற கத்தோலிக்கச் சமய நூல் தமிழில் முதல்முதல் அச்சிடப்பெற்றது. அச்சகங்கள் நாட்டில் வளர வளரப் பல்வேறு நூல்கள் உரைநடையில் எழுதி வெளியிடப்பெறலாயின. உலக அறிவியல் வளர்ச்சி பெருகப் பெருகவும் செய்தி அறியும் அவா மிகவும் பல்வேறு நாள் இதழ், கிழமை இதழ், திங்கள் இதழ் போன்றவை எல்லா நாடுகளிலும் வளர்ந்தமை போன்று, தமிழ்நாட்டிலும் வளரலாயின. 1830ஆம் ஆண்டுக்குப் பிறகே தமிழ் நாட்டில் இதழ் தொடங்க எண்ணினர். பிறகு பலவகையில் பல இதழ்கள் வெளிவரலாயின. அரசாங்கத்தாரும் தம் அறிக்கை, உத்தரவு, பிற செய்திகள் இவற்றைப் பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டித் தமிழில் தாள்களும் இதழ்களும் அவ்வப்போது வெளியிடத் தொடங்கினர். இவ்வாறாக இதழ்களுக்கு அரசாங்கம் 'அஞ்சல் சலுகை' முதலியன அளித்து, அவை நன்கு வளர வாய்ப்பும் அளித்தது. சென்ற நூற்றாண்டுவரை இதழ்கள் அதிகமாக வளர்ச்சி அடையவில்லை என்றாலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் நாடு உரிமை பெற்ற பின்பும் தமிழில் எண்ணற்ற இதழ்கள் தோன்றி வளர்ந்து வாழ்கின்றன. இவற்றுள் மிகப் பெரும்பாலன உரைநடை பற்றியனவே. எனவே இன்றைய உரைநடை வளர்ச்சியில் இவற்றிற்குப் பெரும்பங்கு உண்டு.

சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் கல்வித்துறையில் கணக்கற்ற உரைநடை நூல்கள் தோன்றியுள்ளன. பள்ளியில் பயிலும் மாணவர்கள் தமிழை மட்டுமன்றி, தமிழில் பல்வேறு பாடங்களையும் படித்த காரணத்தால், உரைநடையில் மாணவர் வகுப்பிற்கும் தரத்துக்கும் ஏற்பப் பல்வேறு பொருள்களைப் பற்றி—நிலவியல், சமூகவியல், வரலாறு அறிவியல் பற்றி—உரைநடையில் பல நூல்களை எழுதினர். அப்படியே தமிழில் நல்ல உரைநடை நூல்கள் பாடங்களாக அமைந்தன. எனவே தமிழகக் கல்வித்துறையும் உரைநடை வளர்க்க உதவியது எனலாம்.

சமயத்துறையிலும் உரைநடை வளர்ச்சியுற்றது. கிறித்தவம், மகமதியம், சைவம், வைணவம் ஆகிய சமயங்கள் தத்தம் உண்மைகளை மக்களுக்கு எளிய முறையில் உணர்த்துவதற்காக போட்டியிட்டுக் கொண்டு சிறியவும் பெரியவுமாகப் பல நூல்களை வெளியிட்டன. கிறித்தவர் விவிலிய நூலைப் பல்வேறு வகைகளில் உரைநடையில் மொழி பெயர்த்து மக்களுக்கு வழங்கினர். பெரிய

புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் போன்ற பாட்டு நூல்களை எல்லோரும் படித்து உணர்ந்து கொள்ளும் பொருட்டு உரைநடையில் பலர் எழுதி வெளியிட்டனர். இவைகளையன்றி விக்கிரமாதித்தன் கதை, பன்னிரண்டு மந்திரி கதை போன்ற பல கதைகளும் சாதாரண மக்கள் படித்தும் கேட்டும் மகிழத்தக்க வகையில் உரைநடையில் எழுதப்பெற்றன. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுக நாவலர், இராமலிங்க அடிகளார் போன்றவர்களும் பிறரும் சமய உண்மைகளை எளிய வினு விடை வாயிலாகவும் கட்டுரை வாயிலாகவும் தமிழ் உரைநடையில் விளக்கிக் காட்டினர். சென்ற நூற்ருண்டின் இறுதியிலும் இந்த நூற்ருண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த மறைமலை அடிகள், சாமிநாத ஐயர் போன்ருர் தமிழ் உரைநடையில் எழுதிய நூல்களை நாடு நன்கு அறியும். அவர்தம் மரபில் நின்று திரு.வி.க, போன்ற பேரறிஞர்கள் அறிவுக்களஞ்சியங்களாகப் பல நல்ல தமிழ் உரைநடை நூல்களை, ஆராய்ச்சி—பயணம் — சமயம்—தத்துவம் — தர்க்கம் போன்ற பல துறைகளில் வெளியிட்டுள்ளமையை நன்கு அறிவோம். இவ்வாறு கடந்த இரு நூற்ருண்டுகளில் தமிழ் உரைநடை வளர்ச்சி பெற்றுள்ளது.

இவ்வுரை நடைத் துறையில் மிக முக்கியமானது நாவல், சிறுகதை, நாடகப் பகுதியாகும். சென்ற நூற்ருண்டில் மரியாதை ராமன் கதை (1812). முப்பத்திரண்டு பதுமை கதை (1804). சதமுக ராவணன் கதை (1818), தாடி வெண்ணெய்க்காரன் கதை (1843). விறலிமாறன் கதை (1828), தமிழறியும் மடந்தை கதை (1812) முதலிய கதைகள் எழுதி அச்சிடப்பெற்றன. மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய 1835ல் வெளியான 'பிரதாப முதலியார் சரித்திரமே' தமிழில் முதல் நாவல் என்பர். அவர் முன்னுரையில் தமிழில் உரைநடை நூல் இல்லாக் குறையை நிறைவு செய்யவே அதை எழுதியதாகக் குறிக்கிருர். எனினும் அதற்கு முன்பும் அத்தகைய நாவல்கள் தமிழ்நாட்டில் உலவின எனக் காண்கிருேம். இன்று பலர் வரலாற்று அடிப்படையிலும் இலக்கிய உணர்வு அடிப்படையிலும் சமுதாயச் சூழ்நிலையிலும் பல்வேறு வகையில் நாவல்களை வெளியிடுகின்றனர். அவ்வாறே சிறுகதையும் தமிழ் உரைநடை இன்று நன்கு வளர்ச்சியுற்றுள்ளது. இவற்றை எழுதும் ஆசிரியர்களும் அவற்றை வெளியிடும் இதழ்களும் பலப்பல. இவ்வாறே உரைநடையில் நாடகங்களும் பதினெட்டாம் நூற்ருண்டிலிருந்தே எழுதப்பெற்று வருகின்றன. பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய நாடகங்கள் இத்துறையில் மறக்க முடியாதன. இன்று நாடக உலகைத் திரைப்பட உலகம் கைப்பற்றிய தென்ருலும் அத்திரைப் படமும் தமிழ் உரை நடையை வளர்க்கின்ற தென்பதை அறிவோம், இவை மட்டுமன்றி வானெலியில் பல்வேறு வகைப் பேச்சு வரிசையில் தமிழ் உரை நடைவளர்ந்து வருகின்றது. இன்று உயர்நிலைப் பள்ளியில் மட்டுமன்றிக் கல்லூரியிலும் அறிவியல் உட்பட எல்லாப் பாடங்களும் தமிழிலேயே பயிற்றப்பெற வேண்டிய அடிப்படையில் பல்வேறு துறைகளில் தமிழ் உரை நடையில் நூல்கள் வெளிவருகின்றன. அரசாங்கமும் தனியார் நிறுவனங்களும் எண்ணற்ற தமிழ் உரை நடை நூல்களை இன்றைய அச்சுப்பொறி வளர்ச்சியின் வளத்தால் மக்கள் விரும்பும் வகையில் வெளியிட்டு வருகின்றன. நூல்நிலைய அமைப்பு இந்த வகையில் பெரிதும் துணையாகின்றது. எனவே இந்த நூற்ருண்டில்—கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் தமிழ் உரைநடை அதிகமாக வளர்ச்சி அடைந்துள்ளமையைக் காண்கிருேம். அரசாங்கங்களும்—மைய மாநில அரசாங்கங்களும்—நல்ல நூல்களுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டங்களையும் மேற்கொண்டுள்ளன.

இத்தனை வளர்ச்சிக்கிடையிலும் நம் நாட்டில் பிற மொழியாளர்களும் வெளிநாட்டு மொழியாளர்களும் அவரவர் மொழியில் உரைநடையில் நூல்கள் எழுதி வளர்ச்சியுற்ற—வளர்ச்சியுறும் எல்லையை நாம் அடையவில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்திய நாட்டில் சில மொழிகளில் இன்றைய உலக அரங்கில் பேசப் பெறும் அறிவியல், சமுதாய, சமய, வாழ்வியல் நூல்கள்—பல்வேறு கூறுபாடுகளில்—வகைகளில் எழுதப்பெற்று வருகின்றன. தமிழில் அத்தகைய வளர்ச்சி இல்லை என்பதை அவற்ருேடு தமிழை ஒப்புநோக்கி ஆய்வார் கண்டு வருந்திக் கூறுகின்றனர். எத்தனை எத்தனையோ வகைகளில் பல மொழிகளில் புத்தம் புதிய கருத்துக்களைத் தாங்கி நூல்கள் வெளிவருகின்றன என்றும் அவற்ருேடு ஒப்புநோக்கி ஆராயப் போதிய தமிழ் உரைநடை நூல்கள் இல்லை என்றும் ஆய்வாளர் கருதுகின்றனர். எனவே சென்ற காலத்தின் பெருமையில் நம்மை நாம் மறந்து விடாது, வருங்காலத்தில் உலக சமுதாயத்துடன்—இந்தியாவின் பிற மொழியாளருடன்

நாமும் சரிநிகர் சமானமாக வாழவேண்டுமாயின், பிற துறைகளுடன் தமிழ்மொழியில் சிறப்பாக உரைநடையில் எண்ணற்ற நூல்களை வெளியிட வேண்டும். அரசாங்கமும் அறிஞர்களும் பிற செல்வர்களும் தமிழ் நாட்டு மடங்களும் பிற நிறுவனங்களும் முயன்றால் தமிழ் உரைநடையில் உலகப் பொருள்கள் அனைத்தையும் கொண்டுவந்து காட்டலாம். அத்தகைய ஆக்கப்பணிக்கு அனைவரையும் 'சேர வாரீர்' என்று அழைத்து அமைகின்றேன்.

அ. மு. பரமசிவானந்தம் எம்.ஏ., எம்.லிட்,
(தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி)
தமிழ்க்கலை இல்லம்
சென்னை-600030

அடிக் குறிப்பு

1 பரிபாடல் 8- 35
2 Encyclopaedia Britanicca Vol. 18, pp. 591 & 592
3 Chamber's Twentieth CenturyDictionary p. 738
4 Oxford Dictionary p. 925

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிரு நாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே

—மனோன்மணீயம்

அறமே என்றும் வளரட்டும்!
அறிவுக் கூர்வாள் சுழலட்டும்!

அறமே என்றும் வளரட்டும்!
அறிவுக் கூர்வாள் சுழலட்டும்!
அறமே என்றும் வளரட்டும்!
அறிவுக் கூர்வாள் சுழலட்டும்!

பண்புப் பயிர்நம் மக்கள் நெஞ்சில்
பசுமை கொண்டே வளரட்டும்,
அன்புப் பிடியில் இன்பக் கடலில்
அமர்ந்து மக்கள் வாழட்டும்.
அறமே என்றும் வளரட்டும்!

கயமை சூழ்ச்சி வஞ்சம் யாவும்
கலக்க முற்றே ஓடட்டும்
அயர்ச்சி நீங்கித் திமைப் பண்பை
அழிக்க மக்கள் திரளட்டும்.
அறிவுக் கூர்வாள் சுழலட்டும்!

உண்மைப் பொருளைக் காண்டற் கென்றே
உலகத் தார்கள் முயலட்டும்.
அண்மைப் பொருளாய் அதனைக் கண்டே
அவர்தம் வாழ்வை உணரட்டும்.
அறமே என்றும் வளரட்டும்!

நெஞ்சில் சேரும் அழுக்கை நீக்கி
நிமிர்ந்து மக்கள் நிற்கட்டும்.
அஞ்சா நெஞ்சின் தூய வீரம்
ஆறு போலப் பெருகட்டும்.
அறிவுக் கூர்வாள் சுழலட்டும்!

ஓய்வில் லாமல் உலகைக் காக்கும்
உண்மைச் சால்பு வளரட்டும்.
ஆய்வு நோக்கில் நன்மை சேர்க்கும்
அன்பர் வாழ்க்கை தொடரட்டும்.
அறமே என்றும் வளரட்டும்!

அறமே என்றும் வளரட்டும்!
அறிவுக் கூர்வாள் சுழலட்டும்!
அறமே என்றும் வளரட்டும்!
அறிவுக் கூர்வாள் சுழலட்டும்!

Dr Pon. Kothandaraman
M. A., B. O. L., Ph. D., Dip. in Bengali
238 Stage XII B
State University of NewYork
Stony Brook NY 11790 U S A

நீலகிரி இருளர்களின்
உறவுமுறைப் பெயர்கள்

ஆர். பெரியாழ்வார்

முன்னுரை

இந்திய நாட்டில் ஏறத்தாழ மூன்று கோடிக்கும் மிகுதியான பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்களை 427 இனங்களாகப் பகுக்கின்றனர். இவ்வினங்களில் சிலவற்றின் மக்கள் தொகை நூற்றுக்கும் குறைவாக உள்ளன. நூற்றுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் மக்கள் தொகையைக் கொண்ட இனங்களும் உள்ளன. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 23 இனப் பழங்குடியினர் வாழ்வதாக 1961ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பு கூறுகிறது. இப் பழங்குடி இனங்களை நாடோடிப் பழங்குடி மக்கள் என்றும், பழங்குடி மக்கள் என்றும் இருபிரிவாகப் பிரிக்கின்றனர். தமிழ் நாட்டில் நீலகிரி மாவட்டத்தில்தான் மிகுதியான பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். நீலகிரி மாவட்டத்தில் வாழும் பல்வேறு பழங்குடிகளுள் இருளப் பழங்குடி இனமும் ஒன்று. இவ்விருளப் பழங்குடி மக்கள் மலைதேச இருளர் என்றும், மலைநாட்டு இருளர் என்றும், நீலகிரி இருளர் என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். இவ்விருளப் பழங்குடி மக்களின் உறவு முறைப் பெயர்கள் இக் கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

உறவு முறை:

"இரத்தக் கலப்பாலும், பெற்றோர் கால் வழியாலும் மண உறவினாலும், ஒரே குழுவினர் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவு முறை அமைகிறது. சமுதாயத்தில் சமுதாய நடைமுறை அடிப்படையில் இருந்து எழுவதுதான் உறவுமுறைப் பெயர்கள் என டாக்டர் ரிவர்ஸ் கூறுகிறார். சமுதாயத்தில் ஓரின மக்களின் பண்பாட்டு வரலாற்றை எடுத்து இயம்புவதற்கு உறவு முறைப் பெயர்கள் பெரிதும் பயன்படுகின்றன என டாக்டர் ஐராவதிகர்வே கூறுகிறார்கள்.[1]

உறவு முறை அமைப்பும், உறவு முறைச் சொற்களும்:

"உறவுமுறை அமைப்பு சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட உறவு நெறிகளுக்கு உட்பட்டனவாக இருக்கும். உறவுநெறிகள் இவ்வுறவு முறைகள் பரம்பரை மரபுகளை ஒட்டியும் அமையும். உறவுமுறைகள் பற்றிய ஆய்வுமிகப் பழமையானதாகவும், முக்கியமானதாகவும் அமைவதோடு, இவ்வாய்வு சமுதாய அமைப்பின் கூறுகளைப் பெரிதும் தெளிவுப்படுத்துவதாகவும் அமைகின்றது. உறவு முறைச் சொற்களை மொழியியல், இனவியல், சமுதாயவியல், உளவியல் ஆகிய கண்ணோட்டங்களில் ஆராயலாம். உறவுமுறைச் சொற்களுக்கும் சமுதாய அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக பிரவுன் என்பவர் கருதுகிறார். குறிப்பிட்ட உறவுமுறைச் சொற்கள் சமுதாயத்தின் சில குறிப்பிட்ட இயல்புகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன என ரிவர்ஸ் என்பவர் கருதுகிறார். குரோபர் என்பவர் உறவுமுறைச் சொற்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது மொழியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்."[2]

உறவுமுறைப் பகுப்பு : உறவுமுறைச் சொற்களின் பகுப்பு:

"வமிசவழித் தொடர்பாலோ, சொந்தத்தினால் உண்டாகும் கடமைகளாலோதான் உறவு முறை சரியாக வரையறுக்கப்படலாம். உறவு முறையின் எல்லாப் பாகுபாடுகளும், தாய் தந்தையர் மூலம் உள்ள உறவுகள், மணவினை காரணமாக எழும் உறவுகள் ஆகியவற்றுள் அடங்கும். உறவுமுறையைக் குறிப்பிடும் சொற்கள் குடும்ப முறையைக் குறிப்பவை, வருணனை முறையைக் குறிப்பவை, பாகுபாட்டு முறையைக் குறிப்பவை என மூன்று வகைப்படும்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், முக்கியமாக இங்கிலாந்திலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் குடும்பம் என்பது பெற்றோரையும் குழந்தைகளையும் கொண்ட ஒரு சமூக சங்கமாகும். அக்குடும்பத்தில் வாழும் மக்களுடைய கடமைகள் சரிவர வகுக்கப்பட்டுள்ளன. ஆயினும் அக்குடும்பத்திற்குள் இல்லாத உறவினர்களின் கடமைகள் வரையறுக்கப்படாமையால் உறவுமுறை இன்னதென்று விளக்கமாகத் தெரியாமல் இருக்கின்றது இத்தகைய சமூகங்களில் தந்தை, தாய், சகோதரன், சகோதரி, மகன், மகள், கணவன், மனைவி என்ற சொற்கள் ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்களை மட்டும் குறிப்பதற்கு ஆளப்படுகின்றன. மற்ற உறவினர்கள் அனைவரும் அங்கிள் (uncle) ஆண்ட் (aunt) கசின் (cousin) நெவ்யூ (nephew) என்னும் பிரிவுகளுக்குள் அடங்கிவிடுகின்றனர். அவர்களைத் தனித்தனியே குறிக்கத் தகுந்த

சொற்கள் இல்லை. இத்தகைய உறவுமுறை சுட்டுமுறை (Denotative system) என்று வழங்கப்படுகிறது. ரிவர்ஸ் என்பார் இதற்குக் 'குடும்ப முறை' என்று பெயரிட்டுள்ளனர்.

ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்களைக் குறிக்க ஏற்பட்ட சொற்களைக் கொண்டே குடும்பத்திற்குள் அடங்காத மற்ற உறவினரைக் குறிப்பிடுவது இரண்டாவது முறையாகும். அரபு மொழி பேசும் மக்களிடை இது வழக்கிலுள்ளது. இம் முறை வருணனை முறை என்று வழங்குகிறது. இம் முறைப்படி தந்தையின் சகோதரன் 'அம்' அவன் மனைவி, 'இம்ராத் அம்மி', தந்தையின் சகோதரனுடைய புதல்வன், 'இபின் அம்மி,' தந்தையின் சகோதரனுடைய புதல்வி, 'பிந்த்து அம்மி'.

மேற்கூறியவை தவிரப் பெரும்பாலும் மக்களிடை வழங்கி வரும் இன்னொரு முறையுமுண்டு. அதை பாகுபாட்டு முறை எனலாம். இம்முறைப்படி, சமூகத்தில் பொதுவான சில கடமைகளையுடைய உறவினர் எல்லோரும் ஒரு சொல்லால் குறிக்கப்படுவர். ஆயினும் அவர்களுள் நெருங்கிய உறவினரே முக்கியமானவராகக் கருதப்படுவர். வட, தென் இந்தியப் பிரதேசங்களிலுள்ள மக்கள், தந்தையின் சகோதரர்களைப் 'பெரிய தகப்பன்' 'சிறிய தகப்பன்' என்னுஞ் சொற்களாலே குறிப்பிடுகின்றனர். சமூகத் தொழில்களைப் பொறுத்தவரை, தந்தையின் சகோதரர்கள் அனைவரும் சமமானவர்களே. இதை அடிப்படையாகக் கொண்டே சில உறவினர்கள் ஒன்ருகப் பகுக்கப்பட்டு ஒரே சொல்லால் குறிக்கப்படுகின்றனர். தென்னிந்தியாவில் ஆண் மகன் ஒருவன், தன் தாய் மாமன் மகளை மணந்து கொள்ளும் வழக்கம் உண்டு. இதனுல் மனைவியின் தந்தையையும், தாயின் சகோதரனையும் குறிக்கத் தென்னிந்தியாவில் மாமன் என்னும் சொல் வழங்கப்படுகின்றது; தாயுடன் பிறந்தவனை அம்மான் என்றும் முறை கொள்வார்கள்.

வடமொழியில் உறவு முறைகளைக் குறிக்குஞ் சொற்களுட் சில வருணனை முறையைச் சேர்ந்தனவாயினும், பெரும்பாலும் அவை பாகுபாட்டு முறையைச் சேர்ந்தனவே. தமிழ் மொழியில் வழங்கும் உறவுமுறைச் சொற்கள் அவற்றினும் மிகுதியாகப் பாகுபாட்டு முறையைச் சேர்ந்தவை.

உறவு முறையால் எழும் கடமைகள் மாறும்போது, அவை பற்றிய சொற்களும் மாறுகின்றன. ஆயினும் பழைய கடமைகளின் சில அமிசங்கள் வழக்கில் இருப்பினும், பழைய சொற்களே நிலவி வருகின்றன. இதனுல் உறவுமுறைச் சொற்களைக் கொண்டு முற்காலத்திருந்த சமூக நிலையை ஆராய்ந்தறிய இயலுகிறது. இவ்வாராய்ச்சி, மார்கன் என்பவரால் தொடங்கப்பட்டு, ரிவர்ஸ் என்பவரால் விஞ்ஞான முறையில் வளர்ச்சியடைந்தது. ஒன்றுக்கு மேற்பட்ட கடமைகளால் சொற்கள் மாறுபாடு அடைந்திருக்கக்கூடும்."[3]

டாக்டர் ஐராவதிகர்வே 'இந்தியாவில் உறவு அமைப்பு' என்ற தன் ஆங்கில நூலில் இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இன மக்களின் உறவு அமைப்பு பற்றி ஆராய்ந்துள்ளார். திராவிட மொழிக் குடும்ப இனமக்களின் உறவு முறைகள் பற்றியும் ஆய்வு நடத்தியுள்ளார். ஆனுல் இருள இனமக்களின் உறவுமுறையைப் பற்றி ஆராயவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னிந்திய உறவுமுறைப் பற்றிய மானிடவியல் அறிஞர்களின் நோக்கு:

"துமோன் (Dumont) என்பவர் வட இந்திய உறவுமுறைச் சொற்கள் தென்னிந்திய உறவுமுறைச் சொற்களுக்கு இணையாகவும் ஒழுங்கான வரையறைக்குட்பட்டும் அமையவில்லை என்ற கருத்தைத் தன் கட்டுரை ஒன்றில் எடுத்துக் கூறியுள்ளார். வட இந்திய தென்னிந்திய உறவுமுறை பழக்கங்களில் பல பொதுக் கூறுகள் காணப்படினும் வடஇந்திய உறவுமுறைச் சொற்களைத் தென்னிந்திய உறவுமுறைச் சொற்களோடு ஒப்பு நோக்கும்பொழுது வரையறுக்கப் படாதனவாகவும் அமைப்புக்குட்படாதனவாகவும் காணப்படுவதாக அவர் வருத்தத்துடன் குறிப்பிடுகிருர். மேற்குறிப்பிட்ட முக்கிய வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு துமோன் ஒரு புதிய நெறியை வகுத்துள்ளார்."[4]

"மார்கன் தொடங்கி இன்றுவரை தென்னகத்திலும் ஈழத்திலும் ஆய்வுகள் நடத்திய மானிடவியல் அறிஞர்கள் இப்பகுதியில் வழங்கும் உறவுமுறைச் சொற்களில் சில பொதுமைகள் உள்ளன என்பதை உணர்கின்றனர். கோஃப் என்பவர் ஒருவகையான அத்தை மாமன் பெண் திருமணமுறை இப்பகுதியில் வழக்கில் உள்ளது என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். துமோன் தென்னிந்தியா உறவுமுறை அமைப்பில் அடிப்படை ஒப்புமைகள் உள்ளன என்றும் அவ்வுறவு முறைச் சொற்கள் திராவிட இன உறவு முறை அமைப்பைக் காட்டுவனவாகக் கருதப்பட வேண்டும் என்று வற்புறுத்தி வந்துள்ளார். மேற்குறிப்பிட்ட முக்கிய வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு துமோன் வகுத்த நெறி ஆய்வுக்குரிய ஒன்ருகும்.[5]

இதுவரை உறவுமுறை (Kinship) என்றால் என்ன என்பது பற்றியும் அவை பற்றிய ஆய்வு எவ்வகையில் பயனுள்ளது என்பது பற்றியும் விளக்கப்பட்டது. வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் உள்ள உறவுமுறைகளுக்கு இடையே அடிப்படை வேறுபாடுகள் பற்றி மானிடவியல் அறிஞர் களின் முடிவுகளைப் பார்த்தோம். இனி தமிழகத்தில் நீலகிரி மலையில் வாழும் இருளப் பழங்குடிகளின் உறவுமுறைச் சொற்களையும், அச்சொற்கள் விளக்கப்படும் முறையையும் காண்போம்.

ஒரு உறவுமுறைப் பெயர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறவுவகையைக் குறிக்கப் பயன்படுகிறது. ஆளெ, பெண்டு போன்ற உறவுமுறைப் பெயர்கள் ஒரே ஒரு உறவு வகையை மட்டும் குறிக்கப்பயன் படுகின்றன. மாமெ போன்ற உறவுமுறைச் சொல் தாயின் சகோதரன், தந்தையின் சகோதரியின் கணவன் போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட உறவு வகைகளைக் குறிக்கப்பயன் படுகின்றன ஒரு உறவு முறைப் பெயர் உயர்ந்தபட்சம் ஆறு அல்லது ஏழு வகைகளைக் குறிக்கப்பயன்படுகிறது.

1. அய்யா: தந்தையின் தந்தைக்கு தந்தை, தாயின் தந்தையின் தந்தைக்கு தந்தை, இச்சொல்லால் விளிக்கின்றனர்.

3. எத்தப்பெ: தந்தையின் தந்தையையும், தாயின் தந்தையையும் இச்சொல்லால் அழைக்கின்றனர்.

3. எத்தெ: தந்தையின் தாயையும் தாயின் தாயையும் இச்சொல்லால் குறிக்கின்றனர்.

4. தொடப்பெ: (doḍappä) தந்தையுடன் பிறந்த மூத்த சகோதரனையும், தாயுடன் பிறந்த மூத்த சகோதரியின் கணவனையும் அழைக்க இச்சொல்லைப் பயன்படுத்து கின்றனர்.

5 தொட்டெ: தந்தையுடன் பிறந்த மூத்த சகோதரரின் மனைவியையும், தாயுடன் பிறந்த மூத்த சகோதரியையும் இச்சொல்லால் விளிக்கின்றனர். தொட்ட என்ற சொல்லுக்கு படகமொழியிலும், கன்னடமொழியிலும் பெரிய என்று பொருள் உண்டு. படகமொழியிலும் இந்த உறவுமுறையைக் குறிக்க இதே சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

6. அம்மெ: தந்தையை அழைக்க இந்த உறவு முறைச் சொல்லைப் பயன்படுத்து கின்றனர். கேரளத்தில் கோழிக்கோடு வட்டார மொழியில் தந்தையை 'அம்மெ' என்று விளிப்பதாகத் தெரிகிறது.

7. அக்வெ: தாயை இச்சொல்லால் அழைக் கின்றனர்.

8. அச்செ: தந்தையுடன் பிறந்த இளைய சகோதரனையும் தாயுடன் பிறந்த இளைய சகோதரியின் கணவனையும் இந்த உறவு முறைச் சொல்லால் அழைக்கின்றனர். மலையாள மொழியில் தந்தையை 'அச்சன்' என அழைக்கின்றனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

9. அச்சி: தந்தையுடன் பிறந்த இளைய சகோதரனின் மனைவியையும் தாயுடன் பிறந்த இளைய சகோதரியையும் இந்த உறவு முறைச் சொல் கொண்டு அழைக் கின்றனர்.

10. அண்ணெ: தன்னுடன் பிறந்த மூத்தவனை யும், தாயின் சகோதரியின் மகனையும் தந்தையின் சகோதரனின் மகனையும் — தன்னைவிட வயதில் மூத்தவர் எனின் இச்சொல்லால் விளிக்கின்றனர்.

11. தம்பி: தன்னுடன் பிறந்த இளையவனையும் தந்தையின் சகோதரனின் மகனையும் தாயின் சகோதரியின் மகனையும் தன்னை விட இளையவர் எனின் இச்சொல்லால் அழைக்கின்றனர்.

12. அக்கெ: தன்னுடன் பிறந்த மூத்தவளை யும், தாயினுடைய சகோதரியின் மகளை யும், தந்தையுடைய சகோதரரின் மகளை யும் தன்னைவிட வயதில் மூத்தவரெனின் இவ்வுறவு முறைச் சொல்லால் விளிக் கின்றனர்.

13. தங்கெ: தன்னுடன் பிறந்த இளையவளை யும், தாயுடைய சகோதரியின் மகளையும், தந்தையுடைய சகோதரரின் மகளையும் தன்னைவிட வயதில் இளையவரெனின் இவ்வுறவுச் சொல்லால் அழைக்கின்றனர்.

14. மாமெ: தாயுடன் பிறந்த சகோதரர், தந்தையின் சகோதரியின் கணவன்; தன் மனைவியின் தந்தை, தன் கணவனின் தந்தை ஆகியோர்களைக் குறிக்க இச்சொல் பயன்படுகிறது.

15. மாமி: தந்தையின் சகோதரி, தாயின் சகோதரரின் மனைவி, தன் மனைவியின் தாய், தன் கணவனின் தாய் ஆகியோர் களை இவ்வுறவு முறைச் சொல்லால் அழைக்கின்றனர்.

16. பாவெ: தன்னுடன் பிறந்த மூத்தவளின் கணவனையும், தாயின் சகோதரியின் மகளின் கணவனையும், தந்தையின் சகோதரனின் மகளின் கணவனையும் குறிக்க இவ்வுறவு முறைச் சொல்லைக் கையாளுகின்றனர். தெலுங்கு மொழியிலும் கன்னட மொழியிலும் மேலே விளக்கிய உறவுமுறைகளை இதே சொல்லால் விளிக்கின்றனர்.

17. அத்திகெ: தன்னுடன் பிறந்த மூத்தவளின் மனைவியையும், தாயின் சகோதரியின் மகளின் மனைவியையும், தந்தையின் சகோதரனின் மகளின் மனைவியையும் தன்னைவிட வயதில் மூத்தவனின் மனைவியையும் இவ்வுறவு முறைச் சொல்லால் அழைக்கின்றனர்.

18. கொருவெ: தன் கணவனுடன் பிறந்த இளையவனையும், கணவனின் தாயுடன் பிறந்த சகோதரியின் இளையமகனையும், கணவனின் தந்தையுடன் பிறந்த சகோதரனின் இளையமகனையும் இச் சொல்லால் அழைக்கின்றனர்.

19. கொந்தி: தன் மனைவியுடன் பிறந்த இளையவளையும், மனைவியின் தாயுடன் பிறந்த சகோதரியின் இளையமகளையும், தன் தம்பி மனைவியையும், தன் தந்தையுடன் பிறந்த சகோதரர்களின் இளைய மகன்களின் மனைவிகளையும் அவ்வுறவு முறை கொண்டு அழைக்கின்றனர்.

20. மகெ/முகெ: தன் மகன், தன் சகோதரனின் மகன், தன் மனைவியின் சகோதரியின் மகன், இவர்களைக் குறிக்க ஆண் இச் சொல்லைப் பயன்படுத்துகிறான்.

பெண் தன் மகன், தன் சகோதரியின் மகன் தன் கணவனின் சகோதரரின் மகன் இவர்களைக் குறிக்க இவ்வுறவுச் சொல்லை பயன் படுத்துகிறாள்.

21. மக: தன் மகள், தன் சகோதரியின் மகள், தன் கணவனின் சகோதரரின் மகள் ஆகியோர்களை இவ்வுறவுமுறைச் சொல்லால் பெண் அழைப்பாள். தன் மகள் தன் சகோதரரின் மகள்; தன் மனைவியின் சகோதரியின் மகள் ஆகியவர்களை விளிப்பதற்கு ஆண் இச் சொல்லைப் பயன்படுத்துகிறான்.

22. மருமகெ: தன் மகளின் கணவன், தன் சகோதரியின் மகன் அல்லது தன் மனைவியின் சகோதரரின் மகன் ஆகியோர்களைக் கூற ஆணும், தன் சகோதரரின் மகன், தன் கணவனுடைய சகோதரியின் மகன் ஆகியோர்களைக் கூறப்பெண்ணும் இவ்வுறவுமுறைச் சொல்லைக் கையாளுகின்றனர்.

23. மருமக: தன் மகனின் மனைவி, தன் சகோதரரின் மகள், தன் கணவனின் சகோதரியின் மகள் இவர்களைக் கூறப் பெண்ணும், தன் சகோதரியின் மகள், தன் மனைவியின் சகோதரரின் மகள் - இவர்களைக் குறிக்க ஆணும் இச் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

24. ஆளெ: பெண்ணின் கணவன்

25. பெண்டு: ஆணின் மனைவி

26. பேரெ: தன் மகனின் மகன், தன் மகளின் மகன், தன் சகோதரனுடைய மகனின் மகன் அல்லது மகளின் மகன். தன் சகோதரியின் மகனின் மகன் அல்லது மகளின் மகன்.

27. பேத்தி: தன் மகனின் மகள், தன் மகளின் மகள், தன் சகோதரனுடைய மகனின் மகள் அல்லது மகளின் மகள். தன் சகோதரியின் மகனின் மகள் அல்லது மகளின் மகள்.

முடிவுரை:

இருளர்களின் உறவுமுறைப் பெயர்களின் அமைப்பு விளக்கம் இக்கட்டுரையில் தரப் பட்டுள்ளது. இவற்றை மொழியியல், மானிடவியல், சமூகவியல் நோக்கில் ஆராய இக்கட்டுரை அடித்தளமாக அமையும்.

ஆர். பெரியாழ்வார் எம்.ஏ.,டிப். தெலுங்கு
ஆய்வாளர், மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்-608101

Footnotes

1 Subbiah G. 'Koottarkaḷin uravumuraic corkal' *Aaraayeci* vol. 3 No. 2 Page 421 Tirunelveli (1971)

2 Charles Winick *Dictionary of Anthropology*, Iowa, USA

3 *Encyclopaedia of Tamil Volume* 2. Page 427, Madras (1955)

4 Nur Yalman "The Semantics of Kinship in South India and Ceylon" *Current Trends in Linguistics* Vol. 5 page 609. Paris and Hague (1969)

5 Louis Dumont 'Marriage in India': The present state of question Part III North India in relation to South India contributions to *Indian Sociology* 9. 103 (1966).

SELECT BIBLIOGRAPHY

1. Dr. Karve, Iravathy *Kinship organization in India* Asia Publishing House, Bombay (1953).
2. Emeneau M.B. 'Dravidian Kinship terms:' *Dravidian Linguistics ethnology and Folk tales.* Annamalai University, Annamalainagar.

ஒப்புரவும் வறுமையும்

டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்

திருவள்ளுவர் மனித வாழ்க்கையை ஆழமாக அலசி, தெளிவாக உணர்ந்து, மக்களின் நல்வாழ்வுக்காகப் பல வழிகளை நமக்குக் குறளமுத வடிவில் தந்துள்ளார். அவ்வாறு தந்த பலவகை கருத்துக்களில் ஒப்புரவு என்பது மிக உயர்ந்த ஒரு கருத்தாக உள்ளது. உலக மொழிகளிலுள்ள பல வகையான நூல்களிலும் காணப்படாத ஒரு பெரிய உண்மையை இந்த ஒப்புரவறிதலில் அவர் விளக்குகிறார். ஈகை என்பது தன்னை நாடிவந்து உதவுமாறு வேண்டுபவருக்குச் செய்யப்படும் உதவி. அதை வடமொழியில் 'தருமம்' என்பர். தர்மத்தைப் பற்றி எல்லா மொழிகளிலும் சிறப்பாகப் பேசப் பட்டுள்ளது. ஆனால் திருவள்ளுவர் 'ஒப்புரவிற்கு' ஒரு தனி இடத்தைக் கொடுத்துள்ளார். அதிலிருந்து ஈகையை வேறுபடுத்தியும் ஒரு தனி அழகோடு ஒப்புரவைப் பிரித்துக்காட்டியும் மக்களுக்குப் பண்பட்ட நாகரிகமான உயர்ந்த நெறியைக் காட்டுகிறார்.

'ஒப்புரவு' என்னும் சொல் இப்போது பொதுமக்களுக்குப் புரிகிற சொல்லாகப் பழக்கத்தில் இல்லை. அதனால், அதனுடைய விளக்கத்தை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். ஊரெல்லாம் ஒன்று எனக் கருதி ஒருவருக்கொருவர் உதவி வாழ்வது தான் ஒப்புரவாகும். சுருக்கமாகச் சொன்னால் சமூகத்திற்கு ஒருவன் செய்யும் நன்மைகளே ஒப்புரவு எனலாம்.

மனிதனுக்குக் கிடைத்த பெரும் சக்திகளில் சிந்தனை தலைமையானதும் முதன்மையானதும் ஆகும். மற்ற உயிரினங்களுக்குக் கிடைக்காத பெரும் சக்தி அது. விலங்குகளோ பறவைகளோ தம் இனத்திற்கோ மற்ற உயிரினங்களுக்கோ வரும் இன்ப துன்பங்களை அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவை. ஆனால், மனிதன் அந்த இன்ப துன்பங்களை அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல், அவற்றிற்குரிய காரணங்களையும் அறிந்த உணரும் சக்தி பெற்றுள்ளமை அவனின் தனிப் பெருகும்.

ஒவ்வொருவனும் தான்தான் அனுபவிக்க வேண்டியவை என நினைந்து அவற்றை நுகரும்போது, எதிர்பார்த்தது ஏதாவது கிடைக்கவில்லையானால் அவன் அப்பொருளை அடையாததனால் தன்னை வறுமையுடையவனாக எண்ணித் துன்புறுகிறான். ஒரு செல்வனுக்குப் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பது அவனளவில் அது 'சர்க்கரை வறுமையாகும்'. ஓர் ஏழை கூழுக்கு உப்பில்லை என வருந்துவது அவனளவில் அது 'உப்பு வறுமையாகும்'. இவை போலவே ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான பொருள் அனுபவிப்பதற்குக் கிடைக்காதபோது அதனால் வறுமையுற்றவராகவே கருதி வாழ்வது சாதாரண மக்கள் இயல்பு. ஆகவே வறுமைகள் பலவகைப் பட்டுள்ளன. ஆயினும், வள்ளுவர் காட்டும் வறுமை மிகப் புதுமையானது.

ஒரு குடும்பத்தாருக்குப் பல ஆண்டுகள் குழந்தைப்பேறே கிடைக்கவில்லை. மிக வருந்தினார்கள். குழந்தை வறுமை அவர்களை வாட்டியது. பிறகு அவர்களுக்கு ஒரு பெண் பிறந்தது. எவ்வளவு மகிழ்ச்சி? அதனை 'நல்கூர்ந்தார்' செல்வமகள் எனக் கலித்தொகை பேசுகிறது. வறுமை நீங்கினால் கிடைக்கும் மகிழ்ச்சி அளவற்றது. பிறர் துன்பம் கண்டு மனம் கசிந்து உடனே அவருக்கு அதனை நீக்க நினைக்கும் இயல்பான அறிவு கொண்ட ஒப்புரவாளனுக்கு எது வறுமை என்பதை மிக அழகாக வள்ளுவர் காட்டுகிறார். தனக்கு ஒன்று இல்லை என அவன் மனம் வருந்தவில்லை; தனக்குக் கிடைக்காததால் வறுமையுற்றதாக அவன் கருதவும் இல்லை. ஆனால், பிறர் துன்பமுறும்போது அதைப் போக்க முடியாத நிலை அவனுக்கு ஏற்படுமானால், அதனையே அவன் மிக மிக வறுமையாகக் கருதுகிறான். தன்னால் பிறருடைய துன்பத்தைப் போக்க இயலவில்லையே என வருந்தி, அவ்வாறு இயலாத நிலையையே அவன் வறுமையாகக் கருதுகிறான். அதாவது தன்னிடத்தில் இல்லாமை போதாமை காரணமாக, தான் வருந்துவது பற்றி, அவன் கவலைப் படவில்லை. அவற்றை வறுமையாகவும் அவன் நினைக்கவில்லை. ஆனால் தான் பிறர்க்கு உதவ இயலா நிலையில் இருப்பதையே வறுமையாகக் கருதுகிறான். ஆகையால் வள்ளுவர்

> "நயனுடையான் நல்கூர்ந்தானாதல் செயுநீர
> செய்யாது அமைகலா ஆறு"

என எடுத்துக்காட்டுகிறார்.

தான் அனுபவிக்க வேண்டியதைத் தன்னால் அனுபவிக்க இயலவில்லையே என்பதை நல்ல பண்பாளன் வறுமையாக நினைப்பதும் இல்லை. பிறர்க்கு உதவி அவர்களின் துன்பத்தைப் போக்க இயலவில்லை என்

பதையே அவன் வறுமையாகக் கருதுவான் என்கிறார் வள்ளுவர்.

கணவன் தன்னைவிட்டுப் பிரிந்துபோய் தனக்கு மகிழ்ச்சி தராமல் துன்பம் தருகிறானே என்பது கண்ணகிக்கு வருத்தமாய்த் தெரிய வில்லை. கணவன் தன்னுடன் இன்மையால் ஒப்புரவு செய்ய இயலவில்லையே என வருந்து வதை நாமறிவோம். எனவே, தனக்கு வரும் துன்பத்தைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல் பிறர் துன்பத்தை நீக்க இயலாத நிலையில் இருப்பதே வறுமையாகும் என நினைப்பது உயரிய நெறியாகும். "தன் துயர் காணாத் தகைசால் பூங்கொடி" எனக் கவுந்தியடிகள் கண்ணகியைப் பாராட்டுகிறார்களன்றோ?

கோவலன், தன் மகள் மணிமேகலைக்குப் பெயர் சூட்டும் நாளில் ஒரு துயரக் காட்சியைக் காண்கின்றான். ஒரு வயது முதிர்ந்த கிழவனை ஒரு யானை துதிக்கையால் பிடித்துத் துன் புறுத்தியது. கண்ட கோவலன், குதித் தெழுந்து, ஓடோடியும் போய், தன் உயிரைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல் அவனை விடுவிக்க முயன்றமை, ஒப்புரவுப் பண்பினாலன்றோ? பொய்க் கரியாளனுக்குப் பதிலாக கோவலன் தன்னுயிரைத் தர நினைப்பது எப் பண்பால்?

இவ்வாறு மக்கள் ஒவ்வொருவரும் தன் துயர்க்காணாமல் பிறர் துன்பம் கண்டு அதைப் போக்காமையை வறுமை என நினைந்து அவ் வறுமையைப் போக்க நினைந்து விடுவார்களானால் சமுதாயம் எவ்வளவு உயர்ந்துவிடும். அரசு சமுதாயத்திற்கு உதவுகிறதே! அவ்வாறிருக்க நாம் ஏன் செய்யவேண்டும் எனத் தோன்றலாம். சட்டங்கள் அச்சத்தால் மனிதனைச் சீராக்க முயல்கின்றன. அது முழு வெற்றி பெறுவதில்லை. ஆனால், மனத்தால் ஒவ்வொருவனும் ஒப்புரவுப் பண்பைக் கொண்டவனாய் இருந்தால் சமுதாயம் எவ்வளவு இனிமையாய் இருக்கும். தன்னை மறந்து பிறர்க்கு நன்மை செய்யும் தியாகப் பண்பைக் கொள்ளாதிருத்தலே வறுமை என வள்ளுவர் கூறும் உயரிய கருத்தை வாழ்க்கையில் ஊன்றி நினைந்து கடைப்பிடித்துத் தியாகிகளாக வாழ முயற்சி செய்வோமாக.

பேராசிரியர், டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 020

இன்றைய தமிழ் இலக்கியம் -ஒரு பார்வை

மைதிலி சிவராமன்

இந்தியாவின் "எழுத்தறிவுப் புரட்சி" பற்றி மேற்கு நாடுகளில் கொஞ்சம் அதிக மாகவே பேசப்பட்டு வருகிறது. இங்கே இருப்பவர்களுக்குத் தெரியும் எத்தனை கிராமங்களில் பள்ளிக்கூடமே கிடையாது என்று. புரட்சி எதுவும் நடந்துவிடவில்லை யானாலும், கடந்த சில ஆண்டுகளாக படித்த வர்களின் எண்ணிக்கை கொஞ்சம் அதி கரித்திருப்பதால், எழுதுபவர்களின் எண் ணிக்கையும் பத்திரிகைகளின் எண்ணிகையும் உயர்ந்துதான் வந்திருக்கின்றன. இத்துடன் கூட ஆங்கிலப் புலமையுள்ளவர்களின் பிடிப்பு உயர்மட்டங்களில் சிறிதளவு தளர்ந்திருப்ப தினுலும், தாய்மொழி இலக்கிய கர்த்தாக்கள் சமுதாய ஏணிப்படிகளில் சற்று உயரமான அந்தஸ்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருக் கிருர்கள்.

மற்ற இந்திய மொழிகளைப்போல் தமிழ் மொழியிலும் ஏற்பட்டிருக்கும் இந்த வளர்ச் சியை இலக்கிய மறுமலர்ச்சி என்று சொல்லு மளவுக்கு உயர்த்த முடியாவிட்டாலும், வருங் காலத்தில் தோன்றக்கூடிய உண்மையான எழுத்தறிவு, இலக்கியப் புரட்சிகளின் ஆரம்ப அறிகுறிகளை இன்றைய சூழ்நிலையில் தேடிப் பார்ப்பது பயனுள்ள அனுபவமாகும்.

இன்றைக்குத் தரமான தமிழ் இலக்கியம் படைப்பவர்களில் பெரும்பகுதியினர்இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிந்திருப்பதைப் பார்க்கலாம். ஒரு பகுதியினரை பரிசுத்த இலக்கியவாதிகள் என்று அழைக்கலாம். இன்னொரு பகுதியினரை முற்போக்கு எழுத் தாளர்கள் அல்லது சோஷலிச இலக்கிய வாதிகள் என்று குறிப்பிடலாம். இலக்கியம் என்ருல் என்ன? அது எப்படி படைக்கப் படுகிறது? அது ஏன் மக்களை ஈர்க்கிறது? இலக்கியத்துக்கு நோக்கு உண்டா? இலக்கிய சுதந்திரம் என்ருல் என்ன? போன்ற கேள்வி களுக்கெல்லாம் இந்த இரண்டு சாராரும் அடிப்படையில் வித்தியாசமான கருத்துக் களைக் கொண்டவர்களாக இருக்கிருர்கள்.

இலக்கியம் என்பது தனிமனிதனின் கற்பனையிலிருந்து ஊற்றெடுத்துப் பிறக்கிறது, படைப்பவனின் கற்பனை உத்வேகம் வாசகர் களின் கற்பனை நுகர்ச்சியைத் தூண்டுகிறது, அதனுல் அது படிக்கப்படுகிறது என்பது பரிசுத்த இலக்கியவாதிகளின் கருத்து. இதன் அடிப்படையில் அவர்கள் எழுத்தா ளன் சுதந்திரப் பறவையாக இருக்க வேண் டும். இலக்கியத்துக்குக் கண்ணேட்டம் எது வும் இருக்கக் கூடாது. எந்த பாதிப்பும் இல்லாமல், எழுதிய கருத்தைப் பார்க்காமல், படைப்பின் அமைப்பில், அழகில் ஒன்றிப் போவதுதான் உண்மையான இலக்கிய நுகர்ச்சி என்று அவர்கள் வெளிப்படை யாகவோ அல்லது மறைமுகமாகவோசொல்லி வருகிருர்கள். தற்போது வெளிவரும் கணை யாழி, கசடதபற, அஃ, தீபம், ஞானரதம் முதலிய பத்திரிகைகளில் இந்தக் கருத்துக் கொண்டவர்கள் பெரும்பாலாக எழுதுவ தைப் பார்க்கலாம்.

"உண்மையைத் தேடும் எழுத்தைவிட உயர்ந்த இலக்கியம் இல்லை' என்னும் முகப்புக் குறிக்கோளை வைத்திருக்கிறது, முன்பு ஜெயகாந்தனுல் ஆரம்பிக்கப்பட்டு இப்போது தரம் குறைந்த அளவில் வெளி வரும் ஞானரதம். இவர்கள் சொல்லும் உண்மை, சுயபாதிப்பு இல்லாத, எல்லோருக் கும் பொதுவாகத் தெரியக்கூடிய உண்மை. இப்படிப்பட்ட உண்மை என்று ஒன்று இருக்கவே முடியாது என்ற சோசலிச வாதத்தை இவர்கள் எற்பதில்லை.

இலக்கியத்தில் அரசியல் கலக்கக் கூடாது என்று சொல்லிவரும் இந்த பரிசுத்த வாதிகள், சோஷலிசக் கண்ணேட்டத்துடன் எழுதும் எழுத்தாளர்களை ஒரு ஏளன விமரி சனப் பார்வையுடன் பார்க்கத் தவறுவதில்லை. சோஷலிஸ்டுகள் எழுதுவதில் முக்கால் பங்கு இலக்கியம் அல்ல, வெறும் பிரச்சாரம் தான், அவர்களிடம் எழுத்து சுதந்திரம் என்பதே கிடையாது. கடிவாளமிட்ட குதி

ரைப் பார்வைதான் அவர்களுடையது என்பது இவர்கள் நிர்மானம்.

சோஷலிச எழுத்தாளர்களின் பார்வையே வேறுவிதமானது. மக்களின் அன்றாட வாழ்க்கை என்னும் நிதரிசனத்தில், அந்த வாழ்க்கை படைப்பாளியின் மனத்தில் ஏற்படுத்தும் பாதிப்பில் உதயமாவதுதான் இலக்கியம்; மனிதன் தன்னுடைய நிறை குறைகளை மீறி, மனித குலத்தின் ஒருமித்த சாதனைகளுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ள விழைவதனாலேயே கலை, இலக்கியத்தை நாடிப் போகிறான் என்னும் கருத்து அடிப்படையில் அவர்களுடைய மற்ற கண்ணோட்டங்கள் அமைகின்றன.

வாழ்க்கையைப் பிரதிபலிப்பதே இலக்கியம்; ஆனால், எழுத்தாளனின் மனக்கண்ணாடி பாதரசம் பூசிய வெறும் கண்ணாடியைப் போல நிலைமாறாத ஒன்றல்ல; எழுத்தாளன் எந்தக் கண்ணோட்டத்துடன் ஒரு பொருளைப் பார்க்கிறான் என்பதே அவன் மனத்தில் அதன் பிரதிபலிப்பையும் நிச்சயித்துவிடுகிறது; ஒரு கண்ணோட்டத்தின் அடிப்படையில் அல்லாமல் எந்தப் பொருளையும் பார்ப்பது என்பது இயலாத காரியம்; இதை விட்டு விட்டு பாதிப்பு எதுவும் இல்லாமல் ஒரு சூனிய உலகில் உண்மையைத் தேடி கண்டு பிடிக்கிறோம் என்று சொல்லுவது பரிசுத்த இலக்கியவாதிகள் செய்யும் தவறு என்று முற்போக்கு இலக்கியவாதிகள் கருதுகிறார்கள்.

இலக்கியத்துக்குக் குறிப்பிட்ட கண்ணோட்டம் இருக்கக்கூடாது என்று சொல்லும் பரிசுத்தவாதிகள் தாங்களும் ஒரு கண்ணோட்டத்துடன்தான் இலக்கியம் படைக்கிறோம் என்பதை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் வாழ்க்கையைப் பார்க்கும் பார்வை, இன்றைய சமுதாய நியதியை உறுதிப்படுத்தும் பார்வை. பொருளாதார சமூக அமைப்புகள் எல்லாம் சரியாகவே உள்ளன. இங்கும் அங்கும் சிறு, சிறு மாற்றங்கள் செய்து விட்டால் கண்ணுக்குத் தெரியும் அநீதிகள் நீங்கிவிடும் என்பது அவர்கள் பார்வை.

இதே வாழ்க்கையை சோஷலிஸ்ட் எழுத்தாளர்கள் பார்க்கும் பார்வை வேறு விதமானது. இந்திய மக்களில் தொண்ணூறு சதவிதத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் உடல் உழைப்பால், மூளை உழைப்பால் உருக்குலைந்துபோய் இந்தச் சமுதாயத்தைத் தாங்கிப் பிடித்திருக்கிறார்கள்; இதற்குப் பிரதியாக அவர்களுக்குக் கிடைப்பதெல்லாம் அரைப் பட்டினியும் தாங்க முடியாத ஏழ்மையும்தான் என்ற நிதரிசனத்தைப் பார்ப்பவர்கள் அவர்கள். ஆகவேதான் அவர்களின் எழுத்துக்களில் சமூக அநீதியை எதிர்த்துப் பொங்கியெழும் ஒரு வேகத்தைக் காணலாம். வானம்பாடி, செம்மலர், தாமரை, கார்க்கி, உதயம், மனிதன், வண்ணம், தெருக்கூத்து, நீ போன்ற இதழ்களில் இப்படிப்பட்ட எழுத்துக்களைப் பார்க்கலாம்,

முற்போக்கு எழுத்துக்களின் இலக்கிய நயத்தை ஆராயப்புகுந்த ஒரு பரிசுத்தவாதி சொல்கிறார்: ''மார்க்ஸிய இலக்கியத்தில் ஒரு சித்தாந்தம் முக்கியமல்ல; இலக்கியம்தான் முக்கியம்; அரசியல் முக்கியமல்ல.'' உள்ளடக்கத்தைவிட வெளி உருவம்தான் முக்கியம் என்ற இந்தக் கொள்கை சமுதாயத்தின் பிற்போக்குவாதிகளால் எப்போதுமே கடைப் பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது.

ஒரு அவலட்சணமான அல்லது அகோரமான உள்ளடக்கத்தை மறைக்க வேண்டிய தேவை இருப்பவர்கள் எல்லோரும் வெளிப் பூச்சைப் பற்றியே உயர்த்திப் பேசிக் கொண்டிருப்பது வழக்கம். இப்படித்தான் நாளுக்கொரு துப்பாக்கிச் சூடும், பொய் வழக்கும் அதிகாரக் கொலையும் முதலாளித்துவக் கொள்ளையும் மலிந்த ஒரு நாட்டை, ஆளுக்கொரு ஓட்டு என்ற முலாம் பூசி, ஜனநாயக அமைப்பு என்றதிரையைப் போட்டு மறைத்து விட முடிகிறது. சமுதாயமானாலும் சரி, இலக்கியமானாலும் சரி, வெளி உருவத்தையே எல்லாம் என்று உயர்த்திக் காட்டி உண்மையான உள்ளடக்கத்தை ஒதுக்கி வைப்பவர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்வது, அந்த உள்ளடக்கத்தின் அவலங்களை மறைப்பதுதான்.

சோஷலிச எழுத்தாளர்களுக்கு இந்த உள்ளடக்கம்தான் பிரதானமானது. ''சமூகக் கொடுமையும் இலக்கியமும் மோதும்போது நாம் இலக்கியத்தின் பக்கம் நிற்போம்; இலக்கியமும் மனிதனும் மோதும்போது நாம் மனிதனின் பக்கம் நிற்போம்'' என்ற முகப்பு வரியைத் தாங்கி வருகிறது ஒரு சிவப்பிலக்கியப் பத்திரிகை. தரமான சோஷலிச இலக்கியம் படைக்கக்கூடிய திறமைசாலிகள் இன்றைக்குத் தமிழ்நாட்டில் அதிகரித்து வருகிறார்கள். பல ஊர்களில் குழுக்கள் ஏற்பட்டு கவிதைகள் படிக்கவும் திறனாய்வு நிகழ்த்தவும் முற்பட்டிருக்கின்றன. இலக்கிய ஆர்வத்

துடன், சமுதாய அமைப்பை மாற்ற வேண்டும் என்ற துடிப்பும் இந்த இளைஞர்களிடம் மிருந்து காணப்படுகிறது.

சுரண்டல் இல்லாத சமுதாயத்தைப் படைக்க விரும்பும் இந்த இளைஞர்கள், பரிசுத்த இலக்கியங்களை மட்டுமல்லாமல், ''பொழுதுபோக்கு இலக்கியங்களை'' எதிர்த்தும் போராட வேண்டிய நிலையிலிருக்கிறார்கள். குமுதம், விகடன், கதிர், கல்கி, ராணி என்று பலவாக வெளிவரும் இந்தப் பத்திரிகைகள் உண்மையான இலக்கியவாதிகள் தங்களை நெருங்காதவாறு பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன. வளர்ந்து வரும் எழுத்தறிவின் பெரும் பயனையும் அபகரித்து லாப வேட்டை நடத்திவரும் இந்தப் பத்திரிகைகள் தமிழ் சினிமாக்களைப் போல, மக்களுக்கு அபினி கொடுத்து மயங்கவைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. கோடிக்கணக்கான மக்களின் இலக்கிய நுகர்ச்சியே இப்போதுதான் அரும்புவிட்டுக் கொண்டிருக்கும் இந்த நாளில், அசலுக்கும் போலிக்கும் இடையே இனம் கண்டுகொள்ள அவர்களால் முடியாத நிலையில், அவர்களைக் காட்டுமிராண்டிகளாக பாவித்து அந்த உணர்ச்சிகளையே அவர்களிடம் தூண்டிவிடும் கஞ்சாப் பொருள்களாக வெளிவரும் இந்தப் பத்திரிகைகளில் சித்தரிக்கப்படும் வாழ்க்கைக்கும் நடைமுறைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. நிஜ வாழ்க்கையின் கொடிய அனுபவங்களை மறந்து கனவுலகச் சஞ்சாரத்திலாவது மயங்கியிருப்பதற்காக பெருவாரி மக்கள் இந்தப் பத்திரிகைகளை நாடிப் படிப்பதில் வியப்பொன்றுமில்லை.

இந்த மயக்கத்திலிருந்து மக்களை மீட்கும் பொறுப்பு முற்போக்கு எழுத்தாளர்களின் மீதுதான் விழுந்திருக்கிறது. பரிசுத்த இலக்கியவாதிகளுக்கும் சாதாரண மக்களுக்கும் வெகுதூரம். பெரும்பான்மையான மக்களுக்குப் புரியும்படியான நடையில், அதற்கேற்ற உத்திகளுடன் எழுத பரிசுத்தவாதிகள் என்றுமே முன் வருவதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு குறைந்த பேர்கள் மட்டும், படித்து ரசிக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு உயர்ந்தது அந்த எழுத்து என்ற நிர்ணயிப்பு அவர்களிடம் உண்டு. முற்போக்கு எழுத்தாளர்களிடையேயும், எளிமையான நடையில் எழுத அதிகம்பேர் முன் வராதது ஒரு குறையே. இலக்கிய நுகர்ச்சியைப் பரவலாக்குவதில், தமிழ் இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்குவதில் இவர்கள் பெரும் பொறுப்பு ஏற்க முன்வர வேண்டும்.

திருமதி மைதிலி சிவராமன் எம்.ஏ.
Editor 'The Radical Review'
45, ஸ்பர்டாங் ரோடு, சென்னை-600031

அகிலனின் 'நெஞ்சினலைகளில்'

ஒரு கதை மாந்தன்

ப. விசயலட்சுமி

ஒரு மாந்தனின் ஆளுமை (Personality) என்பது அவனது குணங்களின் மொத்த உருவம் என்று கூறலாம். எண்ணங்கள், செயல்கள், உணர்வின் எதிரொலிகள், இவையனைத்தும் சேர்ந்த ஒரு கலவையே 'குண இயல்பின் மொத்த உருவம் எனலாம். அவனிடத்து வெளிப்படும் ஒரு சில பண்புகளால் மட்டும் இதனைக் காண இயலாது. அவன் தன்னோடும் பிறரோடும் விளைவித்துக் கொள்ளும், செயல்பாட்டை, மனப் போக்கினை ஆராய்ந்த பின்னரே, இதன் அளவு நிலைகளைக் (Dimensions of Personality) காண முடியும். இவற்றில் சில குணத்தொகுதி முதன்மை பெற்றுச் சில செயல்களில் வெளிப்படும்.

அகிலனின் 'நெஞ்சினலைகளில்'வாசு என்ற கதைமாந்தனின் மொத்த குண உருவத்தைக் காண்பதே இக் கட்டுரைப் பொருளாம்.

கதைமாந்தரின் குண இயல்பினைப் பொதுவாக ஆசிரியர் தரும் சில விளக்க வருணனைகள் (பாத்திர வருணனை,) செயல் போராட்டம், பேச்சு, எண்ணம், படிமம், குறியீட்டுப் பொருள்,(Concrete details,action and conflict, speech and thought, imagery and symbolism) என்ற நிலைகளை அடிப்படையாக்கி விவரிக்கலாம்.

குறிப்பிட்ட ஒரு சில குண இயல்பினை ஆராய்தலும், (To discuss the essence of some specific character) ஒருவரை, இன்னொரு கதைமாந்தருடன் ஒத்திட்டும் வேறாகவும் காணுதலும், (Compare and contrast) வகை செய்து பகுப்பதும் (Character types) தொடக்கம் முதல் காட்டப்பெறும் படிப்படியான வளர்ச்சி நிலையாக ஆராய்வதும், (Chronological method) எனப் பல ஆய்வு நிலைகள் உள.

இக் கட்டுரையில் 'வாசுவின்' படிப்படியான வளர்ச்சி நிலையினைக் கணக்கிடலாம். ஒரு மனிதனின் வாழ்க்கைப் பருவங்கள் அவன் குண உருவாக்கத்துக்குரிய இடத்தைப் பெறுகின்றன. இயற்கையாய் அமைந்த பண்புகளும், வீடு, கல்விக்கூடம், அலுவலகம், பொது இடங்கள், இவற்றின் சூழல்களால் உருவாக்கப்பெறும் இயல்புகளும், அதாவது அங்கு அநுபவப்படும் பயிற்சி நடத்தை, இவையும், முக்கியமாகக் கொள்ளப்பெறும்.

இக் கதைப் பாத்திரத்தில் வாசுவின் எல்லாப் பருவங்களையும் காட்டாது முக்கிய நிலைகளைக் காட்டி ''பண்பு நிலைகளில் வளர்ச்சி, மாற்றம் அடைவதைக் காணலாம். வாசுவின் பள்ளிப் பருவம் நினைவுகளாக காட்டப்பெறுகின்றன. அவன் வேலையேற்கும் இளமைப் பருவமே கதைத் தொடக்கமாகும். தொழில்'' அநுபவத்தில் அவனிடத்து உணரப் பெற்ற பண்பாக்கங்களை விளக்கலாம். மாமனின் தொழிற்சாலையில், வேலை ஏற்கிறான் வாசு. விருப்பமில்லாவிடினும், சந்தர்ப்பச் சூழலைக் கருதி வேலை பார்க்கும் நிலை ஏற்படுகிறது. தொழிலாளர் நலன்களை அக்கறையுடன் கவனிப்பான். தலைவர் இல்லாத சமயத்தில் அலுவலகத்தில் குழப்பங்கள் தன்னால் விளைவதைத் தவிர்க்க நினைப்பான். இது தொழில் நலனை உத்தேசித்துச் சூழலோடு ஒத்துச் செல்லும் முறையைக் காட்டும். எதிர்பாராத நிலையில் அவனும், தாயும், கொண்ட எண்ணத்திற்கு மாறாகச் செயலின் போக்குத் திரும்பும்போது மனம் கலங்குகின்றான். மாமன் மகள் கனகத்துடன் கொண்ட பழக்கத்திற்காக வேலையை இழக்கிறான். விரைவில் மனம் அதிர்ச்சியடைவது முதல்நிலை. இரண்டாம் முறையாகக் கிடைக்கப்பெற்ற ஆசிரியர் வேலையினின்று நீங்குவது அவனது பண்பு உருவாக்கத்தைக் காட்டும். தன் வாழ்க்கை நலனுக்காக இன்னொருவரிடம் சலுகை ஏற்காத நிலை இது.

பண்பு உருவாக்கத்தில் புறச்சூழலும் முக்கிய இடம் பெறுதலைக் காண்கிறோம். ஒருவனுடைய மனநிலையில், வாழ்க்கைப் பாதை சிலருடைய கூற்றுக்களால் வேறு திசையில் சென்றுவிட ஏதுவாகின்றது. வேலையற்று அலையும் வாசு பட்டாள ஜீப்பின் குறுக்கே விழுகிறான். 'இவ்வாறு காரில் விழுவதை விடப் பட்டாளத்தில் விழுந்து உயிர் விடுவது நல்லது' என்று கிண்டலாகக் கூறும் ராணுவத்தானின் சொற்கள் மனதில் பதிகின்றன. 'ஏகாதிபத்திய வல்லரசுகளுக்

இடையேயுள்ள போர்' என்ற காந்திஜியின் அறைகூவலையும் மீறிச் சேர்ந்துவிடுகிறான். இதனைத் தேசத் துரோகமாகப் பசுபதி குற்றம் சாட்டும்போது அவன் தன் நேர்மையைச் சோதித்துப் பார்க்கையில் பிரிட்டீஷ் ராணுவத்தில் சேர்ந்ததற்கு வேலையற்ற நிலையும், கலங்கிய மனநிலையுமே காரணம் என உணருகிறான். 'போர் அமைதி' என்ற இருபெரும் கொள்கைகளின் மோதலால் மக்கள் மடிந்தொழிவதைக் காண்கிறான். இதனால் விளையும் நன்மை என்ன? என நினைத்துப் பார்க்கிறான். லோகநாதனுடனுள்ள பழக்கமும் பொது விஷயங்களைச் சிந்திக்கத் தூண்டும்.

சாவுகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் பயங்கரமான போர்ச் சூழலில் புஷ்பா துணிந்து தன்னை ஏற்கும்படி வாசுவிடம் கூறுகிறாள். ஆனால் சிறைச் சாலையோ, தூக்கு மேடையோ காத்திருக்கும் தன்னால், அவளுக்கு வாழ்வு தரமுடியாது என்பான். 'ஒரு நாள் வாழ்வதாயினும், இன்பமான நிமிடங்கள் இறப்பதில்லை' என்று உணர்த்துவாள் புஷ்பா. இதேபோன்று கனகமும் அவன் வெளிநாடு சென்று திரும்பி வரும்வரைக் காத்திருப்பதாகக் கூறும்போது தான் ஒரு வேளை திரும்பாவிடில், வாழ்வைப் பாழாக்க வேண்டாம் என்பான். கனகத்தின் மணம் பற்றி அறியும்போது, சாவைவிட வாழ்க்கை மோசமாகி விட்டதாகக் கலங்குவான். 'தன் எல்லைக்கு அப்பாற்பட்டது என்று காணும்போது 'மரணத்தை நினைப்பதாகக் காண்கிறோம். இந்திய தேசிய சீரமைப்புப் படையிலிருக்கும்போது, தவறான செய்திக்காகச் சிறையிலடைக்கும்போது, மானம் இழக்கப்பட்டதற்காக வருந்துவான். சொந்த வாழ்விலும், தொழில் துறையிலும், இருவேறு தன்மைகள்; முன்னதில் சோர்வு அடைதலும், பின்னதில் அஞ்சாத நிலையினையும், காண்கிறோம். வாசு விடுதலை ஆனபின், உண்மைக் குற்றவாளி, ராகவன் என்றுணர்ந்த பின்னும், ராகவன் அவனிடம் மன்னிப்பைப் பெற வேண்டுங்கால், எல்லோரையும், நல்லவர்களாகக் காணும் நோக்கை அறிகிறோம். பல தீய குணங்கள் இருப்பினும் நல்லதைப் பெரிதாக்கிக் காண்கிறான்.

போரிடையே நிகழ்ந்த சாவுகள் அவனுக்கு ஒரு பாடத்தை உணர்த்தும். வாழ்வுக்கும் சாவுக்குமிடையே நடக்கும் போராட்டத்தில் அழுவதைப் பற்றி நினைக்க நேரமில்லை என்று கூறும்போது, மனம் கலங்கிச் செயலற்று நின்றுவிடாது துயரான நிகழ்ச்சிகளையும், தாங்கும் சக்தியினையும் பெறுகின்றான். தொடக்கத்தில் சிறுசிறு நிகழ்வால் மனம் அதிர்பவன் இவ்வாறு தேறுதல் கூறும் அளவுக்கு மனவளர்ச்சி பெற்றிருப்பது ஒரு மாற்றமே. தொழில் அநுபவத்தில் அவனிடத்து பெறப்பட்ட சில இயல்புகள் விளக்கப்பட்டன.

'மணஉறவு' என்பது வாழ்க்கையின் முக்கியமான நிலை. இவ்வுறவால் சில இயல்புகள் பெறப்படலாம். அல்லது இழக்கப்படலாம். வாசு, குடும்ப உறவின் அடித்தளத்தில் அன்பு கொண்ட கனகத்தைப் பிரிந்தது சந்தர்ப்பச் சூழலே. அவளது மணச் செய்தி அறிந்தபின் பழிவாங்கும் உணர்வு கொண்டவன், நண்பனின் அறிவுரைப்படி கைவிடுகிறான். கனகம், தந்தையின் கட்டாயத்திற்காக பசுபதியை மணந்திருக்கக் கூடும் என நினைக்கிறான். வாசு புஷ்பாவுடன் கூடியிருந்தபோது ஒரு காட்சியைக் காண்கிறான். பசுபதியும் கனகமும் கணவன், மனைவியராக மலைக்கோட்டைப் பிள்ளையாரை வழிபடும் போது, கனகம் கசங்கிய பூச்செண்டாக அதல பாதாளத்தில் விழுந்து கொண்டிருக்கிறாள். அவள் இன்னொருவருடன் வாழ்வு ஏற்பதில்லை என்பதை இக் காட்சி தெளிவுப் படுத்தும்.

புஷ்பாவின் ஒவ்வொரு செயலையும் தொடர்புபடுத்தி கனகத்தின் வாழ்வில் நிகழ்ந்ததையும் எண்ணுகிறான். இறுதியில் கனகத்தின் நிழலாகவே புஷ்பாவை ஏற்றுக் கொள்ள உறுதி கொள்வான்; ஆதரவற்ற புஷ்பாவை அவள் வாழ்வில் மலர்ச்சி காண துணையாக்குகிறான். எனவே கனகத்துடன் கொண்ட அன்பு ஆழமானது என்று உணரலாம். இப்போராட்டங்களில் தற்சோதனைக்கு (Self Analysis) உள்ளாகும் மனப்பாங்கையும் இறுதியில் காரணம் கண்டு அமைதி கொள்வதையும் தெளிகிறோம்.

வாசுவின் முதுமைப் பருவ நிகழ்வுகள் நாவலில் இல்லையெனினும், தந்தையாகக் காட்டப்படுகிறான். செயல் வீரனாக, நாட்டு விடுதலையைப் பேணிக் காப்பவனாய், குழந்தை புஷ்பா, துணைவி கனகம், ஆகியோரிடம் விடைபெறுகிறான். இங்கு அவனை நாட்டுப்பற்று கொண்டவனாகக் காண்கிறோம்.

அடுத்து வாசுவின் குண இயல்புகள் (Dimension of Personality) அமையுமாற்றலைக் காணலாம். காட்ஸ், (Katz), ஸானக் (Schanck) என்போர் இவ்வளவைகளை ஆறாகப் பகுப்பர். திறமை (Abilities), செயல் தூண்டல் (Motivity), மனப்பாங்கு (Temperament), சில விசேட குணம் (Trait), பிறரைப் பற்றிய கருத்து (Attitiude Towards Others), தன்னிலை (Attitude towards oneself), எனப்படும். அல்போர்ட் (Allport. F. H.) என்பார் இதனை, அறிவு (Intelligence), செயலியக்கம், மனப்பாங்கு, தன் வெளியீட்டு நிலை (Self expression)

சமூகப் பொதுநிலை (Sociality) என்ற அளவை களில் காண்பார்.

திறமை, என்னும்போது இயற்கை அளித்த சக்தியை அவன் பயன்படுத்து கின்றமையும், இளமையின் ஈடுபாடுகளையும் கணக்கிடலாம். சிறு பருவத்தில் காவிரிக் கரையில் ரயில் பாலத்திலிருந்து குதித்து விளை யாடுவது ஒரு விளையாட்டு. கல்லூரி நாட் களில் கவிதை எழுதுவதுண்டு. கனகத்துடன் பழகிய உணர்வின் அடித்தளத்தில் எழுதிய கவிதையின் உருவில் புஷ்பா பழகுகிறாள்.

விரைவுத் தன்மை, ஒரு செயலின் எதிர்ச் செயல் தோன்றுதல். சோர்வற்ற நிலை, வேகம், நடை, ஆகியவை வேலை வாய்ப்புக்குரிய செய லாற்றல்களாகும். வேலையில் ஈடுபடும்போது இவை மிகத் தேவை. தொடக்கத்தில் வாசுவின் படிப்பு, உழைப்பு, இவற்றைக் கவனித்தே வேலை தரப்படுகிறது. இரு வருடங் களில் தொழிற்சாலை பெற்ற வளர்ச்சியே இதனைக் காட்டும். மாமாவின் அலுவலகத்தில் பசுபதியின் அதிகாரம் வெறுப்பைத் தரினும் குழப்பங்கள் விளைவதைத் தவிர்ப்பான். பிரிட்டிஷ் ராணுவத்தில் காந்திஜியின் பெயரைக் குறித்ததற்காகச் சிறையிலடைக்கப் படும்போது முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வாதிடுவான். விரைவுடன் செயல பட்டாலும் நிதானமான நிலை தேவையாகும். லோகநாதன் வீட்டில் வாசு அடைக்கலமாகும் போது, ராணுவத்தாரிடம் வாசு இல்லாததைக் கூறும்போதே, வாசு தானாகவே காண்பித்துக் கொள்வான். வாசு நிதானித்திருந்தால் அவனைக் கைது செய்யும் நிலையைத் தவிர்த் திருக்கலாம்.

அறிவுத்திறன் (Intelligence) என்பதற்கு பலர் பல விளக்கம் கூறுகின்றனர். புத்தகப் படிப்பால் பெறும் அறிவை மட்டுமன்றி வாழ்க்கை அநுபவத்தால் பெறும் அறிவையும் உள்ளடக்குகின்றனர். பினட் (Binet) என் பார் அநுபவ அறிவு, நினைவு சக்தி, காரணம் காண்பது, ஒத்து நோக்கல், புரிந்து கொள் வது, கொள்கைகளைத் தருவது, பொது அறிவுடைமை, எனப் பல கூறுகளைக் கூறு வார். இதையே அநுபவங்கள் வாயிலாக அறிவுக் கூர்மையை வளர்ப்பது என்று விளக்குவர் எபினஸ் (Ebbinhus). புதிய பிரச்சனைகள் எழுகையில் பொருத்தமுறவோ, மாறுபடவோ காண்பது அறிவுத்திறன் என் பது ஸ்டேன் (Stern) என்பாரது விளக்கம். பயனுடைய திறமை, காரணத்துடன் சிந்திப் பது, சூழ்நிலையைப் பயனுடையதாக்கி வெற்றி காண்பது என்று Weschler கருத்து தெரி விப்பர். ஒரு செயலின் முக்கியத்துவத்தை அல்லது விளைவினை நினைத்து, ஆராய்ந்து, பதிய வைத்துக் கொள்வதே அறிவுத் திறன் என்று அல்போட் (Allport) மொழிவர்.

தொடக்கத்தில் சிறுசிறு நிகழ்வுகளால் மனம் உடைந்து போகும் இயல்பினனாக உள்ள வாசு அடுத்தடுத்து நிகழ்ந்த துன்பங்களால் அதிர்ச்சியைத் தாங்கும் மனநிலை பெறு கின்றான். வாழ்வுக்கும், சாவுக்குமுள்ள போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும்போது மனம் தளரவிடலாகாது என்று தேற்றுமளவுக்கு அநுபவங்கள் பக்குவமடையச் செய்கின்றன.

வாசு செயல்களிலெல்லாம் காரணம் கண்டு செயலாற்றுகிறான் எனக் கூற முடியாது; ஓரிரு நிலைகளைச் சுட்டலாம். நண்பர்களின் பழக்கம் காரணமாக போரின் விளைவுகளைச் சிந்திக்கிறான்; கனகம், புஷ்பா, இருவரிடமும் தான் காட்டும் அன்புறவுக்குக் காரணம் கண்டு தெளிவான்.

'நினைவு சக்தி' என்ற நிலையில் படித்த வற்றை நினைவு கூர்வதுடன் பழைய சம்பவங் களை நினைவு கூர்வதும் அமையும். கதைப் பாத்திரம் என்ற நிலையில் இவ்வியல்பு வாழ் வில் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு கொண்டதாக அமையும். புஷ்பா வாசுவுடன் பழகும் ஒவ்வொரு நிகழ்ச்சியும், வாசுவுக்கு, கனகத்துடன் பழகிய சம்பவங்களை நினைவு ஊட்டும். இவ்வாறு தொடர்புபடுத்திக் காண் கையில், கனகத்தின் ஆழமான அன்பு ஆதார மற்ற மணச் செய்திக்கு இடம் தராது என்று தெளிவான்.

வாசு ஒரு நிகழ்வை நினைத்து நோக்கி, பயனைத் தெளிவதில் பின்னடைகிறான்; கனகத்தின் திருமணச் செய்தி கண்டு பழி வாங்கும் உணர்வுடன் எழுதுவான். இதனால் அவள் வாழ்வு பாதிக்கப்படும் என்றுணர்ந்தும் கனன்ற உள்ளத்தால் விளைவுகளைப் பாராத நிலையைப் பார்க்கிறோம். செய்யாத குற்றத் திற்குச் சிறையிலடைக்கப்படும்போது தன் நிலையைத் தெளிவாக்க முடியாத சூழலுக் குள்ளாவான்.

மனிதர்களுக்கு அல்லது சட்டதிட்டங்களுக்கு ஒத்துப் போதல்

(To adapt oneself to persons and laws)

வாசு, தன்னைச் சூழ்ந்துள்ள மனிதர் களுடன் ஒத்து பழகுகின்றான். அலுவலகத்தில் பசுபதியுடன் முரண்பாடு கொள்ளினும் பொறுப்புணர்வுடன் குழப்பம் விளைவதைத் தடுப்பான். பர்மிய நகரத்தில் லோகநாதன் புஷ்பா போன்றோருடன் ஒட்டி வாழ எண்ணு கின்றான். சமுதாயத்துடன் பொருந்தி வாழ எண்ணுவான்.

தன் வெளியீட்டு நிலையில் (Self expressive tendency) என்ற பல விசேட குணங்கள் அடங்கும்.

அ. மென்மை மனத்தவனாக, எளிதில் உணர்வு வயமானவனாக, தற்சோதனைக்கு ஆளாகுபவனாக (Self analysis) அக நோக்குத் தன்மை (Introversion) அமையும்.

ஆ. ஆதிக்கம் அல்லது முதன்மை பெறுவது × பணிந்துவிடுவது (Ascendence. Vs Submission). பொதுநிலைகளில் பலருடன் கூடி உரையாடும் போதோ, செயல்களிலோ, முதன்மை பெறுவதில்லை. Submissive தன்மையே புலப்படும்.

இ. Expansiveness Vs Reclusion. தன் சொந்தக் கருத்துக்களையும், செயல்பாடுகளையும், பேச்சின்போது உணர்த்திக் கொண்டிருப்பவர் முந்தைய பிரிவினர்.

Reclusvie மாந்தனிடம் இந்த நிலை இருப்பதில்லை. 'தான்' என்று கூறிக்கொண்டிருப்பதில்லை (Impersonal). வாசு இரண்டாம் நிலையைச் சேர்ந்தவன்.

ஈ. Free expression vs Reservedness. தன் எண்ணங்களை நெருங்கிப் பழகுபவரிடம் மட்டுமே வெளியிடும் தன்மை உடையவன் (Free expression).

உணர்வுநிலைகளின் சில அளவுகள் (Emotional level) சிலர் உணர்வு வயமாகும்போது சம நிலைக்கு வர நீண்ட நேரமாகும். விரைவில் உணர்ச்சி வசப்பட்டு ஆறுதல் படுத்தும் போதோ, பிறரின் கூற்றுக்கிணங்கியோ, விரைவில் அடங்கப் பெறுவர். வாசுவின் நிலை இரண்டாம் நிலைபாற்படும். உணர்வைத் தூண்டிவிடும் நிகழ்ச்சி அல்லது பொருள், உணர்வின் ஆழம், அப்போதைய மனநிலை இவற்றையும் மனதிற் கொள்ளவேண்டும்.

(1) வாசு தன் வாழ்வில் நெருங்கிப் பழகி அன்பு செலுத்தியவர்களால் வஞ்சிக்கப்படும் போது நிலைகுலைந்து விடுவான்.

(2) சாவுக்கும், வாழ்வுக்கு மிடையே போராடும் நிமிடங்களில் புஷ்பாவை ஏற்றுக் கூடும்போதுள்ள இன்பமும் துன்பத்திற்கு மிடைப்பட்ட உணர்வுகள்,

(3) செய்யாத தவறுக்காக குற்றம் சுமத்தப் படும்போது தண்டனையை எதிர் நோக்கியுள்ள உணர்வுகள்,

இம் மூன்று நிலைகளிலும், இரண்டாம் நிலை பாற்பட்ட உணர்வுகள் ஆழமானவை.

சமுதாயச் சார்பாயிருத்தல்

சமூகத்தில் தனக்குரிய நிலையினையும் பிறர் தன்னைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தினையும் பொதுவாக அறிந்து கொள்ளுதல் நலம். சிலர் சமூக நிலைக்கு ஒதுங்கியும், ஒத்தும், மாறுபாடாக தனிப்பட்ட சில இயல்புகளைக் கொண்டு மிருப்பார். ஒருவன் ஒரு குறிப்பிட்ட அளவிற்காயினும், சமூகம் தன்னைப் பற்றி நினைப்பதை நினைவிற் கொள்ளலாம். பிறரைத் தனக்குத் தூண்டுகோலாக பயன்படுத்தாது மனிதனாகக் காணுதல் நலம் (Not as means, but as persons).

வாசு அலுவலகத்தும் பிற இடங்களிலும் தன்னைச் சுற்றியுள்ளவர்களோடு நெருங்கிப் பழகுவான். இந்திய தேசிய சேரமைப்புப் படையில் தோற்கும் நிலை ஏற்பட்டதும் நண்பர்கள், அவனைத் தனியே நீங்கிப் புஷ்பாவுடன் தாயகம் திரும்ப வற்புறுத்தும்போது எல்லோரும் அநுபவிக்கும் நிலையே தனக்கும் உகந்தது என்றுரைப்பான்.

வாசுவின் 'மொத்த குண இயல்புகளை' கீழ்காணும் நிலைகளில் குறிக்கலாம்.

வாசு தலைவனுக்குரிய குணங்கள் இல்லாதவன்; ஒரு தலைவனைப் பின்பற்றும் தொண்டனைப் போன்ற குணமுள்ளவன்; ஒரு வேலையைச் செய்யத் தூண்டினால் செய்வான்; பிறருக்கு உதவும் நல்லெண்ணம் உடையவன். எதிலும் அடிக்கடி உணர்ச்சி வசப்பட்டு சோர்வடைபவனாகவும் இருக்கின்றான்.

நாம் காணும் மனிதர்களில் ஒருவனாக, சில நல்லியல்புகளும், பலவீனங்களும் உடையவனாக அமைகின்றான்.

P. Vijayalakshmi, M.A.,
Research Scholar, Dept. of Tamil
Univ. of Kerala, Kariyavattam
Trivandrum-695017

பயன்பட்ட நூற்கள்

Papers on literature models and methods (ed) by Robert Beun and James W. Sire Holt, Rinehart and winston, 1969

Akolkar V. V. *Social Psychology*, pp. 147-178 Asia Publishing House, 1962.

நிலவே! வா

நண். கி. வேங்கடாசலம்

இன்று மண்ணுலக மக்கள் விண்ணில் பறக்கின்றனர். நிலவுலகிலிருந்து நிலா உலகிற்குச் செல்கின்றனர். 'நிலவே வா' எனத் திங்களை அழைத்தது அக்காலம். நிலவிற்கே செல்வோம் என நிமிர்ந்து முனைந்து நிற்பது இக்காலம். அறிவியலின் ஆற்றலை வியவாதார் யார்? வியந்து நயவாதார் யார்? அறிவியல் உயர்ந்து வரும் இன்றும் கலைகள் வழங்கும் இன்பத்தைக் கைவிட முடியுமோ? கலைகளில் சிறந்தது இலக்கியக் கலை. பண்பட்ட மொழிகள் யாவுமே இலக்கிய வளம் பெற்றுக் கலைச் சிறப்புடன் மிளிர்கின்றன.

மற்றைய இலக்கியங்களிற் காணப்பெறாத புதுமைகள் பலவற்றைத் தமிழ் இலக்கியத்தில் காணலாம். அத்தகைய புதுமை நலங்களுள் ஒன்றுதான் 'பிள்ளைத்தமிழ்' என்பது. சிற்றிலக்கிய வகைகளில் தனியிடம் பெற்றுச் சிறந்து விளங்குகின்றது இப்பிள்ளைத் தமிழ். பெரியாழ்வாரின் திருப்பாசுரங்களில் கருக்கொண்டு சேக்கிழாரின் திருப்பாடல்களில் முளைவிட்டு ஒட்டக்கூத்தர் காலத்தே ஒளி பெற்று முழுவடிவு பெற்றுப் பொலிந்த இப்பிள்ளைத்தமிழ் குமரகுருபரர் காலத்தில் உச்ச நிலை எய்தியது எனலாம். நாம் போற்ற விரும்பும் கடவுள் அல்லது பெரியோரைப் போற்றுதற்குப் புதிய முறை ஒன்று புலவர்களால் கற்பனை செய்யப்பெற்றது. கடவுளையோ பெரியோரையோ குழந்தையாகக் கற்பனை செய்து குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளைக் கொண்டு புகழ் பாடும் முறையின் அடிப்படையில் இப்பிள்ளைத்தமிழ் எழுந்திருக்க வேண்டும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறு தேர் எனப் பத்துப் பருவங்களாகக் கொண்டு பருவத்திற்குப் பத்துப் பாடலாகப் பல்வேறு சந்தப் பாடல்களைக் கொண்டு பிள்ளைத்தமிழ் பாடப்பெறும், பெண்பாற் பிள்ளைத்தமிழில் கடைசி மூன்று பருவங்களும் சிறிது வேறுபட்டு அம்மானை, நீராடல், ஊசல் என அமையும். இப் பத்துப் பருவங்களும் சுவையுடையனவே எனினும் அம்புலிப் பருவம் தனிச் சிறப்புடையது. பாடுகின்ற சான்றோர்க்கும் கடினமான பருவமாகும். 'புலவர்க்கு அம்புலி புலி'—என்பது பழமொழி.

அம்புலிப் பருவம் என்பது என்ன? பிள்ளைத் தமிழின் தலைவன் அல்லது தலைவியுடன் விளையாடவர வேண்டும் என்று விண்ணில் தவழும் வெண்ணிலவை அழைத்தலேயாகும். அவ்வாறு அழைப்பதிலே பல கற்பனைகள் புகுத்தப் பெறும். ஒப்புமை காட்டி அழைத்தல், உதவி கிடைக்கும் எனக் கூறி அழைத்தல், வேற்றுமைச் சிறப்பினைக் காட்டி அழைத்தல், ஒறுப்பேன் என அச்சுறுத்தி அழைத்தல் என நான்கு நெறிகளால் திங்களை அழைக்கும் திறம் பிள்ளைத் தமிழின் உயிர்நாடியாகும். இந்நெறிகளை வடமொழியாளர் சாமம், தானம், பேதம், தண்டம் என்பர்.

'நிலவே வா' என அழைத்தற்குரிய இந்நால்வகை நெறிகளையும் ஒவ்வோரெடுத்துக் காட்டால் விளக்குதல் நலம். இதற்குக் கற்பனைக் களஞ்சியமாகிய குமரகுருபரர் அருளிய முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழைத் துணையாகக் கொள்ளுவோம். புள்ளிருக்கு வேளூர் எனப்படும் வைத்தீசுவரன் கோயிலில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைப் பற்றிய இப்பிள்ளைத் தமிழில் முருகனே குழந்தையாகிறான். அக் குழந்தை விளையாடுதற்கு அம்புலி துணையாக வர வேண்டும். அழைக்கின்றார் புலவர். முதலில் ஒப்புமை காட்டி அழைக்கும் நயத்தினைக் காண்போம்.

நிலவே நீ அமுத மயம் முருகனுகிய குழந்தையும் அமுதம் அனையன், நீ மதிக்கடவுள்; முருகனும் மதி (அறிவு)க் கடவுள். நீ பெரிய நதிகள் பாயும் கடலில் தோன்றினாய். முருகனும் கங்கை தங்கும் விரிசடைக் கடவுளாகிய சிவன் என்னும் கடலினின்றும் தோன்றினான். நீ கொடியில் உள்ள குமுதம் மலரவும் தாமரை குவியவும் காரணம் ஆகின்றாய். முருகனோ கொடி போன்ற வள்ளியின் குமுதவாய் மலர்தற்குத் தன் கைத் தாமரைகளைக் குவித்துக் கூப்புகின்றான். எல்லா உயிர்களும் வளர்தற்கு நீ உதவுவதுபோல் முருகனும் உதவுகிறான். நீ இறைவனின் கண். முருகன் இறைவனின் கண் அருளிய தீப்பொறி. இவ்வளவு ஒப்புமை யுடைய நீங்கள் இருவரும் இணைந்து விளையாடுதல் இனியது. ஆகலின் இவனோடு விளையாட வருக! இது சாமம் என்னும் உபாயம். முருகனுக்கும் திங்களுக்கும் எவ்வெவ் வகையில் ஒப்புமை காட்டலாம் எனப் புலவர் கற்பனை செய்திருப்பது கருதக் கருதக் களிப்பளிக்கும். இன்னும் பல செய்திகளாலும் செயல்களாலும் நிலவுக்கும் முருகனுக்கும் ஒப்புமை விரித்துரைக்கப்படுகின்றது.

வேற்றுமை காட்டிப் பேத உபாயத்தால் அழைக்கும் திறத்தைக் காண்போம். நிலவே நீயும் முருகனும் பலவகையில் ஒப்புமை பெற்றிருப்பினும் முருகன் நின்னினும் உயர்ந்தவன். நீ அவனுக்கு இணை ஆகாய். உயர்ந்தவன் அழைக்கின்றான். ஓடிவா அவனுடன் விளையாட! காலம் தாழ்த்தாதே. வேற்றுமைகள் உனக்குப் புரியவில்லையா? சொல்கிறேன் கேள்.

நீ இறைவனின் கண் என்றால் முருகன் அக் கண்ணின் மணியாவான். நீ கலைகள் நிறைதலும் குறைதலும் என வேறுபடுகின்றாய்; முருகனோ கலைகள் யாவும் நிறையப் பெற்றுக் குறைதலே இல்லாதவன். நீ இரவில் திரியும் இரவோன் (இரவு=பிச்சை); முருகனோ அடியவர்க்கு இரவினை(பிச்சையை) நீக்குபவன். நீ பயிர்களை முளைக்கச் செய்து வளர்க்கின்றாய். இவனோ பயிர்களை மட்டுமன்றி எல்லா உயிர்களையும் வாழச் செய்கின்றான். நீ தேவர்கட்கு உண்ண அமுது அளித்தாய்; இவனோ புத்தியும் முத்தியும் வழங்கினான். இவன் நின்னினும் எவ்வெவ்வாறு உயர்ந்துள்ளான் என்பதை அறிந்து கொள். விரைந்து ஓடிவா இவனுடன் விளையாட.

இன்னும் பார்ப்போம். நீ புற இருளை மட்டுமே நீக்குவாய்; இவன் அக இருளைப் போக்குவான். நீ விண்ணில் மட்டும்பொலிகிறாய்; இவன் விண்ணிலும் மண்ணிலும் பொலிகின்றான், நீ குமுத மலரையே திறப்பாய்; உள்ளமாகிய மலரைத் திறக்க அறியாய்; இவன் திறப்பன். நீ சகோரிப் பறவைக்கு மட்டுமே உணவு ஆகிறாய். இவனோ எல்லா உயிர்கட்கும் இன்பம் தருகிறான். இவன் உன்னை ஒரு பொருட்டாகஎண்ணி அழைப்பது உன் பேறு! வா வா! விளையாட வா!

மூன்றாவது உதவும் நெறி அல்லது தானம் என்னும் உபாயம் ஆகும். முருகன் நிலவிற்கு எவ்வெவ்வாறு உதவியருள முடியும் என்ற கற்பனையை இனிக் காண்போம். முருகன் எல்லா உயிர்களின் எல்லா நோய்களையும் நீக்குபவன், பிறவிப் பிணி தீர்க்கும் பெருமான். உன்னுடைய க்ஷயரோகம் (தேய்தல், வளர்தல்) எனும் நோயினையும் உன்னுடைய முயற்களங்கத்தையும் அவன் தீர்ப்பான். அவனது சித்தாமிர்தம் எனும் தீர்த்தத்தின் ஒரு துளியே போதும். விளையாடவா! வந்து உனது பிணி தீர்த்துப் பெரு மகிழ்ச்சி பெறுவாய்! முருகன் கண்கண்ட தெய்வம்; வேண்டிய வரங்கொடுக்கும் வள்ளல். நீ எது வேண்டினும் அருள்வான். பொன்னுலகும் மண்ணுலகும் உனக்கு வேண்டுமா? விளையாட வா! அவன் கொடுப்பான், வீடாகிய மோட்சமும் அருள்வான். வருக! விரைக!

கடைசியாக ஒறுத்தல் நெறியென்னும் தண்ட உபாயம். இந் நெறி கூறப்புகும் புலவர் பெருமானின் நுண்மாண் நுழைபுலம் நினைந்து நினைந்து மகிழ்தற்குரியது.

பேய்கள் யாவும் அலறி ஓடும்படி அடித்துப் புடைக்க வல்ல பூதப் படை இவனிடம் உண்டு. ஒரு பூதம்—அதுவும் குறுகிய குறட்பூதம்—ஒன்றே ஒன்று போதும் உன்னை அடித்து நொறுக்குவதற்கு. வீணாக அடிபடாதே விரைந்து வா விளையாட! மலரவன் முதலிய தேவர் யாவரும் கைகட்டி வாய் புதைத்திருக்கும் காட்சியை நீ காணவில்லையோ? சூரன் உயிர் குடித்தான். பிரமனைக் குட்டினான். இந்திரனையும் எட்டுத் திக்குப் பாலகரையும் வென்றான். தக்கன் வேள்வியில் நீ பட்டபாடு மறந்தனையோ? என்ன மதி உன்மதி?

இவன் அழைத்தும் நீ வரவில்லையெனின் உனக்குப் பெருந்தண்டனை கிடைக்கும். இவன் பொறுத்துக் கொண்டாலும் இளவல் பொறுக்கமாட்டான். பானுகோபனைச் சாய்த்தவன் அவ்வீரவாகு, தேவர்கள் யாவரும் நடுங்குமாறு செய்தவன். இவன் பகை வேண்டா. அன்பு பெறுக. எனவே சிறிதும் தாழ்த்தாது விரைந்து இவனுடன் விளையாட வா!

இவ்வாறு நிலவே வா என அழைப்பதில் எவ்வளவு நயங்கள் பொதிந்துள்ளன. இத்தகைய பிள்ளைத் தமிழ்கள் தமிழில் ஏராளம்! ஏராளம்! இவைகளைப் படிப்பதிலேயும் படித்துப் பிறர் சொல்லக் கேட்பதிலேயும் தனியின்பம் பிறக்கும். தமிழ் மணம் சிறக்கும். பாடினால் பக்தி பெருகும். உளங்களாயும், உடல் புளகம் பெறும்.

தமிழ் இலக்கியத்தின் இடைக்காலப் பெருஞ் சிறப்பிற்கு இப்புதுமை இலக்கியம் பெரிதும் உதவுகிறது என்பதில் ஐயமில்லை.

Vidwan K. Venktachalam, M.A.,
Professor & Head of the Dept of Tamil
St. Joseph's college.
Bangalore—560001

A NOTE ON *ai* AND *au* IN TAMIL

Dr K. Meenakshi

ai and *au* are considered to be long vowels by the traditional grammarians including Tolkāppiyar and they are accordingly grouped along with the other vowels. Vowels are said to be twelve including *ai* and *au*.[1]

Modern linguists, questioned the validity of this and have proved that *ai* and *au*, phonologically, etymologically and also prosodically, are not long vowels but they are just a phonemic sequence of a short vowel and a consonant[2] and also, on the basis of the evidences from the literary and inscriptional languages, of Tamil, the diphthongs of the proto-Dravidian have been reconstructed as *ay and *av ie a combination of a vowel plus a consonant not a vowel plus a vowel.[3]

One of the arguments put forward for establishing this fact is that *ai* freely varies with *a* plus *y* (i e *ay*) and *a* plus *i* (i.e a vowel cluster *ai*). For eg.

aiya*n* ∾ ayya*n* 'father'

paiya*n* ∾ payya*n* 'boy'

Tolkappiyar seems to be quite aware of this fact and he explicitly states this.[4]


when the internal evidences prove to be contrary to this, how and why, the traditional grammarians have taken these to be long vowels. One cannot imagine such great grammarians as Tolkappiyar could have described a sound wrongly It appears that some sort of confusion would have arisen at some stage in the language. The aim of this paper is to find out whether any external evidences would help in tracing where and how this confusion would have started. For this, fiirstly one has to go to the inscriptions for their graphemic representation and secondly one has to take into consideration Sanskrit phonetic texts as we are all aware that there existed some grammatical schools in India even before Tolkappiyar.


Graphemically, the short and long vowels are obviously connected. In the inscriptions, the long vowels are represented by the addition of a stroke or line to the symbol representing the short ones, as.

 a  ā

ai is represented as a modified form of *e*. A horizontal line is added to the left at the top of the triangle with its apex above and the base at the bottom. In other words, an additional symbol is added to *e* (△). By this, one gets the impression that '*ai*' is the longer variety of '*e*'. This is in confirmity with the Sanskrit grammarians who derive Vṛddhi Vowel '*ai*' from the Guṇa vowel '*e*'

Coming to the Tamil Brahmi Inscriptions, *ai* does not occur initially in the earliest inscriptions and it is changed to *a* in the final position. It occurs only medially[5] i.e. it occurs in combination with some consonants. Here, we find *ai* is represented as a modification of '*e*' as in the northern variety as

 = ke.  kai

 = le  = lai

But this is not in confirmity with the concept of *ai* in Tamil Brahmi script of North Indian variety has been adopted for Tamil Brahmi inscriptions. While adopting this script, new symbols have been invented for the peculiar sounds of Tamil such as ḻ *l*, *r*, and *n* but they adopted the same grapeme for *ai* and *au* without realizing the diphthongs of Sanskrit, and *ai* and *au* of Tamil are not identical ones. There is always a tendency to pronounce the sounds of other languages which are more or less similar to the ones in the mother tongue, in the same way, as we pronoenuc them in our mother tongue. Hpnce, it is possible, that Sanskrit *ai* was eronounced like Tamil *ai* in the South. In this context, it should be mentioned, that the

original pronounciation of Sanskrit *ai* and *au* is almost lost in North as well. As no difference is noticed, they would have thought it unnecessary to invent a new symbol for it and hence adopted it in toto in Tamil Brahmi. Herein lies, the reason for the confusion as for as graphemic representation is concerned.

It is mentioned earlier, that the pronounciation of Sanskrit *ai* and *au* is different from that of Tamil. Now, let us see how the Sanskrit grammarians describe these sounds.

Sanskit grammarians call *ai* and *au* as sandhyakṣara (diphthong) in opposition to the other vowels which are called samānākṣara (monophthongs). According to Sanskrit phoneticians *ai* has the form of

$$\begin{pmatrix} a \\ \bar{a} \end{pmatrix} \text{ plus } \begin{pmatrix} e \\ ai \end{pmatrix} \text{ and au} = \begin{pmatrix} a \\ \bar{a} \end{pmatrix} \text{ plus } \begin{pmatrix} o \\ au \end{pmatrix}$$

The former is described as Kaṇṭhatālu (gutturo-palatal) and the latter kaṇṭhoṣṭhya (gatturo-labial) In *ai* and *au* the first vowel is guttural and the second is palatal or labial.

The phonetic value of *ai* and *au* was once ā + i/u. This is indicated by the Paninean rule (6-1-78)

$$\begin{pmatrix} e \\ o \\ ai \\ au \end{pmatrix} \rightarrow \begin{pmatrix} ay \\ av \\ \bar{a}y \\ \bar{a}v \end{pmatrix} - \begin{pmatrix} \text{Simple vowel} \\ \text{Dipthong} \end{pmatrix}$$

From this rule we get, the first vowel of the diphthong *ai* and *au*, vuz *a* is long.

From the phonetic point of view, the final *i* and *u* of a diphthong are changed to their corresponding semi-vowel *y* and *v* before any simple vowel or diphthong.

In external Sandhi, we have an important additional rule, that a semi-vowel resulting from the conversion of the final element of a diphthong is dropped in general and the resulting hiatus is left without further change. Thus a final of *ai* becomes *a* before an initial vowel except *a* and both remain unchanged. The grammarians allow those semi-vowels *y* and *v* in such combinations to be either dropped or retained (p. 8.3.10) Thus

striyai + uktam = striyā uktam

or

striyāvuktam

gurau + utkaḥ = gurá utkaḥ

or

gurāvutkaḥ

These rules indicate that the first element in the diphthongs *ai* and *au*. Vuz *a*, should be pronounced as a long one.

Panini and his followers describe *ai* and *au* as Vṛddhi form of the Guna letters *e* and *o*. This is in accordance with the vowel gradation in IE

VOWEL GRADATION

GRADE I	i	u	r
GRADE II	e	o	ar
GRADE III	ai	au	ār.

Grade I corresponding to the I E reduced grade is taken by Panini and followers as the basic and grade II corresponding to normal grade of I E is given the title of guna and grade III corresponding to the strengthened grade of I E is given the title of Vṛddhi or increase.

The term Vṛddhi is derived from the root Vṛdh 'to increase', There is every possibillity of the term Vṛddhi being misconstrued as length. Because increase in a vowel may, naturally, be thought of as the increase in length. It may be mentioned, even now in some parts of north India, Hindi *e* is referred to as choṭi *e* and *ai* as baḍī *e*. The wrong interpretataion of the term Vrddhi might have been the reason for taking *ai* and *au* as the longer variety of *e* and *o*. This concept might have been in vogue at some stage. The assignment of the phonetic value, length, to these diphtongs sa a result of the wrong interpretation of the term Vṛddhi, coupled with their graphemic representation might have created this confusion. This might have influenced the grammarians in the south. as they hardly realized the difference between *ai* and *au* of Sankrit and Tamil as pointed out earlier.

Dr K. Meenakshi
M.A., Ph. D.
Jawaharlal Nehru Univeristy
New Delhi-110 057

Foot Notes

1 Tolkappiyam. Eluttu 4 and 8.
2 P. Kothandaraman : *Studies in Tamil Linguistics*. pp. 74--81.
3 Kamil Zvelebil: *Comparative Dravidian phonology*. p. 70.
4 Tolkappiyam. Eluttu 58.
5 Iravatham Mahadevan : *Tamil Brahmi Inscriptions of the Sangam age*. p. 86.

விதியும் விதி விலக்கும்

ம. ரா. போ. குருசாமி

"ஊழ்" என்றால் என்ன? "இருவினைப் பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி" என்பது பரிமேலழகர் விளக்கம். "ஊழாவது முன்பு செய்த வினை பின்பு விளையும் முறை" என்பது மணக்குடவர் விளக்கம். "நாம் எழுதின எழுத்தே நம் தலையெழுத்து. முற் பிறப்பில் செய்த வினையின் விளைவுக்கு ஊழ் என்று பெயர்" என்று சக்கரவர்த்தி இராசகோபாலாச் சாரியார் விளக்கியிருக்கிறார்.

வள்ளுவரின் திருக்குறளைப் பயின்றால், முற்பிறப்பு—பின்பிறப்பு, நல்வினை—தீவினை ஆகியவற்றின் தொடர்ச்சியிலே வள்ளுவருக்கு உறுதியான நம்பிக்கை உண்டு என்பது உறுதிப்படும்.

இந்தப் பின்னணியில் தான் 'ஊழ்' என்னும் அதிகாரத்தில் கடைசியாகவுள்ள,

> ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினுந் தான்முந் துறும்

என்ற குறட்பாவைப் பயிலவேண்டியுள்ளது. "ஊழை விட மிக்க வலிமையுள்ளவை எவை உள்ளன? ஊழ் வலிமையை விலக்குவதற்கு மற்றொரு வழியை ஆராய்ந்தாலும் அங்கேயும் ஊழ் வலிமைதான் முற்பட்டு நிற்கும்" என்பது இந்தக் குறளின் பொருள். ஊழின் தத்துவத்தையும் ஆற்றலையும் இதைவிடத் திட்ப நுட்பங்கள் செறியச் சொல்லிவிட முடியாதுதான்.

'ஊழ்' அதிகாரத்தில் ஊழ்வினை ஆற்றலை வற்புறுத்திக் கூறிய திருவள்ளுவர் 'ஆள்வினை யுடைமை' என்ற அதிகாரத்தில்,—

> ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழாது உஞற்று பவர்

என்று கூறியுள்ளார். 'ஊழைத் தவிர்ப்பதற்கு ஒரு வழி தேடி ஆராய்ந்தாலும் அங்கேயும் ஊழ்வினையே முன் வந்து நிற்கும்; எனவே, ஊழைவிட வலிமையானது எதுவும் இல்லை' என்று முதலில் கூறினார். இங்கே 'தளர்ச்சி இன்றி, தாமதம் முதலான குறைகள் இல்லாமல் முயல்கின்றவர்கள் ஊழையும் புறங்காண்பர்—அதாவது, தோல்வியடையச் செய்வர்' என்று கூறுகிறார். முந்நூற்றெண்பதாவது குறளில் ஊழைவிட வலிமையானது இல்லை என்றவர் அறுநூற்றிருபதாவது குறளில் ஊழையும் தோல்வியடையச் செய்ய முடியும் என்று கூறுகிறார்.

இப்படிக் கூறுவது முன்னுக்குப் பின் முரண் இல்லையா?

இந்தக் குறட்பாக்களில் உள்ள கருத்து முரண் பற்றிச் சிந்திக்கும் முன், நாம் அன்றாடம் உணரக் கூடிய எளிய உண்மை ஒன்றை இங்கே நினைவூட்டிக் கொள்ளலாம்.

மின்சார வசதி இக் காலத்தில் எங்கணும் எளிதாகப் பரவியுள்ளது. மின்சாரம் கம்பிகள் வழியாகப் பாய்ந்து வந்து வீட்டிலும் பிற இடங்களிலும் ஒளி முதலான வசதிகளை வழங்குகிறது. கம்பியைப் பார்த்தால் மின்சாரம் தெரிவதில்லை. ஆனால், வீட்டில் எங்காவது தவறுதலாக நீட்டியிருக்கும் மின்சாரக் கம்பியைத் தப்பித் தவறித் தொட்டு விட்டால் அதிர்ச்சி ஏற்படுகிறது, உதறல் ஏற்படுகிறது. சில வேளைகளில் உயிருக்கே கூட ஊறு ஏற்படுகிறது. கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் மின்சாரத்தின் சக்தி தொழிற்படத்தான் செய்கிறது.

மின்சார ஆற்றல் பற்றி மற்றொன்றையும் தெரிந்து கொள்ளவேண்டும். உலகத்துப் பல்வேறு பல்கலைக் கழகங்களின் ஆராய்ச்சிப் பட்டங்கள் பலவற்றைச் 'சுமக்கும்' ஒருவர் மின்சாரக் கம்பியைத் தொடுகிறார்; கிணற்றுத் தவளையாய் அ, உவும் அறியாப் பேதை ஒருவன் தொடுகிறான். உலகத்தையே தன் சொல்வாக்கின் செல்வாக்கில் சிறைப்படுத்தும் 'முடிசூடா மன்னன்' மின்சாரக் கம்பியைத் தொடுகிறான்; தொட்டுத் தாலி கட்டிய மனைவியும் மதிக்காத அப்பாவி ஒருவன் தொடுகிறான். இவர்களில் யாரை மின்சாரம் தாக்கும்? இப்படி ஒரு வினா எழுப்புவதே பேதைமை என்பது தெளிவான உண்மை. மின்சாரக் கம்பியைத் தொடுகிறவன் பேதையாயினும், மேதையாயினும்—அதிகாரியாயினும் அப்பாவியாயினும் எவனையும் மின்சார ஓட்டம் தாக்காமல் விடாது. மின்சார சக்தி நிலைத் தரங்களில் ஏற்றத்தாழ்வு காண்பதில்லை. காப்பற்ற நிலையில் மின்சார சக்தி தன்னொடு தொடர்பு கொள்வோர் யாரையும் பாதிக்கும்.

கண்ணுக்குத் தெரியாதது; விலக்கு இன்றி எவரையும் தாக்குவது—இவை மின்சார விதிகள்.

மின்சாரத் துறைத் தொழிலாளி ஒருவன் பட்டம் எதுவும் பெருதவன்; இன்றைய சமுதாய மதிப்பீட்டின்படி படிக்காத பாமரன் அவன் நம் வீட்டில் மின்சாரக் கோளாறு எதையோ சரியாக்க வருகிருன். அவன் மின் சாரக் கம்பியை வளைப்பதும் இழுப்பதுமாக நெடுநேரம் வேலை செய்கிருன். அவனை மின்சாரம் எதுவுமே செய்வதாகக் காணேம்! அவனை மட்டும் மின்சாரம் தாக்காதது ஏன்? கையிலும் காலிலும் ரப்பர் உறை இட்டிருக் கிருன்; மின்சாரம் அவனைத் தாக்குவதில்லை! மின்சாரம் பாய்ந்து கொண்டுதான் இருக் கிறது; அதே சமயத்தில் அவனை எதுவும் செய்வதில்லை.

கட்டுக் கடங்காமல் பாய்ந்து கொண் டிருந்த மின்சாரத்தின் சக்தி குறையாமல் — அதே சமயத்தில் தொழில் செய்பவனுக்கு ஊறு செய்யாமல்...அதாவது விதி தொழிற் படும்போதே விதி விலக்கும் இடம் பெற முடிகிறது. இந்த இருமைப் பண்பும் ஒருங்கே அமைவதற்கு எத்தனையோ அறிஞர் கள் தளர்ச்சி இன்றி இடையருது பாடு பட்டனர். உலைவு இன்றித் தாழாது உஞற்றி யதால், மின்சார விதிக்குச் சிதைவு இல்லா மலே அந்த விதியை அடக்கி ஆளவும் முடிந்தது.

'ஊழிற் பெருவலி யா உள' என்னும் விஞவில் விதி—அதாவது சட்டம் புலப்படு கிறது. 'உலைவின்றித் தாழாது உஞற்றுபவர் ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்னும் விளக்கத்திலே 'விதி'யை வெல்லும் மதி நலம் பொலிகின்றது.

இங்கே மற்ருெரு விளக்கத்தையும் காண வேண்டும். 'ஊழ்வினை இப்படி ஆக்கி விட்டது; நாம் என்ன செய்ய முடியும்' என்று முயற்சியற்றுக் கிடந்துவிடக் கூடாது,

சமயவாதிகள் எதற்கெடுத்தாலும் ஊழ் வினை ஊழ்வினை' என்று சொல்லி சமு தாயத்தைக் கெடுத்துவிட்டனர் என்ற, இந்த நாட்டில் ஒரு பழி உண்டு. உண்மையில் சரியான சமயவாதிகள் இதனை ஏற்க மாட்டார்கள்.

திருவலஞ்சுழியில் இறைவனை வழிபடும் பேறு திருஞானசம்பந்தருக்கு வாய்த்தது; முன் பிறப்பில் செய்த நல்வினைப் பயனுல்தான் அந்தப் பேறு கிட்டியதாக அவர் மனமகிழ்ந்து பாடியுள்ளார்.

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பண்ணி ஆதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனுலே

என்ற பாடலில் 'முன்னை நல்வினைப் பயன் கூட்டி வைத்த நற்பேற்ருல்தான் வலஞ்சுழி வாணனை வழிபடுவதாகக் குறிக்கிருர். அடுத்த திருப் பாடலிலேயே,

விண்டொ ழிந்தன நம்முடை வல்வினை
விரிகடல் வருநஞ்சம்
உண்டி றைஞ்சுவா னவர்தமைத் தாங்கிய
இறைவனை உல கத்தில்
வண்டு வாழ்குழல் மங்கையொர் பங்கனை
வலஞ்சுழி இடமாகக்
கொண்ட நாதன்மெய்த் தொழில்புரி
தொண்டரோடு இனிதிருந் தமையாலே

என அடியவர் திருக்கூட்டத்தோடு உள்ள இறைவனை வழிபட்டமையால் வினைப்பயன் தன் ஆற்றலற்ருெழிந்தது என்று பாடுகிருர்.

திருச்செங்கோடு என்னும் கொடிமாடச் செங்குன்றூருக்குச் சென்ற திருஞானசம்பந் தரின் அணுக்கராகிய அடியவர்களுக்குக் குளிர்சுரம் வந்தது. மலை நாட்டுக்கு இயல் பாகிய விதிப்படி சுரம் வந்தது என்று திருஞான சம்பந்தர் வாளா இருக்கவில்லை. "முன்செய்த வினைக்கு இப்போது அனுபவிக் கிறேம் என்று நல்லறிவு கொண்டு பேசு கின்றீர்களே! அது போதுமா? முன்னை வினைப்பயன் ஊட்டாமல் கழிப்பதற்கு ஏற்ற செயல் எது என ஆராயாமல் இருப்பது தவறு அன்ருே? இறைவனை வழிபடுவோ மாயின் வினை தீண்டாது" என்று பதிகம் பாடினுர் பாலமுதுண்ட பிள்ளையார்.

அவ்வினைக்கு இவ்வினை யாமென்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும்
உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல்
போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ
ருதிரு நீலகண்டம்

இவ்வாறு தொடங்கும் திருப்பதிகம் முழுவதும் திருநீலகண்டத்தின்மீது ஆணையிட்டு, ஊழ் வினைப் பயன் நீக்குதற்கு ஆள்வினை முயற்சி வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றது.

'முயற்சி யற்றுச் சோம்பிக் கிட' என்று நற்சமயவாதி எவரும் கூறுர்.

சமுதாயத்தில் காணப்பெறும் பொருமை பூசல்களை விலக்க 'ஊழிற் பெருவலி யாவுள' என்ற குறளும், முயற்சியுடைமையால் தனி மனிதனும் சமுதாயமும் சிறப்பதற்கு 'ஊழை யும் உப்பக்கம் காண்பர்' என்ற குறளும் உதவுகின்றன.

இரண்டும் ஒன்றுக்கொன்று முரண் பட்டவை அல்ல.

ம. ரா. போ. குருசாமி, M.A., M. Litt.
தமிழ்த் துறைத் தலைவர்,
பூ. சா. கோ. கலைக் கல்லூரி,
கோவை-641 014

CEYLON'S CONTRIBUTION TO TAMIL DURING THE NINETEENTH CENTURY

V. Muttucumaraswamy

The Nineteenth Century is of paramount importance in the development of Tamil in Ceylon. The impact of English rule and the missionaries in North Ceylon was significant. The Ceylon Tamils explored new fields; Jaffna became the home of Dictionaries; it was in Jaffna that the first translations of Scientific (Medical Texts) were made by a missionary; the Bible was translated into Tamil spearheaded by Rev. Percival of the wesleyan misson, ably assited by Arumuga Navalar. Jaffna had its crop of Journals, in which literary and scientific discussions, were mirrored. This century is noted for a large output of dramas written, and staged in Jaffna. Almost every kind of poetry, 'Ammanai' 'Kalambagam', 'Kalithurai', 'Kummi', 'Mummanikovai', 'Malais', 'Pathikams', and 'Ulas' were written mostly on the local deities, and a few otherwise, by the poets of Jaffna and elsewhere.

Arumuga Navalar

Arumuga Navalar of Nallur, Jaffna (1822-1879) was the Foremost-Tamil Scholar, Prose Writer, Orator, Critic, Commentator, and Publisher of several religious and non-sectarian Tamil texts in 'Eelath Thamilagam' as well as 'Thamilagam'.

By establishing the Saivaprakasa Vidya laya, Vannarponnai, Jaffna, in 1848 and by introducing 'free education' he lit the torch of Tamil learning in Eelam. He established the Saivaprakasa Vidyalaya at Chidambaram, South India, in 1864 and taught his students free. This was the predecessor of the Annamalai University. He founded the Vidyanupale Yanthirasalai' at Vannarponnai in 1848 and published several Tamil works. A few years later he founded the 'Vidyanu Palana Press' at Madras. This published Navalar's important publications. His 'Palapadams' (1-4) blazed a new trend (1800). In his Periyapuranam in prose (1852), one could see the simplicity, elegance, and vigour of his style He published the 'Thirukkural' in 1861. He brought about a Tamil and Saiva Revival in Ceylon within his life time. He was rightly acclaimed as the 'Father of Modern Tamil Prose'.

Dramas

Navalar's father Kanthapillai of Nallur (1766-1842) wrote over twenty dramas. Of these we select three noteworthy ones:— 'Chandrahasa Nadagam', 'Ramavilasam', and 'Kandy Nadagam'. We present here a list of writers of dramas, and their dramas — whose dramas were staged and re-staged, mainly in Jaffna on important functions and festival days. They are Ganapathy Aiyar's 'Malaiya Kanthini' and 'Alankara Rupa Nadagam' (Nineteenth Century), Udupiddi Sinnathamby's (1830-1878) 'Mathana Valli Vilasam', Anaicottai Ramalingam's 'Damayanthi Vilasam', Araly Viswanatha Kurrukal's 'Nahula Malai Kuravanchi' (1895), Achchuveli M. Kathirupulavar's (1800-1844) 'Paduma Purani Nadagam', Udupiddy Kumaraswamy Mudaliyar's (1791-1874) 'Indra Kumara Nadagam' Tellipallai Kumarasinga Mudaliyar's (1826-1884) 'Pathi Viratha Vilasam', Arali Ramu's 'Vedi Arasan Nadagam' and Manthai Kosthan's 'Poothatamby Vilasam' published in 1888—a very popular historical drama.

Journals

The first Journal of Jaffna to be published in English and Tamil was Udaya Tharakai (the Morning Star) in 1841. The 'Jaffna Freeman' was started in 1862 by advocate Gould in English but it did not survive. 'Ceylon Patriot' appeared on 1 January 1864 as a bilingual weekly. Of the four pages, the fourth page was in Tamil. Advocate C. W. Catheravelupillai was its Editor. 'The Catholic Guardian' in English and 'Sathia Veda Padu

Kavalan' in Tamil were started in 1875 by the Catholic Mission in Jaffna. The 'Inthusathanam' and 'Hindu Organ' were started by the Saivaparipalana Sabhai in 1885. There were many other journals during this century, 'Ilankai Nesan' 1876, 'Udaya Bhanu' 1880, 'Puthina Lankari' 1882 'Sanmarka Bodhini' 1884, 'Saivabhimani'.

'Muslim Nesan' (1883) and 'Ilankai Puthinath Thal' (1893) were published in Colombo 'Vaidya Visarani' (1898) was Tamil monthly from Jaffna.

Lexicography

Ceylon has rendered a valuable contribution in the field of Lexicography in Tamil. It is of special interest to note, that the Second Dictionary to be produced, after Fr Beschi's (Veerma Munivar) (1680-1746) 'Sathurakarathy' was the 'Manipay Dictionary' or the 'Jaffna Dictionary' by Pundit Sandraseakaram of Uduvil in 1842. This was sponsored by the American Missionaries. Rev. Knight of the Church Mission,Nallur prepared a Tamil-Tamil Dictionary (a 'Perakarathy') and published this in 1842. Rev. Winslow a Missionary who worked in Jaffna went over to Madras and published Tamil-English Dictionary in 1862. He was assisted by William Nevins Chidambarapillai, a Jaffna Scholar and others. N. Kaithiravelupillai (Nyman) of Metku Puloly, who was a Magistrate, wrote a 'Tamil-Solakarathy' with the aid of Tamil Scholars. This was published by the Madurai Tamil Sangam in 1899. Dr. Percival who was in Jaffna for a considerable number of years, as Head of the Weyleyan Mission, Jaffna published a Tamil-English Dictionary at Madras in 1900. During the same year, Rev. Patrick Donne of St. Patrick's college, Jaffna, published a Tamil-English Dictionary at the Catholic press Jaffna. Subavakiampillai, a Tamil teacher and Scholar of the College' helped him in this work.

The First Encyclopaedia in Tamil

The first Encyclopaedia in Tamil was '*Abhidhana Kosam*', which was published by A. Mootootambipillai at Navalar Press, Jaffna in 1902. It took sixteen years to accomplish this.

The 'Abidhana Chintamanl' by Singaravelu Mudaliyar of Madras was published in 1912. It is stated in the Kalai-Kalanjiyam that the 'Abidhana Kosam' is a similar work as the former. This denigrates its value. The pioneer of the Encyclopaedia should be given his due place in a history of Tamil Literature.

Puranams

Arumuga Navalar, published the 'Periya Puranam' in prose—'the Periya Purana Vacanam' in 1852, the 'Koyit Puranam' in 1868 and the 'Kanda Puranam' in 1869. Puloly Kanapathypillai (died in 1895) wrote 'Manicka Vasagar Puranam' Ganesha Pundithar (1843-1881) wrote 'Ilasai Puranam' Varatha Pundithar wrote 'Sivarathri Puranam' in 1895 and his 'Ekathasi Puranam' was published in 1898. V. Ramalingam of Udupiddi wrote 'Koddu Puranam'. V. Kangasabaipillai of Alaveddy (1829-1873) wrote 'Thiruvakku Puranam' Suppaiyar of Vannarponnai wrote 'Kanagi puranam'—only a part of which hasbeen published.

The 'Thadchana Kailasa Puranam' written by Sripunditharaser of Tiruconamalie (Sekarajasekaram) was published in 1887. The 'Tirrukkarasan Puranam' was published in 1890. 'Seemantham Puranam' was published in 1884 by Poopalapillai of Batticalva.

There were many kinds of Tamil poetry published during this century in Ceylon. These 'Paralai Vinayagar Pattu' by Sinnathambi Pulavar was published in 1889. There were many 'Kuravanchis'. Visuvanatha Sastryar sang the Nahula Malai Kuravanchi and the 'Vannai Kuravanchi'. Kanthapillai of Nallur sang the 'Nallai Nagar Kuravanchi'.

There were a few noteworthy 'Anthathis' published namely 'Kalvalai Anthathi' by Sinnathambi Pulavar in 1888, 'Puliyur Anthathy' by Sivananthaiyar in 1882, 'Sinkai Naher Anthathy' by Sathasiva Pundithar in 1887 and 'Maruthedi Anthathi' by Appaduraipillai in 1891.

There were a few 'Kummi' songs such as 'Gnana Kummi' by Muttukumara Kavirayar-whose second edition was published in 1872 by Arum uga Navalar.

'Ula' songs were also published. 'Thoothu' songs were popular, Varatha Pandithar's 'Killai Vidu Thoothu' 'Thatthai Vidu

Thoothu' by Saravanamuthupillai of Thiru Conamalai (1892) and 'Megathootham' by Naganatha Mudaliyar of Chunnakam are gems.

Kailasapillai's 'Netkolu Vyravar Pathikam' 1889 Kathiravelpillai's 'Konesar Pathikam' 1889, Valvai Vaithialingampillai's 'Valvai Vaitheyeser 'Oonjal' 1886 Manipay A. Sivamynatha Mudaliyar's 'Colombo Muttu Vinayakar Oonjal' 1888 Chunnagam Kumaraswamy Pulavar's Thunavai 'Arasadiyit Sanmugar Oonjal' 1897, Pedru Pulavar's 'Santhiya kumaiyoor Ammanai' 1894 and Soosai Pillai's 'Gnanasavundari Ammanai' 1889—were popular. Navalar has a collection of Keerthanams to his credit; his elegy on the death of his pupils is exquisite ingenuitment and wording.

Among the prose works of the century Kanagaratnam's Life of Arumuga Navalar 1882 is an outstanding contribution.

Saravanamuthu Pillai of Tiruconamalai published 'Mohananki'-a pioneer Novel, the second novel in Tamil Nadu. S. S. Geremiah wrote a series of Readers in 1886. Tambimuttu Pillai (1857–1921) of Achuchuveli published the first novel written in Ceylon namely 'Uson palanthai Kathai' at the Gnanapirakasa press, Achchuveli.

Translations

The Batticotta Seminary helped in producing certain outstanding works in Tamil into the English Language. *Dr. Housington* who was incharge of the seminary with the aid of his pupil C. W. Cathiravelu Pillai published 'Sivagnana Potham' in 1854. This was published in the Journal of the American Oriental Society of that year. He also published the 'Thatthuva Kattalai' (1854) and 'Sivaprakasam' two Saiva Siddhantic works into English. *Naganatha Mudaliyar* of Chunnakana (1814-1884) translated 'Hitopedesa' and 'Sisu petha Vatham' from Sanskrit into Tamil. Kanapathy Pillai of Puloly (1845–1895) translated 'Vilkaneeyam' from Sanskrit into Tamil. *A Mootootambi Pillai* translated Prabodha Chandrodayam, a Sanskrit classical drama into Tamil.

Rev. Percival who was in charge of the Translation of the Bible into Tamil, Secured the services of *Arumuga Navalar* to do this work. This was published in 1850 by the American Missionaries, Madras, and was known as the 'Union Version'. In the final Revision as the Bible into Tamil in 1871, the missionaries of Jaffna played a notable part.

Translations of Medical Scientific Texts From English into Tamil.

Dr. SAMUEL F. GREEN who was in charge of the American Mission Hospital at Manipay from 1845 translated and edited ten Medical Scientific texts in Tamil. They are as follows.

1. ANATOMY, PHYSIOLOGY AND HYGIENE by Dr. Calvin Cutter 1852. (204 pages) First Edition, Manipay Press Jaffna.

2. DUBLN PRACTICE OF MIDWIFERY by Mansell 1857 (258 pages) Manipay press Jaffna.

3. The SCIENCE AND ART OF SURGERY complied from Erichson and Druit. Translated by Dr. J. Periyathamby Danforth. Edited by Dr. S. F. Green 1867 (504 pages) Manipay Press, Jaffna.

4. THE PRINCIPLES AND PRACTICE OF PHYSICS - modified Tamil version of Hooper's VADE MECUM by Dr. William Paul and supervised and amended by Dr. S. F. Green 1872 (917 pages) London Mission press. Nagercoil (S. India).

5. HUMAN ANATOMY compiled from GRAY'S ANATOMY etc., Supervised by Dr. S. F. Green 1872 (808 pages), Strong and Ashbury, Manipay.

6. INTRODUCTION TO HUMAN PHYSIOLOGY by Samuel F. Oreen (134 pages)

7. CHEMISTRY-PRATICAL & THEORETICAL by S. F. Green (516 pages) London Mission Press, Nagercoil.

8. Vocabulary of MATERIA MEDICA & PHARMACY OF MIDWIFERY AND DISEASES OF WOMAN & CHILDREN AND OF MEDICAL JURISPRUDENCE Translated by Dr D. W. Chapman and revised by Dr S. F. Green 1878 (164 pages) London Mission press Nagercoil.

9. HUMAN PHYSIOLOGY by Prf. C. DALTON Translated by Dr D. W. Chapman. Revised and Edited by Dr S, F. Green 1883 (90 pages) Strong and Ashbury, Manipay.

10. WARING'S 'PHARMACOPOEA OF INDIA' Translated by Dr S. F. Green 1884 (574 pages).

We would like to give thumb nail sketches of eminent Tamil worthies:—

1. ARNOLD SATHASIVAM PILLAI (J. R. ARNOLD) (1820 - 1895) of Manipay. He was Editor of the 'Udayatharakai'. His 'Pavalar Charithra Theepakam' (Galaxy of Tamil Poets) 1886 was a comprehensive account of Tamil Poets of Tamil Nadu as well as Ceylon.

2. CASIE CHETTY SIMON (1807 - 1860) of Kalpitrya Puttalerm wrote the TAMIL PLUTARCH in English in 1859. He also wrote a History of Jaffna (English) both being the first of its kind.

3. KATHIRAVETPILLAI WYMAN (1829 - 1904) of Udupiddy started the 'Ceylon Patriot' 1863. He was the first Ceylon Tamil to be appointed as Magistrate. He wrote a 'Logic in Tamil The 'Tharka Paripashai'. He compiled a 'Tamil Sol Aharathy' which was published in 1899. He got the help of A KUMARASWAMY PULAVAR of Mayilani Chunnagam S. SARAVANAMUTHU PULAVAR of Urulu and ARUMUGAM PILLAI of Udupiddy in editing this Dictionary.

4. CHIDAMBARA PILLAI WILLIAM NEVINS (1820 - 1889) of Sankanai Jaffna was at first, Head Master of Wesleyan Central School, Jaffna (1860 – 1880). In 1856, he went to Madras and assisted Dr Winslow in editing his Tamil-English Dictionary (1862), He started the Native Town School in 1899. After some months he handed over this to Advocate V. Nagalingam-who founded the Jaffna Hindu College 1890 - a national institution run by the Saivaparipalana Sabhai. He wrote an English-Tamil Dictionary which was not published. He wrote 'Niyaya Ilakkanum' Logic in Tamil in 1850.

5. MURUGESA PUNDITHAR (1830 - 1900) was Tamil Pundit, Grammarian, Critic and Tamil Poet. He was Tamil Pundit at the Kumbakonam Govt. High School where Dr Samynatha Aiyar served some what later as a Tamil Pundit. Murugesa Pundithar served not only at Kumbakonam but also at Madras, Chidambaram, Kanchipuram and Thirupatoor for 22 years. When he appeared for the post of Tamil Pundit at Kumbakonam high School, Thiagaraja Chettyar set the question paper to examine the candidates. On receiving this Murugesa Pundithar underlined the mistakes in it and wrote a verse embodying the mistakes, by a way of answer. Thiyagaraja Chettyar was amazed when he read this, and perceiving the great talent of the Pundit, selected him for that post.

Murugesa Pundithar criticized the edition of 'Seevaka Chintamani' brought out by Dr U. V. Saminatha Aiyar. The faults that the Pundithar pointed out were corrected in a later edition of 'Seevaka Chintamani'. The Pundithar contributed several articles of great value to the 'Amirthaguna Bodhini'. He was known as Illkana Kotthar'.We wrote 'Mayilani Sladai Venba' etc.

6. S. PONNAMBALA PILLAI (1836-1902) of Nallur, was a nephew of ARUMUGA NAVALAR. He was a profound Tamil Scholar he was a great Expatiator and Commentator of the Puranas, He went to India and taught Tamil to several pupils at Devakottah and Vedaraniyam He wrote a commentary to Arasakesari's 'Ragu Vamsam' the first Tamil Epic in Ceylon. He also wrote a commentary on 'Mayura Puranam' His lectures on Maha Bharata and Ramayana and their exposition have been highly commended. He gave his services free to his pupils, like Arumuga Navalar.

7. SIVASAMBU PULAVAR (1829-1910) of Sirupiddy, Jaffna was the greatest writer of 'Pirapanthams' in ceylon. He received several awards from 'Paskara Sethupathy' of Ramnad. He wrote commentaries for 15 texts.

8. SABAPATHY NAVALAR (1845-1903) of Copay, Jaffna was at first, Head Master 'Arumuga Navalar's Saivaprakasa Vidyasalai' Chidambaram. Later he became 'Atheena Vidvan' of Thiruvavaduthurai Mutt. He was a profound critic and Scholar of Saiva Siddhanta. The 'Dravida Prakasikai' written and published by him in 1899 is the first

comprehensive History of Tamil Literature. He was the Editor of 'Gnanamirtham' in 1888.

(9) DANIEL CAROLLVISUVANTHA PILLAI (1820-1880) of Suthumalai Jaffna was one of the first two graduates to pass the B.A. at the Madras University. He was Registrar of Tranquebar in 1879. He was Editor of the Morning Leader. He wrote 'Algebra' in Tamil for the first time. He wrote 'Supira Theepam' in 1866. He was an able speaker and an excellent translator into Tamil.

(10) C. W. THAMOTHARAMPILLAI of Sirupiddy (1832-1901) was the first graduate of the Madras University, when the B.A. Examination was held for the first time after its inaguration in 1857. He came first in the list of successful candidates. Immediately after Dr. Percival, he was Editor of the THINAVARTHAMANI' a daily at Madras in 1853. He was Lecturer in Tamil at the Presidency College Madras. He was an Examiner and Lecturer in Tamil at the University of Madras. He was awarded the title of Rao Bahadur. He was the first to publish THOLKAPPIYAM — the oldest grammar of the Tamil language. He rescued the 'Ola' from being eaten by termites and published the THOLHAPPIYAM SOLLATHIHARAM in 1868.

(11) A. MOOTOOTABIPILLAI (1858-1917) of Manipay wrote the first History of Ceylon in Tamil in 1883. He was Editor of 'Satthiaimani' at Karaikal in 1884. He established the 'Jubilee Press' at Madras in 1885. He published PRABODHA CHANDROYAM (a classical drama from Sanskrit into Tamil) at Madras. He published 'ABIDHANAKOSAM' in 1902. He founded the Navalar Press 1893, and published a set of Tamil Readers, Bharata churukkam 1903 Jaffna History 1912 and the 'English-English-Tamil Dictionary' in 1907. Much spade work for these was done in the nineteenth century for the publication of the above.

(22) ARUNACHALAM Sir P. (1893-1924) founded a Senthamil Paripalana Sabai at Jaffna to foster Tamil Literature and Tamil Research. It was Sir Ponnambalam Arunasalam who helped Dr. G. U. Pope in 1892 to translate the Hymns of Saints Manicka Vasagar and Thayumanavar into English. In the British Museum, you find a book entitled 'Hymns of Saints Manicka Vasagar and Thayumanavar by Dr. G. U. Pope and P. A. P. A. is Ponnambalam Arunachalam. Thus Ceylon contributed significantly, to the development of Tamil in the Nineteenth Century. Hitherto Histoties of Tamil Literature in 'Tamil Nadu' have not touched adequately on the contribution of her daughter-the writers of 'Eelath-thamilakam' We are confident however that in future, Elanadu's contribution would find recordance in a fitting manner in the Histories of Tamil Literature and Histories yet to be written.

V. Muttucumaraswamy
Teacher
Forest Hill School,
Dacres Road
London SE 23
U. K.

தமிழைப் பற்றி...

"The Kural is that admirable collection of stanzas in the Tamil language which is instinct with the purest and most elevated religious emotion".

—Dr. BARTH